D
V211,31/N42
N92.24.3
04941

## உள்ளடக்கம்.

20—4—1992 பக்கங்கள்

1 ப செப்

வினாக்கள்-விடைகள் —

நட்சத்திரக்குறியிட்ட வினாக்கள் .... .. .. 413–451

அறிவிப்பு— ..

பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல் குறித்து. 451

கவன ஈர்ப்பு—

(அ) பரமக்குடி அருகிலுள்ள மஞ்சூரில் அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்படுவது குறித்து. 452–454

(ஆ) மன்னார்குடி நீடாமங்கலம், பட்டுக்கோட்டை வட்டங்களில் ஏற்படும் மின் அழுத்தக் குறைவு குறித்து. 454–457

அறிக்கை அளித்தல்— ..

பொது நிறுவனங்கள் குழு .. .. .. 457–458

அரசினர் தீர்மானங்கள்—

(அ) 'முரசொலி' நாளிதழ் மீதான உரிமைக் குழுவின் அறிக்கை. 458–459

(ஆ) 'கோவை மாலைமுரசு' நாளிதழ் மீதான உரிமைக் குழுவின் அறிக்கை. 459–461

கண்டனம்—

'இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆப் இந்தியா' இதழ் ஆசிரியர் அனில் தர்க்கர், முன்னாள் கட்டுரையாளர் கே. பி. சுனில் ஆகியோருக்குக் கண்டனம் தெரிவித்தல். 461–469

7. மானியக் கோரிக்கைகள், 1992–93, விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். .. 469–[illegible]

*மாண்புமிகு திரு. செ. ரகுபதி .. .. 469–470, 525–540

திரு. கோ. காளன் .. .. .. 471–[illegible]

*திரு. என். ஜி. வேணுகோபால் .. .. 481–485

திரு. ஜி. பழனிசாமி .. .. .. 485–490

திரு. சிங்கை கோவிந்தராசு .. .. 491–495

*திரு. கே. செல்வராஜ் .. .. .. 495–498

திரு. ஜெ. பாலகங்காதரன் .. .. 499–504

திரு. செ. கு. தமிழரசன் .. .. .. 504–510

திரு. சஞ்சய் ராமசாமி .. .. .. 510–513

திரு. வே. தம்புசாமி .. .. .. 513–520

*திரு. கே. ஏ. மனோகரன் .. .. .. 520–5[illegible]

(ஆ) கோரிக்கை எண் 21—மீன்வளம் ...

(இ) கோரிக்கை எண் 27—கதர் கிராமத் தொழில்கள்.

(ஈ) கோரிக்கை எண் 48—ஊரகத் தொழில்கள்

(உ) கோரிக்கை எண் 60—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு

} 542–657

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் .. 621–636

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் .. 637–655

திரு. மா. சுந்தரதாஸ் .. .. .. 545–555

திரு. க. குப்பன் .. .. .. 555–560

சென்னை-600 009
164941
D
Y21:31(1992)
N92.2413

பக்கங்கள்

திரு. ஆர். கோடிமாரி .. .. .. 561–566

திரு. பி. வி. இராஜேந்திரன் .. .. 566–578

திரு. ஆர். சிங்காரம் .. .. .. 578–583

டாக்டர் மு. சின்னம்மாள் .. .. 583–585

*திரு. கே. கந்தசாமி .. .. .. 586–588

திரு. த. ரத்தினவேல் .. .. .. 588–590

திரு. எச். எம். ராஜு .. .. .. 591–595

திரு. குமரி அனந்தன் .. .. .. 595–621

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. ... 657–658

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**சித்திரை 8, ஆங்கீரச—திருவள்ளுவர் ஆண்டு 2023.**

**1992 ஏப்ரல் 20, திங்கட்கிழமை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

" துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை."

முடிவில் இன்பம் கொடுக்கும் தொழிலைச் செய்யும்போது துன்பம் மிக வந்தபோதிலும் துணிவு மேற்கொண்டு செய்து முடிக்க வேண்டும்.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள், வினா எண் 550, திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

550—

### நீதிமன்றக் கட்டிடம் கட்டுதல்.

***3794—திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;—

(அ) திருத்தணி நகரில் இயங்கும் நீதிமன்றங்களுக்குக் கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). இப்பொருள் குறித்த செயற்குறிப்பு உயர்நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

[1992 ஏப்ரல் 20

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு : மாண்புமிகு பரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி நகரை தொன்மை வாய்ந்த திருத்தல நகராக அறிவித்தும், திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையை இரண்டு மடங்காக விரிவுபடுத்தியும் எனது தொகுதியில் திருவாலங்காடு புறக் காவல் நிலையத்தை காவல் நிலையமாக உயர்த்திக் கொடுத்தும் கோடிக்கணக்கான பணங்களை இன்றையதினம் திருத்தணி தொகுதிக்காக ஒதுக்கீடு செய்து பல்வேறு நலப்பணிகளைப் புரிந்து வருகின்ற தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர், புனிதத் தாய் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசுக்கு தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதிலே மகிழ்ச்சியடைவதோடு, நல்ல காரியங்களை நாளும் ஆற்றி வருகின்ற எங்களுடைய இதய தெய்வத்தினுடைய ஆட்சிக் காலத்தில்—சுதந்திரம் அடைந்து இது வரையில் எங்களது திருத்தணி நகரில் இயங்கி வருகின்ற குற்றவியல் மற்றும் மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களுக்கு கட்டிடம் இல்லாது அவ்வப்போது பல்வேறு இடங்களுக்கு இடம் பெயர்கின்ற ஒரு அவல நிலை இருப்பதாலும் அங்கே பணியாற்றுகின்ற வழக்குரைஞர்களுக்கு சரியான முறையில் போதிய இட வசதியும் மற்றும் நல்ல நிலையிலே அங்கே கட்டிடங்கள் இல்லாத காரணத்தினாலும் பாதிப்பான நிலையிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, எங்களது தணிகை நகரிலே இருக்கின்ற நீதிமன்றக் கட்டிடங்களுக்கு இதய தெய்வம் தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர், புனிதத் தாயினுடைய அரசு—இந்த ஆண்டிலே நீதிமன்றக் கட்டிடத்தைக் கட்டித் தருவதற்கு முன்வருவார்களா என்று நான் மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் மூலம் அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்தில் கருத்துரு பரிசீலனையில் இருக்கிறது. அது அரசுக்கு வந்தவுடன் அந்தப் பணிகள் தொடர்ந்து செய்யப்படும்.

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணியில் உள்ள நீதிமன்றக் கட்டிடங்களுக்கு கட்டிடம் கட்டுவதற்கான நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வரைபடமும் தயார் செய்யப்பட்டு உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு பல ஆண்டுகளாக கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. எனவே, அங்கே இருக்கின்ற நீதிமன்றங்களுக்கு கட்டிடங்கள் வருமா என்கின்ற ஒரு கேள்விக்குறி இருந்து கொண்டிருக்கிறது. எனவே, நீதிமன்றக் கட்டிடம் கட்டுவதற்கான பணியில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு பல்வேறு நலப்பணிகளைத் தொடர்ந்து தொகுதிக்கு ஆற்றி வருகின்ற இந்தக் காலத்தில் அங்கே இருக்கின்ற மக்கள் எல்லாம் புரட்சித் தலைவியின் அரசால் தான் செய்ய முடியும் என்ற நம்பிக்கையோடு இருந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த ஆண்டில் துரிதப்படுத்தி நீதிமன்றக்



1992 ஏப்ரல் 20]

கட்டிடத்தைக் கட்டித் தருவதற்கு புரட்சித் தலைவியினுடைய அரசு முன்வருமா என்பதை மீண்டும் நான் பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு அமைச்சர் பெருமகனாரிடம் அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துரிதப்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 551, திரு. ம. சின்னசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

551—

## பத்திர எழுத்தர்களை நியமிக்கத் தேர்வு

*6233— திரு. ம. சின்னசாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பத்திர எழுத்தர்கள் (Document Writers) லைசென்ஸ் முறையை மாற்றும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசே அவர்களைத் தேர்வு செய்து நியமிக்கும் முறை கொண்டுவருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பதிவுத்துறையில் ஆவண எழுத்தர்கள் லைசன்ஸ் முறைபற்றி எந்த மாற்றமும் இல்லை. நடைமுறையில் உள்ள விதிப்படி எல்லாம் நடக்கும்.

முற்பகல் 9–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பத்திர எழுத்தர்கள் என்பவர்களால் இன்றைக்கு வெகுவாக கிராமப்புறங்களில் இருந்து வருகிற விவசாயிகள் பெரிதும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி : பாதிக்கப்படுகிற நிலையில் இருக்கிறார்கள். இந்தளவு ஏக்கர் பூமி, இவ்வளவு ரூபாய் சொத்துக்கு இவ்வளவு ரூபாய் தான் வாங்கவேண்டுமென்று ஒரு

குறிப்பிட்ட அளவை ஏதாவது அரசு நிர்ணயித்து இருக்கிறதா? அல்லது இந்த பத்திர எழுத்தர்கள் இந்த அளவுக்குப் படித்து இருக்கவேண்டுமென்ற ஒரு கட்டாயம் இருக்கிறதா? இந்த பத்திர எழுத்தர்களுக்கு ஏதாவது அரசு பயிற்சி கொடுத்து இருக் கிறதா? அப்படி இல்லை என்றால் இந்த பத்திர எழுத்தர் களுக்கு என்று ஒரு பயிற்சிப் பள்ளியை உருவாக்கினால் அது மிகவும் நலமாக இருக்கும். அதைச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவண எழுத்தர்களுக்கு அரசு அனுமதி வழங்குகிறது. அனுமதி வழங்குவதற்கு முன்பாக அவர் களுக்கு தேர்வு வைத்து அந்தத் தேர்வில் தேறியவர்களுக்கு அரசு அனுமதி வழங்குகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டாகுமெண்ட் ரைட்டர்களை பொறுத்த வரையிலும் நமது அரசு முழு சம்பளம் கொடுப்பது இல்லை. அவர் களே வேலை செய்து சம்பாத்தியம் செய்து கொண்டிருக் கிறார்கள். அவர்களுக்கு ஒரு ரிடையர்மெண்ட் ஏஜ் என்று ஏதா வது ஒரு ஸ்டேஜ் வைத்து இருக்கிறோமா? 55 வயதுக்குப் பின் னால் லைசன்ஸ் கொடுக்கப்படுவது இல்லை என்று ஆயிரக் கணக்கான டாகுமெண்ட் ரைட்டர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, ரிடையர்மெண்டு ஏஜ் மாதிரி ஒரு ஏஜ் லிமிட் இல்லை என்று அரசு அறிவிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் வந்த இடைக்கால அரசு அவர்களுக்கு வயது நிர்ணயம் செய்தது. இப்போது இருக்கிற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அதை நீக்கிவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு கி. தர்மலிங்கம்.

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பத்திர எழுத்தர்கள் பழைய காலத்தில் எழுதியது போல வட மொழியிலோ அல்லது இஸ்லாமிய காலத் தில் எழுதியது போன்று இன்னும் பல சொற்களை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நமது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு தற்போது புதிய படித்த வாலிபர் களுக்கு அந்த பத்திரம் எழுதும் பயிற்சியைக் கொடுத்து தூய தமிழில் அந்த பத்திரங்களை எழுதுவதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதும் ஏறக் குறைய ஆவண எழுத்தர்கள், நகல் எழுத்தர்கள் 10 ஆயிரம் பேர் புதிதாக நியமிப்பதற்கு அரசு உத்தேசித்து இருக்கிறது. அதற்கு செய்தித்தாளில் அறிவிப்பு வந்திருக்கிறது. 30—5—1992-ல் தேர்வு நடைபெறும். அப்போது கூடியவரையிலும் மக்கள் புரிந்துகொள்கிற பேச்சு நடை அல்லது புழக்கத்தில் இருக்கிற தமிழ் சொற்களைப் பயன்படுத்துவதற்கு அரசு முயற்சி செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு, சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பத்திரம் எழுதுகிறவர்கள் சட்டம் தெரியா மல் சரிவர பத்திரங்களை எழுதாத காரணத்தால் பல வழக்கு கள் அவர்களாலேயே உருவாக்கப்படுகிறது. ஆகவே, சட்டம் படித்த வழக்கறிஞர்கள் மட்டுமே தான் உரிமைப் பெற்று இதுபோன்ற பத்திரங்களை எழுதவேண்டும் என்ற நிலையை அரசு உருவாக்கித் தருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பல வழக்கறிஞர்களை விட பத்திரம் எழுதுகிறவர்கள் திறமையான வழக்கறிஞர் களாக இருக்கிறார்கள். குறிப்பாக திரு. சி. ஞானசேகரன். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் படித்தவர்களுக்கு மட்டுமே எல்லாவற்றையும் ஒதுக்குவதற்கு இந்த அரசு தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கிராமங்களில் பத்திரம் எழுதுவதால் தான் சண்டை சச்சரவுகள் வருகின்றன. தோட்ட தகராறு வாய்க்கால் தகராறு, வரப்பு தகராறு, வீடு தகராறு, எல்லா தகராறுகளும் பத்திரம் எழுதுகிறவர்கள் தெரியாமல் புரியாமல் எழுதுகின்ற காரணத்தால் தான் சண்டை சச்சரவுகள் கிராமங் களில் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, பட்டப் படிப்புப் படித்தவர்களோ அல்லது பயிற்சி பெற்றவர்களோ அவர்கள் தான் டாகுமெண்ட் ரைட்டர்களாக வருவதற்கு, வரமுடியும் என்று சட்டம் இயற்ற அரசு முன்வருமா என அறிய விரும்பு கிறேன். ஏன் என்றால் ஏகப்பட்ட வழக்குகள் அதனாலேயே தீர்ந்து விடும். தெரியாமல் ஏதோ ஒரு பத்திரத்தை எழுதி விடு கிறார்கள். ஆகவே, இரண்டு வீட்டாரும் சண்டை போடுகிறார்கள். இந்த நிலையை மாற்றுவதற்கு அரசு ஒரு முற்றுப்புள்ளி வைக்குமா என அறிய விரும்புகிறன்.

முற்பகல் 9-40 [1992 ஏப்ரல் 20

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே இங்கே தெரி வித்தபடி இப்போது 10 ஆயிரம் பேரை நியமிப்பதாக இருக் கிறோம். கூடிய வரையிலே அவர்களுக்கெல்லாம் தேர்வு வைத்து, தேர்ச்சி பெற்றவர்களை நியமிப்பதாக இருக்கிறோம். நம் முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி கிராமத் தில் இருக்கிற நிலச் சொந்தக்காரர்கள், நிலவுடைமையாளர்கள் வாங்குபவர்களும் விற்பவர்களும் அந்த அளவிற்கு விவரம் தெரியா தவர்கள் அல்ல. எவ்வளவு பத்திர எழுத்தாளர்கள் இருந்தாலும் யார் நன்றாக எழுதுகிறவர்கள் என்பது நடைமுறையிலே கிராம மக்களுக்கு நன்றாகத் தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 552. மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக் கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.

வினா எண் 553, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

553—

அரசினர் மேல்நிலைப்பள்ளிக்குக் கட்டிட வசதி.

348—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம் அந்தியூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்குப் · ாதிய கட்டிட வசதி இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் புதிய கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க துரித நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1991–92–இல் அந்தியூர் அரசினர் மேல்நிலைப் பள் ளிக்கு 3 வகுப்பறைகளை ரூ. 4.70 இலட்சம் செலவில் கட்ட அனுமதியளிக்கப்பட்டு, கட்டட வேலைகள் தொடங்க நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



1992 ஏப்ரல் 20]

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்விக்காக ஏராளமான பணத்தை ஒதுக்கி கொடுத்து கொண்டிருக்கிற நான் வணங்கி கொண்டிருக்கிற கடவுள் இதய தெய்வம் புரட்சித் தலைவியின் ஆட்சியில் 3 கட்டிடங்களைக் கட்டித் தருவதற்கு ஆவன செய்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருப்பதாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு என்னுடைய மன மார்ந்த நன்றியைத் தெரிவித்து, எங்களுடைய · ' குதிக்கு இன்னும் இரண்டு கட்டிடங்களை அதிகம் கட்டுவதற்கு இந்த ஆண்டு போதிய நிதி வசதி இல்லை என்பதை தெரிந்து இருக்கிற காரணத்தால், அடுத்த ஆண்டாவது இன்னும் இரண்டு கட்டிடங்களைக் கட்' - ".ாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? ஏனென்றால் ஏறத்தாழ 2014 மாணவர்கள் பயிலுகின்ற இந்தப் பள்ளிக்கூடத்தில் ஏறத்தாழ 4 வகுப்புகள் வெளியிலேமரத்தடியிலே வைத்துகொண்டுஇருக்கிறார்கள். ஆகவே அருள்கூர்ந்து அந்தக் கட்டிடங்களைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதுமான நிதி வசதி இருக்கும்போது, இந்தப் பள்ளிக்கு மேலும் கட்டிடம் கட்ட வேண்டுமென்ற யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பெரியார் மாவட்டத்திற்கு அருகிலுள்ள கோவை மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கல்வியிலே வல்லவர்; வல்லுனர். அவர்களுடைய நல்லாசி எங்களுக்கு எப்போதும் கிடைக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய நல்லாசியோடு அவர்கள் வருங்காலத்தில் செய்து தருவ தாகச் சொல்லி உள்ளார்கள். அதற்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக அவர்களுக்கு நன்றியை சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 554, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

554—

பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்குக் கட்டிட வசதி

*5047—திரு. ஆர். பி. பரமசிவம் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னார்க்காடு மாவட்டம் சின்னசேலத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னசேலத்தில் இருக்கின்ற மகளிர் உயர்நிலைப் பள்ளி எங்களுடைய மாவட்டத்திலேயே முதன் முதலாக தொடங்கப்பட்ட பள்ளியாகும். அதிலிருந்து ஆண்கள் உயர் நிலைப் பள்ளி பிரிக்கப்பட்டு, இப்போது அது மேல்நிலைப் பள்ளியாக வளர்ந்து இருக்கிறது. ஆனால் இந்த மகளிர் உயர்நிலைப் பள்ளி, அந்தக் காலத்தில் கிட்டத்தட்ட 1936, 38-இல் கட்டப்பட்ட கட்டிடத்திலேயே இயங்கி வருகிறது. போதிய இட வசதி இல்லை என்பது மட்டுமல்ல, கட்டிடமும் பழுதாகி விட்டது. ஆகவே, அருள்கூர்ந்து நம்முடைய இதய தெய்வம் ஆட்சியில் அந்தப் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டவும் இருக்கின்ற கட்டிடத்தை மாற்றியமைக்கவும் அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளிக் கட்டிடங்களுக்காக உலக வங்கியிடமிருந்து நிதியுதவி பெற அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது. ஆகவே, அந்தச் சந்தர்ப்பத்தில் இதுபோன்ற பள்ளிகளுடைய கட்டிடத் தேவைகளைப் பரிசீலனை செய்து அரசு கட்டிடம் கட்ட முடிவு எடுக்கும்.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியினுடைய ஆதாரத்தை வைத்துக் கொண்டு, நீண்ட ஒரு இடைவெளிக்குப் பிறகு கட்டுவதாக இருக்கின்ற ஒரு அறிவிப்பை அங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இருப்பதற்கே இடமில்லாமல் மரத்தினடியில் உட்கார்ந்து கொண்டு பெண்கள் படிக்கும் பொழுது, சாலையில் போய் வந்துகொண்டிருக்கிற சமூக விரோதிகள் அரட்டை அடிப்பதும், கிண்டல் செய்வதும் போன்ற நிகழ்ச்சிகள் நடந்து கொண்டு இருக்கின்றன. ஆகவே, அருள்கூர்ந்து அடுத்த ஆண்டாவது என்னுடைய சின்னசேலம் தொகுதியிலுள்ள, சின்னசேலம் நகரத்தில்





இருக்கின்ற அந்த பெண்கள் பள்ளிக்கு கட்டிடம் கட்டுவதற்கு வேண்டிய முயற்சியை அரசு எடுக்குமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதி வசதி இடம் தருமேயானால் அந்த முன்னுரிமைக்கேற்ப பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்கான ஒரு முயற்சியை இந்த ஆண்டே கூட அரசு மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 555, திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

555—

## சென்னை நகரில் காலரா நோயினால் இறந்தவர்களின் எண்ணிக்கை.

* 1005—திரு. டி. சுதர்சனம்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிய சென்னை நகரில் காலராவினால் இறந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) இந்த நோயைத் தடுப்பதற்காக அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). சென்னை மாநகரில் 1991 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் முடிய காலராவினால் இறந்தவர்கள் எண்ணிக்கை 4. காலரா நோயால் பாதிக்கப்பட்ட இடங்களில் பழுதடைந்த குடிநீர் குழாய்கள் சரி செய்யப்பட்டன. அந்த இடத்திலிருந்து குடிநீர் மாதிரிகள் எடுத்து ஆய்வுக்குப்பின் ஆய்வின் முடிவினை சென்னை குடிநீர் வாரியத்திற்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது. சுமார் 1,23,964 நபர்களுக்கு இந்நோய்க்கு எதிரான நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது. 4,533 குடிநீர் வழங்கும் நிலையங்களில் நோய்க் கிருமிகளை அழிக்க குளோரின் மருந்து கலக்கப்பட்டது. சுற்றுப் புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ளல், சூடான உணவுப் பொருட்கள் உட்கொள்ளல், நன்றாகச்சுடவைத்து பிறகு ஆற வைத்த நீரையே பருகுதல் போன்ற சுகாதாரக் கல்வி

மக்களுக்குத் தொலைக்காட்சி, வானொலி இவைகளின் மூலம் உணர்த்தப்பட்டது. இந்நிலை தற்பொழுது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறது.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நோயினைத் தடுப்பதற்கு, சுகாதாரக் கேடுகள் பரவக் காரணமாக இருக்கின்ற சாலையோர ஓட்டல்கள் போன்றவற்றை அகற்றி விட்டுத் தரமான முறையில் மக்களுக்கு உணவுப் பொருட்கள் கிடைக்க ஆவன செய்யப்படுமா? மேலும் இதற்காக உள்ள சுகாதார ஆய்வாளர்கள் திறமையாகப் பணியாற்றவில்லை என்பதை அரசு அறியுமா? எனவே, இந்த நோயினைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதார ஆய்வாளர்கள் திறமையாக பணியாற்றுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய அரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுகாதார ஆய்வாளர்கள் தங்கள் கடமைகளை அவர்கள் செய்ய வேண்டும். அவர்கள் அந்தப் பணியைச் செய்யவில்லை என்றால் அரசு நடவடிக்கை எடுக்கும். ஆனால் இப்பொழுது நிலைமை கட்டுக்கடங்கி இருக்கிற காரணத்தால், அவர்கள் முறையாகப் பணியாற்றிய காரணத்தால் தான், அது கட்டுக்கடங்கி இருக்கிறது என்று கருதுகிறேன். எனவே, இப்படிப்பட்ட குறைபாடுகள் உங்களுக்குத் தெரியுமேயானால் அதை உடனே எங்களுக்குத் தெரிவித்தால் அதன் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலே இந்தக் காலரா ஆஸ்பிடல் என்பது தண்டையார்பேட்டையிலே ஒரு மூலையிலே இருக்கிறது. நிறையப் பேர் பாதிக்கப்படுகின்ற பொழுது சென்னை மாநகரத்தின் ஒரு பகுதியிலேயிருந்து ஒரு மூலைக்குச் செல்வதற்கும், செங்கை--எம்.ஜி.ஆர். மாவட்டத்திலேயிருந்து அங்கே வந்து நோயாளிகள் சென்றடைவதற்கும் மிகக் கால தாமதம் ஏற்படுகிறது. அதற்காகப் புறநகர்ப் பகுதியிலே தாம்பரம், சைதாப்பேட்டை அல்லது பூவிருந்தவல்லி போன்ற பகுதியிலே ஒரு காலரா ஆஸ்பத்திரி அமைக்கின்ற எண்ணம் தமிழக அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மருத்துவமனைகளிலேயும் இதற்கு மருத்துவச் சிகிச்சையைப் பெற முடியும். இதற்கு என்று தனியாக ஒரு மருத்துவமனையை அமைக்க வேண்டிய அவசியமில்லை. மிக அதிகமாகப் பிரச்சினை ஏற்படுகின்ற பொழுது தான் இந்தக் காலரா மருத்துவமனைக்குக் கொண்டு போக வேண்டுமென்பதற்காகத் தனியாக ஒன்றை அமைத்து வைத்திரு-



க்கின்றார்கள். எனவே, ஒவ்வொரு இடத்திலும் தனியாக இதற்கு அமைக்க வேண்டிய அவசியமில்லை. ஏற்கெனவே இருக்கின்ற மருத்துவமனையையே பயன்படுத்திக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலரா நோயால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களுடைய எண்ணிக்கை ஆண்டுதோறும் குறைந்து கொண்டே வருகிறதா அல்லது மிகுந்து கொண்டே வருகிறதா? சென்னை மாநகரத்தில் எந்தப் பகுதியில் காலராவால் பாதிக்கப்பட்ட மக்கள் அதிகமாக இறந்திருக்கிறார்கள்? அவ்வாறு இறந்திருக்கும் இடம் எது என்பதை அரசு கண்டறிந்துள்ளதா? அப்படி அதிகமாகப் பாதிக்கப்பட்டிருந்த இடங்களிலே காலரா மருத்துவமனையை அமைக்க அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஓராண்டுக்கு உயர்ந்திருக்கிறது. மீண்டும் ஓராண்டுக்குக் குறைந்திருக்கிறது. எனவே, இதிலே ஃப்ளக்சுவேஷன் இருக்கிறதே ஒழிய இது குறிப்பிட்ட அளவிற்கு அப்படியே உயர்ந்து கொண்டே போகிறது என்று சொல்ல முடியாது. இந்த ஆண்டு மற்ற ஆண்டைவிடக் குறைவாகத்தான் இருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னேன். சென்னை மாநகரத்திலே 4 பேர்தான் இறந்திருக்கிறார்கள், இதனால் பாதிக்கப்பட்டு என்று சொல்லியிருக்கிறேன். எந்தெந்த இடம் என்று குறிப்பிட்டு என்னால் இப்பொழுது சொல்ல முடியாது. தனியாக அதைப்பற்றிக் கேட்டால் நான் தெரிவிக்கிறேன். எனவே, இந்த 4 பேருக்காக ஒரு தனி காலரா மருத்துவமனையை அமைக்க வேண்டிய அவசியமில்லை. ஏற்கெனவே நிறைய இடங்களிலே நமக்கு மருத்துவமனைகள் இருக்கின்றன. அந்த மருத்துவமனைகளை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். எல்லா வசதிகளும் இருக்கின்றன. மருந்துகள் இருக்கின்றன; டாக்டர்கள் இருக்கிறார்கள்; உங்களைப் போன்ற டாக்டர்களெல்லாம் அங்கே இருக்கிறார்கள். எனவே, அந்தப் பிரச்சினை—ஒவ்வொரு இடத்திலேயும் மருத்துவமனை அமைக்க வேண்டிய அவசியம் வராது. நிச்சயமாக இது இப்பொழுது கட்டுப்பாட்டிலே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் சீனியம்மாள்.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் காலரா மற்றும் இம்முனிசேஷன் போன்ற வியாதிகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய இந்தச் சுகாதார ... வாளர்களுடைய கட்டுப்பாடு தற்போது நகராட்சி ஆணை

யரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். இதனால் தான், இந்தக் காலரா வியாதி போன்ற கடும் வியாதிகளை மருத்துவ அதிகாரியிடமிருந்து பிரித்து எடுப்பதால் அவர்களைக் கட்டுப்படுத்துவது சிரமமாக இருக்கின்ற காரணத்தினால்தான், ஜாண்டிஸ், காலரா போன்ற வியாதிகள் அதிகப்படுவதாகத் தெரிகிறது. எனவே, மீண்டும் ஆணையரிடம்—போன திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலே 50 இலட்சம் ரூபாய் கொடுத்து முன்னாள் அமைச்சர்கள் கோ. சி. மணி அவர்களும், வீரபாண்டி ஆறுமுகம் அவர்களும் இதைப் பிரித்து எடுத்துக் கொண்டு, அந்த அதிகாரத்தை முனிசிபல் ஹெல்த் ஆபீசரிடமிருந்து பிரித்து, ஆணையரிடம் கொடுத்து விட்டதாக அறிகிறேன், எனவே, மீண்டும் அந்த அதிகாரத்தை மருத்துவ அலுவலர்களிடம் வழங்கினால், இது போன்ற காலரா வியாதி, ஜாண்டிஸ், டைபாய்டு போன்ற வியாதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு மருத்துவர்களால் முடியும் என்பதைத் தெரிவித்து, இதை மறுபரிசீலனை செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9—50

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முனிசிபல் ஹெல்த் ஆபீஸர்ஸ் மற்றும் கார்ப்பரேஷன் ஹெல்த் ஆபீஸர்களிடமிருந்து அந்தக் கட்டுப் பாட்டை ஆணையரிடம் மாற்றி விட்டார்கள் என்ற குறைபாடு சொல்லப்பட்டது, அது நகராட்சியில் அவர்கள் எடுத்திருக்கிற முடிவு. அங்கே அதை ஒழுங்காக, சீராக அந்த வேலையை நடத்துவதற்கு அவர்களுக்கு எப்படி வசதிப்படுகிறதோ அப் படித்தான் செய்வார்கள். ஆனால் அந்த மருத்துவ அதிகாரிகள் என்னைச் சந்தித்தபோது அதுபற்றி என்னிடத்திலே தெரிவித் தார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர் களிடத்திலே இதுபற்றி பேசி, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்,

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலரா நோய் ஆரம்பிக்கிறபோது, எல்லோருக்கும் வாந்தி, பேதியிலேதான் ஆரம்பிக்கும். ஆனால், இது என்ன காலராதானா அல்லது 'கேஸ்டிரோ என்டரைடிஸ்' என்று சொல்லக்கூடிய வாந்தி, பேதியா என்று தெரியாது. அப்படித் தெரிய வேண்டுமானால், பேதி ஆகிற அந்த சாம்பிளை உடனடியாகப் பரிசோதனைக்கு அனுப்பி, அதிலே விப்ரோ காலரா என்கிற அந்தக் கிருமி இருக்கிறதா என்று கண்டுபிடிக்க வேண்டும்.



அதிலே காலதாமதம் ஏற்பட்டால், அந்த வியாதி வெகு விரைவாகப் பரவி, சமுதாயத்தையே பாதிக்கக்கூடிய நிலை இருப்பதால், இதுபோன்ற பரிசோதனைகளை வாந்தி, பேதி எங்கு வந்தாலும், உடனடியாகச் செய்து, அவ்வாறு ஆய்வு செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாந்தி, பேதி எங்கே வந்தாலும் உடனடியாக அதைப் பரிசோதனை செய்வதற்கு அரசாங்க மருத்துவ மனை தயார்ராக இருக்கிறது இப்போது நாம் வைக்கிற வேண்டுகோள்கள் எல்லாம், அப்படி எங்கேயாவது வாந்தி, பேதி வருகிற நிலை தெரியுமேயானால், உடனே அன்றைக்கே மருத்துவ மனைக்கு அவர்கள் வந்து அதைத் தெரிவிக்க வேண்டுமென்ற வேண்டுகோளைத்தான் சட்டமன்றத்தின் மூலமாக நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 556, திரு. வே. தம்புசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

556—

வலிவலத்திலுள்ள கனகா மருத்துவமனையை கையகப்படுத்தல்.

*1516—திரு. வே. தம்புசாமி:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவாரூர் வட்டம், வலிவலத்தில் அறக்கட்டளை மூலம் நடத்தப்படும் கனகா மருத்துவமனையை கையகப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது வலிவலத்தில் நடந்துவரும் கனகா மருத்துவமனையை கையகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனை நகரத்தினுடைய மையப் பகுதியில் அமைந்திருக்கிறது. ஏறத்தாழ, திருத்துறைப்பூண்டி, திருவாரூர், கீவளூர், நாகப்பட்டிணம் ஆகியவற்றிற்கிடையே ஒரு பெரிய மருத்துவமனை என்று சொன்னால், அப்படி தனியார் மூலம்—ட்ரஸ்ட் மூலம் இயங்கி வருகிற, வலிவலத்திலே இருக்கிற அந்த மருத்துவமனையாகும். இப்போது, அதைத் தொடர்ந்து நடத்துவதற்கு, அந்த நிறுவனத்தால் முடியவில்லை. அரசிடம் ஒப்படைப்பதற்கு அவர்கள் சம்மதிக்கிறார்கள். ஆகவே அதை அரசு எடுப்பதன்மூலம், அந்த சுற்றுவட்டார மக்களை பாதுகாப்பதற்கு மிகப் பெரிய அளவுக்கு அது உதவியாக இருக்கும். மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் இதைப் பரிசீலித்து, அந்த மருத்துவமனையை அரசே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டிரஸ்ட் மூலமாக அது இயங்கிக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே, 1983-ஆம் ஆண்டு, அரசாங்கம் அதை எடுத்துக் கொள்ளலாம் என்று ஒரு ஆணை பிறப்பித்தது. ஆனால், அப்போது உபரி நிலம் அங்கே இருந்தது. அதை விற்றிருக்கிறார்கள். அதற்கான 1,51,600 ரூபாய், அரசாங்கத்தினுடைய கணக்கிலே கட்ட வேண்டுமென்று சொல்லப்பட்டது. அதுவும் செய்யப்படவில்லை. ஆறு ஏக்கர் நிலம், அதிலே அவர்கள் சொந்தமாக அந்த ட்ரஸ்டே வந்து விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதையும் அரசாங்கத்திடத்திலே ஒப்படைக்க வேண்டுமென்று சொன்னபோது, அதையும் மென்று அவர்கள் சொன்னார்களேயொழிய, அரசாங்கம் உத்தரவு போட்டதேயொழிய, எழுத்து மூலமாக அவர்கள் கேட்டுக் கொள்ளாதக் காரணத்தினால், அதிலே சிக்கல் ஏற்பட்டு, அப்படியே நின்று போய்விட்டது. இப்போது இருக்கிற நிலைமை, ஏதோ அதிலே கடன் இருப்பதாகத் தெரிய வருகிறது. இந்த நிலத்தை விற்று, அந்தக் கடனை ஈடுகட்ட வேண்டுமென்றெல்லாம் சொல்கிறார்கள். எனவே, இதை முழுமையாக ஆய்வு செய்த பின்னாலேதான், அதிலே முடிவு செய்ய முடியும்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த ட்ரஸ்டுக்காக ஒதுக்கப்பட்ட நிலம், உபரி நிலமாக அறிவிக்கப்பட்டு, அந்த நிலத்தைப் பெற, அரசுத் தரப்பிலேயிருந்து பணம் வழங்கப்பட்டது. அந்தப் பணத்தையும், மருத்துவமனையையும் சேர்த்து வழங்க



வேண்டுமென்று கோரப்பட்டது. அவர்கள் கோரியது என்பது, பணத்தை நாங்கள் எடுத்துக் கொள்கிறோம்; மருத்துவமனையை எடுத்துக் கொள்ளுங்கள் என்று கோரினார்கள். இரண்டும் சேர்த்துக் கொடுத்தால்தான், அரசு எடுத்துக் கொள்ளுமென்று அன்றையதினம் சொன்னக் காரணத்தால், அதை எடுத்துக் கொள்ள முடியாமல் போய் விட்டது. ஆகவே, அவர்களுக்குச் சேர வேண்டிய அந்த 1,51,000 ரூபாயையும் அவர்கள் எடுத்துக் கொண்டு விட்டார்கள். எனவே, அந்த மருத்துவமனையை அரசே எடுத்துக் கொண்டு, மேலும் அதை அபிவிருத்திச் செய்வதன் மூலமாகத்தான், அந்தப் பகுதிக்கு ஒரு சிறப்பான வாய்ப்பை ஏற்படுத்த முடியும்; அவ்வாறு செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பணத்தை அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கக் கூடாது. காரணம், அது ட்ரஸ்டுக்குச் சேர்ந்தது. எனவே, ட்ரஸ்டை அரசாங்கமே எடுத்துக் கொள்கிறபோது, அவர்கள் நடத்த முடியாதக் காரணத்தால் தான் அரசு எடுத்துக் கொள்கிறது. அப்படி இருக்கிறபோது, அதிலே இருக்கிற பணத்தை, அதுவும் நிலத்திற்கு ஈடாக, உபரி நிலத்திற்கு ஈடாகக் கிடைத்தப் பணத்தை அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கக் கூடாது. அது தவறு. எனவேதான், அரசாங்கம் அதை கைவிட்டிருக்கிறது என்று கருதுகிறேன். ஆகவே, அந்த 1,51,000 ரூபாய்க்கு என்ன கணக்கு என்பதை முதலிலே அவர்கள் தெரிவிக்க வேண்டும். அடுத்து, 6 ஏக்கராவை விற்று—அங்கே கடன் இருக்கிறது; அதைக் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள்; ஏற்கனவே ஒரு இலட்சத்து ஐம்பத்தோராயிரம் எடுக்கப்பட்டு இருக்கிறது. டிரஸ்டிலே செலவாகியிருந்தால் கூட பரவாயில்லை. எனவே அதை முழுமையாய்ப் பார்த்து, இறுதியாக முடிவு எடுக்கலாம்.

முற்பகல் 9.55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 557, திருமதி கே. மரியம்உல் ஆசியா, திரு. வி. பி. சந்திரசேகர், திரு. கே. பி. மணிவாசகம், திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

57—

சேரன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்தல்.

2388—திருமதி கே. மரியமுல் ஆசியா,
திரு. வி. பி. சந்திரசேகர்,
திரு. கே. பி. மணிவாசகம்,
திரு. கே. செல்வராஜ்:

[1992 ஏப்ரல் 20

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தில்லைநாயகம் பட்டாபிராமன் கமிட்டியின்படி நீலகிரி மாவட்டத்தில் பேருந்துகள் முழுவதும் அரசுடைமையாக்கப் பட்டதால், தனிப் போக்குவரத்துக் கழகம் அமைக்க அரசு சிபாரிசு செய்ததை அமல்படுத்த சேரன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து நீலகிரி மாவட்டத்தை தலைமை யகமாகக் கொண்டு செயல்படும் விதத்தில் போக்குவரத்துக் கழகம் துவக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி கே. மரியமுல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகத் தில் அதிகமான பேருந்துகள் இருப்பதாலும், மேலும் அங்கு வேலை செய்யக்கூடிய பணியாளர்கள் அதிகமாக இருப்பதாலும் நிர்வாக வசதியை முன்னிட்டு அரசு இதை மீண்டும் பரிசீலனை செய்து, சேரன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து, மலைகளின் ராணி என்று அழைக்கப்படுகின்ற நீலகிரி மாவட்டத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகின்ற விதத்திலே பிரிக்கப்பட வேண்டும் என்றும், அவ்வாறு பிரிக்கப் படுகின்ற சேரன் போக்குவரத்துக் கழகத்திற்கு தமிழகத்தின் ஒளிவிளக்காய் விளங்கும், பெண்கள் சமுதாயத்திற்கு வழி காட்டியாகவும் விளங்குகின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயர் சூட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேரன் போக்கு வரத்துக் கழகத்தைப் பொறுத்த வரையிலும், கோவை, நீலகிரி இரண்டு மாவட்டங்களையும் இணைத்து அந்தப் போக்குவரத்துக் கழகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கே ஏறத்தாழ 1,346 பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீலகிரியை பிரித்து, அதைத் தலைமையிடமாகக் கொண்டு பேருந்துகளை இயக்க முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். நீலகிரி மாவட்டத்தில் பேருந்து களை இயக்குகின்ற போது பெரும் நஷ்டம் ஏற்படும் என்ற காரணத்தால் அதைப் பிரிப்பதற்கான சாத்தியகூறு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1992 ஏப்ரல் 20]

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகம் குறைந்த அளவான பேருந்துகளை ஓட்டுகின்ற நேரத்திலே சேரன் பொறியியல் கழகமும் அதனுடன் இணைக்கப்பட்டிருந்தது. சேரன் பொறியியல் கழகம் பேருந்துகளை உருவாக்குவதில் இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தை வகித்துக் கொண் டிருக்கிறது. அப்படிப்பட்ட பொறியியல் கழகம் இன்றைக்கு நிதி நிலை நெருக்கடியின் காரணமாக நலிவுற்றுக் கொண் டிருக்கின்ற நிலையை நாம் பார்க்கின்றோம். மீண்டும் இப்படி சிறப்பு வாய்ந்த சேரன் பொறியியல் கழகத்தை சேரன் போக்கு வரத்துக் கழகத்தோடு இணைப்பதற்கு இந்த சேரன் போக்கு வரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து தனியாகப் போக்கு வரத்துக் கழகம் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேரன் பொறியியல் கழகம் என்பதைத் தனியாக வைத்துக் கொண்டிருக்கிறோம். அதற்குக் காரணம் அதிலே வாங்குகின்ற 'சேஸிஸ்' அத்தனையை யும் அழகான வண்டிகளாக மாற்றி, 'பாடிகளை' கட்டித் தருவதற்காக அது உருவாக்கப்பட்டிருக்கிறது. முன்னால் இருந்த ஆட்சிக் காலங்களிலே அங்கே புதிதாக வண்டிகள் இயக்கப்பட வில்லை. அதோடு மட்டுமல்லாமல் பழைய வண்டிகள் மாற்றி யமைக்கப்படவில்லை. ஆகவேதான் அந்தப் பொறியியல் கழகத்திலே நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றையதினம் 1992-ஆம் ஆண்டு இறுதிக்குள்ளே அனைத்துப் போக்கு வரத்துக் கழகங்களிலும் பழைய வண்டிகளை மாற்றி 3,000 புதிய வண்டிகளை விடவேண்டும் என்று ஆற்றல் மிக்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, சேரன் பொறியியல் கழகத்தில் 350 புதிய பேருந்துகள் அமைப்பதற்கு அனுமதி தந்திருக்கிறோம். ஆகவே, இந்த ஆண்டு நஷ்டம் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வான்புகழ், வள்ளுவர் வகுத்த திருக்குறள் போல, சேரன் போக்குவரத்துக் கழகம் இன்று 1,300-க்கும் மேற்பட்ட பேருந்துகளை, கோவையைத் தலைமை இடமாகக் கொண்டு சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. கோவைக்கும், நீலகிரிக்கும் இடையில் உள்ள மிக முக்கியமான நகரம் உடுமலைப்பேட்டை, அங்கு ஏற்கெனவே சேரன் போக்குவரத்துக் கழகத்தின் பொறியியல் கழகம் உள்ளது. 'பொதுமக்களின் தேவையே எங்களது சேவை' என்றபடி

[1992 ஏப்ரல் 20

நிர்வாகத் திறன் மற்றும் வேலைவாய்ப்பு கருதி, உடுமலைப் பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு சேரன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்க எங்களது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் புனித அரசு மறு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகத்தில் 1,346 பேருந்துகள் இருப்பதாக நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உடுமலைப்பேட்டையைத் தலைமை இடமாகக் கொண்டு இரண்டு போக்குவரத்துக் கழகங்களாகப் பிரிக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். கோவைக்கும், நீலகிரிக்கும் நாம் மையப் பகுதியாகப் பார்க்கின்றபோது கோவை நகரம்தான் மையப் பகுதியாக இருக்கின்றது. அதே நேரத்தில் இதைப் பிரிப்பதற்குச் சாத்தியக்கூறு இல்லை என்பதற்குக் காரணம், ஏறத்தாழ 372 பேருந்துகளை நீலகிரி மாவட்டத்திலே இயக்கிக் கொண்டிருக்கிறோம். அந்தப் பேருந்துகளை இயக்குகிறபோது பெரும் நஷ்டத்தில் அவை இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கிற நிலையை நாம் பார்க்கிறோம். ஆகவேதான் அதைப் பிரிப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்று நான் குறிப்பிட்டேன்.

முற்பகல் 10—00

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திற்கென சேரன் போக்குவரத்துக் கழகத்தை தனியாகப் பிரித்து, வைப்பதற்கான உத்தேசம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தாலும், நீலகிரி மாவட்டத்தில் தலைமையிடம் இல்லாமல் கோவையில் சேரன் போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடம் உள்ளதால் வாகனங்களில் பழுது ஏற்படுகிறபோது, அதைச் சரிபடுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கிறபோது நீலகிரி மாவட்டத்தில் இருக்கிற அந்த டிவிஷன் மேனேஜர் கோவையில் உள்ள அலுவலகத்தை அணுகி, கேட்டு செயல்படுத்தவேண்டிய சூழ்நிலை உள்ளதால், நஷ்டத்திலே அந்தக் கழகம் இயங்கினாலும் அதை இலாபகரமாக இயக்குகிற அளவுக்கு நடவடிக்கை எடுத்து, நீலகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு சேரன் போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்துத் தனியாக அமைப்பதோடு, தமிழ்நாட்டில் மறைந்த முன்னாள் முதல்வர்கள் பெயர்களையும், தேசத் தலைவர்களின் பெயர்களையும் வைத்து நீங்கள் போக்குவரத்துக் கழகங்களை நடத்திக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் நீலகிரி மாவட்டத்தில் அந்தப் போக்குவரத்துக் கழகத்தை இந்த ஆண்டோ அடுத்த ஆண்டோ பிரித்தமைத்து அதற்கு பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய பெயரை வைப்பீர்களா என அறிய விரும்புகிறேன்.



1992 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் பேருந்துகளை இயக்குகிறபோது பழுதடைந்துவிட்டால் உடனடியாக கோவைக்குத் தொடர்பு கொண்டுதான் செய்ய வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை அங்கே இல்லை. அங்கே பொது மேலாளரை நாம் வைத்திருக்கிறோம். எந்தப் பேருந்துகளில் பராமரிப்பு வேண்டும் என்றாலும் அவர்கள் அதே இடத்தில் உத்தரவு வழங்கலாம். ஆகவே அவர் சொல்கிற அந்த சூழ்நிலை அங்கே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிரிக்கிற வாய்ப்பு அங்கே இருந்தால்தான் எந்தத் தலைவருடைய பெயரை வைப்பது என்பதைப்பற்றி நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவு வழங்குவார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகத்தில் 1,346 பேருந்துகள் ஓடுகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலே, நீலகிரி மாவட்டத்தில் பேருந்துகளை ஓட்டுவதால்தான், எங்கள் கோவை மாவட்டத்தைத் தலைமையிடமாகக் கொண்டிருக்கிற சேரன் போக்குவரத்துக் கழகம் நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. ஆகவே நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மட்டும் தனியார்களுக்கு அதாவது தனிப் பேருந்துகளுக்கு அனுமதி தந்தால் அவர்கள் இலாபகரமாக ஓட்டித் தருவார்கள். அரசுக்கு வருகிற நஷ்டமும் குறைவாகும். ஆகவே தனியார்களுக்கு நீலகிரி மாவட்டத்தில் மட்டும் பேருந்துகளை ஓட்ட அனுமதி தந்தால் இலாபகரமாக அவர்கள் ஓட்டுவார்கள். நம்முடைய நஷ்டமும் கம்மியாகும். அதை அரசு செய்ய முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழக முதல்வர் புரட்சித் தலைவியினுடைய கொள்கையே தனியாருக்குப் பேருந்தை விடுகிற நோக்கமே அல்ல. அங்கே பேருந்தை இயக்குகிறபோது மலைப்பகுதியாக இருக்கின்ற காரணத்தால், பாதை வசதிகள் சரியான முறையில் இல்லாத நிலையில் சில பகுதிகளிருக்கின்ற காரணத்தால், மலைப் பகுதிகளில் இயக்குகிறபோது 'ஃபோர்த் கியர்' என்று சொல்லப்படுகிற அந்த 4-வது கியரில் பேருந்தை இயக்க முடியாது. முதல் 'கியர் அல்லரி'க இரண்டாவது கியரிலேதான் பேருந்துகளை இயக்க வேண்டிய

[1992 ஏப்ரல் 20

காரணத்தால் டீசல் அதிகமாகச் செலவாகிறது. டயர் தேய்மானம் அதிகமாக ஏற்படுகிறது. ஆகவேதான் அங்கே நஷ்டம் ஏற்படுகிறது என்பதை நான் குறிப்பிட்டேன். அங்கே உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல் தனியாகப் பிரிக்கிற சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 558, திரு. அ. தேவராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

558—

புளியம்பாக்கம் கிராமத்தில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பணிமனைக் கட்டிடம்.

*4695—திரு. அ. தேவராஜ் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செய்யாறு தொகுதி, புளியம்பாக்கம் கிராமத்தில் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பணிமனைக் கட்டிடப் பணி கடந்த ஓராண்டு காலமாக துவக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) செய்யாறு தொகுதி, புளியம்பாக்கம் கிராமத்தில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை அமைக்க கட்டுமானப் பணிக்காக ஒப்பந்தங்கள் பெறப்பட்டு முடிவு எடுக்கப்பட்டுவிட்டது. கட்டுமானப் பணி உடனடியாக துவங்கப்பட உள்ளது.

(ஆ) கட்டுமானப் பணிகள் முடிந்து பணிமனைகள் இந்த நிதியாண்டின் முன்பாதியிலேயே செயல்படுத்தப்படும்.

திரு. அ. தேவராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டிலேயே துவக்கப் படும் என்பது குறித்து அமைச்சர் அவர்கள் தெரிவித் தார்கள். மிக்க மகிழ்ச்சி. ஆனால் அந்த பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட இடம் பெரிய இடமாக இருப்பதால், அதிகமான இடம் உள்ளதாக



1992 ஏப்ரல் 20]

இருப்பதால் அந்த இடத்தில் பாடி பில்டிங் போன்றவை களையும், டையர் ரீட்ரீடிங் போன்றவைகளையும், செய்து கொடுத்தால் கிராமப்புறமாக உள்ள அந்தப் பகுதிக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். ஆகவே நம்முடைய டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இதைச் செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே எடுக்கப்பட்டிருக்கிற நிலத்தின் அளவு சுமார் 3 ஏக்கர் 45 சென்ட் தான். ஆகவே இந்தப் பணிமனைகள் அமைப்ப தற்குத்தான் அது சாத்தியக்கூறாக இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் வருகிற நிதியாண்டில் கட்டுவதாகச் சொன்னதாகச் சொன்னார்கள். வருகிற நிதியாண்டின் முன் பகுதியிலேயே கட்டி முடிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரி வித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

திரு. அ. தேவராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங் களுடைய கோரிக்கையை ஏற்று தெரிவித்தமைக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்திலே எங்களுடைய பகுதியிலே அந்த பஸ்கள் பழைய பஸ்களாக ஓடிக்கொண்டிருப்பதால் டிரிப்புகள் அதிகமாக செல்லமுடி யாமல் நின்றுவிடுகிறது. அதையும் புரட்சித் தலைவி அவர்கள் அரசு புதிய வண்டிகளாகக் கொடுக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தின் முதல்வர் பொறுப்பு ஏற்றபிறகு தமிழகத்திலே இருக்கின்ற, 6 ஆண்டுகளுக்கு மேலாக ஓடிக்கொண் டிருக்கின்ற பேருந்துகளை உடனடியாக மாற்றியமைக்க வேண்டும் என்பதற்காக அனைத்துப் போக்குவரத்துக் கழ கங்களுக்கும் அறிவுரை வழங்கி 1992 டிசம்பர் மாதத்திற் குள்ளே 'பழைய பேருந்துகள் தமிழகத்திலே எங்கேயும் இல்லை' (மேசையைத் தட்டும் ஒலி) என்ற நிலையை நம் முடைய புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்க இருக்கின் றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே அதற்குள்ளே அத்தனையும் மாற்றி அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 559, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

[1992 ஏப்ரல் 20

559—

அவினாசி தொகுதியில் மகளிர் பட்டுநெசவுக் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்.

*1107—டாக்டர் மு. சீனியம்மாள் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மகளிர் மேம்பாட்டிற்காக அவினாசி தொகுதியில் மகளிர் பட்டுநெசவுக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதியை தொழிலில் பின்தங்கிய தொகுதியாக ஒப்பில்லாத முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து இருக்கின்றார்கள். வேலை இல்லாத பெண்கள் அதிகமாக கொண்ட பகுதியாக அவினாசி தொகுதி உள்ளது. பட்டு தயாரிப்பதற்குரிய சீதோஷ்ண நிலை ஏற்றதாக உள்ளது. விவசாயம் இன்றி, தொழில் இன்றி வாடுகின்ற குடும்பங்களை வாழ்விக்க பெண்கள் முன்னேற்றத்தினை ஊக்குவிக்கின்ற தாயுள்ளம் கொண்ட டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்தில் அவினாசி தறி நெசவு, பட்டு நெசவு, கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அந்த சங்கங்களின் மூலம் வேலைவாய்ப்பு தந்து முன்னேற்ற அரசு ஆவனசெய்யுமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது 6 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் தான். பட்டுக்கு இல்லை. அவினாசி தாலுக்காவில் 6 நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புவார்களேயானால், அங்கே இருக்கின்ற நெசவாளர்கள் பட்டு கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குவதற்கு மனு தருவார்களேயானால் அது பரிசீலனை செய்யப்படும்.



1992 ஏப்ரல் 20]

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதியிலே இருக்கின்ற பெண்கள் இந்த கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வேலை செய்து முன்னேறுவதற்கு விருப்பமாக உள்ளனர். எனவே அப்படிக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரும்புவார்களேயானால், உடனடியாக நடவடிக்கை எடுத்து குறுகிய காலத்தில் செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உண்மையாக அவர்கள் நெசவாளர்களாக இருப்பார்களானால் அவைகளைப் பரிசீலித்துத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 560, டாக்டர் க. கோபால், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

560—

நரிமணம் பகுதியில் கிடைக்கும் மின்சாரத்தை தஞ்சாவூர் மாவட்டம் முழுமைக்கும் பயன்படுத்த நடவடிக்கை.

*3280—டாக்டர் க. கோபால் :

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தஞ்சாவூர் மாவட்டம் முழுமைக்கும் விவசாயம் மற்றும் சிறு நிறுவனங்களுக்கு மின்சாரம் தடையின்றிக் கிடைக்க நரிமணம் பகுதியில் கிடைக்கும் மின்சாரம் பயன்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

டாக்டர் க. கோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது நரிமணத்தில் கிடைக்கக்கூடிய எரிவாயு கொண்டு 5 மே.வா. அளவில் தான் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. இதை அதிகமாகத் தயாரிக்க அரசிடம் உத்தேசம் உள்ளதா? மேலும் அஸ்ஸாம் போன்ற மாநிலங்கள் மத்திய அரசிடம் இருந்து ராயல்டி தொகையைப் பெற்றுக்கொண்டிருக்கிறது. அது

போல் தமிழ்நாடும் பெறுவதற்கு வாய்ப்புகள் உள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நரிமணத்திலே இருக்கின்ற எரிவாயுவை வைத்து தஞ்சை நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் வெங்கடகால் கிராமத்தில் இந்த மின் உற்பத்தி நிலையம் ஏற்பாடு செய்யப்பட்டு தஞ்சைக்கு மின்சாரம் வழங்கிக்கொண்டு இருக்கிறோம். இதில் ஏற்கெனவே 66 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட ஒரு நிலையம் அமைந்திருக்கிறது. ஆனால் தஞ்சையைப் பொறுத்தமட்டிலே தற்போது தேவை 120 மெகா வாட் மின் உற்பத்தி தேவை இருக்கிறது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே 204 மெகா வாட் வேண்டியிருக்கிறது. ஆனால் தற்போதுள்ள சூழ்நிலையில் இப்போது அனைத்து மின்சாரமும், அந்த பகுதியிலே பெறுகின்ற மின்சாரமும் தஞ்சை மாவட்டத்திற்கும், காயிதே மில்லத் மாவட்டத்திற்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது தஞ்சை மாவட்டத்திலே, காயிதே மில்லத் மாவட்டத்திலே உள்ள தேவையை அனுசரித்து மாற்று முறை வைத்தும் மின்சாரம் வழங்கிக்கொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-10

டாக்டர் க. கோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அஸ்ஸாம் போன்ற மாநிலங்கள் மத்திய அரசிடமிருந்து 'ராயல்டி' தொகை பெற்றுக்கொண்டிருக்கின்றன. தமிழ்நாடும் அதுபோல பெற வாய்ப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து தகுந்த நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் நரிமணத்தில் இருந்து நமக்கு கிடைக்கக் கூடிய எரிவாயுவைக் கொண்டு மின்சாரம் தயாரிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதேபோன்று நாகப்பட்டினம் காயிதே மில்லத்



மாவட்டத்திலுள்ள கோவில்களப்பாலில் அதுபோன்ற எரிவாயு கிடைக்கிறது. அங்கேயும் மின்சாரம் தயாரிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கின்ற அந்த எரிவாயு மூலம் மின்சாரம் தயாரிக்கின்ற நிலையத்தைத் தவிர இன்றைக்கு பிள்ளைப்பெருமாள் நல்லூரில் 600 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்பட வேண்டுமென்று திட்டமிடப்பட்டு ஏற்கெனவே 300 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு மத்திய திட்டக் குழுவினுடைய ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, பிள்ளைப்பெருமாள் நல்லூரில்தான் இந்த மின் உற்பத்தி நிலையத்தை துவக்குவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 561, திரு. இரா. புதுநயினார் ஆதித்தன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

561—

மின் அழுத்தம் குறைந்த டிரான்ஸ்பார்மர்களை சரிசெய்தல்.

*4466—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியத்தில் மின் அழுத்தம் குறைந்த டிரான்ஸ்பார்மர்களை சரிசெய்ய, அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடையம் ஒன்றியத்தில் டிரான்ஸ்பார்மர்கள் சரியாக செயல்படாததால் மின் அழுத்தம் மிகக் குறைவாக இருப்பதால் கிராமப் பகுதிகளில் மின்வெளிச்சம் இல்லாத நிலை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் 'ஆம்'

[1992 ஏப்ரல் 20

என்று சொன்னார்கள். நான் இப்பொழுது என் தொகுதிக்கு சுற்றுப்பயணம் செய்து இந்தப் பகுதியை பார்வையிட்டபோது மீண்டும் அதே நிலைதான் நீடித்துக் கொண்டிருக்கிறது. அதனால் அமைச்சர் அவர்கள் மீண்டும் அந்த டிரான்ஸ்பார்மரை தேவையான அளவுக்கு, அமைப்பதோடு மட்டுமல்லாமல் ஒரு டிரான்ஸ்பார்மருக்கு இத்தனை இணைப்புகளைதான் கொடுக்க வேண்டுமென்று நிர்ணயித்து கிராமப் பகுதிகளில் உள்ள இதனை சீர்செய்து இந்தப் பிரச்சினையை சரி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியத்தின் மாதாபட்டணம், செல்லப்பிள்ளையார்குளம், பாப்பான்குளம் போன்ற பகுதிகள் மின் அழுத்தம் குறைவாக நிலவிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டு அதற்குப் பின்னாலே மின் அழுத்தத்தினை சீர் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது மேம்பாட்டுப் பணிகளுக்காக நிதி ஒதுக்கியிருக்கிறோம். ஆகவே, இந்தப் பணிகள் தொடங்கப்பட்டு முடிவடைந்த பிறகு மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியில் இந்த குறைவான மின் அழுத்தம் என்கிற பிரச்சினை இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு ஒன்றை மட்டும் நான் இந்த அவையிலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த 'லோ வோல்டேஜ்' என்று சொல்லப்படுகிற மின் அழுத்தம் குறைவு என்பது நம்முடைய இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னாலே வந்ததல்ல. நெடுநாளாக இருக்கிற பிரச்சினைகளை நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்டதற்குப் பின்னாலேதான் நீங்கள் நன்றாக அறிவீர்கள், மின்சார வாரியம் ஓராண்டு காலமாக எப்படி செயல்படுகிறது என்பதையும், இன்றைக்கு கோடையிலேகூட மின் வெட்டு இல்லை என்கின்ற அளவுக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிற சூழ்நிலையையும் (மேசையைத் தட்டும் ஒலி) 1948 ஆம் ஆண்டிலிருந்து இந்த மின்சார வாரியத்தினுடைய பணிகள், கடந்த ஓராண்டு காலமாக எவ்வளவு செம்மைப்படுத்தப் பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். ஆகவே, இருக்கின்ற நிதி நிலையைப் பொறுத்த மட்டிலே அனைத்து காரியங்களையும் ஒரே நேரத்திலே செய்ய முடியாது என்ற காரணத்தாலே தான் பிரச்சினைகள், புகார்கள் இருக்கின்ற இடங்களிலே அவைகளை எல்லாம் அரசு ஆய்ந்து மின்சார வாரியம் முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆகவே, எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினை அடியோடு களையப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1992 ஏப்ரல் 20]

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினை முந்தைய காலத்திலிருந்தது என்று சொன்னார்கள். இது முந்தைய காலத்தில் இருந்ததுதான். ஆனால் நம் ஒப்பற்ற புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் கிராம மக்களுடைய நலனே தன்னுடைய நலனாகக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தினால் இந்தத் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து விரைவாக இந்தக் குறைபாடுகளை நீக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதுபோல நம்முடைய அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்கு பின்னாலேதான் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நம்முடைய உறுப்பினர் தொகுதியிலுள்ள மாதாபட்டணம், செல்லப்பிள்ளையார்குளம் மற்றும் பாப்பான்குளம் போன்ற பகுதிகளிலுள்ள மின் அழுத்தக்குறைவினை சீர் செய்வதற்கு உடனடியாக நிதி வழங்கியி ருக்கிறார்கள். ஆகவே, அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன என்று தெரிவித்தேன். ஆகவே, வெகு விரைவில் இந்தப் பணிகள் துவங்கப்பட்டு அந்தப் பகுதியினுடைய மின் அழுத்தம் சீர் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 562, திரு. சி. சுவாமிநாதன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

562—

பாலம் கட்டுதல்.

* 9856— திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி கறம்பக்குடி ஒன்றியத்தில் உள்ள திருமணஞ்சேரிக்குச் செல்லும் பாதையின் பாலம் கட்டும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) இந்த பாலத்திற்கு இந்த நிதியாண்டில் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது?

(இ) பாலம் கட்டும் வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1992 ஏப்ரல் 20

(அ) திட்டம் ஏதுமில்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

முற்பகல் 10—15

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் எப்போது ஆரம்பிக்கப்பட இருக்கிறது, இதற்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, எப்போது பணிகள் துவங்கப்படும் என்ற விவரங்களை அறிய நம்பிக்கையோடு இந்தக் கேள்வியைக் கேட்டேன். ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் ' இந்தக் கேள்விக்கு இடமில்லை ' என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பாலத்தைப் பொறுத்த வரையில் 1966 ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் மாண்புமிகு திரு. இராமையா அவர்கள் காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டு, அதிலிருந்து இன்றைய வரைக்கும் தொடர்ந்து இந்தப் பாலத்திற்காக அந்தப் பகுதி மக்கள் போராடி வருகிறார்கள். தஞ்சையையும் அறந்தாங்கியையும் இணைக்கிற பெரிய போக்குவரத்துப் பாலமாக, ஏறத்தாழ ஒரு இலட்சம் மக்கள் பயன்படுத்தக்கூடிய ஒரு முக்கிய பாலமாக இருக்கிறது. அதற்குப் பக்கத்திலே இருக்கிற திருமணஞ்சேரி என்கிற ஊரில் பிரசித்தி பெற்ற ஆலயம் இருக்கிறது. அங்கே ஆயிரத்திற்கும் மேற்பட்ட திருமணங்கள் ஆண்டுதோறும் நடைபெறுகிறது. ஆகவே இந்த முக்கியத்துவத்தை எல்லாம் கருத்திற்கொண்டு, மாண்புமிகு அமைச்சரவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவியார் அவர்களுடன் கலந்து கொண்டு, இந்த நிதி ஆண்டில் எப்படியும் இந்தப் பாலத்தை அமைத்துத் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் அமைக்கப்பட வேண்டிய சாலை, கறுக்காகுறிச்சி சாலையாகும். இதன் மதிப்பீடு 80 இலட்சம் ரூபாய். இந்தப் பாலம் கட்ட வேண்டுமானால் அதற்கு அரசு ஒதுக்க வேண்டிய தொகை 80 இலட்சம் ரூபாய் என்ற காரணத்தாலும், இது ஊராட்சி ஒன்றிய சாலையாக இருக்கிற காரணத்தாலும் பகுதி 2 திட்டத்தில் இதை எடுத்துச் செய்ய இயலவில்லை. இன்றைக்கு இருக்கிற நிதி ஆதாரங்களைப் பொறுத்த வரையில், சென்ட்ரல்ரோட் பன்ட் ஸ்கீமில் இதைச் சேர்த்திருக்கிறோம். ஆகவே பெரிய பாலங்களைக் கட்டும்போது, மத்திய அரசு தரும் நிதி ஆதாரங்களை வைத்துத்தான் கட்ட முடியும். ஆகவே நம்முடைய திட்டத்தில் இல்லை என்றாலும்கூட, சென்ட்ரல் ரோட் பன்ட் ஸ்கீமின்கீழ் இதைச் சேர்த்திருக்கிறோம். ஆகவே மத்திய அரசு அனுமதி கிடைத்தவுடன், அதற்கான பணிகளை மேற்கொண்டு செய்ய இந்த அரசு நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1992 ஏப்ரல் 20]

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய அனுமதியை எதிர்பார்த்து இந்தப் பாலம் ஏறத்தாழ ஒன்பது ஆண்டுக்காலமாக காத்திருக்கிறது. இன்னும் பல ஆண்டுகள் காத்திருக்கச் சொல்லி நம்முடைய அமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள். இரண்டு தினங்களுக்கு முன்பு நான் அந்த ஆற்றின் குறுக்கே சென்றேன். 30 பேர், சுடு மணலில் சைக்கிளை தள்ளவும் முடியாமல் நடக்கவும் முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்ததை என்னால் பார்க்க முடிந்தது. மிகவும் பரிதாபத்திற்குரிய அந்தப் பகுதி மக்கள் மிகவும் அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிதி ஆண்டில், பாலங்களுக்கு என்று ஆறு கோடி ரூபாயை தமிழக அரசு ஒதுக்கியிருக்கிறதென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதிலே 80 இலட்சம் ரூபாய் என்பது மிகவும் குறைவான தொகைதான். ஆகவே எண்பது இலட்சம் ரூபாயை அந்த நிதியிலிருந்து ஒதுக்கி, மாண்புமிகு புரட்சித் தலைவியார் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இந்த நிதி ஆண்டிலேயே அதைத் துவங்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, ஆறு கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதாகச் சொன்னார்கள். இன்றைக்கு நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தமட்டில், நான் ஏற்கெனவே இந்த அவையிலே தெரிவித்திருப்பதுபோல, நம்முடைய ஒப்பற்ற புரட்சித் தலைவினுடைய காலம்தான் பொற்காலம் என்பதை நீங்கள் இன்றைக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். (மேசையைத்தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எங்கு பார்த்தாலும் சாலைகள் போடப்படுகின்றன, அதுவும் தரமுள்ள சாலைகள் என்று என்னிடத்திலே சொல்லும்போது உண்மையிலேயே இந்த அரசு எவ்வளவு தூரம் நடவடிக்கை எடுக்கிறது என்பதை நீங்கள் ஆக்கப் பூர்வமாக உணர்ந்திருக்கிறீகள். இருந்தாலும், அனைத்து ஊர்களுக்கும் சாலை வசதி, பாலம் வசதி செய்ய வேண்டுமென்பது நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்களுடைய விருப்பம். நம்மிடத்திலே இருக்கிற நிதி ஆதாரங்களைப் பொறுத்த மட்டிலே, இன்றைக்கு அதிக செலவிலே வருகின்ற பாலங்களை எடுத்துச் செய்கின்ற நேரத்திலே, முன்னுரிமை வழங்கப்பட முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவேதான் இந்தத் திட்டத்தை இந்த ஆண்டு எடுத்துச் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்தேன். ஆகவே, இந்தப் பகுதி மக்களுடைய குறைகளை, கோரிக்கைகளை நம்முடைய முதல்வரவர்கள் அறிவார்கள். அடுத்த ஆண்டிலாவது இந்தப் பிரச்சினையைத் தீர்க்க இந்த அரசு நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 563, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

563—

நகராட்சிப் பேருந்து நிலையங்களில் தொலைக்காட்சி வசதி.

*1618—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

அனைத்து நகராட்சிப் பேருந்து நிலையங்களிலும் தொலைக்காட்சிப் பெட்டி வைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நகராட்சிப் பேருந்து நிலையங்களில் தொலைக்காட்சி பெட்டிகள் வைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10-20

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, மதுரை மற்றும் திருச்சி போன்ற நகரங்களில் உள்ள புகைவண்டி நிலையங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கப்பட்டு, அங்கே பயணிகள் காத்திருக்கும் நேரத்தில் அந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. அதுபோல், அனைத்து நகராட்சிப் பகுதிகளிலும் உள்ள பேருந்து நிலையங்களிலும் ஏராளமான பயணிகள் பேருந்துகளுக்காகக் காத்துக் கொண்டிருக்கும் நேரங்களில், இத்தகைய தொலைக்காட்சிப் பெட்டிகள் அங்கே வைக்கப்பட்டிருந்தால் அவை பயனுள்ளவையாக இருக்கும். இப்போது கிராமங்கள் தோறும் தொலைக்காட்சிப் பெட்டிகளை வைக்க கிராமப் பஞ்சாயத்துக்கள் மூலம் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் விரைவு படுத்துகின்ற இந்தச் சமயத்தில் மக்கள் அதிகமாகக் கூடுகின்ற நகராட்சிப் பேருந்து நிலையங்களில் அத்தகைய தொலைக்காட்சிப் பெட்டிகளை முன்னுரிமையளித்து வைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்,



மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பு நிலை, தேர்வு நிலை, மற்றும் முதுநிலைத் தரத்தில் உள்ள நகராட்சிகளில் ஏராளமான மக்களுக்குப் பயன் அளிக்கின்ற வகையில் அதிகமான பேருந்துப் போக்குவரத்து அமைந்துள்ள நகராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்குள்ள பேருந்து நிலையங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வைப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் அதிகமாக வசிக்கக்கூடிய நகராட்சிப் பகுதிகளில் பேருந்து நிலையங்கள் மட்டுமல்லாமல் பார்க் போன்ற இடங்களிலும் இது விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இது பற்றி பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட தலைநகரங்களில் உள்ள பெரிய பேருந்து நிலையங்களில் கூட தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கிறபோது, பேருந்துகள் எந்தெந்த மணிக்கு வரும், எப்போது செல்லும் என்பதை பயணிகள் தெரிந்து கொள்ளவும், செய்திகள் அறிந்து கொள்ளும் வகையிலும், இந்த நிதி ஆண்டிலாவது அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் உள்ள பேருந்து நிலையங்களிலும் தொலைக்காட்சிப் பெட்டி வைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த நகராட்சிகளில் இருக்கின்ற நிதிநிலைமைகளைப் பொறுத்து அரசு இது பற்றி பரிசீலித்து முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 564, திரு. வி. பி. சந்திரசேகர், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

564—

பொள்ளாச்சி நகரில் குடிநீர் தேவையைப் போக்க நடவடிக்கை.

*3904—திரு. வி. பி. சந்திரசேகர்:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

பொள்ளாச்சி நகரின் குடிநீர் தேவையைப் போக்க புரட்சித் தலைவர் காலத்தில் கொண்டுவரப்பட்ட மூன்றாவது குடிநீர்த் திட்டப் பணிகளின் தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு திரு. அழகு. திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொள்ளாச்சி நகராட்சி மற்றும் 11 வழியோர கிராமங்களுக்கு ஆழியார் நீரை ஆதாரமாகக் கொண்டு குடிநீர் வழங்கும் திட்டம் தற்போது திருத்தி அமைக்கப்பட்டுள்ள உலக வங்கி திட்டத்தில் சேர்க்கப்பட்டு உலக வங்கி கடனுதவியுடன் செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது, இத்திட்டத்தின் அனைத்துப் பணிகளுக்கும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, ஒப்பந்தக்காரர்களை நியமிக்கும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது, இத்திட்டப் பணிகள் அனைத்தும் 30—6—1993-ல் முழுமை பெற்று மக்களின் பயனுக்கு கொண்டுவரத் திட்டமிடப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி மூன்றாவது குடிநீர்த் திட்டம் துவங்கப்பட்ட காலத்தில் அதற்காகும் செலவு ரூ. 3.77 கோடியாக இருந்தது. இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதில் ஏற்பட்ட கால தாமதத்தால், இப்போது அது ரூ. 6.64 கோடியாக உயர்ந்திருக்கிறது. இப்படி அரசின் பணம் வீணாகாமல் இருக்க, இத்திட்டம் கூடிய விரைவில் நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி நகராட்சி மற்றும் 11 வழியோர கிராமங்களுக்கு ஆழியாறு நீரை ஆதாரமாகக் கொண்டு உலக வங்கி உதவியுடன் சுமார் 664 லட்சம் மதிப்பில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது, உலக வங்கியின் ஆலோசனைகள் மற்றும் குறிப்புகளின்படி இத்திட்டத்திற்கான திருத்த மதிப்பீடு சுமார் ரூ. 713 லட்சத்திற்கு 6—4—1992-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டுவிட்டது. இத்திட்டம் 30—6—1993-க்குள் முழுமை பெற்று மக்களின் பயனுக்குக் கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 565. திரு. த. ரத்தினவேல். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.



565—

அரியமங்கலம் பேரூராட்சியிலுள்ள குப்பை உரக்கிடங்கை வேறு இடத்திற்கு மாற்றல்.

*5304—திரு. த. ரத்தினவேல் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி நகராட்சி குப்பைகள், கழிவுப் பொருள்கள் அனைத்தும் அரியமங்கலம் பேரூராட்சியில் ஊருக்கு நடுவில் கொட்டி உரக்கிடங்காக வைத்திருப்பதால் சுகாதாரக்கேடு விளைவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை வேறு இடத்திற்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரியமங்கலத்திலுள்ள உரக்கிடங்கை மதுரை ரோடு பஞ்சப்பூரிலுள்ள நகராட்சிக்குச் சொந்தமான கழிவு நீர் நீரேற்று நிலையம் உள்ள இடத்தில் தற்போது உபயோகத்தில் இல்லாத 52 ஏக்கர் இடத்தில் மாற்றி அமைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. த. ரத்தினவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மதுரை ரோடில் உள்ள பஞ்சப்பூருக்கு மாற்றுவதற்கு ஆவன செய்யப்படுவதாகச் சொன்னார்கள். அந்தப் பகுதி மக்கள் சார்பில் அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 566, செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

566—

கூட்டுறவுச் சங்கத்தில் அரிசி பற்றாக்குறையைப் போக்க நடவடிக்கை

*4161—செல்வி கோ. மல்லிகா :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதிக்கு கூட்டுறவுச் சங்கத்தில் அரிசி பற்றாக்குறை ஏற்படுவதால் மேலும் அதிகப்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி உட்பட எந்தத்தொகுதியிலும் உள்ள நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் அரிசியில் பற்றாக்குறை ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசியின் பற்றாக்குறையைப் போக்கி அதிகப்படுத்தி கொடுத்ததற்காக மிக்க நன்றி. பல்வேறு பகுதிகளில் அளவு குறைவதாக மக்கள் கூறியுள்ள கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் இதுவரை எந்த முதல்வரும் ஆட்சி புரியாத வகையில் எவ்வகையிலும் குறைவின்றி நிறைவாக ஆட்சி புரியும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் அந்த அளவை அதிகப்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகளுக்கு, பெரியவர்களுக்கு 4 கிலோ வீதமும், சிறியவர்களுக்கு 2 கிலோ வீதமும், 12 கிலோவிற்கு மேற்படாமல் இப்போது ஒரு குடும்ப அட்டைக்கு அரிசியை வழங்கிக் கொண்டிருக்கிறோம். இந்த அரிசியை ஒழுங்காக, எடை குறைவு இல்லாமல் கொண்டுபோய் சேர்ப்பதற்கு எல்லாவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே குறைவு இல்லாமல் பார்த்துக்கொள்வோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி, இராதாபுரம், சாத்தான்குளம் தொகுதியில் உள்ள 42 பனை வெல்ல சொசைட்டிகளுக்கு உள்ள கடைகளை அரசு நியாயவிலைக் கடைகளுக்கு எடுத்திருப்பதாக அறிகிறேன். ஆகவே என்னுடைய தொகுதியில், அந்த மாற்றங்களால், அந்தந்த கடைகளிலேயே வைத்து நடத்தாத காரணத்தால், குமாரபுரம், திசையன்விளை போன்ற பகுதிகளிலிருந்து............



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி கேள்வி புவனகிரியைப் பற்றியது. நீங்கள் பொதுவாகக் கேள்வி கேட்கப் போகிறீர்கள் என்பதால் அனுமதித்தேன். பிறகு இராதாபுரத்திற்குப் போனால் எப்படி ? தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 567 திரு. வ. சத்தியமூர்த்தி மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

567—

காலநடை மருத்துவர்களுக்கு இடர்பாட்டுப்படி.

*5214—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கால்நடை மருத்துவர்களில் ஒரு பிரிவினருக்கு இடர்பாட்டுப்படி (Ri k Allowarce) வழங்கப்படவில்லையெனில் அவர்களுக்கும் இடர்ப்பாட்டுப்படி (Risk Allcwarce) வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆபத்து மிகுந்த கால்நடை நோய்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கும் பிரிவுகளில் பணியாற்றும் கால்நடை உதவி மருத்துவர்களுக்கு இடர்பாட்டுப்படி (Risk Allowarce) வழங்கப்படுவது போல் மற்ற பிரிவுகளில் பணியாற்றும் கால்நடை மருத்துவர்களுக்கும் இடர்பாட்டுப்படி வழங்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கும் கால்நடை மருத்துவ அகாரிகள் ஊராட்சி ஒன்றியங்களில் விரிவாக்க அலுவலர்களாக மாற்றுவதற்கு உரிய அதிகாரிகளாக இருக்கிறார்கள். கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறபோது Biloresis, T. B., Worm infectior, Viral infection போன்ற கொடிய தொற்று நோய்கள் ஏற்படுகின்றன. ஆனால் அந்தக் கொடிய தொற்று நோய்களின் அறிகுறி தெரிவதற்கு சில ஆண்டுகள் கூட ஆகின்றது. ஆகவே மருந்தகத்தில் வேலை செய்கின்ற அதிகாரிகள் விரிவாக்க அதிகாரிகளாக வருகிறபோது இந்த நோய்க்கு உட்பட்டால் எந்த உதவித் தொகையும் அவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்பில்லை. ஆகவே விரிவாக்க அலுவலர்களுக்கும் இந்த 'ரிஸ்க் அலவன்ஸ்' வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு இயக்குநர் அனுப்பிய முந்தைய கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டது. இடர்பாட்டுப்படி வழங்குவதை மேலும் பல பிரிவுகளுக்கு நீட்டிக்க வேண்டாம் என ஐந்தாவது ஊதியக் குழு பரிந்துரை செய்துள்ளதாலும் அவ்வாறு அனைத்துப் பிரிவுகளுக்கும் இடர்பாட்டுப்படி வழங்க கோருவது நியாயமற்றது என்பதாலும் 1-4-1992 நாளிட்ட அரசுக் கடிதம் மூலம் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண் 568, திரு. வே. தமிழரசு, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

568—

<u>நடமாடும் கால்நடை மருத்துவமனை அமைத்தல்.</u>

*5613— <u>திரு. வெ. தமிழரசு :</u>

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூரிலிருந்து அருகிலுள்ள கிராமங்களில் உள்ள கால்நடை பராமரிப்பிற்காக ஒரு நடமாடும் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு முன் வருமா ?

(ஆ) இந்த வசதி மலைவாழ் மக்களுக்கும் விரிவாக்கப் படுமா?

<u>மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

<u>திரு. வெ. தமிழரசு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் தொகுதியில் கல்ராயன் மலை, பைத்தூர், தவளப்பட்டி, கீழ்க் கொம்பை, மேல் கொம்பை, போன்ற நாற்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களில் வசிக்கும் ஏழை மலைவாழ் மக்கள் பல்லாயிரக்கணக்கான கறவை மாடுகளையும், வெள்ளாடு, செம்மறி ஆடுகளையும் வளர்த்து ஜீவனம் செய்து வருகிறார்கள். இவைகளுக்கு திடீரென்று கோமாரி போன்ற கொடிய நோய் ஏற்பட்டு விட்டால் பல மாடுகள் ஆடுகள் இறந்து விடுவதால், இந்த



மலைவாழ் மக்கள் நலனைக் கருதி இந்த பகுதியினருக்கு 'மொபைல் வெடரினரி டிஸ்பென்சரியை' ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் வட்டத்தில் ஏற்கெனவே இரண்டு நடமாடும் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகிற காரணத்தால் ஆத்தூரில் மேலும் ஒரு நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்க தற்சமயம் வாய்ப்பு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

<u>வினா எண் 569—திரு. கே. முனிவெங்கடப்பன் :</u> மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

569—

<u>கிருட்டிணகிரி பால்பண்ணை.</u>

*6064—<u>திரு. கே. முனிவெங்கடப்பன் :</u>

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாககளுக்கு விடையளிப்பாரா :

(அ) கிருட்டிணகிரி பால்பண்ணையில் தயாரிக்கப்படும் பால்பவுடர், நெய், வெண்ணெய் ஓர் ஆண்டுக்கு எவ்வளவு ?

(ஆ) இவைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகின்றனவா?

(இ) இவைகளை விற்று பால் உற்பத்தியாளர்களுக்கு தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

<u>மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1991-92—ஆம் ஆண்டில் பால் பொருட்களின் உற்பத்தி விபரம் :

| | | |
|---|---|---|
| பால் துகள் | .. | 3,70,293 கிலோ |
| வெண்ணெய் | .. | 6,72,450 கிலோ |
| நெய் | .. | 1,64,595 கிலோ |

(ஆ) இல்லை.

(இ) இவற்றின் மூலம் கிடைக்கும் தொகையைக் கொண்டு பால் உற்பத்தியாளர்களுக்கு, பால் பண பட்டுவாடா செய்வதுடன், நிலுவைத் தொகை அனைத்தும் தற்போது வழங்கப்பட்டுவிட்டது.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே சிறந்த நெய், வெண்ணெய் உற்பத்தி செய்யும் பால் பண்ணையாக இந்த பால்பண்ணை விளங்குகிறது. ஆகவே, இதை விஸ்தரிக்கும் எண்ணம் நமது அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்தில் இது விஸ்தரிக்கப்படும்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளச்சாராயத்தை ஒழித்து சாதனை படைத்த புரட்சி புனிதத் தாய், விடுதலைப் புலிகளை ஒழித்த வீரத்தாய், கல்வியிலே பல புதுத் திட்டங்களைத் தீட்டிய காவியத் தாய், வெண்மைப் புரட்சியிலே சாதனைகளைப் படைந்து, இன்றைக்கு ஏழை எளிய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகின்ற புரட்சித் தலைவியின் ஆட்சியில் இந்த வெண்மைப் புரட்சியிலே பங்கு கொண்டிருக்கின்ற ஏழை விவசாய மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் வகையிலே இந்த பால் கொள்முதல் விலையை உயர்த்தித்தர நமது அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைய தினம் இந்தத் துறையின் மானியக் கோரிக்கை இருக்கின்ற காரணத்தினால் அப்போது இதுபற்றித் தெரிவிக்கப்படும்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 10-30

## 2. அறிவிப்பு.

### பேரவைக்குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்ற ஒரு வாரம் முழுவதும் பேரவைக்கு விடுமுறை அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து பேரவைக் குழுக்களின் தேர்தலுக்கான நிகழ்ச்சி நிரல் கீழ்க்கண்டவாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது :

ஒற்றை வாக்குமுறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ் மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, உரிமைக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் வேட்புத் தாளை 1992—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22—ஆம் நாள் புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத்தாளைச் செயலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்புத் தாள்கள் 1992—ஆம் ஆண்டு ஏப்ரல் 23—ஆம் நாள் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1992—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24—ஆம் நாள் வெள்ளி கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம். நியமனம் செய்யப்படும் வேட்பாளர்கள் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கப்படும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

## 3. கவன ஈர்ப்பு.

### (அ) பரமக்குடி அருகிலுள்ள மஞ்சூரில் அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. டாக்டர் எஸ். சுந்தரராஜ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அருகே மஞ்சூர் என்ற கிராமத்தில் கடந்த சில நாட்களாக அடிக்கடி தீப்பிடித்து வீடுகள் சேதம் அடைந்து வருவதால் அப்பகுதி மக்களிடையே........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதில் இருப்பதை அப்படியே வாசியுங்கள். பிறகு, இரண்டாவதாக நீங்கள் கேளுங்கள். கவன ஈர்ப்பில் இங்கே கொடுத்து இருப்பதைப் படியுங்கள்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பரமக்குடி அருகே மஞ்சூர் கிராமத்தில் அண்மையில் அடிக்கடி தீ விபத்து ஏற்படுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### விவர அறிக்கை

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், மஞ்சூர் கிராமத்திலுள்ள ஆதி திராவிட காலனியில் 26—3—1992 முதல் 1—4—1992 வரை 12 குடிசைகள் முழுமையாகவும் மற்றும் 5 குடிசைகள் பகுதியாகவும் எரிந்து விட்டன. தீ விபத்தில் உயிர் சேதம் ஏதும் இல்லை.

2. இத் தீவிபத்தில் முழுமையாகப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு தலா ரூ. 500ம், பகுதியாகப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு தலா ரூ. 250-ம் நிவாரணமாக 1—4—1992 அன்று வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, அந்த தீவிபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 5 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய் (72 மணி நேரம் அல்லது அதற்கும்



பின்பும் மின் இணைப்பு பெறக் கூடிய வாய்ப்பு இல்லாவிடில்) ஒரு புடவை, ஒரு வேட்டி அல்லது ஒரு லுங்கி ஆகியவை நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளன.

3. 1992-93 ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தீப்பிடிக்காத வீடுகள் இப் பகுதிகளில் கட்டிக் கொடுக்க தக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வீடுகள் கட்டிக் கொடுக்க ஏற்பாடுகள் மாவட்ட ஆட்சித் தலைவர் செய்து தருவதாக தகவல் கொடுத்துள்ளார்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 26—3—1992 முதல் 1—4—1992 வரை 12 குடிசைகள் முழுவதுமாகவும், 5 குடிசைகள் பகுதியாகவும் எரிந்துவிட்டன என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், கடந்த 1—4—1992-க்கு பின்னாலும், 2—4—1992 முதல் 15—4—1992 வரை—ஒரு நாளைக்கு ஒன்று, இரண்டு குடிசைகள் தொடர்ச்சியாக இதுவரை 26 குடிசைகள் எரிந்து இருக்கின்றன. ஆனால், இந்த குடிசைகள் எரிந்ததற்குக் காரணம் என்ன என்ற ஐயம் மக்களிடையே ஏற்பட்டு மக்கள் பீதியில் இன்னும் விவசாய கூலிகள் விவசாயம் செய்ய முடியாமல் வீடுகளை பாதுகாத்து, பொருட்களை வெளியே எடுத்துவந்து வைத்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

அரசின் சார்பில் அவர்களுக்கு மானியங்கள் வழங்கப்பட்டு ஒவ்வொருவருக்கும்—முழுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு 500 ரூபாயும், அதோடு இலவச வேட்டி சேலையும், 5 கிலோ அரிசியும் அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு, முழுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் ஜே.வி.டி. திட்டத்தில் கட்டித் தருவதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இதற்கெல்லாம் காரணம் என்ன என்பதை அரசு கண்டுபிடிக்க வேண்டும். அந்தக் காரணத்தை கண்டு பிடித்து, அதற்கு உடந்தையாக இருந்தவர்கள் யார் என்று கண்டுபிடித்தால், மக்களிடையே ஏற்பட்டிருக்கிற பீதி நீங்கும். அதற்கு அரசு என்ன செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதில் ஒரு பகுதியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே இங்கே சொல்லியிருக்கிறார். மற்ற பகுதியை மட்டும் சொல்ல வேண்டுமென்றால், அங்கே இப்படிப்பட்ட தீ விபத்துக்கள் ஏற்படாமல் பாதுகாப்பதற்காக பரமக்குடி, முதுகுளத்தூரில் இருக்கிற தீயணைப்பு நிலையங்களில் உள்ள என்ஜின்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. போலீசால் இது பற்றி தீவிரமாக ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. மூலப்பொருள்கள் இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

[1992 ஏப்ரல் 20

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதிக்கப்பட்டவர்களுக்கு அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து உதவி செய்து வருகிறது. அது மட்டுமல்லாமல் 16 × 40 கிரில் ஷெட் அமைத்து அந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு இடம் அளித்து வருகிறது. அதுமட்டுமல்லாமல், கனரா வங்கி மூலமாக இரண்டு மூட்டை அரிசியும், அரிசி ஆலை அதிபர்கள் மூலமாக 2 மூட்டை அரிசியும் அந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கியும், அங்கே நிரந்தரமாக 5 கான்ஸ்டபிள்களை அமர்த்தியும் அவர்களுக்கு தக்க பாதுகாப்பை அரசு கொடுத்து வருகிறது. அது மட்டுமல்லாமல் 17 பயர் சர்வீஸ் அலுவலர்களை அங்கே நிரந்தரமாக வைத்து பயர் சர்வீஸ் வண்டியின் மூலம் அந்த கூரைகள் மீது காலையும் மாலையும் தண்ணீர் ஊற்றி வருகிறது. அப்படியிருந்தும் கூட இன்றும் ஒவ்வொரு நாளும் 2, 3 குடிசைகள் எரிந்து கொண்டே வருகிறது. அதனால் அந்தப் பகுதி மக்கள் வேலைக்கு செல்லாமல் வீடுகளில் உள்ள பொருள்களை வெளியே எடுத்து வைத்து விட்டு, எந்த நேரம் நம்முடைய வீடு தீ பிடித்து எரியுமோ என்று அச்சப்படுகிற நிலையில் இருந்து வருகிறார்கள். அவர்களுடைய குறையைப் போக்குவதற்கு சயன்டிபிக் டெஸ்ட் மூலமாக, பாஸ்பரஸ் போன்ற பொருள்களால் அந்த வீடுகள் எரிகின்றனவா அல்லது யாராவது வேண்டுமென்றே இந்தச் செயல்களைச் செய்கிறார்களா என்று கண்டுபிடித்து, அந்த மக்களுடைய பீதியைப் போக்க இந்த அரசு தீவிரமாக நடவடிக்கையெடுக்குமா? அதற்கு என்ன முயற்சி எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, எஸ் டி.சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீவிரமாக எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினரே தெரிவித்து இருக்கிறார்கள். அங்கே எந்தவிதமான அச்சமும் தேவையில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே பாதுகாப்பாக இருப்பதற்காக காவல்துறை நிறுத்தப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து இப்போது குடிசைகள் எதுவும் எரியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) மன்னார்குடி, நீடாமங்கலம், பட்டுக்கோட்டை வட்டங்களில் ஏற்படும் மின் அழுத்தக்குறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கு. சீனிவாசன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கு. சீனிவாசன்.



1992 ஏப்பரல் 20]

திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி, நீடாமங்கலம் மற்றும் பட்டுக்கோட்டை வட்டங்களில் மின் அழுத்தம் குறைவாக உள்ளது குறித்து" மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## விவர அறிக்கை

பொதுவாக பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் விவசாய பணிகள் உச்சக்கட்டத்தில் செயல்படுவதால் அனைத்து விவசாய பம்புசெட்டுகளும் இயக்கத்தில் கொண்டு வரப்படுகின்றன. இவ்வாறு விவசாய பம்புசெட்டுகளின் முழு மின்சுமையும் மின் கட்டமைப்பினால் (Grid) ஏற்க வேண்டியுள்ளதால் சற்று மின் அழுத்த தொய்வு ஏற்படுகிறது.

தமிழ்நாட்டில் ஒருங்கிணைக்கப்பட்ட உயர் மின் அழுத்த கட்டமைப்பு (Grid) மூலம் அனைத்து மின் உற்பத்தி நிலையங்களும், துணைமின் நிலையங்களும் இணைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு செயல்படும்பொழுது கடந்த சில நாட்களாக நெய்வேலி அனல் உற்பத்தி நிலையங்களில் சில மின் உற்பத்திப் பிரிவுகள் மேம்பாட்டுப் பணிகளுக்காகவும் மற்றும் சில தொழில் நுட்ப காரணங்களுக்காகவும் இயக்கத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக, நெய்வேலி மின் நிலையங்களிலிருந்து தமிழ்நாட்டுக்கு வழங்கப்படும் மின்சக்தி குறைந்துள்ளது.

மேற்கண்ட காரணங்களால் தற்பொழுது நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் மற்றும் தஞ்சை மாட்டங்களில் சில பகுதிகளில் மின் அழுத்தம் சீராக இல்லை.

பட்டுக்கோட்டை மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் புதிய மின் பளுவினை ஏற்கும் வகையிலும் மின் அழுத்தம் சீராக அமைவதற்காகவும் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப் பட உள்ளன.

அ. பட்டுக்கோட்டை 66/11 கே. வி. துணை மின்நிலையத்தை 110/66-11 கே. வி. இயக்கத்திற்கு மேம்படுத்துவது.

ஆ. கீழ்க்கண்ட இடங்களில் புதிய துணை மின் நிலையம் அமைப்பது.

1. கரம்பக்குடி 66/22 கே. வி.
2. திருமாக்கோட்டை 66/11 கே. வி.
3. அரசுப்பட்டு 33/11 கே. வி.
4. குருங்குளம் 66/11 கே. வி.

மேற்கண்ட மேம்பாட்டு பணி மற்றும் புதிய மின்நிலையங்கள் அமைப்புப் பணிகள் மூலம் இப்பகுதிகளில் மின் அழுத்தம் இயல்பாக இருக்கும்.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் மன்னார்குடி, நீடாமங்கலம் மற்றும் தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை பகுதிகளில் மின் அழுத்தம் குறைவு காரணமாக பம்ப் செட்டுகளில் உள்ள மோட்டார்களின் காயில்கள் புகைந்தும், அந்தப் பகுதிகளில் உள்ள தெரு விளக்குகள் இரவில் ஜீரோ வாட் விளக்கு எரிவதற்கு ஒப்பாக சரியாக எரியாமலும் இன்றைக்கு அந்தப் பகுதிகளில் உள்ள விவசாய மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இதுகுறித்து விவர அறிக்கையில் தெரிவிக்கையில் நெய்வேலியில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெறுகிற காரணத்தால் மின் அழுத்தம் குறைவாக உள்ளதாக இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மூன்று பகுதிகளை விடுத்து மற்ற பகுதிகளில் எல்லாம் நிறைவாக மின்சாரம் வருகிற வேளையில், இந்த மூன்று வட்டங்களில் மட்டும் மின்சார அழுத்தம் குறைவாக இருக்கிற காரணத்தால் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் சாகுபடி செய்து பயிர்கள் பட்டுப் போகிற நிலைமை ஏற்பட்டிருக்கிற காரணத்தால், அதற்கு தற்காலிகமாக ஒரு மாற்று வழியை காணவேண்டும். மற்ற பகுதிகளில் எல்லாம் கிட்டத்தட்ட 20 மணி நேரம் மின்சாரம் வருகிறபோது, இந்த மூன்று வட்டங்களில் ஒரு மணி நேரம் கூட மின்சாரம் வராத நிலைமை இருக்கிற காரணத்தால், அனைத்து பகுதிகளுக்கும் சமச்சீராக, 12 மணி நேரமாவது— இதற்கு நிரந்தர தீர்வு காண்கிற வகையில், மின்சார சப்ளை செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வினியோகத்தைப் பொறுத்தமட்டிலே, பிப்ரவரி, மார்ச் மாதங்களிலே அதிகமாக விவசாயம் நடைபெறுகின்ற காரணத்தாலே, பம்புசெட்டுகள் அனைத்தும் ஒன்றாக இயங்குகின்ற நேரத்திலே, கொஞ்சம் அழுத்தம் குறைவாக இருப்பது என்பது உண்மைதான். குறிப்பாக, இப்போது குறிப்பிடப்பட்டுள்ள பட்டுக்கோட்டை, நீடாமங்கலம், மன்னார்குடி பகுதிகளிலே, இதுமாதிரிப் பிரச்சினைகள் இருக்கின்றன என்பது அரசினுடைய கவனத்திற்கு ஏற்கெனவே கொண்டுவரப்பட்டு இருக்கிறது. தற்போதுள்ள சூழ்நிலையில் —இந்த அறிக்கையில் சொல்லப்பட்டு இருப்பதைப் போல—நெய்வேலியிலே மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுகின்ற நேரத்திலே, அதற்காக இன்றைக்குப் பணிகளைச் செய்கின்ற நேரத்திலே, மின் வினியோகம் கொஞ்சம்





குறைவாகக் கொடுத்துக் கொண்டிருக்கிற காரணத்தால், சில பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இது சம்பந்தமாக, நேற்றைய முன்தினம் நம்முடைய தலைமைப் பொறியாளர் (திருச்சி) அவர்களோடு தொடர்பு கொண்டு, — மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியைப் பார்த்த மட்டிலே—உடனடியாக இதற்கு என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறீர்கள் என்று வினவிய நேரத்திலே, அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளைச் சந்தித்து, மாற்று ஏற்பாடாக, அவர்கள் சொல்லியபடி, முறை வைத்து, மின்சார வினியோகத்தைத் தந்தால் முறையாக இருக்கும் என்பதைத் தெரிவித்ததாகச் சொன்னார்கள். ஆகவே, இதுசம்பந்தமாக, உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு, திருச்சியிலே இருக்கின்ற நம்முடைய மின்துறையினுடைய. தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. ஆகவே, மேற்பார்வைப் பொறியாளர்கள் இரண்டு பேரும்-நாகைப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தினுடைய மேற்பார்வைப் பொறியாளரும், தஞ்சை மாவட்டத்தினுடைய மேற்பார்வைப் பொறியாளரும், இதற்கான நடவடிக்கைகளிலே இறங்கியிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக மின் அழுத்தம் குறைவில்லாமல் சீர்செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி, நீடாமங்கலம், பட்டுக்கோட்டை விவசாயப் பெருங்குடி மக்களுடைய மின்சாரப் பற்றாக்குறை கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றித் தந்த மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

## 4. அறிக்கை அளித்தல்.

### பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக, 1976-77 மற்றும் 1977-78-ஆம் ஆண்டுகளுக்கான, தமிழ்நாடு மின்வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் 1987-88 ஆம் ஆண்டு, 54-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது, அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய குழுவின் 40-வது அறிக்கை, மற்றும் இந்தியத் தணிக்கைத்

[திரு. கி. தர்மலிங்கம்] [1992 ஏப்ரல் 20

துறைத் தலைவரின், 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் வணிகம், சமூகநலத்துறை தொடர்பான பத்திகள் குறித்த பொது நிறுவனங்கள் குழு (1989-90) அளித்த 31-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய குழுவின் 41-வது அறிக்கை, மற்றும் இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83-ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் (சிவில்) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை தொடர்பான பத்திகள் குறித்த பொது நிறுவனங்கள் குழு (1986-87) அளித்த 67-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் 42-வது அறிக்கை, மற்றும், 1976—77 முதல் 1979—80 ஆண்டு வரையிலான தமிழ் நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1989—90) 50-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரை மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய குழுவின் 43-வது அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

5, <u>அரசினர் தீர்மானங்கள்,</u>

(அ) ' முரசொலி ' நாளிதழ் மீதான உரிமைக் குழுவின் அறிக்கை,

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அரசினர் தீர்மானங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.—

'' 9—4—1992-ஆம் நாளன்று பேரவைக்கு அளிக்கப் பெற்ற ' முரசொலி ' நாளிதழ் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை. பேரவை விதி 229 (ஆ)-ன் கீழ் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ''
எனக் கோருகிறேன்,

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு. பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை' என்க. (இல்லை)



1992 ஏப்ரல் 20] [திரு. பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' முரசொலி நாளிதழ் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை சட்ட மன்றப் பேரவை விதி 229 (ஈ)-ன்படி, இப்பேரவை இசைந்து ஏற்றுக்கொள்ள வேண்டும் ''

எனக் கோருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)
மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

முற்பகல் 10-45

முரசொலி நாளிதழ் ஆசிரியரை இப்பேரவை நேரடியாகக் கொண்டு வந்து கண்டிக்க வேண்டுமென பேரவை முடிவு செய்துள்ளதால் உடனடியாக அவ்வாசிரியரை இப்பேரவைமுன் வரவழைத்து கூண்டில் ஏற்றித் தண்டனையை நிறைவேற்ற சம்மன் அனுப்பப்படும். அப்பத்திரிகை நிருபர்களுக்கு உரிய பேரவையின் நடவடிக்கைகளைக் குறிப்பு எடுப்பதற்காக வழங்கப்பட்டுள்ள அனுமதியினை இன்றுமுதல் ரத்து செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>(ஆ) ' கோவை மாலை முரசு ' நாளிதழ் மீதான உரிமைக் குழுவின் அறிக்கை.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"10-4-1992 ஆம் நாளன்று பேரவைக்கு அளிக்கப் பெற்ற 'கோவை மாலை முரசு' நாளிதழ் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை பேரவை விதி 229 (ஆ)-ன்கீழ் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையில் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

"கோவை மாலை முரசு நாளிதழ் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை சட்டமன்றப் பேரவையின் விதி 229 (ஈ)-ன்படி இப்பேரவை இசைந்து ஏற்றுக் கொள்ள வேண்டும்"

எனக் கோருகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஏற்கெனவே இன்றைக்கு ஒரு பத்திரிகை ஆசிரியரை இங்கே கூண்டிலே கொண்டுவந்து நிறுத்தி விசாரிப்பதாக ........(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே அது நிறை வேற்றப்பட்டது. இன்று இந்த கோவை மாலை முரசு பத்திரிகை பற்றிய அறிக்கை மீது உங்களுடைய கருத்து ஏதாவது இருந்தால் கூறலாம். ஏற்கெனவே பேரவை முடிவு செய்ததன் மீது உங்களுடைய கருத்தைக் கூறுவது என்பது பேரவையை அவமதிப்பதாகத்தான் ஆகும். இந்தத் தீர்மானத்தின்மீது உங்களுடைய கருத்தைக் கூறலாம்,

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீர்மானத்தை



ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறபோது. எல்லா உறுப்பினர் களுக்கும் பேசுவதற்கு உரிமையுண்டு. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான், இப்போது நீங்கள் பேசுவதற்கு அனுமதிக்கிறேன். நீங்கள் கோவை மாலை முரசின் மீது பேசுங்கள், கொண்டு வந்திருக்கிற தீர் மானம் கோவை மாலை முரசு மீது, நீங்கள் வேறு பிரச்சி னைக்குப் போகிற காரணத்தால்தான் சொன்னேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : சரி, சரி. மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே. பேரவைத் தலைவருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும் என்னுடைய வேண்டுகோள். இதேபோல ஒவ்வொரு பத்திரிகை யாகக் கொண்டுவந்து, சபையிலே கூண்டிலே ஏற்றுவது தமிழ் நாடு வரலாற்றிலே இல்லாத அளவிற்கு பத்திரிகைகளுக்கு எதிராக இருப்பதற்குப் பதிலாக, ஏற்கெனவே உரிமைக் குழு பரிந்துரை செய்து அனுப்பினாலும்கூட, மீண்டும் சட்டமன்றம் அந்தக் குழுவினுடைய மறுபரிசிலனைக்கு அனுப்புவதற்கு சட்ட மன்ற விதிகளிலேயும் இடமிருக்கிறது. எனவே. ஏற்கெனவே உரிமைக் குழு பரிந்துரை செய்திருந்தாலும். அவற்றையெல்லாம் மீண்டும் உரிமைக் குழுவிற்கு அனுப்பி மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அதுபோல பத்திரிகையாளர்களும் சென்ற சனிக்கிழமை பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலே ஒரு 'காம்ப்ரமைசாக' இதுபோல பத்திரிகைகளுக்கும் விரோதமாக இந்த அரசு இருக்கிறது என்று அந்த வகையிலேயும் இல்லாமல்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களைக் கேட்டுக் கொள்வது, இந்தத் தீர்மானத்தின்மீது உங்களுடைய கருத்துக் களைச் சொல்லலாம். நீங்கள் எல்லாவற்றுக்கும் சேர்ந்து பேரவை எடுத்த முடிவிற்கும், இன்று எடுக்க இருக்கிற சில நட வடிக்கைகள் எல்லாவற்றுக்கும் சேர்த்துக் கருத்துக் கூறிக் கொண்டிருப்பது என்பது இந்த தீர்மானத்தின்மீது நீங்கள் பேசுகிற வாய்ப்பை தவறாகப் பயன்படுத்துகிறீர்கள் என்றுதான் பொருள்படும். இதன்மீது, இந்த கோவை மாலை முரசு பத் திரிகையில் ஒழுங்காகத் தான் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. இதன் மீது என் நடவடிக்கை என்று வேண்டுமானால் நீங்கள் கூறுங்கள். அதற்கும் பேரவை முன்னவர் பதில் சொல்வார்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : சட்டமன்ற விதிகளிலே உரிமைக் குழு சிபாரிசு செய்தாலும்கூட அதை மீண்டும் (குறுக்கீடு) மாலை முரசிலேதான் சொல்கிறேன்—அவை உரிமைக் குழுவிற்கு நீங்கள்பரிந்துரை செய்து மறுபரிசிலனை செய்ய விதி

களிலே வாய்ப்பு இருக்கிறது. எனவே அவ்வாறு நீங்கள் முடிவு எடுக்கவேண்டுமென்று நான் பேரவைத் தலைவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதையே நீங்கள் ஒரு திருத்தத் தீர்மானமாகக் கொடுத்திருக்கலாமே! (சிரிப்பு) இவ்வளவு விதிகளைப் பற்றி எல்லாம் சொல்கிறவர் திருத்தத் தீர்மானம் கொடுக்கலாம் என்றே இருக்கிறது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : திருத்த தீர்மானம் கொடுக்கலாம். திருத்த தீர்மானம் இல்லாமல் சட்டமன்றமே மீண்டும் உரிமைக் குழுவிற்கு அனுப்பலாம். எனவே நீங்கள் அப்படி அனுப்பி மறுபரிசீலனை செய்யவேண்டும். பத்திரிகைகளுக்கும் அரசுக்கும் சண்டை, சட்டமன்றத்திலே நடக்கின்ற நிகழ்ச்சிகளை வெளியிடமுடியவில்லை என்று வெளியிலே இதுபோன்று வருகின்ற செய்திகள் இல்லாமல் செய்வதற்கு நீங்கள் இந்த முறையிலே மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னவர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி விதிமுறைகளினுடைய அடிப்படையிலே இது முதலிலேயே ஆய்வுக்கு வந்தது. முதலிலே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்று கேட்கிறபோது கருத்துகள் சொல்லலாம். பிறகு ஆய்வுக்கு எடுத்துக்கோள்ளப்படலாம். ஏற்கனவே இந்த சட்ட மன்றத்தின் முன்பு இந்த அறிக்கைகளை வைப்பதற்கு காரணமே—வைத்து எல்லோரும் மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் படித்து, அவர்கள் ஏதாவது தீர்மானம் கொண்டு வரவேண்டுமென்றால் அந்த தீர்மானம் கொண்டு வரலாம் என்பதற்காகத் தான் வாய்ப்பு அளிக்கப்படுகிறது. எந்தக் கருத்தையும் எடுத்துச் சொல்வதற்கு மன்றத்திலே உரிமை உண்டு. மன்றம் முடிவு செய்வதற்கும் உரிமை உண்டு. ஆனால் இந்த மன்றம் தீர்மானங்களை ஏற்றுக் கொண்டு விட்டது. ஆகவே இப்போது இதில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதும் நிறைவேற்றப்பட்டு விட்டது. இப்போது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்கிற அந்த தீர்மானம் தான் வருகிறது. ஆகவே இந்த நிலையில் எந்த பரிசீலனையும் செய்வதற்கு இல்லை. எல்லாம் முறைப்படி நடந்து முடிந்து விட்டதன் காரணமாக இனி ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)





மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவையின் முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க. (ஆம்)
மறுப்போர் இல்லை என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி).

கோவை மாலை முரசு ஆசிரியரை அவைமுன் நேரிடையாகக் கொண்டு வந்து கண்டிக்க வேண்டும் எனப்பேரவை முடிவு செய்துள்ளதால் உடனடியாக அவ்வாசிரியரைப் பேரவைமுன் வரவழைத்து கூண்டில் ஏற்றித் தண்டனையை நிறைவேற்ற உரிய சம்மன் அனுப்பப்படும். அப்பத்திரிகையின் நிருபரான தினகரன் நாளிதழின் நிருபருக்கு இப்பேரவையின் நடவடிக்கைகளைக் குறிப்பு எடுப்பதற்காக வழங்கப்பட்டுள்ள அனுமதி இன்று முதல் ரத்து செய்யப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

6. கண்டனம்.

'இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி' ஆப் இந்தியா 'இதழ் ஆசிரியர் திரு. அனில்தர்க்கர்' முன்னாள் கட்டுரையாளர் திரு. கே. பி. சுனில் ஆகியோருக்குக் கண்டனம் தெரிவித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லஸ்ட்டிரேட்டட் வீக்லி' ஆப் இந்தியா பத்திரிகையின் ஆசிரியர் மற்றும் பதிப்பாளர் திரு. அனில் தர்க்கர் மற்றும் திரு கே. பி. சுனில் அப்பத்திரிகையின் முன்னாள் கட்டுரையாளர் ஆகியோர் கண்டிக்கப்படவேண்டிய பிரச்சினையில் ஓர் அறிவிப்பைப் பேரவைக்குத் தெரிவிக்க இருக்கிறேன்.

திரு. அனில் தர்க்கர் மற்றும் திரு. கே. பி. சுனில் ஆகிய இருவருக்கும் பேரவையின் சார்பில் அனுப்பப்பட்ட சம்மன்படி இன்று பேரவையின் முன் அவர்கள் இருவரையும் ஆஜராக வேண்டும் என்று கோரி இருந்தேன். அவர்கள் இருவர்களிடமிருந்தும் எனக்குக் கடிதங்கள் வந்துள்ளன.

அந்தக் கடிதங்களில் திரு. அனில் தர்க்கர் அவர்கள், தான் பொறுப்பிலே இல்லாத ஒரு சமயத்திலே நிகழ்ந்த தவறுக்காக, தான் கண்டிக்கப்படவேண்டுமா என ஒரு வினாவைக்கேட்டு இருக்கிறார். அதே ஆசிரியர் பேரவையின் உரிமைக் குழுவிற்கு ஏற்கெனவே பதில் எழுதிய நேரத்தில் சம்பந்தப்பட்ட அந்தகட்டுரை வெளியான நேரத்தில் தான் பத்திரிகையின் ஆசிரியராக இல்லை

**' இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆப் இந்தியா ' இதழ் ஆசிரியர் திரு. அனில் தர்க்கர், முன்னாள் கட்டுரையாளர் திரு. கே. பி. சுனில் ஆகியோருக்கும் கண்டனம் தெரிவித்தல்.**



என்பதைக் குறிப்பிட்டு அப்படி இல்லாது இருந்திருக்கிறேன்
எனவே எனக்கு இதில் சம்பந்தம் இல்லை என்பதைத் தெரிவித்
திருந்தால் இன்றைக்கு அவர் கேட்டிருக்கிற பிரச்சினைக்கு
அன்றைக்கே தீர்வு ஏற்பட்டிருக்கும். அன்றையதினம் தான்
ஆசிரியராக இல்லை என்பதையும் சொல்லிவிட்டு அடுத்து
பத்திரிகையின் ஆசிரியர்—பதிப்பாளர் என்கிற நிலையிலே இருந்
தும் பத்திரிகையின் சார்பிலேயும் பொறுப்பு ஏற்றுக்கொண்டு
பதில் அளிக்கிறேன் என்று பதில் அளித்திருந்தார். அவர்மீது
இங்கே எழுப்பப்பட்ட பிரச்சினை என்பது அவை உரிமை மீறல்
என்கிற அவை நடவடிக்கைகளைத் திரித்து வெளியிடுகிற உரிமை
மீறல் பிரச்சினை என்பதாக எடுத்துக் கொள்ளப்படவில்லை.
அவர் அவையை அவமதித்ததற்கான பிரச்னையாகத்தான் எடுத்
துக் கொள்ளப்பட்டது. அவர் பொறுப்பும் ஏற்றுக்கொண்டு
பேரவையின் உரிமைக்குழுவின் முன் ஆஜர் ஆகாத பிரச்சினை
தான் அவையை அவமதித்த பிரச்சினையாக எடுத்துக் கொள்
ளப்பட்டது. இந்த அவை அவமதிப்புப் பிரச்சினைக்காகத்தான்
அவர் மீது கண்டனம் தெரிவிக்கப்பட வேண்டும் என்ற உரிமைக்
குழுவின் தீர்மானத்தைப் பேரவை ஏற்றுக் கொண்டுள்ளது.
ஆனால் தீர்மானம் குறித்து தான் அப்பத்திரிகையின்
ஆசிரியராக பதிப்பாளராக இல்லாத ஒரு காலகட்டத்தில்நடந்த
பிரச்சினைக்கு தான் தண்டிக்கப்பட வேண்டுமா என்ற ஒரு
கருத்தை அவர் எழுதி இருக்கிற காரணத்தையும் கருத்திலே
கொண்டு அவர் இந்த அவையை அவமதிக்கும் கட்டுரை வெளி
யான நேரத்தில் ஆசிரியராக தான் இல்லை, தான் முழுக்க
முழுக்க சம்பந்தப்படாத பிரச்சினை

முற்பகல் 10—55

' Who was not at all concerned with the publication of the matter at issue '. என்று அவர் எழுதியிருப்பதையும் கருத்திலே
கொண்டு ஒரு 'lenient view' எடுத்து அவர் மீது பேரவை விதித்
திருக்கின்ற தண்டனையை ஓரளவு மாற்றியமைத்து இது போன்ற
பிரச்சினைகள் இனிமேல் இந்தப் பத்திரிகையில் இவர் பொறுப்பு
ஏற்றுக்கொண்டிருக்கின்ற இந்தக் காலக்கட்டத்திலிருந்து இனி
மேல் எந்தக் காலக்கட்டத்திலேயும் வெளிவரக்கூடாது என்கிற
எச்சரிக்கையோடு 'with severe warning' கடுமையான
எச்சரிக்கையோடு தொடர்ந்து இப்பத்திரிகையில் பேரவையைக்
களங்கப்படுத்துகின்ற வகையில் பேரவையின் கண்ணியத்திற்கும்
மரபுக்கும் களங்கம் ஏற்படுத்துகிற வகையில் எத்தகைய செய்தி
யும் வெளியிடலாகாது என்கிற செய்தியைத் தெரிவித்து நடந்த
தவறுக்குப் பேரவையின் சார்பில் கடும் கண்டனத்தை மட்டும்
தெரிவித்து இத்தோடு அவருடைய பிரச்சினையை விட்டுவிடலாம்
என்று நான் கருதுகிறேன். பேரவையின் அனுமதியோடு அனில்
தர்க்கர் அவர்கள் பிரச்சினையை இத்தோடு விட்டுவிடுகிறேன்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**' இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆப் இந்தியா ' இதழ் ஆசிரியர் திரு. அனில் தர்க்கர், முன்னாள் கட்டுரையாளர் திரு கே.பி. சுனில் ஆகியோருக்குக் கண்டனம் தெரிவித்தல்.**





இந்தக் கட்டுரையாளர் திரு. கே. பி. சுனில் அவர்களைப்
பொறுத்தமட்டில் அவரும் ஒரு பதில் எழுதியிருக்கிறார். அவர்
சென்னையிலே இருக்கின்ற முகவரிக்குப் பேரவையின் '' சம்மன்
சார்வு'' செய்யப்பட்டது. 20—ஆம் தேதி அவர் பேரவைமுன்
ஆஜர் ஆகவேண்டும் என்கிற கட்டளையை சம்மனாகத் தெரி
வித்த பின்னரும் அவர் மிகப் பெரிய ஒரு பதிலை எழுதியிருக்கிறார்.
எழுதியிருக்கின்ற பதிலில் அவர் பேரவையின் நடவடிக்கை
களை நான் ஏதும் செய்யவில்லையே என்பதையே திரும்பத்
திரும்ப— அவர் ஏற்கனவே பேரவையினுடைய உரிமைக்
குழுவுக்கு எழுதிய பதிலிலேயும் அதைத்தான் தெரிவித்திருந்
தார். இப்போது எனக்கு எழுதியிருக்கின்ற பதிலிலேயும்
அதையே தான் தெரிவித்திருக்கின்றார். அவர்
பேரவையின் நடவடிக்கைகளை ஏதோ திரித்து வெளி
யிட்டார் என்பது அல்ல பிரச்சினை. பேரவையில் நடவாத
பிரச்சினைகளைப் பேரவைக்குக் களங்கம் உண்டாக்கும்
வகையில் அவர் கட்டுரையாக எழுதினார் என்பதுதான்
அவர் மீது எழுந்த பிரச்சினையாகும். இந்தப் பத்தாவது
சட்டமன்றப் பேரவை தொடங்கிய காலத்திலிருந்து மரபு
மீறிய எத்தகைய செயலும் இங்கே நடைபெறாத வகையில்,
இந்த அவையினுடைய கண்ணியத்தை, பெருமையைக் காக்
கின்ற வகையில் நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருந்தும்கூட
எட்டாவது சட்டமன்றப் பேரவையிலேயும் ஒன்பதாவது
சட்டமன்றப் பேரவையிலேயும் நடந்த சில நிகழ்ச்சிகளை
மட்டும் மேற்கோள்களாக எடுத்து, படங்களாகப் போட்டு,
இன்றைக்குப் பத்தாவது சட்டமன்றப் பேரவையில் நடந்த
ஒருசில விவாதங்களை மட்டும் திரித்து வெளியிட்டு இந்தப்
பேரவையின் கண்ணியம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து
விட்டது என்பதைப் போல அவர் கட்டுரை எழுதியிருந்தார்.
இந்தப் பேரவையில் நடக்காத சம்பவங்களைப் படங்
களாக வெளியிட்டு இந்தப் பேரவையின் கண்ணியத்திற்கும்
உயர்விற்கும் களங்கம் ஏற்படுகிற வகையில் கட்டுரை எழு
தினார் என்பதுதான் அவர் மீது இருந்த குற்றச்சாட்டாகும்.
அந்தக் குற்றசாட்டுக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல்
வேறு எங்கெங்கோ அவருடைய பதில்களை எல்லாம் சொல்லி
விட்டு 20-ஆம் தேதி இங்கே வந்து நேரே ஆஜராக வேண்டும்
என்று விடுத்த ''சம்மனை'' திட்டமிட்டு, 20-ஆம் தேதி
இங்கே ஆஜராக வேண்டும் என்று கொடுத்த சம்மனைப்
பெற்றுக்கொண்டு சென்னையிலே இருந்தவர், நான் மே
மாதம் வரையிலேயும் இந்த மாநிலத்திலேயிருந்து வெளி
யிடங்களுக்குச் செல்ல வேண்டி இருக்கின்ற காரணத்தால்
இதையே உங்களுடைய சம்மனுக்கு என்னுடைய பதிலாகப்
பெற்றுக்கொள்ளுங்கள்; சம்மனைப் பெற்றுக்கொண்ட
பின்னர் இங்கே ஆஜராக வேண்டியது இந்த 20-ஆம் தேதி
என்பதைத் தெரிந்து கொண்டதற்குப் பின்னர் திட்டமிட்டு—

பேரவையை அவமதிக்கிற வகையில் இந்த மாநிலத்தை விட்டு, நான் மே மாதம் வரையிலேயும் வெளியிடங்களுக்குச் செல்கிறேன். எனவே இதையே உங்களுடைய சம்மனுக்கு என்னுடைய முகாந்திரமாக ஏற்றுக்கொள்ளுங்கள் என்று எழுதியிருப்பதானது பேரவையை அவமதிக்கிற செயல்தான் என்றும் நான் திட்டவட்டமாகக் கருதுகிறேன்.

முற்பகல் 11-00

மேலும் அவர் இப்போது எழுதியிருக்கிற பதிலில் பேரவையினுடைய உரிமைக் குழுவினுடைய நடவடிக்கைகளுக்கே உள்நோக்கம் கற்பிக்கின்ற வகையில் திசைதிருப்புகிற வகையில் எழுதியிருக்கிறார். ஒரு பேரவையினுடைய உரிமைக் குழுவில் ஒரு குறிப்பிட்ட கூட்ட நிகழ்ச்சியில் இந்தப் பிரச்சினையை விட்டுவிடலாம் என்று பேரவையினுடைய குழு உறுப்பினர்களுக்கு மத்தியில் நடைபெறுகிற—உரையாடல்களுக்கு மத்தியில் ஏற்பட்ட—ஒரு சம்பவத்தினைக் குறிப்பிட்டு அன்றைக்கு இப்படிப் பேசப்பட்ட சம்பவம் இருக்கிறபோது என்னைக் கண்டனம் தெரிவிக்கவேண்டுமென்று அடுத்த கூட்டத்தில் அவர்கள் எப்படி முடிவு செய்யலாம் என்று பேரவையினுடைய உரிமைக் குழுவின் நடவடிக்கைகளையே கேள்வி கேட்கிற வகையில் அதற்கு உள்நோக்கம் கற்பிக்கிற வகையில் அவர் பதில் எழுதியிருப்பதை பேரவையின் உரிமைக் குழுவையும், இந்தப் பேரவையையும் திட்டமிட்டு களங்கப்படுத்தவேண்டும் என்ற வகையில்தான் அவர் எழுதியதாக நான் கருதுகிறேன். எனவே, அவருடைய ‘இந்தப் பதிலுரை என்பது 20-ஆம் தேதி ஆஜர் ஆகவேண்டும் என்பதைத் தெரிந்துகொண்டதற்குப் பின்னர் இந்தப் பேரவைக்கு இருக்கிற மேலாண்மையைத் தெரிந்துகொண்ட பின்னரும், திட்டமிட்டு இதை உதாசீனப்படுத்துகிற வகையில் அவர் இன்று ஆஜராகாமல் இருப்பதும், எழுதுகிற பதிலுரையிலேயும் உரிமைக் குழுவின் நடவடிக்கைகளையே உள்நோக்கத்தோடு களங்கம் கற்பிக்கிற வகையில் எழுதியிருப்பதும் உண்மையிலேயே பெரிதும் கண்டிக்கத்தக்கவை என்பதைத் தெரிவித்து இன்றையதினம் பேரவை வழங்குகிற இந்தக் கண்டனம் என்பது கூட ‘May's (Parliamentary Practice’-இல் தெரிவித்து இருப்பதுபால் இந்தக் கண்டனம் என்பது, பேரவையின் உரிமையை மீறிய செயலுக்கு உரிய குறைந்தபட்சத் தண்டனை என்றுதான் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இதுதான் அதிகபட்சத் தண்டனை என்று இல்லை. இதுதான் குறைந்தபட்சத் தண்டனை



என்று குறிப்பிடப்பட்டு இருக்கிற அந்தக் குறைந்தபட்சத் தண்டனையைத் தான் நாம் விதித்து இருக்கிறபோது அதற்கும் உள்நோக்கம் கற்பித்து, பேரவையின் நடவடிக்கைகளுக்கும் அவர் உள்நோக்கம் தொடர்ந்து கற்பித்து வருகிற காரணத்தால் இந்தத் தண்டனையை நிறைவேற்றியாக வேண்டும் என்கிற முடிவைப் பேரவையின் அனுமதியோடு அவருக்கு உரிய ‘பிடி வாரண்ட்’ காவல் துறை மூலம் அனுப்பி (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பேரவை முன் கொண்டு வந்து கண்டனம் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

இதில் என்னுடைய பணிவான ஒரு வேண்டுகோளையும் பத்திரிகையாளர்களுக்கும் பத்திரிகைத் துறைக்கும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன், கடந்த சில நாட்களாகவே இந்த முடிவைப் பேரவை எடுத்ததற்குப் பின்னர் பத்திரிகைத் துறைக்கே எதிராக இந்தப் பேரவை சில முடிவுகளை எடுத்து வருவதாகவும். பேரவைத் தலைவரும். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசும் பத்திரிகைக்கு எதிராக ஜனநாயகத்திற்கு ஒவ்வாத வகையில் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதைப் போல சில பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்பட்டு வருகிறது. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு, திருநாவுக்கரசு அவர்கள்கூட பத்திரிகைகளுக்கும் இந்தப் பேரவைக்கும் சண்டை என்பதைப் போல ஒரு நிலைமை இருக்கிறது என்பதைப் போன்ற ஒரு உணர்வினையும் இங்கே எடுத்துச் சொன்னார்கள், நான் தெள்ளத் தெளிவாக ஒரு கருத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன், இந்த 10-வது சட்ட மன்றம் தொடங்கிய காலத்திலே இருந்து இன்று வரையிலும்—இந்த 10-வது சட்டமன்றப் பேரவையின்—இந்த முழு கால அளவிலேமாக முழுக்க முழுக்கப் பத்திரிகைகளையும் இந்தப் பேரவையின் ஒரு அங்கமாகத்தான் இந்தப் பேரவையின் தலைவராகிய நானும் ஆட்சித் தலைவரான மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களும் (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், அந்த அளவுக்கு இந்தப் பேரவையின் அங்கமாக இருக்கக்கூடிய இந்தப் பத்திரிக்கைகள் எந்தக் குறைப்பாட்டுக்கும் இடம் இல்லாமல் பணியாற்றி வருகிறார்கள் என்பதைப் பரிபூர்ணமாக நாங்கள் ஏற்றுக்கொண்டு இருக்கிறோம், ஆனால் ‘இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆப் இந்தியாவைப்’ போல இன்றைக்குக் கண்டனத்திற்கு ஆளாகியிருக்கிற ‘முரசொலி’. ‘கோவை மாலைமுரசு’ போன்ற ஒன்று இரண்டு பத்திரிக்கைகள் இந்தப் பேரவைக்கு களங்கம் ஏற்படுத்தியிருக்கிற சில செய்திகளை. இந்த அவையில் நடக்காத சில செய்திகளை வெளியிடுகிறபோது

அதைக் கண்டுகொள்ளாமல் விடுவதும்கூட இன்றைக்குப் பத்திரிகைக்கு இருக்கக்கூடிய அந்த உயர்ந்த இடத்தை நாம் சாதாரணமாக மதிப்பிட்டு விட்டோம் என்றுதான் பொருள்படும், எனவே, மற்றப் பத்திரிகையாளர்களைப் பொறுத்தமட்டில் நியாயமான, ஜனங்களுக்குச் சென்று சேர வேண்டிய செய்திகளை இங்கே நடந்த செய்திகளை வெளியிடுகிற பத்திரிகைகள் மீது எந்தக் காலத்திலேயும் இந்தப் பேரவைக்கோ, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கோ எந்த வருத்தமும் இல்லை. அவர்களுடைய பணி இதைப் போல தொடர்ந்து இருக்கவேண்டும் என்றே (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் கருதுகிறோம். இப்படித் தவறு செய்கிற, பேரவைக்குக் களங்கம் கற்பிக்கிற, நீங்களும் அங்கம் என்று சொல்லுகிற இந்தப் பேரவைக்குக் களங்கம் கற்பிக்கிற ஒன்று இரண்டு பத்திரிகைகளையோ, பத்திரிகையாளர்களையோ நாம் கண்டுகொள்ளாமல் தள்ளுவதும் கூட அந்தப் பத்திரிகைகளுக்கு நாம் வைத்து இருக்கக் கூடிய உயர்ந்த மரியாதைக்கு உரியதாக இருக்காது என்றே நான் கருதுகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்றவுடன் அன்றைக்கே அறிவித்தார்கள். "இந்தப் பேரவையில் எதிர்க்கட்சியினுடைய எண்ணிக்கை குறைந்து இருந்தாலும், எதிர்க்கட்சிகளினுடைய பலம் குறைவாக இருக்கிற சூழ்நிலை ஏற்பட்டு இருந்தாலும் அதை நிவர்த்தி செய்கிற பணியை தமிழ்நாட்டில் பலம் பொருந்தியதும், அடித்தளம் வலுவாக உள்ளதுமான பத்திரிகைகள் ஏற்றுக் கொள்ளணும்" என்றே அவர் வேண்டுகோள் விடுத்தார். அந்தவேண்டுகோளிலேயிருந்து அவர் என்றைக்கும் பின்வாங்கியதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

பத்திரிகைகள், பலம் பொருந்திய, ஜனநாயகத்தின் தொட்டிலாகத் திகழ்கிற அத்தகைய நல்ல பத்திரிகைகள் தொடர்ந்து எதிர்க்கட்சியாக இருந்து செயல்படுவதை விரும்புகிறேன். என்றே அறிவித்து வருகிறார்கள். அந்தவகையில் இந்தப் பேரவையின் நடவடிக்கைகளில் உங்களுடைய விமர்சனங்களாக வருவதைத் துளிகூட நாங்கள் தவறாகக் கருதுவதில்லை. அவை களங்கம் கற்பிக்கிற வகையில், உள்நோக்கம் கற்பிக்கிற வகையில் வருகிறபோது, இதுபோன்று ஒன்றிரண்டு நடவடிக்கைகளை எடுக்காமல் இருப்பதும்கூட, நாம் பத்திரிகைகளிடம் வைத்திருக்கிற அந்தச் சமூக உறவுக்கும் நாம் பத்திரிகையாளர்களை மதித்து வருகிற அந்த உயர்ந்த உணர்வுக்கும் நாம் கொடுக்கிற மரியாதையாக இருக்காது என்று கருதியேதான்,



பத்திரிகையாளர்களுடைய உயர்ந்த ஸ்தானத்தை, நாம் வைத்திருக்கிற அந்த உயர்ந்த மரியாதையைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காகத்தான், தவறு செய்கிற இந்த இரண்டு மூன்று இனங்களிலே மட்டும் நடவடிக்கை எடுத்து இருக்கிறோமே தவிர மற்ற எல்லாப் பத்திரிகைகளைப் பொறுத்தமட்டில் இந்தப் பேரவைக்கு எந்தவிதமான மன வருத்தமோ ஒரு எதிரான கருத்தோ இல்லை என்பதைத் திட்டவட்டமாக அறிவித்துக் கொள்கிறேன். எனவே, ஜனநாயகத்துக்கு விரோதமாகச் சில காரியங்கள் நடைபெறுகிறது. ஜனநாயகத்துக்கு விரோதமாக . நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது என்று கூறுவதெல்லாம் கற்பனைக் கூற்றாகும், இந்தப் பேரவையைப் பொறுத்தமட்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்தமட்டில் துளிகூட பத்திரிகையாளர்கள் மீது எந்தவித விரோத உணர்வும் இல்லாத வகையிலே தான் இன்றைக்கும் பணியாற்றிக்கொண்டு இருக்கிறோம் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொண்டு, அதே நிலை, அதே சமூக உறவு தொடர்ந்து நீடிக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 7. மானியக் கோரிக்கைகள், 1992–93, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992–93 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்மீது விவாதமும் வாக்கெடுப்பும் மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 29-ஆம் எண்மானியக் கோரிக்கையின் கீழ் ரூ 50,62,27,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானம் எண் 2382, திரு. மா. சுந்தரதாஸ்,

[1992 ஏப்ரல் 20

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

' to diiscuss the need to implement the Minimum Wages Act in the Cashew Industries by the Labour Officors in Kanyakumari district, I move—

" that the allotment of Rs. 50, 62, 72, 000/- under Demand No. 29-Labour including Factories-be reduced by Rs. 100/-"

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 2379, திரு. ஜி. பழனிசாமி

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, —

'' கொள்கை பற்றி '' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத்தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் 29-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற பற்றிய ரூ 50,62,27,000-இல் ரூ 100 குறைக்க வேண்டும் ''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக் கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம் மாண்பு மிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலனும் தொழிற்சாலை களும் என்ற தலைப்பின்கீழ் கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வைக்கப்பட்டுள்ளது இவற்றில் தமிழிலே இருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை நான் இந்த அவை யிலே ஆற்றிய உரையாகக் கருதி, அதை அவைக் குறிப்பில் பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கு மாறு கேட்டுக்கொள்கிறேன். இறுதியில் மாண்புமிகு உறுப்பினர் களுடைய கருத்துக்களுக்கு என்னுடைய பதிலுரையையும், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு எடுத்துள்ள சில முடிவுகளைப் பற்றியும் தெரிவிக்கிறேன் என்று கூறி அமர் கிறேன்.

---

659 முதல் 756 வரையுள்ள பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது



1992 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று மாலையிலும் பேரவை கூட இருக்கிறது அதை மனதிலேகொண்டு 2 மணிக் குள்ளாகவே இந்த மானியக் கோரிக்கையை முடித்துவைக்க ஒத்துழைக்குமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள் கிறேன். அதை மனதிலே கொண்டு, பேசுகிற மாண்புமிகு உறுப்பினர்களும் பேசக் கேட்டுக்கொள்கிறேன் திரு. கோ காளன்.

திரு கோ. காளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தொழிலாளர் நலனும் தொழிற் சாலைகளும் என்ற மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு நல்கியதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர் துறை கொள்கை விளக்கக் குறிப்பிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் பல்வேறு கருத்துக்களையும் பல்வேறு சாதனைகளையும் விவரமாக எடுத்துச் சொல்லி யிருக்கின்றார்கள். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு பல்வேறு துறைகளிலே எட்டியிருக்கக்கூடிய சாதனைகள், வர லாற்றில் பொறிக்கப்படக் கூடிய சாதனைகளெல்லாம்கூட தொழிலாளர் துறையிலேயும் இந்த அரசு ஆற்றியிருக்கிறது என்பதை நான் இங்கே பெருமிதத்தோடு குறிப்பிட விரும்பு கிறேன்.

முற்பகல் 11-10

இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு மூடிய ஆலைகளை விரைந்து திறந்திடவும், மூடப்பட்டுள்ள ஆலைத் தொழிலாளர் களுக்குச் சென்ற தீபாவளிப் பண்டிகையின்போது அன்பளிப்பாக வழங்கிய தொகைகளையும் பார்க்கின்றபொழுது இந்த அரசு தொழிலாளர் நலனிலே எந்த அளவிற்கு அக்கறை கொண்டு செயலாற்றிக் கொண்டு வருகிறது என்பது மட்டுமல்லாமல், இந்த ஆட்சிக் காலத்திலே, மூடப்பட்ட தொழிற்சாலைகளைத் திறந்திருக்கிறது; அதேநேரத்தில் மூடுகின்ற தொழிற்சாலை களும் குறைந்திருக்கின்றன என்பதை நான் இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இதற்கு மிக முக்கியமான காரணம் தொழிற்சாலைகள் மூடல்கள் குறைந்திருக்கின்றன என்று சொன்னால், சிறந்த தொழிலுறவு, தொழிலமைதி நிலை நாட்டப்பட்டிருக்கிறது என்றுதான் இதற்கு அர்த்தம். இந்தத் தொழிலுறவை நிலைநாட்டுகின்றபோழுது அரசு, இந்தப் பக்கமும் சாயாமல் அந்தப் பக்கமும் சாயாமல் ஒரு நடுநிலை மைக் கொள்கையோடு பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தீர்க்கப்பட்டிருக்கின்ற காரணங்களும் இதற்கு ஒன்று என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. கோ. காளன்] [1992 ஏப்ரல் 20

இன்றைக்குத் தமிழகத்திலே புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ் கட்சியும் தோழமைக் கட்சிகளாக இந்தச் சட்டமன்றத்திலே இருக்கின்றன. இதற்கு முன்பாகப் பார்க் கின்றபொழுது குறிப்பாக ஏதாவதொரு ஆளுங்கட்சியிலே கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒட்டிக்கொண்டிருப் பார்கள். அப்படி அந்தத் தேர்தல் கூட்டுறவினால் ஆளுங் கட்சியினுடைய சக்தியைப் பயன்படுத்தி, ஆளுங்கட்சியினுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, அங்காங்கே தொழில் தகராறு களை ஏற்படுத்துவதற்கும், தொழிலமைதியைச் சீர்குலைப்ப தற்கும், தொழிற்சாலைகளை மூடுவதற்கும் காரணமாக இருந் திருக்கின்றார்கள். இன்றைக்கு அத்தகைய உறவு இல்லாததன் காரணத்தால் அவர்களுடைய சிறகுகள் முறிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் ஒருவேளை தமிழகத்திலே தொழிலமைதி நிலவி யிருக்கிறது என்பதையும் நான் குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும் புகிறேன்.

இன்றைக்கு கொள்கை விளக்கக் குறிப்பிலே பல்வேறு திட் டங்களை நாம் பார்க்கிறோம். 1991 ஆம் ஆண்டில் கொடுக்கப் பட்ட 15,574 தொழில் தகராறுகளில், ஏறக்குறைய 13,000 க்கும் மேற்பட்ட தாவாக்கள் சுமூகமாகத் தீர்க்கப்பட்டிருக் கின்றன என்று கூறப்பட்டிருக்கிறது. இது உண்மையிலேயே மகத்தான சாதனை என்பதை நான் இந்த அவையிலே குறிப்பிட விரும்புகிறேன்.

தொழிலமைதியைப் பொறுத்தமட்டிலும், எப்பொழுதும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டிலே சிறந்த தொழிலமைதி ஏற்பட்டிருக்கிறது. இதன் வாயிலாகத் தமிழகத்திலே தொழில்கள் சிறந்து விளங்குவதற்கும், புதிய தொழில்கள் தமிழகத்திலே வருவதற்கும் இந்தக் கொள்கை ஒரு மூலகாரணமாக பாராட்டக் கூடிய வகையிலே அமைந்திருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

சென்ற தீபாவளியின்போது போனஸ் பிரச்சினைகள் பூதாகர மாக எழுந்தன. கோவை பஞ்சாலைகளிலேயும் சிமெண்ட் ஆலைகளிலேயும், சர்க்கரை ஆலைகளிலேயும் இன்னும் பல்வேறு என்ஜினியரிங் தொழிற்சாலைகளிலேயெல்லாம்கூட இந்தப் பிரச்சினை எழுந்தபோது இந்த அரசு சாமர்த்தியமாக மட்டுமல்லாமல், தொழிலாளர் நலனிலே அக்கறை கொண்டு தொழிலாளர்களுக்கு நீதி வழங்கக்கூடிய வகையில், மாண்புமிகு தொழிலாளர்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களும், கோவை பஞ்சாலைத் தொழிலாளர்கள் போனஸ் பிரச்சினையிலே எந்த அளவுக்கு, தொழிலாளர் களுக்குச் சாதகமாக தீர்ப்பளித்தார்கள்; அதன் மூலமாக, தொழில் அமைதியை நிலைநாட்டினார்கள் என்பதை நாம் பார்க்கிறோம்.



1992 ஏப்ரல் 20] [திரு. கோ. காளன்]

முற்பகல் 11-15

அதேபோன்று சிமெண்ட் ஆலை போனஸ் பிரச்சினையாக இருந்தாலும் சரி, எஞ்சினியரிங் தொழிலாளர்களுடைய போனஸ் பிரச்சினையாக இருந்தாலும் சரி, சர்க்கரை ஆலை பிரச்சினை யாக இருந்தாலும் சரி, கூட்டுறவு நூற்பாலைகளிலும் ஊதியப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, அரசு நடுநிலைமை யோடு சரியாக நீதி வழங்கக்கூடிய ஒரு சூழ்நிலையை நாம் கடந்த ஆண்டிலே பார்த்திருக்கிறோம். அந்த வகையிலே பார்க் கிறபோது, தொழிலாளர் பிரச்சினையிலே, தமிழக அரசு எடுத்து வைத்திருக்கிற கொள்கை, மிக மகத்தானதாக சிறந்த முறையிலே அமைந்திருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்பு கிறேன்.

அதே போன்று புதிய நீதி மன்றங்கள் பல்வேறு இடங்களிலே ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை பல நாட்களாக இருந்து வந்திருக்கிறது. வேலூரிலும், சேலத்திலும், திருச்சியிலும் பல நாட்களாகக் கோரி வந்திருக்கிறோம். அந்தக் கோரிக்கை, இன்று ஏற்கப்பட்டு, வேலூரிலும், சேலத்திலும், திருச்சியிலும் தொழி லாளர் நீதிமன்றங்களை ஏற்படுத்தியிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை விரைந்து செயல்படுத்துவதற் கான வகையிலே அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தோட்டத் தொழிலாளர் மருத்துவ வசதிக்காக ஒரு விசேஷக் குழுவை அமைத்து, தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி கொடுப் பதற்கும், அதை ஏற்படுத்தித் தருவதற்காக, வசதிகளைப் பெறுவதற்காக இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இது உண்மையிலேயே மிக மிக முற்போக்கான ஒரு கொள்கை மட்டு மல்லாமல், வரவேற்கக்கூடியதாகவும் அமைந்திருக்கிறது.

அதேபோன்று, பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதியை ஏற்படுத்துவதற்காக வேலூர் சத்துவாச்சாரியிலும், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலும் பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டக்கூடிய திட்டம் ஒரு சிறப்பான திட்டம் மட்டு மல்லாமல், இப்படிப்பட்ட திட்டத்தை மற்றத் தொழிலாளர் கள் வாழக்கூடிய பகுதிகளிலும், அவர்களுக்கு சுலப மாக வீடு கிடைக்கக்கூடிய வகையில் இந்த அரசு திட்டமிட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன்.

அதேபோன்று, மகளிர் மேம்பாட்டுக்காக மகளிர் நலச் சட்டங் களை மேம்படுத்துவதற்காகவும், அவர்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்காகவும் பெண் அலுவலர்களைக் கொண்டு ஒரு குழு ஏற்படுத்தியிருப்பதாக அறிகிறேன். அதுவும் முற்றிலுமாக வரவேற்கக்கூடிய ஒரு நிகழ்ச்சி என்பதை நான் இந்தச் சந்தர்ப்

பத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மகளிர் மேம்பாட்டுக்காக, பெண்களை அதிகமாக வேலைவாய்ப்பிலே ஈடுபடுத்த வேண்டுமென்று இந்த அரசு கண்ணுங்கருத்துமாக இன்று செயல்பட்டு வருகிறபோது மிக முக்கியமாக நான் குறிப்பிட விரும்புவது, தொழிற்சாலைகளிலே பெண் தொழிலாளர்களுக்கு ஓவர்-டைம் மிகுதி நேர வேலை போடக் கூடாது என்று சமீபத்திலே அரசு, 'இன்ஸ்பெக்டர்ஸ் ஆப் பேக்டரீஸ்' மூலமாக பல்வேறு தொழிற்சாலைகளிலே தடை விதித்திருக்கிறது. ஆண்களுக்கும், பெண்களுக்கும் சரிநிகராக உரிமை வழங்க வேண்டும் என்பது மட்டுமல்லாமல், குறிப்பாக பெண் தொழிலாளர்களுக்கு ஓவர்-டைம் கொடுக்கக் கூடாது என்பது, எந்தவிதத்திலும் நியாயம் கிடையாது. 'பேக்டரீஸ்' சட்டப்படி, குறிப்பிட்ட காலகெடுவுக்குள்ளாக மிகுதி நேர வேலை செய்வதற்கு வரையறுக்கப்பட்டிருக்கிறது; அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு இருக்கிறபோது, சில தொழிற்சாலைகளிலே 5 நாட்கள் வேலை ஆறாவது நாளிலே ஓவர்-டைம் வேலைக்குப் பெண்களை அமர்த்தக்கூடாது என்ற அந்த விதியை மாற்ற வேண்டும். சட்டத்திற்குட்பட்டு பெண்களும் வேலை செய்வதற்கு அனுமதிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அவ்வாறு இல்லையென்று சொன்னால், பெண்கள் புறக்கணிக்கபடுவது மட்டுமல்லாமல், சில தொழிற்சாலைகளிலே உற்பத்தி பாதிப்பதற்கும் ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 11-20

அதேபோனறு இரவு ஷிப்டுகளில் பெண்களை வேலைக்கு அமர்த்துவதற்கு உரிய சட்டத் திருத்தம் கொண்டு வருவதாகச் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் இதுவரை கொண்டு வரவில்லை. அதை விரைந்து கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

1948-ஆம் ஆண்டின் குறைந்தபட்சக் கூலி கொடுக்கக் கூடிய சட்டத்தின்படி ஏறக்குறைய தமிழகத்திலே 67 தொழில்களுக்கு குறைந்தபட்சக் கூலி கொடுப்பதற்கு உத்தரவு பிறப்பித்திருப்பதாகச் சொல்லியிருக்கின்றீர்கள். ஆனால் எந்த அளவுக்கு அது அமல்படுத்தப்படவிருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதோடுமட்டுமல்லாமல், அகில இந்திய அளவில், மத்திய அரசு குறைந்தபட்சக் கூலியாக 20 ரூபாய் நிர்ணயித்திருக்கிறது. ஆனால், தமிழகத்திலே 15 ரூபாய் என்று குறிப்பிட்டிருக்கின்றீர்கள். இன்றைக் கிருக்கிற விலைவாசியிலே 15 ரூபாய் என்பது போதாது.



மத்திய அரசு கொண்டு வந்திருப்பதைப்போல குறைந்தபட்சக் கூலியை 20 ரூபாயாக உயர்த்துவதற்கு அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இந்த 67 தொழில்களிலே, குறிப்பாகப் பெண்கள் வேலை செய்யக் கூடிய ரெடிமேட் ஆடை தயாரிக்கக் கூடிய தொழில்களுக்கு அரசு குறைந்தபட்சக் கூலி அறிவித்தது. ஆனால் அதன் அதிபர்கள் கோர்ட்டுக்குச் சென்று குறைந்தபட்சக் கூலி செயல்படுத்துவதைத் தடுத்திருக்கின்றார்கள்.

அதேபோன்று பல்வேறு தொழில்களில்— இன்றைக்கு லெதர் பூட்ஸ் தயாரிக்கக்கூடிய தொழிலிலே குறைந்தபட்சக் கூலி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதனையும் அதன் அதிபர்கள் தடுத்திருக்கின்றார்கள்.

அதேபோன்று கன்னியாகுமரி மாவட்டத்திலே 'கேஷீ' தயாரிக்கக்கூடிய தொழிலிலே நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகளில் பணிபுரியக்கூடிய தொழிலாளர்களுக்கு நியாயமாக வழங்குவதற்கு அரசு நிர்ணயித்த குறைந்தபட்சக் கூலியை அங்கே இருக்கக்கூடிய தொழில் அதிபர்கள் நிறுத்தியதோடு அங்கே உள்ள தொழிலாளர் துறை அதிகாரிகள் அதை விரைவாக அமல்படுத்துவதற்குத் தயங்குகிறார்கள் என்பதையும் நான் வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, அங்கே இருக்கிற ஒரு குறிப்பிட்ட சங்கத்தை மட்டும் அனுமதித்துவிட்டு, மற்ற ஐ.என்.டி.யூ.சி. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற சங்கங்களைப் புறக்கணித்து அங்கு இருக்கக் கூடிய ஆலை நிர்வாகமும், மற்ற கம்யூனிஸ சங்கங்களும் கூட்டுபேரம் செய்து அங்கே தொழிலாளிகளைச் சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலை தவிர்க்கப்பட வேண்டும். அது தவிர்க்கப்படுவதோடு மட்டுமல்லாமல்.....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. ஜி. பழனிசாமி.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலை நிர்வாகமும், கம்யூனிஸ சங்கங்களும் கூட்டுபேரம் செய்து தொழிலாளர்களைச் சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று எந்த ஆதாரத்துடன் பேசுகிறார்?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> உங்கள் மீது ஏதாவது குறைபாடு என்றால் கேளுங்கள். (குறுக்கீடு) அதற்குப் பிறகு நீங்கள் பதில் சொல்லும்போது சொல்ல வேண்டும். இந்த மாதிரி ஒவ்வொரு தடவையும் எழுந்திருக்கக்கூடாது. (குறுக்கீடு) அவர் 'யீல்டு' பண்ணவில்லை என்கிறபோது நீங்கள்

எழுந்திருக்க முடியாது. ஆதாரம் உண்டா இல்லையா என்பதை நீங்கள் பேசும்போது கேளுங்கள். (குறுக்கீடு) இப்போது அவரையே அனுமதிக்கவில்லை என்கிறபோது எப்படி உங்களை அனுமதிப்பது?

திரு. கோ. காளன் : ஒருதலைப்பட்சமாக இல்லாமல் இந்தத் தொழிலிலே சம்பந்தப்பட்ட எந்த சங்கம் இருந்தாலும் அனைத்துச் சங்கங்களையும் அழைத்துப் பேசி, சமரசப் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்த வேண்டுமே தவிர, தனக்கு வேண்டிய சங்கத்தை மட்டும் வைத்து ஒப்பந்தம் போடுவதோ, பேச்சுவார்த்தை நடத்துவதோ தொழில் தகராறு சட்டவிதிகளின்படி தவறானது, சட்ட விரோதமானது என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். எனவே, இப்படி பாரபட்சம் காட்டாமல், தொழிலாளர்களுக்கு நியாயம் வழங்கக்கூடிய வகையில், குறைந்தபட்சக் கூலியை நிர்ணயிக்கக்கூடிய வகையில், அதனை அமல்படுத்தக்கூடிய வகையில் அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இன்றைக்கு குறைந்தபட்சக் கூலி நிர்ணயிக்கின்ற இடங்களில், அது அமல்படுத்தப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. அதையெல்லாம் தொழிலாளர் துறை மூலமாக, பேக்டரி இன்ஸ்பெக்டர்கள் மூலமாக கண்டிப்பாக அமல்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, டேனரி தொழிலாளர்களுக்கு அரசு குறைந்தபட்சக் கூலி நிர்ணயித்திருக்கிறது. டேனரி தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி என்று சொல்லுகின்றபோது, இன்றைக்கு புதிது புதிதாக, சிறிய சிறிய டேனரி தொழிற்சாலைகள் எங்கு பார்த்தாலும் வந்து கொண்டிருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட நிலையிலே அங்கே குறைந்தபட்சக் கூலி என்று டேனரி தொழிலாளர்களுக்கு வழங்க மறுக்கின்றார்கள். பெருவாரியான தொழிலாளர்களை காண்டிராக்ட் லேபர், கேஷுவல் லேபர், பீஸ் ரேட் லேபர் என்ற முறையில் வைத்துக் கொண்டு, நிர்ணயிக்கப்பட்ட நிரந்தரத் தொழிலாளர்களைக் குறைவாக வைத்துக் கொண்டு 50 பேர்களுக்கும் கீழே கணக்குக் காட்டி, குறைந்தபட்சக் கூலி கொடுப்பதற்கு மறுத்து வருகின்றார்கள். தொழிலாளர்களைச் சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அந்த நிலைமை இல்லாமல் மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அரசும் கண்டிப்பாக எந்த ஒரு டேனரி தொழிலாக இருந்தாலும் அரசு நிர்ணயித்த கூலியைத் தொழிலாளர்களுக்கு வாங்கிக் கொடுப்பதற்கும், அவர்கள் அந்தக் கூலியைப் பெறுவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்



தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோன்று அந்த டேனரி தொழிலாளர்களுக்கு வைத்திய வசதியோ, ப்ராவிடண்ட் ஃபண்ட் வசதியோகூட கிடைக்காமல் தடுத்து வருகிறார்கள். அந்த நிலைமையைப் போக்க நீங்கள் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்து அந்தச் சட்டப் பாதுகாப்பை அவர்களுக்குப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11—25

அதேபோன்று சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் சிறு தொழில்களைப் பொறுத்தவரையில் 10-லிருந்து 25 ஆகவும், 20-லிருந்து 50 ஆகவும் உயர்த்தி சிறு தொழில்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கிற வகையில் பேக்டரி ஆக்டிலே இருந்து அவர்களுக்கு விதி விலக்குக் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். ஆனால் அதற்கான சட்டம் இன்னும் கொண்டு வரப்படவில்லை. ஒரு வேளை மாநில அரசு அதனை இயற்றுவதற்கு ஏதேனும் தடை இருந்தாலும், மத்திய அரசினிடத்திலே இதைப்பற்றி எடுத்துச் சொல்லி விரைவாக அந்தச் சட்ட விதியைக் கொண்டு வந்து ஏராளமான சிறு தொழில்கள் பெருகுவதற்கு, அதில் தொழிலாளர்களை ஈடுபடுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

பெரிய தொழில் நிறுவனங்களைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே தமிழக அரசு தொழிலாளர்களுக்கு வீட்டு வாடகை வழங்குவது சம்பந்தமாக சட்டம் கொண்டு வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் அந்தச் சட்டம் இயற்றப்படவில்லை. இன்றைக்கு ஏறி வரக்கூடிய விலைவாசியில் வீடுகள் கிடைப்பது கஷ்டமாக இருப்பதோடு வீட்டு வாடகையும் இன்றைக்கு வெகுவாக உயர்ந்து கொண்டு வருகிறது. அத்தகைய நிலையில் அரசே வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொண்டிருந்தாலும்கூட சில பெரிய நிறுவனங்களில் நிச்சயமாக வீடுகளைக் கட்டித் தர முடியும். தொழிற்சாலையின் ஆரம்பக் காலத்தில் அதாவது எந்தவொரு பஞ்சாலையை எடுத்துக் கொண்டாலும், சர்க்கரை ஆலையை எடுத்துக் கொண்டாலும், சிமெண்ட் ஆலையை எடுத்துக் கொண்டாலும் வீடுகள் கட்ட வேண்டுமென்று நியதி இருந்தது. அந்த முறையை மீண்டும் பின்பற்றி 500 பேர்களுக்கு மேலே வேலை செய்யக்கூடிய தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் தொழிற்சாலை நிர்வாகத்தினரே தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டும் என்று சட்டத்தைக் கண்டிப்பாக இயற்ற வேண்டும். இல்லையென்று சொன்னால் 25 சதமானம் அவர்களுடைய சம்பளத்தில் வீட்டு வாடகை

[திரு. கோ. காளன்] [1992 ஏப்ரல் 20

யாகக் கண்டிப்பாகச் சேர்த்துத்தர வேண்டுமென்று தமிழக அரசு சட்டம் இயற்ற வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று லேபர் கோர்ட்டுகளுக்கும், ட்ரிபுனலுக்கும் வழக்குகள் செல்கிறபோது தொழிலாளர்களுக்கு நீதி கிடைப் பதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. இதற்கு முக்கிய மான காரணம் அங்கே இருக்கக் கூடிய நீதிபதிகளின் ஸ்தானங் கள் எப்போதுமே காலியாக இருந்து வருவதுதான். இன் றைக்குக் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் அங்கே நீதிபதி யாக அமர்த்தப்படக் கூடியவர்களுக்குச் சரியான பதவி உயர்வு வருவதில்லை அல்லது அவர்களுடைய ப்ரமோஷன் பாதிக்கப் படுகிறது என்று அங்கே, தொழிலாளர் நீதிமன்றங்களுக்கும், ட்ரிபுனலுக்கும் வரக் கூடிய நீதிபதிகள் கருதுகிறார்கள். அந்த நிலைமை இல்லாமல், அவர்களுடைய ப்ரமோஷன் பாதிக்கப் படாமல் அவர்களுடைய கௌரவம் காப்பாற்றப்படக்கூடிய வகையில் அரசு தக்க கவனம் செலுத்தினால் நிச்சயமாக நீதிபதி கள் அங்கே வருவதைத் தவிர்க்காமல், அங்கே நீதிபதி ஸ்தானங் கள் காலியாக இல்லாமல் பார்த்துக் கொண்டு அதன்மூலம் தொழிலாளர்களுக்கு விரைவாக நீதி வழங்கக் கூடிய நிலையும் ஏற்படும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதே போன்று ஈ.எஸ்.ஐ. திட்டம். ஈ.எஸ்.ஐ. திட்டத் திற்கு தொழிலாளர்களும், நிர்வாகமும் பணம் செலுத்துகிறார் கள். ஆனால் அயனாவரத்திலும், மற்ற மற்ற பகுதிகளிலும் இருக்கக் கூடிய ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் அரசு பொது மருத்துவமனையை விட மிக மோசமாக இருக்கின்றன. கட்ட ணம் செலுத்தக்கூடிய இடத்தில் பொது மருத்துவமனையை விட சரியான மருத்துவ வசதி நிச்சயமாகக் கிடைக்கவேண்டும். எனவே அந்த வகையில் அரசு கவனம் செலுத்தி ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையை நன்கு பராமரிக்க வேண்டும். அங்கே வழங்கக்கூடிய மருந்துகளைத் தரமானதாக வழங்குவதற்கும் அந்த மருத்துவமனையை நல்ல முறையில் பாதுகாப்பதற்கும் மற்ற மருத்துவமனைகளுக்கு அவை ஒரு முற்போக்காக இருக்கிற வகையில் பார்த்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11–30

அதேபோன்று கட்டிடத் தொழிலாளர்கள். தமிழகத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக 25 இலட்சம் பேர் இன்றைக்குக் கட்டிடத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்தில் ஒரு சட்டம் கட்டிடத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக 1982–ஆம் ஆண்டு



..2 ஏப்ரல் 20] [திரு. கோ. காளன்]

உடல் உழைப்பாளர் பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரில் கொண்டு வரப்பட்டது. ஆனால் அதை மத்திய அரசு அங்கீ கரிக்காமல் இருந்து வருவதால் அதை உடனடியாக அமுல் படுத்தவில்லை. அதை விரைவுபடுத்தி கட்டிடத் தொழி லாளர்களுடைய பாதுகாப்புக்காக அந்தச் சட்டத்தை உடனடி யாக அமுல்படுத்தும் வகையிலே கொண்டு வந்து கட்டிடத் தொழிலாளர்களுக்கு வைத்திய வசதி, கட்டிடத் தொழிலாளர் களுக்கு பி.எப் வசதி, கட்டிட தொழிலாளர்களுக்கு பிரசவக் கால வசதிகள், மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற வற்றை எல்லாம் கொண்டு வந்து ஏழை கட்டிடத் தொழி லாளர்களைப் பாதுகாப்பதற்கு இந்த அரசு உரிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று மேட்டூர் மில் பல்வேறு போராட்டங் களுக்குப் பிறகு திறக்கப்பட்டிருக்கிறது. அந்த மில்லிலே இன்றைக்கு இருக்கிற நிர்வாகம் ஏறக்குறைய 17 கோடி ரூபாயை சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியாவுக்கு கடனாக வாங்கியதை திருப்பி கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அதை திருப்பிக் கொடுப்பதற்கு வசதியில்லாததனால் இன்றைக்கு தமிழக அரசு கைத்தறித் துறையின் மூலம் அந்த மில்லை ஏற்று நடத்த இருக்கிறார்கள். அங்கே 1 கோடியே 80 லட்சம் ரூபாயை தமிழக அரசு அனுமதித்தால்தான் அந்த மில் நடை பெற முடியும். இதனால் 2,500 தொழிலாளர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். தாய் உள்ளம் கொண்ட தமிழக முதல்வர் அவர்கள் அந்த நிதியை உடனடியாக ஒதுக்கிக் கொடுத்து அந்த மில் நல்ல முறையில் இயங்குவதற்கும் தொழிலாளர் களைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று சதர்ன் ஸ்ட்ரக்சரல்ஸ் நிர்வாகத்தில் 1,500 பேர் வேலை செய்கிறார்கள் அது தனியாரிடம் விடப் படுவதாக தெரிகிறது. ஏற்கெனவே தனியாரிடம் இருந்ததை தான் அரசு மேற் கொண்டிருந்தது. இன்றைக்கு அதை அப்படி தனியாரிடம் விடாமல் ஒரு 'ஜாயின்ட் செக்டார்' ஆக ஏற் படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, கன்னியாகுமரியில் இருக்கக் கூடிய அரசு இரப்பர் கழகத்திலே இருக்கிற அதிகாரிகள் பல்வேறு ஊழல் நடவடிக்கை களில் ஈடுபடுவது மட்டுமல்லாமல் ரப்பர் பால் கூட அடிக்கடி காணாமல் போகிற சூழ்நிலை இருக்கிறது. அதோடு மட்டு மல்லாமல் அதை சுட்டிக்காட்டக் கூடிய, ஊழலை கண்டிக்கக் கூடிய அனைத்து இந்திய அண்ணா தி.மு.க., ஐ.என்.டி.யு.சி

போன்ற சங்கங்களை, சங்க நிர்வாகிகளை அந்த நிர்வாகம் பழிவாங்கி வருவதையும், அங்கே பல போராட்டங்கள் நடைபெறுவதையும் பார்க்கிறோம். அந்த நிலைமை இல்லாமல் ஒரு குழுவை அமைச்சர் அவர்கள் அனுப்பி அங்கே என்ன நடைபெறுகிறது என்பதை அறிந்து அந்த நிர்வாகத்தை பாதுகாப்பதற்கும், ஊழலை களைவதற்கும் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கும் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

கடைசியாக ஒன்றே ஒன்று. தொழிலாளர் நல வாரியத்திதிற்கு குழு நிர்வாகமும், தொழிலாளர்களும் சந்தா செலுத்துகிறார்கள். இதன் மூலமாக பல்வேறு மையங்கள், பல்வேறுதையற் பயிற்சிகள், குழந்தைகள் காப்பகங்கள் எல்லாம் நடத்துகிறார்கள். இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரையில், அம்பத்தூரிலே சமீபத்திலே மொத்தமாக எஸ்டெட் பூராவும் சேர்த்து ஒரு காப்பகம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதே போன்று எல்லா தொழில் சங்கங்களிலும் குழந்தைகள் காப்பகத்தை தொழிலாளர் நல வாரியத்தின்மூலம் ஏற்படுத்தி நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கெங்கு எல்லாம் இத்தகைய காப்பகங்கள் எல்லாம் இல்லையோ அந்தப் பகுதிகளில் எல்லாம் இருக்கக் கூடிய பெண் தொழிலாளர்களுக்கு குழந்தைகள் காப்பகத்திற்காக ஒரு அலவன்ஸ் பெண் தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கு இந்த அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று தொழிற்சங்கத் தலைவர்கள் தங்குவதற்காக தேனாம்பேட்டையில் ஒரு கெஸ்ட் ஹவுஸ் கட்டப்பட்டு இருக்கிறது. அங்கே மிகக் குறைந்த வசதி தான் இருக்கிறது. அந்த வசதியையும் மேம்படுத்துவதற்கும், அதிகப்படுத்துவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று தொழிலாளர் நல வாரியத்தின் மூலமாக பல்வேறு ஓய்வு இல்லங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அங்கே சமையல் சாமான்கள் கிடையாது. பேன்கள் ஓடுவதில்லை. வேறு ஏதோ சவுண்ட் வந்து கொண்டிருக்கிறது. அங்கே ஹீட்டரை போட்டால் எப்போதும் ஷாக் அடித்துக் கொண்டு இருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட நிலைமைகள் இல்லாமல் தொழிலாளர் நல வாரியத்தின் மூலமாக கட்டக்கூடிய இந்த ஓய்வு இல்லங்கள் தொழிலாளர்களுக்கு சீராகவும், நல்ல முறையிலும், நன்கு பராமரிக்கக் கூடிய வகையிலும் அதற்குரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்றும், திருத்தியமைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். ஜி. வேணுகோபால்.



முற்பகல் 11-35

திரு. என். ஜி. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இன்று தொழிலாளர் நல மானியக் கோரிக்கையிலே பேச சந்தர்ப்பம் கொடுத்த உங்களுக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சாதாரணத் தொண்டனாக இருந்த என்னை 1984 ஆம் ஆண்டு மாவட்ட தொழிற்சங்க செயலாளராக அறிமுகம் செய்து, இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினராகவும் ஆக்கியதோடு மட்டுமல்ல, எண்ணற்ற தொழிலாளர்களின் பிரதிநிதியாகவும் சட்டமன்றத்திலே அவர்களின் சார்பில் இன்று என் குரலை ஒலிக்கச் செய்த கழக காவல் தெய்வம், என் இதய தெய்வம், கோடானு கோடி தமிழ் நெஞ்சங்களிலே கொலுவீற்றிருப்பவரும், தமிழக வரலாற்றிலேயே பல சாதனைகளைப் படைத்திட்ட 10-வது சட்டமன்றத்தை வலிவோடும், பொலிவோடும் அமைத்து, இந்த அரசை நடத்தி வரும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அமர்ந்துள்ள அந்தத் திசை நோக்கி வணங்கி, என் உரையைத் துவக்குகிறேன்.

யார் யாரோ அறிவிப்பு கொடுத்தார்கள், மூடிய ஆலையைத் திறப்போம் என்று. ஆனால் உண்மையில் மூடிய ஆலையை, குறிப்பாக ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் தொழிற்சாலையை, பல வருடங்களாகத் தீராத பிரச்சினையை, அங்கு தீர்த்து வைத்து, அந்தத் தொழிற்சாலையைத் திறந்து வைத்த இதய தெய்வம் தொழிலாளர்களின் தெய்வமாக விளங்கி வருகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை எண்ணற்ற தொழிலாளர்களின் சார்பில் வாழ்த்தி வணங்குகிறேன்.

அதைப்போல, தமிழ்ப் புத்தாண்டிலே பின்னி மில் திறக்கப்படும் என்று அறிவிப்பு ஒன்றினை இந்த மாமன்றத்திலே அறிவித்தார்கள். அதேபோல் அவருடைய பொற்கரங்களால் அந்த மில்லைத் திறந்து, தொழிலாளர்களின் காக்கும் கரங்களாக இன்று விளங்கிக் கொண்டிருக்கின்றார்கள். யார் யாரோ சொன்னார்கள், சொல்வதைத் தான் செய்வோம், செய்வதைத் தான் சொல்வோம் என்று. ஆனால் அது வெறும் கோஷமாகப் போய் விட்டது. ஆனால் இந்தச் சொற்றொடர் எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்குத் தான் பொருந்தும் என்று சரித்திரம் இன்று நிரூபித்துக் கொண்டுள்ளது.

அடுத்து, என்னுடைய தொகுதியில் பி.எச்.இ.எல். என்ற மத்திய அரசு நிறுவனம் இருக்கிறது. அதற்கு 1993 வரை தான் ஆர்டர் உள்ளது. அதற்கு மேல் என்ன நிலை ஏற்படுமோ என்ற அச்ச உணர்வு இன்றைக்கு ஏற்பட்டுள்ளது. இது மத்திய அரசு நிறுவனமாக இருந்தாலும் சுமார் 3,000 தொழிலாளர்கள்

[திரு. என். ஜி. வேணுகோபால்] [1992 ஏப்ரல் 20

வேலை செய்யக் கூடிய இந்த நிறுவனத்தைக் காக்க வேண்டிய பொறுப்பு நமக்குள்ளதால், நமது அரசு தலையிட்டு ஆவன செய்ய வேண்டுமென்றும், 3,000 தொழிலாளர்களையும், அவர்களுடைய குடும்பங்களையும் காக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே நமது முதல்வர் அவர்களுக்கு இது குறித்து பி.எச்.இ.எல். அண்ணா தொழிற் சங்கத்தின் மூலமாக ஒரு மனுவினைக் கொடுத்துள்ளது என்பதையும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அடுத்து 1986 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9 ஆம் தேதி மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் சுமார் 100 கோடி செலவில் காட்பாடியில் துவக்கப்பட்ட வெடி மருந்துத் தொழிற்சாலை கடந்த 6 ஆண்டுகளாக நஷ்டத்தில் இயங்கி வந்த காரணத்தால், ரூ. 23 கோடி நேற்றையவரை அக்யூமிலேடட் லாசாக ஏற்பட்டிருக்கிறது. தற்போது நம்முடைய இதய தெய்வம் அவர்களின் புதிய தொழிற் கொள்கை காரணமாக, அவர்களுடைய தொலை நோக்குப் பார்வை காரணமாக, புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக அந்த நிறுவனம் லாபம் ஈட்டத் தொடங்கியுள்ளது. தொழிலாளர்கள் தற்போது நிம்மதி அடைந்துள்ளார்கள். இந்த நேரத்தில் நமது அரசை நான் ஒன்று கேட்டுக்கொள்ளக்கடமைப் பட்டிருக்கிறேன். 23 கோடி நஷ்டத்தை ஈடு செய்ய, தற்போது வட்டிப் பணம் கட்டுவதற்கே சரியாக உள்ளது. எனவே அருள்கூர்ந்து மேற்படி 23 கோடியை மூலதனப் பங்குகளாக அறிவித்து, தொழிலாளர்களை வாழவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலே நவ்லாக் என்ற இடத்திலே தென்னை வித்து பண்ணை இருக்கிறது. அதிலே சுமார் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்டு தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு பணி நிரந்தரம் செய்து தரப்படவில்லை. அவர்களை சி.எல்.ஆக வைத்துள்ளார்கள். பொங்கல் கருணைத் தொகை அனைத்து அரசு அலுவலர்கள், எல்லாவிதமான பொதுத் துறை நிறுவனங்கள், டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்கள் இப்படி பல்வேறு தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்டது. ஆனால் மேற்படி பண்ணையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே உடனடியாக இவர்களுக்கு பொங்கல் கருணைத் தொகை வழங்க வேண்டுமென்றும், அவர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பீடித் தொழிலாளர்கள் பிரச்சினையை பொறுத்தவரையில் இன்று இருவகையாக பிரித்துள்ளதால் தொழிலாளர்கள் மிகுந்த வேதனை அடைந்து வருகிறார்கள். காரணம் இன்று பிராஞ்ச் முறையை பின்பற்றுதவன் மூலம் பல அநீதிகள் இழைக்கப்படுகின்றன. தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதில்லை. இதன் காரணமாய் பல்வேறு சலுகைகள் கிடைப்பதில்லை, பிரா்ஞ்ச் முறையின் காரணமாகக் குழந்தை



1992 ஏப்ரல் 20] [திரு. என். ஜி. வேணுகோபால்]

தொழிலாளர்களும் இதில் ஈடுபடுகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை இளமையிலேயே பாதிக்கப்படுகிறது. இதையெல்லாம் களைய நமது அரசு பீடித் தொழிலாளர்களுடைய வாழ்க்கை முன்னேற சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்து, நமது அரசு தொழிலாளர்களைக் காக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் எனது தொகுதியில் பல ஆயிரக்கணக்கான பீடித் தொழிலாளர்கள் இருப்பதால், முன்னுரிமை அளித்து வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

முற்பகல் 11-40

சமீபத்திலே தொழில் வல்லுனர்கள் ஒரு ஆய்வை பல நலிவடைந்த தொழிற்சாலைகளில் மேற்கொண்டதன் விளைவாக, ஆய்வுகளின் முடிவு என்னவென்றால், அந்தத் தொழிற்சாலைகள் நலிவடைந்ததற்குக் காரணம் தவறான நிர்வாகமே என்றும் மீதமுள்ள 20 சதவீத காரணம் தொழிலாளர்களின் ஒத்துழைப்பு சரியாக இல்லை என்ற வகையில் உண்மையைக் கண்டறிந்தார்கள். அப்படி என்று சொன்னால், 80 சதவீதம் அளவுக்கு தவறான நிர்வாகம் காரணமாகத்தான் அப்படி தொழிற்சாலைகள் நலிவடைந்திருக்கின்றன என்று நாம் அறியமுடிகிறது. இன்றையதினம் பல தொழிலாளர் நலச் சட்டங்கள் இருந்து வருகின்றன. ஆனால் நடைமுறையில் அந்தச் சட்டங்கள் செயல்படுத்தப்படுவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. உதாரணத்திற்கு ஒன்றை இங்கே சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். 480 நாட்கள் ஒரு தொழிலாளி தொடர்ந்து வேலை செய்தால் அந்தத் தொழிலாளியை பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்ற சட்டத்தை நமது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு கொண்டுவந்தது. ஆனால் தற்போது என்ன நடைபெறுகிறது என்றால் 480 நாள் வேலை செய்ய அந்தத் தொழிலாளியை அனுமதிப்பதில்லை. 3 மாதத்திற்கு ஒருமுறை பிரேக் கொடுத்து வீட்டுக்கு அனுப்பிவிட்டு ஒரு மாதம் கழித்து அந்தத் தொழிலாளியை மீண்டும் வேலைக்கு அமர்த்துவதன் மூலம் வேலை தொடர்ச்சியாகக் கொடுக்கப்படுவதில்லை. அதாவது கன்டின்யூட்டி ஆப் சர்வீஸ் அடிப்படையில் இல்லாமல் 3 மாதத்திற்கு ஒரு முறை சர்வீஸ் பிரேக் செய்கிறார்கள். ஆகவே அவர்களது கன்டின்யூட்டி ஆப் சர்வீஸ் கணக்கில் எடுக்கப்படுவதில்லை. இதன் காரணமாக அவனால் 480 நாட்கள் தொடர்ச்சியாக வேலை செய்ய முடிவதில்லை. ஆகவே பர்மனென்ட் தொழிலாளியாக அவனை ஆக்குவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருந்து வருகிறது. அதுமட்டுமல்ல, இன்னொன்றையும் நிர்வாகத்தில் உள்ளவர்கள் செய்கிறார்கள். அதாவது கான்ட்ராக்ட் லேபர் முறை.

புதிய தொழிற்சாலை ஆரம்பிக்கும்போது ஒரு சில டெக்னிக்கல் லேபர் மாத்திரம் பணிக்கு எடுத்துக்கொண்டு பின்னர் ஏனைய தொழிலாளர்களை காண்ட்ராக்டர் ஒருவரை நியமித்து அவர்கள் மூலம் ஆட்களை எடுத்து, பேக்டரி ரோல்-ல் இல்லாமல் அந்தத் தொழிலாளர்களை வேலை வாங்குவதால், அந்தத் தொழிலாளிக்கு நேரடியாக வரவேண்டிய உரிமைகள் கிடைக்கவில்லை இன்னும் விளக்கிச் சொல்ல வேண்டுமென்றால், பி.எப்., ஈ.எஸ்.ஐ., போனஸ், கிராசுட்டி போன்றவைகள் எல்லாம் கிடைக்கவிடாமல் மறுக்கப்படுகின்றன. காண்ட்ராக்ட் லேபர் தடைச்சட்டம் போன்றவைகள் காண்ட்ராக்ட் லேபர்களுக்காக போட்டிருந்தாலும், அவைகளை அவர்கள் செயல்படுத்துவதில்லை. பேக்டரி இன்ஸ்பெக்டர்கள் சரியாக தொழிற்சாலைகளுக்குச் சென்று சட்டப்படி நடவடிக்கைகள் மேற்கொள்வதில்லை. உதாரணத்திற்கு சொல்லவேண்டுமென்றால், ஒரு காண்ட்ராக்டரிடம் 50 பேர் வேலை செய்தால், அவருடைய ரோலில் 10 பேர்தான் இருப்பார்கள். மீதம் 40 பேர் அவருடைய புத்தகத்தில் இடம் பெற மாட்டார்கள். அதனால் அந்தத் தொழிலாளிக்குச் சட்டப்படிக் கிடைக்க வேண்டிய சலுகைகள் கிடைப்பதில்லை. இந்த நேரத்தில் இன்னொன்றையும் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். பல தொழிற்சாலைகளில் தொழிற்சாலையின் நிலை ஆணைப்படி உரிமைகளைத் தொழிலாளர்களுக்கு வழங்குவதில்லை. 250 தொழிலாளர்கள் ஒரு ஆலையில் பணிபுரிந்தால் கேன்டீன் வசதி செய்து தரலாம் என்று விதி இருக்கிறது. அப்படி ஆக்குவதற்குப் பதிலாக பயிற்சியாளர்கள், காண்ட்ராக்ட் லேபர்கள் என்று அவர்களைப் பிரித்து விடுகிறார்கள். இதனால் 250 தொழிலாளர்கள் என்ற எண்ணிக்கையை வரவிடாமல் செய்கின்ற காரணத்தால், பர்மனென்ட் லேபர் இல்லை என்ற காரணம் காட்டி, கேன்டீன் வசதியை மறுத்து விடுகிறார்கள். இதனால் கேன்டீன் வசதியில்லாமல் தொழிலாளர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே தொழிலாளர்கள் எந்த நிலையில் இருந்தாலும், டிரைனீஸ் மற்றும் லேபர் காண்ட்ராக்ட் என்று எந்த வகையில் இருந்தாலும் அவர்கள் தொழிலாளர்கள் தான் என்ற கணக்கில் அவர்களுக்கு உள்ள உரிமையைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் தொழிலாளர் நலச் சட்டத்தின் திருத்தங்கள் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட பணியாளர்கள், பயிற்சியாளர்களாக மற்றும் காண்ட்ராக்ட் தொழிலாளர்களாக இருந்தாலும் தொழிலாளர்களாக பணியாற்றும் இடங்களில் கேன்டீன் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, தொழிலாளர் நீதி மன்றங்கள் மாவட்டத்திற்கு ஒன்று நிறுவவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்திற்கு அரசு ஆணை வழங்கப்பட்டும், கட்டிடம் இராணிப்பேட்டையிலேயே இருக்





கிறது என்று தெரிவிக்கப்பட்டும் இதுவரை மாவட்ட தொழிலாளர் நீதிமன்றம் திறக்கப்படவில்லை. எண்ணற்ற வழக்குகள் தேங்கியுள்ள காரணத்தால், உடனடியாக நடவடிக்கை எடுத்து இராணிப்பேட்டையில் தொழிலாளர் நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொண்டு, இந்த அளவில் எனக்குப் பேச வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

முற்பகல் 11—45

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் குறித்த மானிய கோரிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்தினைக் கூற விரும்புகிறேன்.

இன்றைக்கு தொழிலாளர்—தொழிற்சாலை என்கின்ற அமைப்பின் கீழே இந்தியாவிலேயே முதல் இடத்தை பெற்றிருப்பது மகாராஷ்டிரா மாநிலம்; இரண்டாவது இடத்தை பிடித்திருக்கிறது தமிழ்நாடு. சுமார் ஒன்னேகால் கோடி சிறு தொழில்கள் இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கின்றன. குறிப்பாக அனுமதி பெற்றிருக்கிற சிறு தொழில்கள் அவை. அனுமதி இல்லாமல் முப்பது இலட்சத்திற்கு மேற்பட்ட சிறு தொழில்கள் ஆங்காங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது அரசின் கணக்குக்கு வராத தொழிற்சாலைகள். இருந்தாலும் அதிலே பணியாற்றக்கூடிய ஆண், பெண் தொழிலாளர்கள் மற்றும் சிறுவர்கள் முதற்கொண்டு சேர்த்துப் பார்த்தால் தமிழ்நாட்டில் ஒன்றே முக்கால் கோடிக்கு மேலாக தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்கள் இன்றைக்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்த கணக்கு அரசுக்கு வந்திருக்காது என்று நான் கருதுகிறேன். காரணம், அரசு மூலமாக நிதி பெற்று தொழில் நடத்தக்கூடிய ஆலைகளிலேகூட அரசாங்கத்தின் கணக்குப்படி முழுமையாக இல்லை. அதற்குக் காரணம், முழுமையாக அரசு மூலமாக நிதிகளைப் பெற்று நடத்தக்கூடிய தொழிற்சாலைகளை, இன்றைக்கு இருக்கக்கூடிய நிதி நிறுவனங்கள், அந்த தொழிற்சாலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா, தொழிலாளர்கள் வேலை பார்க்கிறார்களா, அதிலே என்ன உற்பத்தி ஆகிறது, அதிலே நாட்டினுடைய நலனுக்கு எந்த அளவிற்கு பயன் ஏற்படும் என்பதை எல்லாம் அரசு அதிகாரிகள் கண்காணிக்கிறார்களா என்று கேட்டால், பெரும்பகுதியிலே இல்லை.

ஏனென்றால், பல்வேறு இடங்களிலே நான் சென்று பார்க்கிறபோது, தமிழகத்திலேகூட, சிறுதொழில்களை நடத்துவதற்காக அமைக்கப்பட்ட 1,200–க்கு மேற்பட்ட தொழிற்சாலை ஷெட்டுகள் முழுமையாக பயனற்ற நிலையிலே தொடர்ந்து தமிழகத்திலே வந்திருக்கின்றன. இது அரசாங்கத்தின் கணக்கு. ஆனால் ஷெட்டுகள் எதற்காக கட்டப்பட்டன. ஏன் நிதி வழங்கப்பட்டது, ஏன் அவைகள் செயல்படவில்லை. அதற்கான காரணம் என்ன என்பதை இதுவரையில் அரசாங்கம் ஆய்வு செய்யவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் ஒட்டுமொத்தமாக இண்டஸ்ட்ரியல் ஷெட்ஸ் எல்லாம் செயலற்று இருக்கின்றன என்று பொதுவாக சொல்லுகிறார்கள். எந்தெந்த இடத்திலே, எந்தெந்த ஊரிலே அந்த ஷெட்டுகள் காலியாக இருக்கின்றன என்ற விவரத்தைச் சொன்னால் அதற்கு விளக்கம் அளிக்க வாய்ப்பாக இருக்கும்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது கணக்குக் குழுவின் சார்பாக இந்த அவையில் அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதிலே விவரங்கள் எல்லாம் வந்திருக்கின்றன. தஞ்சாவூரிலே பல்வேறு ஷெட்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன. சேலத்திலே கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் அங்கே எல்லாம் தொழிற்சாலைகள் என்பது முழுமையாகச் செயல்படாமல் ஷெட்டுகள் இருக்கின்றன. அப்படி பார்க்கிறபோது 900 ஷெட்டுகள் காலியாக உள்ளதாகச் சொல்லுகிறார்கள். மொத்தமாக எடுத்துக்கொண்டால் 1,200 ஷெட்டுகள் கட்டப்பட்டு செயல்படாமல் இருக்கின்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதை கடமையாகக் கருதுகிறேன்.

அதே நேரத்தில் எத்தனையோ சிறு தொழில்கள் தமிழகத்திலே நலிவுற்ற நிலையிலே இருக்கின்றன. காரணம். மீண்டும் செயல்படுத்துவதற்கு முடியாத சூழ்நிலையில் இருக்கின்றன. திரும்பவும் சிறுதொழில்களை நடத்துவதற்கு அரசிடத்திலே அவர்கள் கடன் பெற முடியாமல், அதற்கு மாறாக மார்வாடியிடத்திலே கடன்களை வாங்கி தொழில்களை நடத்தக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்றது. அப்படி அவர்கள் கடன் வாங்குகிறபோது, அரசாங்கத்திலே இருந்து



கடன் பெற்றபோது 13 சதவீதம், 14 சதவீத வட்டிக்குக் கடன் வாங்கியிருக்கிறார்கள்; ஆனால் இன்றைக்கு தனியாரிடம் கடன் வாங்கும்போது 25 சதவீதம் வட்டி என்று சொன்னால் எப்படி அந்த தொழில்கள், நீங்கள் எதிர்பார்க்கும் தொழில்கள், தனியார் நடத்தும் தொழில்கள், சிறு தொழில்கள் தமிழகத்திலே முன்னேற்றத்திற்கு வரும்? தனியாரிடத்திலே முழுமையாக இந்த தொழில்களை இன்றைக்கு நம்முடை அரசு—மத்திய அரசாக இருந்தாலும், மாநில அரசாக இருந்தாலும் ஊக்குவித்து, தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து, தமிழகம் தொழில் துறையிலே முன்னுக்கு வர வேண்டுமென்று சொல்கிற அரசு இப்படிப்பட்ட தொழில்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும்; நிதிகளை வழங்க வேண்டும்; அதன் மூலமாக அதிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் கூட பாதுகாக்கப்பட வேண்டும். இன்றைக்கு பல்வேறு இடங்களில் சிறு தொழிற்சாலைகளில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் கோரிக்கை வைத்து, நாட்டிலே ஏறிவருகிற விலைவாசிக்கு ஏற்றவாறு, அவர்களுடைய வாழ்க்கைநிலை, குடும்பநிலைக்கு ஏற்றவாறு தங்களுடைய சம்பளத்தைக் கூட்ட கோரிக்கை மனுக்களைக் கொடுப்பதற்கு அனுமதிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அனேகமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் கூட....

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடத்திலும் தொழிலாளர்கள் தங்களுடைய உரிமைக்காக கோரிக்கை கொடுப்பது தடுக்கப்படவில்லை. அது எந்த இடத்தில் என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரத்தோடு கூறுவார்களா என்பதைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் — நான் பின்னால் சொல்ல வருகிறபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இடையிலே குறுக்கிட்டார்கள் — நம்முடைய ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ். பின்னி தொழிற்சாலை போன்று ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றக் கூடிய தொழிற்சாலைகளில் பேச்சு வார்த்தை மூலமாக தீர்வு கண்டு. அவர்களுடைய வாழ்க்கைக்கு வழி வகுத்துக் கொடுத்து இருக்கிறார்கள், உண்மையிலேயே. நான் மனப்பூர்வமாக அப்போது பெருந்தொழில்கள்

மானியக் கோரிக்கையிலே பேசி இருக்கிறேன், அதேபோன்று தான் இந்த சிறு தொழிற்சாலைகளிலே பணியாற்றக் கூடிய தொழிலாளர்கள்; அவர்களைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள முன்வருவதாக சொல்ல வந்தேன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இடையிலே குறுக்கிட்டார்கள், அந்தத் தொழிலாளர்களுடைய உரிமைகளைப் பறித்துவிடக் கூடாது; காவல் துறையை வைத்து தடுத்துவிடக் கூடாது, அப்படித் தடுப்பதன் மூலமாக தொழிலாளர் கடன் உரிமைகள் இந்த நாட்டில் தடுக்கப்பட்டால். நாம் எதிர் பார்க்கக் கூடிய தொழில் இந்த நாட்டிலே வளராது, அந்த காரணத்திற்காகத் தான் நான் குறிப்பிட விரும்புகின்றேன்,

இன்றைக்கு எனக்கு முன்பாக பேசிய காங்கிரசு கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் தொழிற்சங்கத்தினுடைய தலைவர். தொழில் துறைகளைப் பற்றி மிகவும் நன்றாகத் தெரிந்த மாண்புமிகு உறுப்பினர் காளன் அவர்கள்கூட குறிப்பிட்டார்கள், கம்யூனிஸ்ட் கட்சிகள் சங்கம் தமிழகத்தில் இருக்கிற தொழிலாளர்களை காம்ப்ரமைஸ் செய்து கொண்டு அவர்கள் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள்; போராட்டம் நடத்துகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள்; கமிஷன் தருகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள், நான் இந்த சந்தர்ப்பத்தில் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது. 'காம்ப்ரமைஸ்' பண்ணுவது என்பது. அவர்களிடத்தில் இருந்து நிதி பெறுவது என்பது — அது காங்கிரசு கட்சியினுடைய சங்கமாக இருக்கலாம்; ஐஎன்டியூசி சங்கமாக இருக்கலாம், காரணம். அந்த சங்கத்தினுடைய நம்பிக்கை இல்லாமல் தான் (மணி அடிக்கப்பெற்றது) ஏஐடியூசி போன்ற சங்கங்கள் முழுமையாக..........

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : He is not yielding

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவர் அவர்களே one minute

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : He is not yielding. You can answer later.

திரு. ஜி. பழனிசாமி : தலைவர் அவர்களே. நான் பேசும் போது அவர்கள் குறுக்கிடலாமா ?

திரு. மா. சுந்தரதாஸ் : He is attracting my Constituency It is my matter. I would submit. பேரவைத் தலைவர் அவர்களே. என்னுடைய தொகுதியிலே நடந்த சம்பவத்தை சொல்கிறேன், காளன் பேசியது. என்னுடைய





தொகுதியிலே கேஷ்யூநட் ஃபேக்டரியில் நடந்த ஒரு உழைமை சொன்னாரே தவிர வேறு ஒன்றும் சொல்லவில்லை, ஏனென்று சொன்னால். அங்கு இருக்கிற சிஐடியூ., அஇஅதிமு.க-வையோ. காங்கிரசையோ வேறு எந்த யூனியனையும் கூப்பிடாமல், சிஐடியூ-வை மாத்திரம் அழைத்து வைத்து கேரளா முதலாளிகள் கேரளாவில் இருக்கின்ற ஒரு ஸ்டார் ஹோட்டலில் வைத்து பேசுகிறார்கள். அது இந்த அதிகாரிகளுக்கும், சிஐடியூ-வுக்கும், முதலாளிகளுக்கும் தான் தெரியுமே தவிர அங்கு இருக்கிற அஇஅதிமுக-வுக்கோ. காங்கிரசுக்கோ. திமுக-வுக்கோ தெரியுமா ? அதைத்தான் காளன் சொன்னாரே தவிர, இல்லாதது எதையும் சொல்லவில்லை, நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன். (குறுக்கீடு) சிபிஐ அல்ல, சிபிஎம் மாத்திரம்தான், CPI was not called for the conciliation only CPM was called for. It is like that. நான் கமிஷனரிடம் கேட்டேன், கன்னியாகுமரி ஜில்லாவில் அதிகாரிகள் தேவை இல்லை, சிஐடியூ-வுக்கே கொடுத்துவிடலாம். (குறுக்கீடு) சிபிஐ-ஐ கூப்பிடவில்லை, சிபிஎம் தான.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு, வே, தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : பேரவைத் தலைவர் அவர்களே. அங்கு இருக்கிற தொழிற்சங்கம். அங்கு இருக்கிற தொழிலாளிகளை நம்பி, அந்த தொழிற்சங்கத்திலே தொழிலாளிகள் முழுமையாக இருக்கிறார்கள், அது ஒரு பெரிய சங்கம் என்பதாலே பேச்சு வார்த்தை நடக்கிறது. உங்கள் சங்கத்துக்கு ஆள் வரவில்லை என்றால், நாங்கள் பொறுப்பல்ல அதற்கு, (குறுக்கீடு) நாங்கள் என்ன பண்ணுவது ?

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவர் அவர்களே, உங்களைவிட முதலாளிகள், (குறுக்கீடு) நானும் ஒரு ஐஎன்டியூசி பிரதிநிதி, (குறுக்கீடு),

திரு. வே. தம்புசாமி : உங்கள் சங்கத்திற்கு ஆள் வரவில்லை என்பதற்காக இவர்கள் முதலாளி பக்கம் போய்விட்டார்கள் என்று சொல்ல முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சரி. இந்தப் பிரச்சினையை இதோடு விட்டு, திரு. பழனிசாமி அவர்கள் தொடர்ந்து பேசுங்கள்.

முற்பகல் 11–55

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற கூட்டுறவு சங்கங்களில் சி.ஐ.டி.யூ., ஏ.ஐ.டி.யூ. முழுமை பெறுகிறார்கள். அதிகாரிகள்

கூப்பிட்டு பேச்சுவார்த்தைகள் நடத்துகிறார்கள் என்று சொன்னால் அந்த கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உறுப்பினர் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன் — தொழிலாளர்களுடைய தலைவரைத் தேர்ந்தெடுக்கிற தேர்தல் நடைபெறுகிறது. அதன் மூலமாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அங்கீகரிக்கப்பட்டிருக்கிற அந்தச் சங்கத்தினுடைய தலைவரைக் கூப்பிட்டு, அந்த நிர்வாகம், அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள். இதிலே என்ன தவறு இருக்கிறது. (குறுக்கீடு) இதல்லாமல் அங்கீகாரம் பெற முடியாத சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடைபெறவில்லை என்று சொன்னால் நீங்கள் தொழிலாளர்கள் சங்கங்களில் முற்போக்கான கோரிக்கைகளை வைத்து போராட்டம் நடத்துங்கள். இயக்கம் நடத்துங்கள். அப்படி சங்கத்தை நடத்துங்கள். அதன்மூலமாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நீங்கள் கூட்டத்தை கூட்டுங்கள். அதுபற்றி எங்களுக்கு அபிப்பிராயபேதம் கிடையாது. (குறுக்கீடுகள்) நான் அடுத்த சப்ஜெக்டிற்கு போகிறேன்.

இன்றையதினம் சிறிய தொழில்கள் 25,000 ரூபாய் முதற்கொண்டு கடனைப் பெற்று நடக்கக்கூடிய தொழிற்சாலைகள் . . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் அமர்ந்து கொண்டு இப்படிப் பேசுவது முறையற்றது. அனுமதி பெற்றுப் பேசுங்கள். பேசுகிற உறுப்பினரைத் தயவு செய்து பேச அனுமதியுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : 25,000 ரூபாய் முதற்கொண்டு 2 லட்சம் ரூபாய் வரையில் நிதியுதவி பெற்று நடத்தக்கூடிய தொழிற்சாலைகள் பல இன்று மூடப்பட்டிருக்கின்றன ; மூடப்படுகிற அபாய நிலையில் இருக்கின்றன. ஆகவே, அவற்றை நடத்த முடியாமல் அவர்கள் இன்றையதினம் 'டிக்', 'சிப்காட்' போன்ற நிறுவனங்களில் கடன் பெறுவதற்காக மனு செய்திருக்கிறார்கள். இன்றைக்கு கடன் கிடைக்கவில்லை. ஆகவே, அவர்கள் மீண்டும் தொழிற்சாலையை நடத்துவதற்கு அவர்கள் செலுத்த வேண்டிய கடன் வட்டியையாவது தள்ளுபடி செய்யுங்கள். அந்த வட்டியையாவது குறைத்து . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் ஆரம்பத்திலே ஊரகத் தொழில்கள் பற்றி





ஆரம்பித்து, ஊரகத் தொழில்கள் மானியக்கோரிக்கை பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார். இது தொழிலாளர் நலன், தொழிற்சாலைகள் பற்றிய மானியக்கோரிக்கை. இதில் கருத்துக்களை கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : துணைத்தலைவர் அவர்களே, எல்லாமே தொழில்கள்தானே. எல்லாம் இந்த அரசுக்கு தேவையான தொழில்கள். ஆகவே, தொழிலாளர் நலனாக இருந்தாலும், தொழிற்சாலைகளாக இருந்தாலும், சிறு தொழில்களாக இருந்தாலும், நம்முடைய அமைச்சரைச் சார்ந்ததுதான். ஆகவே, நம்முடைய நாட்டின் முன்னேற்றத்திற்காக இருக்கக்கூடிய இந்தத் தொழில்களைப் பொறுத்த வரையில் அவற்றை முன்னுக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன்.

அதைப்போல தான் இன்றைக்கு தொழிலாளர் நலன் பற்றி பிரச்சினைகள் எழுகிறபோது பேசி தீர்வுகளை காண மேற்கொள்வதோடு, இன்றைக்கு தொழிலாளர்கள் நலனுக்காக அமைக்கப்பட்டிருக்கின்ற கோர்ட்டுகள் பற்றி இங்கே கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே வரக்கூடிய பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு காண நீங்கள் உடனடியாக முயற்சிகள் மேற்கொண்டு அந்தத் தொழிலாளர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டும். 3 வருடம், 4 வருடம், 5 வருடம் காலம் கூட ஆகிறது. தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தால் அந்தத் தொழிலாளர்கள் அந்த கோர்ட்டுக்கு மனு செய்தால், நீண்டகாலம் வரை நடவடிக்கையெடுக்கப்படாமல், அவர்களுடைய குடும்பமே அழியும் வகையில், வழக்குகள் தீர்க்கப்படாத நிலையில் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அப்படி தேங்கியிருக்கிற வழக்குகளை நீங்கள் உடனடியாக பைசல் செய்ய வேண்டும். காரணம் அந்தத் தொழிலாளர்களுக்கு வயதான காலத்திலும்கூட தீர்ப்பு கிடைக்காத நிலையில், இன்றைக்கு தொழிலாளர்கள் பலபேர் சிறிய மில்களில் வேலை செய்யக்கூடியவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். (மணியடிக்கப் பெற்றது) அதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, எனக்கு பேச அனுமதி தந்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சிங்கை கோவிந்தராசு.

நண்பகல் 12–00

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு எல்லாம் அரசியல் முகவரி தந்து எங்களுடைய குடும்பக் கடவுளாக வணங்குகிற தமிழ

கத்தினுடைய ஒப்பற்றத் தலைவி, தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கின்ற திசையை நோக்கி வணங்கி இன்றையதினம் தொழிலாளர் மானியக் கோரிக்கை எண். 29-ன்கீழ் கொடுக்கப்பட்டு இருக்கக்கூடிய 1992-93 ஆம் ஆண்டினுடைய மானியக் கோரிக்கையின் மீது, தொழிலாளர் நலம் மற்றும் தொழிற்சாலைகள் சம்பந்தமாக பேசுகின்ற வாய்ப்பினை தந்தமைக்காக, என்னுடைய உள்ளம் கனிந்த நன்றியை இங்கே உரித்தாக்கி, பாலைவனத்திலே பாய்ந்தோடும் ஜீவநதியைப் போல, தமிழகத்தை வளம் கொழிக்க வைக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நிதிநிலை அறிக்கையை நாடே வரவேற்று வாழ்த்துப்பா கூறுகிறது.

இம்மாநிலம் அல்லது ஒரு நாடு, அதனுடைய தொழில் வளர்ச்சியை அளவுகோலாக வைத்துத்தான் இந்த விஞ்ஞான உலகம் மதிப்பீடு செய்கிறது. தேர்தல் களத்திலே மக்களைச் சந்திக்கின்ற போது, மாண்புமிகு நமது தமிழக முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் புதியதொரு தொழில் துவங்க முன்வருவோர்க்கு ஊக்கம் அளிக்கப்பட வேண்டும் என்றும், எல்லாவகைத் தொழில்களிலும் அவர்களுக்கு பக்கபலமாக நின்று தமிழகத்தை தொழிற்துறையிலே முன்னணிக்குக் கொண்டுவருவோம் என்றும் கூறியிருந்தார்கள். அதைப் போலவே, அவர்கள் பதவியேற்றவுடனேயே, தொழில் அதிபர்களையும், அறிஞர்களையும், அழைத்து, புதிய தொழில்கள் தொடங்குமாறும், அவ்வாறு தொடங்கப்படுகின்ற தொழில்களுக்கு தமிழக அரசு எந்தந்த வகையிலே ஆதரவு தரும் என்றும் அவர்களுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளித்து, தொழில் வளர்ச்சிக்குப் பச்சைக் கொடியினைக் காட்டினார்கள்.

மேலும் சிறு தொழில் அதிபர்களை அழைத்து அவர்களுடைய குறைபாடுகளை அகற்றுவதற்கு, அவர்களுக்கு பெரும் ஊக்கம் அளிக்கும் வகையில், குறிப்பாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களைத் தயாரிக்கும் சிறுதொழில்களை மேம்படுத்த விசேஷ ஊக்கத்தை அளித்து உள்ளார்கள். சிறுதொழில்களுக்கும் குறைந்த வட்டியிலே வர்த்தக வங்கிகள் நிதி நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து கடன் பெற்றுத் தரவும், ஏற்பாடு செய்து தரப்பட்டுள்ளது.

மேலும், தொழில் மின்னணுவியல், தோல்பொருட்கள் பொறியியல் பொருட்கள் உட்பட பல தொழில்களுக்கு தொழில் வளத்தால், உலகமே பாராட்டி வியக்கும் ஜப்பான் நாட்டின் உதவியுடன், ரூ. 70 கோடி முதலீட்டிலே தொழிற்பேட்டைகள் அமைக்கும் மாபெரும் தொழில் வளத் திட்டத்தினை அமைத்து இருப்பதை நான் உள்ளபடியே மனதார வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



மேலும் தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்போன்ற அரசு நிறுவனங்கள், முன் எப்போதும் கண்டிராத அளவு, தொழில் முனைவோர்களுக்கு போட்டி போட்டுக் கொண்டு, உதவி செய்து வருவது, நமது மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சிக் காலத்தில்தான் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தொழில் வளர்ச்சி என்பதில், புதிய தொழில்களை உருவாக்குவது மட்டுமல்லாமல், ஏற்கனவே தொடங்கி நடைபெற்று, வரும் தொழில்கள் பின்னடைவு ஏற்படாமல் கண்காணித்திட, வேண்டும். மூடிக்கிடந்த ஸ்டான்டர்டு தொழிற்சாலை கே.சி.பி. உள்பட பல தொழிற்சாலைகள் திறக்கப்பட்டதும், மேலும், பின்னி நூற்பாலையை கடந்த தமிழ்ப் புத்தாண்டு அன்று, புரட்சித் தலைவி அவர்கள், திறந்து வைத்து இருப்பதும் தொழிலாளர்களுக்கும் தொழில் முனைவோருக்கும், பெரும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தந்திருக்கிறது என்பதோடு, மேலும் மத்திய அரசின் அனுமதிக்காக பல்வேறு வளம் பெரும் தொழில்கள் அங்கே காத்துக் கொண்டிருக்கின்றன. எந்தக் காலத்தில் அதன் சூழ்நிலைக்கு ஏற்ப அங்கே விதிகளை உருவாக்கினார்களோ தெரியவில்லை. பழமை வாய்ந்த விதிமுறைகளை மத்திய அரசு மாற்றி, உடனடியாக புதிய தொழில்களுக்கு அனுமதி வழங்கிட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

'அழைத்தவர் குரலுக்கு வருவேன்' என்று கீதையிலே' கண்ணன் சொல்லியிருக்கிறார். 'கேளுங்கள் கொடுக்கப்படும் தட்டுங்கள் திறக்கப்படும்' என்று இயேசுபிரான் கூறியிருக்கிறார். ஆனால், அழைக்காமலேயே, கேட்காமலேயே, இந்தப் புனித அரசை வழிநடத்திச் செல்லும் மாண்புமிகு தமிழகமுதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஓடோடி வந்து, அனைத்து துறைகளினுடைய மேம்பாட்டுக்காகவும், இரவு பகல் பாராது உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். தொழில் வளமும், தொழிலாளர் நலனும் ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகளைப் போல, இதிலே ஒன்றுக்கு பாதகம் ஏற்பட்டாலும், இரண்டுமே பின்னடைவு அடைந்துவிடும். தொழில் முனைவோருக்கு தருகின்ற ஊக்கத்தைப் போலவே தொழிலாளர்களுக்கும் இந்த அரசு பக்கபலமாக நிற்கிறது என்பதை கடந்த ஆண்டு தென் இந்தியாவின் மான்செஸ்டர் என்று கூறப்படுகின்ற கோவை மாவட்டத்தில் ஜவுளி மில் ஆலைத் தொழிலாளர்களுக்கும், ஆலை அதிபர்களுக்குமிடையே ஏற்பட்ட போனஸ் உடன்பாடு, தொழிலாளர் போராட்டம், எரிமலையாக வெடித்துச் சிதற முயன்ற நிலை ஏற்பட்டிருந்தபோது, தாயுள்ளத்தோடு நமது மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இரு தரப்பினரையும் அழைத்து சுமூகமாகப் பேசி

[திரு. சிங்கை கோவிந்தராசு] [1992 ஏப்ரல் 20

அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையிலே போவசைப் பெற்றுத் தந்தார்கள். (குறுக்கீடு) ஐந்து நிமிடம்தான் ஆயிற்று. மேலும் மூடிக்கிடக்கின்ற ஆலைத் தொழிலாளர்களுடைய குடும்பங்களை கருணை உள்ளத்தோடு எண்ணிப் பார்த்து, கிட்டத்தட்ட ரூ. 48,50,000 தொழிலாளர்கள் ஆளுக்கு ரூ. 400 வீதம் வழங்கி, ஏழை எளிய தொழிலாளர்களுடைய வாழ்க்கையிலே ஒரு மறுமலர்ச்சியை உருவாக்கித் தந்தார்கள் என்பதை இங்கே சொல்கின்ற நேரத்திலே நாங்கள் எல்லாம் அவருடைய வள்ளல் தன்மைக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பிற்பகல் 12—05

இந்த நேரத்தில் எனது சிங்காநல்லூர் தொகுதியிலே பல ஆண்டுக்காலமாக மூடிக் கிடக்கின்ற பஞ்சாலைகளான வசந்தா மில் ஆலை, ஜெயலட்சுமி மில் ஆலை, மது ஸ்பின்னிங் ஆலை, ராதா கிருஷ்ணா ஆலை ஆகியவை மூடிக் கிடக்கின்றது என்பதும், இந்த தொழிலாளர்களுடைய வாழ்க்கையில், பின்னி, கே. சி. பி. நிறுவனங்களின் தொழிலாளர்களை போல, ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தித் தருகின்ற வகையிலே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மறுபரிசீலனை செய்து, அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் தருகின்ற வகையிலே நடவடிக்கை எடுத்து, அந்த ஆலைகள் ஓடுவதற்கு உண்டான நடவடிக்கைக்கு உத்தரவிட வேண்டுமென்று, இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பெண் தொழிலாளர்களை அதிகமாக இந்த தனியார் மில்களிலேயிருந்து நிறுத்தியிருக்கின்றார்கள். அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கின்ற வகையிலே தனியார் ஆலைகளிலே பணியாற்றுகின்ற அந்த பெண் தொழிலாளர்களை அதிகப்படுத்தவும். அதே நேரத்திலே தொழிலாளர்களுக்கு சீருடை வழங்கவும். இரவு நேரத்திலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு சிற்றுண்டி தேனீர் வழங்கிடவும். மற்ற முதலாளிகள் கடந்த காலத்திலே செய்து வந்தவைகளை எல்லாம் இன்றையதினம் இந்த ஆலை முதலாளிகளும். மற்ற தொழில் முனைவோரும் அவற்றை நிறுத்தி வைத்திருக்கின்றார்கள், அப்படிப்பட்ட சலுகைகளை எல்லாம் தொடர்ந்து தொழிலாளர் வர்க்கத்திற்கு பெற்றுத் தர வேண்டிய ஒரு சட்டத்தினை தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கவனத்திலே கொண்டு சென்று. அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டு, கடைசியாக வருகின்ற தொழிலாளர்களுடைய ஊதியக் குழுவினுடைய பிரச்சினையிலே போராட்டமின்றி தெளிவான முறையிலே அவர்கள் பெற வேண்டிய அந்த ஊதியத்தினை. அந்த 'பே கமிஷன்' ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று தமிழக அரசின் சார்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவியிடம்



1992 ஏப்ரல் 20] [திரு. சிங்கை கோவிந்தராசு]

டைய அரசு செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து இதுபோல் தொழிலாளர் நலன்களுக்காக தொழிலாளர்களுக்காக நல்ல பல திட்டங்களை உருவாக்கி வருகின்ற புரட்சித் தலைவி அவர்கள் தொழிலாளர்கள் அவருக்கு உறுதுணையாக நிற்கின்றார்கள் என்பதனை நிலைநாட்டுகின்ற வகையிலே போனஸ் பிரச்சினையிலே நிவாரணம் கொடுப்பதிலே அவர்கள் ஆற்றியிருக்கக் கூடிய மாபெரும் பணிகளை பாராட்டி அவர்களுக்கு நன்றி சொல்லி இந்த வாய்ப்பை கொடுத்திருக்கக் கூடிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெற்றுக் கொள்கிறேன்,

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. கே. செல்வராஜ்.

*<u>திரு. கே. செல்வராஜ் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று தொழிலாளர் நல மானிய விவாதத்தில் பேசுகின்ற வாய்ப்பினை கொடுத்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

அரசு தொழிலாளர் கொள்கை விளக்கக் குறிப்பில் 67 தொழில்களுக்கு ஊதிய நிர்ணயம் கூலி மறு நிர்ணயம், செய்து சட்ட அட்டவணையில் அரசு சேர்த்துள்ளது, ஆனால் கல் உடைக்கும் தொழிலாளர்கள். சுமை தூக்கும் கூலித் தொழிலாளர்கள், கை வண்டி இழுக்கும் தொழிலாளர்கள், கட்டிடத்தொழிலாளர்கள், இவர்களுக்கெல்லாம் கூலி நிர்ணயிப்பதை சட்டத்தில் இணைத்து. மற்ற தொழில் புரிகின்ற தொழிலாளர்களுக்குக் கிடைக்கின்ற. அரசினுடைய அனைத்து உதவிகளும் சட்டப்படி கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

கோவையில் புதிதாக தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலை ஆய்வகத் துறை அலுவலகத்திற்கும் ஒரு மைய அலுவலகத்திற்கும் 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. 1991—92 ஆம் ஆண்டிற்கு ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதுவும் இந்த நிதி ஆண்டிலேயே முதல் மாடி வரை கட்டிடம் கட்டுவதற்கு பொதுப்பணித்துறை பொறியாளர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது, ஆனால் இந்த முதல் தளம் கட்டுவதற்கு 5 இலட்சம் ரூபாயில் கட்ட முடியுமா என்பதை யோசித்து அதிக நிதியை ஒதுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12—10

வேலூர், சேலம், திருச்சி ஆகிய இடங்களில் புதிய தொழிலாளர் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட உள்ளது என கொள்கை குறிப்பில் கூறப்பட்டுள்ளது. இந்த நீதிமன்றங்களுக்கு நடுவர்கள் நியமித்த உடன் செயல்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஆனால் எப்போது இந்த ஆண்டா அடுத்த ஆண்டா? எப்போது அவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதையும் அரசு அறிவிக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தொழிலாளர் நலத் துறையில் தொழில் கல்வியில் பயிற்சி பெற அனைத்து தொழிற்சாலைகளிலும் பயிற்சி பெறும் வகையில் நடத்தப்பட வேண்டும்.

தாழ்த்தப்பட்ட மிகவும் பின் தங்கிய மலை வாழ் மக்கள் சாதாரண ஏழ்மை நிலையில் இருந்து கொண்டு கஷ்டப்பட்டு படிக்க வைக்கிறார்கள், ஆனால் அவர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 10 ஆண்டுகள் 12 ஆண்டுகள் ஆகியும் இதுவரை ஒரு நேர்முக பயிற்சிக்குகூட அழைக்கப்படவில்லை, ஒரு வேலை வாய்ப்பு கூட கொடுக்கப்பட வில்லை என்பது வருத்தம் தரக்கூடியது. குறிப்பாக கோவை வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இப்படி பல நூற்றுக்கணக்கானவர்கள் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளார்கள். அதனால் அவர்களுக்கு தனிக் கவனம் செலுத்தி வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். ஒரு சில பெரிய சிறிய நிறுவனங்களில் ஒரே நேரத்தில் ஒரே நிர்வாகத்தில் பல பிரிவுகளாக பிரித்து அங்கிருக்கிற அலுவலர்கள் பெயர்களில் ஒப்பந்த அடிப்படையில் கான்டிராக்ட் பேசிக்கில் தினக் கூலிகளாக தொழிலாளர்களை வைத்துக் கொண்டு 8 மணி நேர வேலையை பத்து மணி 12 மணி நேரம் என வேலை செய்யச் சொல்லி கொடுமைபடுத்துகிறார்கள். இந்த நிலை அனைத்து நிறுவனங்களிலும் பரவி வருகிறது. தொழிற் சட்டங்கள் இவ்வளவு இருந்தும் இன்னமும் தொழிலாளர்கள் கொடுமைப்படுத்தப்பட்டு வருகிறார்கள். இதற்கு ஒரு சில அதிகாரிகளும் உடந்தையாக இருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. செ. ரகுபதி :</u> மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த தொழிற்சாலைகளிலே தொழிலாளர்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்கிற குறிப்பினை தந்தால் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. கே. செல்வராஜ் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே கோவை மாவட்டத்தில் குறிப்பாக நூற்றுக்கும் அதிகமான பஞ்சாலைகளில் பெரிய நிறுவனங்களில் எல்லாம் தொழிலாளர்களை வாயில் கதவுக்கு முன் புறம் நிறுத்திக் கொண்டு அவர்களை தினக் கூலிகளாக வைத்துக் கொண்டு— வேலை காலியாக இருந்தும் கூட—வேலைகளில் அவர்களை அமர்த்தி 10 மணி நேரம் 12 மணி நேரம் வேலை வாங்கி, [illegible]





கொடுக்கின்ற கூலியோ 5 ரூ. 10 ரூ. 15 ரூ என்று கொடுக்கிறார்கள். அந்த நிறுவனங்களினுடைய பெயர்களை உங்களிடத்திலே கொடுக்க நான் தயாராக இருக்கிறேன். இந்த நிலையை மாற்ற வேலை காலி உள்ள இடங்களுக்கு—தனியார் நிறுவனங்களுக்கும் வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் பதிவு செய்தவர்களைக் கொண்டு காலி இடங்களை பூர்த்தி செய்து கான்டிராக்ட் பேசிக் முறையை அடியோடு ஒழிக்க கடுமையான நல்லதொரு சட்டத்தை கொண்டு வர வேண்டுகிறேன். அரசினுடைய தொழில் பயிற்சி நிலையங்களில்—ஐ.டி.ஐ. போன்ற பயிற்சி நிலையங்களில் தற்போது இருக்கிற பயிற்சி கருவிகளை மாற்றி இன்றைய நவீன எலக்ட்டிரானிக் தொழில் நுட்பங்களைக் கொண்ட புதிய கருவிகளை அளித்து அதன் மூலம் பயிற்சி அளிக்க வேண்டுகிறேன்.

தனியார்கள் ஒரு சிலர் சான்றிதழ்களைக் கொடுப்பதற்கு என்றே எந்த ஒரு பயிற்சி கருவியும் இல்லாது போலியான ஐ.டி.ஐ. தொழிற்பயிற்சி நிலையங்கள் என்ற பெயரில் செயல்படுகின்றன. அவைகளை அரசு உடனடியாக தடுக்க வேண்டுகிறேன். ஐ.டி.ஐ. தொழிற்பயிற்சி நிலையத்திற்கு வருகிற மாணவர்கள் மாவட்ட தலைநகரங்களுக்கு வர வேண்டியுள்ளது. வெகுதொலைவிலிருந்து அவர்கள் வரவேண்டிய காரணத்தினால் முறையாக எல்லாத் துறைகளிலும் மாணவர்கள் தொழிற் பயிற்சி பெறுவதற்கு தாலுக்கா அளவில் தொழில் பயிற்சி நிலையங்களை அமைக்க அரசு முன் வருமா என உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

இன்றைய நிலையில் வேலை இல்லாத படித்த பயிற்சி பெற்றவர்கள் லட்சக்கணக்கில் வேலையில்லாது இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு அரசு மாதாமாதம் உதவித் தொகை வழங்குவதன் மூலம் பல கோடி ரூபாய் செலவிட்டு வருகிறது. இருந்தும் அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க முடியவில்லை. ஆகையினால் குறிப்பிட்ட பெரிய கனரக தொழிற்சாலைகளிலும் பஞ்சாலைகளிலும் 8 மணி நேர வேலையை 6 மணி நேர வேலையாக ஆக்கி இப்போது இருக்கிற 3 முறை ஷிப்டுகள் என்று இருப்பதை நான்கு முறை ஷிப்டுகளாக ஆக்குகிறபோது ஒரு பங்கு வேலைக்காக வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டியதாக உள்ளது. அதன் மூலம் பல்லாயிரக்கணக்கான வேலை இல்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பு தர முடியும். எங்கும் எதிலும் புரட்சிகரமான திட்டங்களை செயல்படுத்தி அமல் படுத்தி வரலாற்று சிறப்பு மிக்க சாதனைகளை புரிந்து வரும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த கருத்தை பரிசீலனை செய்து தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்.

[திரு. கே. செல்வராஜ்] [1992 ஏப்ரல் 20
பிற்பகல் 12-15

அரசு அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனங்களை நடத்தி செயல்பட்டு வருவதை பாராட்டுகிறேன். இன்று பல இடங்களில் தனியார்கள் பாஸ்போர்ட் வாங்கி வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்று தருகிறோம் என்று கூறி ஏமாற்றுகிறார்கள். அவர்களும் நம்பி நல்ல வேலையில் இருப்பவர் கள் கூட, வேலையை ராஜினாமா செய்து விட்டு வெளிநாடு சென்று பணியாற்ற வேண்டும் என்ற ஆர்வத்தில் இருக்கிற பணத்தை எல்லாம் கொடுத்து ஏமாந்து வாழ வழி இல்லாது பல பேர் தற்கொலை கூட செய்துக் கொண்டார்கள். இப்படிப் பட்ட போலி டிராவல் ஏஜன்சிகளை தடை செய்ய வேண்டு கிறேன். அரசே அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தை நடத்த வேண்டுகிறேன். ஈ.எஸ்.ஐ. தொழிலாளர்கள் மருத்துவமனைகளில் இன்னும் அதிக வசதிகள் அதாவது இருதய சிகிச்சை, கண் மருத்துவமனை பிரிவு ஏற்படுத்தி மருத்துவமனைகளை நவீனப்படுத்த வேண்டுகிறேன். கோவை யில் உள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைக்கு தொழிலாளர் களுக்காக அயராது உழைத்து தன் உயிரையும், வாழ்வையும் தியாகம் செய்த என். ஜி. இராமசாமி அவர்கள் நினைவாக என்.ஜி.ஆர். தொழிலாளர் மருத்துவமனை என பெயர் சூட்ட வேண்டுகிறேன். தமிழகத்தில் இன்று பல லட்சக் கணக்கான கைத்தறி தொழிலாளர்கள் மிகவும் சிரமப்படுகிறார் கள். காரணம் அவர்களுக்கு நிரந்தர வேலை கிடையாது. கூலியும் குறைவாக கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு மற்ற நிரந்தர தொழிலாளர்களுக்கு கிடைக்கும் அனைத்து வசதிகள் வருங்கால வைப்பு நிதி, மருத்துவ வசதி, நஷ்ட ஈடு தொகை போன்ற உதவிகள் கிடைக்க அரசு நடவடிக்கை எடுத்து கைத் தறியில் பணிபுரிகின்ற தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டு கிறேன். ஒரு சில நிறுவனங்களைத் தவிர வேறு எந்த நிறுவனங் களிலும் தொழிற்சங்க தேர்தல் நடத்தப்படுவதில்லை. பல சங்கங்கள் தொழிலாளர்கள் ஒற்றுமையைச் சீர்குலைக்க, சட்டப்படி தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகள் கிடைப்பதற்கு எந்த ஒரு வசதியும் செய்து கொடுக்காமல் இருக்கின்றன. கோவையில் குறிப்பாக ஒரு சில கம்பெனி களில் ஏ.ஐ.டி.யூ.சி., சி.ஐ.டி.யூ. சங்கங்கள் அந்த நிர்வாகத் தோடு சேர்ந்துக்கொண்டு தொழிலாளர்களை பழிவாங்கும் விதத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த நிலையை மாற்ற குறிப்பாக வருஷா வருஷம் தொழிற்சங்கங்களுக்கு அரசு சட்டம் இயற்றி தொழிற்சங்கத் தேர்தல் நடத்தி ஒரே சங்கம், ஒரே தலைவர் என்ற நிலையைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு ஜெ. பாலகங்காதரன் :



1992 ஏப்ரல் 20]

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை வேட்பாளராக தேர்ந்தெடுத்து சிவகாசி சட்டமன்ற உறுப்பினராக இந்த சட்ட சபையில் அமர்த்திய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, என்து உரையை இந்த மாமன்றத்தில் அளிக்கின்றேன். டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றவுடனே, பதவி ஏற்ற வுடனே சிவகாசியைப் பற்றி வானொலியிலும், தொலைக் காட்சியிலேயும் குறிப்பிட்ட ஒரு சிறப்பான தொகுதியாகும். கிட்டத்தட்ட இரண்டு இலட்சத்து எட்டு ஆயிரம் தொழி லாளர்கள் இருக்கும் நிறைந்த தொகுதியாக சிவகாசித் தொகுதி உள்ளது. இங்கே மூன்று விதமான தொழில்கள் நடக்கின்றன. பட்டாசுத் தொழில், தீப்பெட்டித் தொழில் மற்றும் பிரிண்ட்டிங் தொழில் போன்ற மூன்று தொழில்கள் சிவகாசியில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

தொழிற்சாலைகளை பொறுத்தமட்டிலும் அதிக அபாய கரமான தொழில்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர் களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு சிவகாசியில் பயிற்சி நிலையம் தோற்றுவிக்கப்படவுள்ளது என்ற அமைச்சர் அவர் களுடைய இந்த அறிக்கையானது பாராட்டுக்குரியதாகும். அதோடுமட்டுமல்லாமல் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பவர்களுக்கும், பட்டாசு தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பவர்களுக்கும் மறு ஊதிய நிர்ணயித்தை ஏற் படுத்தித் தந்த அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். தீப்பெட்டி தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் சிறுவர் களுக்கும் மற்றும் அங்கே தனியாக வேலை பார்க்கும் சிறுவர் களுக்கும் சட்டத்தின் மூலமாகத் திருத்தங்களைக் கொண்டு வந்து குழந்தைகள் தொழிலாளர் சட்டத்தினை அதற்குத் தகுந்தவாறு திருத்தியதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர் களுக்கு எனது பாராட்டை தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவகாசியைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட நாகசாகி ஹிரோஷிமா ஆகிய நகரங்களில் இரண்டாம் உலகப் போரிலே குண்டு போட்டு எவ்வாறு நாசம் ஆனதோ அதைப்போல ஒரு மாபெரும் விபத்து டான் ஃபயர் வொர்க்ஸ்ஸில் சிவகாசி யில் நடைபெற்றது. அந்த வெடி விபத்திலே 40 பேர்கள் தங்கள் உயிரை இழந்தார்கள். மேலும் 65 பேர்கள் படு காயம் அடைந்தார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த உலகத் திலேயே எந்த ஒரு அரசாங்கமும் செய்யாத ஒரு காரியத்தை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பதவி ஏற்ற சில காலங் களிலேயே ஒவ்வொரு இறந்தவர் வீட்டிற்கும் 10,000 ரூபாய்

[திரு. ஜெ. பாலகங்காதரன்] [1992 ஏப்ரல் 20

நஷ்ட ஈடும், காயம் அடைந்தவர்களுக்கு 2,000 ரூபாய் நஷ்ட
ஈடும் கொடுத்து அதிக அளவு தொகுதி மக்களிடையே
பாராட்டையும் புகழையும் பெற்றுத் தந்த டாக்டர் புரட்சித்
தலைவி அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்
கிறேன். பட்டாசுத் தொழிற்சாலையைப் பொறுத்த மட்டிலும்
உயிருக்கு உத்தரவாதம் இல்லாமல் எந்த நேரத்திலும் வெடி
விபத்து நேரலாம் என்ற ஒரு சூழ்நிலை நிலவி வருகிறது.
எனவே பட்டாசுத் தொழிற்சாலையில் எந்தெந்தச் சூழ்
நிலையில் எவ்வாறு வெடிக்கும் என்பதை ஆராய்வதற்காக
தங்கராஜ் கமிஷன் நியமிக்கப்பட்டது. அந்தக் கமிஷனை
பொறுத்தமட்டிலும் இன்றுவரை எந்தவித ரிப்போர்ட்டும்
அளிக்கப்படவில்லை. அந்த கமிஷனில் என்ன என்ன விஷயங்
கள் கூறப்பட்டுள்ளன. அந்த பட்டாசு விபத்து மீனம்
பட்டியில் எவ்வாறு நிகழ்ந்தது, அதனால் என்ன என்ன
கொடுமைகள் நிகழ்ந்தன என்பதை எல்லாம் அந்த கமிஷன்
மூலம் அறிக்கைப் பெற்று இந்த மன்றத்திற்கு அளிக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் பட்டாசு தொழிலில் வேலை
செய்யும் தொழிலாளர்களுக்கு உத்திரவாதம் கண்டிப்பாக
கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் பெரும்பாலும் படிப்பு
அறிவு இல்லாத ஏழை மக்கள்தான் பட்டாசு தொழிலிலும்,
தீப்பெட்டித் தொழிலிலும் அதிகமாக ஈடுபட்டுக்கொண்டு
இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் சாதாரணமாக நமக்கு
தெரிந்த சின்ன சின்ன விஷயங்கள் கூட தெரியாது. நாம்
அவர்களுக்கு கற்றுத் தரவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம்.
இதை ஏன் சொல்கிறேன் என்றால் அலுமினியப் பவுடர்
என்பது அங்கே பட்டாசு தொழிலுக்கு வேண்டிய ஒரு
முக்கியமான கெமிக்கல் ஆகும். நாம் எல்லாம் நினைத்துக்
கொண்டு இருப்போம் தீ விபத்து ஏற்பட்டால் தண்ணீர் ஊற்றி
அணைத்தால் தீ ஆறிவிடும் என்று. ஆனால் இந்த அலு
மினியப் பவுடர் மீது தண்ணீர் அடித்தால் அது வெடிக்கக்
கூடிய ஒன்றாக இருக்கிறது. இவற்றையெல்லாம் கருத்தில்
கொண்டுதான் கண்டிப்பாக பட்டாசு தொழிற்சாலையில்
வேலைப் பார்க்கும் தொழிலாளர்களுக்கும், தீப்பெட்டித்
தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் தீப்பெட்டி தொழி
லாளர்களுக்கும் அனைவருக்கும் உரிய பயிற்சியை உரிய
நபர்களால், தகுதி வாய்ந்த நபர்களால் கண்டிப்பாக அந்த
தொழிலாளர்களுக்கு அளிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

பிற்பகல் 12–20

மேலும் பட்டாசு தொழிற்சாலைகளிலும், தீப்பெட்டி
தொழிற்சாலைகளிலும் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு
பீஸ் ரேட் மூலமாகத்தான் ஊதியம் கொடுக்கப்படுகிறது



1992 ஏப்ரல் 20] [திரு. ஜெ. பாலகங்காதரன்]

இந்த நிலையை மாற்ற வேண்டும். இங்கே மறு நிர்ணயம்
செய்யப்பட்ட அந்த ஊதியத்தை கண்டிப்பாக அவர்களுக்கு
அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் மற்ற எல்லா தொழிற்சாலைகளிலும்
ஞாயிற்றுக் கிழமைக்கு ஊதியம் உண்டு. ஆனால் இந்த
பட்டாசு தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பவர்களுக்கு,
தீப்பெட்டி தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பவர்களுக்கு
அந்த ஞாயிற்றுக் கிழமை விடுமுறை என்ற காரணத்தால்
அவர்களுக்கு எல்லாம் அன்று ஊதியம் வழங்கப்படுவது
இல்லை. குறைந்தபட்ச கூலி என்பது பட்டாசு
தொழிலாளர்களுக்கு மிகவும் குறைவாக அளிப்பதால் அதை
சற்று கூட்டி அமைக்கவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.
பட்டாசு தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களுக்கு
நிரந்தரமான ஒரு வருமானம் இல்லாததால் குறைந்த ஊதியத்
தைக் கொண்டு அவர்களால் எந்த வசதியும் பெற முடியாமல்
வீடுகள் அல்லது வீட்டு மனைகள் கூட வாங்கமுடியாத ஒரு
சூழ்நிலையில் இருக்கிறார்கள். எனவே அதை கருத்தில்
கொண்டு கண்டிப்பாக இந்த அரசு பட்டாசு தொழிலாளர்
களுக்கு வீடு கட்டித் தர ஏதாவது ஒரு வகையில் உதவி செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எங்களது தொகுதியில் தீப்பெட்டித் தொழிற்
சாலையைப் பொறுத்தவரையில் பிப்டி குரோர்ஸ் பேக்டரிஸ்
மற்றும் சி கிளாஸ் 'பி கிளாஸ், என்று இரண்டு வகையான மேட்ச்
பேக்டரிகள் இருக்கின்றன. அந்த பி கிளாஸ் பேக்டரியானது
பேக்டரி ஆக்ட்டில் கவர் செய்யப்படாததால் அங்கே
எல்லாம் சற்று சைல்டு லேபர் அதிகமாக இருக்கிற சூழ்
நிலை இருக்கிறது. It is the small tiny sector அங்கே
பி. எப். பிடிக்கப்படுவதில்லை. இ. எஸ். ஐ. பெசிலிட்டிஸ்
இல்லை, வேறு எந்தவித பெனிபிட்சும் அவர்களுக்கு போய்
சேருவது இல்லை. இந்த ஒரு நிலைமையை மாற்றி அதாவது
"D" கிளாஸ் மேட்சஸ் தொழிற்சாலைகளும் அந்த பேக்டரி
ஆக்ட் கவர் செய்ய வேண்டுமென்ற ஒரு நிலைமையை ஏற்படுத்த
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால் இங்கே
சைல்டு லேபர் பற்றி பேசும்போது கண்டிப்பாக உலகம் முழுவதும்
எங்கும் இருந்து வருகிற பத்திரிகை நிருபர்கள் சிவகாசியைத்
தான் குறிப்பிட்டுப் பேசுகிறார்கள். There is some child-labour
at Sivakasi. I my self accepting that. But, I would not agree
that most of the factories are hiring child-labour because only
the tiny sector is having child-labour. டைனி
செக்டார்ஸ் என்று குறிப்பிடும்போது 4, 5 பேர்களை
வைத்துக்கொண்டு அந்த தீப்பெட்டி [illegible] நபர்கள் அந்த
குடும்பத்திற்குள்ளேயே [illegible] அந்த [illegible]டும்பத்தைச்



D
V211,31(N92
N92.24.3
164941
சென்னை-600 009.

சேர்ந்த சைல்டு லேபர்களை யூஸ் செய்து கொள்கிறார்கள். அவர்களை நாம் தடுக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுக்கொண்டு வருகிறது,

இப்போது சாத்தூர், சிவகாசி, கோவில்பட்டி ஆகிய 3 தொகுதிகளை எடுத்துக்கொண்டாலும் அங்கே எல்லாம் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலை என்ற நிலைமை இருக்கிறது. அங்கே வேலை செய்யும் நபர்கள் யார் என்றால் அந்த தீப்பெட்டி தொழிற்சாலையின் உரிமையாளர்கள் அவர்கள் குடும்பத்தினர் வேலை செய்து கொண்டு வருகிறார்கள். அவர்கள் குடும்பத்தினரே வேலை பார்க்கும் போது அங்கே இருக்கும் சின்ன சின்ன சிறுவர்கள் வேலை செய்வதால் அதை சைல்டு லேபர் என்று ஒரு சில அதிகாரிகள் புகார் செய்கிறார்கள், அவற்றை எல்லாம் களையத் தான் இந்த "D" கிளாஸ் பேக்டரியையும் பேக்டரி ஆக்ட்டின் கீழ் கொண்டுவர வேண்டும்.

அதோடு மட்டுமல்லாமல் இந்த லேபர் இன்ஸ்பெக்டர் என்று எல்லாம் நான் கேள்விப்பட்டு இருக்கிறேனே தவிர இதுவரை எந்த அலுவலகத்திற்கும் சென்று அவர்கள் பார்த்து இருக்கிறார்கள் என்று நான் கண்டிப்பாக கூறமாட்டேன், நானே அறிவேன் இதை இந்த மன்றத்தில் கண்டிப்பாக சொல்கிறேன், ஆளுங்கட்சியாக இருந்தும் கண்டிப்பாக சொல்லவேண்டிய நிலைமை என்னவென்றால் லேபர் இன்ஸ்பெக்டர், பேக்டரி இன்ஸ்பெக்டர் இவர்கள் யாரும் எந்த பேக்டரியையும் இதுநாள் வரை விசிட் செய்த மாதிரி தெரியவில்லை, உட்கார்ந்த இடத்தில் இருந்து கொண்டே பணம் வாங்கிக் கொண்டு போய் விடுகிறார்கள். நேராக அவர்கள் போன் செய்கிறார்கள். உங்கள் பேக்டரியில் சைல்டு லேபர் இருக்கிறது, என்று, சைல்டு லேபர் என்பது ஒரு பெரிய விஷயம், சிவகாசியைப் பொறுத்தவரையில் ஒரு பெரிய இஷ்யூவாக இருக்கிறது, நான் சொல்கிறேன். பெரிய பெரிய இண்டஸ்ட்ரியலிஸ்டு சொல்கிறார்கள் சைல்டு லேபரை கண்டிப்பாக ஏராடிகேட் செய்ய வேண்டும் என்று.

பிற்பகல் 12.25

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. செ. ரகுபதி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்ஸ்பெக்டர் ஆஃப் பேக்டரீஸ், லேபர் ஆபீசர் இவர்களெல்லாம் தொழிற்சாலைகளை இரண்டு மாதம் அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தணிக்கை செய்து இருக்கிறார்கள். அதற்கான தணிக்கைக்



குறிப்புகள் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த தொழிற்சாலைகளிலே அப்படி தணிக்கைக் குறிப்புகள் இல்லை என்பதையும் நம்முடைய தொழிற்சாலை ஆய்வாளர்களும், லேபர் இன்ஸ்பெக்டர் போன்றவர்கள் எங்கெங்கு சென்று தணிக்கை செய்யவில்லை என்பதையும் கூறினால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. ஜெ. பாலகங்காதரன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே தணிக்கைக் குறிப்புகள் இருக்கின்றன என்பதை நானும் ஒத்துக்கொள்கிறேன். அவர்கள் அங்கே சென்று பார்வையிடுவதே இல்லை. அவர்கள் அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டே அந்தத் தணிக்கைக் குறிப்புகளைத் தயாரித்து அந்தந்த தொழிற்சாலைகளுக்கு அனுப்பி விடுகிறார்கள் என்று நான் இங்கே கூற கடமைப்பட்டிருக்கிறேன். அந்த நிலைமைகளை மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும் சிவகாசி தொகுதியிலே அரசுக்குச் சொந்தமான ஆலங்குளம் சிமெண்ட் பேக்டரி ஒன்று உள்ளது. அந்த சிமெண்ட் தொழிற்சாலையில் வேலை பார்ப்பவர்கள் ஆஸ்பெஸ்டாஸ் பிரிவு மற்றும் சிமெண்ட் பிரிவு என்று இரண்டு பிரிவினர் உள்ளனர். அவர்களுக்குள்ளேயே ஆஸ்பெஸ்டாஸ் பிரிவில் வேலை பார்ப்பவர்களுக்கும் சிமெண்ட் பிரிவில் வேலை பார்ப்பவர்களுக்கும் ஊதிய நிர்ணயமானது கிட்டத்தட்ட 400 ரூபாய் டிபரன்ஸ் உள்ளது. We are having the same cadre, but having differenr salaries and different payment; அதை வரும் வேஜ் போர்டிலாவது, இந்த ஆண்டாவது அந்த ஊதிய நிர்ணயக் குழுவானது, அவர்கள் இருவருக்கும் ஈகுவாலிட்டி பண்ணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு மட்டுமல்லாமல், சிவகாசியில் ஒரு ஈ.எஸ்.ஐ. ஆஸ்பிட்டல் டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டு மிக அழகாக செயல்பட்டு வந்தது. கடந்த இரண்டு ஆண்டு காலங்களிலே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, அங்கே என்னென்ன சேவைகள் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் விட்டுவிட்டு, அவர்கள் தங்கள் இஷ்டத்திற்கு அந்த ஆஸ்பிட்டலை ஒரு கயவர் கூட்டமாக மாற்றிவிட்டார்கள். அதை நான் ஏற்கெனவே பழைய அமைச்சர் அவர்களிடம் சொல்லி, அங்கே ஒரு டாக்டர் மீதும் நடவடிக்கை எடுத்தோம். இப்போது திரும்பியும் அதே நிலைமையில்தான் உள்ளது. அந்த ஈ.எஸ்.ஐ. ஆஸ்பிட்டலைப் பொறுத்தமட்டிலும் அங்கே சுற்றுவட்டாரத்திலே இருக்கிற பேக்டரி ஓனர்ஸ் எல்லாம் என்ன சொல்கிறார்கள் என்றால், கவர்மெண்டுக்கு இந்த ஆஸ்பிடலால் செலவுதான் ஏற்படுகிறது. எனவே நாங்களே இந்த ஈ.எஸ்.ஐ. ஆஸ்பிடலை நடத்துகிறோம்; தயவு செய்து அரசாங்கத்திடமிருந்து எங்களுக்கு அனுமதி வாங்கித் தாருங்கள் என்ற ஒரு

[திரு. ஜெ. பாலகங்காதரன்] [1992 ஏப்ரல் 20

கருத்து நிலவுகிறது. இந்தக் கருத்தைப் பொறுத்தமட்டில் நாம் தனியார்மயம் ஆக்கவேண்டுமென்று ஒரு எண்ணத்தில் உள்ள போது இந்தக்கருத்தை நாம் ஏற்றுக்கொண்டு, அந்த ஆஸ்பிடலை அவர்களுடைய, அந்த ஓனர்ஸ் அசோசியேஷனிடமே நாம் கொடுத்து விடலாம். அப்படியென்றால் அந்த ஈ.எஸ்.ஐ. ஆஸ்பிடலும் நன்றாக நடைபெறும். அங்கே இருக்கும் தொழிலாளர்களும் கண்டிப்பாக நல்ல ஒரு சலுகையைப் பெறுவார்கள். (மணியடிக்கப்பெற்றது). இன்னும் இரண்டு கருத்தை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சிவகாசியிலே ஒரு லேபர் கோர்ட் வேண்டும். எந்த விஷயமாக இருந்தாலும், இங்கேயிருந்து மதுரைக்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படி லேபர் கோர்ட்டுக்கு மதுரைக்கு செல்ல வேண்டுமென்றால் பஸ் கட்டணமாக போக வர, 10, 10 ரூபாய் ஆக, 20 ரூபாய் செலுத்த வேண்டிய ஒரு நிலைமை உள்ளது. அதை அந்த தொழிலாளர்கள் கண்டிப்பாக செலுத்த முடியாது. 20 ரூபாய் என்பது அவர்களுடைய ஒரு மாத சேவிங்ஸ், சேவிங்ஸே அவ்வளவுதான். மிச்சம் வைக்கிற தொகையே அவ்வளவுதான். அதனால் சிவகாசியிலேதான் அந்த லேபர் கோர்ட்டை வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்

இன்றைக்கு, இந்த சிமெண்ட் பாக்டரியை அரசாங்கம் ஜாயிண்ட் செக்டாரிடம் விட்டிருக்கிறதா ? இல்லையென்றால் தனியார் மயம் ஆக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய வேண்டும். ஏனென்றால் அங்கே ஒருசில இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் உண்ணாவிரதம் இருந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களெல்லாம் தேவையில்லாமல் உண்ணாவிரதம் இருந்துகொண்டு இருக்கிறார்கள். ஒரு சில இயக்கங்களை நாம் கண்டிப்பாக தடை செய்ய வேண்டும், எதற்கெடுத்தாலும் போராட்டம், போராட்டம் என்று சொல்லிவரும் இயக்கங்கள் அரசாங்கத்தையும் நஷ்டப்படுத்துகின்றன; தொழிற்சாலைகளையும் நஷ்டப்படுத்துகின்றன. தொழிலதிபர்களையும் நஷ்டப்படுத்தி வருகின்றன. தொழிலாளர்களும் சாப்பாட்டிற்கு வழியில்லாமல் கஷ்டப்படவேண்டிய நிலை ஏற்படுகிறது. ஒரு டம்ளர் பாலிலே ஒரு துளி விஷம் போல அவர்கள் எல்லாவற்றையும் கலக்கி, எல்லாவற்றையும் நாசப்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட தொழிற் சங்கங்களை கண்டிப்பாக தடை செய்ய வேண்டுமென்று கேட்டு, எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி, விடை பெறுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. செ. கு. தமிழரசன்.



[ஏப்ரல் 20

<u>திரு. செ. கு. தமிழரசன், :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் துறை மானியக் கோரிக்கையின் பேரிலே இந்திய குடியரசுக் கட்சியின் சார்பில் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு தந்த தங்களுக்கு என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய புரட்சித்தலைவியினுடைய அரசு மூடப்பட்ட தொழிற்சாலைகளைத் திறக்க வேண்டுமென்பதிலாகட்டும், தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்கும் நல்லுறவு இருக்க வேண்டும் என்பதிலாகட்டும், இந்தியாவிலேயே நம்முடைய தமிழ் மாநிலத்தை எல்லாவிதமான தொழில் மேம்பாடுகளிலும் முதல் மாநிலமாகக் கொண்டுவர வேண்டுமென்பதிலாகட்டும், இவர்கள் கொண்டிருக்கிற இந்த உன்னதமான எண்ணத்தை, லட்சியத்தை, நம்முடைய தமிழ் மாநில வளர்ச்சியிலே அக்கறையுள்ள எல்லோருமே பாராட்டியாக வேண்டும் ; வரவேற்க வேண்டும். அப்படிப்பட்ட உன்னத இலட்சியத்திற்காகக் கடும் உழைப்போடு இந்த மாநிலத்தை நடத்திச் சென்று கொண்டிருக்கிற நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களை நான் இத்தருணத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12.30

தொழிலாளர்களுக்கு நிர்வாகத்திலே பங்கு இருக்க வேண்டும்; அதை நோக்கி இந்த அரசு போக வேண்டும் என்பதுதான் இந்திய அரசியல் சட்டத்திலே வழிநடத்தும் கோட்பாடுகளிலே இருக்கின்ற ஒரு ஷரத்து. அரசியல் சட்டத்தை உருவாக்குகின்றபொழுது இந்த வழிநடத்தும் கோட்பாடுகளை உருவாக்கிய அரசியல் சட்ட தந்தை அண்ணல் அம்பேத்கார் அவர்கள் எல்லாத் தொழில் நிறுவனங்களிலும் தொழிலாளர்களுக்குப் பங்கு கிடைக்க வேண்டும்; அந்த உன்னத இலட்சியத்தை நோக்கி அரசு போக வேண்டுமென்று விரும்பினார்கள். அதை வழி நடத்தும் கோட்பாடுகளிலே சொன்னார்கள். அதை நினைத்துத்தான் அவர் இந்த அரசின் முதல் தொழிலாளர் நலத் துறை அமைச்சராக இருந்த பொழுது தொழிலாளர்களுக்கு 8மணிநேரவேலை; 8மணி நேரஓய்வு 8 மணி நேர உறக்கம்; என்கிற அந்த 8 மணி நேர சட்டத்தைக் கொண்டு வந்தார்கள், அது மட்டுமின்றி, பெண் தொழிலாளர்களுக்கு பிரசவ விடுமுறை, முத்தரப்பு பேச்சுவார்த்தை என்று இன்று நாம் சொல்கிறோமே, அந்த முத்தரப்பு பேச்சுவார்த்தை இவையெல்லாம், அன்றைக்கு சட்டத் தொழிலாளர் நலத் துறை அமைச்சராக இருந்த அண்ணல் அம்பேத்கார் அவர்கள் சட்டபூர்வமாக ஆக்கினார்கள்.

எனவே, அந்த வழியிலே நாம் தொழிலாளர்களை நிர்வாகத்திலே பங்கேற்கச் செய்கின்ற உன்னத இலட்சியத்தோடு, நம்முடைய அரசு முனைப்போடு செயல்பட வேண்டுமென்று, நான் வேண்டி, விரும்பிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தொழிலாளர்களை நாம் இரண்டு விதமாகப் பிரிக்கலாம், அமைப்பு ரீதியான தொழிலாளர்கள்; அமைப்பு அற்ற தொழிலாளர்கள். அமைப்பு ரீதியாக இருக்கின்ற தொழிலாளர்கள்தான் இன்றைக்கு இந்த அரசாங்கத்தினுடைய நன்மைகள், சட்டபூர்வமான சலுகைகள், உரிமைகள் ஆகிய எல்லாவற்றையுமே அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த அமைப்பு ரீதியாக இல்லாத தொழிலாளர்கள் இருக்கிறார்களே அவர்கள் பாவம், சலுகைகளையும் அனுபவிப்பதில்லை; எந்த சட்டபூர்வமான விஷயங்களுமே அவர்களுக்குத் தெரிவதும் இல்லை. வங்கித் தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், ஒரு நிறுவனத்திலே வேலை செய்கிறவர்கள், இப்படி அமைப்பு ரீதியாக இருப்பவர்களுக்கே ஏராளமான, சலுகைகளை நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால், அமைப்பு ரீதியாக இல்லாத துப்புரவுத் தொழிலாளர்கள், கட்டிடத் தொழிலாளர்கள், ரிக்ஷாத் தொழிலாளர்கள், மூட்டை தூக்கும் தொழிலாளர்கள், வீட்டு வேலை செய்பவர்கள், செருப்பு தைக்கின்ற தொழிலாளர்கள், சுரங்கத் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், பிணம் சுடுகின்றவர்கள் என்று இப்படி ஏராளமாகச் சொல்லிக் கொண்டே போகலாம். மிகமிக முக்கியமான, இன்றியமையாத, இழிவாகச் சொல்லப்படுகின்ற கஷ்டமான வேலைகளைச் செய்து கொண்டிருக்கின்ற, அமைப்பு ரீதியில் இல்லாத தொழிலாளர்கள் நாளுக்கு நாள் வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாம் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேகூட இதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஏராளமான அத்தியாவசியமான தொழிலைச் செய்துகொண்டிருக்கின்ற இந்தத் தொழில்களெல்லாம் சட்டபூர்வமாகப் புறக்கணிக்கப்படுவதாகவே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இவர்களுக்கு எந்த சட்டபூர்வமான நன்மைகளும் கிடையாது; சட்டபூர்வமாகத்தான் இவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். அதே நேரத்திலே சமூக ரீதியாகவும் இவர்கள் புறக்கணிக்கப் படுகிறார்கள்.

மலம் வாருகின்ற தொழிலாளி இருக்கிறானே அந்தத் தொழிலாளியை இந்தச் சமூகம் எந்த அளவிற்கு நடத்துகிறது என்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ரிக்ஷாத் தொழிலாளியை, சலவைத் தொழிலாளியை, பிணம் சுடுகின்றவனை என்று இப்படி இவர்களெல்லாம் செய்கின்ற



தொழில்கள் முக்கியமான தொழில்கள் என்றாலும்கூட, இழிவாகக் கருதப்படுகின்ற தொழில்களைச் செய்து கொண்டிருக்கின்ற தொழிலாளர்களை இந்தச் சமூகமும், சட்டமும் புறக்கணித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமை மாறவேண்டும். இந்த 20-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேகூட, விஞ்ஞான பூர்வமாகக் குழந்தையையே பெற்றுக் கொடுக்கின்ற இந்தக் காலத்திலேகூட, சந்திர மண்டலத்திலே கால் வைக்கிற இந்தக் காலத்திலே கூட, இன்னமும் பல பகுதிகளிலே மனிதனுடைய மலத்தை மனிதனே சுமந்து கொண்டு இருக்கின்றான். இந்த கொடுமை துப்புரவுத் தொழிலாளர்களிடையே இருந்து கொண்டிருக்கிறது. எனவே, இதை ஒழிக்க வேண்டும். மத்திய அரசிலேகூட, கடந்த சில மாதங்களுக்கு முன்பு இந்த நிலையை மேற்கொண்டு, பிரதம அமைச்சரவர்கள் ஒரு சுற்றறிக்கையை அனுப்பியிருக்கிறார்கள். இந்தத் தொழிலை நிச்சயமாக ஒழித்தாக வேண்டுமென்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதேபோல், மூட்டை தூக்குகின்ற தொழிலாளர் நம்முடைய சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிலே மட்டும் 12,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஆண்டாண்டுக் காலமாக, 100 ஆண்டுக் காலமாக மூட்டை தூக்குகின்றவர்களாக இருக்கிறார்கள். இவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்ற கோரிக்கையைப் பல சந்தர்ப்பங்களிலே வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். பல நேரங்களிலே மூட்டை தூக்குகின்ற தொழிலாளர்கள், மூட்டையிலே அடிபட்டு செத்துக்கூடப் போகிறார்கள். கால் ஒடிந்து போகிறது; முதுகு ஒடிந்து போகிறது; பல விபத்துக்கள் எல்லாம் ஏற்படுகின்றன. ஆனால் அவர்கள் நிரந்தரமாகாமலேயே இருக்கிறார்கள். மூட்டை தூக்கும் தொழிலாளர்கள் மட்டும் ஒரு நாளைக்கு வேலை நிறுத்தம் செய்தால் ஒரு இடத்திலேயிருந்து இன்னொரு இடத்திற்கு அரிசி போக முடியாது; கோதுமை போக முடியாது; மண்ணெண்ணெய் போக முடியாது, எதுவும் போக முடியாது. பெரிய ஒரு கஷ்ட காலமே உருவாகிவிடும். ஆனால், அவர்களுடைய பிரச்சினைகளை நாம் பார்ப்பதே இல்லை. எனவே மூட்டை தூக்குகிற தொழிலாளர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்பதை, நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதேபோல, மனிதனை உட்கார வைத்துக்கொண்டு, ரிக்ஷா இழுக்கிற கொடுமை இருக்கிறதே அதுகூட இப்போது இருந்து கொண்டிருக்கிறது. பல்லக்கிலே போகிற நிலைமையே இருக்கக் கூடாது என்று அந்தக் காலத்திலே சுவாமி விவேகானந்தர் போன்றவர்கள் எல்லாம் சொன்னார்கள். ஒருவரை உட்கார வைத்துக் கொண்டு இன்னொருவர்; பல்லக்குத் தூக்குகிறாரே, இந்த நிலைமை மாற வேண்டுமென்று...............

[1992 ஏப்ரல் 20

பிற்பகல் 12-35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மனிதனை உட்காரவைத்து, ரிக்ஷா இழுக்கிற கொடுமை இப்போது நம் தமிழகத்திலே எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. செ. கு. தமிழரசன்: நான் சொல்வது ரிக்ஷா மிதிப்பதைத்தான். அது மட்டும் என்ன? இழுப்பது என்றாலும் மிதிப்பது என்றாலும் அதேதான். இயந்திரம் பொருத்தப்பட வேண்டும். கட்டாயமாக இயந்திரம் பொருத்தப்பட்ட ரிக்ஷாக்களைத்தான் பயன்படுத்தவேண்டும். மிதிப்பது, இழுப்பது என்பது கூடாது என்பததான் என்னுடைய கோரிக்கை. இயந்திரம் வாங்குவது என்றால், 1,500 ரூபாய், 2,000 ரூபாய் ஆகும். கட்டாயமாக இயந்திரம் பொருத்தப்பட்ட ரிக்ஷாத்தான் இருக்க வேண்டும் என்கிற நிலைமையைக் கொண்டு வர வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கோரிக்கையை வைக்கிறேன். அதேபோல், தோல் பதனிடும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள், சம்புவராயர் மாவட்டத்திலும், திண்டுக்கல் அண்ணா மாவட்டத்திலும் இருக்கிறார்கள். வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலும் இருக்கிறார்கள். இந்தத் தோல் பதனிடும் தொழிலாளர்கள் இருக்கிறார்களே, அவர்கள் காலையிலே இருந்து மாலை வரையிலும், ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள்தான் அதிகமாக இருக்கிறர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள் தோலைப் பதப்படுத்துவது, அதிலே இருக்கிற இராசயனக் கலவையிலே கைகளை வைத்து, அவர்களுடைய கைகளை நீங்கள் பார்த்தால், குஷ்டரோகிக் கைகளைப் போல இருக்கும். அவர்களை வேலையிலிருந்து வருகிறபோது, அந்தக் கைகளின் வண்ணமே மாறி விடுகிறது. இரசாயனக் கலவையிலே அவர்களுடைய கைகளை ஊறவைத்து, ஊறவைத்து அவர்களுடைய கைகள், குஷ்டரோகிகளின் கைகளைப் போல ஆகி விடுகிறது. எனவே, இந்த நிலைமையை மாற்றுவதற்கு அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். அவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும். அவர்கள் எல்லாம் காண்டிராக்ட் லேபர்ஸாக இருந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு பெரிய கஷ்டத்தைச் செய்கிற அவர்கள் காண்டிராக்ட். லேபர்ஸாக இருக்கிறார்கள்; அவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்,



[திரு. செ. கு. தமிழரசன்] [ஏயரல் 20

அதேபோல். தீப்பெட்டித் தொழிற்சாலைகளிலே, வெடி மருந்து தயாரிக்கிற பல தொழிற்சாலைகளிலே, 14 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் முறைகேடாக வேலைக்குப் பயன்படுத்தப்படுகிறார்கள், அங்கே ஏராளமான எக்ஸ்பிளாய்டேஷன்ஸ்'—சுரண்டல்கள் இருக்கின்றன, நம்முடைய அரசியல் சட்டமும் கூறுகிறது; பல தொழிலாளர் சட்டங்களும் சொல்கின்றன; வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன, 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களை எந்தக் காரணத்தை முன்னிட்டும் தொழிற்சாலைகளிலே வைக்கக் கூடாது என்று, ஆனால், பல இடங்களிலும் இதுதான் நடந்து கொண்டிருக்கிறது, வீட்டு வேலைக்குப் பயன்படுத்துகிறவர்களிலே நூற்றுக்கு நூறு விழுக்காடு 14 வயதுக்குப்பட்டவர்களாகத்தான் இருப்பார்கள், எனவே, இந்த நிலைமை மாற கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்,

எல்லா நிறுவனங்களிலும், அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகள் ஆகிய எல்லாவற்றிலுமே எஸ்,ஸி., எஸ்.டி, நலச்சங்கங்கள் இருக்கின்றன. இந்தஎஸ்,ஸி. எஸ்.டி, நலச் சங்கத்தை தொழிற்சங்கமாக அங்கீகரிக்க வேண்டும் என்கிற கோரிக்கையை நான் பல முறை இந்த மன்றத்திலும் வலியுறுத்தியிருக்கிறேன். இப்படிப்பட்ட ஒரு கோரிக்கை தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. . மத்தியிலே கூட, இரயில்வே நிர்வாகத்திலே எஸ்.ஸி., எஸ்.டி, தொழிலாளர் சங்கம், தொழிற் சங்கமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல மாநில அளவிலே இந்த எஸ்.ஸி., எஸ்.டி. தொழிலாளர் நலச் சங்கத்தை தொழிற் சங்கமாக அங்கீகரிக்க வேண்டும் என்கிற கோரிக்கையை நான் இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்,

நம்முடைய வேலைவாய்ப்புத் துறையிலே லட்சக் கணக்கானவர்கள் பதிவு செய்துவிட்டு, வேலைக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். சமீபத்திலே ஒரு புதுக் கவிதை படித்தேன், ஒரு கவிஞன் எழுதுகிறான்; கோயிலுக்குப் போவது மட்டுமா மூட நம்பிக்கை? வேலைவாய்ப்பு அலுவலகத்துக்குப் போவதும்தான்மூட நம்பிக்கைஎன்றுஅந்தஅளவுக்குஇந்தத்தொகை வேலை வாய்ப்புக்குப் பதிவு செய்திருக்கிறவர்களின் தொகை—பெருகிக் கொண்டே இருக்கிறது. ஒரு நிலைமை என்னமென்றால், சமூகப் பின்னணி இல்லாதவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பு நிறுவனத்தைத் தவிர, வேறு நம்பிக்கையே கிடையாது. ஒரு சோஷியல் பேக்-கிரவுண்ட் இருப்பவர்கள் எப்படியாவது ஒரு வேலைக்குப் போகிறார்கள். ஒரு வியாபாரம் ஆரம்பிப்பார்கள். ஏதோ ஒரு வகையிலே அவர்கள் வேலை பெற்று விடுகிறார்கள். நலிந்த பிரிவினர் சமுதாயத்தின் அடித்தளத்திலே இருட்பவர்கள் இவர்களுக்கெல்லாம் அவர்கள் படித்தவர்களாக இருந்தாலும், அவர்களுக்கு ஒரே நம்பிக்கை வேலைவாய்ப்புத் துறையின் மூலம் ஏதாவது வேலை பெறலாம் என்ற நம்பிக்கைதான். அவர்களுக்கு அந்த நம்பிக்கை வீணாகிறபோது அவர்கள்

[திரு. செ. கு. தமிழரசன்] [1992 ஏப்ரல் 20

என்ன செய்ய முடியும்? படித்துவிட்டு, வேலையில்லாமல் எவ்வளவு காலம் இருக்க முடியும்? வேறு வழியும் கிடையாது. எனவே, நான் சொல்ல விரும்புகிறேன், தனியார் நிறுவனங்கள் நம்முடைய அரசிடமிருந்து கோடிக்கணக்கிலே பணம் வாங்கி செயல்படுகின்றன. பல தொழிற்சாலைகள் அவ்வாறு செயல்படுகின்றன. எந்தத் தொழிற்சாலையானாலும், எந்த நிறுவனமானாலும் அரசினுடைய உதவி இல்லாமல் செயல்படவே முடியாது. அப்படிப்பட்ட நிலைமையிலே எல்லாத் தொழிற்சாலைகளிலும், நிறுவனங்களிலும் கவர்மெண்டுக்கு என்று ஒரு 'கோட்டா' வைக்கலாம்; இவ்வளவு பேர்களுக்கு நீங்கள் வேலை தர வேண்டும்; எங்களிடமிருந்து இத்தனை கோடி ரூபாய் நீங்கள் கடன் பெற்றிருக்கிறீர்கள்; இவ்வளவு பேர்களுக்கு வேலை தர வேண்டும் என்கிற ஒரு நிலைமையை உருவாக்கி' அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்கு நீங்கள் முற்பட வேண்டும் என்பதை நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்தவரையிலே, தொழிலாளர்கள் பேரிலே எவ்வளவு அக்கறை வைத்திருக்கிறார்கள் என்பதை நாம் அரசின் ஒவ்வொரு செயல்பாட்டிலும் உணர முடிகிறது. ஒரு துப்புரவுத் தொழிலாளருடைய மகன்கூட எஞ்சினியராகவோ, டாக்டராகவோ வரவேண்டும் என்கிற ஒரு பெரிய உன்னத லட்சியத்தோடு, அவன் துப்புரவுத் தொழிலாளருடைய மகனாக இருந்தாலும், அது ஹாஸ்பிடலாக இருந்தாலும், அது முனிசிபாலிடியாக இருந்தாலும், அவனுக்கெல்லாம் அந்தப் புதிய 'மெடிகல் டிபார்ட்மென்டி'லே தொடங்கப்படுகிற கல்லூரியிலும், 'டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மென்டிலே தொடங்கப்படுகிற கல்லூரியிலும் முன்னுரிமை வழங்கியிருக்கிற பெரிய மனப்பான்மையை, தாராள மனப்பான்மையை நாம் பாராட்டியே ஆக வேண்டும். அப்படிப்பட்ட முழுமனதோடு, உன்னத இலட்சியத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிற நம்முடைய முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் இப்படிப்பட்ட சமுதாயத்திலே பின்னடைந்திருக்கிற ஏழை அமைப்பு ரீதிக்காகவும் அப்பாற்பட்ட அந்தத் தொழிலாளர்களுடைய நலன்களைப் பாதுகாக்க வேண்டும். அவர்களுக்குச் சட்டபூர்வமான உரிமைகளை வழங்க வேண்டும் என்கிற கோரிக்கையை முன்வைத்து நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

பிற்பகல் 12–40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சஞ்சய் ராமசாமி.

**Thiru Sanjay Ramasamy :** Hon'ble Deputy Speaker Sir, I thank you for giving me an opportunity to speak on the Policy Note on Labour Factories, Employment and Training.



[Thiru Sanjay Ramasamy] [ஏப்ரல் 20

Labour and Industry are the prime pillers of any economy. If one does not perform well the other automatically suffers and this leads to a down fall in the economy in general. This Government by its recent actions has proved that it is committed in strengthening both these pillers with the ultimate aim of making Tamil Nadu a prosperous Industrial State. I have no doubt that at the rate that they are proceeding, they would achieve it within a short span of time. The major problem existing in Industries in Kamarajar District with specific references to the match factories is the child labour.

Personally it is my view that child labour should not be allowed at any stage at all. We have no business to allow children to be employed in these factories when we want them to attend schools because they are going to be the future of this country. However, due to many constrains it is not possible in total to abolish the child labour. But wherever there is child labour we have to ensure that adequate measures of safety are given to them. Safety measures regarding child labour can be given in large Factories. But there are a number of factories in villages which are housed in huts. which may go unnoticed to the authorities. It is in these huts where matches are being made that children are being employed in large numbers. It is to them that we have to extend all the safety measures. Normally all the authorities look into the major factories and they give a report stating that all the safety measures are adhered to. But Hon'ble Speaker I have witnessed myself that a number of children are just working without any basic security measures. We are endangering their lives in a large way. They are prone to sulphur poisoning and to various other illness. I appeal to the Hon'ble Labour Minister to put an end to this. In fact if it is possible for him to stop child labour altogether I appeal to him to do everything within his powers to do so. This Government has been very much interested in the labour force as a whole. They have always seen to it that wherever the Factories are closed that they are re-opened and thereby rehabilitating the employees who have lost work due to the fact that the factories have been closed. Examples of this are K.C.P., Standard Motors, and I am sure that in due course there would be another Company that has to be opened and that is MALCO. A major success of this Government and with the able guidance of the Hon'ble Chief Minister was the re-opening of the Binny Mills.

பிற்பகல் 12.45

When there is a report given on this Government's activities, it will definitely be an achievement that will be distinctly marked. While we give a lot of importance to the labour forces in this State, I feel, I should appeal to the labour forces at the same time, not to take the Government's earnest intentions of helping the labour forces as a

[Thiru Sanjay Ramasamy] [ஏப்ரல் 20

sign of weakness. The labour forces in to-day's country also has to be conscious of the fact that the economy on the whole in the country is not the best of situations. Therefore, while making their claims the labour forces also have to take into consideration the various problems that any industry would face. It is easy to make claims. It is easy to go on strike. But, I appeal to the labour forces 'please think about the economy and the country as a whole before taking any drastic actions like going on strike. Any problem I am sure, can be sorted out mutally, through discussions and through understanding. When an industry thrives, the labour force is also benefitted. Therefore, I appeal through this Honourable House, to all the labour unions in this State to please think about the economic state of Tamil Nadu and the country as a whole before taking any drastic actions when there is any problem between you and your employers.

Honourable Labour Minister, I wish to refer to a problem that occured in Virudhunagar and until this date the problem has not been solved. Virudhunagar thrives on the market and the people who market products there. But, at present, there is a problem between the labourers there and the marketeers there. This is in relation to the wages being paid by the marketeers to their labourers. Despite all efforts by the former Collector of Virudhunagar there has still been no conclusion to this problem and everyday there has been some kind of agitation or the other.

I appeal to the Honourable Labour Minister to look into this problem and enable both the sides to reach an understanding. Another problem that is existing is that, as my colleague from Sivakasi stated, in order to go to a labour Court, we have to travel all the way to Madurai. I request the Honourable Labour Minister to ensure that there is a Labour Court at every district and may I appeal that this Labour Court should be held at the Capital of every district and in this case, Virudhunagar. (Interruption) The Honourable Law Minister is asking me why not Sivakasi. As I have already told, him, we have already wanted a district Court also at Virudhunagar. This is simply because the Collectorate and the Police Headquarters are housed in Virudhunagar. Therefore, please consider this aspect and this is the most important aspect.

As I have already spoken on the debate on Law, about the distance between all the places if the Labour Court is kept in Virudhunagar the accessibility to all the other people living in and around the district is easier than if you keep it in Srivilliputthur or Sivakasi. So, please keep this Labour Court at Virudhunagar, if and when you decide to do so. (The gong was sounded).



1992 ஏப்ரல் 20] [Thiru Sanjay Ramasamy]

பிற்பகல் 12–20

Before concluding, I wish to state something, though it does not have anything to do with the Policy Note on Labour. But, as this is an opportunity for me to express that, I wish to do so. The press, recently, has been criticising the Government of trying to prevent their freedom. But, I wish to state this. We are friends of yours; the Government is your friend. But, to every friendship, there is a limitation. Do not exceed that. Try to think about what you say and, then print it. We do not wish to restrict the freedom. When I say 'we', I am saying that none of the Members of this House would like to restrict the freedom of the Press, in any way. But, there is a limit to the extent of the ridiculours articles that you have been writing, about, not only me, but about every Members of this House. That has got to stop. Through the Honerable Deputy Speaker, I appeal to my friends in the Press to stop doing that and to stop creticising the Government for something that they are not doing. Thank you.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. வே. தம்புசாமி.

<u>திரு. வே. தம்புசாமி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிற மானியக் கோரிக்கைமீது பேசுவதற்கு அனுமதி தந்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு என்று எவ்வளவோ சட்டங்கள் இருந்தும், சட்டத் திருத்தங்கள் இருந்தும் அவை முழுமையும் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு உதவி செய்யவில்லை என்பதுதான் இன்றையதினம் இருக்கக்கூடிய நடைமுறைகள் ஆகும். பொதுவாக, தொழிற்சாலைகளை அவ்வப்போது யார், எப்போது வேண்டுமானாலும் மூடிவிட்டுப்போய் விடலாம். அப்படி மூடுகின்ற தொழிற்சாலையை அரசு விரைவாகக்கைப்பற்றுவதற்கோ, சட்டவிரோதமாக மூடிவிட்டார்கள் என்று அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கோ எந்தவிதமான சட்டப் பாதுகாப்பும் இல்லை என்பதுதான் இருக்கின்ற நடைமுறைகள் ஆகும். உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டுமென்றால் வடலூர் சேஷசாயி நிறுவனம் மூடப்பட்டு ஏறக்குறைய 2 ஆண்டுக் காலம் ஆகிறது. அதிலே பணியாற்றிய 2,000 தொழிலாளர்கள் இன்றையதினம் பட்டினி கிடக்கிறார்கள். தொழிலாளர்கள், தொழிலாளர்களுடைய தலைவர்கள் தொடர்ந்து எவ்வளவோ முயற்சி செய்தும்கூட, அரசுத்தரப்பிலே அதிகாரிகள் முயற்சி செய்தும்கூட அந்த நிர்வாகம் இதுவரையிலும் அந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்கு எந்தவிதமான உத்திரவாதமும் ஏற்படவில்லை. அவர்கள் கட்டுப்படவும் இல்லை. அதைத் திறப்பதற்கு அவர்கள் தயாராகவும் இல்லை.

[திரு. வே. தம்புசாமி] [1992 ஏப்ரல் 20

அதேபோன்று பல்வேறு தொழிற்சாலைகள் தொடர்ந்து மூடப்படுகின்ற ஒரு அபாய சூழ்நிலைமை இருக்கிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது. அப்படி மூடப்படுகின்ற அந்தத் தொழிற்சாலையை அரசு கைப்பற்றுவதற்கான சட்டத் திருத்தங்கள் கொண்டுவர வேண்டும். எந்தத் தேதியில் அவர்கள் மூடுகிறார்களோ அதே தேதியில் அரசு கைப்பற்றி அந்தத் தொழிலாளர்கள் வேலை இழக்காமல் அதிலேயே அவர்களுக்கு வேலை கொடுக்கக்கூடிய வகையிலே சட்டத் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். அதேபோன்று தொழிற் சங்க சட்டங்கள். தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக எவ்வளவோ சட்டங்கள் இருக்கின்றன. ஆனால், அந்தச் சட்டங்கள் முழுமையும் அந்தத் தொழிலாளர்களைப்பாதுகாப்பதற்கு உதவிகரமாக இருக்கின்றனவா என்பதுதான் நம் முன்னால் இருக்கக்கூடிய கேள்வி ஆகும். அந்தச் சட்டங்களையும் அமுல்படுத்துவதிலே எவ்வளவோ காலதாமதம், தேக்கங்கள் ஏற்படுகின்றன என்பதையும் நாம் மறந்துவிட முடியாது. இந்தச் சட்டங்களை அமுல்படுத்துவதற்கு இன்றைய தினம் இருக்கின்ற நீதிமன்றங்கள் போதுமானதாக இல்லை.

பிற்பகல் 12.55

திருச்சியிலே ஒரு நீதிமன்றம் இருக்கிறது. நாகையிலிருந்தோ மயிலாடு துறையிலிருந்தோ அல்லது வேதாரண்யத்திலிருந்தோ வரக்கூடிய தொழிலாளர்கள் தங்களுக்கு வேலையிலிருந்து நீக்கப்படுகிறபோது பாதுகாப்பு கிடைக்க வேண்டுமென்றால், அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகள் மறுக்கப்படுகிறபோது அதை எடுத்துச்சொல்லி தீர்ப்புப் பெற வேண்டுமென்றால், வேலையற்ற அந்தத் தொழிலாளர்களால் முடியுமா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். அதனால், மாவட்டந்தோறும் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு, அந்தச் சட்டத்தை அமுல் படுத்துவதற்கு நீதிமன்றங்களை ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் தொழிலாளர் நல நீதிமன்றங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, தொழிலாளர்களுக்கு அந்த நீதிமன்றத்திலே நீண்டகாலத்திற்குப் பிறகு தீர்ப்பு கிடைத்தாலும் அந்தத் தீர்ப்பை அமுல்படுத்துவது கிடையாது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், அரசுத் தரப்பிலே கூட அமுல் படுத்துவது கிடையாது. மின்சாரத் துறையைச் சேர்ந்தவர்கள் கோர்ட்டுக்குச் சென்று தீர்ப்பு வாங்கினார்கள். அந்தத் தீர்ப்பை அரசே அமுல்படுத்தவில்லை.

அதைப்போன்று நெல் கொள்முதல் நிலையங்களில் இருக்கிற ஊழியர்கள் கோர்ட்டுக்குச் சென்று தீர்ப்பு வாங்கினார்கள்.



1992 ஏப்ரல் 20] [திரு.வே. தம்புசாமி]

அதை அரசு அமுல்படுத்தவில்லை. அந்தமாதிரி எண்ணற்ற நிறுவனங்களில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் தங்களுக்குப் பாதிப்பு வருகிறபோது அவர்கள் நீதிமன்றங்களுக்குச் சென்று தீர்ப்பு பெறுகிறபோது அந்தத் தீர்ப்பை அமுல்படுத்தாத நிலைமைதான் இருக்கிறது. நீதிமன்றம் இருந்தாலும் சட்டத்தின்படி நியாயமான தீர்ப்பு கிடைத்தாலும் அதை அமுல்படுத்தாத போக்கு இருக்கிறது; நீதிமன்றங்களை மதிக்காத போக்கு இருக்கிறது. அது தவிர்க்கப்பட வேண்டும்; அந்த நீதிமன்றத் தீர்ப்பு அமுல்படுத்தப்பட வேண்டும். எந்த அரசுத் துறைத் தொழிலாளர்களுக்குத் தீர்ப்பு கிடைத்திருக்கிறதோ அந்தத் தீர்ப்பை விரைவாக அமுல்படுத்த வேண்டும். அரசுத் துறையாக இருந்தாலும் சரி, தனியார் துறையாக இருந்தாலும் சரி, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, நீதிமன்றங்களுக்குச் செல்லுகின்றபோது நீண்டகாலம் பிடிக்காமல் குறைந்த கால அளவை நிர்ணயிக்க வேண்டும். தொழிலாளர் நல நீதிமன்றம் என்று சொல்லுகிறபோது ஏறத்தாழ 4 ஆண்டு, 5 ஆண்டுகள் அந்த நீதிமன்றத்திலே வழக்கு தேங்கிவிடுகிறது. இந்த நீண்டகால இடைவெளியைத் தவிர்த்து, ஒரு குறிப்பிட்ட கால வரையறையை நிர்ணயித்து, அந்த கால வரையறைக்குள் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும். அது நல்லதோ, கெட்டதோ, எதுவாக இருந்தாலும் குறிப்பிட்ட கால வரையறைக்குள் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும்.

அதைபோல, தொழிலாளர்கள் என்று சொல்லும்போது இன்றையதினம் "காண்ட்ராக்ட்" தொழிலாளர்கள் முறை என்பது வேகமாகப் புகுத்தப்படுகிறது. அரசுத் துறையாக இருந்தாலும் கூட திடீர் திடீரென்று ஒப்பந்தத் தொழிலாளர்களை நியமிக்கின்ற முறை இருக்கிறது. இப்படி இடைக்கால அல்லது தற்காலிகத் தொழிலாளர்களை ஒப்பந்த முறையில் நியமிப்பது தவிர்க்கப்பட வேண்டும். மின்சாரத் துறையிலே காண்ட்ராக்ட் தொழிலாளர்களை வைக்கிறார்கள். பொதுப் பணித் துறையிலே காண்ட்ராக்ட் தொழிலாளர்களை நியமிக்கிறார்கள். அதைப்போன்று போக்குவரத்துத் துறையிலும் தற்காலிகப் பணியாளர்களை வைக்கிறார்கள். இப்படிப்பட்ட தொழிலாளர்களை ஒரு குறிப்பிட்ட காலம் வரை வைத்துவிட்டு, அந்தக் காலத்தில் வேலை வாங்கிவிட்டு, அவர்களைத் திருப்பி அனுப்பிவிடுகிறார்கள். மீண்டும் புதிதாக எடுக்கிறார்கள்; திருப்பி அனுப்புகிறார்கள். அந்த நிலை மாற்றப்பட வேண்டும். அப்படிப்பட்ட தற்காலிகப் பணியாளர்களை நிரந்தரமாக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசுத் துறையில் இருப்பது போன்று தனியார் துறையிலும் ஒப்பந்தப் பணியாளர்களைத் தற்காலிகமாக நியமிக்கிறார்கள், குறிப்பிட்ட காலம் முடிந்தவுடன் அவர்களைப்பணிநீக்கம் செய்

றார்கள். அந்த நிலைமையை மாற்றி, அங்கேயும் அவர்களை நிரந்தரமாக்க வேண்டும் அந்தத் தொழிலாளர்களின் வேலைக்கு உத்தரவாதம் ஏற்படுத்த வேண்டும். அவர்களுடைய சம்பளத்திற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

மேலும், கான்ட்ராக்ட் முறை இருக்கிறதே, அந்தக் கான்ட்ராக்ட் முறையிலே வேலை செய்யக்கூடிய, பணியாளர்களாக இருக்கக்கூடியவர்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள். ஏற்கெனவே 3 மணி நேரம் வேலை என்று இருந்தாலும் 10 மணி நேரம், 12 மணி நேரம் வேலை வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இன்றைக்குப் பல்வேறு சிறுதொழில்கள் கான்ட்ராக்ட் முறையிலேதான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், திருச்சியிலே இருக்கிற பெல் நிறுவனத்திற்கு கும்பகோணத்தில் ஏறத்தாழ 20, 30 சிறு தொழில் நிறுவனங்கள் இருக்கின்றன. பெல் நிறுவனத்திற்கு வேண்டிய சிறுபாகங்களை அங்கே உற்பத்தி செய்கிறார்கள். அங்கே 20 பேர்களை வைத்து வேலை செய்தால் சட்டத்திற்கு உட்படுவார்கள் என்பதால் 15 பேர், 16 பேர், 17 பேர்களை வேலைக்கு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை எப்போது வேண்டுமானாலும் வேலைக்குச் சேர்த்துக் கொள்வார்கள்; எப்போது வேண்டுமானாலும் வேலையிலிருந்து நீக்குவார்கள்.

அதைப்போன்று சிறு தொழில் நிறுவனங்கள் நிறைய இருக்கின்றன. எவர்சில்வர் சிறு தொழில் இருக்கிறது, பித்தளைப் பாத்திர சிறு தொழில் இருக்கிறது. அந்த மாதிரியான சிறு தொழில் நிறுவனங்களில் பணியாற்றக்கூடியவர்களுக்கு எந்த விதமான பாதுகாப்பும் கிடையாது, வேலைக்கு உத்தரவாதமும் கிடையாது, சம்பளத்திற்கு உத்தரவாதமும் கிடையாது. இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு எதிர்காலத்திலே சம்பளத்திற்கு உத்தரவாதம், வேலைக்கு உத்தரவாதம் என்ற அளவுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். அந்தமாதிரியான தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் தொடர்ந்து பல்வேறு கோரிக்கைகளுக்காக இடைவிடாமல் போராடுகின்ற சூழ்நிலை இருக்கிறது என்பதை நாம் அறிவோம். எனவே வரக்கூடிய பிரச்சினைகளை முன்னமேயே அறிந்து அந்தப் பிரச்சினைகள் எந்தத் தன்மையில் இருக்கின்றன பதை அறிந்து, அவர்களுடைய நியாயமான கோரிக்கைகள் என்ன என்பதை அறிந்து, அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு, தனியாராக இருந்தாலும், அரசுத் துறையாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அப்படி நடவடிக்கை எடுக்கும் போது, எந்தத் தொழிற்சாலைகளிலிருந்து அல்லது எந்த அரங்கத்திலிருந்து அல்லது அங்கே பணியாற்றுகிற தொழிலாளர்களிடமிருந்து கோரிக்கை வருகிறதோ அந்த தொழிற் சங்கத் தலைவர்களுடன் அல்லது அந்தத் தொழிற்சாலை ஊழியர்களுடன் அரசுத் தரப்பில் அல்லது தொழிற்சாலை தரப்பில் ஒரு குழு மூலம் பேசி, பிரச்சினைகள் பரிசீலிக்கப்பட்டு, அந்தக் கோரிக்கைகளை, நியாயமான கோரிக்கைகளை ஏற்று அமல்படுத்துவதற்கு விரைவாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 1–00

அடுத்து தொழிலாளர்கள் என்ற பெயரில் இன்று சிறுவர்கள் கடுமையான பணிகளிலே அமர்த்தப்பட்டு கசக்கிப் பிழியப்படுகிறார்கள் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். பொதுவாக தீப்பெட்டித் தொழிற்சாலையாக இருந்தாலும். பேப்பர் தொழிற்சாலையாக இருந்தாலும், ஓட்டலாக இருந்தாலும், ரொட்டி தயாரிக்கும் தொழிற்சாலையாக இருந்தாலும் அல்லது வேறு தொழிலாக இருந்தாலும் 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள், அவர்களுக்குச் சம்பளம் மிகக் குறைவு. சிறுவர்களை வேலைக்கு அமர்த்தக்கூடாது என்று ஒரு சட்டம் இருந்தும்கூட அதை யாரும் மதிப்பது கிடையாது. சாதாரணமாக சென்னையிலே உள்ள ஓட்டல்களிலே பார்த்தால் இலை எடுக்கக்கூடியவர்கள், பெஞ்சு துடைக்கக் கூடியவர்கள் எல்லாம் 10 வயது, 12 வயது சிறுவர்கள்தான். அவர்களுக்குக் குறைத்து சம்பளம் கொடுக்கலாம். அவர்கள் கேட்கமாட்டார்கள். ஏதோ பசிக்கு உணவு கொடுத்தால் போதும். அந்தமாதிரியான நிலைமையிலேதான் அனைத்து தொழில்களிலும் இன்றைக்கு சிறுவர்கள் வேலை வாங்கப்படுகிறார்கள், அப்படி வேலை வாங்கக்கூடாது என்று சட்டம் இருந்தாலும்கூட, அதையாரும் மதிப்பது கிடையாது. எனவே இப்படிச் சிறுவர்களை வேலை வாங்குவதற்குத் தடை விதிக்க வேண்டும். அப்படி வேலைக்கு வைத்திருக்கிறவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் கொள்கைக் குறிப்பில் 15 ரூபாய்க்குக் குறையாமல் சம்பளம் கிடைப்பதற்கான உததரவாதம் செய்யப்பட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது. ஆனால் இன்றையதினம் விலைவாசிப்புள்ளி அடிப்படையிலே பார்த்தால் ஏறத்தாழ ஒரு நாளைக்கு சம்பளம் 30, 35 ரூபாய் கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, குறைந்தபட்சம் 15 ரூபாய் என்பதை மாற்றி 25 ரூபாய் அளவுக்குத் தொழிலாளர்களுக்குக் கிடைப்பதற்நான ஒரு உத்தரவாதத்தை அரசு ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுகொள்கிறேன்.

அடுத்து சிறு தொழில்கள். சிறு தொழில்கள் என்கிறபோது இன்றையதினம் சிறிய தொழில்கள் பெரிய தொழில்களோடு போட்டிபோட முடியவில்லை. அதனால் சிறிய தொழில்கள் முழுமையும் நசிந்து, அந்தச் சிறிய தொழில்களுக்காகக் கடன் பெற்றவர்கள் இன்றையதினம் கடனாளியாக மாறும் நிலைமை இருக்கிறது. அவற்றைப் பாதுகாத்து, இரண்டு தொழில்களுக்கும் எந்தவிதமான முரண்பாடும் வராமல், ஒரு புறத்தில் சிறிய தொழில் வளர்ந்து, இன்னொரு புறத்தில் பெரிய தொழில் வளர்ந்து, இரண்டும் செயல்படக்கூடிய ஒரு புதிய திட்டத்தை உருவாக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

அடுத்து விவசாயத் தொழிலாளர்கள் என்று கூறுகிறபோது, அவர்களுக்குக் குறைந்தபட்சக் கூலிச் சட்டம் இருக்கிறது. அந்தக் குறைந்தபட்சக் கூலிச்சட்டத்தைத் தமிழ்நாடு முழுமையும் இன்றையதினம் அமல்படுத்துகிறார்களா என்றால் இல்லை. அதை அமல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதே நேரத்தில் கூலி கொடுக்கவில்லை என்றால் அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. கூலி கொடுக்கவில்லை என்றால் விசாரிப்பதற்கு வட்டாட்சியருக்கு அதிகாரம் உண்டு. வட்டாட்சியர் என்ன கூறுகிறார் என்றால் கொடுக்கவில்லை என்றால் கேட்பதற்கு என்னால் முடிகிறதே தவிர, சட்டப்படி கொடுக்காத ஒன்றுக்கு நடவடிக்கை எடுக்க முடியாது என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்தக் கூலியைக் கொடுக்க வேண்டுமென்று தாசில்தார் கெஞ்சுவதும், மாறி மாறி அவர்களிடம் சமாதானம் பேசுவதும், மீறிப் போனால் போகட்டும் என்று சொல்லும் நிலைமைதான் இருக்கிறது. ஆகவே அவர்களுக்குக் குறைந்த பட்சக் கூலிச் சட்டத்தைத் தமிழ்நாடு பூராவும் அமல்படுத்துவதற்கு நீதிமன்றங்களை ஏற்படுத்த வேண்டும். அப்படிக் கொடுக்காதவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சுருட்டுத் தொழிலாளர்கள் தமிழ்நாட்டிலே எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள். அந்த சுருட்டுத் தொழிலாளர்களுக்குப் பகுதிவாரியான சம்பளம் இருக்கிறதே தவிர தமிழ்நாடு பூராவும் ஒரே சம்பளம் பெறக்கூடிய, நிரந்தரமாக அந்தத் தொழிலுக்கு உத்தரவாதம் கிடைக்கக்கூடிய நிலைமை இல்லை. ஆகவே தமிழ்நாடு பூராவும் ஒரு கூலிச் சட்டத்தை அறிவிக்க வேண்டும். தமிழ்நாடு முழுமையும் வேலைக்கு உத்தரவாதம் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.



பிற்பகல் 1-05

நெல் அரைவைத் தொழிலாளர்கள் தமிழ்நாடு முழுவதும் இருக்கிறார்கள். அவர்களின் வேலைக்கும் சம்பளத்திற்கும் எந்தவிதமான உத்தரவாதமும் கிடையாது. இஷ்டப்பட்டால் வைத்துக்கொள்ளலாம். இல்லையென்றால் போகச் சொல்லலாம். அப்படியான நிலைமை இருக்கிறது. அதுபோன்று வர்த்தகத்திலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள், ஓட்டல் தொழிலாளர்கள், ஜவுளிக் கடைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள். இருக்கிறார்கள். அவர்களின் வேலைக்கும் உத்தரவாதம் இல்லை. தமிழ்நாடு முழுவதும் இப்போது செங்கல் தொழில் அபிவிருத்தியடைந்திருக்கிறது. அரசாங்கமும் அந்தத் தொழிலுக்குப் பண உதவி செய்கிறது. ஆனால் அங்கே பணியாற்றும் தொழிலாளர்களுக்குச் சம்பள உத்தரவாதமோ பணி உத்தரவாதமோ கிடையாது. இன்றையதினம் எலெக்ட்ரானிக் படிப்பு படித்தவர்கள் நிறையபேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களை சிறு சிறு தொழில் நிறுவனங்கள் பயன்படுத்திக்கொண்டு அவர்களை உற்பத்தி செய்ய வைத்து, குறைந்த சம்பளத்தைக் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்தமாதிரி விஷயங்கள் பூராவையும் அரசு கண்டுபிடித்து, அவர்களுடைய வேலைக்கும் சம்பளத்திற்கும் உத்தரவாதம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் பிஸ்கட் தயாரிக்கின்ற சிறு தொழில் தமிழ்நாடு முழுவதும் இருக்கிறது. அந்தத் தொழிலாளர்களுக்கும் எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. அவர்களுடைய எதிர்கால வாழ்க்கைக்கு உத்தரவாதம் கொடுக்கிற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல் உடைக்கும் தொழிலாளர்கள் பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கோவை மாவட்டத்தில் கல் உடைக்கும் தொழிலாளர்கள் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். மலையடிவாரங்களில் அந்தத் தொழிலை நம்பிக்கொண்டிருக்கிற தொழிலாளர்கள் இருக்கிறார்கள். கல் உடைத்து அதை விற்றுப் பிழைத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அரசு அதற்கு வேலி போட்டு தடைவிதித்திருக்கிறது. அதனால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் கல் உடைப்பதை சில தனியாருக்கு காண்ட்ராக்ட் விடுவதற்காக ஏற்பாடுகள் நடந்து கொண்டு இருக்கின்றன. அதன் மூலம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசு அதை ஆய்வு செய்து தனியாரிடத்தில் அதை ஒப்படைப்பதைவிட அவர்களுக்கே அதைக் கொடுத்து, அவர்களிடம் பகுதி தொகைப் பெற்றுக்கொண்டாலும் ஆட்சேபணை இல்லை. ஆகவே, அதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இயந்திரம் மூலம் கல் உடைக்கும் தொழிற்சாலைகள் இருக்கின்றன.

[திரு. வே. தம்புசாமி] [1992 ஏப்ரல் 20

வீடுகள் கட்டுவதற்கும் சாலைகள் போடுவதற்கும் சைஸ் வாரியாகக் கற்கள் உடைக்கப்படுகின்றன. அந்தத் தொழில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. ஆனால் தொழிலாளர்கள் எந்த நேரமும் ஆபத்தை எதிர்நோக்கியிருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையில் பணிப் பாதுகாப்பும் சம்பள உத்தரவாதமும், அவர்கள் இறந்தால் நஷ்ட ஈடும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, ஒருசில கருத்துக்கள் கூறுவதற்கு வாய்ப்புக்கொடுத்த தங்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. கே. ஏ. மனோகரன்.

<u>திரு. கே. ஏ. மனோகரன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன், தொழிற்சாலைகள் மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சி முதலான மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பு அளித்த உங்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்து பேச விழைகிறேன்.

நீண்டகாலமாக மூடப்பட்டிருந்த ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனிமற்றும் பின்னி மில்லினைத் திறந்து வைத்து பல்லாயிரக் கணக்கான தொழிலாளர் வாழ்விலே ஒளியைக் கொடுத்த தமிழக முதல்வருக்கு எங்களது நன்றியை உரித்தாக்குகிறேன்.

நல்ல தொழிற்கொள்கை வெற்றிபெற ஒருபக்கம் தொழிலுக்கான மூலத்தேவைகள் ஏற்பாடு நன்றாக அமைய வேண்டும். மறுபக்கம், தொழிலுக்குரிய முதலீட்டு வசதி தொய்வின்றிக் கிடைத்துவர வேண்டும். மூலத்தேவைகள் ஏற்பாடு, முதலீட்டு வசதி ஆகிவற்றுடன் நீடித்த நல்ல தொழில் உறவு நிலவ தொழில் அமைதி இருந்தால்தான் உற்பத்திப் பெருக்கமும், ஊதிய உயர்வும் ஏற்பட முடியும் என்பது அனுபவம். தொழிலாளர்-நிருவாகம் தொடர்பான தொழில் தகராறுகளின் தீர்வுக்கு அரசு தெளிவான வழிமுறைகளைக் கூறவில்லை. தொழிலகத்திற்குள்ளே நடத்தப்படுக் உள் விசாரணைக்கான காலம், தண்டனையின் அளவு ஆகியவை சரிவர நிர்ணயிக்கப்பட்டு, சிறு குற்றங்களை உள் விசாரணைக்கும் கூட தேவையில்லாமல் ஆக்க வேண்டும். தொழிற்சங்கம் ஆங்காங்கே தொழிற்சாலைக்கு உள்ளேயே தகராறுகளை விசாரித்து சமரச முயற்சியில் தீர்வு காண வழிவகைகள் செய்யப்படவேண்டும். நிர்வாகத்தினரும் தொழிலாளர்களும் இணங்கி இருவரும் ஏற்றுக்கொள்ளும் மத்தியஸ்தர் ஒருவரை ஏற்றுக் கொண்டு வேகமாக தொழில் தகராறுகளை விசாரித்து முடிக்க முன்வரவேண்டும். தகராறு என்றதும் அரசு அதிகாரியிடம் தான் சொல்லவேண்டும் அல்லதுகோர்ட்டுக்கு நேரடியாகப் போக



1992 ஏப்ரல் 20] [திரு. கே.ஏ. மனோகரன்]

வேண்டும் என்ற அவசியமில்லாமல், 'ஆர்பிட்ரேஷன்' என்ற தன்னிச்சையான நடுவர் தீர்வு முறையைப் புழக்கத்தில் பரவலாகக் கொண்டுவர வேண்டும். இம்முறையை விரும்பாதவர்கள் கோர்ட்டுக்குப் போகலாம். கோர்ட்டில் பலவித வழக்குகளுக்குத் தீர்வுச் சொல்ல காலவரையறையும் அந்தக்கோர்ட்டுக்கு மேல் அப்பீல் கிடையாது என்ற தெளிவான, முழுமையான தன்மையும் நிர்ணயம் ஆகி அமுலாக்கப்பட வேண்டும். யாரும் எந்தக் கோர்ட் தீர்ப்பையும் எதிர்த்து ரிட் போட இப்போது வழி இருக்கிறது. தொழிலாளர்களால் ரிட் போட வசதியில்லை. ரிட்டுக்கு மேல் உச்சநீதிமன்றம் போவார்கள். இதனால் கால விரயம், பணச்செலவு, தொழில் உறவுமுறிவு எல்லாம் ஏற்படுகின்றன. ஆகையால் தொழில் தகராறுகளின் தீர்வுக்குச் சீரான வழிகளை ஏற்படுத்த வேண்டும். தொழிலாளர் நீதிமன்ற நடுவர்களுக்குத் தொழிற்சங்க சார்புடைய பல்வேறு சட்டங்களைப்பற்றி முன் பயிற்சி குறைந்தது ஒரு வருடமாவது அளிக்கப்பட வேண்டும்.

பிற்பகல் 1-10

அரசு லயோலா கல்லூரி, பல்கலைக் கழகம் மற்றும் தனியார் அமைப்புகள் பலவற்றிலும் ஃபாக்டரி இன்ஸ்பெக்ட்ரேட்களிலும், ஈ.எஸ்.ஐ., பி.எஃப். ஆணையகம் போன்ற இடங்களில் சில வாரங்கள் பயிற்சி பெறுவது தொழில் உறவுப் பிரச்சினைகளின் உண்மையான தன்மைகளையும் அவற்றின் பல்வேறு பரிமாணங்களையும் தெரிந்துகொள்ள இவை நல்ல வாய்ப்பாக இருக்கும். காலியாக உள்ள தொழிலாளர் நீதி மன்றங்களுக்கு உடனடியாக நீதிபதிகளை நியமிக்க வேண்டும்.

தொழில்களின் வளர்ச்சியும், நலிவும் அதை நடத்தும் திறமையிலும் பொறுப்பிலும்தான் அடங்கியுள்ளது. அரசு நடத்தும் சில பொதுத் துறையில் வளர்ச்சியும், நலிவும் இருக்கின்றன. அதே போல் தனியார் நடத்தும்சில தொழில்களிலும் வளர்ச்சியும் நலிவும் உள்ளன. இதில் யார் நடத்துகிறார்கள் என்பதல்ல. அரசாங்கமா, தனியாரா என்பதல்ல முக்கியம். திறமையும், வளர்ச்சியும் இருக்கின்றனவா என்பதுதான் முக்கியம். பொதுத் துறையை தனியாரிடமும் தனியார் துறையை அரசிடமும் மாற்றுவதில் ஒன்றும் பயனில்லை. திறமையின்மையை, ஊழல் தன்மையை வளர்ச்சி யமையமாகவைத்துதொழில்நிலைமைகளை ஆய்ந்து உரிய பரிகாரங்களை அளிக்க அரசு முன்வர வேண்டும்.

தொழில் வளர்ச்சிக்கு எதிராக திட்டமிட்டுச் செயல்படும் குழப்பங்களைத் தவிர்க்க வேண்டும். கடலூரில் உள்ள 'சிப்காட்' பகுதியில் உள்ள தனியார் பிளீச்சிங் ஃபாக்டரி தொழில்களில் வீண் குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்டு இன்றைக்கு

[திரு கே.ஏ.மனோகரன்] [1992 ஏப்ரல் 20

அந்த நிர்வாகம் மூடப்பட்டுள்ளது. ஓசூர் பகுதியில் உள்ள பாகலூரில் உள்ள ஒரு தொழிற்சாலையில் ஊதிய உயர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளின் காரணமாக அதுவும் மூடப்பட்டுள்ளது. ஓசூர் சிப்காட் பகுதியில் உள்ள ஒரு அரசு பொது நிறுவனம் உற்பத்தியைத் தொடங்கிய உடனே மூடப்பட்டு பல கோடிக்கணக்கான அரசு பணம் விரையம் ஆகியுள்ளது.

ஓசூரில் உள்ள ஒரு என்.ஆர்.ஐ. நிறுவனம், 'சிப்காட்' அறிவுரையின் காரணமாக 'அலாய் ஃபவுண்டரியை' ஆரம்பித்து தற்சமயம் நலிவுற்ற நிலையிலே உள்ளது. அதில் வேலை செய்யும் 300 தொழிலாளர்களின் நிலை மிகவும் பரிதாபமாக உள்ளது. மற்றும் ஓசூரில் உள்ள தொழிற்பேட்டையில் உள்ள ஒரு டி.வி. தயாரிப்பு நிறுவனம் அரசு ஆணையை மதிக்காமல் கடந்த ஐந்து ஆண்டுக்காலமாக 53 தொழிலாளர்களை நிரந்தரம் செய்யவில்லை. பலமுறை தொழிலாளர் துணை ஆணையர் பேச்சுவார்த்தை நடத்தியும், நிர்வாகம் நியாயமான கோரிக்கையை நிராகரித்து வருகிறது. உற்பத்தி பெருகியும், தொழிலாளர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க அந்த நிர்வாகம் மறுக்கிறது. ஆகவே, அரசு இதிலே தலையிட்டு தொழிலாளர்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓசூரில் 'சிப்காட்' நிறுவனத்தில பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வீட்டுமனை அளிப்பதாக அறிவித்து 1,700 விணப்பங்களையும், விண்ணப்பத்திற்கான தொகை ரூ.25 மற்றும் வீட்டுமனை முன்பணமாக ரூபாய் 30 இலட்சத்தையும் பெற்று எட்டு மாதங்கள் கழித்து, இத்திட்டம் செயல்படாது என்று பணத்தை திருப்பி அனுப்பிவிட்டார்கள். ஆனால் இதற்கு என்ன காரணம் என்று தொழிலாளர்களுக்கு தெரியப்படுத்தவில்லை.

ஈ.எஸ்.ஐ. திட்டம், பல தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கவில்லை. எங்கள் பகுதியில் உள்ள மருத்துவ மனையில் மாத்திரைகளை கைகளில் தருகிறார்கள். அதை மருந்துத்தரதாள்களை அரசு வழங்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அதற்காக போடப்பட்டுள்ள லோக்கல் கமிட்டியும் செயல்படவில்லை. தொழிலாளர் துறையில் உள்ள பல கமிட்டிகளில் உறுப்பினர்கள் இல்லை ; அல்லது செயல்படாமல் உள்ளது. அதனை உடனடியாக கவனித்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு இந்த மானியத்தில் அறிவிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கானஸ்டேடியம்இன்னும்திட்ட அளவில்தான் உள்ளது செயலாக்கப்படவில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். கடந்த 1984 ஆம் ஆண்டில் ஓசூரில் தொழி



[திரு கே. ஏ. மனோகரன்] [1992 ஏப்ரல் 20

லாளர் துறையினால் வாங்கப்பட்ட 68 வீடுகளை துறை பணத்தை செலுத்தியும், இன்றுவரை தன்னுடைய வசம் எடுக்காமல், தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான சலுகைகளை பெற்றுக் கொடுக்க முடியாமல் இருப்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

வேலைவாய்ப்புக்காக இந்த ஆண்டு, அதாவது 1991–92-ம் ஆண்டு 5 இலட்சம் பேர் பதிவு செய்திருக்கிறார்கள். ஏற்கெனவே காத்திருப்போர் பட்டியலில் 30 இலட்சம் பேர் இருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் நாற்பதாயிரம் பேருக்குத்தான் வேலை வாய்ப்புக் கிடைக்கிறது. எனவே தனியார் நிறுவனமாக இருந்தாலும், பொதுத் துறை நிறுவனமாக இருந்தாலும் வேலை வாய்ப்புத் துறையின் மூலமாகத்தான் ஆட்கள் அமர்த்தப்பட வேண்டும் என்று இந்த அரசு சட்டத்தை இயற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதில் ஊழல்கள் இருந்தால் அவற்றைக் களைய வேண்டும். எல்லா வேலை வாய்ப்பு பதிவு அலுவலகங்களையும் கம்ப்யூட்டர்மையமாக்க வேண்டும். தற்போது தரப்படும் உதவித் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. அதை மாதம் ஒன்றுக்கு ரூ. 500 ஆக உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்கான சலுகை திட்டத்தினை அரசு அறிவித்தாலும், அவைகள் முழுவதும் அவர்களைச் சென்றடையவில்லை என்பதுதான் உண்மை. தொழிற்சாலைகள் உள்ள பகுதியாதலால் ஓசூரில் உள்ள ஐ.டி.ஐ.-யில் கூடுதல் பயிற்சிகளை அளித்து தொழிலாளர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–15

தொழிலாளர்கள் தங்களுடைய திறனை வளர்த்து தங்களுடைய நிலையை உயர்த்திக்கொள்ள அங்குள்ள ஒரு தனியார் பொறியியல் கல்லூரியில் மாலை நேர வகுப்புகளை துவங்க இந்த அரசு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓசூர் தொழிற்பேட்டை மற்றும் அருகாமையில் உள்ள சில தொழிற்சாலைகளைத் திறக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக் கொடுத்த உங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். ஜெய்ஹிந்த்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத டாக்டர் புரட்சித் தலைவி புகழ் என்று சங்கே முழங்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்று கூறி, நான் வணங்கும் தெய்வம், இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி இருக்கிற திசை நோக்கி வணங்குகிறேன். புரட்சித் தலைவியின் அரசியல் வரலாற்றில் விசுவாசத்தை மட்டும் வேதமாக ஏற்றுக்கொண்டேன் என்பதற்காகவே, அரசியல் வானில் சிலராலே அகரத்தில் ஒதுக்கப்பட்ட என்னை அமைச்சரவை என்கிற சிகரத்தில் சேர்த்து புரட்சித் தலைவி எனும் ''மாபெரும் ஒளி வெள்ளத்தில்'' என்னையும் ஒளிபெறச் செய்த தமிழக சீவக சிந்தாமணியே, காலத்தை வென்ற காவியத் தலைவியே, தெய்வத் தாய் பெற்றெடுத்த ஒளி விளக்கே, வளையாத செங்கோலும் தவறாத நீதியும் தந்து வளமான தமிழகத்தை உருவாக்கும் புரட்சித் தலைவியே தங்களின் பொற்பாதங்களுக்கு என் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உழைக்கும் வர்க்கம் உயர வேண்டும்; உழைப்பவர் நலம் காக்கப்பட வேண்டும்; உழைப்பவரே உயர்ந்தவர் என்ற இலக்கிய நிலை உருவாக வேண்டும் என்று அனுதினமும் சிந்தித்துச் செயல்படுகிற தொழிலாளர்களின் உற்ற தோழனாக விளங்கும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியிலே (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலே பரந்து விரிந்து கிடக்கும் தொழிலாளர்களின் உரிமையைக் காத்து, அவர்தம் நலம்பேணி வளம் காண்பதில் டாக்டர் புரட்சித்தலைவியின் அரசு தெளிவாகவும் தீவிரமாகவும் இருக்கின்றது. இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியில் முதல் மாநிலமாகத் தமிழகம் திகழ வேண்டும் என்னும் டாக்டர் புரட்சித்தலைவியின் புனிதப் பாதையில் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு அயராது உழைத்து வருகின்றது. தமிழகத்திலே தொழிற்சாலைகளில் பணிபுரியும்தொழிலாளர் பெருமக்கள் நல்வாழ்வு வாழவேண்டு என்பதுதான் உழைக்கும்வர்க்கத்தினர் உயர்வுக்காகப்பாடுபடுகிற புரட்சித் தலைவி அரசின் அசையாத கொள்கையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) தொழிலாளர்கள் சுரண்டப்படுவது, அச்சுறுத்தப்படுவது, அவர்கள் உரிமைகள் பறிக்கப்படுவது போன்றவற்றை தாய் உள்ளம் கொண்ட தங்கமனத் தலைவியின் அரசு ஒருபோதும் அனுமதிக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) தொழிலாளர்களுக்கு நியாயப்படி கிடைக்க வேண்டிய சலுகைகள், பலன்கள், பயன்கள் தொழிலாளர்களை விரைந்து சேர வேண்டும் என்பதில்தான் இந்த அரசு தீவிரமாக இருக்கிறது. தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட சட்டங்களையும் ஒப்பந்தங்களையும், நீதிமன்றத் தீர்வுகளையும் மீறுபவர்கள் யாரா,ஜ இருந்தாலும் அவர்கள் எத்தனை பெரிய சக்தியாக இருந்தாலும்



''ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால்,
அவன் தேவன் என்றாலும் விட மாட்டேன்''

என்ற தத்துவத்தில் இயங்குகிற புரட்சித் தலைவியின் நியாய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) முறைப்படி நடவடிக்கை எடுக்கச் சிறிதும் தயங்காது. அதே நேரத்தில், தொழிற்சாலைகளிலே வேலை நிறுத்தம், கதவடைப்பு மூலம் உற்பத்தி பாதிக்கப்படுவதை நாட்டு நலனிலே அக்கறை உள்ள இவ்வரசு சிறுதும் விரும்பவில்லை. ஒரு தொழிற்சாலை மூடப்படுவதற்கான காரணத்தை தொலை நோக்குப் பார்வையோடு முன்கூட்டியே கணித்து, தொழிற்சாலைகள் இயங்காமல் இருப்பதைத் தவிர்ப்பதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும். தொழிற்சாலைகள் மூடப்படுவதால் பாதிக்கப்படுபவர் நிர்வாகமும் தொழிலாளர்களும் மட்டுமின்றி நாட்டின் நலமும் சமுதாய நலமும் சேர்த்துதான் பாதிக்கப்படுகிறது என்பதை இவ்வரசு நன்கு உணர்ந்துள்ளது. எனவே, தொழில் அமைதி கெடுவதைத் தடுத்து, தொழில் அமைதி பேணி, தொழில் நல்லுறவு காப்பதை தொழிலாளர் நலன் காக்கும் புரட்சித் தலைவியின் அரசு தன் தலையாய கொள்கையாகக் கொண்டுள்ளது.

''உழைக்கும் தோழர்களே ஒன்று கூடுங்கள்;
உலகம் நமது என்று சிந்து பாடுங்கள்''

என்று உழைக்கும் வர்க்கத்தை ஊக்குவித்து, முதலாளிகளுடைய முதலீடு மட்டும் இலாபம் ஈட்டுவதில்லை; தொழிலாளியின் உழைப்பும் இணைந்து தான் இலாபம் தருகிறது என்ற கோட்பாட்டின்படி தொழிலில், இலாபத்தில் தொழிலாளிக்கும் பங்கு தரப்பட வேண்டும் என்ற கருத்துக்களுக்கு மதிப்புத் தந்து தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் நல்லுறவை உண்டாக்கி, அவர்கள் தத்தம் நலம் பேணுவதைவிட மற்றவர் நலத்தையும், சமுதாய நலத்தையும் காக்க அறிவுறுத்துவதோடு அதையே ஒரு இலக்கியமாகக் கொள்ள இலட்சியத் தலைவியின் அரசு முனைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மனித நேயத்தோடு தொழிலாளர், முதலாளி இருவரும் ஒருவருக்கொருவர் இணக்கமான நம்பிக்கையுடன் மனம் ஒத்த கூட்டுறவு எண்ணத்தோடு இணங்க வேண்டிய சூழ்நிலையை உருவாக்கப் புரட்சித் தலைவியின் அரசு பாடுபடும்.

பிற்பகல் 1–20

தொழிலாளர்களின், அதிலும் குறிப்பாக வகைப்படுத்தப்படாத, அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களின்—'அன்-ஆர்கனைஸ்ட் லேபரர்ஸ்' பெரும்பாலான பிரச்சினைகள் மற்றும் நிலைமைகளை இவ்வரசு முழுமையாக உணர்ந்துள்ளது

அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் பெரும்பாலும் புறநகர் மற்றும் கிராமப் பகுதிகளில் வாழ்பவர்களாக இருக்கிறார்கள் என்ற காரணத்தால், அவர்களது உரிமைகளையும் அவர்களுக்கென வரையறுக்கப்பட்டுள்ள நலத்திட்டங்கள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய குறைந்த அளவு ஊதியம் போன்ற சலுகைகளையும் பெற இயலாத துர்பாக்கியசாலிகளாக இருக்கிறார்கள். எனவேதான், இந்த அரசு இவ்வகைத் தொழிலாளர்களின் நலன் கருதி செம்மையான முறையில் விரைந்து நடவடிக்கைகள் எடுத்து, அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான சலுகைகள் கிடைக்கப் பாடுபட்டு வருகிறது.

இந்தியத் துணைக் கண்டத்தில் இதுவரையில் எந்த மாநில அரசும் செய்திடாத சாதனையாக, தொழிலாளர்களுடைய தோழன் என்று சொல்லிக்கொள்கிற பொதுவுடைமை வாதிகள் ஆளுகின்ற மாநிலத்தில்கூட நினைத்துப் பார்த்திடாத வண்ணம் இவ்வரசு, அமைப்பு ரீதியற்ற வகைப்படுத்தப்படாத தொழிலாளர்களுடைய பிரச்சினைகளின் முக்கியமாக உள்ள கட்டிடத் தொழிலாளர்களைப் பாதுகாத்திட ஓர் திட்டத்தை ஏற்படுத்த எண்ணி, 1982 ஆம் வருட தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர் சட்டத்தில் உள்ள சலுகைகளை கட்டிடத் தொழிலாளர்களும் பெறும் வகையில், அவர்களை இச்சட்டத்தின்கீழ் கொண்டு வந்து, குறைந்தபட்ச ஊதியம் வைப்பு நிதி, பணிக்கொடை போன்ற பயன்களோடு விபத்து மற்றும் நோய்வாய்ப்பட்ட நேரங்களில் நிதியுதவி கிடைக்கும் வகையில், தனியாக ஒரு நலத் திட்டத்தினை செயல்படுத்த மக்கள் நலம் காக்கும் மாதரசியின் அரசு பரிசீலித்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தொழிற்சாலைகளுக்கு மூடு விழா கண்ட ஆட்சி முந்தைய மு.க. வின் ஆட்சி. மூடிய தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு நடவடிக்கையெடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) செயலாற்றி வருவது, இன்றைய ஆற்றல்மிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி. மூன்றாண்டுக் காலமாக மூடிக்கிடந்த ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிற்சாலையைத் திறக்க வைத்தது புரட்சித் தலைவி அரசின் முதல் சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி)

மூடிக்கிடந்த பி.அண்டு சி. மில் ஆலையை இனி திறக்கபடவே இயலாது என்று முற்றுப்புள்ளி வைக்கப்பட்த் அந்த மூடிகிடந்த ஆலையை, அந்த ஆலையில் வேலை பார்க்கிற தொழிலாளர்களுக்கு ஆட்குறைப்போ, சம்பள வெட்டோ இல்லாமல் புதுமையாக, புரட்சியாகத் திறந்து, எட்டாயிரம் தொழிலாளர் குடும்பங்களுக்கு. (மேசையைத் தட்டும் ஒலி). வாழ்வளித்தது தொழிலாளர் நலம் காக்கும் புரட்சித்தலைவி ஆட்சியினுடைய இமாலய சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி).



உழைக்கும் வர்க்கம் வரவேற்கும் இமாலய சாதனையை ஒப்பந்த காலத்தில் வரவேற்று, கையெழுத்து போட்டவர்கள், இதன் பெருமை அனைத்தும், புகழ் அனைத்தும், புரட்சித் தலைவிக்கே போய்ச் சேர்க்கிறது என்கிற காழ்ப்புணர்ச்சி காரணமாக (மேசையைத் தட்டும் ஒலி) சில பத்திரிகைகள் வாயிலாக அவப் பெயர் உண்டாக்க முயற்சிக்கின்றனர். அவர்களுக்கு காலம் பதில் சொல்லும். தொழிலாளர்களைச் சுரண்டி பிழைக்கும் அந்த எத்தர்கள் கூட்டத்திற்கு தொழிலாளர் வர்க்கம் விரைவில் நல்ல பாடம் புகட்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

'சர்க்காரு ஏழை பக்கம் இருக்கையிலே
நாங்க சட்டத்திட்டம் மீறி இங்கே நடப்பதில்லை'

என்று ஏழை எளியவர்கள் பாராட்ட (மேசையைத் தட்டும் ஒலி) 'எல்லோரும் எல்லாம் பெற வேண்டும்' 'இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்ற வரிகளுக்கு வடிவம் தந்து கொண்டிருக்கின்ற ஆட்சிதான், தங்க வயல் தமிழகத்தில் இல்லையே என்கிற (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தினுடைய குறை தீர்க்க வந்த தங்க மகள் மாண்புமிகு புரட்சித்தலைவியினுடைய ஆட்சியாகும்.

முந்திரித் தொழில் இது ஒரு பருவ காலத் தொழில். இத் தொழிற்சாலைகளில் பல்லாயிரக்கணக்கானவர்கள் பணியாற்றி வருகிறார்கள். தொழிலாளர்கள் நலச் சட்டம் மற்றும் இதர நலச் சட்டங்கள் இத்தொழிற்சாலையில் அமல்படுத்தப்பட்டன லும், முந்திரித் தொழிலாளர்களை, தொழிலளர்கள் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ்க் கொண்டுவர, தொழிலாளர்கள் ஈட்டுறுதி (முந்திரி தொழிலாளர்) திட்டம் 1983 எனும் திட்டத்தை மைய அரசு கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் இம்மாநிலத்திலுள்ள முந்திரி தொழிலாளர்களைக் கொண்டு வர இந்த அரசு நடவடிக்கையெடுத்து வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் 28,564 முந்திரி தொழிலாளர்கள் உள்ளபடியால், முதற்கட்டமாக கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முந்திரி தொழிலாளர்களை இத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவர புலியூர்சாலை, நித்திரைவிளை மற்றும் களியக்காவிளை ஆகிய மூன்று இடங்களில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் அமைப்பதற்காக ரூ. 15, 61, 264 செலவினத்தில் உள்ள செயற்குறிப்பு அரசின் ஆய்விலுள்ளது. முந்திரி தொழிலாளர்கள் உள்ள பிற இடங்களுக்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் படிப்படியாக நடைமுறைப்படுத்தப் படும்.

தமிழகத்தில் இருக்கிற பீடித்தொழிலாளர்கள் அதுவும் நலிந்த பீடித் தொழிலாளர்களுடைய நலம் காக்க அவர்களுக்கு பல்வேறு வசதிகளும் வாய்ப்புகளும் உருவாக்கிக் கொடுக்கப்பட்டு வருகின்றன. நலிந்த பிரிவு பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதி திட்டத்தின்கீழ் நிலம் தேர்வு செய்து கருத்துரு அனுப்புமாறு அனைத்து துணை ஆணையர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இதன் முதல்கட்டமாக வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில், வேலூர் சத்துவாச்சாரியில் 150 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இது தவிர, நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தில், மேலப்பாளையம், முக்கூடல் ஆகிய இடங்களில் வீடுகள் கட்டுவதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, பீடித் தொழிலாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்று, உரிய நடவடிக்கையெடுக்க துணை ஆணையர் அவர்களால் உரிய பயனீட்டாளர்களைத் தேர்வு செய்யும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

மேலும் பீடித் தொழிலாளர்களுக்கென தனியாக கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, அதன்மூலம் அவர்களுக்கு சேர வேண்டிய சலுகைகளைச் சரிவர அளிப்பது பற்றி அரசு சிந்தித்து வருகிறது.

பிற்பகல 1—25

உச்சநீதிமன்றம், திருநெல்வேலிமாவட்டம், பீடித் தொழிலாளர்கள் சம்பந்தமாக அளித்த தீர்ப்பின்படி, அத்தொழிலாளர்களை அடையாளப்படுத்தி, குறிப்பாக பெண் தொழிலாளர்கள் சட்டப்படியான அனைத்து சலுகைகள் பெறுவதற்கு முதற்படியாக அவர்கள் பெயரில் பாஸ் புத்தகம் வழங்க வீட்டுக்கு வீடு கணக்கெடுப்புப் பணி நடைபெற்று வருகிறது. இதற்காக இம்மாவட்டத்தில் பீடித் தொழிலாளர்கள் நலனுக்காக கூடுதலாக 6 தொழிலாளர் உதவி ஆய்வர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் ஒவ்வொரு பீடித் தொழிலாளிக்கும் குறைந்தபட்சம் ரூ. 50,000க்கு ஈட்டுறுதித் திட்டத்தினை இத்தொழிலாளர்களிடமிருந்து எவ்வித தவணைக் கட்டணமும் பிடித்தம் செய்யாமல், அமுலாக்க பீடி உற்பத்தியாளர்கள் வேலையளிப்பவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

சிவகாசியில் இருக்கிற பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தயாரிப்பில் குழந்தைத் தொழிலாளர்களை நீக்குதல். நீதிப் பேராணை எண் 465/86-ல் உச்ச நீதிமன்றம் இட்ட ஆணையின்படி ஒரு வழக்குரைஞர் குழு சிவகாசி பகுதியை 31—8—1991 முதல் 2—9—1992 முடிய பார்வையிட்டது. முதல் நடவடிக்கையாக பட்டாசுத் தொழிலில் குழந்தைகளை ஈடுபடுத்துவதை நீக்க வேண்டும் என்று அக்குழு தன் அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளது.





அக்குழுவின் பரிந்துரையின் பேரில் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியத்தேவைப்படும் நபர்களுக்கு பிறப்புப் பதிவேட்டை சரிபார்த்து, பிறப்புச் சான்றிதழ் வழுங்கவேண்டும் என்று கிராம நிர்வாக அலுவலர்களுக்கும், வட்டாட்சியர்களுக்கும் அறிவுரை வழங்குமாறு மாவட்ட ஆட்சியர்களை இவ்வரசு கேட்டுக்கொண்டுள்ளது. மேலும் பட்டாசுத் தொழிற்சாலைகளைப் பார்வையிட்டு அங்குள்ள தொழிலாளர்களின் வயதை தணிக்கை செய்து,அவர்களின் வயதை 1950ஆம் ஆண்டைய தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள படிவ எண்கள் 12 மற்றும் 25-ல் பதிவு செய்யுமாறு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வரை இவ்வரசு கேட்டுக்கொண்டுள்ளது. இப்படிவங்களை திருத்துவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

இந்தியத் துணைக் கண்டம் வியக்கும் சாதனையாக, குழந்தைத் தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதை முற்றிலும் தவிர்த்து, உலக தொண்டு நிறுவனங்களுடன் பேசி அவர்களின் நலன், வளம் காக்க வழிகள் மேற்கொள்ளப்பட்டு தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் குழந்தைகளை வேலைக் கமர்த்துவதை இன்னும் ஐந்தாண்டுகளுக்குள் படிப்படியாக நீக்கிவிட மனித நேயமிக்க மக்கள் தலைவியின் அரசு முழு முயற்சிகளை மேற் கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி)

செல்வ வளம் கொழிக்கின்ற அமெரிக்காவிலே கூட குழந்தைத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்ற உண்மையை இங்கே இந்த மன்றத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஏன் என்று சொன்னால், American Labour News December 1991 இதழில் இது பற்றித் தெளிவாக குறிப்பிடப்பட்டு, அமெரிக்காவிலேயும் இன்றைக்குக் குழந்தைத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்பதை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நிலைமை இவ்வாறு இருக்க, தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்துவதை ஐந்து ஆண்டுகளிலே படிப்படியாக தடுத்து நிறுத்துகிற துணிச்சலான முயற்சியை ஆற்றல் மிகு புரட்சித் தலைவியின் தலைமையில் இயங்கும் இவ்வரசு மேற் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நிர்வாக ரீதியாகவும், சட்ட ரீதியாகவும், கல்வி வாயிலாகவும், இதையடைய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

'உழைத்து வாழ்பவனே வணங்கத்தக்கவன், வாழ்த்துக்குரியவன். அந்த உழைப்பாளிக்கு ஊறு ஏற்படுவது சமுதாயத்

[திரு. செ. ரகுபதி] [1992 ஏப்ரல் 20

தின் நல்வாழ்வையே புரையோடச் செய்வதாகும்' என்ற பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் வழியிலே செயல்படும் புரட்சித் தலைவியின் அரசு தொழிலாளர் நலம் காக்க சிவகாசியிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் தீக்காய மருந்தும் மற்றும் மறு சீரமைப்புப் பிரிவு ஒன்றை ரூ.31.24 இலட்சம் செலவில் அமைப்பதற்கான செயற்குறிப்பை தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்திற்கு அனுப்பியுள்ளது. சிவகாசியிலும், அதன் சுற்று வட்டாரத்திலுமுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலத்திற்காக ரூ.1.36 இலட்சம் செலவில் 4 நடமாடும் மருத்துவ ஊர்திகள் வழங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது. இவ்வூர்திகளின் சரியான நடைமுறையையும் பயன் பாட்டையும் கருதி இவற்றை சிவகாசியிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையின் நிர்வாகத்தின் கீழ் இயக்கிட கருதப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் உள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசு தயாரிக்கும் தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களில் பெரும்பாலோர் போதிய கல்வி அறிவு அற்றவர்களாக உள்ளனர். அவர்கள் அன்றாடப் பணியில் பயன்படுத்தும் வேதியியல் பொருட்களின் குணங்களை அறிந்திருக்கவில்லை. மேலும் இத்தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு வேதியியல் பொருட்களினால் ஏற்படக்கூடிய கேடு விளைவுகள் பற்றி எடுத்துச் சொல்லப்படாததால், இவர்கள், எளிதில் வெடி விபத்தும், தீ விபத்தும் உண்டாக்கி, நொடியில் பல உயிர்களை கொல்லக் கூடிய வேதியியல் பொருட்கள் மிகவும் கவனமின்றி கையாளுகிறார்கள். சமீப காலத்தில் சிவகாசி அருகே ஏற்பட்ட ஒரே வெடி விபத்தில் 39 அரிய உயிர்களை இழக்க நேர்ந்துள்ளது. வருங்காலத்தில், இது போன்ற மிக மோசமான விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்த்திட, தொழிற்சாலைகளில் ஆபத்து விளைவிக்கக் கூடிய வேதியியல் செயல் முறைகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குப் போதிய கல்வி மற்றும் பயிற்சி அளிப்பதற்காக சிவகாசியில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆணையின் பேரில் ஒரு பயிற்சி மையம் அமைக்க கருதப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1—30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

*மாண்புமிகு திரு. செ. ரகுபதி : குறைந்த அளவு ஊதியச் சட்ட அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள தொழில் எதுவாக



1992 ஏப்ரல் 20] [திரு. செ. ரகுபதி]

இருந்தாலும், அதற்குக் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் அல்லது மறு நிர்ணயம் செய்யும் போது குறைந்த அளவு ஊதியம் நாளொன்றுக்கு ரூ. 15-க்குக் குறையாமல் இருக்க வேண்டுமென அரசு கொள்கை அளவில் முடிவெடுத்துள்ளது. உயரும் விலைவாசிக்கேற்ப, அகவிலைப் படியை அதிகரித்து அடிப்படை ஊதியத்துடன் கொடுக்கப்பட வேண்டுமென விதி வகுக்கப்பட்டுள்ளது. பொதுவாக அரசு ஈராண்டுக்கு ஒரு முறை குறைந்த பட்ச ஊதியங்களை மறு நிர்ணயம் செய்து வருகிறது.

இங்கு மாண்புமிகு உறுப்பினர் காளன் அவர்கள் மத்திய அரசு ரூ. 20 குறைந்த பட்ச ஊதியம் வழங்க உத்தரவிட்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்படி எந்த உத்தரவும் வரவில்லை. பரிந்துரை மட்டும் மத்திய அரசால் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1948 ஆம் ஆண்டின் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிச் சட்டத்தின் கீழ் தொழிலாளர்களைக் கொண்டு வருவதற்கான ஊதிய உச்சவரம்பை மாதம் ரூ 1,600—லிருந்து மாதம் ரூ 3,000—மாக 1—4—1992 முதல் மைய அரசு உயர்த்தியுள்ளது. உடன் நிகழ்வாக, ஒரு தொழிலாளிக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியத்தில் தொழிலாளியின் பங்குக் கட்டண வீதத்தை 2.25 விழுக்காட்டிலிருந்து 1.5 விழுக்காடாகவும், வேலையளிப்போரின் பங்குக் கட்டண வீதத்தை 5 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகவும் 1—4—1992 முதல் மைய அரசு குறைத்துள்ளது.

ஒரு பகுதியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் நடை முறைப்படுத்த வேண்டுமானால் அப்பகுதியில் குறைந்தது 1,000 தொழிலாளர்கள் இருக்க வேண்டும் அவ்வாறு இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டப் பகுதிகளில் குறைந்தது 12,500 ஈட்டுறுதித் தொழிலாளர்களுக்கு 4 படுக்கைகள் வீதம் 50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை கட்டப்படுகின்றன. ஒரு மருத்துவமனை கட்ட நிலம், கட்டிடம், பணியாளர் குடியிருப்புகள், தளவாடங்கள் போன்றவற்றிற்கு குறைந்தது 5 கோடி ரூபாய் செலவாகிறது. இச்செலவு முழுவதையும் தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகமே ஏற்றுக் கொள்கிறது.

தற்போது தர்மபுரி மாவட்டத்தில் ஒசூரில், ஓர் 50 படுக்கைகளுடைய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை ரூ 73,200 செலவில் கட்டப்பட்டு வருகிறது. அதன் கட்டுமானப் பணி முடியுந்தருவாயில் உள்ளது. விரைவில் அம் மருத்துவமனை திறக்கப்படும்.

அதைப் போல புரட்சித்தலைவியினுடைய ஆட்சியில், மேலும் திருச்சிராப்பள்ளி, இராணிப்பேட்டை, தூத்துக்குடி ஆகிய இடங்களில் 50 படுக்கை எண்ணிக்கையுடன் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் கட்ட இடம் தேர்ந்தெடுக்கப் பட்டு விட்டது. திருநெல்வேலி, ஆம்பூர் ஆகிய இடங்களில் 50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத் துவமனைகள் கட்ட நிலம் தேர்ந்தெடுக்கப்படவுள்ளது.

வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள கன்னிகா புரம் பகுதியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் 1—4—1992 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது

<u>போனஸ் பிரச்சினைக்கு ஒரு முத்தரப்புக் குழு அமைத்தல்</u> :

கடந்த ஆண்டு போனஸ் பிரச்சினையால் சில பஞ்சாலை களில் வேலை நிறுத்தம் ஏற்பட்டதும், இப்பிரச்சினை மாண்பு மிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலையிட்டினால் சுமூகமாக தீர்க்கப்பட்டதும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்ததே. இவ்வாறான பிரச்சினையும் அதனால் மனித நாட்கள் இழப்பினையும் எதிர் காலத்தில் தவிர்த்திட முன் எச்சரிக்கை நடவடிக்கையாக வருமுன் காப்போம் என்ற அடிப் படையில் ''உழைப்பவரே உரிமை பெறுவதிலே இன்பம் உண்டாகும் என்றே சொல் என்தோழா'' என்ற கொள் கைக்கு இன்றைக்கு உயிர் அளித்துள்ளார் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான் தொழிலாளர் பிரச்சினைகளை தொலை நோக்கு பார்வையுடன் கணித்து, தீர்வு கண்டிட டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு ஒரு முத்தரப்புக் குழு அமைக்க உத்தேசித் துள்ளது. இக்குழு பஞ்சாலைத் தொழிலுக்கு மட்டுமல்லாமல் இதர தொழில்களிலும் வேலை நிறுத்தம் போன்ற பிரச்சினைகள் வராமல் தவிர்த்திடவும் தொழில் அமைதி காத்திடவும் அமைக்கப்பட்டு, பிரச்சினைகளை தீர்த்திட உரிய நெறிமுறைகளை அரசுக்குப் பரிந்துரை செய்யும்.

தமிழகம் தொழில் புரட்சி காண இவ்வரசின் புரட்சி கொள் கையாம் புதிய தொழில் கொள்கை இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் 20—1—1992 அன்று வெளியிடப்பட்டது. அந்தப் புதிய தொழில் கொள்கையில் மனித நேயமிக்க புரட்சித் தலைவி அவர்களால் தொழிலாளர் மறுவாழ்வு நிதி ஒன்று ஏற்படுத்துவது பற்றி குறிப்பிடப்பட் டுள்ளது. இந்திய துணைக் கண்டத்திலே எந்த மாநில அரசும் எண்ணிப் பார்த்திடாத வகையில் நலிந்த தொழிற்சாலைகளில் வேலை இழந்த நலிவுற்ற தொழிலாளர்களின் மறுவாழ்விற்கு உதவி புரியும் நோக்கத்தோடு இத்திட்டம் அமைக்கப்பட்



டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்திற்கு 50 கோடி ரூபாய் சிறப்பு நிதியாக அனுமதிக்க வேண்டு என்று மைய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம். தாயுள்ள கொண்ட தங்கமனத் தலைவியாம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இத்திட்டத்திற்கு மாநில அரசின் ஒதுக்கீடாக முதல் கட்டமாக 1 கோடி ரூபாயை ஒதுக்கி உளளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) வேலை இழந்த தொழிலாளிக் குரிய சட்டப்பூர்வமான இழப்பீட்டுத் தொகைகளை நலிந்த நிர்வாகங்கள் கொடுக்க முடியாத நிலையில் , அவர்களுக்கு இந்த நிதியிலிருந்து உதவி அளிக்கப்படும்.

நலிவுற்ற தொழிற்சாலையில் பணியிழந்த தொழிலாளர் களுக்கு சட்டப்பூர்வமான இழப்பீட்டுத் தொகைக்கு மேல் இந்த நிதியிலிருந்து ஒரு தொகை அளிக்க இதன் மூலம் வழி வகை செய்யப்பட்டுள்ளது. வாடிய பயிரைக் கண்டபோது வாடினேன் என்று சொன்ன வள்ளலார் கூற்றைப் போல நலி வுற்ற தொழிலாளர் நிலைக் கண்டு வருந்தி, கருணை உள்ளத் தோடு தொழிலாளர்கள் மறுவாழ்விற்காக இத் திட்டத்தை அறி வித்த மக்கள் நாயகியாம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பெயரிலே (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டம் டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா தொழிலாளர் மறுவாழ்வு நிதித் திட்டம் என அழைக்கப்படும். இதற்காக குழு ஒன்றும், இத்திட்டத்தை நிர்வகிக்க வேண்டிய வழி வகைகள் பற்றிய விவரங்களும் விரைவில் வெளியிடப்படும்.

பிற்பகல் 1-35

வறுமை கோட்டிற்கு கீழே வாழுகின்ற இலட்சோப இலட்சம் ஏழைத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தகுதி அடிப்படை யின்றி மாற்று அடிப்படையில் இடம் பெற சுயநிதி கல்லூரிகளை அணுக முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்கள். இந்த நெருக்கடியில் இருந்து தொழிலாளர்களைக் காக்க வேண்டும். அவர்கள் குழந்தைகளும் பொறியியல் பட்டம் பெறவேண்டும் என்கின்ற நல்ல எண்ணத்தில் தாயுள்ளம் கொண்ட தங்கமனத் தலைவியாம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் தொழிலாளர் பொறியியல் கல்லூரி துவக்க அனுமதித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலே தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ள தொழிலாளர்களின் குழந்தைகளும் இதில் உறுப்பினர்கள் இல்லாத வகைப்படுத்தாத அமைப்பு ரீதியற்ற (அன்-ஆர்கனைஸ்டு லேபர்) தொழிலாளர்களும், இதில் உறுப்பினராகி அவர்களின் குழந்தைகளும் பயன்பெறும் வண்ணம் இலட்சோப இலட்சம் தொழிலாளர்களின் குழந்தைகளின் கல்வி மேம்பாட்டிற்காக, புரட்சித் தலைவி. தொழிலாளர் பொறியியல் கல்லூரி தமிழகத்தில் விரைவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. செ. ரகுபதி] [1992 ஏப்ரல் 20

இந்திய துணை கண்டத்தில் எந்த முதலமைச்சரும் செய்திராத ஒரு சிறிய திட்டமாகும் இது.

''மங்கையராகப் பிறப்பதற்கு மாதவம் செய்திடல் வேண்டுமம்மா'' என்ற வரிகளுக்கு இலக்கணமாகத் திகழும் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் மகளிர் தொழிலாளர் நலம் பேணி காக்கப்படுகிறது.

பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை கணக்கெடுப்பு பல்வேறு தொழில் நிறுவனங்களில் அவர்களது வேலை வாய்ப்பு, வேலை நிலைமை மற்றும் அவர்களுக்கென ஏற்படுத்தப்பட்டுள்ள நல வசதிகள் போன்ற விபரங்களை சேகரிக்கும் பொருட்டு அரசு தொழிலாளர் ஆணையாளர் அலுவலகத்தில் ''மகளிர் பிரிவு'' ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இப்பிரிவின் பொறுப்பைத் தொழிலாளர் உதவி ஆணையர் நிலையில் ஒரு பெண் அலுவலர் ஏற்றுக்கொண்டுள்ளார். பெண் தொழிலாளர்கள் பற்றிய கணக்கெடுப்பு, பெண் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் பெண் தொழிலாளர்களின் உடல் நலம் குறித்து புதிய மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு என நல திட்டங்கள், கருத்தரங்குகள், கருத்தாய்வுகள் நிகழ்த்த ஆலோசனைகள் கூறுதல் போன்ற பணிகள் செய்ய இவர் பணிக்கப்பட்டுள்ளார். மேலும் சம ஊதியச் சட்டத்தினை அமுலாக்கம் செய்வது குறித்த பணியும் இவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு திறம்பட செயல்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மகளிர்க்காக வேலை வாய்ப்புகளை உருவாக்கும் புதிய தொழிற் பிரிவுகளை அறிமுகப்படுத்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. குறிப்பாக மகளிருக்காக உணவுக் கலை, அழகுக் கலை, கட்டிட உட்புறம் அழகு படுத்துதல் கலை, பின்னல் கலை, இயந்திரம் இயக்குதல் போன்ற புதிய தொழிற் பிரிவுகளை இப்போது இயங்கி வரும் தொழிற் பயிற்சி நிலையங்களில் அறிமுகப்படுத்த இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு உத்திரவிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). இதனால் 1,102 மகளிர் ஆண்டு தோறும் பயன் அடைவார்கள்.

மகளிருக்காக, 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கிண்டி அரசினர் மகளிர் தொழிற்பயிற்சி நிலையம் விரைவில் மாண்புமிகு டாக்டர் புரட்சிந் தலைவியின் பொற்கரங்களால் திறந்து வைக்கப்படும் என்பதனை அவர்கள் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே தொழிற்சாலைகளுக்கு மட்டும் கருணாநிதியினுடைய ஆட்சி மூடுவிழா காணவில்லை. அன்றைக்கு தொழிலாளர்களுக்காக



1992 ஏப்ரல் 20] [திரு. செ. ரகுபதி]

வெளி வந்து கொண்டிருந்த உழைப்பவர் உலகம் என்ற பத்திரிகையும் தி.மு. கழக ஆட்சியிலே மூடப்பட்டது. மூடுவிழாக்களுக்கு இன்றைக்கு திறப்பு விழா காணுகின்ற புரட்சித் தலைவியினுடைய பொற்கால ஆட்சியிலே (மேசையைத் தட்டும் ஒலி) பயன் உள்ள அந்த பத்திரிகை மீண்டும் வெளியிடப்பட வேண்டும் என்று பலதரப்பட்ட தொழிலாளர்களின் அமைப்புகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க உழைப்பவர் உலகம் பத்திரிகையை மீண்டும் வெளியிட மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திங்கட்கிழமை, அன்றைய தினம் வங்கக் கடல் நம்முடைய சென்னை கோட்டையை நோக்கி படையெடுத்து விட்டதோ என எண்ணுகின்ற வண்ணம், மக்கள் வெள்ளம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியை சந்திக்க, மனு கொடுக்க வருகிற நாள். அன்றைய தினம் வருகிற மனுக்களிலேயே வேலை வாய்ப்பு கேட்டு வருகிற மனுக்கள் ஏராளம்.

பிற்பகல் 1—40

பெருகி வரும் வேலை வாய்ப்பு கோருவோரின் தேவைகளைக் கவனிக்க வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரகத்திற்கு 5 கம்யூட்டர்களும் தேவையான பணியாளர்களும் அளிக்க மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இசைவளித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பணிகளை துரிதமாகவும், செம்மையாகவும் செய்திட கோவை, திருச்சி மற்றும் சென்னையிலுள்ள இரண்டு ஆக மொத்தம் நான்கு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்கள் கம்ப்யூட்டர்-கணி மயமாக்கப்பட்டுள்ளன நடப்பு ஆண்டில் மேலும் 5 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள், மதுரை, வேலூர் மற்றும் சென்னையில் உள்ள 3 வேலை வாய்ப்பு அலுவலகங்கள் கணிமயமாக்கப்படும்.

மைய அரசின் தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக சிறப்பு உள்ளடக்குத் திட்டத்தின் கீழ் மதுரை மற்றும் கோயம்புத்தூர் அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் பிளாஸ்டிக் தயாரிப்புத் தொழிற் பிரிவு துவங்க மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு அனுமதி அளித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). இப் பிரிவில் ஒவ்வொரு ஆண்டும் 32 ஆதி திராவிட மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இதற்காகும் செலவு ரூ. 32.52 இலட்சம் ஆகும். இதனை மைய அரசும் மாநில அரசும் 60 : 40 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1991-92 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நிதியில் இருந்து மூடப்பட்ட நிறுவனங்களில் பணிபுரிந்த 31,086

தொழிலாளர்களுக்கு ரூ. 86,11,400-ஐ அவர்களின் துயர் துடைக்க நிவாரணமாக அளிக்க புரட்சித் தலைவியினுடைய அரசு உத்திரவிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

இங்கு ஏறக்குறைய 40 உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதில் பெரும்பாலான வெட்டுத் தீர்மானங்கள் 12 உறுப்பினர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள். கொள்கை பற்றி விவாதிப்பதற்காக கொடுக்கப்பட்டுள்ளன. இங்கே கொள்கை பற்றி எங்களுடைய விளக்க உரையிலும், கொள்கை குறிப்பிலும் குறிப்பிட்டிருக்கிறோம். அதைப்போல முந்திரி தொழிற்சாலையில் ஈடுபட்டு இருக்கின்ற தொழிலாளர்களுக்கான ஊதிய உயர்வு மற்றும் அவர்களுக்கான சலுகைகள் பற்றி இங்கே வெட்டுத் தீர்மானம் கொடுக்கப்பட்டு உள்ளது. அந்த வெட்டுத் தீர்மானத்திற்கு விளக்கத்தையும் என்னுடைய பதிலிலே சொல்லியிருக்கிறேன். அதைப்போல பீடி தொழிலாளர்களுக்காக சலுகைகளைக் கேட்டிருக்கிறார்கள். அதைப் பற்றியும் இங்கே விளக்கக் குறிப்பிலும் என்னுடைய பதிலுரையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப்போல மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சாமிநாதன் அவர்களும், திருநாவுக்கரசு அவர்களும் புதுக்கோட்டையிலே மூடிக் கிடக்கின்ற காவேரி நூற்பாலையைத் திறக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். நலிந்த அந்த நூற்பாலை சென்னை உயர்நீதி மன்றத்தாலே ஏலத்திலே கொண்டு செல்லப்பட்டு புதிய நிர்வாகம் அந்த நூற்பாலையை ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் அங்கே இருக்கின்ற தொழிலாளர்கள் தங்களுக்குச் சேரவேண்டிய தொகைகள் எல்லாம் கிடைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதனாலே, இந்த உயர் நீதிமன்றத்திலே அவர்கள் முழுப் பணத்தையும் செலுத்திய பிறகுதான் அந்தத் தொழிலாளர்களுக்குரிய பணங்கள் கொடுக்கப்படும். எனவே, நிதி நெருக்கடி காரணமாகத்தான் அந்தத் தொழிற்சாலையும் இன்றைக்குத் திறக்கப்படவில்லை. ஆனால் இன்றைக்கு அந்த தொழிற்சாலையைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதைப்போல இன்றைக்கு இன்னொரு மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். கடந்த 75 நாட்களாக மூடிக்கிடந்த கார்போரண்டம் யூனிவர்ஸல் தொழிற்சாலை நேற்றையதினம் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு இன்று முதல் அந்தத் தொழிற்சாலை இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி).

இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே நாங்கள் தொழிற்சாலைகளுக்குத் திறப்பு விழா காண்கின்ற ஆட்சியாக இந்த ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி



அவர்கள், ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு எந்தத் தொழிற்சாலையையும் மூடுவதற்கு இந்த அரசு காரணமாக இல்லாமல் இங்கே தொழிலாளர், முதலாளி நல்லுறவை உருவாக்கி இன்றைக்கு அத்தனை தொழிற்சாலைகளும் துவங்குவதற்குரிய வசதி வாய்ப்புகளை இந்த அரசு செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம். இன்றைக்கு தமிழகத்திலே பல பஞ்சாலைகள் மூடிக்கிடப்பதாக —11 பஞ்சாலைகள் மூடிக்கிடப்பதா நம்முடைய சிங்கை கோவிந்தராஜன் அவர்கள் குறிப்பிட்டார்கள் அவையெல்லாம் 1984, 1986 ஆம் ஆண்டிலேயிருந்து மூடிக் கிடக்கின்றன. அவை தொழிற் தகராறு காரணமாக மூடப்படவில்லை என்பதையும், அவை நிதி நெருக்கடி காரணமாக மூடப்பட்டிருக்கின்றன என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறோம். எனவே புரட்சித் தலைவியினுடைய ஆட்சி நிச்சயமாக தமிழகத்தை தொழிலிலே முதன்மையான மாநிலமாக கொண்டு செல்கின்ற ஆட்சியாக அமையும். அதற்கு தொழிலாளர் நலம் பேணுகின்ற தலைவியாக இன்றைக்கு புரட்சித் தலைவி விளங்குகின்ற காரணத்தினாலே தான் இதுவரை எந்த அரசும் செய்து தராத வியத்தகு சாதனைகளை தொழிலாளர்களுக்கு பல்வேறு சலுகைகளை வசதிகளை அவர்களுக்கு அறிவிக்கின்ற வாய்ப்பினை இன்றைக்கு தந்திருக்கிறார்கள். எனவே, இங்கே வெட்டுத் தீர்மானங்களை கொடுத்திருக்கின்ற நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, 'சாவின் புரட்சித் தலைவியின் புகழ்பாடி சாக வேண்டும், எந்தன் சாம்பல் புரட்சித் தலைவியின் புகழ் மணந்து வேக வேண்டும்' என்று கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோ. காளன்.

திரு. கோ. காளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் தனியார் துறையில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் வழங்கவேண்டும் என்று தொழிலாளர் துறையின் மூலமாக சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. சட்டம் கொண்டு வருவதற்கு அன்றைக்கு முயற்சி செய்யப்பட்டது. இடையில் சில காரணங்களால் அது தடைப்பட்டு இருக்கிறது. எனவே, புரட்சித்தலைவி அரசு தனியார் துறை தொழிலாளர்களுக்கு

[திரு. வை. காளன்] [1992 ஏப்ரல் 20

நிர்வாகமே வீடு கட்டித் தருவதற்கான சட்டத்தை அல்லது வாடகை தரவேண்டும் என்ற ஒரு கொள்கையை ஏற்று செயற்படுத்துமா என நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்களை நாம் எப்படி கட்டாயப்படுத்த முடியும்? கட்டாயப்படுத்த முடியாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு வேறு வகைகளில் தொழிலாளர்களுக்கு உதவி செய்ய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற முந்திரி தொழிற்சாலையில் வேலை செய்கின்ற பெண்களுக்கு மினிமம் வேஜஸ் கொடுக்கவேண்டும் என்று வேஜஸ் செட்டில்மெண்ட்டுக்காக அங்கே இருக்கின்ற சி.ஐ.டி.யூ. யூனியனும், இங்கே இருக்கின்ற அதிகாரிகளும் சேர்ந்து கேரளாவில் இருக்கின்ற ஸ்டார் ஓட்டலில் வைத்து பேசி அனைத்திந்திய அண்ணா தி.மு.க., காங்கிரஸ், தி.மு.க. மற்ற எந்த யூனியனையும் அழைக்காமல் ஒரே ஒரு யூனியனை மட்டும் வைத்துப் பேசி ஒரு முடிவு எடுத்து இருக்கிறார்கள். அந்த அதிகாரிகள் இங்கே இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? மேலும் அந்த செட்டில்மெண்டை நீக்கி விட்டு நல்ல அதிகாரிகளை அதற்காக நியமனம் செய்து மீண்டும் ஒரு செட்டில்மெண்டுக்கு காங்கிரஸ், அனைத்திந்திய அண்ணா தி.மு.க. போன்ற எல்லா தொழிற்சங்கங்களையும் அழைத்துப் பேசுவதற்கு இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மேலும் ஆயிரம் தொழிலாளர்கள் இன்று உண்ணாவிரதம் இருக்கிறார்கள், நம்முடைய அரசினுடைய எழுத்தர்கள், பிஸ்டுகள் 10(எ)(1)-ஆக நியமனம் செய்தவர்கள். டெப் ஏதாவது மறு வாழ்வு கொடுப்பதற்கு அவர்களுக்கு அரசிடம் உத்தேசம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொழிலாளர் நலத் துறையின் கீழ் வராது.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்திரி தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் இந்த அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



[1992 ஏப்ரல் 20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடலூரர் சேசசாயி கம்பெனி 2 ஆண்டு காலமாக மூடியிருப்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, செ, ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. வடலூரிலுள்ள சேசசாயி நிறுவனம் நிதி நெருக்கடி காரணமாக மூடிக் கிடக்கிறது. அங்கே தொழிலாளர், முதலாளி எந்த பிரச்சினையும் கிடையாது, நிருவாகத்திற்கு நிதி நெருக்கடி காரணமாக மூடி இருப்பதாக சொல்கிறார்கள், அதற்கான நிதி உதவி பெறுவதற்காக அவர்கள் முயற்சிப்பதாக இன்றைக்கு தகவல் வந்திருக்கிறது. எனவே. விரைவில் அந்த ஆலையைத் திறப்பதற்கான முழு நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. குப்பன்,

திரு. க. குப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இருக்கும் கே.சி.பி. தொழிற்சாலை 11 மாத காலமாக மூடியிருந்த அந்த தொழிற்சாலையை மாண்புமிகு எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்த உடன் அந்தப் பிரச்சினையை முடித்து இன்றைக்கு 525 குடும்பங்கள் வாயார வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

அதேபோல் என்னுடைய தொகுதியில் இருக்கிற காஞ்சிபுரம் யூனிவர்சல் தொழிலாளர்கள் பிரச்சினை 2 மாத காலமாக இருந்த அத்தொழிலாளர்களுடைய பிரச்சினையை உடனுக்குடன் முடித்துக் கொடுத்த ஆற்றல் மிக்க எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். நன்றி வணக்கம், (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் வெ. புருஷோத்தமன்,

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கனிம நிறுவனங்கள், சுரங்கங்கள், கல் குவாரிகளில் வேலை செய்யும் லட்சக்கணக்கான ஆண், பெண் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு மற்றும் இன்ஷூரன்ஸ் திட்டங்கள் ஏதேனும் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அதாவது சுரங்கங்களில் வேலை பார்ப்பவர்களுக்கான அந்தப் பிரிவு இன்றைக்கு மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது, அந்த இன்ஷூரன்ஸ் போன்ற பாதுகாப்புக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

பிற்பகல் 1–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. வேலூரிலே இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே. தொழிலாளர் நல கோர்ட்டை கொண்டு வருவதற்காக அரசு ஆணை இருந்தும், இதுவரை அந்த இடத்திலே இன்னும் தொழிலாளர் நல கோர்ட் வரவில்லை. இப்போது கொள்கைக் குறிப்பிலே நீதிபதியை போட்டவுடன் இயங்கும் என்று சொல்லி இருக்கிறார்கள், ஹைக்கோர்ட்டை அணுகி. வரும் ஜூன் மாதத்திலாவது அந்த தொழிலாளர் நல கோர்ட் வேலூரிலே இயங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தலைமை நீதிமன்றம் இதற்கான உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுத்துக்கொண்டு இருக்கிறது, நீதிபதிகள் நியமிக்கப்பட்டிருப்பதாக எங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. எனவே. விரைவிலே அந்த நீதிமன்றம் வேலூரிலே துவங்கப்படும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன், (மேசையைத் தட்டும் ஒலி),

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு, மானியக் கோரிக்கை எண். 29 தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன், திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : இல்லை.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது,

திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 29-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 50.62,27,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது,

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது,

பேரவையின் இன்றைய காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன, பேரவை மீண்டும் இன்று மாலை 4–00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–51 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது,

மாலை 4–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

டி2 53-95—17

[1992 ஏப்ரல் 20

7. மானியக் கோரிக்கைகள், 1992-93, விவாதமும் வாக்கெடுப்பும் (தொடர்ச்சி)

(ஆ) கோரிக்கை எண் 21—மீனளம்.

(இ) கோரிக்கை எண். 27—கதர் கிராமத் தொழில்கள்.

(ஈ) கோரிக்கை எண். 48— ஊரகத் தொழில்கள்.

(உ) கோரிக்கை எண். 60— ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும், மானியக் கோரிக்கை எண். 21 —மீனளம், மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 14,97,88,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் '' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 2095, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,'' தஞ்சை மாவட்டம், புதுப்பட்டினம் அம்மனி சத்திரம், மந்திரிபட்டினம், புதுத்தெரு சோமநாதபட்டினம், சின்ன ஆவுடையார் கோவில் ஆகிய ஊர்களில் மீனவர்களுக்கு புயல் பாதுகாப்புக் கட்டிடம் கட்டித் தருவது குறித்து '' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 21 — மீனளம் என்ற தலைப்பில் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,97,88,000—இல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண். 2081, டாக்டர் தே. குமாரதாஸ். இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் முன்மொழியப்படவில்லை.



1992 ஏப்ரல் 20] [பேரவைத் தலைவர்]

எல்லா மானியக் கோரிக்கைகளும் முன்மொழியப்படுகின்றன. வெட்டுத் தீர்மானங்களும் முன்மொழியப்படுகின்றன. பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தந்த மானியக் கோரிக்கைகள் மீது பேசலாம். விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகின்ற உறுப் பினர்கள் அந்தந்த மானியக் கோரிக்கைகள் மீது பேசலாம். கடைசியில் விவாதம் முடிவுற்றதற்குப் பிறகு மீனளத் துறை அமைச்சரவர்கள் பதிலுரைக்கு பின்பு அந்த மானியக் கோரிக்கை நிறைவேற்றப்பட்ட பிறகு, மற்ற மானியக் கோரிக்கைளுக்குரிய பதிலுரையை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரவர் கள் முன்வைப்பார்கள். முதலில் மூன்று மானியக் கோரிக்கைகளும் சேர்ந்தே முன்மொழியப்படுகின்றன. மானியக் கோரிக்கை எண். 27, கதர் கிராமத் தொழில்கள். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' கதர்—கிராமத் தொழில்கள் பற்றிய 27 ஆம் எண். மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 7,56,93,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ''. எனக் கோருகிறேன்.

பிற்பகல் 4–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண். 2130, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' கதர் துறையில் தியாகிகளின் வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்குவது குறித்து '' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' கதர்—கிராமத் தொழில்கள் பற்றிய 27 ஆம் எண். மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 7,56,93,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 48 ஊரகத் தொழில்கள், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' ஊரகத் தொழில்கள் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 39,17,55,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் '' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 2156, திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா.சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" To discuss about the sale of prime land belonging to the TANSI at Guindy Industrial Estate measuring 3 acres to private parties and the need to sell them by public auction " I move—

" ஊரகத் தொழில்கள் என்ற 48 ஆம் எண் மானியக் பற்றிய கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 39,17,55,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 60 — ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 60-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 39,44,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ". எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் ; வெட்டுத் தீர்மானம் எண். 2184, திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" இராதாபுரம் தொகுதி Industrially Backward என்று அறிவிக்கப்பட்டும் தொழில் ஏதும் துவங்கப்படாததால் மீன் பதப்படுத்தும் ஆயத்த உணவு தயாரிக்கும் தொழிற்சாலை துவங்க வேண்டிய அவசியம் குறித்து " விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு என்ற 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 39,44,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண். 2182 : திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் முன்மொழியப் பெறவில்லை.



மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன்விவாதிப்பதற்காக வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் தங்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு மீனவத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவத் துறை மானியக் கோரிக்கை என்ற தலைப்பின் கீழ் கொள்கை விளக்கக் * குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு அவையில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதிலே, தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புக்களை நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி, அதை இந்த அவைக் குறிப்பில் பதிவு செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். இந்த கொள்கை விளக்கக் குறிப்புகளுன் மீது, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இறுதியில், மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு என்னுடைய பதிலுரையும், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு எடுக்கக் கருதியுள்ள சில டிக்கிய முடிவுகள் பற்றியும் தெரிவிக்கிறேன் என்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் கிராமத் தொழில்கள், ஊரகத் தொழில்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு அவைமுன் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில், தமிழிலுள்ள * குறிப்புகளை நான் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்ய வேண்டுமென கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேலான கருத்துக்களுக்கு என் பதிலுரையை இறுதியில் கூறுகிறேன் என்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் சார்பாக மீன்வளத்தைப் பொறுத்தவரையில், இந்த மானியக் கோரிக்கையில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன்வந்துள்ளேன்.

இந்த நாட்டிலே மிகவும் நசுக்கப்பட்ட. நொறுக்கப்பட்ட சமூகத்திலே இருப்பவர்கள் மீனவ மக்கள், மீனவ மக்களைப் பொறுத்தவரையில், அவர்கள் செய்கிற தொழில் மிகவும் ஆபத்தான தொழில். அந்தத் தொழிலிலே உள்ள

* 757 முதல் 825 வரையுள்ள பக்கங்களில் இணையபு I, II, IV மற்றும் V ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

மண்டபம் பகுதியிலே இருக்கிற, வேதாரண்யம் பகுதியிலே இருக்கிற மீனவர்களுக்கு, எல்.டி.டி.ஈ., சிலோனில் இருக்கிற இராணுவத்தினுடைய அச்சுறுத்தல். கேரளாவில் மீன் பிடிக்கப் போகிறவர்களுக்கு, கேரளாவில் இருக்கிற தமிழன், மலையாளி என்ற அந்த வேற்றுமையின் காரணமாக இருக்கிற அச்சுறுத்தல்கள், ஆந்திராவில் மீன் பிடிக்கப் போகிறவர்களுக்கு அந்த மீன்களை வாங்கிக் கொண்டு கமிஷன் வாங்குகிற வகையிலே, ஆந்திராவிலே இருக்கிறவர்கள் உருவாக்குகிற பிரச்சினைகள் ஆகிய இவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டு, நம்முடைய மீனவர்கள் ஏறத்தாழ 200 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை ஈட்டுகிற வகையிலே பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு ஒதுக்கி இருக்கிற பணம். அவர்களுக்கு சென்று சேர்கிறதா என்றால் இல்லை. ஒதுக்கியிருக்கிற பணமும் மிகவும் குறைச்சல், அந்தப் பணமும் ' எஸ்டாப்ளிஷ்மெண்ட் சார்ஜஸ் ' என்று சொல்கிற அளவிலேதான் சென்று சேர்கிறதே தவிர, நம் மீனவர்களுக்கு அந்த அளவுக்கு அது செல்வதில்லை. ஏனென்றால், ஒதுக்கி இருக்கிற பணம் மிகவும் குறைச்சலாக இருக்கிறது. ஆனால் ' எஸ்டாப்ளிஷ்மெண்ட் ' என்பதற்கு அதிகமாக இருக்கிற காரணத்தால் தான். கூட்டிக் கழித்துப் பார்த்தால். மீனவர்களுக்கு என்ன செல்கிறது என்று சொன்னால், ஒன்றும் செல்லாது என்றுதான் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக மானியங்கள் ஒதுக்குகிறார்கள், கழிந்த முறைகூட, ' போட் ' டுக்கு மானியம் கொடுத்தால்தான் வங்கிகளிலே லோன் கொடுப்போம் என்றார்கள். எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்திலேகூட, கொடுத்த மானியத்தை ' வித்-டிரா ' செய்திருக்கிறார்கள். ஆகையினால் அவர்களுக்கு ' போட் வாங்க முடியவில்லை, அவர்கள் கோர்ட்டிலே, நீதிமன்றங்களிலே சென்று சந்திக்கிற அளவுக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு நசுக்கப்பட்ட சமுதாயத்தை — மானியத்தைக் கருதி லோனை வாங்கினார்கள், ஆனால், மானியத்தை அரசாங்கம் கொடுக்காத சூழ்நிலையில். லோனை வங்கிகள் கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள், அதனால் கோர்ட்டிலே போய் நீதி கேட்கின்ற அளவுக்கு மீனவர் சமுதாயம் ஒதுக்கித் தள்ளப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது, அவர்கள் பரம்பரை பரம்பரையாக 10 ஆண்டுகள், 15 ஆண்டுகளுக்கு முன்னால் எடுத்த லோன்கள் ' ரைட் ஆஃப் ' செய்யப்படவில்லை, ஏறத்தாழ 2 கோடி, 3 கோடி ரூபாய் இருக்கும் தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து மீனவ சங்கத்திலேயும் இருக்கின்ற லோன்கள், இதனை ' ரைட் ஆஃப் ' செய்ய வேண்டுமென்று பல்வேறு கோரிக்கைகளை நம்முடைய அரசு ஏற்று, இந்த 2 கோடி, 3 கோடி ரூபாய்களை ஒரு சமுதாயத்திற்கு என்று ஒதுக்கி, ரைட் ஆஃப் செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பிற்பகல் 4–10

இன்று வலை தயாரிக்கிறார்கள். தனியார் வலை தயாரிக்கிறார்கள். அவர்களுக்கு நம்முடைய அரசாங்கம் ' சப்சிடி ' கொடுத்தால் கூட வலைக்கு உண்டான விலை நிர்ணயம் செய்யப்படவில்லை, அவர்கள் விருப்பத்திற்கேற்ப விற்கிறார்கள், மானியம் கொடுத்தால்கூட, அதிகமான அளவுக்கு விலையை ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள், ஆக, அரசு வலையினுடைய விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். இந்த வலைக்கு — இந்த குவாலிட்டிக்கு இவ்வளவு ரூபாய்தான் வாங்க வேண்டும் என்று விலையை நம்முடைய அரசாங்கம் நிர்ணயம் செய்தால்தான் மீனவர்களுக்கு குறைந்த விலையில் வலைகள் கிடைக்கும். ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு மீனவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிறார்கள், அவர்கள் மீன் பிடிக்க கேரளாவிற்குச் செல்கிறார்கள், அவர்கள் தூத்துக்குடியில் மீன் பிடித்தாலும் சரிதான், மண்டபத்தில் பிடித்தாலும் சரிதான். கேரளாவிலே பிடித்தாலும் சரிதான். அவர்கள் ஏறத்தாழ 500 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை ஈட்டுகின்றார்கள். அதனுடைய பலன் கேரளாவிற்குப் போய்ச் சேருகிறது. நான் கேட்கிறேன். தமிழகத்திலே இவ்வளவு மீனவர்கள் இருக்கிறார்களே, சென்னையிலிருந்து குமரிவரை நீங்கள் பார்த்தால் தமிழ்நாட்டிற்கு என்று சொல்லி அரசாங்கத்தின் மீன் பதப்படுத்துகிற ப்ராஸசிங் யூனிட் நமக்குக் கிடையாது. கேரளாவில் இருக்கின்றவர்கள் சின்ன கோஸ்டலை வைத்துக் கொண்டு 500 கோடி, 600 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை ஈட்டுகின்றார்கள். ஏன் நம்முடைய மீனவர்கள் கேரளாவிற்குச் செல்ல வேண்டும்? ஏன் இங்கே மீன் பதனிடும் தொழிற்சாலை உருவாக்கக் கூடாதா? இங்கே படித்தவர்கள் இல்லையா? பணம் இல்லையா? அந்நியச் செலாவணி வந்தால் எவ்வளவோ சலுகைகளை மத்திய அரசு கொடுக்க இருக்கிறது. ஆக, அந்த அளவுக்கு அப்படிப்பட்ட தொழிற்சாலையை உருவாக்க நிச்சயமாக இந்த நிதி ஆண்டிலாவது அரசு முன்வர வேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 3 ஆயிரம், 4 ஆயிரம் பாப்புலேஷன் கொண்ட மீனவர் பகுதிகள் இருக்கின்றன. அவர்கள் வாழ்க்கை, நடத்திக் கொண்டிருக்கிறதோ சின்னஞ்சிறிய பகுதியில், அவர்கள் இருக்கின்ற வீடுகள், புயல், வெள்ளம் போன்ற காலங்களில், கடலால் தாக்கப்படுகிறது. தடுப்புச் சுவர் கட்டுவதற்காக ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு ஒதுக்கப்பட்ட பணம்—இன்று வரை தடுப்புச்சுவர் கட்டப்படவில்லை. அந்தப் பிரச்சினை ஒரு பக்கம் இருக்கும்போது அவர்கள் சிறிய இடத்திலே வாழ வேண்டும். அவர்களுக்கு 2,000 வீடுகள் ஒரு ஆண்டில் கட்டித்

தர பணம் ஒதுக்கப்படுகிறது. எனக்குத் தெரியும் ஏறத்தாழ நான் 3-வது முறையாகச் சட்டமன்றத்திற்கு வருகின்றேன் முதலில் 1984 இல் ஒதுக்கப்பட்ட பணத்தில் வீடுகள் கட்டப்பட வில்லை. பணத்தை ஒதுக்குகிறார்கள். ஆனால் கட்டுவதற்கு ஆள் இல்லை. கலெக்டரிடம் சொன்னால் ப்ராஜக்ட் ஆபீசரிடம் சொல்லுகிறார். ப்ராஜக்ட் ஆபீசர் பி.டி.ஓ.விடம் சொல்லுகிறார். இதற்கும் நம்முடைய டிபார்ட்மெண்டிற்கும் சம்பந்தம் இல்லாமல் போய் விடுகிறது. 1985–86-ல் கட்டப்பட்ட வீடுகள் பேஸ்மெண்ட் லெவலிலேயே நிற்கிறது கட்டி முடிக்கப்படவில்லை. ஏன் என்று கேட்டால், அந்த அதிகாரி மாறி விட்டார். இந்த அதிகாரி மாறி விட்டார் என்கிறார்கள். குறிப்பாகச் சொல்லுகிறேன். ஒரு ப்ராஜக்ட் ஆபீசர் மதுரையிலிருந்து வந்து அவருக்கு வேண்டிய காண்டிராக்டரையே வைத்து ஏறத்தாழ 2,000 வீடுகள் கட்டப்படாமல் இருக்கின்றன. எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலே. 1,000 வீடுகளுக்குப் பல நிதி ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட பணங்கள் இன்றுவரை எந்தக் கணக்கில் வைக்கப்பட்டிருக்கின்றன என்பது தெரியவில்லை. பேஸ்மெண்டிலே நிற்கிறது. ஏன் இப்படி இருக்கிறது என்று கேட்டால் 1986-லே போட்ட பேஸ்மெண்ட், 1987லே போட்ட பேஸ்மெண்ட் கலெக்டரிடம் இதை ரெவ்வியூ செய்யுங்கள் என்று சொன்னால்—ஏன் அந்த வீடுகள் கட்டி முடிக்கப்படவில்லை என்று கேட்டால், எடுத்தேன், வைத்தேன், சொன்னேன் என்று ஏதாவது சொல்கிறார்கள் அந்த அளவுக்கு மீனவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட பணம் சென்று சேரவில்லை என்று சொன்னால்—இருப்பதற்கு இடம் இல்லை. குவாலிட்டியைப் பற்றிக் கேட்டால் மிகப் பரிதாபம். கலெக்டரிடம் கேட்டேன். இந்த உப்பு மணலை வைத்துக் கட்டுகிறீர்களே? வீடுகள் நிற்குமா? நாம் வீடு கட்டுகிறோம். நல்ல மணலைப் போட்டுத்தான் வீடு கட்டுகிறோம். அந்த உப்பு மணலைப் போட்டு வீடு கட்டினால் வீடு உடனே இடிந்து விடுகிறது. சாதாரண குடிசையில் இருப்பவர்களைவிட மீனவர்களுக்கு சேப்டி இல்லை. குறிப்பாக, நீரோடி, தூத்தூர் போன்ற பகுதிகளில் அதிகாரிகளிடம், கலெக்டரிடம் காண்பித்திருக்கிறேன். அவ்வாறு காண்பித்தால்தான் முடியும். கலெக்டரோ, அசிஸ்டண்ட் டைரக்டர் ஆப் பிஷ்ஷரிஸ்ஸோ ஒன்றும் செய்வது இல்லை. கேட்டால், எம்.எல்.ஏ. வழக்கம் போல் வருகிறார், சொல்கிறார் என்ற அளவில்தான் இருக்கிறது. அந்த மீனவர்கள் கேட்கிறார்கள். எங்களுக்குப் பிரதிநிதித்துவம் வராதா என்று கேட்கிறார்கள். பிரதிநிதித்துவம் இல்லாததால்தான் நாங்கள் பேசாது இருக்கிறோம். ஏனென்றால் இந்த மீன் துறையைப் பற்றி யாரும் கவனிப்பது இல்லை. அதன் நிலைமையைச் சொல்லுகிறேன். அரசாங்கம் கொடுத்த பணத்தில் வீடு கட்டியிருந்தால் கூட பிரச்சினை இல்லை. அந்த வீடுகளைக் கட்ட முடியாத நிலை என்று சொன்னால், இந்த அதிகார வர்க்கங்கள் என்ன செய்து



கொண்டிருக்கிறார்கள்? ஒருத்தரைக் கேட்டால் இன்னொருவரைக் காட்டுகிறார்கள். அசிஸ்டெண்ட் டைரக்டர் ஆப் பிஷ்ஷரீஸைக் கேட்டால் வீடு கட்டுவதற்கு ப்ராஜக்ட் ஆபீசர் தான் பொறுப்பு என்று சொல்லுகிறார். ப்ராஜக்ட் ஆபீசரைக் கேட்டால் பி.டி.ஓ. என்று சொல்லுகிறார், பி டி.ஓ.வைக் கேட்டால் கலெக்டர்தான் பொறுப்பு என்கிறார். இந்த அளவுக்கு, மாறி, மாறி, சொல்லிச் சொல்லி, பல கோடி ரூபாய்களை இவர்களே சாப்பிட்டு விட்டார்கள். 1985–லே ஒதுக்கிய பணத்திற்கு யார் பொறுப்பு? இந்த அளவுக்கு மீனவ சமுதாயத்தினுடைய அடிப்படை வசதிகளைக் கவனிப்பது இல்லை. ஒரு கழிப்பறை வசதி கிடையாது. ஒரு வீடு கட்டுவதற்குப் பதினான்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். வீடு கட்டித்தரும்போது பேசிக் அமெனிடீஸ்–கழிப்பறை கட்டுவது கிடையாது. குடி தண்ணீர் கொடுப்பது இல்லை.

ஏதோ நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே கொஞ்சம் பணத்தை ஒதுக்குகிறோமே தவிர அந்தப் பணம் இந்த ஏழை மீனவர்களுக்குச் சென்று சேரவில்லை என்ற ஒரு நிலைமை இங்கே இருந்து கொண்டிருக்கிறது. அதைத்தான் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கென்று நிலம் இல்லாமல் அதாவது 'ஏரியா' இல்லாமல் இருக்கிறது. சில கிராமங்களில் வீடு கட்டுவதற்கான இடம் '.அதாவது பிஷ்ஷரிஸ் ஹேம்லட்' என்று சொல்வார்கள். அதாவது ஒரு பகுதியிலே 5,000 பேர் வாழ்வார்கள். எனவே அந்தப் பகுதியிலே இடப் இல்லை. ஆகவே மாடி வீடு கட்டிக் கொடுக்கிற திட்டத்தை நம்முடைய அரசு உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பிற்பகல் 4–15

கேரளாவைப் பொறுத்தவரையில் சொல்கிறேன் ஒரு மீனவனைக் காணவில்லை. என்று சொன்னால் ஹெலிகேப்டர் ஆப்ரேட் பண்ணுகிறார்கள். தமிழ்நாட்டில் 100 பேர்களைக் காணவில்லை, 50 பேர்களைக் காணவில்லை என்று சொன்னால் நாம் டெலிகிராம் அனுப்புகிறோம் அமைச்சருக்கு மற்றும் கலைக்டருக்கு. அப்படி டெலிகிராம் அனுப்புகிறோமே தவிர, யாரும் தானாக அந்த ஆள் வந்தால்தான். அவன் தலையெழுத்து. கேரளாவில் ஒருவர் காணவில்லை என்றால் கூட ஹெலிகாப்டர் ஆப்பரேட் ஆகிறது. தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஒரு ஹெலிகாப்டர் போதும். தூத்துக்குடியை மையமாக வைத்தோ, கன்னியாகுமரியை மையமாக வைத்தோ அதை வைத்திருந்தால் உடனடியாக ஃபோன் செய்து அவர்களைத் தேடிப் பிடிக்க முடியும். அப்படித் தேடிப் பிடிக்க வேண்டும். ஆனால் நம்முடைய மாநிலத்தில் இதுவரையில் ஹெலிகாப்டர் ப்ரவிஷன் கொடுக்கவில்லை. நம்முடைய முன்னால் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில்

சட்டசபையில் வாதாடி கன்னியாகுமரியில் ஒரு போட் விட வேண்டுமென்று அவர்கள் ஆணையிட்டார்கள். அந்த போட் எங்கே இருக்கிறது என்பதே தெரியவில்லை. அந்த அளவுக்கு ஒரு மீனவன் காணவில்லை என்று சொன்னால் ஒரு போட் மூலமாகக் கூட அரசாங்கம் தேடுவதற்குத் தயாராக இல்லை. எப்படி இந்த மக்களைக் காப்பாற்ற முடியும்? ஹெலிகாப்டர் கேரளாவிலே வைத்திருக்கிறார்கள். 6, 7 ஹெலிகாப்டர்கள் வைத்திருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் காணாமல் போன தகவல் கிடைத்தவுடன் உடனடியாக கடற்படை, காவல் படையினருக்குத் தகவல் அளிக்கப்பட்டு உடனடியாக தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவின் பேரில் ஹெலிகாப்டரில் தேடும் பணி நடைபெற்று வருகிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைத் தர வேண்டாம் என்று கெட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

<u>திரு. மா. சுந்தரதாஸ்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவல் தரவில்லை. நமக்கு இல்லையே என்றுதான் சொல்கிறேன். நீங்கள் சொல்லி அவர்கள் கேட்க வேண்டும். ஆனால் நம்முடைய டிப்பார்ட்மென்டிலேயே இருந்தால்....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஹெலிகாப்டர் இல்லையே ஒழிய, மத்திய அரசு மாநில அரசு இரண்டும் ஒன்றுதான். அதாவது வெவ்வேறு அரசுகளாக இருந்தாலும் கூட இப்படிப்பட்ட ஆபத்து என்று சொன்னால் உடனே வருகிறது. எனவே இக்கரைக்கு அக்கரைப் பச்சை என்பது போல் கேரளாவைப் பார், கேரளாவைப் பார் என்று சொல்வதை விட—கேரளாவை விட இங்கே நன்றாகத்தான் செய்கிறார்கள்.

<u>திரு. மா. சுந்தரதாஸ்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவை விட நாம் பல துறைகளில் முன்னேறி இருக்கிறோம். இல்லை என்று சொல்லவில்லை. பல துறைகளில் நாம் முன்னேறி இருக்கிறோம். ஆனால் மீன் துறையைப் பொறுத்தவரையில் சொல்கிறேன். நான் அக்கரைப் பச்சை என்று சொல்லவில்லை. எனவே நாம் பல துறைகளில் முன்னேறி இருக்கிறோம். அதை





இல்லை என்று சொல்லவில்லை. ஹெலிகாப்டர் அங்கே டிப்பார்ட்மென்டிலேயே வைத்திருக்கிறார்கள். நான் சொல்ல வந்த கருத்து அதுதான். நாம் தேடவில்லை என்று சொல்லவில்லை. ஆள் இல்லை என்று சொன்னால் நாம் நிச்சயமாகத் தேடத்தான் போகிறோம். 50 பேரைக் காணவில்லை என்றால் முதலமைச்சருக்கு டெலிகிராம் கொடுத்தால் நிச்சயமாக ஆவன செய்வார்கள். ஆனால் கேரளாவிலே இந்த இலாக்காவுக்குச் சொந்தமாக ஹெலிகாப்டர் வைத்திருக்கிறார்கள். நான் சொல்கிற பாயின்ட் அதுதான். நமக்கு அது இல்லையே என்பதுதான். ஆகவே நமக்கும் அதை வைக்க வேண்டும் என்பதுதான் கோரிக்கை. ஆகவே நான் குறை சொல்வதாக நினைக்காதீர்கள். எனவே அக்கரைப் பச்சை என்றில்லை. கேரளாவை விட நாம் பல வகையில் முன்னேறி இருக்கிறோம். இல்லை என்று சொல்லவில்லை. ஆகவே நான் கேட்டுக்கொள்வதெல்லாம் நிச்சயமாக நாமும் ஹெலிகாப்டர் வைத்துக் கொள்ள வேண்டும். முடியாத பட்சத்தில் ஒரு போட்டாவது இருக்க வேண்டும். ஒரு பிரச்சினை என்று சொன்னால் ஒரு மாவட்டத்திற்கு ஒரு போட், அதாவது ஒரு விசைப்படகாவது வைத்துத் தேடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு மீனவன் மிஸ் ஆகிவிட்டான் என்று சொன்னால் அமைச்சருக்கோ, கலெக்டருக்கோ டெலிகிராம் கொடுத்தால் உடனடியாகத் தேடிப்பிடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று எங்களுடைய மாவட்டத்திலிருந்து கேரளாவிற்கு ஏன் வேலைக்குச் செல்கிறார்கள்? ஏனென்றால் நமக்கு மீன்பிடித் துறைமுகங்கள் இல்லை. சின்னமுட்டத்திலே மீன்பிடித் துறைமுக வேலை 6, 7 வருஷங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த வேலை முடிந்த பாடில்லை. அது அமைச்சருக்கும் தெரியும். நாம் ஆட்சிக்கு வந்து 8 மாதம் தான் ஆகி இருக்கிறது. அந்த வேலையை முடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் சின்னமுட்டத்தில் மீன்பிடித் துறைமுகத்தை முடித்து விட்டால் கேரளாவுக்குப் போகவேண்டிய தேவையில்லை. நம்முடைய மீனவர்கள் எல்லோரும் சின்னமுட்டத்திற்கு மீன் பிடிக்க வருவார்கள். ஆகவே அந்தத் துறைமுகப் பணியைத் துரிதமாக முடித்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சின்னமுட்டத்தில் அந்த மீன்பிடித் துறைமுகம் வந்துவிட்டால் நிச்சயமாக நம்முடைய மீனவர்கள் கேரளாவுக்குப் போய் கஷ்டப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று மீனவர்களுக்கு டீசல் கொடுக்கின்ற ப்ரப்போஸல் இருந்தது, டீசல் தட்டுப்பாடு வந்தபிறகு அதைக் கொடுக்கவில்லை. எனவே மத்திய அரசிடத்திலே சொல்லி, எல்லா பகுதிகளிலும் டீசல் பங்க் வைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மா. சுந்தரதாஸ்] [1992 ஏப்ரல் 20

அதேபோன்று டைரக்டர் ஆஃப் பிஷ்ஷரீஸ் மற்றும் டைரக்டர் ஆஃப் ஃபிஷ்ஷிங் கார்ப்பொரேஷன் என்பதைப் பொறுத்தவரையிலே இரண்டுக்கும் ஒரே அதிகாரி இருக்கிறார். இரண்டுக்கும் இரண்டு அதிகாரி இருந்தால் நன்றாக இருக்கும் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஃபிஷ்ஷரீஸ் கார்ப்பொரேஷனைப் பொறுத்தவரையில் 'டெக்னிக்கல் நோஹௌ தெரிந்த ஒருவரை ஜெனரல் மேனேஜராக நியமித்தால் நன்றாக இருக்கும். இப்படி இரண்டுக்கும் இரண்டு அதிகாரி இல்லாமல் ஒரே அதிகாரி இருப்பதால் இரண்டு இலாக்காவும் சரியாகக் கவனிக்கப்பட முடியவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலை இன்று இருந்துகொண்டு இருக்கிறது.

அதேபோன்று மண்டபம் 'பேர்ள் ப்ராஜக்ட்' முத்து. அந்த ப்ராஜக்டைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 50, 60 பேர் வேலை செய்கிறார்கள். நல்ல முறையில் அதைச் சீராகவும், சிறப்பாகவும் கவனித்தால் அதிக இலாபம் கிடைக்கும். உலக மார்க்கெட்டைப் பிடிக்கிற வகையில் நல்ல முறையில் அந்த பேர்ள் ப்ராஜக்ட் இருந்து கொண்டிருக்கிறது மண்டபத்தில். அங்கே வேலை செய்பவர்களுக்கு நிரந்தரக் கூலி இல்லை. அவர்கள் கன்சாலிடேட்டட் சேலரியிலே இருக்கிறார்கள். அவர்களை ஊக்குவிக்கிற வகையில் அவர்களை நிரந்தரம் செய்து அவர்களுக்கு ஒரு 'பே ஸ்கேல் ஃபிக்ஸ்' செய்து கொடுத்தால் அந்த ப்ராஜக்ட் மிகவும் நல்ல முறையில் இயங்கும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய சென்னையிலேகூட, 'யென் கிரெடிட்' நிறுவனம், அதாவது சிங்கப்பூர், மலேசியா போன்று அதாவது, வெளி நாட்டினர் நிறுவனத்தோடு, தமிழக சர்க்கார், ஜப்பான் போன்ற வெளி நாட்டினருடன் சேர்ந்து 'கொலாபரேஷன்' நடை பெறும் ஒரு நிறுவனம்' தொழிற்சாலை, அது கூட இன்று சரியான முறையிலே இல்லை. நம் தொழிலாளர்களுக்கு அங்கே வேலை கொடுத்து, ஒழுங்கான பே ஸ்கேல் கொடுத்து நடைபெறாததால், அது லாபத்திலே இயங்கவில்லை. அந்த அளவுக்கு அந்த தொழிற்சாலை லாபத்திலே இயங்கவேண்டும் என்று சொன்னால், லேபர் லா-வின்படி 240 நாட்கள் வேலை செய்தால், 'அந்த தொழிற்சாலை வேலை செய்து, அந்த தொழிலாளர்களுக்கு நல்ல முறையிலே சம்பளம் கொடுத்து, அவர்களை ஊக்குவித்தால், அந்த தொழிற்சாலை நல்ல லாபத்திலே இயங்கும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே 'மார்க்கெட்டிங்' சரியான முறையிலே இல்லை, நம்முடைய 'சென்னையிலே' உள்ள நிறுவனத்திலே என்று சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



1992 ஏப்ரல் 20] [திரு. மா. சுந்தரதாஸ்]

பிற்பகல் 4-20

அடுத்து 'பிரான் கல்சர்'. அதாவது, இறால் மீன் வளர்ப்பு. அதைப் பொறுத்தவரையில், நீலாங்கரை என்று சொல்கின்ற இடத்திலே தான் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த கல்ச்சர்-ஐ நாம் செய்து வருகிறோம். இதில் சங்கு எல்லாம் உற்பத்தி செய்கிறோம். அங்கே அதற்கு ரூ. 30 லட்சம் சப்சிடி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதுகூட சரியான முறையிலே இயங்கவில்லை. அங்கு ஊழியர்களுக்கும் அதிகாரிகளுக்கும் உள்ள உறவு சரியாக இல்லாத காரணத்தினால் அங்கே இருக்கின்ற எம்ப்ளாயீஸ்க்கு நிரந்தர வேலையில்லாமல், அதிக சம்பளம் இல்லாமல் இருக்கின்ற காரணத்தினாலே, அவர்களுக்கும் சரியான முறையிலே வேலை பாதுகாப்பும் இல்லாமல் இருக்கின்ற காரணத்தினாலே அந்த நிறுவனம் இயங்கவில்லை.

அதற்குப் பின்னால் தூத்துக்குடியிலே ''காரங்கோடு', 'காரங்கோடு' என்றால் எந்த டிஸ்ட்ரிக்ட் என்று போடவில்லை. இராமநாதபுரம் என்று நான் நினைக்கிறேன். பாலிசி நோட்-லே எந்த டிஸ்ட்டிரிக்ட் என்று போடப்படவில்லை. அதுபோலவே தூத்துக்குடியிலே 'அக்குவா எஸ்டேட்ஸ்' போட் யார்ட். அதிலே கூட நீங்கள் நல்ல முறையிலே சிப்பந்திகளை ஊக்குவித்து நல்ல சம்பளத்தைக் கொடுத்து நல்லமுறையிலே செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நமக்கு 3, 4 டிராலர்கள் இருக்கின்றன. வைசாக்-ல் ஓடுகிறது. அதிலே கூட ரூ. 5 இலட்சம் லாபம் காட்டுகிறார்கள். அதுகூட நல்ல முறையிலே இயங்கினால் நிச்சயமாக அதிகமான லாபம் கிடைக்கும். அதே போல, போட் யார்ட்கள் 4-ஐ நாம் மூடியிருக்கிறோம். தூத்துக்குடி, மண்டபம், நாகப்பட்டினம், மெட்ராஸ்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசாகப்பட்டினத்தில் தமிழ் நாடு பிஷ்ஷரிஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷனுக்கு சொந்தமாக ஓடிக்கொண்டு இருக்கும் டிராலர்ஸ் தான் தனியார் டிலார்களைக் காட்டிலும் லாபகரமாக ஓடிக்கொண்டிருக்கின்றன. தனியார் டிராலர்கள் இன்றைக்கு ஓட முடியாமல் அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய 'போட் யார்ட்'-லே 5 லட்சம் ரூபாய் லாபத்தைக் காட்டியிருக்கிறோம். அதிகமான லாபத்திலே இயக்க முடியும் என்றுதான் நான் சொல்கிறேன். அதைப்போல 'போர்ட் யார்ட்' கள் 4 யார்ட்-களை நாம் மூடியிருக்கிறோம். தூத்துக்குடி, மண்டபம், நாகப்பட்டினம், மெட்ராஸ். ஆனால் 'லாஸ்' என்று இருந்தாலும் நாமே நடத்தி நம்முடைய மீனவ மக்களுக்கு தகுந்த விலைக்கு கொடுப்பதற்காக குறைந்த பட்சம் ஒரு 'போர்ட் யார்ட்' தொடங்கும்படி கேட்டுக்கொள்கிறேன். 4 போர்ட் யார்ட்டா கள் மூடப் பட்டிருக்கின்றன. ஒரு போர்ட் யார்ட்-ஐயாவது தொடங்கினால்தான் அதிலே 'லாஸ்' இருந்தாலும்கூட, நம்முடைய மீனவ மக்களுக்கு குறைந்த விலைக்குக் கொடுப்பதற்கு இது வசதியாக இருக்கும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல டீசல் பங்க். டீசல், மண்ணெண்ணெய் இல்லாமல் மீனவர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். ஆனால் டீசல் பங்க்குகள் மூடப்பட்டிருக்கின்றன. மேலும் மத்திய அரசு தான் இதைச் செய்ய வேண்டும். மாநில அரசு பரிந்துரை செய்து சொல்லியும்கூட செய்யாத போது, பங்க்-களைத் திறக்கவேண்டும், எல்லா கிராமங்களுக்கும், மீனவ பகுதிக்கும், ஒவ்வொரு டீசல் பங்க்- ஆவது திறக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரே ஒரு வார்த்தை. பனைத் தொழிலாளர்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

பனை தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு அவர்கள் இறந்துவிட்டால் ஒரு தொகை கொடுக்கிறோம். ஆனால் அதில் பிரச்சினை என்னவென்றால், 'போஸ்ட் மார்ட்டெம்' செய்ய வேண்டும் என்று சொல்கின்றார்கள். 'போஸ்ட் மார்ட்டெம்' செய்வதற்கு ஏழையாக இருக்கின்ற ஒரு பனைத் தொழிலாளி, இறந்த உடனே 'போஸ்ட் மார்ட்டெம்' செய்வதற்கான பண வசதி இல்லாமல், அதைச் செய்ய முடியாமல் இருக்கின்றது. ஆகவே தாசில்தார் அளவிலே, ஆர்.டி.ஓ. அளவிலே அவர்கள் என்குயரி செய்து, 'அவர் இறந்து விட்டது உண்மைதான்' என்று சொன்னால் இறந்தவர் குடும்பத்ினருக்கு அந்த சப்சிடி கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதே போல பனை ஏறும் தொழிலாளி பனைஏறும போது ஆக்சிடன்ட் ஆகி, கை கால் இழந்திருப்பவர்களுக்கு பண உதவி கிடைப்பதில்லை. ஏறத்தாழ என்னுடைய பகுதியிலேயே சுமார் 150 மனுக்கள் தேங்கி இருக்கின்றன. பலபேர்களுக்கு அக்சிடன்ட் ஆகி, அவர்கள் போய் கேட்டால் எங்களுக்குத் தெரியாது என்று சொல்கின்



றார்கள். அந்த 150 பேர்களுக்கு, ஆக்சிடண்ட் ஆனவர்களுக்கு ஒரு காசும் கிடைக்கவில்லை. இந்த அரசு என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. நாம் வந்து 8 மாதம் ஆகிறது. அதற்கு முன்னாலே இருந்த அரசு காலத்திலே இருந்தே தேங்கியிருக்கின்றன. ஆகவே நம்முடைய அமைச்சர் அவர்கள் உடனயடியாக ஆக்ஷன் எடுத்து இறந்து போனவர்களின் குடும்பத்தினர்க்கு எல்லாம் உடனடியாக பணம் கொடுப்பதற்கான ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

பிற்பகல் 4-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. குப்பன்.

திரு. க. குப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவ சமுதாய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும், மீனவ மக்களின் ஒளிவிளக்காகவும் விளங்குகின்ற எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களில் என்னுடைய நன்றியை காணிக்கையாக்கி, மீனவ துறை மானியத்தின்மீது பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் ஒரு மீனவன் தொழிலில் ஈடுபடும்போதும் அல்லது கரையிலே விபத்துக்கு உள்ளாகின்றபோதும் 15 ஆயிரம் ரூபாய் என்று இருந்தது 21 ஆயிரம் ரூபாயாக மாற்றப்பட்டிருக்கிறது. அதற்காக எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு மீனவ மக்களின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதுபோல மாதம் 10 ரூபாயை நாங்கள் கட்டினால் 9 மாத காலம் 90 ரூபாய் கட்டுகின்ற போது, 90 ரூபாயை உடன் சேர்த்து, அந்த மழை, வெள்ளம், புயல் காலங்களில் 3 மாதங்களுக்கு 60 ரூபாய் என்கிற வீதத்திலே கொடுத்ததை மாற்றி இன்றைக்கு மாதம் 45 ரூபாய் நாங்கள் கட்டினால் 8 மாதம் கட்டுகின்றபோது, 360 ரூபாய் வருகின்றது. மத்திய அரசு 360 ரூபாய், மாநில அரசு 360 ரூபாய், இவை மூன்றையும் இணைத்து இன்றைக்கு 1080 ரூபாய் எங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 270 ரூபாய் வீதம் 4 மாதங்கள் கொடுக்கின்ற திட்டத்தை அறிவித்திருக்கிற மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு மீனவ மக்களின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதுபோல இன்றைக்கு 2100 தொகுப்பு வீடுகள் இந்த
பட்ஜெட்டிலே மீனவ மக்களுக்காக எந்த அரசும் செய்யாத
சாதனையை புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு எங்களுக்கு
செய்திருக்கிறது என்பதை மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுடைய திருவொற்றி
யூர் தொகுதி மீனவ மக்கள், மீனவ கிராமங்கள் அதிகமாக
இருக்கின்ற பகுதி ஆகும். அங்கே கடல் அரிப்பு ஏற்பட்டு
மிகவும் பாதிக்கப்பட்ட சூழ்நிலையில் மாற்று இடம்கூட இல்லாத,
தங்க இடம் இல்லாத, வீடு இல்லாத அந்த மீனவ மக்களுக்கு
மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர், மீனவ சமுதாய மக்
களின் நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கின்ற, ஏழையெளிய
மக்களுடைய எழுச்சிமிகு தலைவியாக இருக்கின்ற டாக்டர்
புரட்சித் தலைவி அவர்கள் எங்களுக்கு அந்தத் தொகுதியி
லே மழையாலும், வெள்ளத்தாலும், கடல் அரிப்பாலும்
பாதிப்புக்கு உள்ளாகின்ற அந்த ஏழையெளிய மீனவர்களுக்கு
மாற்று இடங்களை உடனடியாக கொடுப்பதற்கு ஏற்
பாடு செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அதைப்போல, தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின்,
என்.சி.டி.சி. யின் மூலம் செங்கை—எம்.ஜி.ஆர். மாவட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம், வ.உ.சி.
மாவட்டம் மற்றும் தென்னாற்காடு மாவட்டம் ஆகிய 5 மாவட்
டங்களுக்கு குறிப்பாக 15 கோடி ரூபாய் கடன் கொடுப்பதாக
போன பட்ஜெட்டிலே அறிவித்திருந்தார்கள். அந்த அடிப்
படையில் செங்கை—எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் திருவொற்றி
யூர் தொகுதியிலே, குறிப்பாக 25 மீனவ கிராமங்கள் இருக்
கின்றபடியால் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர்
டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அந்தப் பகுதியிலே இருக்
கின்ற மீனவர்களுக்கு 'அவுட்போர்ட் என்ஜின்களும்
கட்டுமரம், வலைகளும் மிகவும் அதிகமாக கொடுப்பதற்
கான ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்
ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதே அடிப்படையில் நீண்டக் காலக் கடனாக இன்றைக்கு
தமிழகத்திலே வாழ்கின்ற மீனவர்கள் 1960 ஆம் ஆண்டு
வாங்கிய அந்தக் கடன்களுக்கு வட்டிக்கு வட்டியாக அது
உயர்ந்திருக்கின்ற சூழ்நிலையில் மொத்தமாக சேர்த்து பார்ப்
போமானால் இன்றைக்கு 7. 7½ கோடி ரூபாய் தான் கடன்
இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அந்தக் கடன்கள்
முழுவதையும் மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் டாக்டர்
புரட்சித் தலைவி அவர்கள் அரசின் காலத்தில் தள்ளுபடி செய்
திட்ட வரலாற்றை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் திரு
வொற்றியூர் தொகுதியிலுள்ள திருச்சினாங்குப்பம் பகுதியிலே



1984 ஆம் ஆண்டு உருவாக்கிய, வீடு கட்டிக் கொடுக்கிற திட்
டத்தைப் பொறுத்தவரையில், 492 கட்டிடங்களை 1 கோடி
யே 7 லட்சம் ரூபாய் செலவிலே கட்ட அமைக்கப்பட்டது.
ஆனால் அன்றைக்கு அது தள்ளி தள்ளி கொண்டு வந்து
இன்றைக்கு 1 கோடியே 53 லட்சம் ரூபாய் என்ற அளவிலே
அது வந்திருக்கிறது. நான் அந்த கொள்கை விளக்கக் குறிப்
பிலேகூட பார்த்தேன். ஒரு கோடியே, 53 லட்சம் ரூபாய்க்கு
அது டெண்டர் விடப்பட்டிருக்கிறது. அந்த டெண்டர் முடிந்த
வுடன் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று அந்த
ஏழை மீனவர்களுக்காக அறிவித்திருக்கின்ற எங்களுடைய
இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு
என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரி
வித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதை மிக விரைவிலே கட்டித் தர வேண்டுமென்று
கேட்டுக் கொள்வதோடு, 1 கோடியே 53 இலட்சம் செலவில்
அந்த மீனவ மக்களுக்குக் கட்டிக் கொடுக்கக்கூடிய அந்த
குடியிருப்புகளை மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் இதய
தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே வருகை தந்து,
திறந்து வைக்க வேண்டுமென்று நான் இந்த நல்ல நேரத்தி
லே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 4-3●

அதைப்போல, மீனவ சமுதாயத்திலே மாபெரும் தலைவ
ராக விளங்கியவர், ஒரு தொழிற் சங்க வாதியாக இருந்தவர்,
மாபெரும் தலைவராக விளங்கியவர் சிந்தனைச் சிபி
சிங்காரவேலர் அவர்கள். தமிழகத்திலே இருந்த எல்லாத்
தலைவர்களுக்கும் சிலை எடுத்துவிட்டார்கள். எனவே
சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்களுக்கு சென்னை
மாநகரத்திலே தமிழக அரசின் மூலமாக ஒரு சிலையை நிறுவ
வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தேர்
தல் பிரச்சாரத்திற்கு என்னுடைய தொகுதிக்கும், மாண்பு
மிகு அமைச்சர் அவர்களின் ராயபுரம் தொகுதிக்கும் வந்த
போதெல்லாம், மீனவர்களுக்கு விசைப் படகுகள் வழங்கப்
படும், கட்டு மரத்திலே தொழில் செய்வதை எல்லாம்
மாற்றி, விசைப் படகு உரிமையாளர்கள் என்ற நிலையை
உருவாக்குவேன் என்று அன்றைக்கு தேர்தல் வாக்குறுதி
யாக அறிவித்திருந்தார்கள். நன்றாக எனக்கு நினைவு இருக்
கிறது. இன்றைய தினம் இதுவரையில் அந்தத்
திட்டத்தை புரட்சித் தலைவி அவர்கள் கொண்டுவர
வில்லை. ஆகவே புரட்சித் தலைவி அவர்கள் கருத்திலே

கொண்டு, ஏழை எளிய மீனவர்கள், கட்டு மரத்திலே தொழில் செய்கின்றவர்கள் விசைப் படகுகள் மூலம் தொழில் செய்யக் கூடிய வகையிலே, கூட்டுறவு சங்கங்களிலே அங்கத்தினர்களாக இருக்கிற மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள ஏழை எளிய மீனவர்களுக்கு மீன் பிடி விசைப் படகுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல. மீனவர் கூட்டுறவு சங்கங்களிலே உறுப்பினர்களாக இருக்கிறவர்கள் வயது காரணமாக தொழில் செய்ய முடியாத நிலை ஏற்படும்போது, குறிப்பாக 50, 55 வயதுக்கு மேற்பட்டவர்கள் மீன் பிடித் தொழிலில் ஈடுபட முடியாத சூழ்நிலை ஏற்படும்போது, அவர்களுக்கு ஒரு ஓய்வூதியத்தை நிர்ணயித்து, அதை அரசு வழங்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, விசைப் படகு மூலம் தொழில் செய்யக் கூடிய மீனவர்கள் இன்றைய தினம் ஆந்திர மாநிலத்திற்குச் சென்று மீன் பிடிக்கக்கூடிய ஒரு அவல நிலை இருக்கிறது. அப்படித் தொழில் செய்துவிட்டு திரும்புகின்றபோது, ஆந்திர மாநிலத்திலே இருக்கிறவர்கள் அந்த மீன் பிடி படகுகளை வழிமறித்து கொள்ளை அடிப்பதும், பிடித்துக் கொண்டு வருகிற மீன்களை எடுத்துக்கொள்வதும், தொழில் செய்யக்கூடிய மீனவர்களை அடிப்பதும், அவர்களுக்கு 25,000 ரூபாய், 50,000 ரூபாய் என்று அபராதம் போடுவதுமான சூழ்நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. இதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இது அரசுக்குத் தெரியுமா? அப்படித் தெரிந்திருந்தால் இந்த அரசு எத்தகைய நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அவருடைய பதிலுரையில் அறிவிக்க வேண்டும். அப்படி இல்லை என்றால், ஒரு குழு அமைத்து, மாண்புமிகு முதல்வரவர்களுடைய ஒப்புதலோடு ஒரு குழு அமைத்து, மீன் பிடித் தொழிலிலே, இந்திய நாட்டிலே. தொழில் செய்வதைக்கூட— நாம் அன்னிய நாட்டிலே தொழில் செய்யவில்லை— இன்றைக்கு கொள்ளை அடிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது, அபராதம் போடக்கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஒரு ஜனநாயக நாட்டிலே மீன் பிடித் தொழிலை செய்வதற்கு முடியவில்லை. இன்றைக்கு 10 இலட்சம் ரூபாய் செலவிலே விசைப்படகு வைத்து, ஒரு வார காலம் உயிரைப் பணயம் வைத்து, தொழில் செய்து, திரும்பி வருகின்ற அந்த மீனவர்கள் எல்லாம் வீட்டுக்குத் திரும்ப வருவார்களா என்ற சூழ்நிலை இருக்கின்றபோதுகூட, ஆந்திர மாநிலத்திலே இருக்கிறவர்கள் அவர்களை கொள்ளை அடிப்பதும், அவர்களை அடிப்பதும், கொல்லுவதுமான சூழ்நிலை இருப்பதை நான் அரசின் கவனத்



திற்குக் கொண்டு வருகிறேன். இதற்காக ஒரு குழு அமைத்து, நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் கடந்த 1991 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று சென்னை புனித ஜார்ஜ் கோட்டையிலே கொடியேற்றும்போது, மீனவர்கள் மீன் பிடித்த பிறகு, அந்த வலைகளை எல்லாம் உலர்த்தும் கச்சத்தீவை, 1974 ஆம் ஆண்டு முந்தைய ஆட்சியாளர்கள், கருணாநிதி அவர்களால் கைவிடப்பட்ட கச்சத் தீவை மீட்டுத் தருவேன் என்று மீனவ சமுதாய மக்களின் ஒப்பற்ற தலைவியாக இருக்கும் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்ததை இந்தத் தமிழகத்திலே இருக்கும் அனைத்து மீனவ மக்களும் நன்றியோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பிற்பகல் 4-35

அது மட்டுமல்ல, மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்ற மீனவர்களுக்கு மானிய விலையில் டீசல் கொடுக்கின்ற சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மீனவர்கள் பாதிக்கப்படுகின்றபோதெல்லாம், புரட்சித்தலைவி அவர்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் டீசல் ரீசேல் அவுட்லெட் ஆங்காங்கே துறைமுகத்தில் நான்கு இடங்களில் ஏற்படுத்தப்பட்டு மீனவ மக்களால் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன, வரவேற்கப்படுகின்றன. மேலும் 10 ரீசேல் அவுட்லெட் கோரி இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஒப்புதலுடன் மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். உத்தரவு கிடைத்தவுடன் அது அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. குப்பன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டீசல் மானிய விலையில் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மானிய விலையில் கொடுத்தால் அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதை மீன் வளர்ச்சிக் கழகம் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் கடந்த பத்து நாட்களுக்கு முன்பாக விசைப்படகுக்கு டீசல் போடுவதற்காக செ

றிருந்தேன். அவர்கள் சொல்கிறார்களே தவிர, செயலில் இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும்— அவருடைய தொகுதியில் இருப்பதால் அதைச் சரி பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புரட்சித்தலைவிக்கு நல்ல பெயர் ஏற்படுத்தவேண்டுமென்ற வகையில் 'பங்க்'கள் நல்ல முறையில் செயல்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. குப்பன், நீங்கள் அமைச்சரைப் பார்த்துக்கொண்டே பேசுகிறீர்கள். என்னைப் பார்த்துப் பேச வேண்டும். மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் விசைப்படகு வைத்து டீசலைப் பெறுவதற்காக ஏற்பட்டுள்ள அனுபவத்தைப் பற்றிச் சொன்னார். அந்த மாதிரியான தவறுகள் எந்த இடத்தில் எந்த பங்கில் ஏற்பட்டது என்று குறிப்பிட்டுச் சொன்னால், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. குப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய தொகுதி என்று சொல்லிவிட்டேன். அங்கே இருப்பதே 3—4 பங்க் தான். ஆகவே புரட்சித் தலைவி அவர்கள் அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

நாகப்பட்டிணத்தில் உள்ள மீனவர்கள் காணவில்லை என்று சொன்னவுடன், புரட்சித்தலைவி அவர்கள் ஹெலிகாப்டர் மூலமும் இந்தியக் கப்பல் படை மூலமும் தேடுவதற்கு ஆணை பிறப்பித்தார்கள். அதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்க முடியுமோ அத்தனையையும் எடுத்து பாரதப்பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்களிடமும் எடுத்துச் சொன்னார்கள். ஆற்றல் மிக்க தலைவியாக, மீனவ சமுதாயத்தின் எழுச்சிமிக்க தலைவியாக, அவர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிக்கொண்டிருக்கும் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டு, நான் ஏற்கெனவே சொன்னது மாதிரி சென்னை துறைமுகத்திற்கு சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பெயரைச் சூட்ட வலியுறுத்திக் கேட்டுக் கொண்டு, மீன் வள மானியக் கோரிக்கையில் என்னைப் பேசுவதற்காக அனுமதியளித்த மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெ கிறேன். நன்றி, வணக்கம்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். கோடிமாரி.

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தாழ்ந்துகிடந்த தமிழக மீனவர்களை வாழ
வைக்க வந்துள்ள வையகம் போற்றும் வீரத்தலைவி அவர்களே,
புயலிலே சிக்கி, கடலிலே தவித்து வாழும் மீனவ சமுதாயம்
இன்று வேதனையிலிருந்து மீள தாராளமாக உதவி புரிந்த எங்
களின் கலைத்தாய், மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்
சித்தலைவி, தமிழகத்தின் நிரந்தர முதல்வரின் ஆதரவால்தான்
சட்டமன்ற உறுப்பினர் ஆனேன் என்பதற்கும், நான் சார்ந்திருக்
கக்கூடிய ஒட்டுமொத்த மீனவர்கள் சார்பிலும் என்னுடைய
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மறைந்த புரட்சித்
தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மீனவ சமுதாயத்தைப் பேரள
வில் மதித்தார்கள். முடிந்தபோதெல்லாம் மீனவர்களுக்கு நன்
மைகளைச் செய்தார்கள். அவர்கள் மறைவிற்குப் பின்னால்
அவர்களைப் போலவே மீனவ சமுதாயத்தைக் கை தூக்கி விடு
வதற்குத் தாங்கள் எடுக்கின்ற ஒவ்வொரு முயற்சிக்கும் ஒவ்
வொரு மீனவரும் நன்றி பாராட்டுகிறார்கள்.

பிற்பகல் 4.40

கச்சத் தீவை மீட்போம். கச்சத் தீவை மீட்போம் என்று
நீங்கள் கொடுத்த குரல், தாயுள்ளம் கொண்டு, மீனவர்களைக்
காக்க நீங்கள் கொடுத்த குரல், ஒவ்வொரு மீனவனையும் நன்றி
உணர்ச்சியோடு நினைக்க வைக்கிறது. நாடி நரம்புகளில் பாச
உணர்வை ஊட்டுகிறது.

இலங்கை இராணுவத்தின் அட்டூழியம். கச்சத்தீவு மட்டும்
மீட்கப்படுமானால் அது மீனவ சமுதாயத்திற்குச் செய்கின்ற
மிகப் பெரிய சேவையாக இருக்கும். அந்தத் தீவைத் தமிழக
மீனவர்களுக்கு மீட்டுத் தரும் முயற்சியைத் தாங்கள் தொடர்ந்து
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். உங்களால் முடி
யாது என்கிறபோது யாராலும் முடியாது என்பதை இந்த மன்றத்
தில் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரை நூற
ுக்கும் மேற்பட்ட மீனவர்கள் பழிவாங்கப்பட்டிருக்கிறார்கள்.
அண்மை நாட்களில் 7 மீனவர்கள் சிங்கள இராணுவத்தால் சுட்டுக்
கொல்லப்பட்டதாக கருதுகிறார்கள். ஆனால் இதுநாள் வரை
ஆட்களும் படகும் திரும்பி வரவில்லை. அது மட்டுமல்லாமல்
இரண்டு மாதங்களுக்கு முன் ஒரு படகு மீன் பிடிக்கச் சென்றது.
அந்தப் படகு வெகு நேரமாகியும் திரும்பி வராததினால் அதைத்
தேடி மற்றொரு படகு சென்றது. அப்படகும் திரும்பி வர
வில்லை. அது சம்பந்தமாக சட்டமன்றத்தில் பேசியதற்குப்பிறகு
இதய தெய்வம், புரட்சித் தலைவியின் அரசின் வேண்டுகோளுக்கு

இணங்க உடனடியாக அதில் சென்ற ஆட்கள் மட்டும் அனுப்பப்
பட்டார்கள். இது நாள் வரை படகு திருப்பித்தரப்படவில்லை
என்பதை அறிந்த மீனவ சமுதாயமும், படகின் உரிமையாளர்
களும் மிகவும் சோர்ந்து இருக்கிறார்கள்.

மீன் பிடி லைசென்ஸ் ரத்தாக வேண்டும். தென் மாவட்
டங்களில் உள்ள மீனவர்கள் விசைப்படகில் செல்லும்போது
மீன் பிடிக்க லைசென்ஸ் கேட்கப்படுகிறார்கள். இந்திய கடல்
பாதுகாப்புப் படையினரால் மிகவும் அலைக்கழிக்கப்படுகிறார்
கள். தேவையில்லாத மீன்பிடி லைசென்சைக் கேட்டுந் துன்
புறுத்தப்படுகிறார்கள். அவர்கள் பேசுகின்ற மொழி இந்தி.புரட்
சித் தலைவி வழிவந்த மீனவர்களுக்கு இந்தி தெரிந்திருக்க முடி
யுமா? மீனவர்கள் ஒன்றைச் சொல்ல கடல் பாதுகாப்பு படை
யினர் வேறொன்றாக புரிந்து கொள்கிறார்கள். டீசல் சிறிது
கூடுதலாக வைத்திருந்தால் அதற்காகவும் மீனவர்கள் துன்புறுத்
தப்படுகிறார்கள். ஜெகநாதப்பட்டினம் போன்ற பகுதிகளிலே
பாதுகாப்பு படையினரின் அளவுக்கு மீறிய அராஜகச் செயல்
களால் இந்தப் பகுதியில் மீன் பிடிக்க முடியாமல் அவர்களுடைய
அன்றாட வாழ்க்கையை சீர்குலையச் செய்கிறார்கள் என்பதை
இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கச்சத்தீவு
மட்டும் மீட்கப்பட்டுவிட்டால் இத்தகைய இடையூறுக்கு வழியே
இருக்காது என்பதையும் மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக்
கொள்கிறேன். டீசல் கடத்துபவர்களை தூக்கிலிடப்படுவது
நியாயம். லைசென்ஸ் என்ற பெயரில் மீனவர்கள் துன்புறுத்
தப்படுகிறார்கள் என்பதை அறியும்போது மிகவும் மனவேதனை
அடைகிறேன்.

சிந்தனைச் சிற்பி சிங்காரவேலருக்குச் சிலை அமைக்க வேண்
டும். சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் இந்தியாவில் குறிப்பாக
தமிழகத்தில் வாழ்ந்த சுதந்திர போராட்ட வீரர். தந்தை பெரி
யாருக்கு வழிகாட்டி; திரு. வி. க. வின் ஆசிரியர், பேரறிஞர்
அண்ணா மதித்த மிகப் பெரும் தலைவர். இன்றுள்ள லேடி
வெலிங்டன் கல்லூரி, அவர் வாழ்ந்த வீடாகும். 1922—ஆம்
ஆண்டு பிரிட்டிஷ் பேரரசால் அவர் வீடுபறிமுதல் செய்யப்பட்டு
அந்த இடத்தில்தான் வெலிங்டன் கல்லூரி கட்டப்பட்டது.
இந்த மேதைதான் இந்தியாவில் முதன் முதல் மே
தினத்தைக் கொண்டாடியவர் ஆவார். காங்கிரஸ் கட்சி,
கம்யூனிஸ்ட் கட்சி, சுயராஜ்ய கட்சி, சமதர்மக் கட்சி
ஆகிய கட்சிகளுக்கெல்லாம் தொண்டு செய்த அந்த
மேதையை இதுவரை யாரும் நினைத்துப் பார்த்து எந்த
மரியாதையும் செய்ததில்லை. மீனவர்களுடைய அன்னை
யாகிய நீங்கள்தான், அதுவும் என்னுடைய தெய்வமாகிய நீங்கள்
தான் எந்த இடத்தில் பிரிட்டிஷ் அரசால் சிங்காரவேலரின் வீடு



பறிமுதல் செய்யப்பட்டதோ அந்த வெலிங்டன் வளாகத்திலேயே
சிங்காரவேலருக்குச் சிலை எடுத்து சிறப்புச் செய்ய வேண்டும்.
அதுவும் உங்களால்தான் செய்து முடிக்க முடியும். இந்த ஒரு
சிலை மட்டும் அரசு சார்பில் எடுக்கப்படுமானால் தமிழகத்தி
லுள்ள ஒட்டுமொத்த மீனவர்களும் கட்சி மாச்சரியம் கடந்து,
அரசியல் கடந்து உங்களை அன்னையாகவும், எங்களது தெய்வ
மாகவும் நெஞ்சங்களிலே வைத்து வணங்குவார்கள் என்பதை
இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதுவும் தங்கள்
திருக்கரத்தால் திறந்து வைக்கப்பட வேண்டுமென்பது எனது
பேராசை தெய்வமே!

மீனவர்களை தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்க
வேண்டும். நகரத்தில் வாழ்கின்ற ஒரு சில மீனவர்களை வைத்
துக் கொண்டு மீனவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிட்டது
என்று பலரும் நினைக்கிறார்கள். அது மிகவும் தவறான கருத்
தாகும். மீனவர்களில் 95 விழுக்காடு வறுமைக் கோட்டுக்குக்
கீழ் வாழ்பவர்கள். 99 விழுக்காடு மீனவர்கள் படிக்காதவர்
கள். இந்தச் சமுதாயத்தைப் பிற்பட்ட சமுதாயத்தில் வைத்து
நினைத்துப் பார்ப்பது என்பது மிகவும் தவறானது. இந்தியா
விலேயே முதன் முதல் வந்த கல்லூரி சென்னை மாநிலக் கல்லூரி.
அந்தக் கல்லூரியை சுற்றிலும் வாழ்கின்ற மீனவர்களிலே ஒரு
படித்த பெண் பட்டாரிதாரிகூட இல்லை என்பது நெஞ்சை
சுடக்கூடிய உண்மை.

தமிழகத்தில் பொறியியல், மருத்துவம் போன்ற படிப்புகளில்
சேருகின்ற பிளஸ் 2 மாணவனின் கடைசி மதிப்பெண் 930. தமிழ
கம் ஒட்டுமொத்தமாக உள்ள மீனவ மாணவர்களின் உயர்ந்த
மதிப்பெண்ணே தொள்ளாயிரம்தான். படிப்பு வாசனை
இல்லாத மீனவப் பெண்கள் முன்னேற வேண்டுமானால் குறைந்த
பட்சம் மீனவர்களைப் பழங்குடி மக்கள் பட்டியலிலோ அல்லது
தாழ்த்தப்பட்டோர் பட்டியலிலோ வைத்துதான் அந்த மக்
களை வாழ வைக்க வேண்டும். மீனவர்கள் தாழ்த்தப்பட்டோர்
பட்டியலில் சேர்க்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை மத்திய
அரசால் பரிவோடு கவனிக்கப்பட்டு முன்பிருந்த தி.மு.க. அரசால்
புறக்கணிக்கப்பட்டுள்ளது. காருண்யமிக்க என் தெய்வத்தின்
ஆட்சி பரிந்துரை செய்து மீனவர்களைத் தாழ்த்தப்பட்ட பட்டி
யலில் வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்
நாட்டிலே கூட, கன்னியாகுமரி பகுதியில் இப்போதும் தாழ்த்தப்
தப்பட்டவர்கள் பட்டியலில்தான் அவர்கள் இருக்கிறார்கள்.

பிற்பகல் 4-45

தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனித் தொகுதிகளைப்
பிரித்துக் கொடுத்து டாக்டர் அம்பேத்கார் தாழ்த்தப்பட்ட
மக்களுக்கு பெரும் சேவையைச் செய்தார். தமிழக கடற்கரை
ஓரமாகக் இழிந்த நாராக, ஒதுக்கப்பட்டுக் கிடக்கும் மீன

வர்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுடைய தனித் தொகுதியைப் போல மீனவர்களுக்குத் தனித் தொகுதி மிகமிக அவசியமாகும். காருண்யமிக்க அன்னை முதலமைச்சர் அவர்களுடைய ஆசியினால் தமிழகத்திலே 3 பேர் சட்டமன்ற உறுப்பினர் ஆகி விட்டோம். அதில் ஒருவர் அமைச்சராகவும் ஆகியிருக்கிறோம். இவைகளெல்லாம் என் தெய்வமாகிய புரட்சித் தலைவியின் அருளினால்தான். எத்தொகுதியிலும், அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு மீனவர்களுக்குரிய தனித் தொகுதிகளைப் பிரிவித்துக் கொடுப்பதற்கு மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரைத்து துணை நிற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடற்கரைப் பகுதியில் சுற்றுலா வாரியங்கள், தொழிற்சாலைகள், ராக்கெட் தளங்கள் போன்றவை அமைக்கப்படுகின்றன. இவை வருவதால், உண்மையிலே பாதிக்கப்படுபவர்கள் இந்தியாவிலும் தமிழகத்திலும் மண்ணின் மைந்தர்களான மீனவர்களாகத்தான் இருக்கின்றார்கள். வந்த வெள்ளம் இருந்த வெள்ளத்தை அடித்துக்கொண்டு போவதைப் போல வருகின்ற தொழிற்சாலைகளும், சுற்றுலா வாரியங்களும் மீனவர்களை அப்புறப்படுத்திவிடுகின்றன. ஸ்ரீஹரிகோட்டாவில் அமைக்கப்பட்ட ராக்கெட் தளத்தினால் மீனவர்கள் அப்புறப்படுத்தப்பட்டு தேவையில்லாத நெருக்கடிக்கு உட்படுத்தப்பட்டு பழவேற்காட்டில் இரத்த ஆறு ஓடிய நிகழ்ச்சியை நாம் மறக்க முடியுமா? ஆலைகள் வந்தாலும் தொழிற்சாலைகள் வந்தாலும் அங்குள்ள மீனவர்களுக்கு வேலை வாய்ப்பைத் தந்து மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசு தனிக் கவனம் செலுத்த வேண்டும். மண்ணின் மைந்தர்கள் காக்கப்படல் வேண்டும் என்பது எங்களது தாழ்மையான வேண்டுகோள்.

அடுத்து கடல் அரிப்புகள். அண்மைக் காலங்களில் மத்திய அரசு ஒப்புதலோடு கீழ்த்தஞ்சை மாவட்டம் பழையாறு துறைமுகத்தில் அமெரிக்க அரசின் உதவியோடு ஆழ்கடல் மீன்பிடிப்புத் திட்டத்தைத் தொடங்கப் போகிறார்கள். தனிப்பட்டவருக்கு உரிமையான அந்த நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளை மீனவர்கள் பெற, அரசு கண்ணும் கருத்துமாக இருந்து செயல்பட வேண்டுமாய்த் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். மீனவர்களுக்கான மீன்பிடி கார்பரேஷன் அமைக்க வேண்டும். அண்மைக்கடல், ஆழ் அண்மைக் கடல் மற்றும் ஆழ்கடல் இவை மூன்றிலும் மீனவர்கள் சச்சரவின்றி மீன்பிடிக்க மீனவ மக்களுக்கு அரசு துணை செய்ய வேண்டும். மீன்பிடிகப்பல் மற்றும் விசைப்படகு போன்றவைகளை மீனவப் பெருங்குடிமக்களே கையகப்பபடுத்த உதவவேண்டும். தொழிலில் தொடர்பு இல்லாதவர்களின்



சுரண்டலில் இருந்து மீனவர்களைக் காப்பாற்ற வேண்டும். 1982 ஆம் ஆண்டிலிருந்து படகு வழங்கு திட்டமும், படகு கட்டும் வசதியும் அரசு துறையினால் நிறுத்தப்பட்டுவிட்டது. மீன்பிடி படகு கார்ப்பரேஷனை நிறுவி, மீனவர்களுக்கு அரசு படகு வழங்குவதன் மூலம் உண்மையான மீனவர்களுக்கு உதவி செய்யும் பெரும் தொண்டை என்னுடைய தெய்வத்தின் அரசு செய்ய முடியும் என்பதை நாங்கள் அறிவோம்.

இடைத்தரகர்களிடமிருந்து மீனவர்களைக் காப்பாற்ற வேண்டும். தற்சமயம் விசைப்படகு, கட்டுமரம் இவைகளால் மீன் பிடிக்கப்படுகின்ற இறால் மற்றும் மீன்கள் இடைத்தரகர்களால் குறைந்த விலைக்கு வாங்கப்பட்டு, கொள்ளை இலாபத்திற்கு விற்கப்படுகின்றன. அரசே மீனவ கிராமங்கள் தோறும் குளிர்பதன வசதிகள் அமைத்து, அறைகளை நிறுவி அரசே கொள்முதல் செய்து இடைத்தரகர்களின் சுரண்டலிலிருந்து மீனவர்களைக் காப்பாற்ற வேண்டும். காலங்காலமாக இருந்துவரும் கட்டுமரம், வள்ளம், தோணி இவற்றை நவீனப்படுத்த அரசு உதவி செய்ய வேண்டும்.

காணாமற்போன மீனவர்களைத் தேடல். கடலில் காணாமற் போகும் மீனவர்களை உடனடியாகக் கண்டுபிடிப்பதற்கு அதிவேக விசைப்படகும், ஹெலிகாப்டர்களும் அரசினால் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்பது எங்களது வேண்டுகோள்.

நேரம் காலம் பார்க்காது நாட்டுக்காக உழைத்த மீனவ முதியோர்களைக் காப்பதற்கு அரசு ஓய்வுகால ஊதியத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மீன்பிடி ஏற்றுமதியின் மூலம் வெளி நாட்டிலிருந்து ஈட்டப்படுகின்ற அந்நியச் செலாவணியின் ஒரு பகுதி மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டு மீனவர்கள் நல்வாழ்வுக்குச் செலவு செய்யப்பட வேண்டும். தோண்டி எடுக்கப்படுகின்ற நிலக்கரி அந்தத் தொழிலாளி மீனவர்களுக்கு மானியமாக வழங்கப்படுவதைப் போல மீனவர்களுக்கும் ஏற்றுமதியில் பங்கு கிடைக்க மாநில அரசு போராட வேண்டும்.

புயலின் சீற்றத்தால் வருவா வருவும் பாதிப்புக்கு உள்ளாகும் நாகையில் தாழ்வான பகுதியில் வாழும் மீனவர்கள் மற்றும் இதர சமுதாயத்தினர், மேட்டுப் பகுதிக்குச் சென்று உயிர் காத்துக்கொள்ள இருக்கும் ஒரே வழி அக்கரைப்பேட்டை பாலம் தான். அந்தப் பாலம் பழுதடைய நேர்ந்தால் அந்தப் பகுதியிலே உள்ள மக்கள்

அனைவரும் மேட்டுப் பகுதிக்குச் செல்ல முடியாமல் உயிர் இழப்பதைத் தவிர வேறு வழியே இல்லை. எனவே மக்களின் அவல நிலையைப் போக்க அந்த மீனவ சமுதாய மக்களுக்கு அந்த நாகையில் அக்கரைப்பேட்டைக்கு செல்லும் அந்தப் பாலத்தை தயவு செய்து எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவியின் அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனளத் துறை மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் மா. சுந்தரதாஸ் அவர்கள் பேசியபோது, கடலிலே காணாமல் போகும் மீனவர்களைத் தேடுவதற்காக கேரள மாநிலம் சொந்தமாக ஹெலிகாப்டர் வாங்கியுள்ளது என்று ஆணித்தரமாகக் குறிப்பிட்டு உள்ளார்கள்.

ஆனால் அது தவறான தகவலாகும். அவர்களும் நம்மைப் போலவே மீனவர்கள் காணாமல் போகும் பட்சத்தில் உடனடியாக கடல் படை காவல் துறையிடம் சொல்லி அவர்களுக்கு பாதுகாப்பு தேடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள் என்று கூறி, இதுபோன்ற தவறான தகவலைத் தருவதற்கு முன்னால், அந்தத் தகவலை உறுதி செய்த பின்னர் சொல்வது முறையாகும் என்று கூறி அமர்கிறேன்.

பிற்பகல் 4-50

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. பி.வி. இராஜேந்திரன்.

<u>திரு. பி. வி. இராஜேந்திரன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிஷரிஸ் மானியக் கோரிக்கையில் பேசுகிற வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு முதலில் நான் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக எங்களுக்கு தரப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பு மனநிறைவைத் தருவதாக இருக்கிறது. காரணம் முழுக்க முழுக்க மைய, மாநில அரசுகள் இணைந்து, எப்படி இந்திய அரசியலமைப்பு சட்டத்தின்படி மைய அரசும், மாநில அரசும் ஒரு இந்தியக் குடிமகனுக்கு தாயும், தந்தையுமாக இருந்து காக்க வேண்டுமோ, அப்படி முறையாக இந்த பிஷரீஸ்



டிபார்ட்மெண்டிற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற பாசிலி நோட்டில் மைய, மாநில அரசுகள் இணைந்து செயல்படுகிற பல்வேறு திட்டங்களை குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நிறைவுகளுக்கு இடையேயும் கூட தமிழ் மாநிலத்தில் ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால் சுமார் ஆயிரம் கிலோ மீட்டர் நீளத்திற்கு நமக்கு நீளமான கடற்கரை இருக்கிறது. இந்த ஆயிரம் கிலோ மீட்டர் நீளத்தையும் நாம் ஒழுங்காகப் பயன்படுத்துகின்றோமா, அந்த அளவுக்கு கடல்படு பொருள்களை எடுக்கிறோமா என்றால் கிடையாது.

இதிலும் நம்முடைய எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் தற்போதுதான் மாண்புமிகு பிரணாப் குமார் முகர்ஜி வைஸ் சேர்மென், பிளானிங் கமிஷன் இங்கே வந்திருந்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பில்கூட எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 34.71 கோடி மொத்தத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறதாக குறிப்பிட்டு இருக்கிறார்கள். இது போதுமா என்று சொன்னால் நிச்சயமாகப் போதாது. இன்னும் பல்வேறு வழிகளில் நாம் இதை இரண்டு மடங்காக்குவதற்கு, மேலும் பல்வேறு துறைகளின் மூலமாக, அது குடிநீர் வழங்கல் துறையாக இருந்தாலும் சரி, நெடுஞ்சாலை துறையாக இருந்தாலும் சரி, மீனவர்களுக்கான அடிப்படை வசதிகளை இன்னும் மேலே கொண்டு வருவதற்கு, மற்ற துறைகளுடைய முதலீடும்—மின்சாரமாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு கோல்ட் ஸ்டோரேஜ் கொண்டு வருவதற்கு, அவர்களுக்கு கேனிங் இண்டஸ்ட்ரீஸ் கொண்டு வருவதற்கு—இதெல்லாம் தேவையென்றால் ஒரு ஒருங்கிணைந்த முயற்சிதான் இந்த மீனவர்களைக் காப்பாற்ற முடியும் என்பதுதான் எங்களுடைய கருத்து.

அதிலும் இந்த ஆண்டுக்கு 1992–93 ஆம் ஆண்டுக்கு சுமார் 8 கோடி ரூபாய், அது பார்ட்—2-ம் சேர்த்து, 8 கோடி ரூபாய்தான் இந்த ஆண்டுக்கு திட்ட ஒதுக்கீடு. பிளான் அவுட்லேயில், திட்ட ஒதுக்கீடாக திட்டம் சார்ந்தவைகளுக்கு ஒதுக்கி இருக்கிறார்கள். மேலும் ஒரு 8.24 கோடி ரூபாய் திட்டம் சாராத செலவுகளுக்கு ஒதுக்கி இருக்கிறார்கள். ஆக மொத்தத்தில் சுமார் 16 கோடி ரூபாய்க்குதான் திட்டங்களே தீட்டப் பட்டிருக்கின்றன. 'பிளான் அண்ட் நான்-பிளான் ஒர்க்ஸ்'களுக்கு. இதனால் பலன் பெற போகிறவர்கள் யார் என்று பார்த்தால் கடல் மீனவர்கள் மட்டும் 5.05 இலட்சம் மக்கள். இதைத்தவிர உள்நாட்டு [illegible] மீனவர்கள் [illegible] கிட்டத்தட்ட 65,000 பேர்கள்

இவ்வளவு பேருக்கும் ஒரு நன்மை பயக்கிற காரியத்தை இந்தப் பணத்தை வைத்து செய்ய முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது என்பது தான் நம் கடந்த கால அனுபவங்களைக் கொண்டு பெற்றிருக்கிற நல்ல அனுபவம். இருந்தாலும் ஒரு நல்ல முயற்சியை இந்த அரசு எடுத்திருக்கிறது. அதற்காக மத்திய அரசோடு இணைந்து செயல்பட்டு இருக்கிறது. திட்ட ஒதுக்கீட்டில் எட்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்கான ஒதுக்கீடுகளில் தனக்கென்று ஒரு பங்கை அது பெற்றிருக்கிறது என்று சொன்னால், அதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. அதிலும் குறிப்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னால் என்னுடைய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கிற போது 'மோட்டாரைசேஷன் ஆப் ட்ரேடிஷனல் கிராப்ட்ஸ்' என்கிற அடிப்படையில் பழைய கட்டுமரங்களுக்கு அவுட்போர்ட் என்ஜின்களைப் பொருத்துவதன்மூலமாக மேலும் பல மைல் தூரம் அவர்கள் கடலுக்குள்ளே செல்ல முடியும். இன்னும் பல பகுதிகளை அவர்கள் சென்றடைந்து அதிக மீன்களோடு திரும்ப முடியும் என்ற நிலைமையை உருவாக்க வேண்டும் என்பதற்காக ஏற்கனவே 7,500 ரூபாய் மானியம் என்று இருந்தது—ஒரு அவுட்போர்ட் மோட்டாருக்கு; ஒரு யூனிட்டுக்கு 7,500 ரூபாய் மானியம். அது மைய அரசும், மாநில அரசும் இணைந்து வழங்குகிற அன்னை இந்திரா காந்தி அம்மையார் தந்த புதிய 20 அம்ச திட்டத்தின் விளைவாக ஏழாவது திட்டக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட அந்தத் திட்டம், இன்றைக்கு எட்டாவது திட்டக் காலத்தில் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வருடைய இசைவோடு அது 10,000 ரூபாயாக இந்த மானியம்—7,500 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக மாற இருக்கிறது என்று சொன்னார்கள். மாற்றுவோம் என்றே சொன்னார்கள். இந்த அவையிலே சொன்னார்கள். ஆனால் எங்களுக்குத் தரப்பட்டு இருக்கிற பாலிசி நோட்டிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், it is under consideration of the Government, பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த பதிலிலே, 10 ஆயிரமாக மாற்றுவதற்கு தமிழ்நாடு அரசும், இசைந்துவிட்டது, மத்திய அரசும் இசைந்து விட்டது என்றே தெளிவாக இங்கே சொன்னார்கள். ஆனால் பாலிசி நோட்டிலே பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இதனால் 1992–93-க்கு இந்த 10 ஆயிரம் என்பது பொருந்துமா, நீங்கள் ஒதுக்கியிருக்கிற 50 லட்சம் ரூபாய் என்பது, 1992–93-க்கே பொருந்துமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய இறுதி உரையில் விளக்குவார்கள் என்று நம்புகிறேன்.



பிற்பகல் 4-55

அதைப்போலவே, மறைந்த தலைவர் ராஜீவ் காந்தி அவர்களோடு காங்கிரசினுடைய சிந்தனைகள், ஏழை எளிய மக்கள், வறிய மக்கள், மீனவ மக்கள் மீது இருந்த பார்வை எல்லாம், சிந்தனை எல்லாம், சிதைந்து போய் இருக்குமோ என்ற அச்சத்தைத் தகர்த்து எறிகிற வகையில் திருப்பதி மாநாட்டில் தலைவர் நரசிம்ம ராவ் அவர்கள் மிகத் தெளிவாக ஒரு கோஷத்தை நாட்டுக்குத் தந்திருக்கிறார்கள். 'Make Nation and Save Nation', என்கிற ஒரு கோஷம். அது அர்த்தம் உள்ளதா, இல்லையா என்று நான் ஒருமுறை சிந்தித்துப் பார்த்தேன், இந்த பாலிசி நோட்டைக் கையிலே வைத்துக் கொண்டு. மிகவும் அர்த்தம் உள்ள ஒரு கோஷத்தைத்தான் ராஜீவ் நகரில், அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டிலே, தலைவர் நரசிம்ம ராவ் அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள் என்பதை எங்களால் உணர முடிகின்றது. காரணம் மீனவ மக்களை மறந்து விடாமல், விட்டுவிடாமல் எட்டாவது திட்ட காலத்திலே அவர்கள் தந்திருக்கிற வரப்பிரசாதங்கள் தான் எங்களை அப்படிச் சிந்திக்கத் தூண்டுகிறது.

ஏற்கனவே மீனவர்களுக்கு 'Fishermen Accident Insurance Scheme'—அவர்களுக்கு விபத்து நேர்ந்துவிட்டால், வழங்கப்பட்டு வந்த 15 ஆயிரம் ரூபாய், அதற்காக ஒரு மீனவர் ஒரு ஆண்டுக்கு 9 ரூபாய் பிரிமியம் செலுத்தவேண்டும். அதனை, 'National Federation of Fishermen's Co-operative Limited'-க்குச் செலுத்தவேண்டும். இன்றைக்கு அந்த பிரிமியத்தை 10 ரூபாய் 84 பைசா ஆண்டுக்கு என்று ஆக்கி, அதை மைய, மாநில அரசுகள் ஏற்றுக்கொண்டு, கட்டி, மீனவர்களிடமிருந்து ஒரு பைசா கூட வாங்காமல், இன்றைக்கு அவர்களுக்கு இறப்பு என்று ஏற்பட்டுவிட்டால் 21 ஆயிரம் ரூபாயைத் தர முடியும் என்கிற வழியை நன்கு சிந்தித்து செயல்படுத்தி இருக்கிறது இன்றைக்கு இருக்கிற மத்திய அரசு. அதனை ஏற்று செயல்படுத்தி இருக்கிறது இந்த மாநில அரசு. அதைப்போலவே Savings Cum Relief Scheme மீனவர்கள் நன்றாகத் தொழில் செய்கின்ற காலங்களில் இன்றைக்கு ஏற்கெனவே இருந்த திட்டத்தை மாற்றி ஏற்கெனவே இருந்த மாதம் 10 ரூபாய் என்று 9 மாதம் பிடித்து, 90 ரூபாய், அதற்கு அரசாங்கம் தந்த 90 ரூபாய், இந்த 180 ரூபாயையும் 3 மாதங்களுக்கு மாதம் 60 என்று கொடுத்த திட்டத்தை மாற்றி, தினம் $1\frac{1}{2}$ ரூபாய் என்று பிடித்து மாதம் ஒன்றுக்கு 45 ரூபாய், 8 மாதங்களுக்கு 360, அதைப் போலவே, ஒரு 360 ரூபாய் டெல்லி தருகிறது, அதைப் போலவே, ஒரு 360 ரூபாய் சென்னை தருகிறது. தமிழ்நாடு அரசு தருகிறது என்ற முறையை உருவாக்கி, மீனவர்களுக்கு 4 மாதங்களுக்கு அந்த 'ஆப் சீசனுக்கு' 270

[திரு. பி. வி. இராஜேந்திரன்] [1992 ஏப்ரல் 20

ரூபாயை தந்து இருக்கிறார்கள் என்று சொன்னால், இன்றைக்கு இருக்கிற மத்திய அரசு, மாநில அரசினுடைய இளகிய மனதை, வறிய ஏழை எளிய மக்களுக்காக உதவவேண்டும் என்ற நல்ல மனத்தினுடைய வெளிப்பாடாகத் தான் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே இவைகள் குறிப்பிடப்பட்டு இருக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே இன்றைய தேவைகளையும் நான் குறிப்பிட்டாக வேண்டும். மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள் இந்த மீனவ சமுதாயத்தினுடைய பிரதிநிதியாகவே, இந்த அவையிலே இன்றைக்கு அவர்கள் பிரகாசித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியாதது ஒன்றும் இருக்க முடியாது. இருந்தாலும், ஒன்றிரண்டை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன், அதிலும் இன்றைக்கு, 'Tam'l Nadu Marine Fishing Regulation Act, 1983, மாண்புமிகு பாரத ரத்னா, டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் காலத்திலே கொண்டுவரப்பட்ட ஒரு சட்டம். இந்தச் சட்டம், அதற்குப் பின்னால், இந்த 9 ஆண்டுக்கால அனுபவங்களிலே திருத்தப்பட்டு இருக்கிறதா, அமென்ட்மென்ட்ஸ் ஏதுவும் வந்திருக்கிறதா என்றெல்லாம் பார்த்தால், எனக்குத் தெரிந்த வரையிலும், எந்த அமென்ட்மென்ட்சும் அதிலே காணோம். ஆனால், இன்றைய தேவை என்னவென்று பார்த்தால், நான் பல மீனவ கிராமங்களுக்குச் சென்று, என்னுடைய தொகுதியிலே கூட சென்று பார்த்து பேசியபோது, அந்தக் கிராமங்களினுடைய நாட்டாண்மைக்காரர்கள், பஞ்சாயத்துக்காரர்கள், நாட்டார்கள் இவர்கள் எல்லாம் என்னிடம் தந்த தகவல், முதலிலே இந்த இரால் மீன்கள் எல்லாம் முட்டையிட்டு குஞ்சு பொறிக்கின்ற நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் அந்தக் குஞ்சுகளைப் பிடிக்கக்கூடாது என்கிற சட்டத்தைக் கொண்டு வாருங்கள், அந்தக் குஞ்சுகளை, சிறிய மீன்களை எல்லாம் அடித்துக்கொண்டு போய்விடுகிறார்கள், அதற்கு விலையும் கிடைக்கமாட்டேன் என்கிறது, கிலோ மூன்று ரூபாய்க்குக் கூட கிடைக்கமாட்டேன் என்கிறது, இருந்தாலும், விடாமல் அள்ளிக் கொண்டு போகிறார்கள், அதனால், இரால் மீன்கள் பெருக வாய்ப்பில்லை என்று சொன்னார்கள். இன்றைக்குக் கேரள மாநிலத்திலே அவர்கள் அங்கே சட்டம் போட்டு தடை செய்திருக்கிறார்கள். மத்திய அரசினுடைய 'என்பிடா' அதை எதிர்ப்பது வேறு. அதை எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும், கேரள மாநிலம் அதைத் தடை செய்திருப்பதால்தான் எனக்குக் கிடைக்கிற தகவல்கள் தெரிவிக்கின்றன. அதைப் போலவே, நம்முடைய மாநிலத்திலும் இந்த ரெகுலேசன் ஆக்டிலே ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து, உடனடியாக, இந்த இரால் மீன்கள், மற்றும் ஏனைய மீன்களைக் கூட அதனுடைய பிரிடிங் சீசனிலே அவற்றைப் பிடிப்பதற்கு, குறிப்பாக அந்த ''டிரால் நெட்டை' உபயோகப்படுத்துவதற்கு கண்டிப்பான தடையை நீங்கள் விதிக்கவேண்டும். அதை மீனவர்களே விரும்புகின்றார்கள். அதைப் போலவே இன்றைக்கு இரட்டை மடி. பிராட் ஓபெனிங் பாட்டம் ட்ரால்' என்கின்ற முறை. பே ஆஃப் பெங்கால் இந்த நிறுவனத்தார் அறிமுகப் படுத்திய அந்த இரட்டை மடி என்கின்ற முறை நிச்சயமாக தடை செய்யப்பட வேண்டிய ஒன்று என்பதுதான் என்னுடைய கருத்து.



[1992 ஏப்ரல் 20] [திரு. பி. வி. இராஜேந்திரன்]

பிற்பகல் 5-00

முகவை மாவட்டம், இராமநாதபுரத்திலிருந்து பாம்பன் பகுதி மீனவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தை உங்களுடைய பார்வைக்கு நான் தர இருக்கிறேன். அதிலேகூட அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். கட்டுமரம், இன்னும் பாரம்பரிய முறையில் பிடிப்பவர்களுக்கு இனிமேல் மீனே இருக்காது. கடலில் பல இனங்கள் அழிந்தே போய்விட்டது. இந்த இரட்டை மடி முறை 'ப்ராட் ஓபெனிங் பாட்டம் ட்ரால்' முறை பல இனங்களை அழித்தே விட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். நான் கூட 20 ஆண்டுக்காலத்திற்கு முன்னால் என்னுடைய. வேதாரண்யம் கடற்கரைப் பகுதியில் பார்த்திருக்கிறேன். அந்தக் குப்பங்களுக்குச் சென்று, ஒரு சில மீன் வகைகள் இருக்கிறதா என்று கேட்டால், அதனை நாங்கள் பார்த்தே, 1' ஆண்டுகள் ஆகிறது, 15 ஆண்டுகள் ஆகிறது என்று சொல்கிறார்கள். ஒரு சில இனங்கள் முற்றிலுமாக அழிந்தே போயிருக்கிறது. அதைக் கூட நீங்கள் இந்த நேரத்திலே உங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். தகுந்த சட்டதிட்டங்கள் ' தமிழ்நாடு மெரைன் ஃபிஷிங் ரெகுலேஷன் ஆக்ட்டிலே, கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக மிகவும் பாராட்டத்தக்க மைய மாநில அரசுகள் இணைந்து செயல்படுகின்ற பாராட்டத்தக்க மிகுந்த திட்டங்கள் இதிலே இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 'இண்டர்மிடியட க்ராஃப்ட்' ஒரு இடைப்பட்ட வெசல் இன்றைக்கு அறிமுகப்படுத்தப்பட இருக்கின்றது. அதிலும் தமிழகத்தில் எப். ஆர். பி. போட் என்கின்ற போட் மற்றும் 12, 15 மீட்டருக்கு உள்ளாக இருக்கின்ற படகுகளை அறிமுகம் செய்ய இருக்கிறார்கள். அதிலும் மைய அரசு ரூ 1.20 இலட்சம் அளவிற்கு மானியம் தர இருக்கிறது. மாநில அரசு ரூ 40.000 தர இருக்கிறது. இவைகளை எல்லாம் நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. பி. வி. இராஜேந்திரன்] [1992 ஏப்ரல் 20

மேலும் குறிப்பாக எங்கள் பகுதியில் கோ. கிருஷ்ணன் என்பவர் தன்னுடைய படகை நம்முடைய நேவிக்கு வாடகைக்குக் கொடுத்திருக்கிறார். அந்தப் படகு நேவி பொறுப்பிலே இருந்தபோது கடலில் மூழ்கி விட்டது. மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நேவல் கமேண்டர் இவர்கள் எல்லாம் இருக்கின்ற கூட்டத்திலே நானும் சென்று பேசினேன். அதற்கு மாவட்ட ஆட்சியர் நேரில் பணம் தர முடியாது. நாங்களே ஏதாவது செய்து தருகிறோம் என்று சொன்னார். அதனால் ஆறுகாட்டுத் துறையைச் சேர்ந்த கோவிந்தசாமி என்பவருடைய மகன் கிருஷ்ணன் அவர்களுக்கு, அவர் இழந்து விட்ட படகை, நேவியின் பொறுப்பிலே இருந்தபோது மூழ்கிவிட்ட அந்தப் படகுக்கு நம்முடைய அரசு உடனடியாக ஈட்டுத்தொகையை, அதற்குரிய முழு தொகையை வழங்கவேண்டும். அதை வைத்துக் கொண்டு அவர் பிழைத்திருப்பார். அதிலே காலதாமதம் இருந்தாலும் பரவாயில்லை. ஆறுமாத காலமாக பிழைப்பு இல்லாமல் அவர் இருக்கிறார், மாதத்திற்கு ஒரு ரூபாய் என்ற அளவிலே இடைக்கால நிவாரணத்தை முதலிலே நீங்கள் வழங்க ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எங்களுடைய தொகுதியில் மீனவர் கிராமம் ஒன்று இருக்கிறது. அந்த கிராமத்திலே குடிநீர் இல்லை என்று சொன்னார்கள். என்னுடைய கடிதத்தைப் பாருங்கள். சிறுதலைக்காடு என்ற கிராமம், கிராமம் அல்ல, அது ஒரு தீவு (குறுக்கீடு)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> கடிதம் எல்லாம் படிக்க வேண்டாம்.

<u>திரு. பி. வி. இராஜேந்திரன் :</u> 8 கடிதங்கள் இருக்கின்றன. ஒரு எம். எல். ஏ. பொறுப்பிற்கு மதிப்பே இல்லை என்று நினைக்கிறேன். அதைக் கூட நீங்கள் தான் காப்பாற்றவேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> கடிதத்தை முதலிலே என்னிடம் கொடுத்திருக்கவேண்டும். நீங்கள் உங்களுடைய கடிதத்தை இங்கே ஆதாரமாக வைத்துக்கொண்டு பேசுவது என்பது சரியாக வராது. கடிதத்தை முதலில் என்னிடம் கொடுத்திருக்கவேண்டும். அதை விட்டு, நீங்கள் பிரச்சினை என்ன என்று பேசுங்கள். நீங்கள் கடிதத்திற்கு உள்ளே போய். அந்தக் கடிதத்தை ஆதாரமாகக் கொள்ளாமல் பிரச்சினை என்ன என்று சொல்லுங்கள்,

<u>திரு. பி. வி. இராஜேந்திரன் :</u> முழு பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். எத்தனை முறை தபால் எழுதிக்கொண்டிருந்தாலும், செய்யப்படும், செய்யப்படும் என்கின்ற பதில்



1992 ஏப்ரல் 20]

வருகிறதே ஒழிய, அந்த கிராமத்தில் பழுதடைந்து போன 3 கிலோ மீட்டர் நீளத்திலான பி.வி.சி. பைப் குடிநீர் வழங்கும் குழாய்கள் இன்று வரை சரி செய்யப்படவில்லை. அந்தக் கிராமத்திற்கு இன்று வரை குடிநீர் போய்ச் சேரவில்லை. ஏற்கனவே 10 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட திட்டம், நிறைவேற்றப்பட்டதிட்டம். 3 கிலோ மீட்டர் நீளத்திற்கு பி.வி.சி. பைப் உடைந்து போனல் கூட, அது இன்னும் சரி செய்யப்படாமல், அந்த கிராமத்தில் இன்று வரை குடிநீர் இல்லாமல் இருக்கிறார்கள். நான் இரண்டு, மூன்று தினங்களுக்கு முன் புறப்படுகின்ற போது கூட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஒரு தந்தி கூட கொடுத்து விட்டு வந்தேன். உங்களுடைய மேலான கவனத்திற்கு இதைக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கெனவே நான் மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவந்தேன். எங்கள் பகுதி மீனவர்கள் மத்தியிலே இருக்கின்ற பதட்டத்தைத் தெரிவித்து, குறிப்பாக 'ஃபாரின் அஃபேயர்ஸ் மினிஸ்ட்ரி ஆப் எக்ஸ்டர்னல் அஃபேயர்ஸ்' அதனுடைய செயலாளர் மே 23-ஆம் தேதி 1977 அடல்பிஹாரி வாஜ்பாயி அவர்கள் பாரின் அபேயர்ஸ் மினிஸ்டராக இருந்தபோது எழுதிய கடிதத்தைப் பற்றி ஒன்றைக் குறிப்பிட்டேன். மைய அரசிடமிருந்து பெற்று அந்தத் தகவலைச் சொல்கிறேன் என்று சொன்னார்கள். அதன் படி நம்முடைய மீனவர்கள் இண்டர்நேஷனல் வாட்டர்சுக்குள்ளே வரமாட்டார்கள் என்கின்ற உத்தரவாதம் தரப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். அப்படி ஒரு உத்தரவாதம் தரப்பட்டிருக்கிறதா? அது தமிழக அரசுக்கு தெரியுமா? அல்லது அந்த மீனவர்களுக்காவது தெரியுமா, நாம் அந்த இடத்திற்கு போகக்கூடாது என்று. ஏற்கெனவே அப்படிச் சொல்லியிருக்கிறோமா என்பதை நீங்கள் இந்த நேரத்திலே தெரிவிக்க நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும் நம்முடைய மீனவர்கள் நம்முடைய கடல் பகுதியிலே வைத்துச் சுடப்படுகிறார்கள் என்பதுதான் இன்றைக்கு நம்முடைய வாதம். நாடாளுமன்றத்திலே கூட காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.-வினுடைய உறுப்பினர்கள் மிகத் தெளிவாக—இன்னும் சொல்லப் போனால் பாதுகாப்பு அமைச்சரையே அவருடைய செயலாற்றலையே தவறானது என்று அங்கே பேசியிருக்கிறார்கள் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் கூட........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

பிற்பகல் 5-05

*மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டு மரங்களை நவீனப்படுத்தும் நோக்கோடு நம்முடைய ஒப்பற்ற தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் கட்டுமரங்களுக்கு வெளியே பொருத்தும் இயந்திரம் வழங்கி வருகிறார்கள். அதில் மாண்புமிகு உறுப்பினர் இராஜேந்திரன் அவர்கள் ஒரு வினாவை எழுப்பும்போது கட்டுமரங்களுக்கு வழங்கப்படும் வெளிப் பொருத்தும் இயந்திரத்திற்கு மானியம் எவ்வளவு வழங்கப்படுகிறது என்று கேட்டிருந்தார்கள். அப்போது பத்தாயிரம் வழங்கப்படும் என்று சொல்லியிருந்தேன். இன்றுகூட அதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ரூபாய் பத்தாயிரம் மானியம் வழங்கப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் இதையெல்லாம் பதில் உரையிலேயே சொல்லலாம். திரு. இராஜேந்திரன், சீக்கிரம் முடியுங்கள்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : இப்போது நான் எழுப்புகிற கேள்வியெல்லாம் கூட இந்த நம்முடைய அரசு இந்த அவைக்கு தெரிவித்த பதிலிலேயெல்லாம் கூட நம்முடைய கடற்கரையிலேயிருந்து 6 கிலோ மீட்டர் அல்லது 8 கிலோ மீட்டர் தொலைவிலே வைத்து நம்முடைய மீனவர்களுடைய படகுகள் சுடப்பட்டன. மீனவர்கள் சுடப்பட்டார்கள் என்கிற தகவலை இந்த அவையிலேயே அறிக்கை மூலமாக அரசு தந்திருக்கிறது. ஆனால் மாண்புமிகு பிரதமர் அவர்கள் நம்முடைய முதல்வர் அவர்களுக்கு தன்னுடைய பிப்ரவரி 15 ஆம் தேதி எழுதிய கடிதத்திலே— சி.எம். எழுதிய கடிதத்திற்கு பிரைம் மினிஸ்டர் அவர்களுடைய மார்ச் 4-ஆம் தேதி பதில் கடிதத்திலே அவர்கள் எழுதியிருக்கிற ஒரு வரி—

"We have already taken up with the Sri Lankan Government that cases of harassment of our fishermen who may have strayed across the international boundary." என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால் நம்முடைய நிலைமை மைய அரசுக்கு ஒழுங்காக சென்று சேர்ந்திருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. நம்முடைய அரசு நம்முடைய எல்லைக்குள் வந்து அவர்கள் சுடுகிறார்கள் என்று ஏதாவது கடிதம் எழுதியிருக்கிறதா இல்லையா ? காரணம் பிரைம் மினிஸ்டருடைய பதிலிலே நம்முடைய மீனவர்கள் இன்டர்நேஷனல் பவுண்டரியை தாண்டுகிறபோது ஏதோ சுடப்பட்டு இருக்கலாம் என்பதைப் போல அவர்கள் சொல்லுகிறார்கள். அதிலே கூட நான் அன்றைக்கு சொன்னேன் — பி.பி.சி. ரிப்போர்ட்டர் பாப் டெல்லியைப் பற்றி. அவர் எந்த அளவிற்கு





ஒரு ஆதார பூர்வமானவர் என்பதற்கு இன்றைக்கு அவர் நம்முடைய ஜனாதிபதியினுடைய கையாலேயே பத்மஸ்ரீ பட்டத்தை பெற்றிருக்கிறார்கள, கடந்த மாதம். அவர் சொல்லுகிறார். "The most undisciplined army in the world is the Sri Lankan army" என்று. அதனால் அவர்களை நாம் நம்புவதற்கு நிச்சயமாகக் கூடாது. அவர்களுடைய நடவடிக்கை என்று சொன்னால் நாகப்பட்டினத்திலே சுடப்பட்ட கே.கே. தமிழ் என்ற படகு— அதற்கு ரெஜிஸ்ட்டிரேஷன் எண். டி.ஜே. 403—அதாவது அதனை சுட்ட படகினுடைய எண். டி.ஜே. 403 என்று பக்கத்திலே இருந்து பார்த்த நாகப்பட்டின மீனவர்கள் நம்முடைய அரசுக்கு தகவல் தந்திருக்கிறார்கள். அதற்கு ஸ்ரீ லங்காவினுடைய எய்டு மெம்பர்—நம்முடைய அரசாங்கத்தினுடைய பாஃரின் அபெயர்ஸ் ஜாயின்ட் செக்ரட்டரி அய்யங்கார அவர்களுடைய கையிலே தரப்பட்ட எய்டு மெம்மயரிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்—நாங்கள் யாரையும் சுடவில்லை — எங்களுடைய நேவி கப்பலுடைய நம்பர் 463. நம்முடைய மீனவர் சொல்வது 403. அவர் இரவிலே பார்த்தபோது 403 என்று தெரிந்திருக்கலாம். அவர்கள் 463 என்று சொல்லுகிறார்கள். அதனால் இல்லை என்று போக முடியாது. இன்றுவரை தகவல் இல்லை. 20, 30 நாட்களாகப் போகிறது. நாகைப் பட்டினத்திற்கு கே.கே. தமிழ் என்ற படகிலே சென்ற மீனவர்கள் திரும்பவில்லை. அவர்கள் எடுத்துச் சென்ற ஐஸ் பாக்ஸ், அவர்கள் எடுத்துச் சென்ற டீசல் கேன், இன்னும் அவர்களுடைய என்ஜின் டவர் அவை அனைத்தும் நாகப்பட்டினத்திலே வந்து ஒதுங்கியிருக்கிறது. ஆகவே, இந்த அரசு என்ன செய்யப் போகிறது? எவ்வளவு விதவைகள் உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இராமேஸ்வரத்திலிருந்து நாகைப்பட்டினம் வரை 200 முறை துப்பாக்கி சூடு நடந்திருக்கிறது. 75 விதவைகள் தமிழக கடற்கரை ஓரங்களிலே திரிய ஆரம்பித்திருக்கிறார்கிறார்கள். அந்த குடும்பங்களுக்கு நாம் என்ன செய்யப் போகிறோம் ?........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, கடந்த 1974-ஆம் ஆண்டு கருணாநிதி அவர்களால் தாரை வார்த்துக் கொடுக்கப்பட்ட கச்சத்தீவினை நமது மீனவர்களின் நலம் காக்கும் பொருட்டும் நமது மீனவர்கள் அங்கு சென்று சுதந்திரமாக மீன் பிடிக்கவும், வலைகளை உலர்த்தவும் இழந்த கச்சத்தீவினை எப்பாடுபட்டாவது மீட்டே தீருவேன் என்று, சுதந்திர நன்னாளில் சபதம் ஏற்ற அந்த தாயின் ஆட்சியிலே இன்றைக்கு இலங்கை தீவிரவாதிகளாலும் கடற்படைகளாலும் தாக்கப்படும் மீனவர்கள் நலன் காக்கும் பொருட்டு

ஒரு புதிய திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு மறுவாழ்வு திட்டத்தினை அறிவிக்க இருக்கிறார்கள் என்று கூறி, அமர்கிறேன்.

பிற்பகல் 5-10

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு அமைச்சர் பெருமக்னார் அவர்கள் இங்கே பேசுகின்றபோது கச்சத்திவைப் பற்றி சொன்னார்கள். அது இராமேஸ்வரம் பகுதி சம்பந்தப்பட்ட விஷயம். கச்சத் தீவு கொடுப்பதற்கு நாம் உடன்பாடு கண்ட ஆண்டு 1974— கச்சத் தீவை கொடுத்த போது—மீண்டும் 1976-ல் 1974 மற்றும் 1976-ல் இரண்டு உடன்பாடுகளை இலங்கை அர்சோடு கண்டிருக்கிறோம். அன்னை இந்திராகாந்தி பெரிய மனது, தாராள மனதோடு மிகப் பெரிய எதிர்பார்ப்பு— She thought that the sm: ll r.ation is goir g to reciprccate somethir.g. அந்த அடிப்படையில் அவர்கள் கொடுத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 20 நிமிடங்கள் ஆகி விட்டன. ஒரு நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : ஒரு நிமிடம். ஆனால் நான் சொல்வது வேறு. கச்சத் தீவுக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை நாகப்பட்டினம், கோடிக்கரை, ஸ்ரீலங்கா இதை எடுத்துக் கொண்டால் இடையிலே கச்சத் தீவே வராது. இடையிலே மிகச் சிறிய இடம் கூட கிடையாது. கிட்டத்தட்ட 40 நாட்டிக்கல் மைல்ஸ் அளவிற்கு அந்த இடத்திலே கடல் இருக்கிறது. பாக் ஜலசந்தி இருக்கிறது. அதனால் கட்சத் தீவிற்கான ஒப்பந்தமோ கச்சத் தீவினுடைய மேற்கு கரையிலே நாம் வலையை உலர்த்தலாம் என்கின்ற நமக்கு அன்றைத்குத் தந்த உத்திரவாதமோ அதன் பின்னால் 1976லே போடப்பட்ட ஒப்பந்தம் கல்ஃப் ஆஃப் மன்னார் உள்ளடங்கிய ஒப்பந்தமோ எங்களுடைய பகுதிக்குப் பொருந்தாது. முற்றிலும் பொருந்தாது. எங்களுடைய பகுதி வேறு. நீங்கள் ஒரு மேப் எடுத்து போட்டுக் கூட பாருங்கள். அது நாகப்பட்டினம் கோடிக்கரை. அதற்கு நேராக இருக்கின்ற பருத்தித்துறை, காங்கேசன்துறை ஜஃபனா பெனின்சுலா இதற்கு இடைப்பட்ட பகுதிகளுக்கு இந்த ஒப்பந்தங்களே பொருந்தாது. இந்த ஒப்பந்தங்களுக்கு சம்பந்தம் இல்லாத இந்த மீனவ மக்கள் இன்றைக்குக் கொடுமைப் படுத்தப்படுகிறார்கள். அதுதான் இன்றைக்கு இருக்கின்ற நிலைமை. அதைக்கூட மூடி மறைப்பதற்கு இலங்கை நேவி ஒரு வேலையைச் செய்திருக்கிறார்கள். பல பத்திரிகை நிருபர்களை அவர்களுடைய நேவி வெஸலிலே அழைத்துக்கொண்டு— அதிலே மிக முக்கியமாக தாமஸ் ஆப்ரஹாம் என்கின்ற நிருபரும் சென்றிருகிறார். அவர் ஹிண்டு பத்திரிகையிலே எழுதியிருக்



கிறார். அவருடைய ரிப்போர்ட் கூட இங்கே இருக்கிறது. அதிலே என்ன சொல்லியிருக்கிறார்கள்? ஸ்ரீலங்கா கடற்கரையிலிருந்து புறப்பட்டு 5,10 நிமிடங்கள் சென்ற உடனேயே நம்முடைய மீனவர்கள் திருட்டு மீன் பிடிப்பதற்கு— போச்சிங் என்று எழுதுகிறார்கள்—100 படகுகளிலே சூழ்ந்து நின்றார்கள். நாங்கள் பார்த்தோம். அங்கு ஸ்ரீலங்கா நேவி வெஸலைப் பார்த்தவுடன் தமிழக மீனவர்கள் ஓடவில்லை. இதிலிருந்து எதைக் காட்டுகிறது என்றால் ஸ்ரீலங்கன் நேவி அவர்களைச் சுடுவது இடையாது. அதனால் அவர்கள் ஓடவில்லை. அவர்கள் நன்றாக நடத்துகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு தவறான, திரித்துக் கூறுகின்ற ஒரு ரிப்போர்ட்டை "Sri Lai ka Nævey does rot scare them" என்ற தலைப்பிலே ஒரு செய்தியை நான் இந்து பத்திரிகையிலே பார்த்தேன். தாமஸ் ஆப்ரஹாம் அவர்கள் இதிலே தந்திருக்கிறார்கள். இருந்தாலும் கடைசியாக ஒரு அனுமானம் ( suspician) எழுதியிருக்கிறார். அதிலே கூட ஸ்ரீலங்கன் நேவி இரவு நேரத்திலே நிற்காத படகுகளைச் சுடுவார்கள் என்றும் கருதுகிறேன் என்றுதான் அதிலேயும் தெரிவித்திருக்கிறார். ஒட்டுமொத்தமாக இன்றைக்கு மீனவர்களைக் காப்பதற்கு நம்முடைய இந்திய இறையாண்மையைக் காப்பதற்கு, நம்முடைய கடல் எல்லைக்குள் வந்து, இன்டியன் டெரிடோரியல் வாட்டருக்குள் வந்து தாக்குகிறார்கள் என்று சொன்னால் அது இந்தியாவைக் கொச்சைப்படுத்துகிறார்கள் அல்லது இந்திய இறையாண்மைக்கு நடுக் கடலிலே சவால் விடுகிறார்கள் என்று தான் அர்த்தம். அது இந்திய மீனவர்களுடைய நெஞ்சிலே இருக்கின்ற நம்பிக்கை மீது தீப்பந்தங்களை வீசுகின்றார்கள் என்று தான் அர்த்தம். (மணியடிக்கப்பெற்றது) இதிலே மத்திய அரசு ஒரு சொல்யூஷனைத் தந்திருக்கிறது. அது நம்முடைய மாநில அரசுக்கு தெரிவிக்கப்பட்டதா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். நமது மீனவர்கள் இலங்கை கடலுக்குள் சென்று மீன் பிடிப்பதற்கு இலங்கை அரசு லைசென்ஸ் தரும். அதைப்போல இலங்கை மீனவர்கள் நமது கடலுக்குள் வந்து மீன் பிடிப்பதற்கு நாம் லைசென்ஸ் தர இருக்கிறோம். இப்படிப்பட்ட ப்ரோபோசலை இந்திய அரசாங்கம் தந்திருப்பதாக பத்திரிகையிலே செய்தி இருக்கிறது. இது உண்மையா? நம்முடைய தமிழக அரசு கலந்து ஆலோசிக்கப்பட்டிருக்கிறதா? இந்து பத்திரிகையிலே அந்தத் தகவல் வெகு தெளிவாகத் தரப்பட்டிருக்கிறது. அதனால் இதைப்பற்றி நம்முடைய அரசுக்குத் தெரியுமா என்பதையும் உங்களுடைய பதிலே தெரிவிக்க வேண்டும். அதாவது நம்முடைய மீனவர்கள் அவர்கள் கடலுக்குள் சென்றால் லைசென்ஸ். அதைப்போல அவர்கள் நம்முடைய கடலுக்கு வருவதற்கு நாம் லைசென்ஸ் தர இருக்கிறோம். இந்திய அரசு இந்த ப்ரோபோசலை கொழும்பிற்கு அனுப்பிவிட்டதாக பத்திரிகைகள் சொல்கிறது. இந்த ப்ரோபோசல் போனது நம்முடைய அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இது பற்றிய விவாதம் இந்த அவையிலே எழுந்தபோது நமது ஒப்பற்ற முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விரிவான விளக்கத்தினை, எவருமே அளித்திடாத விளக்கத்தினை இந்த அவைக்கு அளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நமது மாநிலம் செய்ய வேண்டிய நிலையினையும், மத்திய அரசு செய்ய வேண்டிய நிலையினையும் விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்கள். மீண்டும் மீண்டும் அதனைப் பற்றி பேசாமல் மீன்வள மானிய கோரிக்கையின் மீது பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடியுங்கள்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : முதல்வர் அவர்கள் இருந்திருந்தால் எனக்கு பதில் கிடைத்திருக்கும். அவர்கள் இல்லாததால் நான் பேசிப் பலன் இல்லை. அமைச்சர் என் பக்கமே பாலை அடித்துக் கொண்டிருக்கிறார். அவர்கள் தன்னிடம் தகவல் இல்லை என்று சொன்னால் கூட நான் ஒப்புக்கொள்வேன். அதற்குப் பிறகு ..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடித்துக் கொள்ளுங்கள். நீங்கள் முதல்வர் தான் பதில் சொல்லியிருக்கிறார் என்று சொல்கிறீர்கள். முதல்வர் பிறகு பதில் சொல்வார்கள். அதற்குப் பிறகு அமைச்சர் பதிலுரையில் சொல்வார். திரு. கே. கந்தசாமி இருக்கையில் இல்லை. திரு. ஆர். சிங்காரம்.

பிற்பகல் 5-15

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனளத் துறையில் என்னுடைய சில கருத்துக்களை சில மணித்துளிகளில் முடிப்பதற்கு எனக்கு வாய்ப்பு தந்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய இந்திய கடலில் இந்திய எல்லை எது? இலங்கை எல்லை எது? என்பதை இதுவரை யாருமே அறுதியிட்டு கூறவில்லை என்றே நான் கருதுகிறேன். கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இதுபோன்று மீனவர்கள் கடத்தப்பட்டார்கள் என்று ஒரு செய்தி வந்த பிறகு அங்கே இருக்கிற விடுதலைப் புலிகள் கடத்திக்கொண்டு போய் விட்டார்கள், என்று நாங்கள் சொல்ல இல்லை, இல்லை அவர்கள் அங்கே பத்திரமாக இருக்கிறார்கள்,



காணாமல் போய் விட்டார்கள் தடுமாறி விட்டார்கள் என்று எல்லாம் அந்த அரசு அன்றைய முதல்வர் சொல்ல, நாங்கள் அதையும் மீறி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் ஒரு குழுவை அன்றைக்கு நியமித்து அதில் மணிவர்மா, அனந்தநாயகி என்னைப் போன்றவர்களை எல்லாம் நியமித்து அந்தப் பகுதியில் சென்று பார்த்தோம். அந்த மீனவர்கள் அங்கே காணாமல் போனவர்கள் இங்கே வந்து விட்டார்கள். அவர்களை பேட்டி காண்கிறபோது மிகத் தெளிவாக சொன்னார்கள், நாங்கள் காணாமல் போகவில்லை, நாங்கள் எப்போதுமே 20 ஆண்டு காலமாக 30 ஆண்டு காலமாக அந்த கடலில் மீன் பிடிக்கின்ற இடத்தில் தான் மீன் பிடித்துக் கொண்டு இருந்தோம், அவர்கள், திடீரென்று விடுதலைப் புலிகள் எங்களை கடத்திக்கொண்டு போய் அங்கே எங்களை அடித்து உதைத்து, மிதித்தார்கள் என்று எல்லாம் அவர்கள் சொல்லிய, வாக்குமூலத்தைக் கொண்டு வந்து இந்த அவையில் விவாதித்தேன் அப்போது நம்முடைய எல்லையை விட்டு தாண்டி போய்விட்டார்கள் என்று அன்றைய முதல்வர், கலைஞர் கருணாநிதி அவர்கள், என்னிடத்தில் விவாதித்தார்கள். நான் சொன்னேன். நம்முடைய எல்லை எது? எத்தனை கிலோ மீட்டர்? அவர்களுடைய எல்லை எது? எத்தனை கிலோ மீட்டர்? இடையில் வருகின்ற இண்டர்நேஷனல் எல்லை எத்தனை கிலோ மீட்டர் வித்தியாசம் என்று நான் அவரைக் கேட்டேன். அது இன்னும் முடிவு செய்யவில்லை என்று சொன்னார். முடிவு செய்யாத நிலையில் இருக்கின்றபோது எப்படி நம்முடைய மீனவர்கள் எல்லையை கடந்தார்கள் என்று நீங்கள் சொன்னீர்கள் என்று நான் விவாதித்தேன். அதற்கு அவர் சரியான பதிலை அன்று சொல்ல முடியவில்லை. நான் நேரடியாகப் பார்த்து கேட்கின்றபோது 30 ஆண்டு, 40 ஆண்டு காலமாக எந்த இடத்தில் மீன் பிடித்தார்களோ நம்முடைய மீனவர்கள் அதே இடத்தில் தான் மீன் பிடித்துக்கொண்டு இருக்கிறார்களே தவிர வேறுபட்ட இடத்தில், இங்கே இருந்து இராமேஸ்வரம் வரை மீன் பிடிக்கவில்லை, எப்போதும் போல் தான் பிடித்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய இந்திய பாதுகாப்புப் படை வந்த பிறகு அந்த விடுதலைப் புலிகள் விவகாரத்தை வைத்து நம்முடைய மீனவர்களைப் பிடித்துக்கொண்டு போனார்கள். நான் இன்னும் சொல்கிறேன், இந்திய எல்லையிலிருந்து 7 கிலோ மீட்டர் நம்முடைய எல்லை என்றும், இலங்கையிலிருந்து 7 கிலோ மீட்டர் அவர்களுடைய எல்லை

என்றும்; இடைப்பட்ட அந்த தொலைவு இண்டர்நேஷனல் எல்லை என்றும் சொல்லப்படுகிறதே தவிர இந்திய அரசு, அல்லது தமிழக அரசு அந்த எல்லையை இதுவரை இன்னும் முடிவு செய்யவில்லை. அதற்கான முயற்சியைத் தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அன்றே தெளிவாக சொல்லி, மத்திய அரசுக்கு எழுதியிருப்பதாகவும் அன்றைக்கு சொன்னார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். அதை விரைந்து எல்லை நிர்ணயம் செய்து இந்த மாதிரி விவ காரங்களுக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்று நான் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மீனவர்கள் நீண்ட பல வருடங்களாக சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை பார்த்தோமானால் நம்முடைய எல்லையில் தான் அவர்கள் மீன் பிடித்துக்கொண்டு இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் நம்முடைய எல்லை 7 கிலோ மீட்டருக்குள் தான் மீன் பிடிக்கிறார்கள். அவர்கள் வேண்டும் என்றே விவகாரம் செய்வதற்காக நம்முடைய மீனவர்களுக்கு தொல்லை செய்கிறார்களே தவிர வேறு அல்ல என்பதை மட்டுமே தெளிவாக நான் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அதேநேரத்தில் ஒரு சில கோரிக்கைகளை மட்டும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். விடுதலைப் புலிகளிடமிருந்து தமிழக மீனவர்களையும், தமிழக மக்களையும் காப்பாற்றிய நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஏன் என்றால் மீனவர்களுக்கும் நமக்கும் ஏகப்பட்ட வித்தியாசம் இருக்கிறது. நம்முடைய வாழ்க்கை என்பது ஆவரேஜ் வாழ்க்கை. ஆனால் மீனவர்களுடைய வாழ்க்கை என்பது தினம், தினம் செத்து பிழைக்கிற வாழ்க்கை. எந்த நேரத்தில் அவர்கள் இருப்பார்கள், இறப்பார்கள் என்று, இன்று பிழைப்போமா? நாளை பிழைப்போமா என்று சொல்லுகிற அளவுக்கு தான் மீனவர்கள் வாழ்க்கை இருக்கிறது. ஆகவே தான் மீனவர்களுக்கு நம்மை விட அதிகமான சலுகை தரவேண்டும் என்று நான் கோருகிறேன். அந்த அடிப்படையில் தமிழக அரசு, முதலமைச்சர் அவர்கள் மிகப் பெரிய திட்டங்களை எல்லாம் அறிவித்து இருக்கிறார்கள். இன்றும் அறிவிக்க இருக்கிறார்கள். இன்னும் பல திட்டங்களை நீங்கள் அறிவிக்கவேண்டும். அதிலே சில மாறுதல்களை நான் உங்கள் மத்தியில், உங்கள் கவனத்திற்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன். 15 ஆயிரம் ரூபாய் வீடு கட்டுவதற்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. தற்போது 20 ஆயிரம் ரூபாய் வழங்குகிறார்கள். அதற்கு நான் மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்



கிறேன். அந்தத் தொகை வழங்குவதற்கு 6 மாதம், ஒரு வருடம் கால தாமதம் ஆகிறது. அதை விரைந்து 3 மாத காலத்திற்குள் அந்தத் தொகை அவர்களுக்கு கிடைக்க வேண்டும். அந்தத் தொகையை வாங்க அவர்கள் ஆயிரக் கணக்கான ரூபாய் செலவு செய்யப்படுகிறது என்றும் சொல்கிறார்கள். ஆகவே, அதையெல்லாம் குறைத்து அந்தத் தொகை விரைவில் அவர்களுக்குக் கிடைப்பதற்கு 3 மாத காலத்திற்குள் கிடைப்பதற்கு நீங்கள் முயற்சி எடுக்கவேண்டும். அதற்கு ஒரு ஸ்டெண்டிங் ஆர்டர், ஒரு நிரந்தர உத்தரவை நீங்கள் பிறப்பிக்கவேண்டும். அந்த இறந்த தேதிக்கும் அவர்களுக்கு உதவித் தொகை வாங்கிய தேதிக்கும் 3 மாத இடைவெளி இருக்கவேண்டும் என்கிற நிரந்தர உத்தரவை நீங்கள் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மீனவர்களுக்கு எல்லாம் முன்பு டாக்டர் எம்.ஜி.ஆர். காலத்தில் காலனி கட்டிக் கொடுக்கப்பட்டது. 18, 20 ஆயிரம் ரூபாய்க்கு கட்டிக் கொடுக்கப்பட்டது. மிக பிரமாதமான காலனியாக இருந்தது. அதை மீனத் துறை கட்டிக் கொடுத்தது. ஆனால் கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அந்த எக்சிகுஷன் ஆப் ஒர்க், அந்த வீடு கட்டுகின்ற அந்த வேலையை, ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைத்து இருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியத்தில் மிகப் பெரிய விவகாரங்கள், பலகாரங்கள் எல்லாம் இருக்கின்றன. அதையும் அவர்களிடத்தில் கொண்டு போய் ஒப்படைத்து விட்டதால் மீனத் துறையினுடைய வீடுகள் சிறப்பான முறையில் அமையவில்லை. தொகுப்பு வீடுகள்போல் ஒழுகிக் கொண்டு இருக்கின்றன. ஆகவே மீனவர்களுடைய வீடுகளை, மீனத் துறையே நேரடியாகக் கட்டுவதற்கான முயற்சியினை நீங்கள் எடுப்பதற்கு உத்தரவிட வேண்டும். அந்தத் தொகையையும் நீங்கள் உயர்த்தித்தர வேண்டுமென்று நான் உங்களை பணிவன்போடு வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-20

ஏனைய பிரச்சினைகளைப்பற்றியும், 'இரட்டைமடி' பிரச்சினை பற்றியெல்லாம் சொன்னார்கள்; அது மல்லிபட்டினத்திலும், அதிராமப்பட்டினம் பகுதியிலும் மிகப்பெரிய இஷ்யூவாக இருக்கிறது. திருத்துறைப்பூண்டி பகுதியிலும் வேதாரண்யம் பகுதியிலும் மிகப் பெரிய விவகாரமாக இருக்கிறது. அதற்கு உடனடியாக நீங்கள் முற்றுபுள்ளி வைக்கவேண்டும். அதிராமபட்டினத்திலே மிகப் பெரிய விவகாரம் நடந்து கொண்டிருக்கிறது. அதிராமப்பட்டினத்திலே மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக்காலத்தில் அங்கே அதிராமபட்டினம் மீனவர்கள் பயன்படுத்திய ஒரு வாய்க்கால் இருக்கிறது. அந்த வாய்க்காலுக்கும் அந்த கடலோரப் பகுதிக்கும் ஒரு கிலோ மீட்டர் டிஸ்டன்ஸ் இருக்கும் என்று

கருதுகிறேன். அவர்கள் படகுகளை அந்த வாய்க்கால் வழியாகக் கொண்டு வந்து அங்கே ஓரத்தில் நிறுத்திவிட்டு மீன்களைக் கொண்டு போவது வழக்கம். ஆனால் அந்த வாய்க்கால் தூர்ந்து விட்டது. கிட்டத்தட்ட ஒரு 10 வருடமாக சரியாக இருந்த வாய்க்கால் கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் என்ன செய்தார்களோ தெரியவில்லை. ஒரு மூன்றாண்டுக் காலமாக அது தூர்ந்துவிட்டது. மீண்டும் அந்த வாய்க்காலில் தூர் எடுத்து அந்த மீனவர்களுக்கு அந்த உதவியைச் செய்ய வேண்டும். இதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த வாய்க்கால் தூர்ந்து இருப்பதால் அந்த மீனவர்கள் மிகவும் தொல்லையை அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

என்னுடைய பேராவூரணித் தொகுதியிலுள்ள மல்லிப்பட்டினத்தைத் துறைமுகமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடையாள அட்டை வழங்குவதில் சற்று டிலே ஆகிறது. அதை உடனடியாக வழங்குவதற்கு நீங்கள் முயற்சிக்கவேண்டும். அடையாள அட்டை வழங்குவதிலே பல கஷ்டங்கள் இருக்கின்றன. எங்கள் மல்லிபட்டினத்திலே நேவிப்படை இருக்கிறது. அவர்கள் ஏதோ லண்டன், அமெரிக்கா, ஆப்ரிக்காவிலேயிருந்து வந்தவர்கள் போல நம் மீனவர்களை, பார்ப்பவர்களையெல்லாம் விடுதலைப்புலி என்பது போல விழுந்து பிடுங்குகிறார்கள். அவர்களைத் தாக்குகிறார்கள். பல பெரிய தொல்லைகளுக்கு உள்ளாக்குகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லாமல் அடையாள அட்டைகளை உடனடியாக வழங்குவதற்கு நீங்கள் முயற்சித்தால் அந்தப் பிரச்சினைக்கே இடம் வராது. கலெக்டர், ஏ.டி., டைரக்டர் என்று இப்போது ஆவதாகச் சொல்கிறார்கள். அதை தயவுசெய்து உடனடியாக வழங்குவதற்கு நீங்கள் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இறுதியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

அம்மணிசத்திரம் என்ற ஒரு சத்திரம், சர்போஜி காலத்தில் ஒரு அம்மணியின் பெயரில் மிகப் பெரிய சத்திரம் இருந்தது. அந்தச் சத்திரம் இடிந்துபோய்விட்ட சூழ்நிலையில் இருந்த காரணத்தினால் அதை நம்முடைய அரசு இடித்துவிட்டது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் எஸ்.டி.எஸ். அவர்கள் இடத்தில் சொல்லுகின்றபோது, அதில் புயல் பாதுகாப்புக் கட்டிடம் கட்டித் தருவதாகச் சொன்னார்கள். இதுவரையில் அதற்கான முயற்சி எடுக்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சருடைய தனிக் கவனத்திற்கு நான் சொல்கிறேன். அந்த அம்மணிசத்திரம் என்ற ஊரில், அந்த அம்மணிசத்திரம் இடிக்கப்பட்ட நிலையில், அதே இடத்தில், சத்திரம் இருந்த இடத்தில் ஒரு புயல் பாதுகாப்பு கட்டிடம், பெரிய அளவில் கட்டிக்



கொடுத்தால் அந்த கிராமங்கள் யாவும் பாதுகாப்பாக இருப்பதற்கு மிக வசதியாக இருக்கும் என்று நான் பணிவன்போடு வேண்டி விரும்பி கேட்டுக்கொண்டு, மீன், கருவாடு, நண்டு, இறால் இவைகளையெல்லாம் நம்முடைய மீனவர்கள் பட்டுக்கோட்டைக்கும், அறந்தாங்கிக்கும் வியாபாரம் செய்வதற்கு அடித்துக் கொண்டு செல்வது வழக்கம். அவர்கள், அவைகளை பஸ்களிலே ஏற்ற முடிவதில்லை. பஸ்களிலே கொண்டு வருகின்றபோது வாடை அடிக்கிறது. என்று சொல்கிறார்கள். சாப்பிடுகின்றபோது பிரமாதமாக இருக்கிறது. ஆனால் பஸ்களிலே வருகின்றபோது வாடை இருப்பதாகச் சொல்லி டிரைவரும் கண்டக்டரும் ஏற்ற மறுக்கிறார்கள். அதற்கென்று தனியாக ஒரு பஸ் அல்லது ஒரு பாடியை பாதியாக்கி அல்லது ஒரு பஸ்ஸின் அடியிலேயாவது ஒரு ஏற்பாடு செய்து அந்த கருவாடு, மீன், இறால், நண்டு போன்றவற்றைக் கொண்டுபோய் வியாபாரம் செய்வதற்கான ஒரு உத்தரவினை நீங்கள் பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி வணக்கம். ஜெய் ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் மு. சீனியம்மாள்.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரகம் மற்றும் சிறு தொழில்கள் மானியத்தில் பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு என் நன்றி கலந்த வணக்கங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் பாதங்களில் சமர்ப்பித்து, தங்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

" இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே
எந்திரங்கள் வகுத்திடுவீரே
கரும்புச்சாறு பிழிந்திடுவீரே
கடலில் மூழ்கி நன்முத்தெடுப்பீரே "

என்ற பாரதியின் பாடலுக்கிணங்க கிராமத்தினை தொழில்கள் மூலம் வளர்ச்சி அடைய செய்வதாலேயே நகரத்தை உண்மையான முன்னேற்றம் அடைந்ததாகின்றது என்ற அடிப்படையில் குறைவான மூலதனத்தில் நிறைய தொழில்களைச் செய்து வேலை வாய்ப்பினை அதிகப்படுத்தவும், அதற்காக ஊக்கத்தொகைகளையும் மற்றும் சலுகைகளையும் அளிப்பதன் மூலம் தொழிலில் பின்தங்கிய மாவட்டங்களைக் கண்டெடுத்து ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட நடுத்தர மக்கள் வாழ்விற்கு ஏற்றம் அளிக்க முடியும் என்று எண்ணி அவினாசி, மற்றும் பல வட்டங்களை தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவித்து தொகுதிவாழ் மக்களின் வாழ்விற்கு

வழிகாட்டிய, 5½ கோடி மக்களின் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள், தொழிற் கூடங்கள், தனியார் தொழிற்பேட்டை அமைப்பதற்கு முன்னுரிமை, அயல்நாட்டு முதலீட்டுடன் தொழிற்கூடம் அமைப்பதற்கு முன்னுரிமை, பெண்கள் தொழில் செய்வதற்கு முன்னுரிமை பயிற்சி கொடுத்து தொழிலை ஊக்குவிப்பது போன்ற திட்டங்களில் அன்புகூர்ந்து அவினாசியைத் தேர்ந்தெடுத்து, சிப்காட், சிட்கோ போன்ற தொழிற்பேட்டைகளை அமைத்துத் தர வேண்டுகிறேன். அதனால் முழு வேலைவாய்ப்பும், ஒரு முதலாளி என்கிற அந்தஸ்தைப் பெற வழி செய்ய வேண்டுகிறேன்.

பிற்பகல் 5.25

பிற்படுத்தப்பட்ட வட்டங்களில் தொழில் தொடங்குவதற்கு உரிய அடிப்படை வசதிகளைச் செய்து தந்து, தமிழ்நாட்டு தொழில் முதலீட்டுக் கழகம் அவினாசியில் உள்ள தகுதி வாய்ந்த நபர்களைத தேர்வு செய்து அவர்களுக்கு நிலம் கட்டிடம், இயந்திரம், லைசென்ஸ், ஆகியவற்றைத் தந்து, வெகுவிரைவில் ஆர்வமுள்ள இளைஞர்கள் வங்கிகளில் தங்கள் கடன்களைப் பெற்றிட வழிவகுத்திட வேண்டுகின்றேன்.

படிப்பினையும், தொழிலையும் மட்டுமே மூலதனமாகக் கொண்டுள்ள ஏழை எளியவர்களை வாழ்க்கை முன்னேற்றும் வகையில் அரசு வங்கிகளுக்கு அறிவுறுத்த வங்கிகளைத் தகுதிவாய்ந்த இளைஞர்களைத் தத்து எடுத்து, தொழிற் கூடங்கள், அமைத்து, வேலை கொடுத்து, அதன் மூலம் தன் கடனை அடைத்து அரசிற்கு வருமானத்தை ஈட்டிக் கொடுக்குமானால் அது ஆக்கபூர்வமான செயலாக அமையும் என்று கருதுகிறேன். கடனை முடித்தவுடன் தாங்களே முதலாளியாகின்ற ஒரு வாய்ப்பினையும் நல்கிட வேண்டுகிறேன்.

பனியன் உற்பத்தித் தொழிலில் முன்னோடியாய் உள்ள திருப்பூர் அவிநாசியிலிருந்து சுமார் 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. அவிநாசியிலிருந்தும், அதனைச் சுற்றியுள்ள மக்கள் வேலைக்குத் திருப்பூர் சென்று வருகின்றனர். தொழில் திறமை வாய்ந்த சுற்று வட்டார மக்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கும், திருப்பூரிலுள்ள [illegible] நெருக்கடியைப் போக்கவும், ஜப்பானைப் போல [illegible]டியார[illegible] குடிசைத் தொழில் போலச் செய்து ஒவ்வொரு உருவினையும் செய்வதிலே தனி வல்லமை படைத்தும் [illegible]போல பின்னலாடை உற்பத்தி இயந்திரங்கள்



உதிரி பாகங்கள் செய்யும் தொழிற்பேட்டையை அவினாசியில் ஏற்படுத்தி. ஒவ்வொரு அத்தியாவசியப் பொருளைத் தயாரிப் பதில் தனித் திறமை பெற்றதாய் உருவாக்க இயந்திர உதிரி உற்பத்தித் தொழிற்பேட்டை ஒன்றை அவினாசியில் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன், இதனால் திருப்பூர் மக்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்று உதிரி பாகங்கள் வாங்கு வதைக் குறைப்பதற்கும் செலவு, காலம், நேரமாவதைத் தடுப் பதன் மூலம் உற்பத்தியை அவர்களே பெருக்குவதற்கும் வாய்ப் பிருக்கும் என்று கருதுகிறேன்.

மேலைநாடுகள், உதாரணமாக ஜப்பான் நாட்டு உதவியுடன் பிற்பட்ட பகுதியான அவிநாசியில் ஒரு தொழில் மின்னணுவியல் கூடம் கட்ட வேண்டும்; உள்ளாடை துணி தயாரிப்புக் கூடம், மோட்டார் வண்டி பாகங்கள் தயாரிப்புக் கூடம், உணவுப் பொருள் பதப்படுத்துகின்ற கூடம் அமைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்,

70 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற அவிநாசியில் தையல் கலை தெரிந்த பெண்கள் உதவியுடன் ஒரு கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி அதன் மூலம் எக்ஸ்போர்ட், ரெடிமேட் ஆடை கள், உள்ளாடை ஏற்றுமதியை அதிகரிப்பதன் மூலம் வேலை வாய்ப்பு மற்றும் அந்நியச் செலவாணி மற்றும் அவிநாசி வளம் கொழிக்கச் செய்யும் அரசிற்கு வருமானம் கூடும். எனவே, ஆவன செய்து உதவிடக் கேட்டுக் கொள்கிறேன்.

பின்தங்கிய வட்டங்களில் இளைஞர்களைத் தேர்வு செய்து தொழிலில் வழிகாட்டும் பிரிவின் மூலம் தொழில் தொடங்க விதி முறைகள், முறைப்படுத்துதல், மேலாண்மை நிதி போன்ற வற்றைத் தெரிந்து கொள்வதற்கு அதிக வாய்ப்பினைத் தந்து உதவ வேண்டுகிறேன்.

பின்தங்கிய வட்டமான அவிநாசியில் நெசவுத் தொழிலில் ஆர்வமுள்ள ஏழை மக்களுக்கு மின்சாரம், கட்டணத்தில் சலுகை தந்துதவ விசைதறித் தொழிலில் நலம் பெற கூட்டுறவு வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் அவர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித் தந்திட வேண்டுகிறேன்,

சொன்னதையெல்லாம் எனது தொகுதியில் செய்து காட்டிய 5½ கோடி மக்களின் இதய தெய்வம் டாக்டர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை மீண்டும் வணங்கி, வாழ்த்தி இந்த வாய்ப்பினைக் கொடுத்தமைக்காக நன்றி கூறி விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. கந்தசாமி

* திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தொழில் மையங்கள் ஆரம்பிக்கப்பட்ட பிறகு அதிக அளவில் சிறுதொழில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன, படித்த இளைஞர்கள் சிறு தொழில்களை வேகமாக ஆரம்பிக்கிறார்கள், ஆனால் சில வருடங்கள் சென்ற பிறகு பார்த்தால் பாதித் தொழில்கள் மூடப்படுகின்றன. தொழில்களை ஆரம்பித்தவர்களுக்கு மூலப் பொருட்கள் கிடைப்பதில்லை. மூலப் பொருட்கள் கிடைக்காமல் சிறு தொழில்களைத் துவக்கியவர்கள் திண்டாடுகிறார்கள். பல கஷ்டங்களுக்கு இடையே தொழில்களைத் துவக்கி, எங்கெங்கோ அலைந்து, மூலப் பொருட்களை அதிக விலை கொடுத்து வாங்கி பொருட்களை உற்பத்தி செய்த பிறகு அந்தப் பொருட்களுக்கு நல்ல மார்க்கெட் கிடைப்பதில்லை. தமிழ்நாட்டில் லூதியானாவில் இருப்பதுபோன்று மிகப் பெரிய சிறு தொழில்கள் மார்க்கெட்டை நாம் ஏற்படுத்துவதற்கு இப்பொழுது நல்ல வாய்ப்பு உள்ளது. பஞ்சாப் மாநிலத்தில் தொழிலமைதி குறைந்த பிறகு தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் அங்கேயிருந்து சிறு தொழில் இயந்திரங்களை வாங்குவது கணிசமாகக் குறைந்துள்ளது, தமிழ்நாட்டில் இப்பொழுது தொழிலமைதி மிகவும் நன்றாக உள்ளது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி சேலம், ஈரோடு, கோவை, போன்ற பகுதிகளில் லூதியானாவில் இருப்பது போன்ற சிறு தொழில் பேட்டைகளை அமைத்து, சிறுதொழில் கேந்திரம் அமைக்க அரசு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதே சமயம் மாவட்டத் தொழில் மையங்கள் இல்லாத மாவட்டங்களில் தொழில் மையங்களை ஏற்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்,

பிற்பகல் 5–30

சேலம் மாவட்டத்தில் இரும்பு, நிலக்கரி ஆகிய மூலப் பொருட்களைக் கொண்டு செயல்படும் சிறு தொழில்கள், இவைகள் போதுமான அளவுக்குக் கிடைக்காத காரணத்தினால் இந்தத் தொழில்கள் நசிந்து வருகின்றன. மாதா மாதம் ஒதுக்கப்படும் '' கோட்டா '' அளவைக் குறைக்காமல் உரிய நேரத்தில் தாமதம் இல்லாமல் கிடைக்கச் செய்ய வேண்டும். குறிப்பாக ஸ்டீல் பர்னீச்சர் தொழில்களுக்கு இரும்புத் தகடுகளைச் சரியாக ஒதுக்கீடு செய்யாமல் அரசு நிறுவனங்கள் இருப்பதால் இந்தத் தொழில்கள் நசிந்து வருகின்றன. இந்த சிறு தொழிற்சாலைகள் வருடம் பூராவும் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க முடியாமல் சிரமத்திற்கு ஆளாகின்றன என்பதைக் கருத்தில் கொண்டு இந்தத் தொழில்களுக்கு மூலப் பொருட்கள் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்க அரசு நிறுவனங்கள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படும் படித்த இளைஞர்கள் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தினை





செயல்படுத்த வங்கிகள் தயக்கம் காட்டி வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் 20 சதவிகிதம் மானியத்துடன் 35 ஆயிரம் ரூபாய் வரை கடன் வழங்கப்படுகிறது இதன்கீழ் தொழில் செய்ய விரும்புகிற படித்த இளைஞர்களிடையே நேர்முகத் தேர்வு நடத்தி மாவட்ட தொழில் மையம் வங்கிகளுக்குப் பரிந்துரை செய்த பிறகும் வங்கிகள் தயக்கம் காட்டுவது தொழில் துவங்க வரும் இளைஞர்களின் உற்சாகத்தைக் குறைத்து விடுகிறது. தமிழகத்தில் நடப்பாண்டில் சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மின்னணுவியல் தோல் பொருட்கள் தயாரித்தல் போன்ற ஏழு தொழில்களைத் துவக்க 70 கோடி ரூபாய் முதலீட்டில், தொழிற் பேட்டைகளைத் துவக்க முன் வந்திருப்பது தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிப்பதாக அமையும்.

சேலத்தில் எலக்ட்ரானிக் தொழில் பேட்டை அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவர் 50 ஏக்கர் நிலத்தை அளித்துள்ளார், இந்தத் தொழிற் பேட்டைகளை அமைப்பதிலுள்ள சிக்கல்களை ஆய்ந்து சேலத்தில் எலக்ட்ரானிக் தொழில் பேட்டை அமைக்க உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும், மேலும், இந்தியாவில் தயாரிக்கப்படும் தோல் பொருட்களுக்கு வெளிநாடுகளில் நல்ல மரியாதை உள்ளது, இங்கே தயாரிக்கப்படும் தோல் பொருட்களின் விலை மலிவாக இருப்பதால் ஏற்றுமதி அதிக அளவில் செய்யப்பட்டு அந்நியச் செலவாணியை சம்பாதித்துக் கொடுப்பதில் முக்கிய இடத்தை வகிக்கிறது, எனவே தோல் பொருட்கள் தயாரிக்கும் தொழில்களுக்கு இன்னும் அதிக ஊக்கம் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் கடன் பெறுவதில் அதிக சிரமங்கள் இருப்பதோடு, வீண் காலதாமதம் ஏற்படுகிறது, சொந்தத் தொழிலே வேண்டாமென்று வெறுக்கிற அளவுக்கு கடன் பெறுவதிலே சிரமங்கள் உள்ளன, எளிதாக கடன் பெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

குச்சிக் கிழங்கு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டுமென்று சேலத்தில் '' சேகோ சர்வ் '' என்ற நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது, சேலம் மாவட்டத்தில் சுமார் 700 ஜவ்வரிசி தொழிற்சாலைகள் உள்ளன, சாதாரணமாக ஒவ்வொரு வருடமும் 350 முதல் 400 ஜவ்வரிசித் தொழிற்சாலைகள் மட்டுமே இயங்கும், ஆனால், இந்த வருடம் குச்சிக் கிழங்கு விளைச்சல் அதிகமாக இருக்கிற காரணத்தால் 700 தொழிற்சாலைகள் இயங்கின, இவைகளில் உற்பத்தியாகும் ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் பொருட்களை '' சேகோ சர்வ் '' நிறுவனம் கொள்முதல் செய்திருக்க வேண்டும், ஆனால். இந்த நிறுவனம் மெத்தனமாக இருந்த காரணத்தினால் 15 வடநாட்டு வியாபாரிகள் (மார்வாடிகள்) ஒட்டு மொத்தமாக அனைத்தையும் வாங்கி நல்ல விலை கிடைக்காமல் செய்து விட்டார்கள், சேலம் ஜவ்வரிசி மார்க்கெட் இந்த 15 பேர்களின் கையில் உள்ளது. இவர்களின் ஏகாதி

பந்தியந்தைத் தடுத்தால்தான் குச்சிக் கிழங்கு பயிர் செய்யும் விவசாயிகளுக்கும் ஜவ்வரிசி உற்பத்தியாளர்களுக்கும் நல்ல விலை கிடைக்கும், எனவே, சேலம் ''சேகோ சேர்வ்'' நிறுவனத்தை பலப்படுத்தி உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்,

கதர் கிராமத் தொழில் வாரியம் மின்னணு தொழிலைத் துவக்க முன்வந்துள்ளது. இந்தத் தொழிலை மேம்படுத்த இது உதவியாக இருக்கும். கதர் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு மிகக் குறைந்த ஊதியமே கொடுக்கப்படுகிறது, நூற்பு மையங்களில், நூற்கின்ற தொழிலாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய கூலியை உயர்த்திக் கொடுக்க வேண்டும். இந்த தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு ஆரம்பத்தில் வேறு தொழில்கள் எதுவும் கிடைக்காதக் காரணத்தினால் பிறகு வேறு வேலைக்குப் போய்க் கொள்ளலாம் என்று நினைத்து இந்த வேலைக்கு வருகிறார்கள், வேறு வேலை கிடைக்காதக் காரணத்தினால் இதே வேலையில் நீடித்து, கிடைக்கும் சொற்ப சம்பளத்தில் குடும்பத்தை நடத்த முடியாமல் கஷ்டப்படுகிறார்கள், எனவே, இவர்களது கூலியை உயர்த்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன், கதரும். கதர் பாலிஸ்டர் துணிகளும் சீக்கிரம் கிழிந்து விடுகின்றன, காந்தி காலத்தில் வேண்டுமானால் கதர் ஏழைகள் உடுத்தும் ஆடையாக இருந்திருக்கலாம், ஆனால், இப்போது அப்படி இல்லை, மில் பாலிஸ்டர் வேட்டி சட்டைகள் 5 ஆண்டுகள் ஆனால்கூட கிழிவதில்லை, ஆனால் கதர் 5 மாதத்தில் கிழிந்து விடுகிறது. எனவே, ஏழைகள் கதர் ஆடைகளை விரும்பாத சூழ்நிலை உள்ளது, நடுத்தர வர்க்கத்தினரும், அதற்கு மேல் உள்ளவர்களும் கதரைப் பயன்படுத்துகிறார்கள், எனவே, மில் துணிகளைப் போல, கதர் துணிகள் நீண்ட நாள் கிழியாமல் இருக்க, புதிய தொழில் நுட்பத்தைப் புகுத்த வேண்டும், சேலம் மாவட்டம் கதர் தொழில்களுக்கு புகழ் பெற்றது, ஏழை விவசாயிகளுக்கு வேலைவாய்ப்பினைக் கொடுக்கும் நோக்கத்தோடு, நாடு விடுதலை அடைவதற்கு முன்பாகவே மூதறிஞர் இராஜாஜி அவர்கள் திருச்செங்கோட்டில் காந்தி ஆசிரமத்தை ஆரம்பித்தார். இன்றையதினம் அந்த ஸ்தாபனம் ஆல் போல் வளர்ந்து ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினைக் கொடுத்து வருகிறது, கதர் தொழிலுக்கு மேலும். ஊக்கம் காட்டுகின்ற வகையில் சேலம் மாவட்டத்தில் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் மின்னணுவியல் தொழில் தொடங்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன், வணக்கம்,

பிற்பகல் 5,35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. த. ரத்தினவேல்.

திரு. த. ரத்தினவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில் துறை மானியக் கோரிக்கையில்



பேசுவதற்கு வாய்ப்பு வழங்கிய தமிழகத்தின் நந்தா மணிவிளக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதம் வணங்கி என் உரையைத் துவக்க விழைகின்றேன்,

'' உழைப்பவரே உயர்ந்தவர் '' என்ற உன்னதத் தத்துவத்தின் அடிப்படையில் தமிழகத்தைத் தொழில் அமைதியுடன் தொழிலாளர்களின் தோழனாக நமது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு இன்றைக்குத் தமிழகத்தில் ஆட்சி புரிந்து வருகிறது. பல ஆண்டுகளாக மூடியிருந்த ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனியை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்பு திறந்து, இன்று ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் குடும்பங்களில் விளக்கேற்றி வைத்திருக்கிறார்கள், அதைப் போலவே நீண்டகாலமாக மூடியிருந்த பின்னி தொழிற்சாலையை தமிழ்ப்புத்தாண்டு தினத்தில் திறந்து ஆயிரம் ஆயிரம் தொழிலாளர்களின் குடும்பங்களில் இன்றைக்கு விளக்கு ஏற்றி வைத்திருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசுக்கு இன்றைக்குக் கோடானு கோடி தொழிலாளர்கள் தங்களுடைய நன்றியைக் காணிக்கையாக்கிக் கொண்டிருக்கிறார்கள்,

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தொழில் திட்டங்களுக்கும் தொழில் கொள்கைகளுக்கும் மத்திய அரசு முழு ஒத்துழைப்புத் தந்தால் இன்னும் சில ஆண்டுகளில் இந்திய நாட்டிலே தமிழகம் தொழில் துறையில் முதலிடம் பெறும் என்பது உறுதி.

எனது தொகுதியான திருவெறும்பூரில் அமைந்துள்ள பி.எச்.இ.எல்.இல் சுமார் 16 ஆயிரம் தொழிலாளர்கள் நேரடியாகவும். சுமார் 1 இலட்சம் தொழிலாளர்கள் துணை தொழிற்பேட்டைகள் மற்றும் சிறுதொழில்கள் மூலம் வேலைவாய்ப்புப் பெற்றுப் பணிபுரிந்து வருகின்றார்கள், திருச்சி பி.எச்.இ.எல். வசம் தற்போது 6.000 மெகாவாட் ஆர்டர் வேலைக்கு பணி உள்ளது, இதிலே சுமார் 1 வருடத்திற்கு போதுமான அளவே தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கும் சூழ்நிலை உள்ளது. அதற்குப் பின் பி.எச்.இ.எல். தொழிலாளர்களின் எதிர்காலம் பாதிக்கப்படும் நிலை உள்ளது. எனவே, மிகப் பெரிய தொழில் நிறுவனமான பி.எச்.இ.எல். நிறுவனத்திற்கு மத்திய அரசு புதிய ஒப்பந்தங்களைப் பெற்றுத் தர மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உதவிட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், மாண்புமிகு டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பெரும் முயற்சியினால் உருவாகும் திருச்சியில்

[திரு. த. இரத்தினவேல்] [1992 ஏப்ரல் 20

உள்ள ஜெயங்கொண்டான் மற்றும் ஸ்ரீ மூஷ்ணம் போன்ற அனல் மின் நிலைய ஆர்டர்களை பி.எச்.இ.எல். நிறுவனத்திற்குக் கொடுத்து, இலட்சக்கணக்கான குடும்பங்களில் ஒளியேற்ற உதவிட வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதன்மூலம் சுமார் 3,000 ஊரகத் தொழிற்பேட்டைகளில் பணிபுரியும் இலட்சக்கணக்கான தொழிலாளர் குடும்பங்கள் பயனடையும் வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தொழிற்சாலைகள் நிரம்பியுள்ள என்னுடைய திருவெறும்பூர் தொகுதியில் பொறியியல் கல்லூரி உள்ளது. அரசு தொழில் நுட்பக் கல்லூரியும் இருக்கிறது. பெண்களின் நலம் பேணும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசில் பெண்கள் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று துவாக்குடி பகுதியில் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பகுதியில் 300-க்கும் மேற்பட்ட தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. பெண்கள் தொழில்நுட்பக் கல்லூரி இந்தப் பகுதிக்கு வந்தால் தொழில்நுட்பக் கல்வி கற்று பெண்கள் தொழிற்சாலைகளில் பணிபுரியும் வாய்ப்பு அதிகமாக உருவாகும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன.

அரியமங்கலம், துவாக்குடி, திருவெறும்பூர் 'சிட்கோ' 'சிப்காட்' தொழிற்பேட்டைப் பகுதிகளில் தண்ணீர்ப் பிரச்சினை அந்தத் தொழிலாளர்களுக்கு அதிகமாக உள்ளது. சிட்கோ 'சிப்காட்' தொழிற்பேட்டையில் உள்ள உபரி தண்ணீரை அந்த மக்களுக்கு கிடைக்க உத்தரவிடும்படி கேட்டுக் கொள்கிறேன். அரியமங்கலப் தொழிற்பேட்டையில் உள்ள குடியிருப்புகளில் தொழிலாளர் அல்லாத சிலர் முறைகேடாக குடியமர்த்தப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அது குறித்து நடவடிக்கை எடுத்து, தொழிற் பேட்டையில் பணிபுரியாதவர்கள் முறைகேடாக குடியிருந்தால் இவர்களை உடனடியாகக் காலி செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு 1 இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடியதாக ஊரகத் தொழில் துறைத் திட்டம் செயல்பட்டது. அதைப்போலவே இந்த ஆண்டும் இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு சுயவேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய ஊரகத் தொழில் துறை திட்டம் திருவெறும்பூர் தொகுதியில் துணை தொழிற்பேட்டைகள் அதிகமான காரணத்தால் அந்தப் பகுதி மக்களுக்கு அதிகமான கடன் உதவி வழங்க வேண்டுமென கேட்டு, ஊரகத் தொழில் மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1992 ஏப்ரல் 20]

பிற்பகல் 5–4$^{0}$

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. எச். எம். ராஜு.—

* <u>திரு. எச். எம். ராஜு</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளில் எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைக் கூறி ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்க முன்வருகிறேன். தேசப்பிதா மகாத்மா காந்தி அண்ணல் அவர்கள் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்தே கதருக்கு முன்னுரிமை கொடுத்து இந்திய நாட்டிலுள்ள ஒவ்வொரு குடிமகனும் உள்நாட்டுத் துணியாகிய கதரை அணியவேண்டும் என்ற வகையில் மக்களுக்கு ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி, அன்னிய நாட்டுத் துணியை நிராகரிக்கும் அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்து சிறந்த வகையில் வளர்ச்சிக்கு வகை செய்தார்கள். வருடத்திற்கு 150 நாட்களுக்கு தள்ளுபடி விற்பனையை நீட்டிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தீபாவளி சமயத்தில் நமது நீலகிரி மாவட்டத்திற்கு 75,000 கிலோ கிராம் அளவுக்கு இலவம் பஞ்சு தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கதர் துணியின் தரம், நிறம் மிகவும் முக்கியம். லூதியானா போன்ற இடங்களிலிருந்து வரும் ஏஜெண்டுகளை எங்களுடைய மாவட்டத்திற்கு அனுப்பி வைத்தால்தான் மக்களுடைய நிலைமை தெரியவரும். அதாவது அவர்கள் எந்த நிறத்தை உபயோகிக்கிறார்கள். எந்தத் தரத்தை உபயோகிக்கிறார்கள் என்று தெரியவரும். இந்தத் துறைக்கு வருகை தரும் ஏஜெண்டுகள் சென்னைக்கு மட்டும் வந்துவிட்டு சென்னையிலிருந்து திரும்பிப் போனால் கண்டிப்பாக நல்ல தரமோ அல்லது நிறமோ மக்களுக்கு கிடைக்காது. ஆகவே எக்காரணத்தைக் கொண்டும் சென்னையில் இருக்கும் இத்துறையின் அமைப்புகளுக்கு மட்டும் வந்துவிட்டு அவர்கள் திரும்பிவிடக்கூடாது. அவர்கள் கண்டிப்பாக நீலகிரி மாவட்டத்திற்கு வந்து அந்தத் துணிகளை மக்கள் தேர்ந்தெடுப்பதற்கு உதவ வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கதர்த் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் ஊதியத்தை உயர்த்த வேண்டும். அவர்களுக்கு அரசின் எல்லா சலுகைகளும் கொடுக்கப்பட வேண்டும். ஊரகத் தொழிலைப் பொறுத்தவரையில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள மலைவாழ் மக்களாகிய கோத்தர் இன மக்கள் தலைசிறந்த தச்சுவேலைக்காரர்கள்; கொல்லுப்பட்டறைக்காரர்கள். அவர்களுடைய அந்தத் தொழில்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்குக் கடனுதவி கொடுத்து அந்தத் தொழில் முன்

[திரு. எச், எம். ராஜு]   [1992 ஏப்ரல் 20

னேற்றம் அடைய ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பின்னல் வேலைப்பாட்டில் தொதவர் இன மக்கள் உலகப் பிரசித்திபெற்ற சால்வையைத் தயாரிக்கிறார் கள். அவ்வாறு அவர்கள் சிறப்பாகப் பின்னும் அந்த சால் வைக்கு அவர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் மிகவும் குறை வாக இருக்கிறது. ஆகவே அவர்களுக்குக் கிடைக்கும் அந்த ஊதியத்தை அதிகரிக்கும் வகையிலும், இந்தத் தொழிலை ஊக்குவிக்கும் வகையிலும் அவர்களுக்குக் கடன் உதவி கொடுத்து ஊக்குவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து தேன் எடுக்கும் தொழிலை குருமர்கள் நல்ல வகையில் செய்கிறார்கள். அவர்களுக்கும் கடன் உதவி செய்து கொடுத்து அவர்கள் அந்தத் தொழிலில் முன்னேற்றம் அடைய ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் எல்லா வகையான பழங்களும் கிடைப்பதால் அந்தப் பழங்களின் மூலமாக ஒரு ஜாம் ஃபேக்டரி அமைத்தால் அதன் மூலமாக மக்களுக்கு அதாவது நமது இந்திய மக்கள் அனைவருக்கும் நீலகிரி ஜாம் அனுப்பி வைக்கலாம் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியாவிலேயே நீலகிரி மாவட்டத்தில் 15 தேயிலைக் கூட்டுறவுத் தொழிற்சாலைகளும் கேரளாவில் ஒன்றும் ஹிமாச்சல பிரதேசத்தில் நான்கும் இருக்கின்றன. 25,000-க் கும் மேற்பட்ட சிறு விவசாயிகள் நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். வருடத்திற்கு சுமார் 71 மில்லியன் கிலோ கிராம் தேயிலையை நீலகிரியில் உற்பத்தி செய்கிறார்கள். இது தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தியில் சுமார் 70 சதவீதம் ஆகும். 15 தேயிலைத் தொழிற்சாலைகளில் மத்திய அமைப்பான ‘இன்கோசெர்வ்’ எல்லா சலுகைகளையும் இந்த விவசாயிகளுக்குக் கொடுக்க முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். விஞ்ஞான முறைப் பயிற்சி இந்த விவசாயிகளுக்கு அளிக்கப்பட வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

தேயிலைக்காக தனியாக ஒரு ஆராய்ச்சிக்கூடம் நீலகிரியில் அமைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இத்துறையில் உள்ள தொழிலாளர்களுக்கு ஊதியம் உயர்த்தப் பட வேண்டும்; பதவி உயர்வு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும், அரசு அலுவலர்களுக்குக் கிடைக்கும், எல்லா அலவன்ஸ் மற்றும் சலுகைகள் இந்தத் தொழிலாளர் களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். கடந்த 5 மாதங்களாக



1992 ஏப்ரல் 20] [திரு. எச். எம். ராஜு]

மழை இல்லாமலும், 3 மாதங்களாகப் பனியினாலும் தேயிலை நாற்றுக்கள் எல்லாம் வாடி வதங்கிவிட்டன. அதனை ஈடு செய்யும் வகையில் அவர்களுக்கு நாற்றுகள் கொடுக்க வேண்டும். மே மாதக் கடைசியில் அதாவது மழை பெய்யும் காலத்தில் இந்த புதிய தேயிலை நாற்றுகளைக் கொடுத்தால் சிறு விவசாயிகள் பயன் அடைவார்கள். நீலகிரி மாவட்டம் 5 மாதங்களாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறு விவசாயி களிடமிருந்து இதுவரை அரசாங்கம் 50 பைசா ஒரு தேயிலை நாற்றுக்கு என்று வாங்கி வந்தது. ஆனால் இப்போதுள்ள வறட்சியின் காரணமாக எல்லா தேயிலை நாற்றுகளையும் இலவசமாக சிறு தேயிலை விவசாயிகளுக்கு வழங்குமாறு தாழ்மையுடன் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அடுத்து டிஃபன்ஸ் சர்வீஸில் தேயிலைத் தூளை அதிகமாக வாங்குகிறார்கள். ஆனால் அவர்கள் இந்த 15 தேயிலைக் கூட்டுறவுத் தொழிற்சாலைகளிலிருந்து வாங்கினால் அந்த கூட்டுறவுத் தொழிற்சாலைகள் நன்றாக வளர்ச்சி கூட்டுறவுத் அதன்மூலம் சிறு விவசாயிகளும் வளர்ச்சி அடையும். அடைவார்கள். எனவே மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து ‘டிஃபன்ஸ் சர்வீஸ்’ அங்கேயிருந்து வாங்கும் தேயிலைத் தூள்களை எல்லாம் இந்த 15 கூட்டுறவுத் தொழிற்சாலை களிலிருந்துதான் வாங்கவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சிவில் சப்ளைஸ் துறையும் கூட்டுறவுத் தொழிற்சாலைகளிலிருந்து தேயிலைத் தூளை வாங்கி மக்களுக்கு விநியோகம் செய்யலாம் என்ற கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. ம. சின்னசாமி தலைமை)

தற்போது ஒரு கிலோ பச்சைத் தேயிலைக்கு சிறு விவ சாயிகளுக்கு ரூ. 4.50 முதல் ரூ. 5 வரைதான் கிடைக்கிறது. இது மிகவும் குறைவான தொகையாகும். அரசு சப்போர்ட் பிரைஸ் ஆக ஒரு கிலோ பச்சைத் தேயிலைக்கு ரூ. 7 முதல் ரூ. 8 வரை கொடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

பிற்பகல் 5-45

மேலும் ரஷ்யா, ஃபிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகளுக்கு கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் உற்பத்தி யாகும் தேயிலையையும் ஏற்றுமதி செய்ய வேண்டுகிறோம். தேயிலை ஏலத்தில், ‘டீ புரோக்கர்ஸ்’ அதிக அளவில் லாபம் சம்பாதிக்கிறார்கள். தேயிலை ஏலத்தில் ‘டீ புரோக்கர்ஸ்’ அதிக அளவுக்கு லாபம் சம்பாதிப்பதை தடுக்கும் அளவில் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன்’ தயவுசெய்து இந்த

ஏலத்தில் பங்கு கொண்டால், கண்டிப்பாக இதன் மூலமாக சிறு விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும் என்ற கருத்தை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூட்டுறவுத் தேர்தல் நடத்தினால், அந்த தேர்தல் மூலமாக இந்தத் துறை விவசாயிகள் நன்மையடைய வாய்ப்புண்டு. தொழிலாளிகளும் முன்னேற வாய்ப்புண்டு.

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி பேரூராட்சிக்குள் ஒரு தேயிலை தொழிற்சாலையும், குன்னூர் வட்டம், 'கேத்தி'யில் ஒரு தேயிலை தொழிற்சாலையும், ஊட்டி தொட்டபேட்டாவினுடைய பஞ்சாயத்துக்குள் ஒரு தேயிலை தொழிற்சாலையும், கூடலூர் தொகுதியைச் சேர்ந்த தும்பநட்டியில் ஒன்றும், எப்பநாட்டியில் ஒன்றும் புதிய தேயிலை தொழிற்சாலைகள் அமைத்துத் தரவேண்டுகிறோம். காரணம் என்னவென்றால் இதுவரை நீலகிரி மாவட்டத்தில் நாங்கள் கிழங்கு விவசாயம் செய்து, கிழங்கின் மூலமாக அதிக அளவிலே லாபம் சம்பாதிக்காமல் அதிக அளவிலே நோய் பரவி வந்ததனாலே, நீலகிரியினுடைய விவசாயிகள் எல்லாம் இந்த தேயிலையைத் தான் மாற்று பயிராக அவர்கள் விவசாயம் செய்து வருகின்றார்கள். ஆகவே அதிக அளவில் இந்த தேயிலை தொழிற்சாலைகளே நீலகிரி மாவட்டத்திற்குத் தேவைப்படுகிறது. விஷேச சலுகையாக இந்த மாவட்டத்தை கவனித்து மேற்கூறிய 5 தேயிலை தொழிற்சாலைகளையும் அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மீன் துறையைப் பற்றி ஒரிரண்டு வார்த்தைகளை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உலகப் பிரசித்திப் பெற்ற டிரௌட் பிஷ் என்பது நீலகிரி மாவட்டத்தில் அவலாஞ்சி என்ற இடத்தில் அதிக அளவு உற்பத்தி செய்ய வாய்ப்பு உள்ளது. இந்த ரக மீன்களை அதிக அளவில் உற்பத்தி செய்ய அரசு முன் வரவேண்டும். இந்த மீன் வகைக்கு மட்டிலும் இந்த மீனின் வளர்ச்சி பற்றி ஆராய்ச்சி நடத்தி இந்த மீன் வகையை அபிவிருத்தி செய்ய, எவ்வாறு வழிவகை செய்யவேண்டும் என்பதற்காக ஒரு ஆய்வு கூடத்தை நீலகிரியில் அமைத்துத் தந்தால் இந்த ஆய்வுக் கூடத்தின் மூலம் இந்தமாதிரி உலகப் பிரசித்தி பெற்ற 'டிரௌட் பிஷ்'-ஐ ஏற்றுமதி செய்து அதிக அளவுக்கு அந்நிய செலாவணியைப் பெற வாய்ப்புண்டு என்ற கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசின் சலுகைகள் எல்லாம் மீனவர்களுக்கு சரியான முறையில் போய்ச் சேரவேண்டுமென்று வேண்டுகிறேன். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர அரசு விஷேசமான சலுகைகளை இந்த மீன் துறையில்



இருக்கும் மீனவர்களுக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டு, இந்த சந்தர்ப்பத்தை கொடுத்த நமது துணைத் தலைவர் அவர்களுக்கும், நல்ல உள்ளங்களுக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன். ஜெய் ஹிந்த்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். ஜெயக்குமார். இருக்கையில் இல்லை. திரு. குமரி அனந்தன் அவர்கள்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, மீனவர் பெருமக்களைப் பற்றிய கவலையோடு இங்கு இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள், நமது கடற்கரையிலே இயற்கையினுடைய சீற்றங்களுக்கு மத்தியிலேகூட வாழ்ந்துகொண்டிருக்கின்ற மக்களுக்கு மேலும் எவ்வளவு சலுகைகளை செய்யமுடியுமோ அத்தனை சலுகைகளையும் செய்வதற்கு முயலுவதையும் மேலும் முயலவேண்டும் என்று சொல்கின்ற எங்கள் கோரிக்கையினையும் இந்த சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

டீசல் மானிய விலையிலே கொடுப்பதைப் பற்றி இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, மண்ணெண்ணையும் மானிய விலையிலே அவர்களுக்குக் கொடுக்கப்படுவதாக அறிகிறேன். பல இடங்களிலே அது தாராளமாக ஆக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை நான் இங்கே வைக்கிறேன்.

கடற்கரையிலே அமைந்திருக்கின்ற தொழிற்சாலைகள் தங்களுடைய தொழிற்சாலையிலே வெளியேறுகின்ற கழிவு நீரையெல்லாம் இந்த மீனவ குடியிருப்பு பகுதியிலே விடுவதால், அந்த பகுதியிலே இருக்கின்ற மீன்கள் செத்துவிடுகின்றன என்றும், அந்த பகுதியிலே மீண்டும் மீன் உற்பத்தியாவது மிகவும் பாதிக்கப்படுகிறது என்றும் மீனவ சகோதரர்கள் கூறுகிறார்கள், அது தடுத்து நிறுத்தப்பட்டாலன்றி. சுற்றுப்புற சூழ்நிலை கெடுவதை தடுக்கமுடியாது. இந்த மீனவ மக்கள் பாதிக்கப்படுவதை தடுக்கமுடியாது என்ற காரணத்திற்காக தொழிற்சாலைகளினுடைய கழிவுகள் அங்கே போய் சேராத அளவுக்கு அவைகள் டிரீட்மெண்ட் செய்யப்படவேண்டும் என்ற அளவுக்கு இந்த அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று நான் வேண்டுகிறேன்.

பிற்பகல் 5-50

அதோடுகூட ஒவ்வொரு இடங்களிலும் எந்தெந்த அளவுக்கு மீன் வளர்ப்பிலே சிறப்பாக முன்னேறியிருக்கிறார்கள் என்பதை நாம் பார்த்து அதற்கு தகுந்தவாறு இங்கேயும் செயல்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். மத்திய மாநில அரசுகளுடைய பொறுப்பு பெரியதாக இருக்கிறது. அண்மையிலே கூட பத்திரிகையிலே படிக்கின்றபோது Association of South - East Asian Nations என்று சொல்லுகின்ற 'ஏசியன்' அமைப்பின் அடிப்படையிலே பிலிப்பைன்சில் இருக்கிற 'முனோஸ்' என்று சொல்லுகின்ற இடத்தில் ஒரு மீன் வர்க்கத்தை இப்போது கண்டுபிடித்திருக்கின்றார்கள். அது வேறு ஒன்றுமில்லை. தில்பியா என்று சொல்லுகின்ற மீன் தான் அது, ஆனால் அதை 'சூப்பர் தில்பியா' என்று சொல்லுகிறார்கள். ஏன் என்றால் இதுவரை அந்த மீன்கள் முழு வளர்ச்சி பெற வேண்டுமென்று சொன்னால் 110 நாட்கள் வேண்டும், ஆனால் இப்போது 75 நாட்களிலேயே அவை முழு வளர்ச்சி பெறுகின்ற அளவுக்கு ஆராய்ச்சியில் வெற்றிப் பெற்றிருக்கின்றார்கள். 75 நாளிலேயே அவை முழு வளர்ச்சி பெறுவதோடு ஏற்கனவே அந்த மீனுடைய கனம் எவ்வளவு இருக்குமோ அதை விட 3 மடங்கு பெரிதாக அந்த மீன் வளர்வதாக இப்போது கண்டுபிடித்து ஒரு 'புரோட்டீன் ரெவல்யூசன்' வரப்போகிறது. புரோட்டீன் புரட்சியே வரப் போகிறது என்று சொல்கிறார்கள், அப்படிப்பட்ட புதிய இன மீன்களை எல்லாம் இந்தப் பக்கம், நமது தமிழக மக்களுக்கும் கொண்டு வருகின்ற அளவுக்கு. மீனவர்களுக்கு கிடைக்கின்ற அளவுக்கு என்று மட்டும் நான் சொல்லவில்லை. ஏன் என்றால் அது மீனவர்களுக்கு வருகின்றபோது அவர்களுடைய வாழ்க்கைக்கு மட்டுமல்லாது மற்றவர்களுக்கு நம்மைப் போன்றவர்களுக்கும் புரோட்டீன் கிடைக்கின்ற அளவுக்கு, வசதியை செய்கின்ற காரணத்தினாலே மீனவர்களுக்கு அந்த உதவியினை, புதிய விஞ்ஞான வளர்ச்சியிலே கிடைக்கின்ற பலன்களை எல்லாம் கொண்டு வந்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தேயிலை தொழிலைப் பற்றி இங்கே செய்திகள் வருகின்றன. நம்முடைய மரியாதைக்குரிய காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திரு. ராஜு அவர்கள் கூட இங்கே அதைப் பற்றி பேசினார்கள். தேயிலையிலே பலவிதமான மூலிகைப் பொருள்களை எல்லாம் சேர்த்து புதுவிதமான தேயிலைகளை எல்லாம் வெளிநாட்டிலே தயாரிக்கிறார்கள். அண்மையிலே லண்டனில் போய் உட்கார்ந்து இருந்தபொழுது எனது நண்பர் ஒருவர் 'மின் டீ' சாப்பிடுகிறீர்களா என்று கேட்ட உடனே நான் ஆச்சரியப்பட்டு போனேன். 'மின் டீ'யா என்றேன். ஆமாம் எங்களுடைய தோட்டத்திலேயே வளர்கிறது என்று சொன்னார். என்ன என்று பார்ப்போம் என்று கீழே இறங்கி



போனபோது, அது வேறு ஒன்றும் இல்லை. புதினா செடி, புதினாவை தேயிலையிலே போட்டு கொதிக்க வைத்து 'மின் டீ' என்று கொடுத்து அங்கே எல்லாம் அதை சுவையாக சாப்பிட வைக்கிறார்கள். அதைப்போல நம்முடைய நாட்டிலே எத்தனையோ மூலிகைகள் நமக்கு தேவைப்படுபவை, நல்ல மணம் தருபவைகள் எல்லாம் இருக்கும். அவைகளையும் சேர்த்து செய்கின்ற அளவுக்கு நம்முடைய தோட்டக் கலை ஆராய்ச்சி செய்து நல்லமுறையிலே முன்னேற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்ற செய்திகளை எல்லாம் அதிகமாக இங்கே எல்லோரும் சொல்லியிருக்கிற காரணத்தினால் முக்கியமாக நான் கதர், அதற்கு அடுத்தாற்போல் பனைத் தொழில் இந்த இரண்டிலும் கொஞ்சம் கவனம் செலுத்தலாம் என்று நான் கருதுகிறேன். அதற்கு இங்கே அனுமதிக்கப்படுவேன் என்ற நம்பிக்கையிலே இந்த செய்தியினை சொல்கிறேன்.

'கதர்' என்று சொன்னாலே 'கௌரவம்' என்று தான் பொருள். அண்ணல் காந்திமகான் ஒரு தடவை சௌகத் அலி மொகமது அலி என்று சொல்லுகின்ற புகழ்பெற்ற அலி சகோதரர்களுடைய வீட்டுக்குச் சென்றபோது அவர்களுடைய தாயார் சகிதமாக அவரை வரவேற்கின்ற நேரத்தில் கையால் நூற்று நெய்த ஒரு துணியினைக் கொடுத்து இதனை நீங்கள் 'கதர்' ஆக ஏற்றுக்கொள்ள வேண்டும். 'கௌரவம்' ஆக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்ன நேரத்தில் அந்த 'கதர்' என்ற சொல் அவருடைய காதிலே விழுந்து, அது இந்த நாட்டிலே இருக்கின்ற அந்த சுதேசிப் பொருள்கள் பஞ்சிலே இருந்து கையால் நூற்கின்ற நூலிலே செய்யப்படுகின்ற அந்தத் துணிக்கு 'கதர்' என்ற பெயர் வந்ததற்குக் காரணம். எனவே அப்படி ஒரு கௌரவமான துணி என்று சொல்கின்ற காரணத்தினால் அந்தத் துணியை நம்முடைய நாட்டிலே இருக்கின்ற மக்கள் சுதந்திரப் போராட்டக் காலத்திலே ஒரு ஆயுதமாகவே பயன்படுத்தினார்கள். மகாத்மா காந்தி சர்க்காவை ஆயுதமாக எடுத்துக்கொண்டார்கள் என்று சொன்னால், அகிம்சை வாழ்வில் அதை ஆயுதமாக எடுத்துக் கொண்டார்கள் என்று சொல்வதற்கு பதிலாக அதை ஒரு கருவியாக எடுத்துக் கொண்டார்கள். அதை கருவியாக கொண்டதிலே மிகப் பெரிய வெற்றி என்ன என்றால் அந்த சர்க்கா என்று சொல்வதற்கும் விஷ்ணு கையிலே இருக்கின்ற சக்கரம் என்று சொல்வதற்கும் இருக்கின்ற வேறுபாடு, விஷ்ணு சக்கரத்தை எடுத்தால் எதிரில் இருக்கின்றவர்கள் கொல்லப்பட்டார்கள் அதன்மூலம் வெல்லப்பட்டார்கள். காந்திமகான் சர்க்காவை எடுத்தார், எதிரிலே இருந்தவர்கள் வெல்லப்பட்டார்களே தவிர கொல்லப்படவில்லை. அந்த அளவுக்கு சர்க்காவுக்கு இந்த நாட்டில் ஒரு பெருமை உண்டு, அதனாலே நம்முடைய போராட்டம் மிக அமைதியான முறையிலே, உலகோர் வியக்கின்ற வகையிலே இருந்தது. ஆனால் இந்த

சர்க்காவுக்கும், அதிலிருந்து உற்பத்தி செய்துகொண்டிருக்கின்ற அந்த நூலுக்கும் அதிலிருந்து கிடைக்கின்ற அந்த கதருக்கும் இன்று எந்தெந்த வகையிலே இந்த அரசாங்கம் நன்மை செய்ய முயல்கிறது என்பதைத் நான் இந்த கொள்கை விளக்கம் இங்கே தெரிவிக்கின்றது, ஒன்று நான் இங்கே சொல்ல வேண்டும். மத்திய அரசாங்கத்திடம் மாநில அரசாங்கத்தோடு இங்கு இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களும் நான் உட்பட சில கோரிக்கைகளை வைக்க வேண்டியிருக்கிறது, என்ன காரணம் என்று சொன்னால் காதி கமிஷனுக்குக் கொடுத்து வந்த பணத்திலே ஒரு பகுதியை அவர்கள் இந்தத் தடவை குறைத்து விட்டார்கள் காதி கமிஷனுச்குக் கொடுத்துவந்த பணம் ஒரு பகுதி குறைகிறது என்று சொன்னால் ஏறத்தாழ 50 கோடி ரூபாய் அளவுக்கு குறைகிறது என்று சொன்னால் நாடெங்கும் இருக்கிற அந்தக் கதர் நெசவாளர்கள் பாதிக்கப்படுவார்கள், அந்தக் கதர் நெசவாளர்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்று சொன்னால் இந்த மாநில அரசாங்கமும் நாம் ஒட்டுமொத்தமாகவும் அந்த ஏழை எளிய மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிற அந்தக்கதர் துறைக்கு இந்த வெட்டு கூடாது என்று சொல்லி, மத்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்து, அதைப் பெற வேண்டுமென்று நான் விரும்புகின்றேன்.

பிற்பகல் 5-55

இந்தக் கதர் துறையிலே மிக முக்கியமான செய்தியாக நான் சொல்ல விரும்புவது எங்கெங்கு வறட்சி ஏற்படுகிறதோ அந்தந்த இடங்களிலே உடனே தொழில் கொடுப்பதற்கு ஒரு வாய்ப்பு இந்தக் கதர் துறையிலே இருக்கிறது, 'இன்ஸ்டன்ட் எம்பிளாய்மென்ட்' உடனடி வேலைவாய்ப்பு என்று சொல்வது கதர் துறையிலேதான் இருக்கிறது. உதாரணமாக இப்போது ஒரு மாவட்டம் வறட்சிப் பிரதேசம் என்று அறிவிக்கப்படுகிறது என்று சொன்னால் ஆண்களுக்கு குளம் வெட்டுவது போன்ற வேலைகள் எல்லாம் கொடுக்கிறோம்; சாலைகள் போடுவது போன்ற வேலைகளைக் கொடுக்கிறோம். பெண்களுக்கு ஒரு இராட்டினத்தைக் கொண்டு கொடுத்துவிட்டால் அவர்கள் நூற்க ஆரம்பித்துவிடுகிறார்கள். ஒரு நாளைக்கு 15 ரூபாயிலிருந்து 20 ரூபாய் வரையில் கிடைத்துவிடுகிறது. எனவே உடனடி வேலைவாய்ப்பு என்று சொல்கிற அளவுக்கு இராட்டினம் இப்போதும் பயன்படுகிறது.

இந்த இராட்டினத்தைக் கூட உடனே நாம் செய்ய வேண்டியதில்லை. ஏனென்று சொன்னால் நம்முடைய கதர் நிறுவனங்களிலே ஏராளமாக இராட்டினங்கள் இருக்கின்றன. அவற்றிலே சில சீரான வகையிலே இயங்காமல் அங்கே ரிப்பேராகிக் கிடந்தால் அவைகளை சரிசெய்து வறட்சிப் பகுதிகளிலே உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்



கொள்கிறேன். ஏனென்று சொன்னால் ஒரு மனிதனுக்கு இப்போது கணக்கு போட்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 50 இலட்சம் பேர்கள் இந்தியாவிலே இந்தக் கதரை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். கணக்கு பார்க்கிறபோது 1666 ரூபாயிலே ஒருவருக்கு வேலை கிடைத்துவிடுகிறது. 1666 ரூபாயிலே ஒருவருக்கு வேலை கிடைக்கிறது என்றால் இது ஒரு சாதாரண காரியம் அல்ல. ஒரு கையடக்கத் தொழிற்சாலை போலவே இருக்கிறது. காலடியிலே கிடக்கிற ஒரு கனி போலவே அவர்களுக்கு சாப்பாடு போடுகிற வாய்ப்பு இருந்துகொண்டிருக்கிறது. இந்தத் தொழிலை மேலும் மேலும் வளப்படுத்துவதன் மூலம் தான் 'அன் எம்பிளாய்மென்ட்' என்று சொல்கிற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவற்கு நமக்கு வழி கிடைக்கும். ஆனால் இதுவரை நாள்தோறும் 15 சதவீதம் என்று சொல்லிக் கொண்டிருந்த தள்ளுபடி இப்போது 10 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டுள்ளது மத்திய அரசாங்கத்தாலே. அதையும் நாம் எல்லோருமாக கோரிக்கை வைத்து, பழையபடி 15 சதவீதம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள வேண்டுமென்று இங்கே முதலிலே நான் கருத்தைச் சொன்னேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதைப்போல 90 நாட்கள் விசேஷ கால தள்ளுபடி என்று சொல்லுகின்ற அளவுக்கு தள்ளுபடி கொடுக்கிறோம். அதிலே 5 சதவீதம் குறைந்துவிடும். எனவே இது குறையாமல் இருக்க வேண்டுமென்று சொன்னால் மத்திய அரசை நாம் கேட்கவேண்டுமென்று சொல்வதற்கு உரிய காரணம் இதுதான்.

இன்னொரு முக்கியமான கருத்து இப்போது ரம்சானுக்கு சிறப்புத் தள்ளுபடி கொடுக்கப்படுகிறது. தீபாவளிக்கு சிறப்புத் தள்ளுபடி கொடுக்கப்படுகிறது. பொங்கலுக்கு சிறப்புத் தள்ளுபடி கொடுக்கப்படுகிறது. அதைப்போல தமிழ்ப் புத்தாண்டு தினத்திற்கும் சுதந்திர தினத்திற்கும், டாக்டர் அம்பேத்கார் பிறந்த தினத்திற்கும் இந்தத் தள்ளுபடியை, சிறப்புத் தள்ளுபடியைக் கொடுக்க வேண்டும்; கதர் இலாகாவிலே கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு செய்தி. இதோடு தொடர்புடையதாக இருக்கிற காரணத்தாலே சொல்கிறேன். சர்வோதயம் கதரிலேதான் தொழிலை செய்கிறது. அவர்கள் ஒரு தனி அமைப்பாக வைத்திருக்கிறார்கள். ஆனால் இந்த சர்வோதயத்திலே நூலை வாங்கி, துணியை நெய்து, துணியைக்கொண்டு கொடுக்கின்றவர்களுக்கும் கதர் போர்டு என்று சொல்லுகின்ற நமது கதர் இலாகாவிலே நூலை வாங்கி துணி நெய்துகொண்டு கொடுக்கிற நெசவாளர்களுக்கும் இருக்கிற வேறுபாடு என்னவென்றால் சர்வோதயத்திலே இருக்கிறவர்களுக்கு அவர்கள் 5 ஆண்டு

வேலை செய்துவிடுகிறார்கள் என்று சொன்னால் அவர்களுக்கு பிறகு ஓய்வூதியம் கொடுக்கப்படுகிறது. வருஷத்திற்கு 300 ரூபாய் வீதம் ஓய்வூதியம் கொடுக்கப்படுகிறது. கதர் துறையிலே, நமது அரசாங்க கதர் துறையிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு அது கொடுக்கப்படுவதில்லை. அது கொடுக்கப்பட வேண்டுமென்பது ஒரு கோரிக்கை.

இரண்டாவது செய்தி. வீடு கட்டுவதற்கு என்று பல ஆண்டுகளுக்கு முன்னாலே 5,000 ரூபாய் கடனாகக் கொடுத்தார்கள். கதர் இலாகாவிலே வேலை செய்துகொண்டிருக்கிற கதர் நெசவாளர்களுக்கு இந்த 5,000 ரூபாய் கொடுத்ததிலே ஆயிரம் ரூபாய் மானியம் ; 4,000 ரூபாய் கடன். கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். பல நெசவாளர் குடும்பங்கள் அதைத் திருப்பிக் கொடுக்கவில்லை. இன்று வட்டியோடு சேர்த்துக் கணக்குப் பார்த்தால் 10,000 ரூபாய், 15,000 ரூபாய் என்ற அளவுக்கு வருகிற காரணத்தாலே அவர்கள் ஒரு கோரிக்கை மனு வைத்திருக்கிறார்கள். வட்டியையாவது நீங்கள் தள்ளுபடி செய்யுங்கள் ; நாங்கள் கட்டாமல் வைத்திருக்கிற முதலை கட்டுகிறோம் என்று சொல்கிறார்கள். மொத்தமாகக் கடனை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று அவர்கள் கேட்கவில்லை ; அந்த அமைப்பு கேட்கவில்லை. என்னிடம் கையெழுத்துப் போட்டு கடிதம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். மொத்தமாகத் தள்ளுபடி செய்ய வேண்டாம் ; இந்த வட்டியை தள்ளுபடி செய்யுங்கள் ; நாங்கள் முதலை எப்படியாவது கட்டுகிறோம் என்று சொல்லுகிறார்கள். எனவே, கதர் இலாகாவிலே அதை பரிசீலனை செய்து பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கதர் துறை பலன் பெறப்போகிறது என்பது இங்கே முதலமைச்சர் அவர்கள் வருகிற நம்பிக்கையிலே எனக்குத் தெரிந்துவிட்டது. ஆகவே, இந்த வட்டியை மட்டும் தள்ளுபடி என்ற அளவுக்காவது செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்த செய்தியாகச் சொல்ல விரும்புவது, கைத்தறி நெசவாளர்களுக்கு, அவர்கள் வேலை செய்துகொண்டிருக்கிற நேரத்திலே இறந்துவிட்டால் 15,000 ரூபாய் கொடுப்பது என்று நமது அரசு முடிவு எடுத்திருக்கிறது. கைத்தறி, கதர் தறி என்று இதிலே வேறுபாடு பார்க்க வேண்டாம். இரண்டு நெசவாளர்களும் ஒரே தொழிலைத்தான் ஏறத்தாழ செய்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் கைத்தறியைவிட கதர் தறியிலே வேலை செய்து கொண்டிருக்கிறவர்கள் மிகக் கடினமாக வேலை செய்கிறார்கள். காரணம் கைத்தறியிலே போடுவது மில்லிலே இருந்து கொண்டுவருகிற நூல்.



பிற்பகல் 6-0[0]

நெய்வதை மட்டும் கையாலே நெய்கிறார்கள். நூல், மில்லிலே இருந்து வருகிறது. ஆனால் கதர் என்று சொல்லுகிறபோது, கையாலே நூற்று, கையாலே நெய்கின்ற காரணத்தாலே அது அவ்வளவு உறுதியாக இருக்காமல், அடிக்கடி அறுந்து போய்விடுகிறது. அதனாலேதான் இழை நீக்கி நூல் நெருடும் நெசவாளி என்று சொல்லுவார்கள். அந்தப் பாவோடும் நெசவாளி நாள்தோறும் பசை தடவிக் கொண்டு வருகின்ற அந்தப் பாவிலே இருந்து வருகின்ற நூலை எடுத்துச் செய்கின்றபோது, அடிக்கடி அறுந்து போய்விடுகிறது. குடும்பமே இதிலே ஈடுபட வேண்டும். இல்லையென்றால் அவர் தறிக்கடையிலே இருந்து எழுந்துபோய் நெருடிவிட வேண்டும். என்னுடைய வீட்டிலே காந்திமகானுடைய திட்டத்தின்படி என்னுடைய தந்தையார் 17 கதர் தறிகளை வைத்திருந்த காரணத்தாலே, இந்த நூல் நெருடுகிற விஷயம், கதர் நெய்கின்ற விஷயம் இவைகள் எல்லாம் கொஞ்சம் தெரிகிற காரணத்தாலே இதை நான் சொல்கிறேன். எனவே கைத்தறியைவிட இது கடினமானது. ஆக கைத்தறி நெசவாளிக்கு இறக்கின்ற நேரத்தில் 15,000 ரூபாய் கொடுப்பது என்று திட்டம் போட்டு, அரசாங்கம் அதைக் கொடுப்பது வரவேற்கத்தக்கது. அதே சலுகை — அவர்களுக்கு என்ன நிபந்தனை போடுகிறீர்களோ, எவ்வளவு பணம் சந்தாவாக வசூலிக்கிறீர்களோ அதனை இவர்களிடமும் வசூலித்துக்கொள்ளலாம் — அதே தொகை, 15,000 ரூபாய் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இவர்களுக்கும் தர வேண்டும். கைத்தறி நெசவாளிக்கும், கதர் நெசவாளிக்கும் இதிலே வேறுபாடு காட்டக் கூடாது என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல் மருத்துவ மனை, சிறைச்சாலை, அரசு அலுவலகங்கள் இங்கேயெல்லாம் கதர் துணியை உடுப்பதற்கென்று ஒரு பிரிவினர் இருக்கிறார்கள். பழங்காலத்திலிருந்து சிறையிலே எல்லோருக்கும் கதர் துணி கொடுக்க வேண்டும், மருத்துவ மனையிலே எல்லோருக்கும் கதர் துணி கொடுக்க வேண்டும் என்று எல்லாம் இருக்கிறது. அப்படி தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறதா என்று பார்க்க வேண்டும். தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறதா, அதை காதி போர்டால் கொடுக்க முடிகிறதா என்பதை நான் கண்காணிக்க வேண்டுமென்றுதான் சொல்லுகிறேன். ஏனென்றால் இதிலே முழு விவரங்கள் என்னிடத்தில் இல்லை. அது தொடர்ந்து கொடுக்கப்படுகிறதா என்று பார்க்க வேண்டுமென்றுதான் சொல்லுகிறேன்.

அடுத்தாற்போல் கதர் துறையிலே ஒரு விசேஷமான செய்தி வருகிறது. கைக்குத்தல் அரிசி. கைக்குத்தல் அரிசி என்னும்போது அது உணவைப் பொறுத்து இருந்தாலும்கூட, கதர் இலாக்காவிலே வருகிறது. இன்று கதர் கடைகளிலே போய்க்

கேட்டால்கூட, கைத்குத்தல் அரிசி சில வேளைகளில் கிடைக்கிறது. சில வேளைகளில் கிடைக்கவில்லை. ஆனால் கைக்குத்தல் அரிசியைப் பொறுத்தவரையில் ஒரு செய்தியை நான் சொல்ல வேண்டும். சாதாரணமாக 100 கிலோ நெல்லைக் கொடுத்தால் 65 கிலோவிலிருந்து 66 கிலோவரை அரிசி கிடைக்கிறது. எந்த அரிசி? தவிடு நீக்கப்பட்டு, பளபள என்று முனை முறிந்து மல்லிகைப்பூ போல சாதத்தைத் தருகின்ற அரிசி அது. 100 கிலோவுக்கு 65, 66 கிலோ கிடைக்கிறது. கைக்குத்தல் அரிசி என்று, தவிடு நீக்காமல், முளைக்கின்ற அத்தனை சக்தியையும் தன்னகத்தே அடக்கி வைத்திருக்கிற முனை முறியாமல், உமியை மட்டும் நீக்கி அந்த அரிசியைக் கொடுப்பதாக இருந்தால் 80 கிலோவிற்கு மேலே அரிசி கிடைக்கிறது. 100 கிலோவிற்த 80 கிலோ அரிசி கிடைக்கிறதென்றால் ஏறத்தாழ ஒவ்வொரு 100 கிலோவிற்கும் 15 கிலோ அதிகமாகக் கிடைக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள அத்தனை பேரும் தவிடு நீக்காத அரிசியை சாப்பிடுவோமானால், எவ்வளவு தூரம் குறைந்த அளவு அரிசி போதுமென்பது ஒரு புறமிருக்க, ஏதாவது ஒரு நாள் — மற்றவர்கள் எல்லாம் தவிட்டோடு கூடிய அரிசியை சாப்பிடுவது கேவலம் என்று நினைக்கிறார்கள். கேவலம் என்று நான் நினைக்கவில்லை. அது மல்லிகைப்பூ போல இருக்கிறதென்றால் இது மகிழம்பூ போல் இருக்கும் தவிட்டோடு இருப்பது. அவ்வளவுதான். மகிழ் சிறியதாயினும் அதில் இருக்கின்ற மணம் பெரியது என்று சொல்கிற அளவுக்கு சிறப்பாக இருக்கும். நோய் வராது. நோய்த் தடுப்புச் சக்திகள் எல்லாம் அதிலே இருக்கிறது. உடனடியாக எல்லோரும் சாப்பிட வேண்டுமென்று சொல்வதற்கு நமக்கு சக்தியில்லை என்று சொன்னாலும், நமது சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருமாவது வாரத்திலே இன்ன நாள் நாங்கள் தவிடு நீக்காத அரிசியைத்தான் சாப்பிடுவோம் என்று ஒரு முடிவு செய்தால், இங்கே இருக்கிற உணவு விடுதிகள் உட்பட, நாங்கள் எல்லாம் அப்படித்தான் சாப்பிடுவோம். வீடுகளிலும் அப்படித்தான் சாப்பிடுவோம் திடீரென்று யாராவது சோதனை செய்தால்கூட அன்று தவிடு நீக்காத அரிசிதான் எங்களுடைய வீடுகளிலே இருக்கும் என்று சொல்லும் அளவுக்கு ஒரு நாள் நாம் முன்னுதாரணமாக இருப்போமேயானால், நாம் முன்னுதாரணமாக இருந்துகொண்டு தமிழகத்திலே இருக்கக்கூடிய உணவு விடுதிகள் அத்தனையிலும் ஏதாவது ஒரு குறிப்பிட்ட நாள் மலிவு உணவு என்று சொல்லும் மலிவுச் சாப்பாடு இவ்வளவு விலைக்கு நீங்கள் கொடுக்க வேண்டுமென்றும், அது தவிடு நீக்காத அரிசியாகத்தான் இருக்க வேண்டுமென்று படிப்படியாக வந்து, அதற்குப் பிறகு சத்துணவுக் கூடங்களிலும் அதைக் கொஞ்சம் கொண்டுவர ஆரம்பித்து, தவிடு நீக்காத அரிசியைக் கொண்டு வந்தால் சத்தும் கிடைக்கும், நமக்கு அதிகமான அரிசியும் தேவைப்படாது. மத்திய அரசிடமிருந்து இவ்வளவு அரிசி வாங்குவதற்குப் பதிலாக குறைவாக வாங்கக் கூடிய சூழ்நிலை இருக்கும் என்பதால் இந்தக் கைக்குத்தல் அரிசி



பற்றிச் சொல்கிறேன். நான் பாத யாத்திரை சென்றபோது, திருமழிசையிலே கைக்குத்தல் அரிசிக்கூடம் ஒன்றைப் பார்த்தேன். அது நிறைய பேருக்கு வேலை வாய்ப்பு கொடுக்கிறது. நேற்றுகூட அங்கே தொடர்பு கொண்டு கேட்டேன். 150 மூட்டை ஒரு மாதத்திற்குக் கைக்குத்தல் அரிசி செய்கிறார்கள். அப்படி வேறு எங்கே இருக்கிறது என்ற விவரம் என் கையிலே இல்லை. அரசாங்கம் நினைத்தால் அந்த விவரங்களைப் பெற்றுக் கொண்டு வரலாம் என்பதற்காகச் சொல்கிறேன்.

அடுத்து எல்லா இடங்களிலும் கிராமத் தொழில்களை முன்னுக்குக் கொண்டு வர வேண்டுமென்று சொல்லுகிறார்கள். கிராமத் தொழில்களை முன்னுக்குக் கொண்டு வர வேண்டுமென்பதிலே இரண்டு இருக்கிறது. கிராமங்களிலே கிடைக்கும் வேப்பங் கொட்டைகளிலிருந்து 'வெப்' என்ற சோப் செய்கிறார்கள். கிராமத்திலே உள்ள பெண்களை வைத்துக் கொண்டு ஊதுவத்தி செய்கிறார்கள். அந்த ஊதுவத்தியைத்தான் நாம் வாங்குகிறோமா? கதர் கடைகளிலே உள்ள ஊதுவத்தியைத்தான் வாங்குகிறோமா என்பதைப் பார்க்க வேண்டும்.

பிற்பகல் 6-05

சோப்பை எடுத்துக் கொள்ளுங்கள். தொலைக்காட்சியில் அதிகமாக விளமபரமாக வந்து கொண்டிருக்கிறதே அதைத்தான் நாம் வாங்குகிறோம். அழகு தரும் சோப் என்று நினைத்துக் கொள்கிறோம். அழகு இருந்தால் தான் அது சரியாக இருக்குமே தவிர சோப்பாலேயே அழகு வந்துவிடும் என்று நான் நினைக்கவில்லை. ஆனாலும் தொலைக் காட்சியைப் பார்க்கிறபோது இந்த சோப்பைப் போட்டால் அழகு வந்து விடும் என்று நம்புகிற அளவுக்கு விளம்பரங்கள் கொடுக்கிறார்கள். அந்த அளவுக்குக் கடைகளில் வாங்குகின்ற பொருட்கள் இருக்குமா? 'நீம்' என்று சொல்லப்படுகின்ற வேப்பெண்ணைய் சோப் கிடைக்கின்றன. இங்கே பேசிய ஒரு மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். கதர்த் துணி சீக்கிரம் கிழிந்து விடுகிறது என்று. உண்மைதான். அது கிழியாத அளவுக்கு விஞ்ஞான ரீதியில் ஏதாவது சிறப்புறச் செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும். ஆனாலும் கிழிந்தாலும் விலை உயர்ந்தாலும் வேப்பெண்ணெய் சோப்புக்கு மற்ற சோப்பின் விலை சமமாக இல்லையென்று சொன்னாலும் அதைத்தான் வாங்கவேண்டுமென்று ஒரு முடிவுக்கு வருவதற்குக் காரணம் அது பலருக்கு வேலை வாய்ப்பைக் கொடுக்கிறது. பலருக்கு சாப்பாடு போடுகிறது. காந்தி மகான் தாம் போகின்ற இடங்களில் எல்லாம் எனக்கு மாலை போடாதீர்கள், ஒரு கதர் சிப்பத்தைக் கொடுங்கள் என்றார். ஏனென்றால் கதர் சிப்பம் ஒருவனுக்கு

சோறு போடுகிறது என்று சொல்வார். நாங்கள் எல்லாம் கூட்டங்களுக்குச் செல்கிறபோது, எங்களுக்குக் கதர்ச் சிப்பம் தான் போடுவார்கள். வீட்டுக்கு வந்தவுடன் எத்தனை சிப்பம் என்று பார்த்து அதைக் கடையில் கொடுத்தால் அதற்குரிய வேட்டி கொடுத்து விடுவார்கள். இப்போது அந்தப் பழக்கம் எல்லாம் போய்விட்டது. ஆளுயர மாலை போடுகின்ற காரணத்தாலே ஆள் உயராமலேயே போய்க் கொண்டிருக்கிறோம் என்பது தான் உண்மை. அதனாலே சொல்கிறேன். கதர்ச் சிப்பங்கள் எல்லாம் உண்மையிலேயே பயன்படுவதில்லை. எனவே விலை கூடினாலும் கூட, ஒரு தேசபக்தியோடு அந்தக் காரியத்தைச் செய்கிறேன். எப்படி இந்த அரசாங்கம் மாணவர்களுக்கு தேச பக்தியை ஊட்டுவதற்குக் கல்விக் கொள்கையில் திட்டங்கள் இருக்கின்றன என்று சொல்லுகிறதோ அதை எப்படி நான் பாராட்டுகிறேனோ, அதைப்போலே தேசபக்தியோடு இந்தக் கதர்த் துணிகளையெல்லாம் நம்மைப் போன்ற சமுதாயத் தொண்டர்கள் வாங்கியுடுத்த வேண்டும். ஏனென்றால் எத்தனையோ குழல் விளக்குகள் இப்போது வந்துவிட்டாலும், மின்னுகின்ற மின்சார விளக்குகள் எல்லாம் வந்து விட்டாலும், அந்த ஆண்டவனுடைய ஆலயத்தில் தொடர்ந்து எரிந்து கொண்டிருப்பது அகல் விளக்குகள்தான். அந்த அகல் விளக்குகளை மாற்றிவிட்டு நாம் அங்கே ஒரு குழல் விளக்கை வைத்து விடுவதில்லை. அதுபோல கதர் என்ற சுதேசிப் பொருளை நாமெல்லாம் பயன் படுத்த வேண்டும். அதற்கு வேண்டிய முயற்சியில் ஈடுபடவேண்டுமென்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசாங்கத்தின் மூலம் அதற்கான விளம்பரங்கள் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். எல்லோரும் பயன்படுத்துகின்ற அளவுக்கு திட்டங்களைத் தீட்டவேண்டுமென்று உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல நான் இங்கே சொல்ல விரும்புவது—பனை மரத்தைப் பற்றி. பனை மரத்தைப் பற்றி சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில்—எட்டரைக் கோடி பனை மரங்களில் ஐந்து கோடி பனை மரங்கள் தமிழ்நாட்டில்தான் இருக்கின்றன. சரியான புள்ளிவிவரம் என்னிடத்திலே இல்லை. ஏனென்றால் இரண்டு மூன்று புத்தகங்களைப் பார்த்தபோது, ஒன்றிலே சொல்கிறார்கள் பத்தரைக் கோடி பனை மரங்கள் என்றால் அதிலே தமிழ்நாட்டிலே மட்டும் எட்டரை கோடி மரங்கள் இருப்பதாக எட்டரைக் கோடி மரங்கள் இந்தியாவில் இருப்பதனால் தமிழ்நாட்டில் ஐந்தரைக் கோடி இருப்பதாகவும், சொல்கிறார்கள். எப்படியோ காடுகளிலே நிற்பவைகளை கணக்கிலே எடுத்துக்



கொள்ளவில்லை என்றாலும் கூட இந்தியாவில் அதிகமான பனை மரங்கள் இருக்கிற மாநிலம் நமது தமிழ் மாநிலம் தான். இந்தத் தமிழ் மாநிலத்திலேயிருந்து—நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே கூட கொடுத்திருக்கிறார்கள்—வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்து அன்னியச் செலாவணியைப் பெறுவது மட்டும் ஒரு கோடியே ஐம்பத்தைந்து லட்சம் ரூபாய் என்று இருக்கிறது. அன்னியச் செலாவணியை இது தருவதோடு நமது ஊரில் இருக்கிற பண்டங்கள் மூலம், பனைப் பொருட்கள் மூலம் நாம் பெற்றிருப்பது ரூ. 95 கோடி. இந்த ஆண்டு அதை ரூ. 100 கோடியாக ஆக்குவதற்கான முயற்சியில் இந்த அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது என்ற நல்லச் செய்தியை நாம் பார்க்கிறோம். ஆனால் புள்ளி விவரங்களையும் புத்தகங்களையும் பார்க்கிறபோது என்ன தோன்றுகிறதென்றால், ஏறக்குறைய 3 கோடி பனை மரங்கள் பயன்படாமல் நிற்கின்றன. கொஞ்சம் கூட பயன்படவில்லை. இந்த 3 கோடி பனை மரங்களும் பயன்படாமல் இருகின்றன என்றால் மீதமுள்ள பனை மரங்கள் எல்லாம் பயன் படுகிறதா என்றால் அதுவும் இல்லை. எட்டாத் தூரத்தில் பனை மரங்கள் இருக்கின்றன. எட்டுகின்ற தூரத்தில் நின்று பயன்படாமல் இருப்பது 3 கோடி. அப்படி பயன்படுகின்ற பனை மரங்கள் எவ்வளவு என்றால் வெறும் 70 இலட்சம் தான். ஆக எட்டாத தூரத்தில் இருக்கின்ற பனை மரங்களை விட எட்டுகின்ற தூரத்தில் இருக்கிற, பயன்படாமல் இருக்கிற 3 கோடி பனை மரங்களை கணக்கில் எடுத்துக் கொண்டால் ஒரு பனை மரம் ஆண்டு ஒன்றுக்கு நமக்கு குறைந்த பட்சம் ரூ. 140 வருமானமாய்த் தருகிறது.

பிற்பகல் 6–10

தாளசாத்திரம் என்ற ஒரு சாத்திரம் இருக்கிறது. தாளகாரம் என்று சொல்வார்கள். அந்த தாளசாத்திரம் என்ற நூலில் 801 பயன்கள் பனை மரத்திற்கு இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதனாலேயே அதை கற்பகத்தரு என்றும் சொல்கிறார்கள். அந்த 801 பயன்கள், அதிலிருக்கின்ற காரணத்தால் ரூ. 140 கிடைக்கிறது என்று சொன்னால்—இந்த எல்லா மரங்களையும் நாம் பயன்படுத்தினால் வருடத்திற்கு அதனால் மட்டுமே 420 கோடி ரூபாய் இந்த அரசாங்கத்திற்குக் கிடைக்கும். ஆம் 420 கோடி ரூபாய். பற்றாக்குறை என்ன, உபரி மாநிலமாகக் கூட இந்த தமிழகத்தின் அரசை நமது தமிழக அரசு நடத்த முடியும். நமது முதல்வர் அவர்கள் நடத்த முடியும் என்ற காரணத்திற்காக அதற்குரிய ஒரு ஆலோசனையாகக் கூட நான் இங்கே வைக்கிறேன். உங்களுடைய பார்வைக்கு வைக்கிறேன்.

இப்போது தென் மாவட்டங்களில் ஏழரை லட்சம் பேர்தானே மரம் ஏறுகிறார்கள்? மீதம் ஏன் ஏறவில்லை என்றார்கள். ஏறுவதற்கு ஆள் கிடைக்கவில்லை. 1841-வது ஆண்டிலே ஒரு

[திரு. குமரி அனந்தன்] [1992 ஏப்ரல் 20

கலெக்டர் சென்னையில் இருக்கிற கவர்னருக்கு கடிதம் எழுது
கிறார். பனை ஏறுவதற்கு போதுமான ஆட்கள் இல்லை என்று.
ஆகவே போதுமான ஆட்கள் ஏறுவதற்கு இல்லை. முன்பெல்
லாம் ஒரு இனத்தவர்கள் தான் ஏறிக் கொண்டிருந்தார்கள்.
இப்போது ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே ஏறுகிறார்
கள் என்று நினைக்க வேண்டாம். நாடார்கள் ஏறுகிறார்கள்.
அரிஜனங்கள் ஏறுகிறார்கள், தேவர்கள் ஏறுகிறார்கள், சேர்வைக்
காரர்கள் ஏறுகிறார்கள். மூப்பனார்கள் ஏறுகிறார்கள்—
ராஜுக்கள் ஏறுகிறார்கள்; நாயக்கர்கள் ஏறுகிறார்கள்; வன்னி
யர்கள் ஏறுகிறார்கள். இப்படிப் பட்டியலைப் பார்த்தால் ஒரு
பெரிய பட்டியலே வைத்திருக்கிறேன். இவர்கள் எல்லாம் பனை
ஏறுகிறார்கள். எனவே இத்தனை பேர் பனை ஏறுகிறார்கள்
என்றால், பனை ஏறுவதற்கு ஆட்கள் இல்லை. மேலே
ஏறினால் கரணம் தப்பினால் மரணம். இது தான் காரணம்.
எல்லாவற்றிற்கும் மிகப் பெரிய ஆபத்து இருக்கின்ற காரணத்
தால் அவன் மேலே கைகளை வைத்து. காலை வைத்து
மார்பை வைத்து மேலே ஊர்ந்து ஊர்ந்து மேலே போய்
தாவித் தாவி பனை மரத்திற்கு மேலே போய் கேள்விக்குறியாக
நின்று அவன் பாளையை சீவுகிறான். அவன் பாளையைச் சீவி
பதநீர் எடுக்கின்ற நேரத்தில் அவனுக்கு எத்தனையோ ஆபத்துக்கள்
இருக்கின்றன. ஒரு சின்ன உதாரணத்தை நான் சொல்லு
கிறேன். அறுபது அடி, எழுபது அடி உயரத்திற்குப் போய்க்
கொண்டிருக்கிற பனை மரத்திலே ஒரு பனை மரத் தொழிலாளி
இரண்டு முறை ஏறி இறங்க வேண்டும். சில வேளைகளில் மூன்று
முறை ஏறி இறங்க வேண்டும்: சில வேளைகளில் என்று
சொன்னேன். வேண்டுமானால் அதை விட்டுவிடுங்கள். சில
வேளைகளில் அப்படி ஏறுகிறான். ஆனால் இரண்டு தடவையாவது,
கண்டிப்பாக ஏறி இறங்கியாக வேண்டும். இரண்டு தடவை ஏன்
ஏறுகிறான். காலையிலே ஏறுகிற நேரத்திலே என்ன செய்கிறான்;
போய் அங்கே தேங்கி இருக்கின்ற, இரவு எல்லாம் சுரந்து,
சொட்டு, சொட்டாக அந்தப் பாளையிலிருந்து வீழ்கின்ற சுரா
என்று சொல்லுகிறோமோ, நீரா என்று சொல்லுகிறோமே,
அந்தப் பதப்படுத்தப்பட்ட நீரை அந்த பதநீரை கலயத்திலே
இருந்து எடுத்து ஊற்றிக்கொண்டு மீண்டும் கலயத்தைக்
கட்டுவதற்கு முன்னால் பாளையை சிறிதாக சீவுகிறான்.
பாளையைச் சீவுது என்று சொன்னால் பெரிதாக அல்ல. பென்
சிலை சீவுவதைவிட சிறிதாக சீவ வேண்டும். மிக மென்மையாகச்
சீவ வேண்டும், அதைவிட அதிகமாக சீவிவிட்டால் பத்து
நாளில் அந்த பாளை போய்விடும். ஆகவே, மிகக் குறைந்த
அளவிற்கு சீவ வேண்டும். சில இடங்களிலே 'பேப்பர் ரோஸ்ட்
போடுகிறார்களே அந்த அளவிற்கு சீவ வேண்டும். (சிரிப்பு)



1992 ஏப்ரல் 20] [திரு. குமரி அனந்தன்]

அதிலே இருந்து சுரந்து வருகிறது. பின்பு ஏன் மேலே
போகிறான், மாலையிலே போய் இருக்கிற பதநீரை சேர்ப்ப
தில்லை. மாலையிலே அவன் மீண்டும் சீவுகிறான். அப்படி
மாலையிலே அவன் மீண்டும் சீவுவதற்கு என்ன காரணம் என்று
சொன்னால் பகல் நேரத்திலே சீவிய பகுதிகளில் இருக்கின்ற
அந்த நீர்ப்பசை வறண்டு போய் கெட்டித்தனமாகி மீண்டும்
பதநீர் சுரக்காமல் காய்ந்துவிடுகிறது. மீண்டும் பதநீர் சுரக்—
காமல் காய்ந்துவருகிற காரணத்தால் அந்த காய்ந்துபோன
பகுதியில் சீவுவதற்கு ஏற்கனவே காலையில் ஏறின அதே
மரத்தில் மாலையிலும் ஏறுகிறான்: இப்படி ஒரு நாளைக்கு
70 இலட்சம் பனைகளிலே ஏறத்தாழ பதினைந்து, 25 இலட்சம்
பேர்கள் ஏறுகிறார்கள். இவ்வளவு பேர் ஏறுகிறார்கள் என்று
சொன்னால் நான் ஒரு சின்ன வேண்டுகோளை விடுக்கிறேன்.
இங்கே இந்த அவையின் மூலம் சபாநாயகர் அவர்களின் மூலம்
இந்த அரசாங்கத்தின் மூலம் உலகத்திற்குத் தெரிவிக்க விரும்புகி—
றேன். என்னவென்று சொன்னால் காய்ந்து போகிறது என்பதற்
காக, அதை சீவுவதற்காக அவன் பனை ஏறுவதற்குப் பதிலாக
காய்ந்து போவதைத் தடுப்பதற்கு அங்கே தடவுவதற்கு விஞ்ஞான
பொருளை, வேதியல் பொருளை விஞ்ஞானிகள் கண்டுபிடிக்க
முடியாதா? பல் பிடுங்குவதற்கு வலி இல்லாமல் செய்வதற்கு
வழி தெரிந்துவிட்ட மருத்துவம் அல்லவா? இதயம் ஆப்பரேஷன்
செய்வதற்குக் கூட உணர்வு இல்லாமல் செய்வதற்கு மருந்து
வந்துவிட்டது அல்லவா? இந்தப் பனை மரத்தில் இருக்கிற
பாளை காய்ந்து போகாமல் 24 மணி நேரமும் பாதுகாப்பதற்கு,
ஈரப்பசையோடு வைப்பதற்கு, அந்த சுரக்கின்ற நீர் கெட்டுப்
போகாமல் இருப்பதற்கு வேதியல் பொருளை கண்டுபிடிக்க
முடியாதா? முடியும். விஞ்ஞானிகளால் முடியும். ஆனால்
எங்கே இருக்கிறது என்று அவனுக்கே தெரியாது. அந்த அளவிற்கு
உயரமாக இருக்கிறது. எப்படி போய் பார்ப்பான்? காலையில்
வானொலியைத் திருப்பினால், கரும்பிலே இலைப் புழு இருக்
கிறதா, அதற்கு இதைச் செய்யுங்கள் என்று சொல்லுகிறார்கள்.
யாராவது சொல்கிறார்களா—பனை மரத்திலே இந்தப் புழு
இருந்தால் இதைச் செய்யுங்கள் என்று சொல்லுகிறார்களா?
அங்கே பார்க்க முடியவில்லை. தெரியவில்லை. விஞ்ஞானிகள்
பார்க்க முடியவில்லை, அவர்களுக்குத் தெரியவில்லை. அதைப்
பார்ப்பதற்கு வழி வகுத்து அவனுக்கு வேதியியல் பொருளை
கண்டுபிடிப்பதற்கு ரூபாய் மூன்று இலட்சம், ரூபாய் நான்கு
இலட்சம் என்று பரிசு அறிவிக்கலாம். அறிவிப்பீர்கள். நீங்கள் அறி
விப்பீர்கள் என்று எங்களுக்கு நம்பிக்கை உண்டு. (மேசையைத்

தட்டும் ஒலி). ஏனென்று சொன்னால் அந்த மக்கள் மத்தியிலே இருந்து வந்த மனிதன் சென்னையிலே வந்து தமிழ்நாடு எங்கும் அதிகமாக வேலை செய்தான் என்ற காரணத்தாலே இப்போது தானே இதற்கு முந்தைய 14-ஆம் தேதி தானே அருமையான விழாவில் கலந்து கொண்டீர்கள். ஒரு காலத்திலே சவுந்தர பாண்டியனார் என்று இருந்த இடத்தை பாண்டி பஜார் என்று சொன்னார்கள் என்று சொன்னால் இந்த அவையிலேயே நின்று சொன்னேன்; இதற்கு முந்தைய அரசு இருக்கும்போதும் சொன்னேன்; ஏற்கெனவே இருந்த பெயரை மீண்டும் கொண்டு வர வேண்டும் என்று சொன்னேன். மயிலாடுதுறை என்று இருந்ததை மாயவரம் என்று சொன்னபோது, த. பி. சேது பிள்ளை அவர்கள் பேசுகின்றபோது மாயவரமா கேட்கிறீர்கள், மாய்வதற்கா வரம் கேட்கிறீர்கள், மயிலாடுதுறை என்றேதான் தமிழன் சொல்வான் என்று அவர் சொன்னதை நிறைவேற்றி வைத்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். என்பதைப் போல நான் இந்த சட்டமன்றத்திலே கேட்டுக்கொண்டதற்கிணங்க மரியாதைக்குரிய நமது முதல்வர் அவர்கள் நிறைவேற்றி வைத்தது மட்டுமல்ல—ஏற்கெனவே நான் கேட்டேன்—இப்போது நிறைவேற்றி வைத்தது மட்டுமல்லாமல், நாங்கள் கேட்டதைவிட அதிகமாகத் தருகிற வகையிலே அந்த சிலை இருக்கின்ற இடத்தை சவுந்தர பாண்டியனார் சதுக்கம் என்று கேட்டதற்கும் மேலே கொடுத்தீர்கள். எனவே பரிசு 3 இலட்சம் ரூபாய் என்று நான் சொல்லுவது தவறாகக் கூட அமையலாம். உங்களுக்கு ஐந்து இலட்சம் என்று மனதிலே இருந்தால், நான் தவறு செய்துவிடக் கூடாது அல்லவா? அதனால்தான் சொல்லுகிறேன். எனவே வேதியியல் பொருள் கண்டுபிடிக்க வாய்ப்பு இருந்தால் கண்டுபிடித்துக் கொடுங்கள். வாய்ப்பு இருக்கும். விஞ்ஞானிகள் நினைத்தால் முடியாதது அல்ல. விண்ணுக்குப் போகும் விஞ்ஞானி இந்த மண்ணில் வளர்ந்திருக்கிற பனை மரத்திற்கு ஒன்றும் செய்ய முடியாதா?

நுங்கு. நுங்கு போல ஒரு அருமையான உணவு பதார்த்தம் கிடையாது. அதை பதநீரிலே போட்டு சாப்பிட்டால், கஸ்தூர ரசத்திலே இருக்கின்ற ரச குல்வா தோற்றுப் போகும். அப்படிப் பட்ட அருமையானது பதநீரில் மிதந்து கொண்டிருக்கிற நுங்கு.

பிற்பகல் 6-15

தொல்காப்பியத்தைப் பார்த்தீர்கள் என்று சொன்னால், 'நுங்குதல்' என்று சொன்னால், 'சாப்பிடுதல்' என்று பொருள். 'அவன் நுங்கினான்' என்றால், 'அவன் சாப்பிட்டான்' என்று பொருள். ஒரு காலத்தில் உணவாகவே இருந்துகொண்டு இருந்த ஒன்றை இப்போது நாம் ஏற்றுமதி செய்கின்ற அளவுக்கு 'பிரிசர்வேட்டிவ்' கண்டுபிடித்துவிட்டோம் என்று சொன்னால்,





உலகநாடுகளிலே இருந்து அன்னியச் செலாவணியை ஈட்டித்தரும். அதைப்போலத் தான் பதநீர். பதநீரை இறக்கிக் கொண்டுவந்து, வைத்துவிட்டால் கொஞ்ச நேரத்திலே அது புளித்துப் போகும். புளித்துப் போனதற்குப் பிறகு அது கள் ஆகிவிடும். கள் ஆகி விட்டது என்று சொன்னால், குடித்துக்கொண்டு போகிறவன் தள்ளாடிவிடுவான். (சிரிப்பு) தள்ளாடிவிடுவான் என்று சொன்னால், பிறகு பனை மரத்திலிருந்து கீழே விழுந்துவிடுவான். எனவே, இத்தனை ஆபத்துக்கள் இருக்கின்றன. எனவே, அந்த பதனீர் புளித்துப் போவதற்கு முன்பு, 'ஃபெர்மென்டேஷன்' ஆவதற்கு முன்பு, அதனை விற்றுவிட வேண்டும். அதற்காக தாய்மார்கள் என்ன செய்கிறார்கள்? இப்போது கணக்கு எடுத்து இருக்கிறார்கள். 1 இலட்சத்து 46 ஆயிரம் தாய்மார்கள் இப்போது பதனீரைக் காய்ச்சி கருப்புக் கட்டியாக, மன்னிக்க வேண்டும். 'கருப்புக் கட்டி' அல்ல, 'கற்பகக் கட்டி'—கற்பகக் கட்டி என்பதே கருப்புக் கட்டி என்று ஆகி இருக்கிறது; அந்த கற்பகக் கட்டியாக செய்கிறார்கள். செய்தால் என்ன அதன் பொருள்? இப்போது நீங்கள் பாருங்கள். இங்கே, இராமநாதபுரத்திலே, வருகின்ற நேரத்திலே விசாரித்துக்கொண்டு வந்தேன். ஒரு கிலோ கற்பகக் கட்டி அல்லது கருப்புக் கட்டி என்று வழக்கப்படியே சொல்வோம்; ஆனால், அதனுடைய பெயர் கற்பகக் கட்டி, 5½ ரூபாய் ஒரு கிலோ. இதையே கற்கண்டாக ஆக்கிவிட்டால் ஒரு கிலோ பனங்கற்கண்டு இன்று 60 ரூபாய். 8 லிட்டர் எடுத்தால் ஒரு கிலோ கருப்புக் கட்டி கொண்டுவரலாம்; 10 லிட்டர் எடுத்தால் ஒரு கிலோ பனங்கற்கண்டு கொண்டு வரலாம். விலையிலே வித்தியாசம் என்ன? 60 ரூபாய் இது; அது 5½ ரூபாய். மார்த்தாண்டத்திலே பனைத் தொழிலாளர் பேரவை என்று ஒன்று இருக்கிறது. அதில் இதைச் செய்கிறார்கள். வேறு ஒன்றுமில்லை. துத்தநாகத் தகட்டில் ஒரு பானைபோல் செய்து குறுக்கே கயிறுகளை, சிறுசிறு நூல்களைக் கட்டி, பதனீரை காய்ச்சி கூழ் ஆக்கி, அதன் பெயர் கூழ் பனி பதனீர் என்று பெயர்; கூழ் பதனீர் என்று சொல்வார்கள். 'கூபனி, கூபனி' என்று அந்தப் பெண்கள் கொச்சையாக சொல்வார்கள். ஆனால், கூழ் பதனீரை ஊற்றி வைத்துவிட்டால், மேலே மூடி வைத்து, உமியை மூடி போட்டால், 45-வது நாளிலே திறந்து பார்த்தால் அது கற்கண்டு. வேறு எதுவும் தேவையில்லை; வேறு எந்த மூலப் பொருளும் தேவையில்லை. ஒவ்வொரு வீட்டிலும் ஒரு தொழிற்சாலை வைக்கலாம். எனவே, இது அதிக கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒன்று. இது கதர் இலாகாவிலே மூலையிலே முடங்கிக் கிடக்கிறது. இதை தயவுசெய்து வெளியே கொண்டுவந்து ஒரு தனி இலாகாவாக மாற்ற முடியுமா என்று நீங்கள் பார்க்க வேண்டும் என்பதற்காகத் தான் பனை வாரியம் ஒன்று வேண்டுமென்று கடந்த 20 ஆண்டுக் காலமாக இந்த சட்டமன்றத்திலே பலர் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள்; 12 வருடமாக நானும் கேட்டுக்கொண்டு இருக்கிறேன். (சிரிப்பு) எனவே, கதர் வாரியம் என்று இருப்பதிலே இருந்து, இது

முடங்கிக் கிடப்பதற்குப் பதிலாக, ஏனென்று சொன்னால் இதில் இத்தனை சத்துக்கள் இருக்கின்ற காரணத்தினால் நான் இதைச் சொல்கிறேன். உதாரணத்திற்கு பதனீரிலே இருக்கிற சத்துக்கள், மன்னிக்க வேண்டும், நான் நேரம் எடுத்துக் கொள்ள மாட்டேன்; விரைந்து ஓடிவிடுவேன். ஆனாலும், இதையெல்லாம் சொல்ல வேண்டும்.

| | |
|---|---|
| கொழுப்புச் சத்து | 0.04 |
| புரோட்டின் | 0.02 |
| மினரல்ஸ் | 0.03 |
| இரும்புச் சத்து | 1.04 |
| பாஸ்பரஸ் | 5.4 |
| கால்சியம் | 15.7 |
| கார்போ-ஹைடிரேட் | 19.76 |

அதோடு கூட இதில் பி-காம்பிளக்ஸ், பி–2 என்று சொல்கிற 'ரைபோ ஃபிளாவின்' என்று சொல்கிற, இரத்த சிவப்பு அணுக்களை, 'ரைபோ ஃபிளாவின்' என்று சொல்கின்ற 'பி–2 இரத்த அணுக்களை' உற்பத்தி செய்வதும் பாதுகாப்பதுமான மிக அற்புதமான ஒரு மருந்து அந்த பதனீரிலே இருக்கிறது. ஆக இவைகளை எல்லாம் வைத்து நீங்கள் பார்த்ீர்கள் என்று சொன்னால் 'பிரிசர்வேட்டிவ்' கண்டுபிடிக்கின்ற ஒருவருக்கு நீங்கள் பரிசு கொடுப்பேன் என்று அறிவித்தால், இவைகளை எல்லாம் வெளிநாட்டுக்கு அனுப்பலாம்.

அதைப்போல், ஏன் இத்தனை இருந்த பிறகும் தொழிலாளி வரமாட்டான் என்பதற்கு முதலிலே சொன்னேன். அவன் கரணம் தப்பினால் மரணம் என்று கீழே விழுந்து இறக்க நேரிடுகிறது. அதற்காக இப்போது என்ன செய்ய வேண்டும்? எல்லாவற்றிற்கும் இப்போது இயந்திரம் வந்துவிட்டது. மீன் பிடி சகோதரர்களுக்கு இன்றும் பாதுகாப்பு வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஆனாலும் கூட அவர்களுக்கு கையெடுத்துத் தள்ளுவதற்குப் பதிலாக ஒரு இயந்திரம் வந்துவிட்டது அல்லவா?





செருப்பு தைக்கின்ற தம்பி, தோலை ஒன்றோடு ஒன்று தைத்துக்கொண்டு இருப்பதற்குப் பதிலாக ஒட்டுகின்ற அளவுக்கு வந்துவிட்டது அல்லவா? எத்தனையோ வந்துவிட்டது, மாடுகளிலே, யானைகளிலே மேலே இருந்து முரசு அறைந்து செய்தி சொல்வதற்குப் பதிலாக இப்போது ஒரு இடத்திலே வானொலி மூலம் செய்தி வந்துவிட்டது. ஆனால் இந்த பனை ஏறுகின்றவன் மட்டும் இன்னும் மார்பையும் கையையும் காலையும் நம்பித்தான் மேலே ஏறிக்கொண்டு இருக்கிறான். எனவே, மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்களை அன்போடு நான் கேட்டுக்கொள்வேன், பனைஏறுவதற்கு என்று ஒரு இயந்திரத்தைக் கண்டுபிடிக்கின்ற ஒரு விஞ்ஞானிக்கு 25 இலட்சம் ரூபாய் என்று நீங்கள் அறிவியுங்கள். 25 இலட்சம் ரூபாய் குறைவோ என்னவோ தெரியாது! (சிரிப்பு), நீங்கள் எது சொன்னாலும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனை ஏறுவதற்காக தனியாக ஒரு இயந்திரத்தைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் இல்லை. 'கிரேன்' ஏற்கெனவே இருக்கிறது. அந்த கிரேன்களை வைத்து மரங்களிலே ஏறுவதற்கு ஏற்பாடு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு இயந்திரம் கண்டுபிடித்துவிட்டாலோ அல்லது கிரேனை உபயோகித்தாலோ, நண்பர் அனந்தன் அவர்கள் குறிப்பிட்டதுபோல கிட்டத்தட்ட 20 இலட்சம் பேர் இந்தத் தொழிலிலே இருக்கிறார்கள்; அவர்களுக்கு எல்லாம் பெரும்பாலோர்க்கு மாற்றுத் தொழில் தேட வேண்டிய அவசியம் ஏற்படும்.

திரு. குமரி அனந்தன்: இல்லை, இல்லை, நீங்கள் சிவுறதை சீவ முடியாது. அதாவது அந்த இயந்திரம், முதலமைச்சர் அவர்கள் சொன்னபடி, அது வேலைவாய்ப்பை போக்கிவிடாது, என்ன காரணம் என்று சொன்னால், அவர்கள் அப்படிப்பட்ட ஒரு இயந்திரத்தை—அது கிரேன் போலவோ அல்லது ஏதோ போலவோ இருக்கின்ற ஒரு இயந்திரத்தை, அவர்கள் சொல்கிறதிலிருந்து என்ன தெரிகிறது? முதலமைச்சர் அவர்கள் இங்கே வந்தது நம்முடைய நல் ஊழின் பயன். ஏனென்று சொன்னால் அவர்களுடைய சிந்தனை அதிலே போயிருக்கிறது. தென் பகுதியிலே போனால் எல்லா இடங்களிலும் பார்க்கிறபோது எப்படி மேசை முன்னால் இருக்கிற பின்குத்தி வைத்திருக்கிற பின் குஷன் மாதிரி ஒவ்

வொரு இடத்திலும் பனை மரங்கள் நின்று கொண்டிருப்பதை பார்த்துக் கொண்டுதானே இருந்திருப்பார்கள்? எனவே அதுபற்றி சிந்தனை அவர்களுக்கு இருக்கிறது. எனவே ஒரு சிந்தனை வந்து விட்டாலே செயல் வந்து விடும். You dream it you will do it என்று சொல்வார்கள்.

பிற்பகல் 6–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதை போல கோபிசெட்டிபாளையம் தொகுதியில் கொளத்தூர் என்னுமிடத்தில் பனை மரத்தில் ஏறுவதற்கு பெடல் செய்தே பனை மரத்தில் ஏறுவதற்காக குறைந்த செலவில் ஒரு கருவியை ஒருவர் கண்டுபிடித்து இருக்கிறார்: ஆகவே அதைப் பயன்படுத்திக் கொண்டால் கூட— நம்முடைய தமிழகத்தினுடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கிற முதல்வர் அவர்களிடத்தில் அவரை அழைத்து வந்து, அவருக்கு அந்த உதவிகளைச் செய்கிறபோது, அத்தனை பனை மரம் ஏறுகிற தொழிலாளர்களுக்கும் அது உதவும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 4 ஆண்டு காலத்திற்கு முன்னால் அவர் அந்த முயற்சியை மேற்கொண்டார். ஆனால், அந்த முயற்சி நம்முடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் புரட்சித்தலைவி அவர்களுடைய காலத்தில்தான் நிறைவேறும் போல இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்த நல்ல வாய்ப்பை நம்முடைய தமிழக அரசு பெற்றிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அவைகளை எல்லாம் பார்த்து வைத்திருப்பதற்கு, கோபிசெட்டிபாளையத்தில் நடைபெறுகிற அந்த நிகழ்ச்சிகளைப் பார்த்து வைத்திருப்பதற்கு பெடல் செய்து மேலே ஏறுவதைப் பார்த்து வைத்திருப்பதற்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன். நான் இதை மாதவரம் பண்ணையில் பார்த்தேன். குட்டத்திலும் ஒருவர் இதைச் செய்திருக்கிறார். அது இப்போது பயன்படுகிறது. ஆனால் அது எந்த அளவுக்கு நமக்கு பயன்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். இன்னும் ஒருவகையில் அவைகளை எல்லாம் பார்க்க வேண்டும். கிரேன் போலவா அல்லது பெடல் பண்ணி போவதா, எந்தெந்த வகையில் என்று பார்த்து ஒரு இயந்திரம் கண்டு பிடியுங்கள். அவ்வளவு தான் நமக்கு வேண்டியது. இன்னும் அவன் மாறு கை போட்டு ஏதிக்கொண்டே போவதை விட அந்த இயந்திரத்தை





பயன்படுத்துவதற்குரிய சூழ்நிலையிலே எப்படியாவது இயந்திரம் கண்டுப்பிடிக்கப்படும் என்று சொல்லிவிடுங்கள் அது கண்டு பிடிக்கப்பட்டுவிடும். எனவே, அதற்குரிய முயற்சியிலே நீங்கள் இருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் கவனம் அந்தப் பக்கம் இருப்பதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இப்போது பனை மரப் பொருட்களை எல்லாம் மிக அழகான முறையில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம். அவைகளை எல்லாம் நான் சொல்லி நேரத்தை எடுக்க விரும்பவில்லை. ஆனாலும் பனங்கொட்டைகளை அதிகமாக விதைக்க வேண்டும். வேலியிலே கூட வரிசையாக போட்டு விடலாம். இப்போது பஞ்சாயத்து யூனியன்களுக்கு 60,000 பனங்கொட்டைகள் கொடுக்கப்படுவதாக—சில பஞ்சாயத்து யூனியன்களுக்குகொடுக்கப் படுவதாக கேள்விப்படுகிறேன். அந்த 60,000 பனங்கொட்டைகளையும் போடுவார்கள் என்று நினைக்கிறேன். போட்டு அவைகள் எல்லாம் முளைத்து வருகின்றனவா என்றும் கண்காணிக்க வேண்டும். ஏனென்றால் 60,000 அளவுக்கு கொடுக்கிறபோது அதை சரியான வகையில் போடுகிறார்களா முளைக்கிறதா என்று பார்க்க வேண்டும். அது முளைத்து விட்டால் பிறகு அது வளர்ந்து விடும். அப்படி ஒரு சக்தி அதற்கு இருக்கிறது. அதனால் இது நல்ல முயற்சி. எல்லா இடங்களிலும் போடுகிறார்கள்.

தும்பு அடித்து இந்த ஏழை பெண்கள், சாதாரண பெண்கள்— தும்பு, அதாவது பனை பட்டை என்று சொல்வார்கள். அதிலேயிருந்து தும்பை அடித்து அடித்து, கையால் அடித்து அடித்து எடுத்து, அந்த தூசியெல்லாம் அவர்கள் உடம்பில் படும். அந்தப் பெண்களைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கும். அதற்கும் சின்ன சின்ன இயந்திரங்கலளக் கண்டுபிடிக்கவேண்டும். அதற்காக எக்ஸ்பர்ட் கமிட்டி ஒன்றைக்கூட போட்டுவிடலாம். என்னென்ன வகையிலே இம்ப்ரூவ் பண்ணலாம் என்று சொல்கிற அளவுக்கு எக்ஸ்பர்ட் கமிட்டி போட்டு எல்லா வகையிலும் அந்தத்தொழிலைச் செம்மைப்படுத்துவதற்கு என்ன செய்யலாம் என்று பார்த்து விடலாம். இந்தத் தும்பை எடுத்து தூத்துக்குடியிலிருந்து வெளிநாட்டுக்கு அனுப்புகிறார்கள். குளச்சலிலிருந்து வெளிநாட்டுக்கு அனுப்புகிறார்கள். அதைப்போல கொச்சியிலிருந்து வெளிநாட்டுக்கு அனுப்புகிறார்கள். வெளிநாட்டிலே அதைத் கொண்டு என்ன செய்கிறார்கள் என்று கேட்டால் நம்மிலே பலருக்கு தெரியவில்லை. பிரஷ் என்று மட்டுதான் சொல்கிறார்கள். பிரஷ் மட்டுதான் செய்கிறார்களா, வேறு ஏதாவது செய்கிறார்களா? பிரஷ் மட்டும் செய்வதாக இருந்தால் அதை பினிஷ்ட் புரொடக்டாக நாமே அனுப்பலாமே? பிரஷ்செய்வதற்குக் கூடவா நம்மால் முடியாது? வேறு ஏதோ அவன் செய்கிறான். என்ன செய்கிறான் என்று நீங்கள் பார்க்க வேண்டும். ஏனென்றால் பனங்கற்கண்டை எடுத்துக் கொண்டால் நான் மார்த்தாண்டத்துக்கு

[திரு. குமரி அனந்தன்] [1992 ஏப்ரல் 20

தொலைபேசியிலே பேசிய போது அவர்கள் சொன்னார்கள், ஐந்து கோடி ரூபாய்க்கு எங்களுக்கு பனங்கற்கண்டு தரமுடியுமா என்று. சென்னையிலிருந்து ஒரு நிறுவனம் அங்கேயிருக்கிற அந்த பனைத் தொழில் ஆராய்ச்சி நிறுவனம் இருக்கிறதே, அதற்கு கடிதம் எழுதியிருக்கிறதாம். ஐந்து கோடி ரூபாய்க்கு எழுதுகிறது என்றால் உள்நாட்டிலே பயன்படுத்த போகிறார்களா, வெளிநாட்டிலே பயன்படுத்தப் போகிறார்களா? உள்நாட்டிலே பயன்படுத்தலாம். இப்போது உதாரணமாக நாம் காபிக்கு பதிலாக சுக்கு காபி வைக்கலாம். பாரதிதாசன் பாடி இருக்கிறார்.

''கையிலே சுக்குடன் மல்லி இருக்கையிலே
காபி எதற்காக நெஞ்சே காபி எதற்காக......

பாரதிதாசன் பாடுகிறார், சொல்வது பாரதிதாசன், ஆகவே இவைகளையெல்லாம் நாம் இங்கே வைக்கலாம். அதைப் போலத்தான் வைக்கப் போகிறார்களா? வெளிநாட்டிலே அவைகளைக் கொண்டு வரப்போகிறார்களா என்று நீங்கள் பார்க்க வேண்டும்.

இந்த பனைமரம் இவ்வளவு உயரமாக இருக்கிறதே என்ற காரணமாக ரொம்ப நாளாக எனக்கு ஒரு ஆசை, குட்டைப் பனை மரம் செய்தால் என்ன? அதற்கு ஆராய்சி செய்தால் என்ன என்று, இந்தக் குட்டைப்பனை மரங்களுக்கு ஆராய்சி செய்ய வேண்டுமென்று சொல்கிற காரணமாக நான் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கிற நேரத்திலும் சொன்னேன், அதன்பிறகு தொடர்ந்து சட்டமன்றத்தில் இருக்கிற நேரத்திலும் சொல்லிக் கொண்டு வருகிறேன். எதுவும் நிறைவேற வேண்டிய காலத்தில்தானே நிறைவேறும்? எனவேதான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றைக்கு ஒரு ஆராய்ச்சி

பிற்பகல் 6-25

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: திரு. வி. கே. சின்னசாமி

*<u>திரு. வி. கே. சின்னசாமி</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பனை மரம் நன்றாக வளர்ந்தால் தான் மரம் முற்றியதற்குப் பிறகு, அவைகள் வீடுகள் கட்டுவதற்கு விட்டங்களாகவும், சட்டங்களாகவும் அது மிக விலை உயர்ந்த அளவிற்கு விற்கப்படுகிறது என்பதையும் அதிலே வருமானம் வருகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. குமரி அனந்தன்</u>: விட்டங்களும் சட்டங்களுமாக வந்து விட்டது என்றால், பதநீர் வராது, எனவே, பதநீர் வந்ததற்கு



1992 ஏப்ரல் 20] [திரு. குமரி அனந்தன்]

பிறகு, முற்றிய பனை மரங்களை வெட்ட வேண்டும். இன்று ஆந்திராவிலே எடுத்துக் கொண்டால், பனை மரங்கள் எல்லாம் அரசுடைமை, ஆந்திராவிலே பனை மரங்கள் தனி நபருக்குக் கிடையாது. பட்டா நிலத்திலே இருக்கின்ற பனை மரங்கள் கூட அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டிலே இருக்கின்றன, இடையிலே ஒரு தரகர் வர முடியாது. பனை ஏறுகின்ற தொழிலாளர்களுக்கும். அரசாங்கத்திற்கும் நேரடித் தொடர்பு. 30 ரூபாய் கட்ட வேண்டும், பனை ஏறுகிற தொழிலாளி, 30 ரூபாய் கட்டிவிட்டால், அந்தப் பனை மரம் அவனுக்குக் கொடுக்கப்பட்டு விடும். அனுபவ பாத்தியதை, அப்படி கொடுக்கப்பட்டுவிட்டால், அதிலே 15 ரூபாயை எடுத்து அரசாங்கம் அந்த நிலவுடைமையாளர்களுக்குக் கொடுத்துவிடும், அரசாங்கம் 15 ரூபாயை வைத்துக் கொள்ளும். ஒரு வருடத்திற்கு 15 ரூபாய் வருகிறது என்றால், நமது ஊரிலே 5 கோடி பனை மரங்கள் இருக்கின்றன. நீங்களே கணக்குப் பாருங்கள். அதற்கு ஒரு கணக்கு, ஆந்திராவைப் போலத்தான் செய்ய வேண்டும் என்பதல்ல. ஆந்திராவிலே இருப்பதைச் சொன்னேன், நீங்கள் சொன்ன காரணங்களுக்காக சரி, உயரமாக வளர்கின்ற பனை மரங்கள் முற்றியதற்குப் பிறகு அவைகளை எடுக்கலாம், இப்போது குட்டைப் பனை மரம் என்று சொல்கிற போது, நான் எதற்குச் சொல்கிறேன் என்றால், தென்னை மரத்திலே குட்டை தென்னை மரம் வந்துவிட்டது, மாமரத்திலே வந்துவிட்டது. ஏறி அவ்வளவு கஷ்டப்படுவதற்குப் பதிலாக இந்த பனை மரங்கள் ஒரேயடியாக பெரிய நெட்டை பனை மரங்கள் போய்விடாது. அவைகளும் நின்றுகொண்டுதான் இருக்கும், ஆனால் இந்த ஆராய்ச்சி வருகிற நேரத்திலே, மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் அவர்கள், கேட்டுக் கொண்டவுடனேயே ஸ்ரீவில்லிபுத்தூரில், 1981 ஆம் ஆண்டு ஆராய்ச்சிப் பண்ணை ஒன்றை ஆரம்பித்தார், திருவண்ணாமலையிலேயிருந்து தென் திருப்பதிக்குப் போகின்ற — திருவண்ணாமலை என்று அங்கே ஒரு இடம் இருக்கிறது. ஸ்ரீவில்லிபுத்தூருக்கு ஊருக்குப் பக்கத்திலே திருவண்ணாமலை என்று இருக்கிறது. அங்கேதான் ஓயா மடம் இருக்கும் அந்தத் திருவண்ணாமலையிலே பனை ஆராய்ச்சி பண்ணை இருக்கிறது, அந்தப் பனை ஆராய்ச்சிப் பண்ணையிலே குட்டைப் பனை ஆராய்ச்சி பண்ண வேண்டும் என்று அங்கே போனார்கள். அதற்குப் பிறகு என்ன செய்தார்கள் என்று சொன்னால், பனையையும் தென்னையும் கலந்து ஒரு கலப்பினத்தைக் கொண்டுவரலாமா என்று நினைத்தார்கள், நான் கூட, சட்டசபையிலே உடனே மகிழ்ச்சி தாங்காமல் எழுந்து சொன்னேன், அதற்கு, தென்பனை என்று பெயர் வைக்கலாம், என்று சொன்னேன், பிள்ளை பிறப்பதற்கு முன்பே. ஆனால் முந்தா நாள் ஒருவரை இங்கேயிருந்து தொலைபேசியிலே கூப்பிட்டு, அங்கே என்ன ஆராய்ச்சி நடக்கிறது என்று போய் பாருங்கள் என்று சொன்னேன், அங்கே 16 பேர் ஆண்களும், பெண்களுமாக அற்றகூலிகளாக இருந்து வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு பேராசிரியர் இருக்கிறார், ஒரு துணைப் பேராசிரியர் இருக்

கிறார். அது ஒரு பெண்மணி என்ற காரணத்திற்காக காட்டுக்குள்ளே இருக்கிற இடத்திலே நான் தொடர்ந்து வேலை செய்ய முடியாது என்று அவர்கள் இந்த ஜனவரியிலிருந்து ராஜினாமா செய்துவிட்டுப் போய் விட்டார்கள். அந்த இடம் இன்னும் காலியாக இருக்கிறது, அதற்கு ஒரு கண்காணிப்பாளர் இருக்கிறார், எல்லோரும் இருக்கிறார்கள். என்ன ஆராய்ச்சி நடந்திருக்கிறது என்பதைப் பார்த்துவிட்டு வாருங்கள் என்று தகவல் சொன்ன பிறகு, எனக்குப் புகைப்படமே எடுத்துக் கொடுத்து இருக்கிறார்கள். என்ன கண்டுபிடித்திருக்கிறார்கள் என்று சொன்னால், முற்றிய பனங்கொட்டையை மண்ணிலே புதைத்தால், அது முளைக்கும், இதுதான். ஐயா. அங்கே கண்டுபிடித்து இருப்பது, முற்றிய பனங்கொட்டையை மண்ணிலே புதைத்தால், அது முளைக்கும். இதை 11 வருடங்களுக்குப் பிறகு கண்டுபிடித்து இருக்கிறார்கள். அவர்கள் போட்டோ எடுத்து இங்கே அனுப்பினார்கள். சபாநாயகரிடம் சொல்லாமல் நான் கொடுக்கக் கூடாது. பிறகு கேட்டால் நான் கொடுப்பேன். கையிலே இருக்கிறது. கைவசம் இருக்கிறது. ஆக, பிறகு, கொஞ்சமாவது வித்தியாசம் இல்லையா என்று கேட்டேன், அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், பிளாஸ்டிக் பையிலே அதைப் போட்டு வைத்திருக்கிறார்களே ஒழிய வேறு ஒன்றும் இல்லை. எதையாவது வளர்த்து இருக்கிறார்களா என்றால், ஆமாம், கொஞ்சம் பனை மரங்கள் வளர்ந்திருக்கின்றன, ஆனால் தண்ணீர் இல்லாமல் காய்ந்து போய்விட்டன, ஏன் தண்ணீர் இல்லாமல் காய்ந்தது என்று கேட்டேன், அந்த ஊரிலே தண்ணீர் கிடையாது தண்ணீருக்கு இரண்டு கிலோ மீட்டர் போய் எடுத்துக் கொண்டு வர வேண்டும். ஆண்களும், பெண்களும் தலையிலே சுமந்து வரவேண்டும். எனவே, வளரும் பனைமரங்கள் காய்ந்து விட்டன. அங்கே கண்காணிப்பாளர் ஒருவர் தினசரி வருகிறாரா என்று கேட்டேன். அவருக்கு அங்கே தங்குகின்ற இடம் இல்லாத காரணத்தாலே, ஸ்ரீவில்லிபுத்தூரிலே பருத்தி ஆராய்ச்சிப் பண்ணையிலே அவர் தங்கியிருக்கிறார். ஒரு ஜீப் இருக்கிறது. இருந்தாலும் மாதத்திற்கு எப்போதாவது ஒரு தடவை வருகிறார் என்று அவர்கள் தகவல் சொல்கிறார்கள். நான் யாரையும் குறை சொல்லவில்லை. நம்முடைய அரசாங்கம், புரட்சித் தலைவர் அவர்கள், அதிலே ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று அவர்கள் ஆசைப்பட, நான் உடனே பெயரையே சூட்ட, இப்படி எல்லாம் நாம் பார்த்ததற்குப் பிறகு, அங்கே போனால், ஆராய்ச்சிக் கூடத்திலே எல்லாப் பகுதியிலேயும், காற்று வருகிறதாம், ஏன் என்றால், ஒரு சுவர் கூட அங்கே எழுப்பப்படவில்லை. எல்லா இடங்களிலேயும், ஓலையை வைத்து கட்டிய காரணத்தாலே, காட்டுக்குள்ளே எல்லாம் பிய்ந்து போய் கிடக்கிறது. இந்தச் சூழ்நிலை இருக்கிற காரணத்தாலே, உங்களுடைய பார்வைக்குக் கொண்டு வருகிறேன். இந்த ஆராய்ச்சிகள் எல்லாம் [illegible]த்தான் இருக்கின்றன என்பதற்காகச் சொல்கிறேன்.



அடுத்து, நிறைய அலங்காரப் பொருட்கள் இப்போது வருகின்றன. குருத்தோலையிலேயிருந்து அலங்காரப் பொருட்கள் செய்யலாம். சார் ஓலை என்று சொல்வதிலிருந்து பாய்கள் செய்யலாம். அழைப்பிதழ்கள் கூட அச்சடிக்கலாம். இப்போது நடைபெறுகிற தமிழ்த் தாத்தாவினுடைய விழாவிற்குக் கூட, நான் பனை ஓலையிலேதான் அச்சடிப்பேன் என்று சொல்லி, அச்சடித்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். ஏன் என்றால், காகிதம் பற்றாக்குறையாக இருப்பதால், நாம் இறக்குமதி செய்து கொண்டு இருக்கிறோம். அதனாலே, பனை ஓலையில் இந்தத் தடவை நாங்கள் அழைப்பிதழை அனுப்புகிறோம். அதை அனுப்புவது நல்லது என்று கருதுகிறோம். அனுப்புவது நல்லது என்று கருதுகிற காரணத்தால், இந்தப் பெண்களுக்கு எல்லாம் ஏராளமான வேலை வாய்ப்பு எல்லாம் கிடைக்கிறது.

அடுத்து, இந்தப் பனைத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும். எல்லாத் தொழிலாளர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுப்பதைப் போல, அவனுக்கும் கொடுக்க வேண்டும். அதேபோல், அவன் கீழே விழுந்துவிட்டான் என்று வையுங்கள், —மாண்புமிகு உறுப்பினர் சுந்தரதாஸ் அவர்கள் சொன்னார்கள், 150 பேர்கள் கீழே விழுந்து செத்துப் போனார்கள், மாண்புமிகு முதலமைச்சருடைய நிவாரண நிதியைப் பெற முடியவில்லை என்று. ஏன்? அவர் சொன்னதைத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி ; கை, கால் உடைந்தவர்களைப் பற்றித்தான் அவர் சொன்னார். இறந்தவர்களைப் பற்றி அவர் சொல்லவில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. மா. சுந்தரதாஸ்.

பிற்பகல் 6.30

திரு. மா. சுந்தரதாஸ் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறந்து போனவர்களுக்கு போஸ்ட் மார்ட்டம் செய்யவில்லை என்று சொன்னால் பணம் கிடைப்பதில்லை. மிகவும் ஏழைகளாக இருக்கிறார்கள். அவர்களை நான் பல இடங்களில் சென்று பார்த்திருக்கிறேன். அவர்கள் உடனே போஸ்ட் மார்ட்டம் செய்ய முடியாத நிலைமைகள் இருந்து கொண்டு இருக்கின்றன. ஆகையால் தாசில்தார் அல்லது ஆர்.டி.ஓ. லெவலில் ஒரு என்கொயரி செய்து, உண்மையிலே பனை ஏறும்போது இறந்திருக்கிறான் என்ற அந்த ரிப்போர்ட்

[திரு. மா. சுந்தரதாஸ்] [1992 ஏப்ரல் 20

படி கொடுப்பதற்காகத்தான் சொல்கிறேன். மேலும் இந்த கை, கால் முறிந்தவர்கள் எங்களுடைய தொகுதியிலே 150 பேர் இருக்கிறார்கள். 5 ஆண்டுக்காலமாக அந்த பைல் தேங்கிக் கொண்டிருக்கிறது. இதுவரைக்கும் அந்தப் பணம் அவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. பர்மனென்ட் டிஸ்-எபிலிடீஸ்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> ; மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்</u> ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனை ஏறும் தொழிலாளிகள் இறந்தால் மாண்புமிகு முதல்வர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 10,000 அளிக்கப்படுகிறது. அவர்கள் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் பெறவில்லை என்றால், பல்வேறு நடைமுறைச் சிக்கல் இருப்பதனால்தான் அந்த போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் நடைமுறைப் படுத்தப்படுகிறது. மேலும் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் பதிவு பெற்ற பனையேறும் தொழிலாளிகள் இறந்தால் அவர்களின் குடும்பத்திற்கு முதல்வர் அவர்கள் நிவாரண நிதியிலிருந்து ரூ. 10,000 அளிக்கப்பட்டு வருகிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> ; இப்போது நேரம் 6.30 இரண்டு அமைச்சர்களின் பதிலுரை இருக்கிறது: நீங்கள் பனையிலேயே இருந்திருக்கிறீர்கள்.

<u>திரு. குமரி அனந்தன்</u> ; நான் முடித்து விடுகிறேன். நம்முடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் 1990-ல் நிரந்தரமாக ஊனமுற்றோர் 25 பேர். அது தவிர, 26 பேர் இறந்தவர்களிலே 4 பேரின் குடும்பத்தினருக்குத்தான் பணம் கிடைத்திருக்கிறது. எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், தோப்பிற்குள் விழுந்து கிடக்கிறான். தோப்பு என்றால் சாதாரணமாக உங்களுக்குத் தெரியும், சாலையோரத்திலிருந்து ரொம்பத் தள்ளிப் போயிருக்கும். அங்கே செத்து கிடக்கிறான் என்று வையுங்கள். அவனை டாக்சியில் ஏற்றவேண்டுமென்றால், பாடியை ஏற்ற மாட்டேன், ரூ. 500 கொடு, ரூ. 2,000 கொடு என்று கேட்கிறான். அந்தச் சூழ்நிலை எல்லாம் இருக்கிறது. அதனால் அரசாங்க ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகவேண்டுமென்பதற்குப் பதிலாக ஆரம்ப சுகாதார நிலைய டாக்டரே ஒரு போட்டோ வைத்து, சர்டிபிகேட் கொடுத்தால் போதுமா என்பதை நீங்கள் பரிசீலிக்க வேண்டும். தோப்பிற்குள் கிடப்பவனை போஸ்ட் மார்ட்டம் பண்ணுவது என்பதில் எல்லா இடங்களிலேயும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் வைத்திருக்கிறோமா இல்லையா, அந்த டாக்டரே செய்தால் போதுமா என்பதை மாண்புமிகு...



1992 ஏப்ரல் 20]

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> ; மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி</u> ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களிலே அந்த வசதிகள் நமக்கு இல்லை. அது ஆரம்ப சுகாதார நிலையம். ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பிடல், மற்றும் தாலூக் ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பிடல், ஆகியவற்றில் இந்த போஸ்ட் மார்ட்டம் பண்ணுவதற்கான வசதிகள் இருக்கின்றன. எனவே ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அதை விரிவாக்க முடியாது. இங்கே கொண்டு வந்துதான் செய்யவேண்டும்.

<u>திரு. குமரி அனந்தன்</u> ; மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இது தெரியும். இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் பெசிலிட்டீஸ் என்பது ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பிடலில்தான் இருக்கிறது. பனை ஏறும்போதுதான் விழுந்து கிடந்தான், செத்தான் என்பது எல்லோருக்கும் தெரியும். இதிலே போட்டோ வைத்து விழுந்தான், செத்தான் என்று ஒரு சர்டிபிகேட் கொடுத்தால் போதும். யாரும் இந்த ரூபாய்க்காக விழுந்து சாகப் போவதில்லை, கூடிய மட்டும்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய்க்காக யாரும் விழுந்து சாகப் போவதில்லை. இது ஒன்று. சாதாரணமாக செத்தவர்களின் குடும்பங்கள் எல்லாம் இந்த வசதிகளைப் பயன்படுத்தக் கூடாது என்பதற்குத்தான் உண்மையானவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதற்காக இதற்காக கொஞ்சம் பட்ஜெட் ஒதுக்கப்படுகிறது. எனவே தவறானவர்கள் இதிலே வந்தால் இது கிடைக்காமல் போய்விடும். எதனால் இறந்தார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்குத்தான் போஸ்ட் மார்ட்டம் செய்யப்படுகிறது..

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> ; மாண்புமிகு கல்வி அமைச்சர்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்</u> ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொலை செய்து இறந்தால் கூட தெரியாது. அதனால் தான் சொல்கிறேன்.

<u>திரு. குமரி அனந்தன்</u> ; இப்போது இருக்கிற விஞ்ஞானத்தில் ஒருவன் கொலை செய்யப்பட்டானா, விழுந்து செத்தானா என்பதை எல்லாம் அநேகமாகக் கண்டுபிடித்து விடலாம். ஆராயுங்கள். எனவே அந்த போஸ்ட் மார்ட்டம் வேண்டும். அந்த போஸ்ட் மார்ட்டம் என்பது அந்த டாக்டரே அந்த

அளவிற்குச் செய்தால் போதும் என்பதுதான். டாக்டர் செய்யாமல் கொடுக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை. அவரும் ஒரு எம். பி. பி. எஸ்., டாக்டர் இல்லையா ? நான் ஆலோசிக்கச் சொல்கிறேன். அங்கேயிருந்து அவனைத் தூக்கிக் கொண்டு வந்து, அவன் ரூ. 2,000 கொடுத்து பிணத்தைக் கொண்டுவந்து வைத்த பிறகு, இங்கிருந்து கொண்டு போவது, இதெல்லாம் எதற்கு சிரமம் என்று அவனே புதைத்துவிட்டுப் போய்விடுகிறான். ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டுமென்றுதான் நாம் முயற்சி பண்ணுகிறோம். அதுமாதிரி இனிமேல் இன்சூரன்ஸ் கொடுக்கிறபோது எப்படி மீனவச் சகோதரர்களுக்குக் கொடுப்பதில் வரையறை செய்கிறோமோ அதே மாதிரி மத்திய மாநில அரசு திட்டங்களின் அடிப்படையில் நீங்கள் சொல்கிற மாதிரி கூட்டுறவுகள் எல்லாம் அவர்களுடைய இன்சூரன்ஸ் பணத்தை மத்திய மாநில அரசுகள் கட்டி நீங்கள் கொண்டுவந்தால், அவர்களுக்கும் ரூ. 25,000, ரூ. 25,000 கிடைக்கும். இவைகளை எல்லாம் நீங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒரு செய்தி. பனை ஏறும் தொழிலாளர்கள் லைசன்சு என்பது சில இடங்களில் இருக்கிறது, சில இடங்களில் இல்லை. ஏறுவதற்கு எல்லாம் ஒன்றாக இருந்தாலும், கன்னியாகுமரியில் லைசன்சு கிடையாது. திருநெல்வேலியில் லைசன்சு கிடையாது. இராமநாதபுரத்தில் லைசன்சு வேண்டும். சேலத்தில் வாங்க வேண்டும் ஆகவே ஒரு இடத்தில் லைசன்சு இருக்கிறது. ஒரு இடத்தில் லைசன்சு இல்லை. இது ஏன் ? அதைக் கொடுப்பது யார் ? இப்போது பனைத் தொழிலுக்கு நாங்கள் வாரியம் வேண்டுமென்று கேட்கிறோம். பனைத் தொழில் வாரியத்தில் தென்னையையும் சேர்த்துக்கொள்ளுங்கள் என்று கேட்கின்றபோது அந்த வாரியம் அதைப் பார்த்துக் கொள்ளும். இப்போது யார் பார்க்கிறார்கள் ? 40 ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஸ்பெஷல் ஆபிசராக இருப்பவர், 40 ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களின் ஒரு ஸ்பெஷல் ஆபிசர் அவர் அந்த ஸ்பாட்டிற்குப் போய் லைசன்சு கொடுக்கிறார். முடியுமா ? அவனுக்கு அந்த பருவகாலம் தவறிவிட்டால், அதற்குப் பிறகு பனை ஏறமுடியாது என்கிற காரணத்தால், போய் விடுகிறான். பனை ஏறப் போய்விடுவான். லைசன்சு வாங்க மாட்டான். உடனே போலீஸ் வரும். வாயை ஊது என்பான்.

பிற்பகல் 6–35

மன்னிக்க வேண்டும் நான் சாதாரணமாக யாரையும் குற்றம் குறை சொல்வது இல்லை. இராமேஸ்வரத்திலிருக்கும் ஒரு அதிகாரி இராமநாதபுரத்திலே பண்ணியிருக்கிற அட்டகாசத்தை பற்றி எனக்கு எழுதி இருக்கிறார்கள். நான் சொல்லமாட்



டேன் என்று சொன்னேன். இருந்தாலும் சொல்ல வேண்டிய சூழ்நிலை வருகிறது. ஏனென்றால் பானைகள் அத்தனையும் உடைத்து அடித்து போட்ட படங்களை எல்லாம் எனக்கு கொடுத்து ஏதாவது நீங்கள் சொல்லி அது முதலமைச்சருடைய கவனத்திற்கு வந்து ஏன் இந்த அதிகாரி எங்களையெல்லாம் இப்படி கொடுமைப்படுத்துகிறார் என்று கேளுங்கள் என்று என்னிடத்திலே அவர்கள் சொன்ன காரணத்தினாலே சொல்லுகிறேன். எனவே போலீஸ் அராஸ்மென்ட் சில இடங்களில் அதிகமாக இருக்கிறது. சில இடங்களில்தான். எல்லா இடங்களிலும் இல்லை. (குறுக்கீடு) இருக்கட்டும் எல்லா இடங்களிலும் இல்லை சில இடங்களில் அப்படி இருக்கிறது என்று சொல்லி அதையும் நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி, நேரம் அதிகம் ஆகிறது என்பதை நான் உணர்ந்தாலும் ஒன்றை மீண்டும் வலியுறுத்துகிறேன். பனைத் தொழில் வாரியம் என்பதனை தயவுசெய்து கதர் வாரியத்திடமிருந்து எடுத்து அதை தனியாக்கி இந்த ஏழை எளிய மக்களை பாதுகாப்பதற்கு ஒரு திட்டத்தினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தரவேண்டும், தருவார் என்ற நம்பிக்கையோடு அமைகிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> ; மாண்புமிகு மீனளத் துறை அமைச்சரின் பதிலுரை.

<u>*மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்</u> ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' அஞ்சாமை ஈகை, அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு.''

'' தூங்காமை , கல்வி, துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு ''.

என்ற இவ்விரண்டு குறள்களிலும் வள்ளுவப் பெருந்தகையார் கூறியுள்ள ஏழு குணங்களையும் ஒரு சேரப்பெற்று சரித்திரப் புகழ் கொண்ட நல்லாட்சியை தமிழகத்தில் நடத்தி வரும் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர் தம் வாழ்வின் தீபச்சுடராக திகழ்ந்து வருகிறார். அலைகடலின் அரவணைப்பில் அழகான தமிழகமாக அமைதியான பூங்காவாக இருந்த நிலைமை மாற்றி போராளிகளின் கூடாரம் ஆக்கி அயலார் ஆளுகைக்கு இடம் தந்து அழகை கெடுத்து அமைதியை குலைத்து குதூகலம் கொண்ட துரியோதனர்களையும், துச்சாதனர்களையும் விரட்டியடித்து ஒன்பது மாத காலத்துக்குள் மீண்டும் (மேசையை தட்டும் ஒலி) அழகான அமைதியான தமிழகத்தைப் பெற்றுத் தந்த பெருமை நமது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களையே சாரும். சாதாரண மீனவ

[திரு. டி. ஜெயகுமார்] [1992 ஏப்ரல் 20

குடும்பத்தில் பிறந்த என்னை தமிழகத்தின் முதல் தொகுதியான இராயபுரம் தொகுதியில் அடையாளம் காட்டி அவருடைய அருளால் வெற்றி பெறச் செய்து, இம் மாமன்றத்தின் மீன்வளத் துறை மானியத்தின் மீது பேச வைத்ததற்கும், அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல தம்மை இகழ்வாருக்கும் இனியவையே செய்யும் ஈடு இணையற்ற தலைவி நம்மை காத்து வழி நடத்தும் இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கும் திசை நோக்கி என்னுடைய பணிவான வணக்கத்தினை தெரிவித்துக் இந்த மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களை சொல்ல முற்படுகிறேன்.

ஒரு நாட்டில் எத்தனை எத்தனையோ செல்வங்கள் இருந்தாலும் அந்த நாட்டிற்கு கல்விச் செல்வம் மற்றும் கலைச் செல்வம் இருக்கின்றனவா என்றுதான் பொருளாதார வித்தகர்கள் பார்க்கிறார்கள். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அறவழி நடத்தும் அரசாட்சியில் 10,00 கிலோ மீட்டர் கவின்மிகு கடற்கரையும் 41,412 ச. கி. மீ., பரப்பளவுள்ள கடற்படு நிலத் தொடரையும் இதனுள் அடங்கிய கடற் செல்வங்களை இதுவரை எந்த அரசும் செய்யாத அளவுக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையில் செயலாற்றுகின்ற அரசில் தான் நாட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) மொத்த மீன் உற்பத்தியில் தமிழ்நாடு 15 சதவீதம் எட்டியுள்ளது. இதன் மூலம் நமக்கு கிடைக்கின்ற அன்னிய செலாவணி ரூ. 175 கோடி என்பதையும், தற்போது 2-வது இடத்தில் இருக்கும் நமது தமிழகத்தை முதலிடத்திற்கு வருவதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்றமிகு உத்திகளை கையாண்டு அயராது உழைத்து வருகிறார்கள் என்பதனை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதனுடைய முதற் கட்டம் தான் அரசியல் குட்டையை குழப்பி இரண்டாண்டு காலத்தில் சுயநலம் என்ற மீனை பிடித்திருந்தவர்கள் ஆட்சியில் 3.74 லட்சம் டன்னாக இருந்த மீன் உற்பத்தியை 1991-92-ல் 3.89 லட்சம் டன்னாக பெருக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) 1992-93-ல் 4.05 லட்சம் டன்னாக உயர்த்த டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விழுமிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீனவக் குடும்பங்களின் தெய்வமாக ஆட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியில் தான் இதுவரை எந்த அரசும் செய்யாத அளவுக்கு இலங்கை கடற்படையினரால், விடுதலைப் புலிகளால், நடுக்கடலில் எந்த நேரத்தில் தங்களின் இன்னுயிருக்கு ஏது நேருமோ என்று அஞ்சி, தொழிலில் ஈடுபடும் மீனவர் குடும்



1992 ஏப்ரல் 20] [திரு. டி. ஜெயகுமார்]

பங்களுக்கு உடுக்கை இழந்தவன் கைபோல் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய உதவிக் கரங்களை நீட்டி, பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களின் இன்ப வாழ்வை கருத்தில் கொண்டு, கடந்த கால ஆட்சியில் நீரில் குத்தளித்துக்கொண்டு வாழ்க்கை நடத்தும் மீனவர்களுக்காக நீலிக் கண்ணீர் வடித்தது போல் வடிக்காமல், அவர்களின் நிலையான ஆனந்தக் கண்ணீருக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் புதிய திட்டம் ஒன்றை அறிவித்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி 200 ஹெக்டேர் பரப்பளவில் இராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகை-காயிதே மில்லத் மாவட்ட கடலோரப் பகுதிகளில் ஒரு முதலாவது தொழிற்பேட்டை அமைக்கப்படவுள்ளது. இதனால் 1.000 மீனவக் குடும்பங்களுக்கு ஒவ்வொரு குடும்பத்துக்கும் அரை ஏக்கர் வீதம் ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

பிற்பகல் 6-40

இது முதற்கட்டமாகும். இதனால் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஆண்டொன்றுக்கு ஒரு குடும்பத்திற்கு ரூபாய் இருபதாயிரம் வருவாயும் (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்காலங்களில் இவ்வருவாய் மும்மடங்காகப் பெருக வாய்ப்பும் உள்ளது. இவர்களது ஆர்வத்தின் அடிப்படையில் தேவைக்கேற்ப மேலும் தொழிற் பேட்டைகள் நிறுவப்படும் என்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் புதிய திட்டத்தை மனமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் கடலில் இறால் மற்றும் மீன்பிடிக்கச் செல்லும்போது இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவதை தவிர்ப்பதோடு, பத்திரமான பாதுகாப்பான வாழ்வை இம்மீனவர்கள் பெறமுடியும். இறால் வளர்ப்பு திட்டத்தில் இம்மீனவர்கள் நிலையான வருமானத்தையும் பெற முடியும். மீனவர்கள் துயர்துடைத்து அவர்கள் மறு வாழ்விற்கு மீனவர்களை காத்து வழி நடத்தும் தெய்வம் இதற்காக ஒதுக்கிய தொகை எவ்வளவு தெரியுமா? 7.5 கோடி என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் நமது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடந்த சுதந்திர தினத்தில் இழந்த கச்சத்தீவை மீட்டுத் தீருவோம் என்று சபத உரை ஆற்றியதை நினைவில் கொண்டுவர விரும்புகிறேன். ஏனெனில் இச்சபத உரையிலிருந்தே மீனவர் நலனில், மீனவர் உரிமையில் மீனவரை பாதுகாப்பதில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு அக்கறை கொண்டுள்ளார்கள் என்பது தெரியும். கச்சத் தீவிற்கு அருகிலுள்ள இறால்களை பிடிக்க, அறியா

மல் செல்லும் மீனவர்கள், இலங்கை கடற்படையினரிடம் அவதிக்குள்ளாவதிலிருந்து மீட்சி பெறவே, இப்புதிய திட்டம் வகுக்கப்பட்டு பாதுகாப்பான வாழ்க்கையை அவர்கள் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்விவரங்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. சுவாமிநாதன் மற்றும் திரு.பி.வி. இராஜேந்திரன் அவர்கள் எழுப்பியுள்ள வெட்டுத் தீர்மானத்திற்கு ஏற்ற விடையாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தன்னுடைய அறிவாற்றலால் தமிழகத்தின் புதிய தொழில் கொள்கையை உருவாக்கி தொழிற் புரட்சிக்கு வித்திட்ட நம்முடைய நாடு போற்றும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நிலத்தில் உருவாக்கப்பட்ட மற்ற பல தொழில்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் மாவட்ட தொழில் மையங்களைப்போல் இறால் மற்றும் மீன் போன்ற கடல் வாழ் உயிரினங்கள் தொழிலைப் பெருக்க இதுவரை எவருமே திட்டமிடாத மற்ற மாநிலங்கள் பாராட்டும் அளவுக்கு மாவட்ட மீன் மற்றும் இறால் வளர்ப்பு தகவல் மையங்கள் District Acqua Culture Information Centre என்ற புதிய மையங்களை உருவாக்கி அதன்மூலம் மீன்வளத் தொழிலை பெருக்கவும், வங்கிக் கடன் பெறவும், தொழில் நுட்ப செய்திகளை தொழில் முனைவோருக்கு அளித்தும் மற்றும் இத்தொழிலில் ஈடுபடுபவர்கள் விரும்பும் எல்லா உதவிகளை அளித்தும் மாவட்ட இறால் மற்றும் மீன்வளர்ப்பு தகவல் மையங்கள் செயல்படும் என்கின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய புதிய திட்டத்தை மெத்த மகிழ்ச்சியோடு அறிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). இந்த சபையில் இதுவரை யாருமே எண்ணிப் பார்க்க முடியாத இணையற்ற திட்டத்தை ஒப்பற்ற தலைவி மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதனால் ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த நபர்களை கண்டெடுத்து அவர்களுக்கு தேவையான தொழில் நுட்ப அறிவு தந்து மீன் இனத்தை தேர்வு செய்து தந்து, நல்லமுறையில் மீன் உற்பத்தி செய்யமுடியும். மேலும் மீன்குஞ்சு உற்பத்தி செய்தல், மீன்வளர்ப்பு குளத்தினை பராமரித்தல், தேர்ந்தெடுத்த நல்ல தீவனம் அளித்தல் மற்றும் சுகாதார முறையில் மீன் விற்பனை செய்தல் போன்ற பல்வேறு மீன் வளர்ப்பு பணிகளுக்கான தொழில் நுட்பம் மற்றும் தேவையான தகவல்கள், ஆலோசனைகள் வழங்க இயலும்.

இந்த விவரங்களும் மற்றும் பொதுவாக மீனளக் கொள்கையைப் பற்றி 1992–93 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்க குறிப்பில், குறிப்பிடப்பட்ட விவரங்களும் மாண்புமிகு



உறுப்பினர்கள் திரு. எம். ஆண்டி அம்பலம், திரு. எச்.எம். ராஜு, திரு. ஏ. தெய்வநாயகம், திரு. கே. குமாரதாஸ், திரு. எம். ராசாராம், திரு. பி. வி. இராசேந்திரன் ஆகியோர் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களுக்கான விடையாக அமையும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கொள்கையும், லட்சியமும் இல்லாத கடந்த கால ஆட்சியில், இறால் வளர்ப்பில் எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் சரியான கொள்கை முடிவு எடுக்கப்படாததே ஆகும். இதனால் எதிபார்த்த விளைவுகள் ஏதுமில்லை. ஆனால் நிலையான கொள்கைகளும், லட்சியமும் கொண்ட மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் இறையுள்ளம் கொண்ட தங்கத் தலைவி அவர்கள் புத்துயிர் அளித்து மறுமலர்ச்சியான நிலக்குத்தகை கொள்கை ஒன்றை அவரின் கூறிய மதி நுட்பத்தால் நடைமுறைக்கு கொண்டு வந்திருக்கிறார். இக்கொள்கையின் அடிப்படையில் 2–4–1992 நாளிட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத்துறை அரசாணை எண். 121-ல் அரசு உவர் நீர் நிலங்களை (Brackish Water Land ) குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய ஆணை வழங்கியுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் நில ஒதுக்கீடு குறித்து விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டு உயர்மட்டக் குழுவால் நில ஒதுக்கீடுகள் இறுதியாக்கப்படும்.

நிலக்குத்தகை காலம் 10 ஆண்டுகால முன்னுரிமை விண்ணப்பதாரருக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ. 100 வீதமும், சிறுதொழில் முனைவோருக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ. 500 வீதமும் நடுத்தர மற்றும் பெரிய தொழில் முனைவோருக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ. 750 வீதமும் ஆண்டு குத்தகை திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. குத்தகை எடுத்தவர், அரசு நிலத்தினை பயன்படுத்தாமல் முடக்கி வைப்பதை தடுக்கும் பொருட்டு முதலாண்டு இறுதிக்குள் இறால் வளர்ப்பு பணிகளை கணிசமான அளவு மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. தவறினால் முதலாண்டின் முடிவில் குத்தகை நிலம் காரணம் காட்டாமல் ரத்து செய்யப்பட்டு நிலத்தை அரசு ஏற்கும். இந்த ஆண்டில் 2,000 ஹெக்டேர் வரையில் உவர்நீர் நிலம் இறால்வளர்ப்பின் கீழ் கொண்டு வரப்படும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

[திரு. டி. ஜெயகுமார்] [1992 ஏப்ரல் 20

பிற்பகல் 6-45

எவ்வளவோ நிதி ஆதார நெருக்கடி இருந்தபோதிலும் மீனவர் நலம் காக்கும் நம்முடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு சென்ற ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் இறால் வளர்ப்பு தொழிற்பேட்டை அமைக்கும் திட்டத்தினை வெளியிட்டது. அச்சீரிய திட்டம் சிந்தனை செல்வம் கொண்ட நம்முடைய புரட்சித் தலைவி அவர்களின் செயல் திட்டத்தின் மூலம் சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள விளாத்திக்குளம் தொகுதியில் திருவைக்குளத்தில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ரூ. 7.5 கோடி செலவில் இறால் வளர்ப்பு தொழிற்பேட்டை ஒன்றை அமைத்திட முதல் தவணையாக பங்குத்தொகை (மேசையைத் தட்டும் ஒலி) மூலதனமாக அக்கழகத்திற்கு ரூ. 25 லட்சம் வழங்கிட நமது தமிழக முதலமைச்சர் தமிழகத்தினுடைய நம்பிக்கை நட்சத்திரம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள் என்பதை நான் மனமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தொழில் முனைவோர்க்கு உள்ளீட்டு வசதிகள் செய்து தரவும் 8—வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாண்டிலேயே இத்திட்டம் குறிப்பிட்ட அளவில் முடியும். மேலும் இத்திட்டத்தின் முதற் கட்ட அளவிலேயே ரூ. 15 கோடி அளவிற்கான இறால் ஏற்றுமதி செய்ய வாய்ப்புள்ளது. இத்தொழில் லாபம் தருவதோடு அன்னியச் செலவாணியை ஈட்டித்தரும். எனவேதான், மத்திய அரசின் கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி வளர்ச்சி நிறுவனம் இதுகுறித்து எளிய முறையில் வகுத்து கண்காட்சி, கருத்தரங்குகள் மூலம் உலக வர்த்தகர்கள் பங்கு பெறவும் நம்நாட்டின் மீன்வளம் பற்றி அறிந்திடவும் ஆவன செய்து வருகிறது.

இந்த விவரங்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. சுவாமிநாதன் மற்றும் திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் ஆகியோர் எழுப்பியுள்ள வெட்டுத் தீர்மானங்களுக்கு உரிய பதிலாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இதய தெய்வப் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் செங்கற்பட்டு எம்.ஜி.ஆர்., தஞ்சாவூர், இராமநாதபுரம், வ.உ. சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழக உதவியுடன் 16 கோடி மதிப்பீட்டில் நாடே போற்றுகின்ற ஒரு ஒருங்கிணைந்த கடல் அபிவிருத்தித் திட்டம்—மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் செயல்வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 34 கடலோர கிராமங்களில் உள்ள 6,050



1992 ஏப்ரல் 20] [திரு. டி. ஜெயகுமார்]

ஏழை எளிய மீனவர்கள் பயன்பெறுவார்கள் என்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் புரட்சிகரமான புதிய திட்டத்தை இம்மாமன்றத்திற்கு (மேசையைத் தட்டும் ஒலி) அறிவிப்பதில் மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

மக்களின் நலனே தன்னலம் என்று நாளும் செயல்பட்டு வரும் தமிழக அரசின் தாய் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் முக்கிய திட்டங்களில் ஒன்றுதான் 'கூட்டு காப்புறுதித் திட்டம்'. அலைகடல் மேலே அலையாய் அலைந்து தொழில் செய்யும்போது உயிரைக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டாலோ அல்லது பகுதி ஊனமடைந்தாலோ தமிழக மீனவர் நலனுக்காக மீனவர்களின் தெய்வம் நமது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இத்திட்டத்தின் கீழ், ரூ. 15,000 ஆக இருந்த நிவாரணத் தொகையை 1991-92 ஆம் ஆண்டில் ரூ. 21,000 ஆக உயர்த்தி ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் மீனவர்களின் மீது அன்பு கொண்ட கருணையுள்ளத்தால் அத்தொகையை 1992-93 ஆம் ஆண்டிலிருந்து ரூ. 25,000 ஆக (மேசையைத் தட்டும் ஒலி) உயர்த்திட நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். பகுதி ஊனம் அடைந்தால் அதில் பாதித்தொகையான ரூ. 12,500 நிவாரணமாக கிடைக்கும். இப்படி மீனவர்களுக்கு நலமே செய்து வரும் அன்பே வடிவான நமது காவல் தெய்வத்திற்கு மீனவர் குலமே நன்றிக்கடன் பட்டுள்ளது.

எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சுவாமிநாதன் அவர்கள் கோரியுள்ள வெட்டுத் தீர்மானத்திற்கு இது உரிய பதிலாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எத்தனை எத்தனையோ சிறப்பு மானியங்கள் வழங்கும் நமது மாண்புமிகு புரட்சித் தலைவியின் புனிதமான ஆட்சியில் விசைப்படகு வாங்குவோருக்கு 20 விழுக்காடு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. ஒதுக்கீடு குறைவாக இருப்பதால் மானியம் பெறுபவர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. எனவே, இதை ஒரு சிறப்பு திட்டமாக கருதி, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ரூ. 50 லட்சம் ஒதுக்கீடு செய்து (மேசையைத் தட்டும் ஒலி) மானியம் பெறவிருக்கும் அனைவருக்கும் வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மெத்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மீனவர்கள் மீனவர் சங்கத்தின் மூலம் தங்கள் தொழிலுக்குத் தேவையான வலைகள், கட்டுமரங்கள் வாங்க மானியத்துடன் கூடிய புதிய கடனை, தகுதியின் அடிப்படையில் பெறவும் வழிவகை செய்யப்பட்டு உள்ளது. இதனால் மீனவர்கள் கட்டுமரம், வலை போன்றவைகளை 20 சதவீதம் மானியமாக பெறலாம். மீதமுள்ள தொகை சொந்த நிதியில் இருந்தோ அல்லது வங்கிக் கடனாகவோ பெற்று வாங்கலாம்.

[திரு. டி. ஜெயகுமார்] [1992 ஏப்ரல் 20

இந்த விவரங்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். சிங்காரம் மற்றும் திரு. பி. வி. இராஜேந்திரன் ஆகியோர் எழுப்பியுள்ள வெட்டுத் தீர்மானத்திற்கு விடையாக அமையும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மீன் குஞ்சு உற்பத்தியில் உள்ள பற்றாக்குறையை ஈடுசெய்ய கடந்த 1991— 92 ஆம் ஆண்டில் நமது ஒப்பற்ற தலைவி மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசில் 20 விழுக்காடு ரூ. 25,000-க்கு மிகாமல் தனியார் மீன் குஞ்சு பொரிப்பகம் அமைக்க ரூ. 3.75 லட்சம் மானியத்தொகை வழங்கப்பட்டது. இந்த திட்டத்தின் பால் பெரிதும் ஈர்க்கப்பட்ட மீன் வளர்ப்போர் இந்த ஆண்டு 1,200-க்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் இந்தத் திட்டத்தின்பலன் கருதி, அதில் பங்கேற்க அரசுக்கு மனு செய்திருக்கிறார்கள். இத்திட்டத்திற்கு மகத்தான வரவேற்பு உள்ளதால் நடப்பு ஆண்டில் இத்திட்டத்தினை மேலும் விரிவுபடுத்த சென்ற ஆண்டிலிருந்த ரூ. 3.75 இலட்சத்தை இவ்வாண்டு 35 நபர்களுக்கு தொகை ரூ. 8.75 இலட்சம் மானியம் வழங்கிட மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொன்னான முடிவு எடுத்து இருக்கிறது என்பதை இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கூறிய திட்டம் தவிர, தமிழ்நாடு மீன் துறை கட்டுப்பாட்டில் 20 மீன்குஞ்சு உற்பத்தி பண்ணைகளும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகக் கட்டுப்பாட்டில் 5 மீன் குஞ்சு உற்பத்தி பண்ணைகளும், மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின்கீழ் 5 மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைகளும் உள்ளன. 26 தனியார்களும் மீன்குஞ்சு வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். பவானிசாகர் மற்றும் மணிமுத்தாறு ஆகிய இரு பண்ணைகளில் 100 இலட்சம் மீன்குஞ்சு உற்பத்தி செய்ய முடியும். எனவே, மீன்குஞ்சுகள் பெறுவதில் ஏதும் சிரமம் இல்லை.

பிற்பகல் 6-50

மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. ஆர். வெங்கடேசன் அவர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானத்துக்கு இது பதிலாக அமையும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே எல்லா மாநில முதல்வர்களைக் காட்டிலும் நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி எப்படி முதல்வரின் முதல்வராக திகழ்கிறார்களோ அப்படியே உலகத்தில் கிடைக்கும் முத்துக்களில் தமிழகத்தில் கிடைக்கும் முத்துக்கள்தான் நல்முத்துக்கள். இந்த முத்து வளர்ப்புத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்தின்மூலம் 34 இலட்சம் ரூபாய் செலவில் 5 ஆண்டுகளில் செயல்பட அதிவேக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை உங்களுக்கு அறிவிப்பதில் புரட்சித்



1992 ஏப்ரல் 20] [திரு. டி. ஜெயகுமார்]

தலைவி அரசு பெருமைப்படுகிறது என்பதை மிக மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதுமட்டுமல்ல மத்திய அரசின் உயிரியல் தொழில் நுட்பத்துறை (Bio-Technology Department) முத்துச்சிப்பி பொரிப்பகம் அமைக்கும் பொருட்டு ரூ. 22 இலட்சம் மான்யமாக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசுக்கு வழங்கியுள்ளது என்பதை உவகையோடு உங்களுக்குத் தெரிவிக்கிறேன். மேலும் தனியார் துறையிலும் கூட்டு முயற்சியிலும், கூட்டுறவு முறையிலும் முத்து மற்றும் இறால் வளர்க்கலாமெனவும் கொள்கையளவில் நமது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு வரையில் தென்னாற்காடு, தஞ்சாவூர், சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களில் உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் (Brackish Water Fish Farmers Development Agencies) தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்த ஆண்டும் செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் மேலும் உவர்நீர் மீன் வளர்ப்பு மேம்பாட்டு முகமை துவங்க மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஆணை பிறப்பித்துள்ளார்கள். இத்திட்டத்தின்கீழ் 50 ஹெக்டேர் நிலம் எடுத்துக் கொள்ளப்பட்டு பயனடைவோருக்கு மான்யமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ. 30,000 (முப்பதாயிரம்) வழங்க தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்திற்காக ரூ. 15.26 இலட்சம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து தந்துள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த விவரம் மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி அவர்கள் எழுப்பியுள்ள வெட்டுத் தீர்மானத்திற்கு பதிலுரையாக அமையும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில்தான் ஆண்களுடன் சரிநிகர் சமமாக பெண்களும் தொழிலில் ஈடுபட்டு சமூகத்தில் உயர்ந்த நிலையை அடைந்துள்ளார்கள். குறிப்பாக மீன் விற்பனையில் முக்கிய பங்கு வகிப்போர் மீனவ மகளிரே ஆவர். நமது மாநிலத்தில் 10,000 மீனவ மகளிரை உறுப்பினராகக் கொண்ட 63 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

கடலிலிருந்து மீன்கள் வந்து இறங்கும் மையங்களிலிருந்து மீன்களை சுகாதாரமான நிலையில் மீன் அங்காடிகளுக்கு எடுத்துச் செல்வதே மீன்களுக்கு தக்க விலை கிடைத்திட ஏதுவாகும். இதனை கருத்தில் கொண்டு டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு மீனவ மகளிரின் இன்னல்களைக் களைந்து: பொருளாதார நிலையை மேம்படுத்திடவும், புரட்சித் தலைவியின் கருணை உள்ளம் 30,000 (முப்பதாயிரம்) பனை ஓலை கூடைகளை இல்வசமாக வழங்கிட (மேசையைத் தட்டும் ஒலி) முன் வந்துள்ளது என்பதை இம்மாமன்ற உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியோடு கூறிக்கொள்கிறேன்.

பிற்பகல் 6.55

மேலும் மீனவர்கள் மீன் வியாபாரம் செய்ய ஐஸ் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. கடலோர கிராமங்களில் இணைப்புச் சாலைகள் அமைத்து தரப்படுகின்றது. இதைத் தவிர, பத்து இடங்களில் மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் ஜெட்டிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உள்ளமைப்பு வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. புதியதாக நாகப்பட்டினத்தில் மீன்பிடி துறைமுகம் அமைக்க ரூ. 102.2 இலட்சம் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டு மத்திய அரசின் நூறு விழுக்காடு நிதி உதவி கோரி மைய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதியுதவி கிடைக்கப் பெற்றதும் கடுவை ஆறு பாலத்திற்கு கிழக்கே உள்ள பகுதியை ஆழப்படுத்தி தங்குதள வசதிகள் அமைக்கும் பணி துறைமுகத் துறை மூலம் செயல்படுத்தப்படும். மேலும் பிற துறைகளைச் சார்ந்த நீர்நிலை பகுதிகளில் மீன் வளர்க்க அந்தந்த பகுதிகளிலுள்ள மீனவ கூட்டுறவு சங்கங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டு, சங்க உறுப்பினர்களால் மீன் வளர்ப்பு செய்யப்பட்டு, மீன் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதைத் தவிர்த்து தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்தால் மீன்விற்பனை அங்காடிகள் மூலம் பெரிய நகரங்களிலும் மீன்விற்பனை செய்யப்படுவதோடு, நமது மாநிலத்தில் பதிமூன்று மாவட்டங்களில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் உருவாக்கப்பட்டு தனியாருக்கு மீன் வளர்ப்பு குளங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு மீன் வளர்ப்பு செய்து, மீன் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கடல் மீன்கள் சரியாக கிடைக்காத வட ஆற்காடு, தர்மபுரி, சேலம், பெரியார், கோவை போன்ற மாவட்டங்களில் உள்ள பொதுமக்களுக்கு தற்போதுள்ள எரியெண்ணை விலை ஏற்றத்தால் ஏற்றிச்சென்று சில்லரை விற்பனை செய்வது கூடுதல் செலவினமாக அமையும். என். வெங்கடேசன் ஆகியோர் எழுப்பியுள்ள வெட்டுச் தீர்மானங்களுக்குப் பதிலுரைய க அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



தமிழகம் கல்வியில் உயர வேண்டும் என்ற இலட்சியத்திற்காக அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் இலட்சியத் தாய் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் படிப்பறிவை அனைவரும் பெற்றிட வேண்டுமென்று, குறிப்பாக மீனவர் சமுதாயம் கல்வி கற்று மேம்பாடடைய வேண்டுமென்று நாளும் உழைத்துக் கொண்டு இருக்கின்ற நமது 20 ஆம் நூற்றாண்டின் இணையற்ற முதலமைச்சராகப் பீடுநடை போட்டு வரும் தமிழகத்துத் தங்கத் தலைவி மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தகுதி வாய்ந்த 20 மீனவ மாணவ மாணவிகளுக்கு அவர்களின் கல்வியில் ஆக்கமும், ஊக்கமும் அளித்திடும் பொருட்டு தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திலிருந்து ஆண்டுதோறும் சிறப்பு உதவித் தொகை வழங்கிட மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு திட்டமிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டம் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய சிந்தனையிலிருந்து உருவெடுத்த உன்னதமான கல்வித் திட்டமாகும். மீனவர்கள் எந்த அளவுக்கு அவரது சிந்தனையில் இடம் பெற்றுள்ளனர் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

''வெள்ளி நிலாவே விளக்காய் எரியும் கடல்தான் எங்கள் வீடு. முடிந்தால் முடியும், தொடர்ந்தால் தொடரும் இதுதான் எங்கள் வாழ்க்கை'' என்று நிச்சயமற்ற—நிம்மதியற்ற—வாழ்க்கை நடத்தும் மீனவர்களுக்கு நிச்சயமான—நிரந்தரமான—வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் இயற்கையின் சீற்றத்தை எதிர்த்துப் போராடும் கடற்கரை மீனவர்களுக்குப் பாதுகாப்பான இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செயல்படுத்துகிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பது அனைவருக்கும் தெரியும். இதுவரையில் 13,862 வீடுகள் 180 கடலோர கிராமங்களிலே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மக்கள் சேவைக்கெனத் தன்னை மனதார அர்ப்பணித்துக்கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தாராள மனப்பான்மையுடன் இரண்டாயிரம் வீடுகளுக்குப் பதிலாக 2,100 வீடுகள் ரூ. 3.53 கோடி செலவில் கட்டலாம் என (மேசையைத் தட்டும் ஒலி) கருணை உள்ளத்தோடு ஆணையிட்டுள்ளார்கள். இவ்வீடுகள் இந்த வருடத்தில் கட்டி முடிக்கப்படும். இதில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு என 699 வீடுகள் கட்டப்படும். முதல் தவணையாக ரூ. 86,53,620 ஏற்கனவே குமரி மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 32,29,380 ரூபாய் விரைவில் வழங்கப்படும். வீடுகள் கட்டுமானப் பணியும் விரைவில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் 1992-93 ஆம் ஆண்டிலும் 2,000 இலவச வீடுகள் கட்டித் தரப்படும் என்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதையும் . மகிழ்ச்சியோடு இந்த

[திரு. டி. ஜெயகுமார்] [1992 ஏப்ரல் 20

எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர், சிங்காரம் அவர்கள் எழுப்பியுள்ள வெட்டுத் தீர்மானத்திற்கு பதிலுரையாக இது அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்மைக் காலங்களில் இராமநாதபுரம், இராமேஸ்வரம், கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களிலிருந்து மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களும், மீன்பிடி படகுகளும் காணாமல் போகும் நிகழ்வுகள் ஏற்பட்டு வருகின்றன, இதற்கு இயற்கையின் சீற்றம் மட்டும் காரணமல்ல, இரண்டாண்டு காலமாக, இருளடைந்த ஆட்சியைக் கக்கி விட்டுச் சென்ற முந்தையரின் முறையற்ற ஆட்சியில்தான் மீனவர்கள். தீவிரவாதிகளின் தாக்குதலுக்கும். இலங்கைக் கடற்படைகளின் தாக்குதலுக்கும் ஆட்பட்டனர். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தொடர் நடவடிக்கையால், தீவிரவாதிகளின் கொட்டம் இரும்புக்கரம் கொண்டு அடக்கப்பட்டுள்ளது, (மேசையைத் தட்டும் ஒலி) இருப்பினும். அங்கொன்றும், இங்கொன்றுமாக மீனவர்கள், படகுகள் காணாமல் போகும் நிகழ்வுகள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளன. உடனே நடவடிக்கை எடுக்கப்பட்டு தேடப்படுகிறது. இதிலுள்ள சிரமங்களை தவிர்த்து உடனடியாக நடவடிக்கை எடுக்க தங்கத் தலைவி அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள எல்லா கடலோர மாவட்டங்களிலும் ஒவ்வொரு 'தொடர்பு முனைகள்' (Nodal Points) ஏற்படுத்த வேண்டுமெனவும், இத்தகைய தொடர்பு முனைகளை அமைத்திட தற்போது மீட்புப் படகுகள் நிறுத்தப்பட்டுள்ள சென்னை, இராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மூன்று இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்றும், இதற்கென ரேடியோ தொலைபேசிகள் வாங்கவும் சுங்கவரி மற்றும் நிர்மாண செலவுகளுக்காகவும் ரூ. 2.22 லட்சம், 1992–93-ஆம் ஆண்டு திட்டத்தில் ஒதுக்கப்படுமென நமது டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மிக மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இதுவரையில் கூறிய விவரங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய வினாக்களுக்கும், வெட்டுத் தீர்மானங்களுக்குப் திருப்தியளிக்கும் வகையில் பதிலுரையாக அமைந்திருக்குமென கருதுகிறேன், எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள், தங்களது வெட்டுத் தீர்மானங்களைத், திரும்பப் பெற்று, மீனளத் துறையின் மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,



1992 ஏப்ரல் 20] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய மீனளத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு புதிய திட்டத்தை அறிவித்தார்கள், இந்தப் புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு இங்கே நம்மை எதிர்நோக்கியுள்ள ஒரு பெரிய பிரச்சினை நம்முடைய கடற்கரை ஓரத்திலுள்ள மீனவர்கள் குறிப்பாக இராமேஸ்வரம் பகுதியிலுள்ள மீனவர்கள் ஆழ் கடலில் சென்று மீன் பிடிக்க முடியவில்லை என்பதுதான். இதுபற்றி அடிக்கடி இந்தப் பேரவையிலே கேள்விகள் எழுப்பப்பட்டு பல முறை இந்தப் பொருள் இங்கே விவாதிக்கப்பட்டுள்ளது. இதற்காகத்தான், கச்சத் தீவை மீட்க வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தைக் கூட இங்கே நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பினோம். ஆனால், கச்சத் தீவை மீட்பது என்பது, விரைவில் நடக்கக்கூடிய, நடைபெறக் கூடிய ஒன்றாகத் தெரியவில்லை. ஆனால், நம்முடைய மீனவர்கள், குறிப்பாக இராமேஸ்வரம் பகுதியிலுள்ள மீனவர்கள் ஆழ்கடலில் சென்று மீன் பிடித்தால்தான் ஜீவனம் நடத்த முடியும்.

பிற்பகல் 7-05

அதே சமயம் அவர்கள் 'இண்டர்நேஷனல் பவுண்டரி லைனைக் கடந்து சென்று, கச்சத் தீவு அருகில் உள்ள கடல் பகுதியில் மீன் பிடித்தால்தான் அவர்களுக்குப் போதிய அளவு நல்ல வகை மீன்கள் கிடைக்கின்றன. நம்முடைய இந்தியக் கடல் எல்லைக்குள் மீன் பிடிக்கச் சென்றால் அவர்களுக்குத் தேவையான அளவு நல்ல ரக மீன்கள் கிடைப்பதில்லை. அதனால் அவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ பலமுறை 'இண்டர் நேஷனல் பவுண்டரி லைனைக்' கடந்து செல்லும்போது இலங்கைக் கடற்படையினர் அவர்களுடைய படகுகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி, அவர்கள் பிடித்து வைத்திருக்கின்ற மீன்களை எல்லாம் 'confiscate' செய்து. அவர்களுடைய வலைகளையெல்லாம் பிடுங்கிக் கொண்டு, அவர்களுடைய படகுகளை எரித்து, இப்படிப்பட்ட சம்பவங்கள் எத்தனையோ நடந்திருக்கின்றன. எத்தனையோ மீனவர்கள் தங்கள் உயிரைக்கூட இழந்திருக்கிறார்கள். இருப்பினும், வேறு வழியின்றி, அவர்களுக்கு வேறு தொழில் தெரியாது என்பதால், அவர்கள் திரும்பத் திரும்ப இந்த அபாயகரமான தொழிலிலேயே ஈடுபட்டு, தினமும், காலையில் அவர்கள் படகில் ஏறிச் செல்கின்ற போது அன்று இரவு உயிருடன் திரும்புவார்களா என்று அவர்களுக்கும் தெரியாது, அவர்களுடைய குடும்பத்தினருக்கும் தெரியாது, அவர்களுடைய மனைவிமார்களும் ஒரு நிச்சயமற்ற சூழ்நிலையிலே வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இதற்கு ஏதாவது ஒரு மாற்று ஏற்பாடு செய்து ஆகவேண்டும் என்ற எண்ணத்தில்தான் இப்போது ஒரு புதிய திட்டம் இங்கு அறிவிக்கப்பட்டது. இந்த மீனவர்களுக்கு மீன் பிடிக்கும்

தொழிலைத் தவிர வேறு எந்தத் தொழிலும் தெரியாது. பரம்பரை பரம்பரையாக இந்தத் தொழிலைத்தான் செய்து வருகிறார்கள். எனவே வேறு ஒரு தொழிலை அவர்களுக்குப் பயிற்றுவித்து அந்தத் தொழிலில் ஈடுபடுத்த முயற்சித்தால் அந்த முயற்சி, நிச்சயமாக வெற்றி பெறாது என்பதால்தான் அவர்களுக்குக் கடற்கரை ஓரத்திலேயே சில நிலங்களை ஒதுக்கி, ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பை அவர்களுக்காக, ஒதுக்கி, அந்த நிலப்பரப்பில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு சிறிய அளவு நிலமாவது குத்தகைக்குக் கொடுத்து, குறைந்த அளவு குத்தகைக்குக் கொடுத்து, மானியமாகவும், கடனாகவும் அரசே அவர்களுக்கு உதவி செய்து, அவர்கள் அந்த நிலத்திலேயே Prawn culture இறால் வளர்ப்பு, வேறு கரையிலேயே வளர்க்கக்கூடிய சில மீன் ரகங்கள் இவற்றையெல்லாம் வளர்ப்பதற்கு உதவி செய்யலாம் என்ற புதிய திட்டத்தை இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இப்படி ஆயிரம் மீனவர்களுக்கு, ஒவ்வொருவருக்கும் அரை ஏக்கர் நிலம் வழங்கப்படும் எனபதை அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் எனக்குக் கிடைத்த தகவலின்படி, கடலோரப் பகுதியில், குறிப்பாக, இராமேஸ்வரம் பகுதியில் மட்டும் 1 இலட்சம் மீனவக் குடும்பங்கள் இருக்கின்றன. எனவே 1 இலட்சம் பேர்களுக்காவது மாற்றுத் தொழில் ஏற்படுத்திக் கொடுத்தால்தான் அவர்களுடைய வாழ்க்கைக்கு வழி செய்து கொடுத்ததாக அமையும். எனவே, ஆயிரம் பேர்களுக்கு என்று இப்போது அறிவிக்கப்பட்ட திட்டம் இந்த ஆயிரம் பேர்களுடன் நின்று விடாது என்பதைத்தான் இந்த நேரத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பரீட்சார்த்தமான முறையில்தான் ஆயிரம் பேர்கள் என்று இப்போது அறிவித்திருக்கிறோம். இதை அந்த மீனவர்களே ஏற்றுக்கொண்டு வருகிறார்களா, இந்தப் புதிய தொழிலில் ஈடுபட விரும்புகிறார்களா, இது எந்த அளவு பலனைத் தருகிறது, வெற்றிகரமாக நடைபெறுகிறதா என்பதையெல்லாம் பார்த்து, இந்த ஆயிரம் பேர்கள் இதில் வெற்றிகரமாக ஈடுபட்டு மேலும் சிலர் தங்களுக்கும் இந்த உதவி செய்து தரப்பட வேண்டும் என்று விண்ணப்பங்கள் தருவார்களேயானால் அவர்களுக்கும் இந்த உதவி செய்து தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவுக்கு இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மீனவத் துறை பற்றிய விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண். 21—மீனவம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன். திரு. ஆர். சிங்காரம்.



திரு. ஆர். சிங்காரம் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

''மீனளம் பற்றிய 21-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 14,97,88,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் '' என்னும் மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி). அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கதர்-இராமத் தொழில்கள் மற்றும் ஊரகத் தொழில்கள் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலுரை. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

பிற்பகல் 7-10

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 கோடி மக்கள் இதயத்தில் இடம் பெற்று, ஆயுதக் கலாச்சாரத்தை அகற்றி, அழிவுச் சக்திகளை அப்புறப்படுத்தி, துரோகச் சக்திகளைத் தூக்கி எறிந்து மக்கள் எதிரிகளை நிரந்தரமாக அடையாளம் காட்டி, தமிழகத்தை மீண்டும் அமைதிப் பூங்காவாக மாற்றிய புரட்சித் தாயே, ஏழை எளிய பாட்டாளி மக்களின் துயர் துடைக்க திங்கள் தோறும் மக்கள் குறை கேட்கும் கருணைக் கடலே, பொற்காலம் படைத்துக்கொண்டிருக்கும் பொற்கால முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அமைச்சரவையில் அமைச்சராகப் பணிபுரியும் வாய்ப்பினைத் தந்த தமிழக டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களுக்கு நன்றியைச் சமர்ப்பித்து, வணங்கி தமிழ்நாடு கதர்-கிராம மற்றும் ஊரகத் தொழில் துறை மானியக் கோரிக்கைகளின் மீது ஆற்றப்பட்ட உரைகளுக்கான பதிலுரையை மன்றத்தில் வைக்கிறேன்.

[திரு. எஸ் நாகூர் மீரான்] [1992 ஏப்ரல் 20

தமிழ்நாட்டில் கதர் - கிராமத் தொழில்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகள், தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு 1960-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து இவ்வாரியம் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு கதர் - கிராமத் தொழில் வாரியம், கிராமத் தொழில்களின் வளர்ச்சியில் அகில இந்திய அளவில் முதல் இடத்தையும் கதர்-கிராமத் தொழில் வளர்ச்சியில் இரண்டாவது இடத்தையும் வகிக்கிறது. கதர்-கிராமத் தொழில் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டு 96 கிராமத் தொழில்களில் தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம் இதுவரையில் 57 கிராமத் தொழில்களைச் செயற்படுத்தி வருகிறது.

கிராம மக்களை முன்னேற்றவும், சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும் மக்களைக் கைதூக்கி விடவும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மேலான ஆலோசனையின்படி 1991–92–ஆம் ஆண்டில் 83,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதோடு 1992-93 ஆம் ஆண்டில் மேலும் ஒரு இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்திடவும் இவ்வாரியம் திட்டமிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி.)

அவரவர் வசிக்கும் பகுதியிலேயே அவரவருக்குத் தெரிந்த வேலையைச் செய்திட குறைந்த மூலதனத்தில் அதிக வேலை வாய்ப்பினை அளிப்பது இந்த கதர் கிராமத் தொழில் வாரியம் மட்டுமேயாகும். வாழ்க்கைத் தரத்தில் பின்தங்கி, அன்றாட வாழ்விற்கு அல்லற்படும் தோல் தொழில் கைவினைஞர்களின் நிலையினை உணர்ந்து, அவர்களுக்கு சமுதாயத்தில் ஒரு அந்தஸ்தை ஏற்படுத்தும் நோக்கத்தோடு தோல் தொழில் பணிக்கூடங்களை வாரியம் தாட்கோ நிதியுதவியுடன் வழங்கி வருகிறது.

நிலையாக ஓரிடத்தில் அமர்ந்து தங்கள் வருவாயினை அதிகரித்துக் கொள்ளும் பொருட்டு, வாரியம் இதுவரை சிறப்பு மத்திய உதவி நிதியிலிருந்து 7,250 தொழிற்கூடங்களை வினியோகம் செய்துள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு மேலும் 2,000 தொழிற்கூடங்களை வழங்கத் திட்டமிட்டுள்ளது. பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள பனை ஏறும் தொழிலாளர்கள் பணிபுரியும்போது இறக்க நேரிட்டால், அவர்கள் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 10,000 வழங்கப்பட்டு வருகிறது.

நூற்போர் மற்றும் நெசவாளர் நலநிதி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர்களிடமிருந்து 10 விழுக்காடு பிடித்தம் செய்து, வாரியமும் அதே அளவில் செலுத்தி 8.33 விழுக்காடு ஊக்க ஊதியத்துடன் சேர்த்து, நெசவாளர் மற்றும் நூற்பாளர்களுக்கு வழங்குகிறது.



1992 ஏப்ரல் 20] [திரு. எஸ். நாகூர் மீரான்]

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பின்புதான், கதர்-கிராமத் தொழில் பொருட்களின் விற்பனை பிற நவீன உற்பத்திப் பொருட்களுடன் போட்டியிடும்போது விற்பனையிலே பின்தங்கிவிடக்கூடாது என்பதற்காக வாரியம் சில புதிய விற்பனை உத்திகளை மேற்கொள்ள முனைந்துள்ளது. அதன்பொருட்டு, கதர் மற்றும் பாலியஸ்டர் ரகங்களில் பல புதிய வண்ணமிகு ஆடைகளை உற்பத்தி செய்து வருகிறது.

கிராமங்களில் அதிகப்படியாகக் கிடைக்கும் வேப்பெண்ணெயிலிருந்து '' குறிஞ்சி '' என்ற பெயரில் குளியல் சோப்பு தயாரிக்கப்பட்டு நல்ல முறையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது,

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பின்புதான் இந்த நாட்டில் வாழ்கின்ற ஏழை எளிய பாட்டாளி மக்கள் உபயோகத்துக்கு ஏதுவாகக் குறைந்த விலையில் '' ரோஜா மலர் '' நிறத்தில் புதுரக குளியல் சோப்பு தயாரிக்க இவ்வாரியம் முனைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி.) கோபுரம் சலவை சோப்புக்கு நல்ல வரவேற்பு உள்ளது. குறிப்பாக கேரள மாநிலத்தில்தான் நமது கோபுரம் சோப்பு மிகச் சிறந்த முறையில் விற்பனையாகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இப்போது தமிழக மக்களின் விருப்பத்திற்கேற்றாற்போல டிடர்ஜன் சலவைத் தூளும் தயாரிக்கப்பட்டு விரைவில் விற்பனைக்கு வரவுள்ளது.

பிற்பகல் 7–15

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில்தான் விருத்தாசலத்தில் செயலற்ற நிலையில் இருந்த அரசின் மெருகு மண்பாண்ட தொழில் பிரிவை இவ்வாரியம் ஏற்றுக்கொண்டு வண்ண வண்ண அழகுமிகு மெருகு மண்பாண்டப் பொருட்களைத் தயாரிக்கத் தொடங்கியுள்ளது.

இந்த மண்பாண்டப் பொருள்களுக்கு நல்ல வரவேற்பு எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டில், இரண்டு குரோம் தோல் பதனிடும் அலகுகளைத் தொடங்கவும் ஐந்து மின்னணுத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்கவும் இவ்வாரியம் முனைந்துள்ளது.

திருச்சி மாவட்டத்தில் மூன்று செயற்கை ரத்தினக் கற்கள் பட்டைத் தீட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதன் மூலம் 90 கை வினைஞர்கள் பயன் அடைந்துள்ளார்கள். அதே நேரத்தில் 1992–93ஆம் ஆண்டில் வரலாற்றுச்சிறப்புமிக்க மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் மேலும் 15 ரத்தினக் கற்களுக்குப் பட்டை

[திரு. எஸ். நாகூர் மீரான்] [1992 ஏப்ரல் 20

தீட்டும் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்கி 450 கைவினைஞர்கள் பயன் அடைகிற விதத்தில், திருச்சி, புதுக்கோட்டை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் அமைத்திட இவ்வாரியம் முனைந்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி.)

இங்கே மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் குமரி அனந்தன் அவர்கள் கூறியபோது பனைமரம் பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்தியாவில் மொத்தம் 8.00 கோடி பனை மரங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் 5 கோடி பனை மரங்கள் உள்ளன. இத்தகைய தமிழ்நாட்டில், இந்தியாவிலேயே பனைமரங்களில் முதலிடம் வகிக்கக்கூடிய தமிழ்நாட்டில் பனை வாரியம் அமைக்கப்படுமா என்ற வினாவினை எழுப்பினார்கள். தமிழகத்திலே, பொற்கால ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உடனடியாக பனை வாரியம் அமைக்க (மேசையைத் தட்டும் ஒலி) அந்த பனை ஏறும் மக்களின் நலம் கருதி பனை வாரியம் அமைக்க இந்த மாமன்றத்திலேயே ஆணை தந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போல, பனை ஏறும் தொழிலாளர்கள் நாள் ஒன்றுக்கு இரண்டு தடவை பனை மரங்களிலே ஏறவேண்டிய நிலை உள்ளது, அதைக் குறைக்க ஏதாவது தொழில் நுட்பத்தோடு உதவி செய்ய முடியுமா என மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். எனவே, மாண்புமிகு ஆற்றல் மிகுந்த, அறிவாற்றல் மிகுந்த தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் உடனடியாக அதற்கும் ஒரு ஆணையை இந்த மாமன்றத்திலேயே தந்துள்ளார்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கூறியபடி கோபிச்செட்டிப்பாளையத்திலே கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரம் பரிசோதனை செய்து பனை ஏறும் தொழிலாளர்களுக்கு வழங்கி அவை பயன்படுத்தப்படும் என்ற இந்த ஆணையை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தந்து இருக்கின்றார்கள் என்பதை மகிழ்ச்சியோடு இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்கிறேன், (மேசையைத தட்டும் ஒலி.) இந்த பனை மரங்கள் பல்வேறு பொருட்களை இந்நாட்டிற்கு அர்ப்பணித்துக்கொண்டிருக்கின்றது.

இந்த பனை நாரிலிருந்து அழகுமிகு பனைப் பொருட்கள், வெளிநாட்டினரைக் கவரும் விதத்தில் உற்பத்தி செய்யப்பட்டு, ரூ. 1.55 கோடி மதிப்புள்ள பனைப் பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, அதன் மூலம் கணிசமான அளவில் இவ்வாரியம் அன்னியச்செலாவணியை ஈட்டியுள்ளது.

1992–93ஆம் ஆண்டில் 25 புதிய கதர் அங்காடிகளை கதர் அங்காடி இல்லாத ஒவ்வொரு வட்டத் தலைநகரத்திலும் தொடங்க வாரியம் கருதியுள்ளது. அத்துடன், சென்னை மாநகரில் பல்வேறு இடங்களுக்குச் சென்று கதர்-கிராமத் தொழில் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவாக நடமாடும் விற்பனை ஊர்தியொன்று மாண்புமிகு டாக்டர் புரட்சி தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் 2—10—1991 முதல் செயற்பட்டு வருகிறது.



1992 ஏப்ரல் 20] [திரு. எஸ். நாகூர் மீரான்]

1992–93ஆம் ஆண்டில் மேலும் மூன்று நடமாடும் விற்பனை ஊர்திகளை கோவை, திருச்சி, மதுரை போன்ற நகரங்களில் செயற்படுத்த வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மேலான ஆலோசனையின் பேரில்இந்தப்பொருட்களின் தரம் பற்றி பொது மக்கள் அறியும் பொருட்டும், தொலைக்காட்சி, வானொலி போன்ற விளம்பரச் சாதனங்களின் மூலமாக விளம்பரம் செய்யப்படுவது மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் குமரி அனந்தன் அவர்கள் இங்கே ஒரு வினாவினை வைத்ததைப் போன்று, ஏற்கெனவே புரட்சித் தலைவி அவர்கள் ஒரு ஆணையினை வழங்கியிருக்கிறார்கள், இந்த பொருட்களின் சிறப்புகளை விளக்கி புதிய விளம்பரப்படங்கள் தயாரித்திட ரூ. 25 இலட்சம் மானியமாக வழங்கும் (மேசையைத் தட்டும் ஒலி) திட்டத்தையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வழங்கியுள்ளார்கள்,

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. குமரி அனந்தன் அவர்கள் '' பெரியவர் '' ஆனாலும் ஆனார். அவர் 12 ஆண்டுகளாக கேட்ட கோரிக்கைகள் எல்லாம் இன்றைக்கு ஒவ்வொன்றாக நிறைவேறி வருகின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

பிற்பகல் 7–20

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் இளமையாக தோற்றமளிக்க வேண்டுமென்று முயற்சித்தாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய வயதிற்கு அவர் பெரியவர்தான் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் :</u> புதிய விளம்பரப் படங்கள் தயாரித்திட 25 லட்சம் ரூபாய் மானியமாக வழங்கிடும் திட்டத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆணையினை வழங்கியுள்ளார்கள்.

1992-93-ஆம் ஆண்டில் சணல் குச்சியிலிருந்து துகள்களினால் ஆன பலகைகளை தயாரிக்கும் அலகு ஒன்று ஐக்கிய நாடு முன்னேற்ற திட்ட உதவியுடன் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[திரு. எஸ். நாகூர் மீரான்] [1992 ஏப்ரல் 20

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 4 இலட்சம் செலவில் திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டத்தில் எலுமிச்சை புல் தயாரிக்கும் கூட்டுறவுச்சங்கம் ஒன்றை ஆரம்பிக்க சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்படுகிறது.

மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ. 2.10 இலட்சம் மதிப்பீட்டில் டீ இலை சேகரிக்கும் கயிற்றுப் பைகள் தயாரிக்கும் மகளிர் பல நோக்கு தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை நீலகிரி மாவட்டத்தில் நம்பாலக்கோட்டையில் ஆரம்பிக்கவும் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

தமிழ்ப் பெருமக்களின் தனிப்பெரும் தலைவியாக விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைத் தேர்ந்தெடுத்த பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் கதர்-கிராமத் தொழிலை மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் பம்பாய் கதர்-கிராமத் தொழில் ஆணைக் குழுவின் நிதி உதவியுடன் தனியாக ஒரு சிறப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு வாரியம் பரிசீலனை செய்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் கிராமிய மக்களை ஊக்குவித்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பு நல்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில், இவ்வாரியத்திற்கு தனிச் சிறப்பான பங்கு இருப்பதோடு மட்டுமின்றி, இந்த சாதனையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் அது முழு வெற்றி அடையும் என்பதில் ஐயமில்லை.

பட்டு வளர்ச்சித் துறை, வேகமாக வளர்ந்து வரும் பட்டுத் தொழிலினை மேலும் ஊக்குவிக்க மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய அரசு பல சீரிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதன்மூலம் இன்று தமிழகத்தில் சுமார் 60,000 ஏக்கரில் மல்பரி பயிரிடப்பட்டு 3 இலட்சம் நபர்கள் தொடர்ந்து வேலைவாய்ப்பு பெறும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பட்டுத் தொழிலின் மூலம் குறிப்பாக பெண்கள், ஆதிதிராவிட மக்கள் மற்றும் பழங்குடியினர் பயன்பெறும்வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் தேசிய பட்டு வளர்ச்சித் திட்டம், பட்டு வளர்ச்சித் துறை பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. உலக வங்கி மற்றும் சுவிஸ் கூட்டுறவு வளர்ச்சி நிறுவன உதவியுடன் ஐந்தாண்டு திட்டமாக சுமார் 41.77 கோடி ரூபாய் செலவில், தேசிய பட்டு வளர்ச்சித் திட்டம் தமிழகத்தில் 10 மாவட்டங்களில், கடந்த



1992 ஏப்ரல் 20] [திரு.எஸ். நாகூர் மீரான்]

மூன்றாண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்மூலம் 30 ஆயிரம் ஏக்கர்களில் கூடுதலாக மல்பரி பயிர் செய்யப்பட்டு, திட்ட முடிவில் தமிழ்நாட்டில் 1,500 டன் பட்டு உற்பத்தி செய்வதோடு, சுமார் லட்சம் நபர்களுக்கு கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதே இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்திட்டத்தின் வரையறுக்கப்பட்ட இலக்குகள் அனைத்தையும் நல்லமுறையில் செயல்படுத்தியிருப்பதை உலக வங்கி பாராட்டியுள்ளது. இத்திட்டத்தை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மேலான ஆதரவோடு மேலும் 5 மாவட்டங்களான, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., தென்னாற்காடு, தஞ்சாவூர், காமராஜர் மற்றும் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டப் பகுதிகளில் ரூ. 20 கோடி கூடுதல் செலவில், உலக வங்கி அனுமதி அளித்ததன் பேரில் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

பட்டு வளர்ச்சித் துறையில் தேசிய பட்டு வளர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ. 5 இலட்சம் செலவில் கம்ப்யூட்டர் வசதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

உலக வங்கி நிதி உதவியுடன் ரூ. 508 இலட்சம் செலவில் துறையில் உள்ள பணியாளர்கள், தொழில் முனைவோர், அரசு நிறுவன பிரதிநிதிகள், விவசாயிகள், பட்டு நூற்பாளர்கள் ஆகியோருக்கு பயிற்சி அளித்திடும் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் செயல்படுத்தப்பட உள்ளது.

சுவிஸ் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம். சுவிஸ் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் ரூ. 2.5 கோடி செலவில் பகுதி-2 திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும். ரூ. 2.5 கோடியில் ரூ. 2 கோடியை சுவிஸ் நிறுவனம் மானியமாக அளிக்கிறது. மீதித் தொகையை மாநில அரசு ஏற்கும். இந்தத் திட்டத்தின் மூலம் 700 ஹெக்டேர் பரப்பில் மானாவாரி நிலங்களில் மல்பரி மரம் பயிர் செய்ய திட்டமிடப்பட்டு வருகிறது. மாபெரும் சாதனை படைத்து வருகிற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில், தாய்மார்கள் நலம் காக்கும் வகையில், தாயுள்ளத்தின் தலைவியாக விளங்குகின்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் பெண்களுக்கென்று பட்டு நூற்பு மற்றும் பட்டு முறுக்கேற்றும் ஆலை மற்றும் இளம் புழு வளர்ப்பு கூட்டுறவு நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன, (மேசையைத் தட்டும் ஒலி) 20 பெண் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு

[திரு.எஸ் நாகூர் மீரான்] [1992 ஏப்ரல் 20

பட்டு வளர்ச்சித் தொழிலில் ஈடுபடுவதற்கான வசதிகள் செய்து தரப்படும். இந்தத் திட்டம் தமிழ்நாடு, ஆந்திரா மாநிலங்களில் மட்டும்தான் செயல்படுத்தப்படுகிறது.

பிற்பகல் 7 25

பன்னாட்டு விவசாய வளர்ச்சி நிதி நிறுவனம் : பன்னாட்டு விவசாய வளர்ச்சி நிதி நிறுவனம் மூலம் தருமபுரி, சேலம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் இத் திட்டம் பெண்களுக்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மூலம் மானிய உதவியுடன் பெண் விவசாயிகள் மல்பேரி பயிர் செய்து பட்டுப் புழு வளர்ப்பு செய்ய உதவி செய்யப்படுகிறது. 1991–92-ஆம் ஆண்டில் 1074 பெண்கள் இதனால் பயனடைந்துள்ளனர். 1992-93-ல் 1,520 பெண்கள் ரூ. 208.23 இலட்சம் செலவில் இத்திட்டத்தின் மூலம் பயனடைவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 1992-93-ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தை மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மாநில அரசின் பகுதி 2 திட்டத்தின்கீழ் 1991-92-ஆம் ஆண்டு ரூ. 5.5 இலட்சம் என இருந்ததை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பட்டு வளர்ச்சித் துறை மேலும் சிறப்பாக வளர வேண்டுமென்பதற்காக இந்த ஆண்டு ரூ. 28.20 இலட்சமாக உயர்த்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அந்தத் திட்டத்தின்கீழ் விதைக்கூடு உற்பத்திப் பகுதியில் இலவச பூச்சி மருந்து அடிப்பு ; புதிய முசுக்கட்டை இனத்தை அறிமுகப் படுத்துதல்; நோய்த் தடுப்பு பாதுகாப்பு முறை போன்ற சீரிய திட்டங்களும் செயல் படுத்தப்பட உள்ளன.

கைத் திறப் பொருட்கள் வளர்ச்சிக் கழகம் : கைத்திறப் பொருட்கள் வளர்ச்சிக் கழகம் 1991–92 ஆம் ஆண்டில் ரூ. 1.2 கோடிக்கு பொருட்கள் உற்பத்தி செய்துள்ளது. அந்த ஆண்டில் ரூ. 6.5 கோடிக்கு பொருட்கள் விற்பனை செய்துள்ளது. இக் கழகம் முதன் முறையாக 1990–91 ஆம் ஆண்டில் சுமார் ரூ. 11 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. 1991–92 ஆம் ஆண்டில் ரூ. 700 இலட்சம் அளவிற்கு கைத்திறப் பொருட்களை விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் தான் இக்கழகம் ரூ. 25 இலட்சத்திற்கு மேல் இலாபம் ஈட்டக்கூடும் என எதிர் பார்க்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

ஊரக மற்றும் சிறு தொழில்கள் : தமிழ்நாட்டில் வாழ்கின்ற மனித சமுதாயத்தின் அடிப்படைத் தேவைகளான உடுக்க உடை, உண்ண உணவு, இருக்க இடம் மற்றும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் இலவச



[1992 ஏப்ரல் 20] [திரு.எஸ். நாகூர் மீரான்]

மருத்துவத் திட்டத்தின் கீழ் சுகாதார வசதி ஆகியவைகளைப் பெற்ற இந்த மனிதநேயங்கள் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்காக ஊரக மற்றும் சிறு தொழில் துறை என்று அழைக்கப்படும் இத்துறை பின்தங்கிய கிராமப்புற மக்களின் மேம்பாட்டினைக் கருதி சிறு தொழில்களை ஊக்குவித்து, படித்து வேலையில்லாத மகளிருக்கும், இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்பினை உருவாக்குவதற்கு பல திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தும் துறையாகும்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பின்பு அவர்களது அறிவாற்றலால், திறமையால் பல அரியதிட்டங்களை வகுத்து அறிமுகப்படுத்தி செயல்படுத்தியதன் மூலம் ஊரக சிறு தொழில் முன்னேற்றத்தில் நல்ல பலன் கிடைத்து வருகிறது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்த புதிய தொழில் கொள்கையின்படி தொழிற் சாலைகளில் வேலை வாய்ப்பில் மகளிருக்கு தகுந்த பங்கு அளித்திட வகை செய்யும் நோக்கத்துடன் தொழிற்சாலைகளில் 30 விழுக்காட்டிற்கு மேல் மகளிருக்கு வேலை வாய்ப்பு அளித்திடும் தொழிற்சாலைகளுக்கு முதலீட்டில் 5 விழுக்காடு கூடுதல் உதவித் தொகையாக ரூ. 5 இலட்சம் வரை அளிக்கப்படும் என்று மாண்புமிகு டாக்டர் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவிப்பினைத் தொடர்ந்து (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு தகுந்த பலனை அளித்து வருகிறது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்தபடி தொழில்முனையும் மகளிருக்கு ஊக்கம் அளித்திட சிறந்த மகளிர் தொழில் முனைவோர் பரிசுத் திட்டம் இவ்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 7.30

ஒரு முனைத் தீர்வு— பச்சை அல்லது விரைவு வழித் திட்டம்: தொழிற் துறையில் பொற்காலம் காணும் பொருட்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றதுமே மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் தொழில் வளர்ச்சி குறித்து ஒரு செயல் திட்டத்தை உருவாக்கும் எண்ணத்துடன் தொழில் அதிபர்களின் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார்கள். பின்னர் சிறு தொழில் அதிபர்களுக்கென தனியாக ஒரு சிறப்புக் கூட்டத்தை நடத்தி, ஆலோசனைகளைக் கேட்டறிந்து இம்மாநிலம் தொழில் துறையில் முதலிடத்தைப் பெறும் நோக்கோடு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மேலான ஆலோசனைப்படி பல சலுகை

[திரு. எஸ். நாகூர் மீரான்] [1992 ஏப்ரல் 20

களை உருவாக்கி, தற்போது அவை செயல் படுத்தப்பட்டு வருகின்றன. இதில் குறிப்பாக பச்சை அல்லது விரைவுத் வழித் திட்டம் நல்ல பலனை அளித்து வருகிறது.

தமிழகத்தில் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்த, தாமத மின்றி, தொழில் துவங்குவதற்குத் தேவையான எல்லா உரிமங் களையும், அனுமதிகளையும், சிறு தொழில்கள் பெறுவதற்கு இத்திட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மேலான ஆலோசனையின் பேரில் தற்போது ஒருமுனைத் தீர்வு ஏற்பாட்டின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், உரிமங்கள் வழங்கும் துறை களைச் சார்ந்த அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு செயல்படுகிறது. இந்த பச்சை அல்லது விரைவு வழித் திட்டத்தின்கீழ் இயந்திர சாதனங்களில் ரூ. 10 இலட்சத்திற்கும் குறைவான முதலீடுள்ள சிறு தொழில்களுக்குக் குறிப்பிட்ட துறையிலிருந்து முன் உரிமங்கள் பெறுவதிலிருந்து விலக்களிக்சப் பட்டுள்ளது. தற்போது ஒரு முனைத் தீர்வு திட்டத்தையும் பச்சை அல்லது விரைவு வழித் திட்டத்தையும் சீர் செய்து, வழி முறைகளை எளிதாக்கி தொழில் முனைவோர்கள் விரைவில் உரிமம் பெறும் வகையிலே புதிய திட்டமொன்று தீட்டப்பட் டுள்ளது.

சிறு <u>தொழில்களுக்கு சலுகைகளும், மானியங்களும்</u> : தொழில் முனைவோர்களை ஊக்குவிப்பதற்கென்றே பல்வேறு சலுகைகளும், மானியங்களும் தொழில்களுக்குத் தகுந்தபடி தாராளமாகவும், துரிதமாகவும் வழங்குவது என்ற மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய புதிய தொழில் கொள்கையின் அடிப்படையில் 76 பின்தங்கிய வட்டங் களில் முதலீட்டில் 15 விழுக்காடு அல்லது ரூ. 15 இலட்சத்திற்கு மேற்படாமல் மானியமாகவும், மிகவும் பின்தங்கிய வட்டங் களில் 20 விழுக்காடு அல்லது ரூ. 20 இலட்சத்திற்கு மேற் படாமல் மானியமாகவும் அரசு வழங்கி வருகிறது.

புதியதாக பல்வேறு தொழில்கள் துவங்கப்பட வேண்டும், அது மட்டுமல்லாமல், நடப்பிலிருக்கும் தொழில்களை விரிவு படுத்தவும், பல மாற்றுப் பொருட்களைத்தயாரிக்க ஊக்குவிக்க வும், பின்தங்கிய வட்டங்களில் அமைக்கப்படும் தொழில்களுக்கு முழு முதலீட்டுக்கு இணையாக 9 ஆண்டுகள் வரை வணிக வரி தள்ளி வைக்கப்படுகிறது. கூடுதல் முதலீட்டில் 80 விழுக் காடுகள் வரை விரிவாக்கம் மற்றும் வேறு பல மாற்றுப் பொருட் களை தயாரிக்கும் தயாரிப்பாளர்களுக்கு வணிக வரி ஒத்திவைப்பு அளிக்கப்பட்டு வருகின்றது. மிகவும் பின்தங்கிய 31 வட்டங் களில் 5 ஆண்டுகள் வரை மொத்தம் முதலீட்டுக்கு நிகராக வணிக வரி தள்ளுபடி செய்யப்படுகிறது.



1992 ஏப்ரல் 20] [திரு. எஸ். நாகூர் மீரான்]

சிறு தொழில்களை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆலோசனை யின்பேரில் நலிந்த சிறு தொழில்களுக்குப் புத்துயிர் ஊட்டும் வகையில், தனிஅதிகாரம் கொண்ட குழுஒன்று தொழில் துறைச் செயலர் அவர்களின் தலைமையில் செயல்படத்தக்க நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஊராட்சி ஒன்றியங்கள்தோறும், சிறு தொழில்களைப் பரவ லாக ஏற்படுத்த வேண்டுமென்ற கொள்கைக்கேற்ப தொழில் ஆணையர் மற்றும் சம்பந்தப்பட்ட துறையினரின் கூட்டு முயற்சி யினால் தொழில் முனைவோர்களுக்கு வேண்டிய அனைத்துத் தகவல்களும் அளிக்குமுகமாக திங்கள்தோறும் அனைத்து மாவட் டங்களிலும் தகவல் கூட்டங்களும், கருத்தரங்குகளும் ஊக்குவிப்பு முகாம்களும் நடைபெற்று வருகின்றன. சிறு தொழில்கள் பதிவு 1990-91 ஆம் ஆண்டில் இருந்ததை விட, 1991-92 ஆம் ஆண்டின் இலக்கைத் தாண்டி, கூடுதலாகப் பதிவு செய்யப்பட்டு உள்ளது. 1991-92 ஆம் ஆண்டில் 17,422 புதிய சிறு தொழில் கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சிறு தொழில் பதிவில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்க்க எளிய முறையினைக் கையாள இவ்வகை புதிய திட்டத்தை உருவாக்கி வருகிறது. வேலை வாய்ப்பு என்னும்போது, பல்வேறு குடிசைத் தொழில்களும், கைவினைத் தொழில்களும், குறிப்பாக கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பை உருவாக்க முடியுமென்ற காரணத்தால், சென்ற ஆண்டு 8,169 புதிய குடிசைத் தொழில்களும், 7,822 கைவினைத் தொழில் களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சிறு தொழில்கள் சிறப்பாக நடக்க வேண்டுமென்றால் அவற் றுக்குத் தேவையான மூலப் பொருட்கள் விரைவாகவும், தொடர்ந்தாற்போலவும், தேவைக்கேற்ப கிடைக்கப் பெறுதல் வேண்டும். இவ்வகையில் தொழில் வணிகத்துறை இயக்ககம், சிறு தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருட்களை உள் நாட்டிலிருந்தும், வெளி நாட்டிலிருந்தும் இறக்குமதி பெறவும், பரிந்துரை செய்கின்றது. அண்மையில் இந்திய அரசு இரும்பு மற்றும் எஃகுப் பொருட்களின் விநியோகத்தில் இருந்த கட்டுப் பாடுகள் நீக்கப்பட்டிருந்தும், சிறு தொழில்களுக்குப் பகிர்ந் தளிப்பதில் உள்ள கொள்கையில் மாற்றம் எதுவுமில்லை. தேன் இரும்பு, இரும்பு, எஃகு, கல்கரி, மெழுகு ஆகிய மூலப் பொருட் கள், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மேலான உத்தரவு பெற்று அதிக அளவில் பெற முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

பிற்பகல் 7-35

<u>புதிய மாவட்ட தொழில் மையங்கள்:</u> மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட புதிய மாவட்டங்களான

[திரு.எஸ், நாகூர் மீரான்] [1992 ஏப்ரல் 20

நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மற்றும் திருவண்ணாமலை—சம்புவராயர் ஆகிய இரு மாவட்டங்களில் நடப்பாண்டில் இருந்து முழுமையான அளவில் தனி மாவட்ட தொழில் மையங்கள் அமையவுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி).

நிரந்தர தொழில் வர்த்தக பொருட்காட்சி. தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அனுமதியின் பேரில் தொழில் அதிபர்களின் நீண்ட நாளைய கோரிக்கையான நிரந்தர தொழில் வர்த்தக பொருட்காட்சி ஒன்றை சென்னை தரமணி பகுதியில் இந்திய வர்த்தக பொருட்காட்சி அதிகாரக் குழுவுடன் இணைந்து ரூ. 25 கோடி முதலீட்டில் நிரந்தர தொழில் வர்த்தக காட்சி அமையவுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

தீப்பெட்டி தொழில். தீப்பெட்டித் தொழில் மைய அரசின் கலால் வரி விதிப்பின் கீழ் நான்கு வகையாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் குடிசைத் தீப்பெட்டித் தொழில் பிரிவு, கூட்டுறவு அமைப்பில் இணைந்து பொதுக் குறிப்பு வில்லையை பயன்படுத்தி அவைகளின் உற்பத்தியை விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டது. இதனால் குடிசைத் தீப்பெட்டித் தொழில் மிகப் பெரிய அளவிலே வளர்ச்சியடைந்தது. ஆனால் 1989 ஆம் ஆண்டில் பொதுக் குறிப்பு வில்லை உபயோக முறை திரும்பப் பெறப்பட்டதாலும் இயந்திர மயமாக்கப்பட்ட பிரிவிற்கும் குடிசைத் தீப்பெட்டித் தொழில் பிரிவுக்கும் இடையே மைய அரசு கலால் வரி விதிப்பின் வித்தியாசத்தை குறுக்கியதாலும் குடிசைத் தீப்பெட்டித் தொழில் பிரிவு இதர பிரிவுகளுடன் நேருக்கு நேர் போட்டியிட இயலாது போயிற்று. இந்த நிலையை மாற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தொழில் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் போது இத்தொழிலுக்கு கலால் வரி விதிப்பில் விலக்கு அளிக்கக் கோரி மைய அரசை வலியுறுத்தப் போவதாக அறிவித்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நீலகிரி மாவட்டத்தில் சுமார் 30,000 சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் 40,000 ஏக்கர் தேயிலைத்தோட்டங்களோடு வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் நவீன முறையில் தேயிலை பயிரிட்டு அதிக வருவாய் ஈட்டவும் தங்களின் தோட்டங்களில் பயிராகும் பசுந் தேயிலைகளை தனியார் தேயிலை நிறுவனங்களுக்கு குறைந்த விலையில் விற்கும் நிலையிலிருந்து விடுவிக்கவும் கூட்டுறவு முறையிலே தேயிலைத் தொழிற்சாலைகளை அரசு 1962 ஆம் ஆண்டு முதல் தேயிலை வாரியத்தின் நிதி உதவியுடன் துவங்கப்பட்டது. தற்போது நீலகிரி மாவட்டத்தில் மட்டும் 15 இடங்களில் இத்தகைய கூட்டுறவுதேயிலைத்தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகிறது. 1992 பிப்ரவரி வரை இதன் மூலம் 112.82 இலட்சம் கிலோ தேயிலைத் தூள் உற்பத்தி செய்து



1992 ஏப்ரல் 20] [திரு.எஸ். நாகூர் மீரான்]

ரூ. 33 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்தக் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் இயந்திரங்கள், உதிரி பாகங்கள், டீசல் மற்றும் தேவைப்படும் பொருட்களை வழங்க ''இன்கோசர்வ்'' எனப்படும் கூட்டுறவு சேவை நிறுவனம் செயலாற்றி வருகிறது. இதன் விற்பனை 1992 பிப்ரவரி வரை சுமார் 13.13 கோடியாகும். மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையில் அமைந்த அரசு தொழிற்சாலைகளை நவீனப்படுத்த ரூ. 416 இலட்சம் செலவில் ஒரு திட்டம் தீட்டி தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகமும் மற்றும் அரசின் பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் மலைப் பகுதி மேம்பாடு முன்னேற்றத் திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்படவுள்ளது.

<u>தென்னை நார் கயிறு தொழில்கள்:</u> கயிறு தொழில் என்பது வேளாண்மையைச் சார்ந்த ஒன்றாகும். இக்கயிறு தொழில் சுமார் 5 இலட்சம் மக்களின் அன்றாட வாழ்க்கைத் தேவையை பூர்த்தி செய்கிறது. இத்தொழிலுக்குத் தேவையான மூலப் பொருள்களான தேங்காய் மட்டைகள் நம் நாட்டில் மிகுதியாக கிடைக்கிறது. கயிற்று நாரினை இரு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று வெள்ளை நார், மற்றொன்று பழுப்பு நார். கேரளா வெள்ளை நார் உற்பத்திக்கு பெயர் பெற்றுள்ளது. வெள்ளை நார் உற்பத்தி சிறிய அளவில் தமிழ்நாட்டில் செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாடு கயிறு இழை உற்பத்தி செய்யும் தொழிலில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. பழுப்பு நார் உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடத்தை பெறுகிறது. நம் நாட்டில் மொத்த பழுப்பு நார் உற்பத்தியில் 60 விழுக்காடு தமிழ் நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகிறது.

தமிழ் நாட்டில் சுமார் 2.14 இலட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில் தென்னை மரம் வளர்க்கப்பட்டு அதன் மூலம் சுமார் 1,917 மில்லியன் தேங்காய்கள் ஆண்டொன்றுக்கு உற்பத்தி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் கயிறு தொழில் வளர்ச்சி, தொழில் வணிகத் துறையின் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு அரசு வரவு-செலவு திட்டத்தில் நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. இவைத் தவிர கயிறு வாரியம், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வாரியம் ஆகியவை இக்கயிறு தொழிலுக்கு தொழிற்கூடம் அமைத்தல், பயிற்சி அளித்தல், விற்பனை போன்றவைகளுக்கு நிதியுதவி அளித்து வருகிறது.

பிற்பகல் 7.40

நடப்பு நிதியாண்டில் சுமார் ரூ. 5 இலட்சம் தமிழக அரசு பங்கு மூலதனமாக கயிறு தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் வேறு நிதி

நிறுவனங்களிடமிருந்து இக்கயிறு சங்கங்களுடைய கடன் வாங்கும் திறன் உயர்ந்து அதன் மூலம் சிறப்பாகச் செயல்பட வாய்ப்பு உள்ளது.

சவ்வரிசி: மரவள்ளிக் கிழங்கிலிருந்து தயாரிக்கப்படும் சவ்வரிசி உறபததியில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. பரப்பளவிலும் உற்டத்தியிலும் இந்தியாவில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. சவ்வரிசி மற்றும் மாவு தொழிற்சாலைகள் பெரும்பாலும் சேலம், தர்மபுரி, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் 200 அலகுகளில் சுமார் ரூ. 140 கோடி முதலீட்டில் 25 இலட்சம் மெட்ரிக் டன் மரவள்ளிக் கிழங்கிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது. ஆண்டொன்றில் சவ்வரிசி உற்பத்தி சுமார் ரூ. 100 கோடியாகும். சுமார் 1,50,000 பேர்களுக்கு இத்தொழிற்சாலையிலே வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் சிறிய அளவு மரவள்ளிக்கிழங்கு உற்பத்தியாளர்கள், வணிகர்கள் மற்றும் இடைத்தரகர்களை நம்பி நியாயமான விலை கிடைக்காத காரணத்தால் அவர்களுக்கு உதவும் பொருட்டு 1981 ஆம் ஆண்டு 'சேகோசர்வ்' என அழைக்கப்படும் தொழிற் கூட்டுறவு சேவைச் சங்கம் மென்மேலும் வளர அனைத்து உதவிகளையும் உறுப்பினர்களுக்கு செய்து வருகிறது. இச்சங்கம் 1991-92 ஆம் நிதி ஆண்டில் ரூ. 59.82 கோடி விற்பனை செய்துள்ளது. இச்சங்கம் துவக்கப்பட்டதிலிருந்து லாபத்திலேயே இயங்கி வருகிறது. இச்சங்கத்தின் செயல்பாடுகளை மேலும் மேம்படுத்தும் நோக்கத்தோடு தமிழக அரசு மற்றும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் நிதி உதவியுடன் ரூ. 4.2 கோடி செலவில் ஒரு கிட்டங்கி வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், சங்கத்தின் கூடுதல் விற்பனை வரிப் பளுவைக் குறைக்கும் வகையில் மாநில அரசு 1991-92 ஆம் ஆண்டில் விற்பனை வரி மானியமாக ரூ. 50 இலட்சம் சங்கத்திற்கு வழங்கியுள்ளது.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)

தனியார் தொழிற்பேட்டைகள்.

முதலியார்பாளையம்-திருப்பூர் பின்னலாடை தொழிற்பேட்டை

திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் சுமார் 86.65 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில் சிட்கோ உதவியுடன் தனியார் தொழிற்பேட்டை ஒன்றை ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தத் தொழிற்பேட்டையில் ரூ. 13.09 கோடி மதிப்பில் 157 தொழிற்கூடங்களை அமைக்க சிட்கோ திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறது. தொழில் முனைவோர்கள் நிலத்தை வாங்கிய பின்பு அதை சிட்கோவிடம் தொழிற்பேட்டை தொடங்குவதற்காக ஒப்படைத்துள்ளனர். தொழில் முனைபவர்களும், சிட்கோவும் இணைந்து அத்தொழிற்பேட்டை தொடங்குவது இந்தியாவில் இதுவே முதல் முறையாகும். (மேசையைத் தட்டும் ஒலி). இந்தத் திட்டம் 1991 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் ஆரம்பிக்கப்பட்டு 1992 ஆம் ஆண்டு





மார்ச் திங்கள் முடிக்கப்பட்டது. இந்த தொழிற்பேட்டை 10,000 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், 1,500 பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் அளிக்கும். இவர்களில் குறைந்தது 3,000 பேர்களாவது பெண்களாக இருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

' மதுரை பின்னலாடை தொழிற்பேட்டை: மதுரையில் உள்ள தொழில் முனைவோர்கள் ஏற்றுமதிக்கேற்ப பின்னலாடை உற்பத்தியைப் பெருக்க திருப்பூர் தொழிற்பேட்டை போன்ற ஒரு தொழிற்பேட்டையை உருவாக்குவதற்காக சங்கம் ஒன்றினை ஏற்படுத்தி மதுரை மாவட்டம் மதுரை வடக்குத் தாலுக்காவில் உள்ள வேடத்தகுளம் மற்றும் வல்லகுண்டு கிராமங்களில் 68.64 ஏக்கர் நிலத்தை வாங்கியுள்ளது. இங்கு தொழில்களை துவக்க 150 பேர் முன்வந்துள்ளனர்.

நாமக்கல் ஆட்டோ நகர்: நாமக்கல் ஆட்டோ நகர் என்று பதிவு செய்யப்பட்ட சங்கம் சிட்கோ உதவியுடன் 40 ஏக்கர் நிலத்தை வாங்கி நாமக்கல் ஆட்டோ நகர் தனியார் தொழிற்பேட்டை தொடங்கவுள்ளது. ஆட்டோ மொபைல் தொழில் சம்பந்தமாக வெவ்வேறு வேலைகளில் ஈடுபடக்கூடிய 200 தொழில்கள் இத்தொழிற்பேட்டையில் வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

பல்லடம்: பல்லடம் தொழில் வளர்ச்சி சங்கம் என்று பதிவு செய்யப்பட்ட சங்கம் சுமார் 16.56 ஏக்கர் பட்டா நிலத்தை வாங்கி பின்னலாடை தயாரிப்பதற்காக தொழில் கூடங்களை கட்ட சிட்கோவிடம் ஒப்படைத்துள்ளது.

சிட்கோவினுடைய தொழிற்பேட்டை: மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் தொழில் துறையில் பொற்காலம் காணும் பொருட்டு, ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ள காக்கலூர் தொழிற் பேட்டையில் உள்ள திருப்பூர் பின்னலாடை தொழிற்பேட்டை போன்ற ஒரு பின்னலாடை தொழிற்பேட்டை தொடங்குவதற்காக 50 ஏக்கர் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே, இங்கு 30 தொழிற்கூடங்களும், 41 மேம்படுத்தும் மனைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மொத்த மதிப்பு சுமார் 12 கோடியாகும். (மேசையைத் தட்டும் ஒலி). இந்தத் திட்டத்தின் மூலம் 10,000 பேர் நேர்முக வேலை வாய்ப்பைப் பெறுவார்கள். இதில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய கொள்கைக்கு ஏற்ப 75 விழுக்காடு பெண்களாக இருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் 5,000 ஆண்/பெண் மறைமுக வேலை வாய்ப்பும் பெறுவார்கள்.

[திரு. எஸ். நாகூர் மீரான்] [1992 ஏப்ரல் 20
பிற்பகல் 7–45

செம்பரம்பாக்கம் தோல் தொழிற்பேட்டை: இது ஏற்கனவே தொடங்கப்பட்ட திருமழிசை தொழிற்பேட்டையில் நிறுவப் படவுள்ளது. இந்தத் தொழிற்பேட்டைக்காக 40 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ. 7 கோடியாக இருக்கும். இந்தத் திட்டத்தினால் 3,000 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பு இருக்கும்.

ஊரகப் பகுதிகளைத் தொழில் மயமாக்குதல் எனும் உன்னத குறிக்கோளை அடைய அத்தகைய பகுதிகளில் தொழில்கள் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆலோசனையும், அனுமதியும் வழங்கியதன் பேரில் அவர்களுடைய சீரிய தலைமையில் உள்ள இவ்வரசு, சிட்கோ நிறுவனத்தின் மூலம் கரூர், இராமநாதபுரம், பரமக்குடி, பர்கூர், ஆகிய இடங்களில் கீழ்க்கண்ட புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்க உள்ளது.

கரூர்: திருச்சி மாவட்டம் கரூர் தாலுக்காவில் உள்ள ஆத்தூர் கிராமத்தில் ஒரு தொழிற்பேட்டையைத் தொடங்க கரூர் தொழில் முனைவோர்கள் சங்கம் முன்வந்துள்ளது. இதற்காக 38.28 ஏக்கர் பட்டா நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம்: இராமநாதபுரம் மாவட்டம் கீழநாகாச்சி கிராமத்தில் புதிய தொழிற்பேட்டை ஒன்றை சிட்கோ துவக்கி யுள்ளது. இவ்விடத்தில் 30 ஏக்கர் நிலத்தை வாங்க சிட்கோ மேலும் உத்தேசித்துள்ளது.

பரமக்குடி: இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தாலுக்காவில் உள்ள ஊரப்புலி மற்றும் அரியநேந்தல் கிராமத்தில் 5,04 ஹெக்டேர் பட்டா நிலத்தில் தொழிற்பேட்டை ஒன்று தொடங்கப்பட உள்ளது

பர்கூர்: தருமபுரி மாவட்டத்தில் பர்கூர் நகருக்கு அருகில் சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவில் 'சிட்கோ' ஒரு சிறு தொழிற்பேட்டை ஒன்றினை ஆரம்பிக்க பூர்வாங்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தொழிற்பேட்டைக்கான நிலம் தேர்வு செய்யப்பட்டுவிட்டது, சிட்கோ அந்த நிலத்தை தர்மபுரி மாவட்ட ஆட்சியரின் மூலம் கையகப்படுத்த தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்தத் தொழிற்பேட்டை சுமார் 10 ஏக்கர் பரப்பில் அமைய உள்ளது. இந்தத் தொழிற்பேட்டையில் சுமார் 400 சதுரஅடி முதல் 2000 சதுர அடி வரை பரப்பளவு உள்ள தொழிற்கூடங்கள் கட்டப்படும், அந்தத் தொழிற்பேட்டை



1992 ஏப்ரல் 20] [திரு. எஸ். நாகூர் மீரான்]

யில் சுமார் 50 தொழிற்கூடங்கள் கட்டப்படும், இந்தத் தொழிற்பேட்டையின் மூலம் 600 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும். 3000 நபர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பும் கிடைக்கும். இந்தத் தொழிற்பேட்டைக்கு மொத்தம் ரூ. 1,00 கோடி முதலீடு செய்யப்படும்.

ஜப்பான் நாட்டு உதவியுடன் தொடங்கப்படும் உயர் தொழில்நுட்ப தொழிற்பேட்டைகள். தமிழ்நாட்டில் உயர் தொழில்நுட்பத்தை மேம்படுத்த, சிட்கோ உயர் தொழில்நுட்ப தொழிற்பேட்டைகளை அமைக்கும் புதிய திட்டம் ஒன்றைக் கொண்டுள்ளது, இந்தத் திட்டம் ஜப்பானிய வெளிநாட்டுப் பொருளாதாரக் கூட்டுறவு நிதி அமைப்பின் 'யென்' நிதியுதவியுடன் நிறைவேற்றப்பட உள்ளது, இந்நிதி நிறுவனம் வழங்கும் 3,198 மில்லியன் 'யென்' —சுமார் 63 கோடி ரூபாய்—நிதியுதவியுடன் இந்தத் தொழிற்பேட்டைகளை உருவாக்கத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது, இந்தத் திட்ட அறிக்கை தமிழக அரசின் மூலமாக மத்திய அரசிற்கு அனுப்பி பரிசீலிக்கப் பட்டுள்ளது,

இத்திட்டத்தின் கீழ் புதிய தொழிற்பேட்டைகள், பின்னலாடைப் பொருட்கள், இண்டஸ்ட்ரியல் எலக்ட்ரானிக்ஸ், வாகன உறுப்புப் பொருட்கள், பெட்ரோ கெமிக்கல்ஸ், உணவு பதப்படுத்துதல், பொறியியல் பொருட்கள், தோல் பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் சிறிய தொழிற்கூடங்களை உள்ளடக்கிய புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கப் படும், இத் தொழிற்பேட்டைகளில் மொத்தமாக சுமார் 100 சிறு தொழிற்கூடங்களை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினை 'சிட்கோ' தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழக உதவியுடனும் மற்றும் அரசு உதவியுடனும் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது,

இந்தத் தொழிற்பேட்டைகளில் தொழிற்கூடங்களை அமைக்க முன்வரும் தொழில் முனைவோருக்கு அனைத்து உதவிகளையும், தொழில் நுட்ப ஆலோசனைகளையும், தொழிற்கூட வளாக நிதியுதவி போன்றவற்றை ஒருங்கே வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்: தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 1949 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட முதல் மாநில நிதியுதவிக் கழகமாகும், இக்கழகம் புதிய தொழில் தொடங்குபவர்களுக்கு மட்டுமல்லாமல் ஏற்கனவே இருக்கும் தொழில் பிரிவுகளை விரிவுபடுத்துவதற்கும் அதிகபட்சம் ரூ, 90 இலட்சம் வரை நிதியுதவி வழங்குகிறது. இது சின்னஞ்சிறு தொழில் நிறுவனங்

கள் பிற்பட்ட பகுதிகளில் தொடங்குவதற்கு முதன்மை அளிக்கிறது. 1988 ஆம் ஆண்டு முதல் இக்கழகம் நிலையான சொத்துக்களின்றி, நடைமுறை மூலதனத்திற்கும் சேர்த்து கடன் வழங்க இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கி உருவாக்கிய ஒரு முனைத் தீர்வுக் குழு ( Single window Scheme ) திட்டம் துவங்கி செயல்பட்டு வருகிறது. இந்த ஒரு முனை தீர்வுக் குழுத் திட்டத்தின் கீழ் புதிய திட்ட மதிப்பீடு ரூ. 20 இலட்சம் வரையிலுள்ள சிறு தொழில் நிறுவனங்களுக்கு ரூ. 10 இலட்சம் வரை நடைமுறை மூலதனம் கடன் வழங்கப்படுகிறது.

பிற்பகல் 7—50

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி): தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் பலவகைப் பொருட்களைத் தயாரிக்கும் 43 உற்பத்திக் கூடங்களையும் 4 திட்டப் பிரிவுகளையும் 6 விற்பனை நிலையங்களையும் தன்னகத்தே கொண்டு செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் 14—10—1991 அன்று டான்சியின் செயலாக்கம் மற்றும் சம்பந்தப்பட்ட விஷயங்கள் பற்றி ஆய்வு நடத்தினார்கள். இந்த ஆய்வில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி நிலைத்திருக்க முடியாத 4 தொழிற்கூடங்கள் மூடப்பட்டன. இந்தத் தொழிற்கூடங்களில் பணிபுரிந்த 148 தொழிலாளர்கள் தன் விருப்பப் பணி ஓய்வுத் திட்டத்தின் கீழ் பதவி விலகினார்கள்.

ஐந்தாவது ஊதியக் குழு பரிந்துரைத்த திருத்திய ஊதிய உயர்வினை 1—1—1990 முதல் அமுலாக்க மார்ச் 1992—ல் அரசு ஆணையிட்டது. தற்சமயம், டான்சியின் கீழ் இரு துணை நிறுவனங்கள் இயங்குகின்றன. அவைகள், தமிழ்நாடு பொறியியல் மற்றும் சேவை நிறுவனம், தமிழ்நாடு மொபட் நிறுவனம். தமிழ்நாடு வண்ணங்கள் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனம்.

செஸ்காட் தொழிற்கூடங்களின் முயற்சியில் துருவுறா எஃகினால் தயாரித்த 'டான்சி பிளேம்' என்னும் திரவ பெட்ரோல் எரிவாயு அடுப்பு இந்திய தரக்கட்டுப்பாடு நிறுவன சான்றிதழ் பெற்று விற்பனைச் சந்தையில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. இதுவரையில் ரூ. 39·66 இலட்சம் மதிப்புள்ள 3,431 எரிவாயு அடுப்புகள் கடந்த இரண்டாண்டுகளில் விற்பனையாகியுள்ளது. மிகப்பெரிய அளவிலான உற்பத்தி மற்றும் விற்பனையைப் பெருக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் ஒரு எரிப்பான் கொண்ட சிறிய அளவு அடுப்பு ஒன்றும் விற்பனைச் சந்தையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம்: வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, இராணிப்பேட்டை, திண்டுக்கல் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் சுமார் 465 தோல் ப-



னிடும் தொழிற்சாலைகள் குழுமியுள்ளன. இவற்றில் 352 தோல் பதனிடும் தொழிற்கூடங்களை ஒருமுகப்படுத்தி. தோல் பதனீட்டாளர்களிடமிருந்து 15 விழுக்காடு பங்குத் தொகையாகப் பெற்றும், 25 விழுக்காடு பங்குத்தொகை முறையே மத்திய மற்றும் மாநில அரசுகளிடமிருந்து பெற்றும் மீதமுள்ள தொகையை நிதி நிறுவனங்களிடமிருந்தும் கடனாகப் பெற்று, இந்த ஆறு பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படுகின்றன, இந்தத் தொழிற்சாலைகளிலிருந்து ஒரு நாளைக்கு 18 மில்லியன் லிட்டர் கழிவு நீர் சுத்திகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையிலே அமைந்த இவ்வரசு மேற்கூறிய பல்வேறு திட்டங்களின் மூலம் இந்தச் சிறு தொழில் மற்றும் கதர் கிராம வாரியத்தில் ஒரு புதிய பரிணாமத்தையும் உத்வேகத்தையும் அளித்து, தமிழ்நாடு சிறுதொழில் மற்றும் கதர் கிராமத் தொழிலில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய பொற்கால ஆட்சியில் இந்த சிறுதொழில் துறையும் பொற்காலம் காணும் எனக் கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும். அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன், (மேசையை தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் :. விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(இ) கோரிக்கை எண் 27—கதர்—கிராமத் தொழில்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 27 — கதர் —கிராமத் தொழில்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

''கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 27—ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 7,56,93,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு

[பேரவைத் தலைவர்] [1992 ஏப்ரல் 20

அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகின்றேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி). அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெற்றது.

(ஈ) கோரிக்கை எண். 48— ஊரகத் தொழில்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 48— ஊரகத் தொழில்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. மா. சுந்தரதாஸ்

திரு. மா. சுந்தரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

'ஊரகத் தொழில்கள் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 39,17,55,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி.)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.



1992 ஏப்ரல் 20]

பிற்பகல் 7-55.

(உ) கோரிக்கை எண். 60— ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 60— ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்பு கிறேன். திருமதி ரமணி நல்லதம்பி

திருமதி ரமணி நல்லதம்பி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையில் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"ஊரகத் தொழில்கள் பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 39,44,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி).

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெற்றது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (21—4—1992) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 7-56-க்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

63. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் 1989-90—ஆம் ஆண்டிற்கான இருபத்தைந்தாவது ஆண்டறிக்கை. (1956—ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது. (தமிழ், ஆங்கிலம்).

64. தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்டின் 1985-86-ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்) 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

115. கோரிக்கை எண் 29—தொழிலாளர், தொழிற்சாலை மற்றும் வேலைவாய்ப்பு—பயிற்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1992-93 (தமிழ், ஆங்கிலம்).

116. கோரிக்கை எண் 21—மீன் வளத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1992-93. (தமிழ், ஆங்கிலம்).

117 கோரிக்கை எண் 27—தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கொள்கையும் திட்டங்களும், 1992-93. (தமிழ், ஆங்கிலம்).

118. கோரிக்கை எண். 48— ஊரக மற்றும் சிறு தொழில்கள் பற்றிய தொழில் கொள்கை, 1992-93. (தமிழ், ஆங்கிலம்).

119. பட்டு வளர்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு கைத்தறிப் பொருட்கள் வளர்ச்சி நிறுவனத்தின் கொள்கையும் திட்டங்களும், 1992-93. (தமிழ், ஆங்கிலம்).

120. மீன் வளத்துறையின் சாதனைத் திட்டம், 1992—93, (ஆங்கிலம்).

121. ஊரக மற்றும் சிறு தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம், 1992—93, (தமிழ், ஆங்கிலம்).

122. ஊரக மற்றும் சிறு தொழில்கள் பற்றிய செயலாக்க ஆய்வுரை, 1991—92, (தமிழ், ஆங்கிலம்).

123. பட்டு வளர்ச்சித் துறை பற்றிய சாதனைத் திட்டம், 1991—92, (தமிழ், ஆங்கிலம்).

124. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பதாவது அறிக்கை, 1991—92,

125. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தொன்றாவது அறிக்கை, 1991—92.

126. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்திரெண்டாவது அறிக்கை, 1991—92.

127. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி மூன்றாவது அறிக்கை, 1991—92.



இணைப்பு—I

470—ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க

# தமிழ்நாட்டின் தொழிலாளர் நலன் கொள்கை விளக்கம். 1992 - 93

## அத்தியாயம் 1.

முன்னுரை :

1.1. இந்த அரசு ஏழை எளியவர்களாலும், சமுதாயத்தில் நலிந்தவர்களாலும் அமைக்கப்பட்ட அரசு என்ற முறையிலும், அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட வேண்டும், சமூகத்தில் வசதி படைத்தவர்களுக்கும், வசதியற்றவர்களுக்கும் உள்ள இடைவெளியைக் குறைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்ற காரணத்தினாலும், அதனுடைய கொள்கைகள் சமூகத்தில் வசதியற்றவர்களின் எதிர்பார்ப்புகளுக்கும் எண்ணங்களுக்கும் ஈடு கொடுக்கின்ற வகையில் இருக்கும் என்பது வெளிப்பட்டது. அந்தக் கொள்கையை, "தழைக்க தொழில், செழிக்க தொழிலாளர்" என்ற கோட்பாட்டில் காணலாம். சமூகத்தில் நலிந்த பிரிவினரைச் சுரண்டுவதற்கு எந்த ஒரு வகையான வாய்ப்பும் இருக்கக்கூடாது என்பதில் இந்த அரசு விழிப்புடன் உள்ளது. பல்வேறு தொழிலாளர் சட்டங்களின் கீழ் வகை செய்யப்பட்டுள்ள பல வகையான தொழிலாளர் நல வசதிகளைப் பெறுவதற்கு, தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதிலும் இந்த அரசு உறுதியாக இருக்கிறது.

1.2. இவ்வரசு, அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களின் பிரச்சினைகளையும் மற்ற நிலைமைகளையும் முழுமையாக அறிந்துள்ளது. குறைந்தபட்ச கூலிச் சட்டம் இவ்வகைத் தொழிலாளர்களுக்கு ஒரு முக்கியமான நலம் பயக்கும் சட்டமாகும். இச்சட்ட அட்டவணையில் இதுநாள் வரை 67 தொழில்கள் சேர்க்கப்பட்டுள்ளன. பொதுவாக இரண்டு ஆண்டுக்கொருமுறை பெரும்பாலான தொழிற் பிரிவுகளுக்கும் குறைந்தபட்ச ஊதியம் மறு நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு மறு நிர்ணயம் செய்யும்போது, ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஒரு நாள் குறைந்த ஊதியம் ரூ. 15-க்குக் குறையாமல் இருக்க அரசு கவனம் செலுத்தி வருகிறது.

1.3. இது தவிர, தமிழ்நாடு உடல் உழைப்பு (வேலை மற்றும் பணி நிபந்தனைகள்) முறைப்படுத்துதல் சட்டப் பிரிவின் கீழ், கட்டிடத் தொழிலாளர்கள் நலனுக்கென ஒரு திட்டம் உருவாக்குவது பற்றி இந்த அரசு பரிசீலித்து வருகிறது.

## அத்தியாயம் 2.

**தொழில் உறவுகள்:**

2.1. தொழில் வளர்ச்சிக்கும், தொழில் அபிவிருத்தி மற்றும் தொழிற் பெருக்கத்திற்கு மட்டுமல்லாமல் தொழிலாளர் நலம் வளர்வதற்கும் நல்ல தொழில் அமைதி நிலவ வேண்டும் என இந்த அரசு நம்புகிறது. தொழில் அமைதி காப்பதற்கு இரு வகையான அணுகுமுறைகள் உள்ளன. (1) வருமுன் காத்தல் மற்றும் (2) தீர்வு காணுதல்.

2.2. இவ்வரசு தொழில் உறவில் ஏற்படும் பிரச்சினைகளுக்கான காரண காரியங்களை முன்னரே இனம் கண்டு, தேவையான நடவடிக்கைகளை உடன் மேற்கொண்டு பிரச்சினையின் ஆரம்ப கட்டத்திலேயே அதற்கு முடிவு காண பாடுபடுகிறது. தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில், தொழிலாளர்களும் நிர்வாகத்தினரும் நேரிடையாக உட்கார்ந்து, தங்கள் வளர்ச்சியையும் நிறுவன வளர்ச்சியையும் குறித்துப் பேசி தாங்களே முடிவெடுக்கும் கூட்டு முயற்சியையே இவ்வரசு ஊக்குவிக்கிறது. இதற்காக, தொழிலாளர் துறை, எப்போதும் தங்களை நாடி வருவோருக்கு உதவி செய்யக் காத்திருக்கின்றது.

2.3. உற்பத்தித் திறனைப் பெருக்க வேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது. உற்பத்தி பெருக்குவதில், தொழிலாளர்களுக்கு முக்கிய மற்றும் மகத்தான பங்கு உண்டு. உற்பத்தி திறனுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற அதே நேரத்தில் உற்பத்தித் திறனின் பலன்களைத் தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் உரிய முறையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்றும் உற்பத்தித் திறனை நிர்ணயிக்கும்போது தொழிலாளர்களை முழுமையாக ஈடுபடுத்த வேண்டும் என்றும் இந்த அரசு கண்ணும் கருத்துமாக இருக்கின்றது.

2.4. சட்ட அமுலாக்கம் செய்வதிலும் தொழிலாளர் துறையின் சட்ட அமுலாக்க இயந்திரம் மிகவும் முனைப்பாகவும், ஆக்க பூர்வமாகவும் பணியாற்றிட முடுக்கிவிடப்பட்டிருக்கிறது. எடையளவுச் சட்டம் உட்பட்ட அனைத்து தொழிலாளர் நலச் சட்டங்கள் சரிவர அமுல் செய்யப்படுவதைக் கண்காணிக்க, சிறப்புக் கூட்டாய்வுகளும் சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தொழில் தகராறுகளைத் தீர்த்து வைத்தல் :**

2.5. தமிழக அரசின் தொழிலாளர் துறை சமரச அலுவலர்களால் 1991-ஆம் ஆண்டில், மொத்தமுள்ள 15,574 தொழிற் தகராறுகளில், 13,039 தாவாக்கள் தீர்த்து வைக்கப்பட்டன. தொழிலாளர் துறையின் முதுநிலை



அலுவலர்களால் தீர்த்து வைக்கப்பட்ட தொழில் தாவாக்களும் இதில் அடங்கும். மேற்படி ஒப்பந்தங்களில் சில முக்கியமான உடன்பாடுகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

**(1) கே.சி.பி. லிமிடெட், திருவொற்றியூர், சென்னை:**

2.6. சுமார் 520 தொழிலாளர்கள் பணிபுரியும் இந்நிறுவனத்தில், போனஸ், ஊதிய உயர்வு மற்றும் பொதுக் கோரிக்கைகளை முன்வைத்து 26—10—1990 முதல் உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் தொழிலாளர்கள் ஈடுபட்டதைத் தொடர்ந்து நிர்வாகம் 30—10—1990 முதல் நிறுவனத்தை கதவடைப்பு செய்தது.

2.7. தொழிலாளர் துறையில் பல நிலைகளில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் இரு தரப்பினர்களுக்கும் இடையே சுமூகமான முடிவு ஏற்படாத நிலையில் அரசு கோரிக்கைகளை தொழில் தீர்ப்பாயத்திற்கு அனுப்பி ஆணைகள் பிறப்பித்தது. இதனையடுத்து தொழிற் தகராறு சட்டப்பிரிவு 10-பி-யின் கீழ் நிர்வாகம் 13—5—1991 அன்றோ அல்லது அதற்கு முன்போ கதவடைப்பை விலக்கிக் கொள்ள வேண்டுமென்றும் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தை கைவிட்டு உடனடியாகப் பணிக்குத் திரும்ப வேண்டுமென்றும் மற்றொரு ஆணையும் பிறப்பித்தது.

2.8. இந்த ஆணையின்படி 13—5—1991 அன்று நிர்வாகம் தனது கதவடைப்பை விலக்கிக் கொண்டாலும், தொழிலாளர்கள், பணிக்குத் திரும்பாமல் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து மேற்கொண்டனர்.

2.9 இதற்கிடையில், தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) முன்னிலையில் 4—10—1991-ல் நடைபெற்ற சமரசப் பேச்சு வார்த்தையின் காரணமாக 7—10—1991 முதல் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர். மேலும் 30—12—1991 அன்று, தொழிலாளர்களின் பொதுக் கோரிக்கைகள் குறித்து 1947 ஆம் வருட தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12(3)-ன் கீழ் தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) முன்பு ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது.

**(2) தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், லிமிடெட், சென்னை:**

2.10 தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் கொள்முதல் செய்யும் மையத்திலுள்ள தொழிலாளர்கள் மற்றும் சுமை தூக்குவோரின் சம்பள உயர்வு மற்றும் இதர நிலைமைகள், குறித்த தொழில் தாவாவில்,

19—9—1991 அன்று தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) முன்னிலையில் தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12(3)-ன் கீழ் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது.

(3) தமிழ்நாட்டிலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள் :

2.11. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து தோல் பதனிடும் தொழில் நிறுவனத்திலுள்ள தொழிலாளர்களின் அடிப்படை சம்பளம் மாற்றி அமைத்தல், அகவிலைப்படி, வருடாந்திர ஊதிய உயர்வு போன்ற பிரச்சினைகள் குறித்த தொழிற் தாவாவில் 16—5—1991 அன்று தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) முன்னிலையில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இவ்வொப்பந்தத்தினால் சுமார் 40,000 தொழிலாளர்கள் பயன் பெறுவதோடு மட்டுமல்லாமல் ஒவ்வொரு தொழிலாளரும் மாதம் ஒன்றிற்கு ரூ. 270 ஊதிய உயர்வும் பெற்றனர்.

(4) மத்திய கூட்டுறவு வங்கி, சென்னை:

2.12. 566 தொழிலாளர்களைக் கொண்ட மேற்படி கூட்டுறவு வங்கி நிறுவனத்தாருக்கும் தொழிலாளருக்குமிடையே ஊதிய மறு நிர்ணயம் மற்றும் சில கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட தொழிற் தாவாவானது இணை ஆணையர் (நிர்வாகம்) முன்பு 14—5—1991 அன்று நடந்த சமரசப் பேச்சு வார்த்தைகளின் விளைவாக ஏற்பட்ட ஒப்பந்தம் மூலம் தீர்க்கப்பட்டது. இத்தீர்ப்பினால், பலதரப்பட்ட தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் குறைந்தது ரூ. 200 முதல் அதிக பட்சம் ரூ. 2,600 வரை மாத ஊதிய உயர்வு பெற்றனர்.

(5) தமிழ்நாடு நியூஸ் பிரிண்ட் மற்றும் பேப்பர்ஸ் லிட்., காகிதபுரம் திருச்சி மாவட்டம் :

2.13. ஊதிய உயர்வு மற்றும் இதர பொதுக் கோரிக்கைகள் குறித்த தொழிற் தகராறில் தனித் துணை ஆணையரின் முன்பு 19—1—1991 அன்று தொழிற் தகராறு சட்டப்பிரிவு 12(3)-ன் கீழ் உடன்பாடு ஏற்பட்டது. அலுவலகப் பணியாளர்களின் பொதுக் கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினையும் இணை ஆணையர் (நிர்வாகம்) முன்னிலையில் தீர்த்து வைக்கப்பட்டு 20—3—1991 அன்று தொழிற் தகராறுகள் சட்டப் பிரிவு 12(3)-ன் கீழ் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது.

(6) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தனியார் ரப்பர் தோட்டங்கள்:

2.14. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தனியார் ரப்பர் தோட்ட நிறுவனத்தாருக்கும் அதில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குமிடையே சம்பளம் மற்றும் பொதுக் கோரிக்கைகள் உள்ளிட்ட தொழிற் தகராறு 11—2—1991 அன்று இணை ஆணையரால் (நிர்வாகம்) தீர்த்து வைக்கப்பட்டு தொழிற் தகராறுகள் சட்டப் பிரிவு 12(3)-ன் கீழ் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது.



(7) போனஸ் பிரச்சினைகள் :

2.15. மாநிலத்தில் உள்ள 524 நூற்பாலைகளில், சில நூற்பாலைகளின் தொழிலாளர்கள் 1990-91 ஆம் ஆண்டிற்கு அதிக போனஸ் அளிக்கக்கோரி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலையிட்டு 15—11—1991, மற்றும் 6—12—1991 ஆகிய தினங்களில், பேச்சு வார்த்தை நடத்தி இப்பிரச்சினை சம்பந்தமாக தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் அறிவுரைகள் வழங்கினார்கள். இதன் விளைவாக, பிரச்சினை முடிவாகத் தீர்க்கப்பட்டு, தொழிலாளர்களும் வேலைக்குத் திரும்பினார்கள்.

2.16. இம்மாநிலத்திலுள்ள புதிய 5 கூட்டுறவு சங்க நூற்பாலைகளைப் பொறுத்தவரை தொழிலாளர் ஆணையரின் தலையீட்டினால், 4—12—1991 அன்று தொழிற் தகராறுகள் சட்டப்பிரிவு 12(3)-ன் கீழ் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, 1990-91 ஆம் ஆண்டிற்கு 4 கூட்டுறவு சங்க நூற்பாலைகளுக்கு 8.33 சதவீதம் போனசும் கருணைத் தொகை 11.67 சதவீதமும் ராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு சங்க நூற்பாலைக்கு 8.33 சதவீதம் போனசும் 18 சதவீதம் கருணைத் தொகையும் அளிக்க ஒப்புக் கொள்ளப்பட்டது.

2.17. சிறுமுகை, சவுத் இந்தியா விஸ்கோஸ் நிறுவன 1990-91 ஆம் வருட போனஸ் பிரச்சினை சமரசப் பேச்சு வார்த்தையினால் 30—11—1991 அன்று இணை ஆணையரால் (நிர்வாகம்) தீர்த்து வைக்கப்பட்டு, நிர்வாகத்தினர் 20 சதவீதம் போனசும் 23.5 சதவீதம் கருணைத் தொகையும் வழங்க ஒப்புக் கொண்டனர்.

சிமெண்ட் தொழில் :

2.18. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேசனுக்கு உட்பட்ட தொழிலாளர்களின் 1990–91 ஆம் ஆண்டிற்கான போனஸ் தொடர்பான தொழில் தாவாவில் மதுரை. தொழிலாளர் இணை ஆணையர் முன்பு நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் பயனாக 26—10—1991 அன்று தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12 (3)-ன் கீழ் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இவ்வொப்பந்தத்தின் பயனாக தொழிலாளர்களுக்கு 8.33 சதவீதம் போனஸ் மற்றும் ரூ. 1,025 கருணைத் தொகையும் வழங்க நிர்வாகம் ஒப்புக் கொண்டது.

**சர்க்கரை ஆலைகள்:**



2.19. தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் 1990-91 ஆம் ஆண்டிற்கான போனஸ் தாவாவில் தொழிலாளர் இணை ஆணையர் (நிர்வாகம்) முன்பு பேச்சு வார்த்தைகள் நடைபெற்று, பின்னர் தொழிலாளர் ஆணையர் முன் மேற்கொண்டு பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. அதன் பின்னர், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆலோசனைக் கிணங்க, மாண்புமிகு தொழிலாளர் அமைச்சர் அவர்கள் முன்னிலையில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. அதைத் தொடர்ந்து 1—11—1991 அன்று தொழிலாளர் ஆணையரால் 15 சதவீதம் முதல் 20 சதவீதம் போனஸ் வழங்கவும், இது தவிர நிரந்தரத் தொழிலாளர்கள் மற்றும் சீசனல் தொழிலாளர்களுக்கு ரூ. 300-ம் தற்காலிகத் தொழிலாளர்களுக்கும் என்.எம்.ஆர். தொழிலாளர்களுக்கும் ரூ. 150-ம் கருணைத் தொகை வழங்கும்படி அறிவுரை வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு நியூஸ் பிரிண்ட் அண்ட் பேப்பர் லிட்., காகிதபுரம், திருச்சி மாவட்டம்:**

2.20. 1990–91 ஆம் ஆண்டிற்கான போனஸ் வழங்குவது தொடர்பாக தமிழ்நாடு நியூஸ் பிரிண்ட் மற்றும் பேப்பர் லிட்., நிறுவனத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட தொழிற் தாவாவில் தொழிலாளர் ஆணையர் முன்னிலையில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. இப்பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து தொழிலாளர் ஆணையரின் அறிவுரைப்படி, தொழிலாளர்களுக்கு 20 சதவீதம் போனசும் 10 நாள் ஊதியத்தை சிறப்பு ஊக்கத் தொகையாகவும் வழங்க ஒப்புக்கொண்டு, நிர்வாகத்தினரும் தொழிலாளர்களும், தங்களுக்குள்ளாகவே 1947-ம் வருட தொழிற் தகராறு சட்டம் பிரிவு 18(1)-ன் கீழ் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

**காவேரி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிட், பேட்டைவாய்த்தலை, திருச்சி:**

2.21. திருச்சி மாவட்டம், பேட்டைவாய்த்தலையிலுள்ள காவேரி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிட்., நிறுவனத்தில் தொழிலாளர்களுக்கு 1990-91 ஆம் ஆண்டிற்கு போனஸ் வழங்குவது தொடர்பான பிரச்சினையில் சென்னை, தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) முன்னிலையில் 2-11-1991 அன்று தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12(3)-ன் கீழ் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது.



இவ்வொப்பந்தத்தின்படி 1990-91 ஆம் ஆண்டிற்கு தொழிலாளர்களின் ஈட்டிய ஊதியத்தில் 21 சதவிகிதம் போனஸ் மற்றும் கருணைத் தொகையாக வழங்க நிர்வாகம் ஒப்புக் கொண்டது. தொழிலாளர்கள் 21-10-1991 முதல் ஈடுபட்டு வந்த வேலைநிறுத்தத்தை 3-11-1991-ல் விலக்கிக் கொண்டனர்.

**கெமிக்கல்ஸ் அண்ட் பிளாஸ்டிக்ஸ் இந்தியா லிட்., பிளாண்ட் 2, மேட்டூர் அணை :**

2.22. சேலம் மாவட்டம், மேட்டூர் அணை, கெமிக்கல்ஸ் அண்டு பிளாஸ்டிக்ஸ் இந்தியா லிட்., பிளாண்ட் 2, தொழிலாளர்கள், 1990-91 ஆம் ஆண்டு போனஸ் குறித்து எழுப்பிய தொழில் தாவாவில், தொழிலாளர் ஆணையர் தலையிட்டு, அதன் பயனாக 24-12-1991-ல் அவரது முன்னிலையில் தொழிற் தகராறு சட்டப்பிரிவு 12 (3)-ன் கீழ் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இவ்வொப்பந்தத்தின்படி தொழிலாளர்களுக்குக் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்க ஒப்புக் கொள்ளப்பட்டது:—

(1) 1990-91 ஆம் ஆண்டிற்கு 20 சதவீதம் போனஸ்,

(2) நல்லெண்ண ஊக்கத் தொகை மற்றும் உற்பத்தி அன்பளிப்பாக 34 சதவீதம் ஈட்டிய ஊதியம், மற்றும்

(3) நல்லெண்ணத் தொகையாக ரூ. 2,500.

**செம்ப்ளாஸ்ட் நிறுவனம் :**

2.23. நிறுவனத் தொழிலாளர்களின் சீரிய பணி நிலைமை, பதவி உயர்வுகள் குறித்து 1988 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தத்தை அமுல்படுத்தக் கோரி தொழிற்சாலை பகுதி III மற்றும் பகுதி I ஆகியவற்றைச் சார்ந்த சில தொழிலாளர்கள் 10-12-1991 முதல் மேற்கொண்ட உள்ளிருப்பு வேலை நிறுத்தமும் அதனை அடுத்து 28-12-1991 முதல் நிர்வாகம் அறிவித்த கதவடைப்பும் தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) மற்றும் தொழிலாளர் ஆணையர் அறிவுரையின்படி தொழிற் தகராறு சட்டப் பிரிவு 18(1)-ன் கீழ் 3-3-1992 அன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தினால் சுமுகமாகத் தீர்க்கப்பட்டன. இதையடுத்து நிறுவனம் வழக்கமாக இயங்கி வருகிறது.

**ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை திறப்பு :**

2.24. 3,086 தொழிலாளர்களைக் கொண்ட ஸ்டாண்டர்டு மோட்டார் புராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், பெருங்களத்தூர், சென்னை நிறுவனம் 7-2-1989 முதல் மூடப்

பட்டது. இந்நிறுவனத்தைத் திறப்பது தொடர்பாக தொழிலாளர் சட்டப்பிரிவு 12(3)-ன் கீழ் சென்னை, தொழிலாளர் ஆணையர் முன்னிலையில் ஏற்கனவே தீர் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இந்நிறுவனத்தைப் புதுப்பித்தல் தொடர்பான வழக்கு, தொழிலாளர் நிதி மற்றும் மறு கட்டமைப்பு வாரியம், ( B.I.F.R. ) முன்னிலையில் பல தேதிகளில் விவாதிக்கப்பட்டது. இறுதியாக 11-12-1991 அன்று நடைபெற்ற இவ்வாரியத்தின் கடைசிக் கூட்டத்தில் இந்நிறுவனத்திற்கான மறு வாழ்வு வசதித் திட்டம் பற்றி ஒரு தீர்வு காணப்பட்டது. 4-2-1992 முதல் தொழிற்சாலை திறக்கப்பட்டு, பணிகள் தொடங்கியுள்ளன.

'பி' அண்ட் 'சி' மில்ஸ், சென்னை:

2.25. 8,000 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள பி அண்ட் சி மில்ஸ் நிர்வாகம், ஆலையை மூடுவதற்கு அனுமதி கோரி விண்ணப்பித்தது. சென்னை தொழிலாளர் ஆணையர், தொழிற் தகராறு சட்டத்தின் கீழ் தனது 8-2-1991 நாளிட்ட ஆணையில், ஆலையை மூடுவதற்கான அனுமதியினை மறுத்து, ஆணையிட்டார். ஆனால் நிர்வாகம் 1-4-1991 முதல் ஆலையின் இயக்கத்தை நிறுத்திவிட்டது. இது சம்பந்தமாக இருதரப்பினரும் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்களையும் மேல்முறையீடுகளையும் தாக்கல் செய்தனர். அனுமதி மறுத்து வெளியிட்ட தொழிலாளர் ஆணையரின் ஆணையை தள்ளி வைத்து சென்னை உயர்நீதி மன்றம் திரும்பவும் விசாரிக்க தொழிலாளர் ஆணையருக்கு வழக்கை அனுப்பி வைத்தது. தொழிலாளர் ஆணையர் தனது 27-11-1991 நாளிட்ட ஆணையில் ஆலையை மூடுவதற்கு அனுமதியினை மறுத்து திரும்பவும் ஆணையிட்டார். அதே நேரத்தில் தொழிலாளர்களின் நலன் பாதிக்கப்படாத வகையில் சில நிபந்தனைகளுடன் துணிப் பதப்படுத்தும் பிரிவை புவனகிரிக்கு மாற்றுவதற்கு அனுமதி அளித்தார். இருதரப்பினரும் இதனை எதிர்த்து அரசின் முன் மறுஆய்வு மனுக்களை சமர்ப்பித்தனர்.

2.26. இதற்கிடையே மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 4-2-1992 அன்று நிர்வாகம் மற்றும் தொழிற் சங்கங்களுக்கிடையே பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அந்தக் கூட்டத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அறிவுரைப்படி பி அண்டு சி ஆலையை 13-4-1992 அன்று மீண்டும் திறப்பதற்கும், அதனை நடத்தி செல்வதற்கு நிலைத்திருக்கக் கூடிய திட்டத்தினை உருவாக்குவதற்கும் தொழிலாளர் ஆணையர், நிறுவனத் தரப்பில் ஒரு பிரதிநிதி மற்றும் தொழிற் சங்கத்தின் தரப்பில் ஒரு பிரதிநிதி சேர்ந்த முத்தரப்பு குழு ஒன்றை அமைக்கவும் ஒத்துக் கொள்ளப்பட்டது.



2.27. துரதிர்ஷ்டவசமாக இம்முத்தரப்புக் குழுவினால் ஒரு சுமுகமான உடன்பாடு ஏற்படுத்த முடியவில்லை. ஆகவே இப்பிரச்சினை குறித்து அரசு கவனமாக பரிசீலனை செய்தது. ஒரு நிலையான திட்டத்தினை வகுத்து இந்திய தொழிற் வளர்ச்சி வங்கியின் ஒப்புதலைப் பெறாவிட்டால், நிர்வாகத்தினால் ஆலையினைத் திறந்து நிலையான முறையில் நடத்துவதற்கு தேவையான நிதி வசதி கிடைக்க வேறு வழியில்லை. ஆலையின் துணி பதப்படுத்தும் பகுதியினை புவனகிரிக்கு மாற்றுவது தவிர்க்கமுடியாத ஒன்றாகும். ஏனெனில் அதற்குத் தேவையான நீர், கரி, ரயில் இணைப்புப் பெட்டிகள் போதுமான அளவில் சென்னையில் கிடைப்பது அரிதாக உள்ள அதே நேரத்தில் புவனகிரியில் தேவையான அளவு நீர் மற்றும் எரிவாயு கிடைப்பதற்கு உத்தரவாதம் உள்ளது. இவைகளை கருத்தில் கொண்டு அரசு இப்பிரச்சினை குறித்து ஆராய்ந்து, பின்னி ஆலை மூடுவதற்கு நிர்வாகம் கூறியுள்ள காரணங்கள் யாவும் பொது நலத்தினை. கருத்திற்கொண்டு சரியானவை மற்றும் போதுமானவை என கருதி ஆலையை மூடுவது நியாயமானதே என்றும் முடிவு செய்தது. அதற்காக மேற்சொன்ன முடிவின்படி தொழிலாளர் ஆணையர் ஆலையை மூடுவதற்கு அனுமதி தர மறுத்து வெளியிட்ட ஆணையினை தள்ளிவைத்து அரசு மறுபரிசீலனை மனுக்களின் மீது 12-3-1992 று ஆணை பிறப்பித்தது.

2.28. இருந்தபோதிலும் ஆலையினை மீண்டும் திறந்து தொழிலாளர்களின் நலத்தினைப் பாதுகாத்து, அவர்களுக்கு நிலையான வேலை வாய்ப்புக் கிடைக்க உத்திரவாதம் அளிப்பதே அரசின் முக்கிய குறிக்கோளாகும். இப்பிரச்சினை குறித்து கடந்த ஓராண்டு காலமாக பல சுற்றுப் பேச்சு வார்த்தைகள் நடத்தியும் ஆழ்ந்து ஆராய்ந்தும் முத்தரப்புக் குழு உட்பட பல தரப்பட்ட குழு அமைத்தும் ஒரு தெளிவான முடிவு அடைய முடியவில்லை. அதே சிக்கலான நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இவைகளை மனதில் கொண்டு நிர்வாகத்தின் மாற்றுத் திட்டத்தினை அரசு பரிசிலனை செய்து இத்திட்டமே ஆலையை இயக்க வழி செய்யும் திட்டம் என்றும், மேலும் இதற்கு இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் ஒப்புதல் பெற வழிவகை உள்ளது என்றும் முடிவு செய்தது. தொழிலாளர்களின் நலன் பாதுகாப்பதற்கு ஏற்ப சில நிபந்தனைகளுடன், அரசு நிர்வாகத்தின் மாற்றுத் திட்டத்தை ஒப்புக் கொண்டு மற்றொரு ஆணை பிறப்பித்தது. அதனால் நிர்வாகம் 13-4-1992 அன்று ஆலையினை திறப்பதற்கு வேண்டிய நிதி பெறுவதற்கு நிர்வாகம் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியினை அணுக முடியும். ஆலையை 13-4-1992 அன்று திறப்பதற்கு ஏதுவாக ஒப்புதல் அரசு வழங்கியுள்ளது. எனவே 13-4-1992 அன்று ஆலையை திறக்கும் வகையில் நிர்வாகத்தின் புதிய திட்டத்திற்கு இந்திய தொழிற் வளர்ச்சி வங்கியின் ஒப்புதலும் நிதியுதவியும் பெற அந்த வங்கியை அணுகுமாறு அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

2.29. மேலும் ஆலை திறக்கும் நாளன்று அனைத்து தொழிலாளர்களுக்கும் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் வகையில் ஒரு மாத ஊதியத்தினை கருணைத் தொகையாக வழங்குமாறும் அரசு அறிவுரை வழங்கியுள்ளது. 13-4-1992 அன்று ஆலை திறக்கும் முயற்சியில் நிர்வாகத்துடன் ஒத்துழைப்பு கொடுக்குமாறு தொழிற் சங்கங்களும் அறிவுறுத்தப் பட்டுள்ளன.

2.30. இதன் பின்னர் சென்னை தொழிலாளர் துறை தனித் துணை ஆணையர் முன்பும் தொழிலாளர் துறை ஆணையர் முன்பும் சமரசப் பேச்சு வார்த்தைகள் மீண்டும் தொடர்ந்தன. அதன் விளைவாக, இதுவரை சுமுக முடிவு காணப்படாமல் இருந்த எல்லா முக்கியப் பிரச்சினைகள் குறித்தும் 13-4-1992 அன்று மில்லை மீண்டும் திறப்பதற்கும், 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டப் பிரிவு 12(3)ன் கீழ் 26-3-1992 அன்று ஓர் சுமுக ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

2.31. தமிழக அரசு பின்னி ஆலை நடைமுறை மூலதனத்திற்காக இந்திய ஸ்டேட் வங்கிக்கு ரூ. 10 கோடிக்கு உத்திரவாதம் அளித்துள்ளது. இந்த உத்திரவாதம் 6 மாத காலத்திற்கு அல்லது இந்திய தொழில் வளர்ச்சி வங்கிக்கு நிர்வாகம் சமர்ப்பித்துள்ள திட்டத்திற்கு ஒப்புதல் கிடைக்கும் வரை, இவற்றுள் எது முன்னதாக முடியுமோ அதுவரை அமலில் இருக்கும்.

**2.32. மூடப்பட்ட நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு உதவித் தொகை அளித்தல்.**

மூடப்பட்ட நிறுவனங்களில் உள்ள பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு 1991-ம் வருடத்தில் முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து நிவாரணப் வழங்கப்பட்ட விபரம் பின்வருமாறு:

| வரிசை எண். | நிறுவனத்தின் பெயர். | தொழிலாளர்களின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | எம். ஆர். எலக்ட்ரானிக்ஸ் காம்போனன்ட்ஸ் லிட்., சென்னை, (ஒரு நபருக்கு ரூ. 200 விதம்). | 441 | 88,200 |
| 2. | ராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரியல்ஸ் லிட். கோவை, (ஒரு நபருக்கு ரூ. 200 விதம்). | 344 | 68,800 |
| 3. | பி. அன்டு சி. மில்ஸ், சென்னை (ஒரு நபருக்கு ரூ. 400 விதம்). | 8,000 | 32,00,000 |
| | விடுபட்ட தொழிலாளர்கள் | 136 | 54,000 |
| 4. | சேஷசாயி இண்டஸ்டிரீஸ் லிமிடெட், வடலூர் (ஒரு நபருக்கு ரூ. 400 விதம்). | 1,662 | 6,64,800 |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 5. | அலெக்ஸாண்டர் திரட் டிவிஷன், மேட்டூர் அணை. | 260 | |
| 6. | வசந்தா மில்ஸ், கோவை .. | 1,562 | |
| 7. | கே. ஜி. எஸ். ஸ்பின்னர்ஸ், கோவை. | 150 | |
| 8. | ராதாகிருஷ்ணா மில்ஸ், கோவை. | 1,100 | |
| 9. | காவேரி ஸ்பின்னிங் மில்ஸ், புதுக்கோட்டை. | 850 | |
| 10. | ஜெயலட்சுமி மில்ஸ், கோவை | 558 | |
| 11. | மது ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ், கோவை. | 500 | 36,65,600 |
| 12. | ராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரியல்ஸ் லிட்., கோவை. | 400 | |
| 13. | எவரெஸ்ட் இன்ஜினியரிங் ஓர்க்ஸ், கோவை. | 330 | |
| 14. | ஸ்டாண்டர்டு மோட்டார் புராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிட்., பெருங்களத்தூர். | 3,086 | |
| 15. | கெம்ப் (இந்தியா) லிட்., கோவை | 186 | |
| 16. | நியூ சிட்டி இன்ஜினியரிங் ஓர்க்ஸ், கோவை. (ஒரு நபருக்கு ரூ. 400 விதம்) | 182 | |
| | (வரிசை எண். 5 முதல் 16 வரை மொத்த தொழிலாளர்கள்) ரூ. 36,65,600) | 9,164 | |
| 17. | மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிட்., மேட்டூர் அணை. (நபருக்கு ரூ. 400 விதம்.) | 2,175 | 8,70,000 |

**2.33. கோவையில் தொழிலாளர் அலுவலகக் கட்டிடம் கட்டுதல்:**

தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலை ஆய்வகத் துறை அலுவலகங்களுக்கு கோயம்புத்தூரில் சுமார் ரூ. 60 இலட்சம் செலவில் ஒரு மையமான அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்கென 1991-92 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1991-92 ஆம் ஆண்டில் முதல் மாடி வரை கட்டிடம் கட்டுவதற்கு, பொதுப் பணித்துறை தலைமைப் பொறியாளருக்கு (கட்டிடம்) அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**2.34. தொழிலாளர் நீதிமன்றங்கள்:**

வேலூர், சேலம் மற்றும் திருச்சியில் 3 புதிய தொழிலாளர் நீதிமன்றங்களை அரசு ஏற்படுத்தி உள்ளது. இந்த நீதிமன்றங்கள் நடுவர்கள் நியமிக்கப்பட்டவுடன் செயல்பட ஆரம்பிக்கும்.

## அத்தியாயம் 3.

**சட்டங்கள், சட்டதிருத்தங்கள் அறிவிக்கைகள், விதிவிலக்குகள் மற்றும் பல தமிழ்நாடு எடைகள் மற்றும் அளவைகள் தரம் (அமுலாக்கம்) விதிகள் 1989.**

3.1 அரசு ஆணை எண். 2(டி) 31, நாள் 18-6-91-ன் படி தமிழ்நாடு எடைகள் மற்றும் அளவைகள் தரம் (அமுலாக்கம்) விதிகள் 1989ல் உள்ள 4வது அட்டவணையில் செய்யப்பட்டுள்ள திருத்தத்தின்படி, ஒரு கிலோ கிராம் வரையிலும் அளவுள்ள உணவு-எண்ணை விற்பனை செய்யப்படும்போது அளவு மூலமும் ஒரு கிலோ கிராம் எண்ணெய்க்கு மேல் விற்பனை செய்யப்படும்போது எடை போடுவதன் மூலம் மட்டுமே உரிய அளவைக் கணக்கிட வேண்டும் என்றும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

தொழிலாளர் நலச் சட்ட அமுலாக்கம்.

3.2. பீடி, உணவு நிறுவனம், கடை, வர்த்தக நிறுவனம் போன்றவைகளில் பணியாற்றும் பலவகைப்பட்ட தொழிலாளர்கள் மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் போன்ற பல்வேறு தரத்திலுள்ள தொழிலாளர்களின் பணிவரைமுறைகளை உருவாக்க வேண்டி அநேக தொழிலாளர் நலச் சட்டங்கள் உள்ளன. தொழிலாளர் துறையில் உள்ள அமுலாக்கப்பணி இயந்திரம், அமுலாக்கம் பயனுள்ளதாக மற்றும் திறம்பட இருக்க வேண்டும் என்னும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்



நலச்சட்டங்கள் அமுலாக்கம் செய்யப்படுவதின் முக்கிய குறிக்கோள்களாவன :—

1. தொழிலாளர்களுக்கு, சட்டபூர்வமாகக் கிடைக்க வேண்டிய நன்மைகளைப் பெற்றுக்கொடுப்பது.
2. நுகர்வோரின் அக்கறையைப் பாதுகாப்பது,
3. இன்னலற்ற அமுலாக்கம்.

எடைகள் மற்றும் அளவுகள் உட்பட சட்டபூர்வமான தொழிலாளர் நலச் சட்டங்கள் சரியாக அமுல் செய்யப்படுகின்றனவா என்று தெரிந்து கொள்ள, சிறப்பு, திடீர் சோதனை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொட்டலப் பொருட்கள் விதிகள் உட்பட, எடையளவுச் சட்டங்களின் கீழ் அண்மையில் செயல்படுத்தப்பட்டு வரும், இசைவு தீர்வை முறையானது, நீதிமன்றத்தில் வழக்குகள் தொடருவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தடுக்க உதவுகிறது.

1991-ம் ஆண்டு இசைந்த தீர்வையின் மூலம் (Compounding of offences) எடையளவுகள் சட்டம் மற்றும் பொட்டலப் பொருட்கள் விதிகளின் கீழ் 31,993 வழக்குகளில் ரூ. 29,18,645.00 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டது.

**தோட்டத் தொழிலாளர் சட்டம் :**

3.3. தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு போதுமான மருத்துவ வசதிகள் கிடைக்க செய்ய வேண்டியும், அந்த வசதிகளைப் பெற்றுத் தர வழிமுறைகளைப் பரிந்துரை செய்யவும் அரசு தனது ஆணை எண். 278, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள் 7-10-1991 மூலம் ஒரு துணைக் குழுவை அமைத்துள்ளது.

**குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948:**

3.4. 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் இவ்வரசு, பொதுவாக அமைப்புரீதியற்ற பேரம் பேச வலுவற்ற தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதியங்களை நிர்ணயித்தல்/மறுநிர்ணயம் செய்தல் ஆகியவற்றை செய்து வருகிறது. இன்று வரை இச்சட்ட அட்டவணையில் 67 தொழில்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

3.5. குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம்/மறுநிர்ணயம் செய்யும்போது அடிப்படை ஊதியம் தவிர விலைவாசி

உயர்வை ஈடுகட்டும் விதத்தில் விலைவாசிப் புள்ளி உயர்வுடன் இணைந்த அகவிலைப்படியையும் நிர்ணயம் செய்வதை இவ்வரசு கொள்கையாகக் கொண்டுள்ளது.

3.6 குறைந்தபட்ச ஊதியம் சட்ட அட்டவணைத் தொழில்களுக்கு தினசரி ரூ. 15-க்கு குறையாமல் ஊதிய விகிதங்களை நிர்ணயம்/மறுநிர்ணயம் செய்வதில் அரசு அக்கறை கொண்டுள்ளது.

3.7. 1—3—1992 அன்று உள்ள நிலவரப்படி இந்த அரசு கீழ்க்கண்ட தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை நிர்ணயம்/மறுநிர்ணயம் செய்துள்ளது.

நிர்ணயம்.

1. காகிதம் மற்றும் காகிதம் சார்ந்த தொழில்.

மறுநிர்ணயம்.

1. காபி பதப்படுத்தும் தொழில்.

2. பொது மோட்டார் போக்குவரத்துத் தொழில்.

3. தோல் பதனிடும் மற்றும் தோல் தயாரிப்புத் தொழில்.

4. கயிறு தயாரிக்கும் தொழில்.

5. ஜவ்வரிசித் தொழில்.

6. புகையிலைத் தயாரிப்பு (பீடி சுற்றுதல்) தொழில்.

7. அச்சகத் தொழில்.

8. ஓட்டல் மற்றும் உணவு நிறுவனங்கள் தொழில்.

9. தீப்பெட்டி மற்றும் பட்டாசு தயாரிக்கும் தொழில்.

3.8. குறைந்த பட்ச ஊதிய நிர்ணயம்/மறுநிர்ணயம் தொடர்பாகப் பின்வரும் தொழில்களுக்கு அரசால் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன:—

நிர்ணயம்.

1. தகரக் கொள்கலன்கள் தயாரிப்புத் தொழில்.

2. பட்டுப்பூச்சி வளர்ப்புத் தொழில்.



3. கெமிக்கல், மற்றும் டிஸ்டில்லரித் தொழில்.

4. தோட்ட நிறுவனங்கள் (எஸ்டேட் பணியாளர்கள்) தொழில்.

5. தோட்ட நிறுவனங்கள் (ஏலக்காய் தோட்டங்கள்) தொழில்.

மறுநிர்ணயம்.

1. வெளுப்பாக்கல் அல்லது சாயம் தோய்த்தல் அல்லது இரண்டும்.

2. கைத்தறி நெசவுத் தொழில்.

3.9. பின்வரும் தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதிய ஆலோசனைக்குழு அமைப்பது குறித்த செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன:—

நிர்ணயம்.

1. காற்றூட்டப்பட்ட நீர் தயாரிப்புத் தொழில்.

2. தச்சு மற்றும் கருமார் தொழில்.

3. உணவு பதப்படுத்தும் தொழில்.

3.10. கீழ்க்காணும் தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் / மறுநிர்ணயம் குறித்த செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன:—

நிர்ணயம்.

1. மின்னணுத் தொழில் (ஆலோசனைக் குழு மூலம்)

2. தேங்காய் உரிக்கும் தொழில் (அறிவிக்கை வாயிலாக).

மறுநிர்ணயம்.

1. எண்ணெய் ஆலைத் தொழில்.

2. சினிமா (திரையரங்குகள்) தொழில்.

3. பொதுப் பொறியியல் மற்றும் கட்டமைப்புத் தொழில்.

4. ஆட்டோமொபைல் பணிமனைத் தொழில்.

5. கம்பளித் தரைவிரிப்பு மற்றும் சால்வை நெசவுத் தொழில்.

6. புகையிலைத் தயாரிப்பு (பீடி தயாரிப்பு உட்பட) தொழில்.

7. பட்டுக் கைத்தறி நெசவுத் தொழில்.

8. உப்பளத் தொழில்.

9. தையற் தொழில்.

10. மர ஆலைத் தொழில்.

11. காட்டன் ஜின்னிங், பிரஸ்சிங் மற்றும் காட்டன் வேஸ்ட் தொழில்.

12. வனத் தொழில்.

13. மருத்துவமனை மற்றும் மருத்துவ இல்லத் தொழில் (அரசு மற்றும் இ. எஸ். ஐ. மருத்துவ மனை மற்றும் மருத்துவ இல்லங்கள் நீங்கலாக).

14. கட்டுமானப் பணிகள் மற்றும் சாலை பராமரிப்புத் தொழில்.

15. செயற்கை வைரக் கற்களுக்குப் பட்டை தீட்டும் தொழில்.

16. திரைப்படத் தயாரிப்புத் தொழில்.

17. பனியன் தயாரிப்புத் தொழில்.



## அத்தியாயம் 4

நலத்திட்டங்கள்.—

(அ) பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி.

4.1. வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் நலிந்த பிரிவு பீடித் தொழிலாளர்களுக்கு மைய அரசால் மாநில அரசுக்கு வீடு கட்ட செலவாகும் தொகையில் 50 விழுக்காடு அல்லது உயர்ந்தபட்சமாக ரூ. 5000 உதவி தொகையாக ஒவ்வொரு வீட்டிற்கும் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் வேலூரில் உள்ள சத்துவாச்சாரியில் 150 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

4.2. பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகட்டும் திட்டத்தின் கீழ் அரசு திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் மேலப்பாளையம் மற்றும் முக்கூடலில் நில ஆர்ஜிதம் செய்துள்ளது. ஒவ்வொரு வீடும் கட்டுவதற்கு ரூ. 15,000 செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டு அதில் பீடித் தொழிலாளர் நல நிதியிலிருந்து ரூ. 5,000 உதவித் தொகையாகவும் மீதமுள்ள தொகை ரூ. 10,000 அட்கோ நிறுவனத்திடமிருந்து 22 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தும் தவணை முறையில் கடனாகவும் பெற்றுத் தரப்படும். இத்திட்டத்தின்கீழ் உரிய பயனீட்டாளர்களைத் தெரிந்தெடுத்து வீடுகள் ஒதுக்குவதற்கான வழிமுறைகள் 11—4—91ஆம் நாளும் 112 என்னுமிட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. திட்டத்தின்கீழ் உரிய பயனீட்டாளர்களைத் தேர்வு செய்யும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இது முடிவுற்றதும் வீடுகட்டும் பணி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் மேற்கொள்ளப்படும்.

பிற திட்டங்கள்:—

4.3. தொழிலாளர்கள் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ்ப் பயன் பெறவும் குறிப்பாக அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களுக்கு வேண்டிய அறிவுரைகள் வழங்க மாநிலத்தில் மூன்று தொழிலாளர் சட்ட ஆலோசனைக் குழுக்கள் பணியாற்றுகின்றன.

கட்டிட தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புத்திட்டம் ஏற்படுத்துதல்:—

4.4. அமைப்பு ரீதியற்றத் துறைகளில் ஒரு பெரும் பான்மையான பகுதியினர் கட்டிடத் தொழிலாளர்களாகும். இத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் செய்வதோடல்லாமல், 1982-ம் வருட தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் (பணி நிரந்தரம் மற்றும் வேலை நிலைமை) சட்டத்திலுள்ள சலுகைகளை இத் தொழிலாளர்களும் பெற வகை செய்ய அரசு உத்தேசித்துள்ளது. இதைத்

தவிர இத் தொழிலாளர்களுக்கென வைப்பு நிதி, பணிக் கொடை, பேறுகால சலுகைகள் போன்ற பயன்களோடு விபத்து மற்றும் நோய்வாய்ப்பட்ட நேரங்களில் நிதி உதவி கிடைக்கும் வகையில் அரசு தனியாக ஒரு நலத் திட்டத்தினை உருவாக்கவும் உத்தேசித்துள்ளது.

**மகளிர் பிரிவு ஏற்படுத்துதல்:—**

4.5. பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை கணக்கெடுப்பு, பல்வேறு தொழில் நிறுவனங்களில் அவர்களது வேலைவாய்ப்பு, வேலை நிலைமை மற்றும் அவர்களுக்கென ஏற்படுத்தப்பட்டுள்ள நல வசதிகள் போன்ற விவரங்களை சேகரிக்கும் பொருட்டு அரசு 'மகளிர் பிரிவு' ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. மேற்படி மகளிர் பிரிவின் தலைவராக தொழிலாளர் உதவி ஆணையர் நிலையில் ஒரு பெண் அலுவலர் பணியமர்த்தப்பட்டுள்ளார். பெண் தொழிலாளர்கள் பற்றிய கணக்கெடுப்பு, பெண் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல், பெண் தொழிலாளர்களின் உடல் நலம் குறித்து புதிய மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் பெண் தொழிலாளர்களின் முன்னேற்றம் குறித்தும் கருத்து தெரிவித்தல், குழந்தைகள் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு என நலத்திட்டங்கள், கருத்தரங்குகள், கருத்தாய்வுகள் நிகழ்த்த ஆலோசனைகள் கூறுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள இவர் பணிக்கப்பட்டுள்ளார். மேலும் சம ஊதியச்சட்டத்தினை அமுலாக்கம் குறித்த பணியும் இவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

**தொழிலாளர் மறுவாழ்வு நிதி ஏற்படுத்துதல்:—**

4.6. பொதுவாக நவீனப் படுத்துதலாலோ அல்லது தொழில் நுட்ப மேம்பாட்டினாலோ அல்லது நலிவடைந்த/மூடப்பட்ட நிறுவனங்களினாலோ ஆட்குறைப்போ அல்லது வேலையின்மையோ ஏற்படுகின்றது. எனவே அங்ஙனம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களை கண்டறிந்து அவ்விதம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கவேண்டிய நிலையுள்ளது. அவற்றுள் ஒன்றாக அரசால் கண்டறியப் பட்டதுதான், அங்ஙனம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கென வகுக்கப்பட்ட நல நிதித் திட்டம் ஆகும். பெரிய, நடுத்தர, சிறிய மற்றும் மிகச் சிறிய தொழில் நிறுவனங்களுக்காகவே சமீபத்தில் அரசு ஒரு புதிய தொழிற்கொள்கையினை போதுமான நிதி சலுகைகளுடன் அறிவித்துள்ளது. இப்புதிய தொழிற்கொள்கையினால் தொழிலாளர் புனர்வாழ்வு நிதியினை துவக்கவும், இந்த நிதியினைக் கொண்டு நிறுவனங்களைச் சீரமைக்கும்போது அதில் உள்ள தொழிலாளர்கள் பயனடைய ஏதுவாகும். இந்த நலநிதியை எவ்வாறு அமைப்பது மற்றும் அமல்படுத்துவது என்பது பற்றிய வழிமுறைகளை அரசு ஆராய்ந்து செயல்படுத்தும். இந்த நல நிதிக்கு ரூ. 50 கோடி நிதி உதவி அளித்து உதவும்படி மைய அரசை இவ்வரசு கேட்டுக் கொண்டுள்ளது.



**பீடித் தொழிலாளர்களுக்கென கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல்:**

4.7. பீடித் தொழிலாளர்கள் சுரண்டப்படுவதைத் தடுக்கவும், அவர்களுக்குச் சேர வேண்டிய சலுகைகள் அவர்களைப் போய்ச் சரிவர சேர்வதற்கெனவும், பீடித் தொழிலாளர்களுக்கென நிறுவனங்களை தொழிற்கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடத்துவது பற்றி அரசு சிந்தித்து வருகிறது. எனவே இதனைக் கருத்திற்கொண்டும், மூலதனம், பணியாளர் அமைப்பு மற்றும் விற்பனை நிலைகளை கருத்திற்கொண்டும் ஒரு வரைவுத் திட்டத்தினை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பீடித் தொழிலாளர்களுக்கென உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை அமுலாக்குதல்:**

4.8. திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளத்தினைச் சேர்ந்த மாவட்ட பீடித் தொழிலாளர்கள் சங்கத்தினர், தொழிலாளர் நலச் சட்டங்களை, திருநெல்வேலி கட்டபொம்மன் -மாவட்ட தொழிலாளர்களுக்குச் சரிவர அமுல் படுத்துவதில்லை என்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனு மீது, உச்ச நீதிமன்றம் குழு ஒன்றை நியமித்து விசாரணை மேற்கொள்ள உத்தரவிட்டது. அக்குழுவும், இவ்வித விசாரணையை மேற்கொண்டு தனது அறிக்கையினை உச்ச நீதிமன்றத்திற்கு அளித்தது. இவ்வறிக்கையினை உச்ச நீதிமன்றம் ஆராய்ந்து, அதில் 11 பொதுவான குறைபாடுகளை நிவர்த்திக்க தமிழக மற்றும் மத்திய அரசிற்கு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

4.9. இவற்றில், பீடி உற்பத்தித் தொழிலில் உண்மையாகப் பணியாற்றும் நபர்களின் பெயர்களில் பாஸ் புத்தகங்கள் வழங்குவது, தொழிலாளர்கள் சேம நலத் நிதித் திட்டம், குறைந்தபட்சக் கூலிச் சட்டம், பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர் (வேலை மற்றும் நிலைமைகள்) சட்டம், மகப்பேறு நலச் சட்டம், போனஸ் வழங்கல் சட்டம், பீடிச் சுற்றும் தொழிலாளர்களால் ஈட்டப்படும் ஊதியத்தினை பீடி சுற்றுவதில் ஈடுபட்டுள்ளவர்களும், ஒப்பந்தக்காரர்களும் பகிர்ந்து கொள்வது, மூலப் பொருட்கள் போதுமான அளவு வழங்கப் படாமை, பதிவேடுகள் சரிவர பேணப்படாமை, குடும்ப ஓய்வூதியத்தினை மறுத்தல், உற்பத்தியினைக் குறைத்தல் ஆகியவை அடங்கும்.

4.10. உச்ச நீதிமன்ற ஆணைகளுக்கு இணங்க, சம்பந்தப் பட்ட குறைபாடுகளைக் களைவதற்கு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் இவ்வரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உண்மையான தொழிலாளர்களை அடையாளம் காணவும் தொழிலாளர்களுக்கு அவர்கள் பெயரில் பாஸ் புத்தகம் வழங்குவதற்கும், வீட்டுக்கு வீடு கணக்கெடுப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

4.11. பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர் (வேலை நிலைமைகள்) சட்டத்தினை செவ்வனே அமுல் செய்வதற்கெனவும், பீடித் தொழிலாளர்கள் சுரண்டப்படுவதைத் தடுப்பதற்கெனவும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் 6 கூடுதல் தொழிலாளர் உதவி ஆய்வர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

4.12. மேலும், இவ்வித இன்னல்மிக்க தொழிலில் சிறுவர்களைப் பணியமர்த்துவதைத் தடுப்பதெற்கென, சிறுவர்களைப் பணிக்கமர்த்தும் பீடி நிறுவணங்களைக் கண்டறிந்து அவ்விதம் பணிக்கமர்த்தப்படுவதினை தடை செய்ய ஆய்வர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். பதிவேடுகள் சரிவர பராமரிக்காமைக்காக, குறிப்பாக தொழிற்சாலைக்கு வெளியே வேலை செய்யும் தொழிலாளர்களுக்குப் பதிவேடுகள் சரிவர பராமரிக்க ஆவன செய்ய, கணக்கெடுப்புப் பணி விரைவாக நடைபெற்றுவருகிறது. இப்பணி முடிவுற்றதும், அவ்விதம் சரிவர பராமரிக்காத நிறுவனங்களுக்குத் தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டு அமுலாக்கப்படும். இவ்விதப் பணி வீட்டுப் பெண் தொழிலாளர்களைக் கண்டறியவும், பெண் தொழிலாளர்கள் பெயரிலேயே பாஸ் புத்தகங்கள் வழங்கவும் பயனுள்ளதாக அமையும்.

4.13. மேலும், சிறுவர்கள் உட்பட ஒவ்வொரு தொழிலாளிக்கும் குறைந்தபட்சம் ரூ. 50 ஆயிரத்திற்கு ஈட்டுறுதி திட்டத்தினை பீடித் தொழிலாளர்களிடமிருந்து எவ்வித தவணைக் கட்டணமும் பிடித்தம் செய்யாமல், அமுலாக்க உற்பத்தியாளர்கள் / வேலையளிப்பவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

4.14. உச்சநீதிமன்றத்தின் மற்ற ஆணைகளான; தொழிலாளர் சேம நல நிதிச் சட்ட அமுலாக்கம், ஒப்பந்த தொழிலாளர்கள் முறையினை ஒழித்தல், 1975 ஆம் வருடத்திய பீடித் தொழிலாளர் நல வரிச்சட்ட அமுலாக்கம் மற்றும் 1976-ம் வருடத்திய பீடித் தொழிலாளர் நல நிதிச் சட்டம் தல நிதியை நிர்வகித்தல் முதலியன குறித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள மைய அரசை அணுகப்படும்.

4.15. தொழிலாளர் துறையின் பல்வேறு நடவடிக்கைகள் குறித்த விவரங்களை இணைப்புகள் 1முதல் 7 வரை காணலாம்.



## அத்தியாயம் 5

### தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை-6

5.1. தொழிலாளர், வேலையளிப்போர் மற்றும் அரசு ஆகியோர் அளிக்கும் நலநிதிப்பங்குத் தொகையினைக் கொண்டு தொழிலாளர்களுக்கும் அவர்தம் குடும்பங்களுக்கும் பயன் பெறும் வகையில் பல்வேறு நலத் திட்டங்களை தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் செயல்படுத்தி வருகின்றது.

5.2. தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி, மாநில தொழிலாளர் நல அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

5.3. இவ்வாரியம், தமிழக முழுமையும் 58 தொழிலாளர் நல மையங்களையும், 10 தையற் பயிற்சி மையங்களையும் நடத்தி வருகின்றது. ஒவ்வொரு மையத்திலும் தொழிலாளர்களின் ஆதரவில் வாழ்ந்துவரும் பெண்களுக்குத் தையற் பயிற்சி கற்பித்தலும், ஒரு பிரிவில் குழந்தைகளுக்கான பள்ளியும் நடத்தப்படுகின்றன. தையற் பயிற்சி பெறுபவர்களுக்கு மாதம் ரூ. 80 வீதம் உதவித் தொகை அளிக்கப்படுகின்றது. குழந்தைகள் பிரிவில் பயிலும் குழந்தைகளுக்கு இலவசக் கல்வியுடன் சத்துணவு, பால், பழம், முட்டை வழங்கப்படுவதுடன் மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு மருந்துகள் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. பிரதி ஆண்டும் இரண்டு ஜதை டெரிகாட்டன் சீருடைகளும் வழங்கப்படுகின்றன.

5.4. காச நோயால் அவதியுறும் தொழிலாளர்கள் மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை பெறுவதற்காக தாம்பரம், திருப்பூர், ஆசாரிப்பள்ளம், ஆஸ்டின்பட்டி ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் 26 படுக்கைகள் கொண்ட தனிப் பிரிவினை இவ்வாரியம் கட்டியுள்ளது.

5.5. தொழிலாளர்களும் அவர்களைச் சார்ந்தோர்களும் படிக்கும் வழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழகத்தில் 12 இடங்களில் இலவசப் படிப்பகங்களை இவ்வாரியம் நடத்தி வருகின்றது. மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் தொழிலாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் தங்குவதற்காக ஓய்வு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. இங்கு மிக மிகக் குறைந்த வாடகையே வசூலிக்கப்படுகின்றது. ராமேஸ்வரம், உதகமண்டலம், கொடைக்கானல் ஆகிய இடங்களிலும் ஓய்வு இல்லங்கள் கட்ட, இவ்வாரியம் முடிவு செய்துள்ளது.

5.6. சென்னை தேனாம்பேட்டையில், தொழிலாளர் சம்பந்தப்பட்ட வழக்கு/விசாரணை/பேச்சு வார்த்தை ஆகியவற்றிற்காக வரும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் குறைந்த வாடகையில் தங்குவதற்காக ஓர் ஓய்வு இல்லமும் கட்டப்பட்டுள்ளது.

5.7. ஓசூர், ஆம்பூர், மறைமலைநகர், மதுரை ஆகிய இடங்களில் தொழிலாளர் நல மையங்கள் துவங்குவதுபற்றி வாரியம் பரிசீலித்து வருகிறது.

5.8. தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிக்கு ஆண்டு ஒன்றிற்கு தொழிலதிபர்கள் ஒவ்வொரு தொழிலாளருக்கும் 4 ரூபாயும், அரசு 2 ரூபாயும், தொழிலாளர் ஒவ்வொருவரும் 2 ரூபாயும் சந்தா தொகையாக அளித்து வருகின்றனர். தொகையை, முறையே ரூபாய் 6, 3, 3 என உயர்த்துவதற்கு இவ்வாரியம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இதற்காக 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தை திருத்துவது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

5.9. இவ்வாரியம் நடைமுறைப்படுத்தும் பல்வேறு நலத் திட்டங்களின் மூலம் பயன்பெற்றவர்களின் விவரம் இணைப்புகள் 8 முதல் 10 வரையில் தரப்பட்டுள்ளது.



## அத்தியாயம் 6

### தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்.

6.1. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிலையம் 1978-ஆம் ஆண்டு முதல்தர நிலையமாக உயர்த்தி அமைக்கப்பட்டது. தற்போது 1—4—1988 முதல் தன்னாட்சி நிறுவனமாக இயங்கி வருகிறது. இந்த நிலையம் தற்போது தமிழ்நாடு தொழிலாளர் நல அமைச்சர் தலைமையின் கீழ் உள்ள ஆளுநர் குழுவினரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தொழிலாளர் இணை ஆணையர் நிலையில் ஒரு இயக்குநர் இந்நிறுவனத்தின் தலைவராக இருக்கிறார்.

இந்த நிலையத்தின் முக்கியப் பணிகளும் / நோக்கங்களும்

பின்வருமாறு.—

நல்ல தொழிற்சங்கத் தலைவர்களை உருவாக்குதல், நிர்வாகத்தினருக்கு தொழிலாளர்களுடன் இணக்கமான நெருக்கத்தினை தோற்றுவித்தல், தொழிலாளர் துறையிலும் தொழிற்சாலைகள் துறையிலும் பணியாற்றும் அலுவலர்களின் திறமைகளை வளர்த்தல், தொழிலாளர் நிர்வாகத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல் ஆகியவையாகும்.

6.2. இக்கல்வி நிலையம், பயிற்சித் திட்டங்கள், கருத்தரங்குகள், புத்தாக்கப் பயிற்சிகள், இயல்பாக்க பயிற்சிகள் ஆகியவற்றினை நடத்தி வருகிறது. இந்தப் பயிற்சிகள் தொழிலாளர்களுக்கும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் தொழிலகங்களில் பணியாற்றும் மேற்பார்வையாளர்களுக்கும், நிர்வாகப் பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலைகள் துறை அலுவலர்களுக்கும் பிற துறை அலுவலர்களுக்கும் பயன்படும் வகையில் நடத்தப்பட்டு வருகின்றன.

இக்கல்வி நிலையத்தில் தொழிலாளர் நிர்வாகம் சம்பந்தமாக ஓராண்டு பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு வழங்கப்படுகிறது. மேற்கண்ட பட்ட மேற்படிப்புகளுக்கு சென்னைப் பல்கலைக் கழகம் அங்கீகாரம் அளித்துள்ளது. தேர்ச்சி பெற்ற விரிவுரையாளர்களின் விரிவுரையும் குழு கலந்துரையாடலும், பொருள்கள் குறித்து விரிவான ஆழமான படிப்பும் இந்நிறுவனத்தின் செயல்பாடுகளில் அடங்கும். ஆண்டுதோறும் பட்டப்படிப்பில் 40 மாணவர்களும், பட்ட மேற்படிப்பில் 20 மாணவர்களும் பயிலுகின்றனர்.

6.3. 1991-ம் ஆண்டில் 40 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மேற்படி நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்கள் மற்றும் பயிற்சி அடைந்தவர்களின் எண்ணிக்கை 1,617. இக்கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் 31—12—91 வரையிலான காலத்தில் 744 கருத்தரங்குகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டு 30,717 நபர்கள் பங்குபெற்றுள்ளனர்.



## அத்தியாயம்-7

### தொழிற்சாலைகள் ஆய்வகத்துறை.

7.1. தொழிற்சாலைகள் ஆய்வகத்துறை 1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் 12 இதர முக்கிய தொழிலாளர் சட்டங்களை தொழிலாளர்களின் நலன் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றைப் பேணும் பொருட்டு அமுல்படுத்துகிறது.

7.2. குறிப்பாக இரசாயனத் தொழிற்சாலைகளில் ஆராய்ச்சி செய்வதற்காகவும் மேம்பாடு செய்வதற்காகவும் ஒரு இணை தொழிற்சாலை ஆய்வகத்துறை தலைமை ஆய்வாளர் பதவி உயர்த்தப்பட்டு ஒரு தொழிற்சாலைகள் கூடுதல் தலைமை ஆய்வாளர் பதவி புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள இணைத்தலைமை தொழிற்சாலைகள் ஆய்வாளர் (சோதனை மற்றும் பாதுகாப்பு), சென்னை, புரிந்து வந்த பணிகளை இந்தக்கூடுதல் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் மேற்கொள்ளுவார்.

7.3. கடும் விபத்துத் தடுப்புப் பிரிவு (Major Accident Hazard Control Cell) உரிய தளவாடங்களுடன் சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது. அபாயகரமான உற்பத்தி முறைகளை கையாளும் தொழிற்சாலைகளுக்கு தொழிற்சாலைக்குள் விபத்து ஏற்படாமல் தடுக்கும் முறைகளும் அவ்வாறு விபத்து ஏற்பட்டுவிட்டால் அதனை சமாளிக்கும் அவசர கால முறைகளும் சோதனை மற்றும் பாதுகாப்புப் பிரிவினை மேற்பார்வை செய்தலும் இப்பிரிவின் முழுப் பொறுப்பாகும்.

7.4. 1991-ம் ஆண்டு துவக்கத்தில் 16,710 தொழிற்சாலைகள் 1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் இருந்தன. அவைகள் 1991-ம் ஆண்டு டிசம்பர் இறுதியில் 18,062 ஆக அதிகரித்து உள்ளன. 31—12—1991-ல் 1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் உத்தேசமாக 9,01,943 தொழிலாளர்கள் உள்ளனர். 1991-ம் ஆண்டு ரூ. 4,03,30,137 உரிமத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

7.5. நடப்பு ஆண்டில் 25,014 முறையான ஆய்வுகள் மேற்கொண்டதோடு விடுமுறை, சிறப்பு, திடீர், இரவு ஆய்வுகள் மற்றும் மேல் ஆய்வுகளையும் சேர்த்து 13,783 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. ஆய்வு விவரங்கள் இணைப்புகள் 12 மற்றும் 13-ல் தரப்பட்டுள்ளன.

7.6. நடப்பு ஆண்டில் ஒப்பந்த தொழிலாளர் சட்டம் 1970, ஊதியம் வழங்குதல் சட்டம் 1936, குறைந்தபட்ச ஊதியச் சட்டம் 1948, ஆகியவற்றின் கீழ் 306 வழக்குகள் தவிர, தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் 2,267 வழக்குகள்

தொடரப்பட்டு, ரூ. 14,71,475 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது. வழக்கு விபரங்கள் இணைப்பு 14-ல் தரப்பட்டுள்ளன.

7.7. 1988-ம் ஆண்டு தொழிலாளர் சட்டங்கள் (அறிக்கைகள் அளித்தல்) மற்றும் பதிவேடுகள் பராமரித்தல் (விலக்களித்தல்) சட்டம், குறைந்த தொழிலாளர்கள் பணியாற்றும் நிறுவனங்களுக்கு பதிவேடு பராமரிப்பிலும், அறிக்கைகள் அளிப்பதிலுமிருந்து விதிவிலக்கு அளிக்க வகை செய்து 1—5—1989 முதல் இம்மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. 1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு 19 தொழிலாளர்களுக்கு உள்ளிட்ட தொழிற்சாலைகளுக்கு இச்சட்டம் பொருந்தும்.

7.8. நடப்பு ஆண்டில் 728 புகார்கள் பெறப்பட்டு விசாரிக்கப்பட்டு உள்ளன. முரண்பாடுகள் காணப்பட்ட நேரத்தில் அவைகளை களைய நடவடிக்கைகள் உடன் எடுக்கப்பட்டுள்ளன.

79. தொழிற்சாலைகள் ஆய்வகம் மேற்கொண்ட சோதனைகள், தொடுக்கப்பட்ட வழக்குகள் பற்றிய விவரங்கள் இணைப்புகள் 11, 12, 13 மற்றும் 14-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்திற்கான திருத்தங்கள்.

7.10. இந்த மாநிலத்தில் சிறு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு, தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்படுவதற்கு தொழிலாளர்களின் எண்ணிக்கையை உயர்த்தி அதாவது மின் சக்தி கொண்டு உற்பத்தி நடைபெறும் இனங்களுக்கு 10 தொழிலாளர்களிலிருந்து 25 தொழிலாளராக உயர்த்தியும், மின்சக்தி இல்லாமல் உற்பத்தி நடைபெறும் தொழிற்சாலைகளுக்கு 20லிருந்து 50 தொழிலாளர்களுக்கு உயர்த்தியும் சோதனை மற்றும் பாதுகாப்பு விதிகளுக்கு முரணில்லாமலும் திருத்தம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

7.11. தொழிலாளர் உடல் நலனை பாதுகாக்கவும், அபாயகரமான விளைவுகளினால் உடல் நலம் பாதிக்கப்படும் நிலைமையிருப்பின் அதனின்று பாதுகாத்துக் கொள்ள உரிய பாதுகாப்பு நடைமுறைகளை சேர்த்தும் தொழிற்சாலைகள் சட்டத்திற்கு 1987-ம் ஆண்டு இந்திய அரசு ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வந்தது.

7.12. நம் மாநிலத்தில் அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள் இயங்கும் ஆறு பகுதிகளை அடையாளம் கண்டுள்ளோம். அவையாவன: மணலி, நெய்



வேலி, கடலூர், இராணிப்பேட்டை, மேட்டூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களாகும். இந்த இடங்களை பொறுத்தவரை அபாயகரமான உற்பத்தி முறை கையாளும் தொழிற்சாலைகளுக்கு தொழிற்சாலைகளுக்குள் விபத்து ஏற்படாமல் தடுக்கும் முறைகளும், அவ்வாறு விபத்து ஏற்பட்டால் அதனை சமாளித்துக் கட்டுப்படுத்தும் திட்டங்களும் (Control Measure) தொழிற்சாலையைச் சுற்றியுள்ள பகுதியில் எந்தவிதமான பாதிப்பு ஏற்படும்போது மக்களை பாதிப்புக்கு உள்ளாக்காமல் பாதுகாப்பாக வெளியேற்றும் திட்டம், பாதுகாப்பு நடைமுறைகள் (Safety measures) ஆகியவை தீட்டப்பட வேண்டும். சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்டம் மற்றும் பெரும் விபத்து தடுப்பு பிரிவும் (Testing and Safety Division and Major Accident Hazardous Control Cell) இணைந்து இத்திட்டங்களை தயாரிக்க தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றன.

7.13. அபாயகரமான இரசாயனப் பொருள்களை மூலப்பொருளாக கொண்டு செயல்படும் 59 தொழிற்சாலைகள் இம்மாநிலத்தை பொறுத்தவரை அடையாளம் காணப்பட்டுள்ளன. தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் நிர்வாக அலுவலர்களுக்கு தொழிற்சாலையில் பல்வேறு மட்டத்தில் கையாள வேண்டிய பாதுகாப்பு முறைகளை கற்பிக்க பயிற்சி வகுப்புகள் நடத்தி வருகிறார்கள்.

7.14. அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு, சிவகாசியில் ஒரு பயிற்சி நிலையம் தோற்றுவிக்கப்பட உள்ளது.

7.15. 264 பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் 387 தொழிற்சாலைகளில் இந்த ஆண்டில் நடைபெற்று அதன் மூலம் 7,455 தொழிலாளர்கள் பயனடைந்து உள்ளனர். அதிக விபத்துக்கள் நடக்கும் தொழிற்சாலைகளை தேர்ந்து எடுத்து அத்தொழிற்சாலைகளை பொறுத்தவரை 36 பாதுகாப்பு அளவீடு (Safety Survey) நடத்தப் பெற்று அதன் முடிவுகள் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுப்பப்பட்டன. 58 தொழிற்சார்ந்த சுகாதார அளவீடு (Health Survey) 1991-ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாநில பாதுகாப்பு பரிசுகள் மற்றும் சிறப்பு பரிசுகள்.

7.16. தொழிற்சாலையில் சிறந்த பாதுகாப்பு செயல்களை தெரிந்துகொள்ளவும் தொழில் பாதுகாப்பில் ஆழ்ந்த பற்றுக் கொண்டு இயங்கச் செய்யவும், நிர்வாகத்தினர்களுக்கு தமிழக

அரசு மாநில பாதுகாப்பு பரிசுகள் வழங்குகிறது. இந்த பரிசுகள் வழங்கும் நோக்கத்திற்காக தொழில் நிறுவனங்கள் கீழ்க்கண்ட மூன்று வகையாக பிரிக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| தொகுதி 'அ': | 10 இலட்சம் மணி நேரத்திற்கு குறைவில்லாமல் வேலை செய்த தொழிற்சாலைகள். |
| தொகுதி 'ஆ' | 5 மற்றும் 10 இலட்சம் மணி நேரங்களுக்கு இடையில் வேலை செய்த தொழிற்சாலைகள். |
| தொகுதி 'இ' | 2 முதல் 5 இலட்சம் மணி நேரங்களுக்கு இடையில் வேலை செய்த தொழிற்சாலைகள். |

கீழ்க்கண்ட மூன்று திட்டங்கள் செயலில் உள்ளன :—

திட்டம் 1.—முந்தைய ஆண்டை ஒப்பு நோக்குகையில் விபத்து விகிதத்தை மிக அதிகமாக குறைத்து காண்பிக்கும் தொழிற்சாலைக்கு இந்த பரிசினை வழங்குதல்.

திட்டம் 2.—அதே வகைப்பட்ட மற்ற தொழிற்சாலைகளுடன் ஒப்பிடும்போது நிறையிட்ட அதிர்வு எண் விகிதத்தை (Lowest weighted and reference rate) அந்த ஆண்டில் மிகக் குறைந்த தொழிற்சாலைக்கு இந்த பரிசினை வழங்குதல்.

திட்டம் 3.—பரிசுக்குரிய ஆண்டில் விபத்தின்றி அதிக மணி நேரம் செயல் புரிந்த தொழிற்சாலைக்கு வழங்குதல்.

7.17. மேற் குறிப்பிட்ட பரிசுக்குரியவர்களை அரசு அமைக்கும் குழுவினர் தேர்வு செய்கின்றனர்.

அழுத்த இயந்திரங்கள் சோதனை.

7.18. தமிழ்நாட்டில் 15,942 அழுத்த இயந்திரங்கள் உள்ளன. தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு அழுத்த இயந்திரத்தையும் தகுதியுள்ள நபர்களால் காலமுறை தோறும் முழுமையாக ஆராய்ந்து அதன் பாதுகாப்பாக வேலை செய்யும் தன்மைக்கு தகுதி சான்று வழங்க வேண்டும் என 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் 1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.



7.19. 1991 ஆம் ஆண்டில் சோதனை செய்யப்பட்ட கலன்களின் விவரங்கள் வருமாறு :—

| | |
|---|---|
| வெளிப்புறம் .. .. .. .. | 30,605 |
| உட்புறம் .. .. .. .. .. | 512 |
| தீர்மானங்களின் நிலை (ஹைடிரோஸ்டேடிக்ஸ்) | 5,199 |
| கதம் அதிர்வாய்வு .. .. .. | 1,298 |
| மொத்தம் .. | 37,614 |

இந்த நோக்கத்திற்காக வசூலிக்கப்பட்ட கட்டணம் ரூ. 68,26,430.

தொழிலாளர் உடல் நலம் பேணுதல்.

7.20. கடும்விபத்து தடுப்புப் பிரிவுடன் (Major Accident Hazard Control Cell) இணைந்துள்ள தொழிற்சாலை துப்புரவு சோதனை கூடத்திற்கு அறுவை சிகிச்சை மருத்துவர் ஒருவர் பொறுப்பிலுள்ளார். இவ்வாய்வகத்துறையில், சென்னை, கோவை, வேலூர், சேலம், திருச்சி, சிவகாசி, திருநெல்வேலி மற்றும் மதுரை ஆகிய 8 இடங்களில் உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்கள் பணியாற்றுகின்றனர்.

7.21. இந்த கால கட்டத்தில் 9 தொழிற்சார்ந்த சுகாதார ஆய்வுகள் தொழிற்சாலை துப்புரவு சோதனை கூடத்தினால் செய்யப்பட்டன.

7.22. உற்பத்தித் திறன் பிரிவு ஒன்று தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் அலுவலகத்தில் செயல்பட்டு வருகின்றன். இக்குழு 1—1—1991 முதல் 31—12—1991 வரையிலான காலத்தில் 42 பயிற்சி வகுப்புகள் நடத்தியது. அதனால் 1,152 தொழிலாளர்கள் பயனடைந்து உள்ளார்கள்.

7.23. 1987-88 மற்றும் 1988-89 ஆகிய ஆண்டுகளுக்கு மாநில அளவிலான உற்பத்தி திறன் விருதுபெற வெற்றி பெற்றவர்களைத் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன.

7.24. தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் சிறார்களின் பணி: தனி நபர் ஒருவரால் தொடுக்கப்பட்ட, பொதுமக்கள் நலன் பற்றிய ஒரு வழக்கில், சிவகாசியில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணியமர்த்தப்படும் சிறுவர்கள் பற்றிய பிரச்சினை சம்பந்தமாக, தமிழ்நாடு அரசிற்கு உச்ச நீதிமன்றம் சில உத்திரவுகளை வழங்கியுள்ளது.

7.25. அந்த உத்திரவுகளின் மீது மாநில அரசால் எடுக்கப் பட்ட நடவடிக்கைகளின் விவரம் பின்வருமாறு :—

(1) தீப்பெட்டிகளைத் தயாரிக்கும் இடத்திலிருந்து குச்சி களைப் பெட்டிகளில் அடைக்கும் பணியை தனியாக வேறு ஒரு இடத்தில் (தொலைவில்) அமைத்து, அதில் சிறுவர்களைப் பணிபுரிய அனுமதிக்க ஏற்றவாறு, சம்பந்தப்பட்ட சட்டத்தின் விதிமுறைகளுக்கு திருத்தம் செய்வது அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், 1986ம் ஆண்டு குழந்தை தொழிலாளர்கள் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தினை இதற்குத் தகுந்தவாறு திருத்துவதற்கு மத்திய அரசை கேட்டுக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(2) தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணிபுரியும் சிறுவர் களுக்கு மருத்துவ வசதி, பொழுதுபோக்கு வசதி, கல்வி வசதி அளிக்கக் கூடிய திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தும் பொருட்டு ஒரு நலநிதியை இவ்வரசு 1-1-1991 முதல் உரு வாக்கியுள்ளது. தீப்பெட்டி தொழிற்சாலை அதிபர்கள், ஒரு தொழிலாளிக்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ. 2 வீதம் அளிக்க ஒப்புக் கொண்டுள்ளனர். 54,924 தீப்பெட்டித் தொழிலாளர்கள் இத னால் பயனடைவர். மாநில அரசும் இதற்கு இணையாக தன் பங்காக, ஆண்டு ஒன்றிற்கு ஒரு தொழிலாளிக்கு ரூ. 2 வீதம் அளிக்கும். தற்போது இந்தத் தொகையை ரூ. 2 லிருந்து ரூ. 10 ஆக உயர்த்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட் டத்தை பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டுள்ள 18,558 தொழி லாளர்களுக்கும் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. காமராசர், சிதம்பரனார், திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டங்களில், ஏற்கெனவே அமுலி லுள்ள இந்தத் திட்டம், மதுரை, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி மற்றும் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டங்களுக்கும், தற்போது விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

(3) இந்த தொழிலாளர் நலநிதியை நிர்வகிக்கும் பொருட்டு எந்த மாவட்டங்களில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அதிக அளவில் அமைந்துள்ளனவோ, அம்மாவட்டங்களில், அந்த மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகக் கொண்ட ஒரு குழுவை இந்த அரசு அமைத்துள்ளது.

(4) தமிழ்நாட்டில், தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு, குழு மற்றும் தனி நபர் விபத்து மற்றும் ஆயுள் ஈட்டுறுதி திட்டம் ஒன்றை அரசு ஏற்படுத்தி உள்ளது. இத்திட்டம் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் 10 லிருந்து 65 வயது வரையிலுள்ள தொழிலாளிகளுக்குப் பொருந்தும். இந்த திட்டத்தின் கீழ் சந்தாத் தொகை, ஆண்டிற்கு ஒரு நபருக்கு



ரூ. 6. இந்தத் தொகையை தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினர் கொடுக்கின்றனர். இந்தத் திட்டத்தின் கீழ், ஒருவர் உச்சவரம்பாக ரூ. 50,000 பெறமுடியும். 1—7—1991 லிருந்து தேசிய காப்பீட்டு கழகத்தினால் இந்தத் திட்டம் அமுல் செய்யப்பட்டு வருகிறது.

(5) பட்டாசுத் தொழிற்சாலைகளில் சிறுவர்கள் பணி புரிவதைத் தடுக்கும் பொருட்டு மேற்படித் தொழிற்சாலைகளில் சோதனைகள் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர் களை முடுக்கிவிடுமாறு தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வ ருக்கு ஆணைகள் இடப்பட்டுள்ளன. மேலும், சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினர், வேலைசெய்யும் தொழி லாளர்களின் வயது பற்றிய சான்றிதழ்களைக் குறிப்பிட்ட படிவத் தில் பராமரித்து வருகின்றனரா என்பதைக் கண்டறியும் படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(6) தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பதற்காக தொழிலாளர்களால் வேண்டப்படும் வயதுச் சான்றிதழ்களை அவர்களது பிறந்த தேதி சான்றிதழ் களுடன் ஒப்பிட்டுச் சரி பார்த்து, பின்னர் வயது சான்றிதழ் வழங்கப்பட வேண்டும் என்று கிராம நிர்வாக அதிகாரிகளுக்கும், வட்ட ஆட்சியருக்கும் தக்க அறிவுரைகள் வழங்குமாறு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

(7) உச்ச நீதிமன்றத்தின் உத்திரவுகள் சரிவர நிறைவேற்றப் படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க, மாவட்ட நீதிபதி தலைமையிலான, மாவட்ட குழுக்கள், காமராசர், திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார் மற்றும் வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டங்களில், இவ்வரசால் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், திருச்சிராப்பள்ளி, மதுரை, தர்மபுரி மற்றும் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டங்களிலும் இத்தகைய குழுக்களை அமைப் பது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

7.26. தொழிலாளர் நலச் சட்ட நடைமுறைபடுத்துதல் பிரிவினை வலிமையாக்குதல்.—குழந்தைகள் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கான தொழிலாளர் நலச் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் பிரிவினை வலிமைப்படுத்துவதற்காக மைய அரசின் 50 சதவிகித உதவியுடன் 5 சுருக்கெழுத்துத் தட்டச்சர் பதவிகளுடன் 5 தொழிற்சாலைகள் ஆய்வர் பதவி களுக்கு ஒப்பளிக்க அரசு கருதி உள்ளது.

## தேசிய குழந்தை தொழிலாளர் வேலைத் திட்டம்.

7.27. இந்தத் திட்டம், 1986 ஏப்ரல் திங்களில், மைய அரசி னால், சிவகாசியில் ஆரம்பிக்கப்பட்டது. 14 வயதுக்குக் கீழ்ப் பட்ட சிறுவர்களை, தீப்பெட்டி தொழிற்சாலைகளில்

பணிபுரிவதைத் தடுத்து நீக்குதலும், அவர்களது குடும்ப வருமானத்தைப் பெருக்குதலும், கல்வி மற்றும் சுகாதார அடிப்படை வசதிகளை அளிப்பதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும் 1976ஆம் ஆண்டு சங்கங்களின் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தேசிய குழந்தைகள் வேலைத் திட்டச் சங்கத்தினால், இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

7.28. காமராசர் மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் இந்த சங்கத்தின் தலைவர்; மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில்; ஒரு திட்ட அலுவலர், இச்சங்கத்தின் உறுப்பினர்! செயலராகப் பணியாற்றுகிறார். இத்திட்டத்தின் கீழ், அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைந்து செயல்படுத்துவதற்கு, ஒரு ஒழுங்கு முறைக்குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.



## அத்தியாயம் 8.

### தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்.

8.1. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் மத்திய அரசின் தொழிலாளர் அமைச்சகத்தின் நிர்வாகத்தின் கீழ் அமைக்கப்பட்டு தன்னுரிமையோடியங்கும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தால் நிர்வாகிக்கப்படும் பங்களிப்புத் திட்டமாகும். தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் வரையறை செய்யும் விழுக்காட்டின்படி தொழிலாளர்களிடமும் வேலையளிப்போரிடமிருந்து பெறப்படும் பங்குத் தொகையினின்று இத்திட்டத்திற்கான நிதி கிடைக்கிறது.

8.2. மின் சக்தியைப் பயன்படுத்தி 10-க்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் மின் சக்தியை பயன்படுத்தாமல் 20-க்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் இத்திட்டம் பொருந்தும். 1,600 ரூபாய்க்கு மிகாமல் ஊதியம் பெறும் ஈட்டுறுதித் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் பயன்கள் கிடைக்கும். இநத ஊதிய வரம்பினை 1,600 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாக உயர்த்திட தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம முடிவெடுத்துள்ளது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் இம்முடிவை செயல்படுத்துவதற்காக மத்திய அரசு ஒரு முதனிலை அறிவிக்கையை வெளியிட்டுள்ளது.

8.3. 1955-ஆம் ஆண்டு இம்மாநிலத்தில் இத்திட்டம் முதன் முதலில் செயல்படுத்தப்பட்டது. இம்மாநிலத்தின் எல்லா மாவட்டங்களிலும் 62 மையங்களுக்கு இத்திட்டம் தற்போது விரிவாக்கப்பட்டுள்ளது.

8.4. இத்திட்டத்தின் கீழ் பின்வரும் பயன்கள் தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் வழங்கப்படுகின்றன.

| | |
|---|---|
| 1. மருத்துவ உதவி .. .. .. | மருத்துவமும், மருத்துவப் பொருட்களாகவும் அளித்தல் |
| 2. உடல் நலமின்மைக்காக உதவி .. | பணமாக அளித்தல் |
| 3. நீடித்த உடல் நலமின்மைக்காக உதவி. | |
| 4. பேறுகால உதவி .. .. .. | |

5. தற்காலிக ஏலாமையுற்றோருக்கான உதவி.
6. நிரந்தரமாக ஏலாமையுற்றோருக்கான உதவி.
7. சார்ந்துள்ளோர் நல உதவி .. } பணமாக அளித்தல்.
8. இறுதிச் சடங்குக்குரிய செலவுத் தொகை.
9. உடல் நலமின்மைக்கான கூடுதல் உதவி.

8.5. இத்திட்டத்தின் கீழ் மருத்துவ வசதி அளிப்பது என்பது தமிழக அரசின் பொறுப்பாகும். எனவே, இத்திட்டத்திற்காகும் செலவுத் தொகையை தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகமும், மாநில அரசும் ஏற்றுக் கொள்ளப்பட்ட 7 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் மருத்துவப் பயனளிப்பிற்காகும் செலவுத் தொகைக்கு ஒரு உச்ச வரம்பினை தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் அறுதியிட்டுள்ளது. 1-4-1991 முதல் ஓராண்டிற்கு ஒவ்வொரு ஈட்டுறுதி தொழிலாளர் குடும்ப அலகிற்கும் (மருந்துக்கும், மருத்துவப் பொருட்களுக்குமான தனியாக வரையறுக்கப்பட்ட 100 ரூபாயும் சேர்த்து) ரூ.345-ஐ முழு மருத்துவ வசதிக்கான உச்சவரம்பு விதமென தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் நிர்ணயித்துள்ளது. இந்த உச்ச வரம்பிற்கு மேல் ஆகும் செலவு முழுவதையும் மாநில அரசே ஏற்க வேண்டும் :—

8.6. இம்மாநிலத்தில் கீழ்க்கண்ட 7 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் அவற்றிற்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள படுக்கை எண்ணிக்கையுடன் செயல்பட்டு வருகின்றன.

1. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அயனாவரம், சென்னை-23. — 616
2. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, கே. கே. நகர், சென்னை-78. (1-4-1991 முதல் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் உள்ளது.) — 234
3. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, கோயம்புத்தூர். — 540
4. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, மதுரை. — 209



5. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, வேலூர். (வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம்). — 50
6. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, சிவகாசி (காமராசர் மாவட்டம்). — 50
7. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, சேலம். — 50

இவையன்றி, இம்மாநிலத்தில் சென்னை, கோவை, மதுரை, சேலம் ஆகியவற்றின் 4 மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்களின் நிர்வாகத்தின் கீழ் 141 நிலைய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களும், 6 நடமாடும் மருந்தகங்களும் 2 பயன்பாட்டு மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன.

8.7. இம்மாநிலத்திலுள்ள ஈட்டுறுதிக் தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டப் பயன்பெறுவோரின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது :—

1. ஈட்டுறுதித் தொழிலாளர்களின் எண்ணிக்கை — 6,94,000
2. இத்திட்டத்தின் கீழ் உள்ள குடும்ப அலகுகளின் எண்ணிக்கை. .. 6,94,000
3. இத்திட்டத்தில் பயனடைவோரின் மொத்த எண்ணிக்கை. .. 19,98,720

8.8. தொழிலாளர் மற்றும் அவர்தம் குடும்பங்களின் நலனுக்காக சிவகாசி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைக்கு இரண்டு ஓட்டுநர், இரண்டு தாய்மையாக்குநர் மற்றும் தூக்குப் படுக்கை இட்டுச் செல்வோர் ஆகிய பதவிகளுடன் ஒரு நோயாளர் ஊர்திக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

8.9. 1991-92-ஆம் ஆண்டில் இத்திட்டம் கீழ்க்கண்ட இடங்களுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது :—

| வரிசை எண்ணும், பகுதியின் பெயரும். | மாவட்டம். | திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட நாள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. பீடம்பள்ளி .. | கோயம்புத்தூர். | 16- 8-1991. |
| 2. உதகமண்டலம் .. | நீலகிரி .. .. | 16- 9-1991. |
| 3. அவனியாபுரம் .. | மதுரை .. | 16-12-1991. |
| 4. முள்ளூர் .. .. | புதுக்கோட்டை .. | 16-12-1991. |
| 5. மேலராஜகுலராமன். | காமராசர் .. | 1-3-1992. |

8.10. 1992-93-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பகுதிகளுக்கு இத்திட்டத்தை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது :—

| வரிசை எண்ணும், திட்டத்தில் கொணர கருதப்பட்டுள்ள இடமும். | மாவட்டம். |
|---|---|
| (1) | (2) |
| 1. கும்மிடிப்பூண்டி | செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். |
| 2. கடப்பேரி | செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். |
| 3. பேரணாம்பட்டு புறநகர் | வடாற்காடு அம்பேத்கார். |
| 4. எருமப்பாளையம் | சேலம். |
| 5. மயிலாடுதுறை | தஞ்சாவூர். |
| 6. உடுமலைப்பேட்டை புறநகர். | கோயம்புத்தூர். |
| 7. நவக்கரை | கோயம்புத்தூர். |
| 8. திண்டுக்கல் புறநகர் | அண்ணா. |
| 9. சித்தாமுங்குடி | மதுரை. |
| 10. பாவளி மற்றும் சத்திரவிதிப் பட்டி. | காமராசர். |
| 11. வடக்கு வெங்காநல்லூர் | காமராசர். |
| 12. செண்பகராமன்புதூர் | கன்னியாகுமரி |



## அத்தியாயம் 9.

### தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (பல்வகை விதித் துறைகள்) சட்டம்.

9.1. 1952-ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி (பல்வகை விதித்துறைகள்) சட்டத்தில் உள்ள மூன்று திட்டங்களில் 1952-ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டமும் ஒன்றாகும். இத்திட்டம் 1952-ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாளிலிருந்து செயற்பாட்டுக்கு வந்தது. வருங்கால வைப்பு நிதி என்பது, தொழிலாளரும், வேலை அளிப்பவரும் சேர்ந்து பங்கு கட்டணம் கட்டாயமாக செலுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். துவக்கத்தில் 6 பெரிய தொழில்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப் பட்டன. இத்திட்டம் படிப்படியாக அதிகமான தொழிலகங்களுக்கும், நிறுவனங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. இன்றளவில் 174 தொழிலகங்களில் உள்ள தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர். 1971-ஆம் ஆண்டு குடும்ப நல ஓய்வூதியத் திட்டம், 1976-ஆம் ஆண்டு தொழிலாளர் வைப்பீட்டுத் தொகையுடன் இணைந்த காப்பு நிதித் திட்டம் ஆகிய வேறு இரு திட்டங்களும் இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப் பட்டுள்ளன.

**இச்சட்டம் பொருந்துதல் பற்றி :**

9.2. இருபதும் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களையும் கொண்ட தொழிற்சாலைகளுக்கும், தொழிற் நிறுவனங்களுக்கும் இச்சட்டமும் அதன் திட்டங்களும் பொருந்தும். இச்சட்டம் புதிதாகத் தொடங்கப்படும் தொழில் நிறுவனங்களுக்கு மூன்று ஆண்டுகளுக்குப் பொருந்தாது.

**பங்கு கட்டணத் தொகை அளவு :**

9.3. அகவிலைப்படி மற்றும் அடிப்படைச் சம்பளம் (உணவு சலுகை அளிக்கப்பட்டிருப்பின் அவற்றின் ரூபாய் மதிப்பையும் சேர்த்து) ஆகியவற்றில் எட்டரை விழுக்காடுத் தொகையினை ஒவ்வொரு தொழிலாளரும் வேலை அளிப்போரும் இத்திட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய பங்கு கட்டண அளவாகும். 50 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட சில குறிப்பிடப்பட்ட 98 தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள்/தொழில் நிறுவனங்களைப் பொருத்தவரை பங்கு கட்டணத் தொகை 10 சதவீதம் என 1-6-1989 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

9.4. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தின்கீழ் பெறப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் ஆகியவற்றின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் இணைப்புகள் 15, 16 மற்றும் 17-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம் 10.

வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரகம்.

**வேலை வாய்ப்புப் பணிகள் :**

10.1. போருக்குப் பின் நடந்த படைக்கலைப்பின் போது இந்தியாவில் வேலைவாய்ப்புப் பணிகள் நடைமுறைக்கு வந்தன. இந்திய அரசிடமிருந்து வேலைவாய்ப்புத் துறையின் அலுவலகங்களின் நிர்வாகக் கட்டுப்பாடு மாநில அரசுக்கு 1-11-1956 முதல் மாற்றப்பட்டது. இம்மாற்றத்துக்குப் பிறகு, தமிழக வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பராமரிப்பு, தொழிலாளர் நல ஆணையரின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தது. 1963 ஆம் ஆண்டு தொழில் துறை கட்டுப்பாட்டில் இயங்கி வந்த தொழில் பயிற்சி நிலையங்களும், வேலை வாய்ப்பு அலுவலகங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை என்ற புதிய துறை உருவாக்கப்பட்டு ஒரே இயக்குநரின் கீழ் கொண்டு வரப்பட்டது.

**வேலை வாய்ப்பு அலுவலகங்கள் :**

10.2. எல்லாவிதமான வேலை தேடுவோரின் தேவைகளைக் கவனிப்பதற்காக, இம்மாநிலத்தில் மொத்தம் 42 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 5 துணை வேலைவாய்ப்பு அலுவலகம், 6 சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில் நுட்ப பணியாளர்—4, தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம்—1, உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகம்—1) 2 சுய வேலைவாய்ப்புப் பிரிவு (கோயம்புத்தூர் மற்றும் வேலூர் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களில்) மூன்று பல்கலைக் கழக வேலை வாய்ப்பு தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் (சென்னை, மதுரை, அண்ணாமலைநகர்) ஆகியவை அடங்கும். இவற்றைத் தவிர, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள், நான்கு, திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் இயங்கி, வருகின்றன. இந்நிலையங்கள் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மாணவர்களுக்குப் பல்வேறு போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்வதற்கேற்ப சிறப்புப் பயிற்சி வகுப்புகளை நடத்துகின்றன. வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகளைக் கண்காணிப்பதற்காக 4 மண்டலத் துணை இயக்குநர் அலுவலகங்களும் இயங்கி வருகின்றன.



**தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை :**

10.3. இந்த அலுவலகம் உயர்ந்த தொழில் அனுபவம், அறிவியல் பொறியியல் மற்றும் நிர்வாக மேற்பார்வை பணிக் கல்வித் தகுதி உடையவர்களின் தேவைகளைக் கவனிக்கிறது. அரசுத் துறை, தனியார் துறையைச் சேர்ந்த முதன்மையான தொழில் அதிபர்களுடன் தொடர்பு கொண்டு தகுதியுள்ள மருத்துவர், பொறியாளர் மேற்படிப்பு முடித்த பட்டதாரி விண்ணப்பதாரர்களை தகுந்த வேலையில் அமர்த்த இந்த அலுவலகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**10.4. உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகம் :**

உடல் ஊனமுற்ற குறிப்பாக பார்வையற்றோர், காது கேளாதோர் போன்ற விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்து அவர்களை வேலையில் அமர்த்தும் நோக்குடன் சென்னையில் சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் ஒன்று இயங்கி வருகிறது. தவிர, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், தஞ்சாவூர், நாகர்கோவில், காஞ்சிபுரம், திருநெல்வேலி மற்றும் கடலூரில் உள்ள மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களில் உடல் ஊனமுற்றோருக்கான ஒன்பது தனிப் பிரிவுகளும் இயங்கி வருகின்றன. இவ்வலுவலகங்கள் உடல் ஊனமுற்றோரைப் பதிவு செய்வதுடன் அரசுத்துறை தனியார் துறையைச் சேர்ந்த தொழில் அதிபர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு எல்லாவித உடல் ஊனமுற்றோருக்கும் வேலைவாய்ப்பு அளித்து வருகின்றன.

10.5. தொழில் நுட்ப மனுதாரர்களுக்காக நான்கு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் சென்னை, திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் இயங்கி வருகின்றன. இவ்வலுவலகங்கள் தொழில் நுட்பத் தகுதி பெற்றோரையும் தொழில் பயிற்சி பள்ளிகளில் பயிற்சி பெற்ற கைவினைஞர்களையும் பதிவு செய்து பொதுத் துறையிலும், தனியார் துறையிலும் அவர்களைத் தகுந்த பணியில் அமர்த்தும் பணியினைச் செய்து வருகின்றன.

**வேலை நிலவரத் தகவல் திட்டம் :**

10.6. இத்திட்டத்தின் கீழ் 25 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் உள்ள (வேளாண்மை நீங்கலாக எல்லா தனியார் துறை நிறுவனங்களிலிருந்தும் அனைத்து பொதுத் துறை நிறுவனங்களிலிருந்தும் காலாண்டுக்கொரு முறை வேலை நிலவரத் தகவல் சட்டரீதியாக திரட்டப்படுகிறது.

இவ்விவரங்கள் 1959 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கட்டாயக் காலியிட அறிவிப்புக் சட்டத்தின் கீழ் திரட்டப்படுகின்றன. பத்து முதல் 24 பணியாளர்கள் பணியாற்றும் தனியார் துறையைச் சேர்ந்த நிறுவனங்களிலிருந்தும் இத்தகவல் தாங்களாகவே முன்வந்து அளிக்கும் வேலையளிப்போரிடம் இருந்து திரட்டப்படுகிறது. இவ்வாறு தகவல் திரட்டும் பணி அமைப்புரிதியான தொழில் துறைகளில் மட்டும் (Organised Sector) மேற்கொள்ளப்படுகிறது. எல்லா பொதுத்துறை நிறுவனங்களும் மற்றும் 25 அதற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட தனியார் துறை நிறுவனங்களும் ஏற்படும் காலியிடங்களை சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு இச்சட்டத்தின் கீழ் தெரிவிக்க வேண்டும். இவையில்லாமல், ஒவ்வொரு காலாண்டும் இந்த நிறுவனங்கள் வரையறுக்கப்பட்ட படிவத்தில் தங்கள் நிறுவனத்தில் உள்ள மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை, ஏற்பட்ட காலியிடங்கள், நிரப்பப்பட்டவை மற்றும் தகுந்த ஆள் கிடைக்காததால் உள்ள பணிக்காலியிடங்கள் பற்றிய விவரங்களை வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குத் தெரிவிக்கவேண்டும். இவ்வாறு சேகரிக்கப்பட்ட விவரங்கள் மாநில மற்றும் மத்திய அரசிற்கு திட்டங்கள் தீட்டுவதற்காக அனுப்பப்படுகின்றன.

தொழில் நெறி வழி காட்டுதல் மற்றும் வேலைவாய்ப்புத் தகவல் :

10.7. வேலை தேடுவோரிடையே தொழில் வேலை வாய்ப்பு பயிற்சி தொழில் பழக வசதிகள் குறித்த விவரங்களைப் பகிர்தளிப்பதற்கான வாழ்க்கைத் தொழில் வழி காட்டும் பிரிவுகள் 18 மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. இப்பிரிவுகள் காலாண்டுதோறும் மாணவரும் வேலை தேடுவோரும் பயனடைவதற்காக காலாண்டு வழி காட்டி செய்தி அறிக்கைகளை தயாரித்து அளிக்கின்றன வேலை தேடுவோர் பணியிடங்களை தெரிந்தெடுக்க கையாள வேண்டிய முறைகளைப் பற்றி அறிந்து கொள்வதற்காக பல்கலைக்கழக தொழில் தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையம் மற்றும் வாழ்க்கைத் தொழில் வழி காட்டும் பிரிவுகளும் அவ்வப்போது வாழ்க்கைத் தொழில் சம்பந்தப்பட்ட கண்காட்சிகளை நடத்தி வருகின்றன.

பழங்குடியினருக்கான சிறப்புத் தொழில் நெறி வழிகாட்டும் நிலையங்கள் :

10.8. பழங்குடி இனத்தவருக்கு தொழில் நெறிவழி காட்டும் ஆலோசனைகளை வழங்கவும் தகுதியுள்ள பழங்குடி இனத்தவரை வேலையில் அமர்த்துவதற்கு ஏற்ற வேலைவாய்ப்புகளை கண்டறிவதற்கும் உதகமண்டலம்



மற்றும் சங்கராபுரத்தில் பழங்குடியினருக்கான சிறப்புத் தொழில் நெறி வழி காட்டும் நிலையங்கள் இரண்டு, அமைந்துள்ளன.

வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் திட்டம் :

10.9. வேலைவாய்ப்பற்றோருக்கு நிவாரணத் தொகை வழங்கும் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்படி வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிந்து உயிர்ப் பதிவேட்டில் 5 ஆண்டுகளுக்கு மேலாக காத்திருக்கும் தெரிந்தெடுக்கப்பட்ட 9 வகையினருக்கு வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது. வேலைவாய்ப்பற்றோர் நிவாரணம் 3 ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுகிறது. பட்டதாரிகள் முதுநிலைப் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ. 100-ம் புகுமுக வகுப்பு/ப்ளஸ் 2/பட்டப் படிப்புக்குக்கீழான கல்வித் தகுதி உடையோருக்கு மாதம் ரூ. 75-ம் பள்ளியிறுதி வகுப்பு தேர்ச்சி பெற்றோருக்கு மாதம் ரூ. 50-ம் வழங்கப்படுகிறது. 30—9—1991 அன்றைய நிலவரப்படி, இத்திட்டம் துவங்கப்பட்ட நாள் முதற்கொண்டு 4,56,258 மனுதாரர்கள் பயன் பெற்றுள்ளனர். ரூ. 57.30 கோடி, வேலைவாய்ப்பற்றோர் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1—7—1980 முதல் அமுலாக்கப்பட்டது. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் காலாண்டுக்கொருமுறை இந்நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது.

10.10. 30—11—1988 முதல் உயிர்ப்பதிவேட்டில் ஓராண்டுக்கு மேல் காத்திருக்கும் பார்வையற்றோருக்கு கீழ்க்கண்டவாறு நிவாரணம் அளிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பட்டதாரிகள் | .. | ரூ. 200 பிரதி மாதம். |
| புகுமுக வகுப்பு/ப்ளஸ் 2 | .. | ரூ. 150 பிரதி மாதம். |
| பள்ளியிறுதி வகுப்பு | .. | ரூ. 100 பிரதி மாதம். |

1—2—90 முதல் பள்ளியிறுதி வகுப்புக்குக் குறைவான கல்வித் தகுதி உடைய அல்லது கல்வித் தகுதியே இல்லாத பார்வையற்ற மனுதாரர்களுக்கும் கூட மாதந்தோறும் ரூ. 100 நிவாரணமாக வழங்கப்படுகிறது.

10.11. இவர்கள் 5 வருடம் வரை இந்நிவாரணம் பெற தகுதியுடையவர்கள். இத்திட்டம் துவக்கப்பட்ட நாள் முதல் 30—9—1991 வரை 1,584 பார்வையற்றோர் ரூ. 29.5 இலட்சம் நிவாரணம் பெற்றுள்ளனர். இந்நிதியாண்டில் மட்டும் ரூ. 5,15,846 நிவாரணமாக வழங்கப்பட்டு உள்ளது.

சுய வேலைவாய்ப்பு மேம்பாட்டுப் பிரிவுகள் :

10.12. வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து உள்ள மனுதாரர்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் பெறுவதற்கு உதவி செய்வதன் மூலம் அவர்களிடையே சுய தொழிலை ஊக்குவிப்பதற்கேற்ப வேலூரிலும், கோயம்புத்தூரிலும் மைய அரசின் நிதி உதவியுடன் இந்த அரசு இரண்டு சுய தொழில் வேலை வாய்ப்பு ஊக்கப் பிரிவுகளை அமைத்துள்ளது. இந்த இரண்டு பிரிவுகளும் சேர்ந்து 4,335 மனுதாரர்களுக்கு (30—11—1991 வரை) உதவி செய்துள்ளன. அதன் பயனாய் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளால் மொத்தம் ரூ. 5.02 கோடி சுய தொழில் தொடங்குவதற்காக கடனாக வழங்கப்பட்டுள்ளது.

ஐ.டி.ஐ./ஐ.எஸ்.சி. சான்றிதழ் பெற்றோர்க்கான சுய வேலைவாய்ப்பு:

10.13. ஆறு தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் (கோயம்புத்தூர், திருச்சி, சேலம், மதுரை, கடலூர் மற்றும் வேலூர்) உள்ள ஐ.டி.ஐ./ஐ.எஸ்.சி. சான்றிதழ் பெற்ற மனுதாரர்களை சுய வேலை வாய்ப்பில் ஈடுபடுத்தும் பொருட்டு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் ரூ. 10,000-க்கு மேற்படாமல் கடன் தொகை அளிக்கப்படுகிறது. இத்தொகையில் கால் பங்கு அல்லது ரூ. 2,000 இதில் எது குறைவோ, அத்தொகை அரசு மூலமாக மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டம் 1987—88 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 30—9—1991 வரை 458 தொழில் நுட்பத் தகுதி பெற்ற மனுதாரர்கள் ரூ. 35.91 இலட்சம் வரை வங்கி மூலம் கடன் தொகை பெற்றுள்ளனர். இத்தொகையில் ரூ. 7.38 இலட்சம் அரசு மானியமாகும்.

வீட்டு சேவை மையங்களை நிறுவுதல் :

10.14. தொழிற் கல்வித் தகுதி பெற்ற மனுதாரர்களை சுய வேலைவாய்ப்பில் ஈடுபடுத்துவதற்கும், மக்களின் அன்றாட வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் சென்னை நகரில் 9 இடங்களில் வீட்டுச் சேவை மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு வீட்டுச் சேவை மையத்திலும் ஒரு மின்சாரப் பணியாளர், குழாய்ப் பணியாளர், தச்சுப் பணியாளர் ஆகியோர் பணியாற்றுகின்றனர். வீட்டுச் சேவை மையம் அமைக்கப்பட்டுள்ள பகுதியில் உள்ள வீடுகளில் அவ்வப்போது தேவைப்படும் பழுது பார்க்கும் பணி இப்பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு, ஒரு நபர் ஒரு நாளுக்கு ரூ. 25 முதல் ரூ. 35 வரை வருமானமாகப் பெறுகிறார். இதுபோன்று வீட்டுச் சேவை



மையங்கள் மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, வேலூர், ஈரோடு மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் 69 தொழில் நுட்பப் பணியாளர்கள் பயன் பெற்றுள்ளனர்.

ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகள் :

10.15. பல்வேறு தேர்வு முகமை நிறுவனங்களால் நடத்தப் பெறும் போட்டித் தேர்வுகளில் ஆதிதிராவிடர் பழங்குடியினர் இனங்களைச் சேர்ந்த மனுதாரர்கள் போட்டியிட்டு தேர்ச்சி பெறுவதற்கு உதவும் வகையில் இந்த துறையானது ஆதிதிராவிடர் பழங்குடி இனங்களைச் சார்ந்த மனுதாரர்களுக்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகளை நடத்தும் முனைப்புத் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. பொறுப்பு அலுவலர் (Probationery officer) எழுத்தர் பதவிகளுக்கான வங்கிப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய தேர்வுகள், கீழ்நிலை எழுத்தர்/மேல் நிலை எழுத்தர் பதவிகளுக்கான பணியாளர், தேர்வாணையம் நடத்திய தேர்வுகள் உதவியாளர் நிலை பதவிகளுக்கான மைய அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்திய தேர்வுகள் மற்றும் குடிமைப் பணிகள் முதனிலைத் தேர்வுகள், இந்திய பொதுக் காப்பீட்டுக் கழகம் நடத்திய எழுத்தர் நிலைத் தேர்வு, பணியாளர் தேர்வாணையத்தில் சுருக்கெழுத்தர் தேர்வு, இந்திய ரிசர்வ் வங்கி நடத்திய எழுத்தர் நிலைத் தேர்வு, தமிழ் நாட்டிலுள்ள பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கைக்காக நடத்தப்பட்ட நுழைவுத் தேர்வுகள் ஆகியவற்றில் கலந்து கொண்ட ஆதிதிராவிடர்/பழங்குடி இனங்களைச் சார்ந்த மனுதாரர்களுக்காக இத்தகைய சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. 1991 ஆம் ஆண்டில் மட்டும் 3,350 ஆதி திராவிடர் / பழங்குடியினர் மாணவர்கள் பல்வேறு போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்வதற்கான சிறப்புப் பயிற்சி பெற்றுள்ளனர்.

வேலை வாய்ப்புப் பணியை கம்ப்யூட்டர் மயமாக்குதல் :

10.16. வேலை தேடுவோரும், வேலையளிப்போரும் விரைவாகச் செயல்படுவதற்கும் தற்போது நடைமுறையில் உள்ள மனுதாரர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையிலுள்ள குறைகளை களையும் நோக்கிலும் வேலை வாய்ப்பு அலுவலக பணிகளை கம்ப்யூட்டர் மயமாக்கும் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென அரசு ரூ. 17.3[illegible] இலட்சம் ஒப்பளித்துள்ளது. இத்தொகையில் ரூ. [illegible] இலட்சம் [illegible] அரசால் வழங்கப்படுகிறது. இத்[illegible]த்தின் கீழ் செ[illegible]

D
V2 11 3 N52
N52.24.3
164941

உள்ள 2 வேலைவாய்ப்பு அலுவலகங்களும் கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களும் கொண்டு வரப்பட்டுள்ளன.

10.17. இத்திட்டம் தொழில் திறனற்றோருக்கான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், அடையாறு, சென்னை-20, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், அண்ணா நகர், சென்னை-40 (உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் உட்பட), மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், கோயம்புத்தூர் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், திருச்சிராப்பள்ளி (துணை வேலைவாய்ப்பு அலுவலகம்), கரூர் உட்பட) ஆகிய நான்கு வேலை வாய்ப்பு அலுவலகங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. சென்னை-20 அடையாறில் உள்ள தொழில் திறனற்றோருக்கான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் பணிகள் முழுமையாக, கம்ப்யூட்டர் மயமாக்கப்பட்டு 5—8—1991 அன்று இவ்வலுவலகத்தில் இத்திட்டம் துவக்கப்பட்டது. இதர மூன்று வேலைவாய்ப்பு அலுவலகங்களில் ஏற்கனவே பதிந்துள்ள மனுதாரர்களின் பதிவு விவரங்களின் பட்டியல் கம்ப்யூட்டர் மூலம் எடுக்கப்பட்டு, இப்பட்டியல்களை மனுதாரர்களின் மூல பதிவட்டைகளுடன் ஒப்பிட்டு திருத்தம் செய்யும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. ஆயினும் அன்றாடம் பதிவு செய்ய வருகை தரும் மனுதாரர்களின் விவரங்கள் தற்போது கம்ப்யூட்டர் மூலமாக பதிவு செய்யப்படுவதோடு, பதிவு ஆவணங்களும் கம்ப்யூட்டர் மூலம் தயாரிக்கப்படுகிறது. எனவே தற்போதைய திட்டம் வேலைவாய்ப்பு அலுவலகம் அன்றாடப் பணிகளை கம்ப்யூட்டர் மூலம் செய்யும் அடிப்படை குறிக்கோளை நிறைவேற்றும் வண்ணம் அமைந்துள்ளது.

10.18. 1992-93 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட வேலை தேடித்தரும் நிறுவனங்களை கம்ப்யூட்டர் மயமாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளன :—

(1) வேலை தேடித்தரும் நிறுவனம், மதுரை.

(2) வேலை தேடித்தரும் நிறுவனம், வேலூர்.

(3) தொழில் சார்ந்த மற்றும் நிர்வாகப் பணிக்கான வேலை தேடித்தரும் நிறுவனம், சென்னை.

(4) தொழில் நுட்ப வல்லுநர்க்கான வேலை தேடித்தரும் நிறுவனம், சென்னை.

(5) தொழில் நுட்ப வல்லுனர்க்கான வேலை தேடித்தரும் நிறுவனம், மதுரை.



இத்திட்டம் பிற அலுவலகங்களை படிப்படியாக முறைப் படுத்தப்படவுள்ளது.

**சிறப்புக் குழு அமைத்தல் :**

10.19. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறையின் நிலை அரசாணை எண். 1371, நாள் 20—7—1989-ன் வாயிலாக அரசு வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடு குறித்து பொது மக்களிடமிருந்து பெறப்படும் கடுமையான புகார்களை விசாரிப்பதற்காக சிறப்புக்குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்கத்தைச் சார்ந்த ஒரு துணை இயக்குநரும், ஒரு உதவி இயக்குநரும் அந்தச் சிறப்புக் குழுவில் பதவி வகிக்கின்றனர். அவர்கள் தம் வாலாயப் பணிகளுடன் அக்குழுவின் பணிகளையும் சேர்த்து கவனித்து வருகின்றனர். இந்தக் குழு அமைக்கப்பட்டு குறுகிய காலத்திற்குள்ளாக 33 உடனடி விசாரணைகளை நடத்தியுள்ளது. கடுமையான புகார்கள் பலவற்றில் தொடர்புடைய ஆவணங்களை ஆழ்ந்து ஆய்வு செய்துள்ளது. அதன் பயனாக 7 அலுவலர்/பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு கட்டிடங்கள் கட்டுதல் :**

10.20. 1989-90 நிதியாண்டில் கடலூர், தஞ்சாவூர், மதுரை, கோவை மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் செயல்படும் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கென சொந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்காக அரசு ரூ. 77.24 இலட்சம் ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணி நிறைவுறும் தறுவாயில் உள்ளது. மற்ற இடங்களில் உள்ள வேலைவாய்ப்பு அவலகங்களுக்குக் கட்டிடங்கள் கட்டும் பணி படிப்படியாக நிறைவேற்றப்படும்.

10.21. பலவகைப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை, வேலை காலி இடங்கள் அறிவிக்கப்பட்ட எண்ணிக்கை முதலிய விவரங்கள், இணைப்புகள் 18, 19 மற்றும் 20-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம் 11

### கைவினைஞர் பயிற்சித் திட்டம்.

11.1. வாழ்வியல் பயிற்சியின் முக்கியமான கைவினைஞர் பயிற்சித் திட்டம் இன்றைய மற்றும் நாளைய மனித திறனுக்குத் தேவையான கைவினைஞர்களை உருவாக்குகின்றது. இதற்காக தமிழ்நாட்டில், மகளிருக்கென எட்டு தொழிற் பயிற்சி நிலையங்களும், ஆதிதிராவிடர்களுக்கென சிதம்பரத்தில் ஒன்றும், மலைவாழ் மக்கட்கென சங்கராபுரத்தில் ஒன்றுமாக மொத்தம் 47 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. அனைத்து, தொழிற் பயிற்சி நிலையங்களில் 14,430 மாணவரும் 1,882 மகளிரும் பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும் மகளிருக்கென இரு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களை நிறுவ அரசு பரிசீலித்து வருகின்றது.

11.2. மேற்படி 47 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் தவிர 13,800 பயிற்சியாளர்கள் பயிற்சி பெறும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட 200 தனியார் தொழிற் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. மேலும் 55 தனியார் தொழிற் பள்ளிகள் தோற்றுவிப்பதற்கு மத்திய அரசின் தேசிய வாழ்வியல் பயிற்சிக் குழுவினரின் அங்கீகாரத்திற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இவற்றின் மொத்த இருக்கைகளில் ஐம்பது விழுக்காடுகள், ஆண்டுதோறும் அரசிற்கு ஒதுக்கீடு செய்து, தேர்வு மதிப்பெண்களின்படி தற்போது நடைமுறையிலுள்ள சாதி சுழற்சி முறையில் பயிற்சியாளர்கள் சேர்க்கப்படுகிறார்கள.

11.3. மகளிருக்கென வேலைவாய்ப்புகளை உருவாக்கும் புதிய தொழிற் பிரிவுகளை அறிமுகப்படுத்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. உணவுக்கலை. அழகுக்கலை ஏற்றுமதி ஆடைதையற்கலை, கட்டிட உட்புறம் அழகுபடுத்துதல் கலை, பின்னல் (நிட்டிங்) இயந்திரம் இயக்குதல் போன்ற புதிய தொழிற் பிரிவுகளை தற்போதுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் அறிமுகப்படுத்த அரசு பரிசீலித்து வருகின்றது. இப்புதிய தொழிற் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு ஏறத்தாழ 1,102 மகளிர் ஆண்டுதோறும் பயனடைவார்கள்.

11.4. கைவினைஞர் பயிற்சித் திட்டத்துடன் கீழ்க்கண்ட சார்பு திட்டங்களும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையினரால் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன:—



**தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டம் :**

11.5. தொழிற் பயிற்சி நிலைய பயிற்சிக்குப் பின் தொழிற் பழகுநர் பயிற்சி பெற விரும்பும் பயிற்சியாளர்களுக்கு மத்திய அரசின் 1961-ம் ஆண்டு தொழிற் பழகுநர் பயிற்சி சட்டத்தின் கீழ்கொண்டு வரப்பட்டுள்ள தொழில் நிறுவனங்களில் பயிற்சி பெற அனுப்பப்படுகிறார்கள். தற்போது ஏறத்தாழ 12,313 பயிற்சியாளர்கள் இம்மாநிலத்தில் 1,919 தொழில் நிறுவனங்களில் தொழிற் பழகுநர் பயிற்சி பெற்று வருகிறார்கள். இத்திட்டத்தினை செம்மையாக செயல்படுத்த 11 தொடர் அறிவுரை மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

**தொழிலாளருக்கான மாலை நேர வகுப்புகள் :**

11.6. பெருவாரியான தொழிற் சாலைகள் அமைந்துள்ள அம்பத்தூர், வடசென்னை, கிண்டி, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, மேட்டூர் அணை மற்றும் ஹோசூர் போன்ற இடங்களில் உள்ள 8 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழிலாளருக்கான மாலை நேர வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஆண்டுதோறும் ஏறத்தாழ 1,925 தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**வாழ்வியல் திறன் மேம்பாட்டுத் திட்டம் :**

11.7. அம்பத்தூர், கோவை மற்றும் ஹோசூரில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் வாழ்வியல் திறன் மேம்பாட்டுத் திட்டம் என்றுமொரு திட்டம் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டம் தொழில் நிறுவனங்களின் ஒருமித்தப் பாராட்டினை பெற்றுள்ளது. இதுவரையில் 5,991 தொழிலாளர்கள இத்திட்டத்தால் பயனடைந்துள்ளனர்.

**மிகவிரைவுத் திட்டம் (க்ராஷ் ப்ரோக்கிராம்) :**

11.8. முன்னாள் தொழிற் பயிற்சியாளர்கள மற்றும் எலக்ட்ரானிக்ஸ் தெரிந்து மெட்ரிக் மேற்படிப்பு கற்றவர்கள் மின்னணுவியல் (எலக்ட்ரானிக்ஸ்) பொருட்களை பழுதுபார்க்கும் டெக்னிஷயன்களுக்கான பயிற்சி (க்ராஷ் ப்ரோக்ராம்) மிகு விரைவு திட்டத்தின் கீழ் 9 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படுகிறது. வானொலி மற்றும் தொலைக்காட்சி சம்பந்தமான மின்னணுவியல் (எலக்ட்ரானிக்ஸ்) பொருட்களைப் பழுது பார்த்து சொந்தமாக பணி மையங்கள அமைத்துக் கொள்வதற்கு ஏற்ப பயிற்சி அளித்தலே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஆண்டுதோறும் இத்திட்டத்தின் கீழ் ஏறத்தாழ 180 நபர்கள் பயிற்சி பெற வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

உலக வங்கித் திட்டம் :

11.9. தொழிற் பயிற்சி நிலையங்களில் நாள்பட்டதால் வழக்கொழிந்து பயனில்லாத நிலையில் உள்ள இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களை மாற்றி அமைத்து நவீன முறையில் தொழிற் பயிற்சி நிலையங்களை புதுப்பிக்க உலக வங்கி உதவியுடன் செயல்படும் திறன் மேம்பாட்டுத் திட்டத்தில் 1991-92-ம் நிதியாண்டில் ரூ. 358.00 இலட்சம் ஒதுக்கப்பட்டு மேலும் இதற்காக 1992-93 ம் நிதியாண்டில் ரூ. 470.81 இலட்சங்கள் செலவிட உத்தேசிக்கப்பட்டு பட்டுள்ளது. இத்தொகை திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1990-91 முதல் 1994-95 வரையில் பல்வேறு வாழ்வியல் பயிற்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையான ரூ. 2,174.41 இலட்சத்தில் அடங்கும்.

11.10. மகளிர் நிலை மேம்பட்டு உயர்த்தப்பட வேண்டுமென்ற அரசின் சீரிய நோக்கமுடன் மகளிருக்கான வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் பொருட்டு 1992-93-ம் ஆண்டில் 2 புதிய மகளிர் தொழிற் பயிற்சி நிலையங்கள் நிறுவ அரசு திட்டமிட்டு வருகிறது. 1991-92-ம் நிதியாண்டில் ஆறு தொழிற் பயிற்சி நிலையங்களில் இயந்திரப் பராமரிப்பு மையங்களும் அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் மாநில அளவிலான ஒரு தொழிலகமும் துவங்கப்பட்டுளளது. தற்போது 4 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் ஆகஸ்ட் 1991 முதல் ஒவ்வொன்றிலும் இரண்டு புதிய தொழிற் பிரிவுகளை அறிமுகப்படுத்தும் தொழிற் பயிற்சி நிலைய விரிவாக்கத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இதுபோன்ற 8 தொழிற் பயிற்சி நிலையங்களில் ஒவ்வொன்றிலும் இரண்டு புதிய தொழிற் பிரிவுகள் 1992-93-ம் நிதியாண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்படவிருக்கின்றன. வாழ்வியல் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் கோவை அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் விரிவாக்கம் செய்யப்படவுள்ளது. அறிவியல் ரீதியாக வகுப்பறை போதனா முறையை மேம்படுத்தும் வகையில், விளக்கப்பட சாதனங்கள் படிப்படியாக அமைக்கப்படவிருக்கின்றன. 1991-92-ம் நிதியாண்டில் இரசாயன தொழிற் பிரிவில் அடிப்படை பயிற்சி அளிக்க அடிப்படை பயிற்சி மையம் ஒன்று நிறுவப்படவுளளது. மேலும், ஹோட்டல் உணவு தயாரித்தல் தொழிற் பிரிவு கொண்ட அடிப்படை பயிற்சி மையம் ஒன்று 1992-93-ம் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்படவிருக்கிறது.

11.11. 1992-93-ம் ஆண்டில் மாநில திட்டங்கள் மற்றும் இதர நடப்பு திட்டங்களிற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள. ரூ. 1,371.91 இலட்சங்கள் தவிர (வருவாய் செலவினமாக ரூ. 1,370.13 இலட்சங்களும், மூலதனச் செலவினமாக ரூ. 1.78 இலட்சங்களும்) மேற்சொன்ன



அனைத்து திட்டங்களைச் செயலாக்க, திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1992-93-ம் ஆண்டு மாநில வரவு செலவு திட்டத்தில் ரூ. 871.22 இலட்சங்கள் (வருவாய் செலவினமாக ரூ. 88.83 இலட்சங்கள் மற்றும் மூலதனச் செலவாக ரூ. 782.39 இலட்சங்கள்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11.12. 1992—93-ஆம் ஆண்டில் பகுதி-II திட்டங்களாக செயல்படுத்தப்படும் திட்டங்களின் விவரங்கள் இணைப்பு 22-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம் 12.

### அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம்

12.1. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், தமிழ் நாடு அரசு அமைத்துள்ள ஒரு நிறுவனம் ஆகும். இது மாநில அரசுக்குச் சொந்தமான ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனமாக 30—11—1978 ஆம் நாளன்று இந்திய கம்பெனிகள் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது.

12.2. இந்நிறுவனம் வெளிநாட்டில் வேலை வாங்கித் தரும் தனியார் முகவர்களின் மத்தியில் ஆரோக்கியமான போட்டியினை உருவாக்கிடும் நிறுவனமாக செயல்படவும், அதிலும் முக்கியமாக அயல்நாடுகளில் வேலை வாங்கித் தருகின்றேன் என்ற போர்வையில் பணம் பறிக்கும் தனியார் முகவர்களின் ஏமாற்று வேலைகளிலிருந்து பாமர மக்களை காப்பாற்றும் பொருட்டும் தொடங்கப்பட்டதாகும்.

12.3. இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூல தனம் ரூபாய் 50 இலட்சம் ஆகும். சமபங்கு ஒன்று 5,000 வீதம் 1,000 பங்குகளைக் கொண்டது. இதனுடைய பங்கு தொகையாக செலுத்தப்பட்ட மூலதனம் 31—3—1991 நிலவரப்படி ரூபாய் 20 இலட்சமாக இருந்தது. கடந்த டிசம்பர் 1991-ல் அரசு செலுத்திய ரூபாய் 5 இலட்சத்துடன் சேர்த்து இப்பொழுது ரூபாய் 25 இலட்சமாக இது உள்ளது. இந்நிறுவனத்தின் குறிக்கோள்கள் கீழ்கண்டவையாகும்:-

1. அயல்நாடுகளில் வேலை வாய்ப்பைத் தேடித் தருதல்.

2. அயல்நாடுகளில் உள்ள இந்தியத் தொழிலாளர் களிடமிருந்து முதலீட்டுக்காக பெறப்பட்ட பணத்தை இந்தியாவில் பயனுள்ள திட்டங்களில் முதலீடு செய்தல்.

3. இந்தியாவிலும், அயல்நாடுகளிலும் கூட்டாகத் தொழில் திட்டங்கள் அமைத்தல், மற்றும்

4. இந்தியாவில் தயாரிக்கப்படும் பொருட்களை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஊக்குவித்தல்.

12.4. 31—12—1991-ஆம் ஆண்டு முடிவுவரை இந் நிறுவனம் 3,964 நபர்களுக்கு பல அயல்நாடுகளில் வேலை வாய்ப்பைத் தேடித்தந்துள்ளது. 31—12—1991 முடிய ஆண்டு வாரியாக வேலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட விவரங்கள் இணைப்பு 21-ல் கொடுக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில், வெளிநாடுகளில் வேலையில் அமர்த்து



வதற்கு, 456 நபர்கள் தெரிந்து எடுக்கப்பட்டுள்ளனர் 31—12—1991 வரையில் இந்த நிறுவனம் ரூ. 6,85,879/- அன்னியச் செலாவணியாக ஈட்டியுள்ளது.

12.5. இந்நிறுவனம் மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற பயண முகவர் (டிராவல் ஏஜெண்ட்) என்ற முறையில், இதுகாறும் 658 நபர்கள் பாஸ்போர்ட் பெற உதவியுள்ளது. இதனால் ரூ. 20,000 ஆண்டு வருமானமாக ஈட்டியுள்ளது.

12.6. ஆனால் டிராவல் மற்றும் பாஸ்போர்ட் ஏஜெண்டாக பணிபுரிய, வான்வழிப் பயணச்சீட்டு பெற்றுத் தரும் தொழில்புரிய வேண்டுமென்று மத்திய அரசு குறிப்பிட்டுள்ளதால், பாஸ்போர்ட் பணியினை தொடர இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. வான்வழிப் பயணச் சீட்டு தொழிலை இந்நிறுவனம் செய்ய தமிழ்நாடு அரசு அனுமதியளிக்கும்வரை வான்வழிப்பயணச்சீட்டு அளிக்கும் பணியினை செய்ய வேண்டுமென்ற நிபந்தனையிலிருந்து விலக்களித்து பாஸ்போர்ட் பணியினை இந்நிறுவனம் தொடர்ந்து செய்ய மத்திய அரசு ஆணை அளிக்க மறுத்து விட்டது. ஆகையால் இந்நிறுவனம் வான்வழிப் பயணச் சீட்டு தொழிலையும் நடத்த முடிவு செய்து, அதனைத் தொடர்ந்து தேவையானவர்களுக்கு பாஸ்போர்ட்டும் பெற்றுத்தர முடிவு செய்துள்ளது.

## அத்தியாயம் 13.

கோரிக்கை எண். 61 பல்வகை மூலதனச் செலவு.

425. ஏனைய சமூகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு
203. வேலைவாய்ப்பு.

13.1. 1992-93-ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில், முன்பு முடிவுறாத கீழ்க்கண்ட ஒருசில திட்டங்களை செயலாக்கி முடிப்பதற்கு மூலதனச் செலவாக ரூ. 1.78 இலட்சங்களும் மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படும் திட்டங்கள் மற்றும் உலக வங்கி உதவியுடன் செயல்படும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களில் கட்டிடப் பணிக்காகவும் தளவாடங்கள் கொள்முதலிற்காகவும் ரூ. 782.41 இலட்சங்கள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

முன்பு முடிவுறாமல் தற்போது முடிக்கப்பட வேண்டிய திட்டங்கள் :

தொழில்களைப் பல்திறப்படுத்தல் :

13.2. அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் உள்ள கம்பியில்லா தந்தி இயக்குபவர் தொழிற் பிரிவுக்கு தேவையான இதுவரையில் கொள்முதல் செய்யப்படாத தளவாடங்களை கொள்முதல் செய்வதற்காக தொழில்களை பல்திறப்படுத்தல் துணைத் தலைப்பின் கீழ் 1992-93-ஆம் நிதியாண்டில் ரூ. 20 ஆயிரமும், கட்டிடப் பணிக்காக அடையாள தொகை ரூ. 1,000-மும் ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழிற் பயிற்சி நிலையங்களில் இல்லாத தளவாடங்களை கொள்முதல் செய்தல் :

13.3. தொழிற் பயிற்சி நிலையங்களில் இதுவரையில் இல்லாத தளவாடங்கள் ஏதும் இருப்பின் அவற்றை கொள்முதல் செய்ய 1992—93-ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் அடையாள தொகையாக ரூ. 1,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் வளர்ச்சி :

13.4. கிண்டி (மகளிர்) தொழிற் பயிற்சி நிலைய கட்டிடம் கட்டும் பணி 1989-90-ஆம் ஆண்டில் ரூ. 42.00 இலட்சங்கள் செலவில் தொடங்கப்பட்டது. நிதிப்பற்றாக் குறையின் காரணமாக இச்செலவு அவ்வருடத்தில் ரூ. 22.00 இலட்சங்களில் கட்டுப்படுத்தப்பட்டது. கட்டிடப்பணிகள் முடியும் தருவாயில் இருப்பதால் தேவையை அனுசரித்து இதற்காக ரூ. 1.21 இலட்சங்கள்



1992-93 திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் திருப்பூர், தருமபுரி, இராமநாதபுரம் ஆகிய தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு கொள்முதல் செய்யப்பட வேண்டிய தளவாடங்களை கொள்முதல் செய்ய 1992-93-ம் நிதியாண்டில் ரூ. 28 ஆயிரம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழிற் பயிற்சி நிலையங்களை நவீனப்படுத்துதல்.

13.5. வாழ்வியல் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட தளவாடங்களை கொள்முதல் செய்வதற்காக 1992—93 ஆம் நிதி ஆண்டில் ரூ. 6 ஆயிரமும், கட்டிடப் பணிக்காக அடையாளத் தொகை ரூ. 1,000 மும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்-சிறுபான்மையினரின் பயனுக்காக சுருக்கெழுத்துப் பாடத்திட்டத்தை அறிமுகம் செய்தல்:

13.6. நாகப்பட்டினம் தொழிற் பயிற்சி நிலையத்தில் செயல்படும் இத்திட்டத்திற்காக 1992-93 ஆம் நிதியாண்டில் அடையாளத் தொகை ரூ. 1,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்டிக் பதனிடுதல் தொழில் இயக்குபவர் பிரிவை அறிமுகப்படுத்துதல்:

13.7. இத்திட்டம் கிண்டி, தொழிற்பயிற்சி நிலையத்தில் 1989 - 90 ஆம் ஆண்டிலும் கோவை தொழிற்பயிற்சி நிலையத்தில் 1990—91 ஆம் ஆண்டிலும், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. தளவாடங்கள் தேவை ஏதுமிருப்பின் அவற்றைக் கொள்முதல் செய்வதற்காக இத்திட்டத்தின் கீழ் அடையாளத் தொகையாக ரூ. 1,000-ம், 1992—93 திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

உலக வங்கி உதவியுடன் செயல்படும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள்-தொழிற் பயிற்சி நிலையங்களை நவீனப் படுத்துதல்:

13.8. 15 முதல் 20 வருடங்களுக்கு முன்பு துவக்கப்பட்ட தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள வழக்கொழிந்த மற்றும் பழைய தளவாடங்களை மாற்றி அமைத்து தொழிற் பயிற்சி நிலையங்களை நவீனப்படுத்த 1992—93 ஆம் திட்ட மதிப்பீட்டில் ரூ. 470.91 இலட்சங்கள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**மகளிருக்கென புதிய தொழிற் பயிற்சி நிலையங்களை தோற்றுவித்தல் :**

13.9. சேலம் (மகளிர்) தொழிற் பயிற்சி நிலையக் கட்டிடம் கட்டும் பணி முடியும் தருவாயில் உள்ளது. கோவை மற்றும் புள்ளம்பாடி ஆகிய மகளிர் தொழிற் பயிற்சி நிலைய கட்டிடங்கள் கட்டும் பணி திறன் மேம்பாட்டுத் திட்டத் தின் கீழ் மேற்கொள்ளப்பட இருக்கிறது. இதற்காக 1992-93 ஆம் ஆண்டில் ரூ. 40.85 லட்சங்கள் நிதி ஒதுக்கீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.27.64 லட்சங்கள் இத் தொழிற் பயிற்சி நிலையங்களில் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்காகவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**இயந்திரப் பராமரிப்பு மையங்கள் மற்றும் மாநில அளவில் ஒரு தொழிலகமும் நிறுவுதல் :**

13.10. பழுதடைந்த இயந்திரங்கள் மற்றும் தளவாடங் களை பராமரிப்பதற்காக மாநில அளவில் ஒரு தொழிலகம் 1991-92-ஆம் ஆண்டு அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் தொடங்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் தொடங்கப்பட்ட இத்தொழிலகத்திற்கு கடடிடம் கட்ட ரூ. 2.70 லட்சங்களும், இத்தொழிலகம் மற்றும் 6 இயந்திரப் பராமரிப்பு மையங்களுக்கு இயந்திரங்கள் மற்றும் தளவாடங் கள் கொள்முதல் செய்வதற்கு ரூ. 17.92 லட்சங்களும் 1992—93-ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**தொழிற் பயிற்சி நிலையங்களை விரிவு படுத்துதல்:**

13.11. தற்போதுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் விரிவாக்கத் திட்டத்தில் இயந்திரங்கள் மற்றும் தளவாடங் கள் கொள்முதல் செய்ய நடப்பு ஆண்டில் (1992—93-ல் ரூ. 45.26 லட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.) கட்டிடம் கட்ட ரூ. 36.28 லட்சங்களும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 8 தொழிற் பயிற்சி நிலையங்கள் ஒவ்வொன்றிலும் 2 புதிய தொழிற் பிரிவுகள் ஆகஸ்ட் 1992 முதல் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

**வாழ்வியல் மேம்பாட்டுத் திட்டத்தினை விரிவுபடுத்துதல் :**

13.12. கோவை அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் வாழ்வியல் மேம்பாட்டுத் திட்டத்தினை விரிவு படுத்த கட்டிட பணிக்காக ரூ. 90 ஆயிரங்களும் இயந்திரங்கள் மற்றும் தள வாடங்கள் கொள்முதல் செய்வதற்காக ரூ. 36.85 லட்சங் களும் 1992—93 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



**விளக்கப்பட சாதனங்கள் அமைத்தல் :**

13.13. வகுப்பறை போதனா முறையை மேம்படுத்த அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் விளக்கப்பட சாதனங்கள் படிப்படியாக அமைக்கப்பட உள்ளன. இதற்காக ரூ. 25.60 லட்சங்கள் 1992—93 ஆம் ஆண்டு திட்ட மதிப் பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 23 தொழிற்பயிற்சி நிலையங்களில் விளக்கப்பட சாதனங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

**அடிப்படை பயிற்சி மையங்கள் மற்றும் தொடர் அறிவுரை மையங்களை தோற்றுவித்தல்:**

13.14. இரசாயன தொழிற்பிரிவு உடைய இராணிப் பேட்டை அடிப்படை பயிற்சி மையத்திற்காகவும் ஹோட்டல் மற்றும் உணவாக்க தொழில் நுட்ப தொழிற் பிரிவினை யுடைய அம்பத்தூர் அடிப்படை பயிற்சி மையத்திற்காகவும் நிரந்தரக் கட்டிடம் கட்ட 1992—93 ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் ரூ. 32.67 லட்சங்கள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## இணைப்பு - 1.

### தொழிற் தகராறுகள்.

| விவரம். (1) | 1990 (1990 சனவரி முதல் நாளிலிருந்து 1990 டிசம்பர் 31ஆம் நாள் வரை.) (2) | 1991 (1991 சனவரி முதல் நாளிலிருந்து 1991 டிசம்பர் 31ஆம் நாள் வரை). (3) |
|---|---|---|
| அ. ஆண்டுத் தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த/புகார்கள் மற்றும் தகராறுகளின் எண்ணிக்கை. | 1,897 | 2,183 |
| ஆ. இந்த ஆண்டில் வரப்பெற்ற புகார்கள்/எழுந்த தொழிற் தகராறுகள் எண்ணிக்கை. | 11,098 | 13,391 |
| | | 15,574 |
| இ. முந்தைய ஆண்டுகளில் முடிவுறாதிருந்த புகார்கள், தகராறுகள் உட்பட புலன் விசாரணை செய்யப்பட்ட புகார்கள், தகராறுகளின் எண்ணிக்கை. | 10,812 | 13,039 |
| ஈ. சமரச அலுவலர்களின் உதவியுடன் தீர்வு காணப் பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 192 | 8,567 |
| உ. தொழிலாளர்கள் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் நீதிமன்றத்தீர்ப்பிற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 1,289 | 148 |
| ஊ. நடுவர் நீதிமன்றத் தீர்ப்பிற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 2 | .. |
| எ. ஆண்டு இறுதியில் முடிவுறாமல் இருந்த தகராறுகளின் எண்ணிக்கை. | 2,183 | 2,535 |

1991-ஆம் ஆண்டில் நடைபெற்ற வேலை நிறுத்தங்களும், கதவடைப்புகளும்

| விவரம். | 1—1—1990 முதல் 31—12—1990 வரை. | 1—1—1991 முதல் 31—12—91 வரை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை. | 265 | 180 |
| 2. இழந்த உழைப்பு நாட்கள் .. .. .. .. | 25,65,078 | 72,78,969 |

இணைப்பு - 2 (ii).

1991 ஆம் ஆண்டில் நடந்த வேலைநிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவை குறித்து தீர்வு காணப்பட்ட வழிமுறைகள்.

| | | |
|---|---|---|
| 1. | நேரடிப் பேச்சு வார்த்தை மூலமாக தீர்வு காணப்பட்டவை. | 14 |
| 2. | தாங்களாகவே முன் வந்து வேலை தொடங்கியவை .. .. | 13 |
| 3. | தொழிலாளர் நலத்துறை அலுவலர்களாலும், அரசாலும் தீர்த்து வைக்கப்பட்டவை. .. .. | 136 |
| 4. | மூடப்பட்டவை .. .. .. .. .. .. .. | .. |
| 5. | தீர்வு வழங்கப்பட்டவை .. .. .. .. .. .. .. | 2 |
| 6. | ஆண்டு இறுதியில் பேச்சுவார்த்தையில் இருந்தவை .. .. .. | 15 |
| | மொத்தம். .. | 180 |



இணைப்பு 2 (iii).

1. தொழில் வாரியாக ஏற்பட்ட வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்த விவரங்கள்.

| தொடர் எண்ணும் தொழிலும். | வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகள் எண்ணிக்கை. | | ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை. | | இழந்த உழைப்பு நாட்கள். | |
|---|---|---|---|---|---|---|
| | 1990 | 1991 | 1990 | 1991 | 1990 | 1991 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. துணி நெசவு | 159 | 31 | 96,265 | 2,22,988 | 12,02,773 | 59,35,753 |
| 2. பொறியியல் | 31 | 21 | 14,275 | 3,933 | 5,29,635 | 2,14,847 |
| 3. தோல் பதனிடும் தொழிற்சாலைகள். | .. | .. | .. | .. | .. | .. |
| 4. புகையிலை பிடித் தொழில். | 1 | .. | 2,000 | .. | 22,000 | .. |
| 5. மலைத்தோட்டங்கள் | .. | 4 | .. | 300 | .. | 7,702 |
| 6. ஏனையன .. | 74 | 74 | 23,008 | 30,941 | 8,10,670 | 11,20,667 |
| மொத்தம் | 265 | 180 | 1,35,548 | 2,58,162 | 25,65,078 | 72,78,969 |

இணைப்பு — 3.

| தீர்ப்புகள் வழங்குதல். | தீர்ப்புக்கு அனுப்பப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. 1990 | 1991 | தீர்ப்புகள் வழங்கப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. 1990 | 1991 |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| அ. சென்னை தொழில் நடுவர் மன்றம் | 112 | 97 | 60 | 85 |
| ஆ. தொழிலாளர் நீதிமன்றங்கள்.. .. | 2,531 | 2,545 | 1,256 | 1,321 |
| இ. நடுவர் தீர்ப்புக்கு அனுப்பப்பட்டவை | | .. | .. | .. |
| ஈ. தொழிலாளர் நீதிமன்றங்கள் முன்பு 33.சி (2) ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்களில் முடிவு செய்யப்பட்டவை. | 2,096 | 1,812 | 2,750 | 1,553 |



இணைப்பு - 3—தொடர்ச்சி.

உ. தொழில் தகராறு சட்டத்தின் பிரிவு 25 (எம்)-ன் கீழ் (லே-ஆப்) பெறப்பட்ட விண்ணப்பங்கள்.

| விவரம். | சென்னை தொழிலாளர் இணை ஆணையர். 1990 | 1991 | மதுரை தொழிலாளர் இணை ஆணையர். 1990 | 1991 | கோவை தொழிலாளர் இணை ஆணையர். 1990 | 1991 |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. முந்தைய ஆண்டின் நிலுவை. | 1 | 2 | .. | .. | .. | .. |
| 2. இந்த ஆண்டில் வரப் பெற்றவை. | 2 | 8 | 1 | .. | 1 | 2 |
| 3. மொத்தம் .. | 3 | 10 | 1 | .. | 1 | 2 |
| 4. முடிவுற்றவை | 1 | 10 | 1 | .. | 1 | 2 |
| 5. ஆண்டு இறுதியில் நிலுவை. | 2 | .. | .. | .. | .. | .. |

இணைப்பு - 3— தொடர்ச்சி.

ஊ. தொழில் தகராறு சட்டத்தின் பிரிவு 25 (என்) (ஆட்குறைப்பு) இல் பெறப்பட்ட விண்ணப்பங்கள்.

| விவரம். | சென்னை தொழிலாளர் இணை ஆணையர். | | மதுரை தொழிலாளர் இணை ஆணையர். | | கோவை தொழிலாளர் இணை ஆணையர். | |
|---|---|---|---|---|---|---|
| | 1990 | 1991 | 1990 | 1991 | 1990 | 1991 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. முந்தைய ஆண்டின் நிலுவை. | .. | .. | .. | .. | .. | .. |
| 2. இந்த ஆண்டில் வரப்பெற்றவை. | 2 | 7 | 2 | .. | 1 | 1 |
| 3. மொத்தம் .. .. | 2 | 7 | 2 | .. | 1 | 1 |
| 4. முடிவுற்றவை .. | 2 | 7 | 2 | .. | 1 | 1 |
| 5. ஆண்டு இறுதியில் நிலுவை. | .. | .. | .. | .. | .. | .. |



எ. தொழில் தகராறு சட்டத்தின் பிரிவு 25 (ஓ)-ன் கீழ் நிறுவனம் மூட அனுமதி சம்பந்தமானவை.

| விவரம். | தொழிலாளர் துறை ஆணையர், சென்னை. | |
|---|---|---|
| | 1990 | 1991 |
| (1) | (2) | (3) |
| 1. பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை .. .. .. | 4 | 5 |
| 2. முடிவு பெற்றவை .. .. .. .. .. .. | 4 | 5 |

இணைப்பு - 3—தொடர்ச்சி.

ஏ. தொழிற் தகராறுகள் சட்டத்தின் 33-சி (1) ஆம் பிரிவின் கீழ் பாக்கித் தொகைகளை வசூலிப்பதற்கான அரசு ஆணை பிறப்பித்த விவரங்கள் :—

| ஆண்டு. | இனங்களின் எண்ணிக்கை. | தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ. பை. |
| 1990 .. .. .. .. .. .. | 82 | 11,67,382.62 |
| 1991 .. .. .. .. .. .. | 6 | 2,12,619.00 |

## இணைப்பு — 4.

**1991 ஆம் ஆண்டில் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள் முடிக்கப்பட்ட வழக்குகள் குறித்த விவரங்கள்.**

| சட்டத்தின் பெயர். | ஆண்டு தொடக்கத்தில் முடிவு பெறாமல் இருந்தவை. | இந்த ஆண்டில் அனுமதிக்கப்பட்டவை. | முடிக்கப் பட்டவை. | தண்டனை அளிக்கப் பட்டவை. | விடுதலை பெறப் பட்டவை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1936 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம். | 1,016 | 786 | 750 | 740 | 6 |
| 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் | 16,815 | 25,740 | 25,384 | 25,284 | 55 |
| 1948 ஆம் ஆண்டு குறைந்த பட்ச சம்பளச் சட்டம் | 1,376 | 1,702 | 1,862 | 1,848 | 9 |
| 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம் | 38 | 48 | 46 | 46 | .. |
| 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டம் | 2,198 | 2,713 | 2,500 | 2,484 | 11 |
| 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம் | 3,480 | 4,044 | 4,130 | 4,110 | 10 |



### இணைப்பு 4 (தொடர்ச்சி)

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் சட்டம் | 271 | 638 | 585 | 529 | — |
| 1961 ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம் | 56 | 15 | 35 | 32 | 1 |
| 1966 ஆம் ஆண்டு பீடி சுருட்டு தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம் | 207 | 255 | 306 | 306 | ... |
| 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதலும் நீக்குதலும்) சட்டம் | 3 | — | 1 | — | ... |
| 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம் | 6 | 5 | 9 | 7 | 1 |
| 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு வாழ்க்கைப் படி வழங்கும் சட்டம் | 1 | 1 | .. | .. | .. |

## இணைப்பு 4—(தொடர்ச்சி)

| சட்டத்தின் பெயர். | தள்ளுக் கப்பட்டவை. | திரும்பப் பெறப் பட்டவை. | தள்ளுபடி செய்யப் பட்டவை. | முடிவு பெறாமல் உள்ளவை. | பெறப்பட்ட அபராதத் தொகை. |
|---|---|---|---|---|---|
| (1) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 1936 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம் | 2 | 2 | ... | 1,042 | ரூ. பை. 83,465.00 |
| 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் | 22 | 21 | 2 | 17,171 | 10,86,245.00 |
| 1947 ஆம் ஆண்டு குறைந்தபட்ச சம்பளச் சட்டம் | 4 | 1 | ... | 1,216 | 3,25,315.00 |
| 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம் | ... | ... | ... | 40 | 16,150.00 |
| 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டம் | 2 | 3 | ... | 2,411 | 2,67,190.00 |
| 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம் | 5 | 5 | ... | 3,403 | 2,18,457.00 |
| 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் சட்டம் | | .. | ... | 374 | 1,14,725.00 |
| 1961 ஆம் ஆண்டு மகப்பேறு சட்டம் | ... | 2 | ... | 36 | 5,800.00 |
| 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம் | ... | ... | ... | 156 | 51,800.0 |
| 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் முறைப்படுத்துதலும் நீக்குதலும்) சட்டம் | 1 | ... | ... | 2 | ... |
| 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம் | 1 | ... | ... | 2 | 10,340.00 |
| 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்கும் சட்டம் | .. | .. | .. | 2 | .. |

### இணைப்பு 5.

**தொழிலாளர் நல துறையினால் மேற்கொள்ளப்பட்ட தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்கள், தொழிலாளர்கள், வசூலிக்கப்பட்ட உரிமத் தொகை ஆகியவைப் பற்றிய விவரம்.**

| ஆண்டு. | நிறுவனங்களின் எண்ணிக்கை. | அமர்த்திக் கொள்ளப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை. | வசூலிக்கப்பட்ட உரிம பதிவுத் தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) ரூ. |
| **(அ) அமைப்பு ரீதியான தொழில்கள் :** | | | |
| 1. 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம் | | | |
| 1990 .. .. .. .. .. | 548 | 93,364 | 1,65,270.00 |
| 1991 .. .. .. .. .. | 550 | 86,342 | 88,810.00 |
| 2. 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம் : | | | |
| 1990 .. .. .. .. .. | 1,688 | 92,456 | 1,28,240.20 |
| 1991 .. .. .. .. .. | 1,754 | 89,439 | 1,50,280.75 |
| **(ஆ) அமைப்பு ரீதியில்லாத தொழில்கள் :** | | | |
| 1. 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் | | | |
| 1990 .. .. .. .. .. | 3,13,608 | 3,06,085 | .. |
| 1991 .. .. .. .. .. | 3,14,146 | 3,00,383 | .. |
| 2. 1958 ஆம் ஆண்டு உணவு நிறுவனங்கள் சட்டம் : | | | |
| 1990 .. .. .. .. .. | 27,862 | 82,586 | 4,16,012.75 |
| 1991 .. .. .. .. .. | 30,965 | 72,363 | 3,56,954.68 |
| 3. 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம் : | | | |
| 1990 .. .. .. .. .. | 1,415 | 10,552 வீட்டிலிருந்து பணிபுரிவோர் 2½ லட்சம். | 55,583.00 |
| 1991 .. .. .. .. .. | 1,152 | 9,944 வீட்டிலிருந்து பணிபுரிவோர் 2½ லட்சம். | 68,229.00 |
| (இ) ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970. | ஒப்பந்தக்காரர்கள் 230 | 14,519 | 8,083.30 |
| | முதன்மை வேலையளிப்பவர்கள். 294 | | 5,379.50 |

## இணைப்பு 6.

**பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் தொழிலாளர் நலத்துறை ஆய்வாளர்கள் ஆய்வு மேற்கொண்ட விவரம்.**

| சட்டத்தின் பெயர். | முறையான ஆய்வு. | விடுமுறை ஆய்வு. | சிறப்பு ஆய்வு. | திடீர் ஆய்வு. | இரவு நேர ஆய்வு. | சோதனை ஆய்வு. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1936 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம். | 3,67,518 | — | 22 | 12 | 32 | — |
| 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் | 4,11,249 | 32,442 | 4,187 | 24,426 | 7,961 | — |
| 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச சம்பளச் சட்டம் | 1,84,567 | 38 | 375 | 915 | — | — |
| 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் | 1,632 | 86 | 39 | 13 | — | — |



| சட்டத்தின் பெயர். | முறையான ஆய்வு. | விடுமுறை ஆய்வு. | சிறப்பு ஆய்வு. | திடீர் ஆய்வு. | இரவு நேர ஆய்வு. | சோதனை ஆய்வு. |
|---|---|---|---|---|---|---|
| 1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகை தொழிலாளர்கள் (பணி நிலைமைகள் பல்வகை விதித்துறைகள்) சட்டம் | 11 | .. | — | — | — | |
| 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு, நிறுவனங்கள் சட்டம் | 47,028 | 740 | 188 | 360 | 101 | ... |
| 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம் | 1,60,142 | 445 | 1,532 | 381 | 608 | .. |
| 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம் | 7,077 | 193 | 493 | 234 | ... | 538 |
| 1961 ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம் | 8,244 | .. | .. | .. | .. | .. |

### இணைப்பு 6—தொடர்ச்சி.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம் | 3,556 | 9 | 62 | 97 | ... | 470 |
| 1970 ஆம் ஆண்டு ஒப்பந்த தொழிலாளர் (முறைப் படுத்துதலும், நீக்குதலும்) சட்டம் | 190 | .. | ... | .. | ... | .. |
| 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம் | 7,534 | — | 39 | .. | .. | |



### அ. பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் துறை அலுவலர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள்.

| வரிசை எண்ணும் தொடர் எண்ணும் விவரங்களும். | 1958-ம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டத்தின் கீழ் தொழிலாளர் அலுவலர் உதவி தொழிலாளர் ஆணையர்களால் (சமரசம்) முடிவு செய்யப்பட்டவை. | | 1972-ம் ஆண்டு பணிக்கொடை பட்டுவாடா சட்டத்தின் கீழ் உதவி தொழிலாளர் ஆணையர்களால் முடிவு செய்யப் பட்டவை. | | 1981-ம் ஆண்டு தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்கும் சட்டத்தின் கீழ் உதவி தொழிலாளர் ஆணையர்களால் முடிவு செய்யப் பட்டவை. | |
|---|---|---|---|---|---|---|
| | 1990 | 1991 | 1990 | 1991 | 1990 | 1991 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகள் | 14 | 7 | 582 | 625 | 241 | 174 |
| 2. இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை | 31 | 26 | 870 | 1,372 | 418 | 702 |
| 3. வழக்குகளின் மொத்த எண்ணிக்கை | 45 | 33 | 1,452 | 1,997 | 659 | 876 |
| 4. நடப்பாண்டில் முடிவு செய்யப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 38 | 29 | 827 | 940 | 485 | 756 |
| 5. ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை | | 4 | 625 | 1,057 | 174 | 120 |

## இணைப்பு 7—தொடர்ச்சி.

### (ஆ) தொழிலாளர் துணை ஆணையாளர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள்.

| விவரங்கள். | 1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டு சட்டம். | | 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம். | | 1947-ம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1990 | 1991 | 1990 | 1991 | 1990 | 1991 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 580 | 678 | 358 | 281 | 46 | 40 |
| 2. இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை. | 1,767 | 1,882 | 972 | 620 | 92 | 180 |
| 3. வழக்குகளின் மொத்த எண்ணிக்கை | 2,347 | 2,560 | 1,330 | 901 | 138 | 220 |
| 4. இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 1,669 | 1,776 | 1,049 | 712 | 98 | 140 |
| 5. ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை | 678 | 784 | 281 | 189 | 40 | 80 |



## இணைப்பு 7 'ஆ'—தொடர்ச்சி.

| விவரங்கள். | 1948-ம் ஆண்டு குறைந்த பட்ச சம்பளச் சட்டம். | | 1972-ம் ஆண்டு பணிக்கொடைச் சட்டம். | | 1981-ம் ஆண்டு தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்கும் சட்டம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1990 | 1991 | 1990 | 1991 | 1990 | 1991 |
| (1) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| 1. ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 7 | 8 | 53 | 21 | 15 | 16 |
| 2. இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை. | 39 | 25 | 108 | 597 | 84 | 4 |
| 3. வழக்குகளின் மொத்த எண்ணிக்கை. | 46 | 33 | 161 | 618 | 99 | 20 |
| 4. இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 38 | 32 | 140 | 180 | 83 | 20 |
| 5. ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 8 | 1 | 21 | 438 | 16 | — |

## இணைப்பு 7—தொடர்ச்சி.

**(இ) 1976-ம் ஆண்டு எடை அளவு சட்டத்தின் அமுலாக்கம் :—**

1. உரிமம் அளித்தல் (1991)

| உற்பத்தியாளர் | விற்பனையாளர் | பழுது பார்ப்போர் | வசூலிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) ரூபாய் |
| 206 | 752 | 426 | 1,56,500.00 |

2. ஆய்வுகள்—
   1991-ம் ஆண்டில் ஆய்வு செய்யப்பட்ட நிறுவனங்கள் .. 4,57,004
3. அமுலாக்கம்—
   தொடுக்கப்பட்ட வழக்குகள் ... 272
   தண்டனை அளிக்கப்பட்டவை .. 671 (முந்தைய நிலுவையில் இருந்தவைகள் உள்பட)
   வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை. ரூ. 90,850
4. குற்றத்தை ஈடுசெய்தல்—
   ஈடு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. 25,850
   வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை. ரூ.22,85,500
5. எடை அளவுகளைச் சரி பார்த்தல் மற்றும் மீளச் சரிபார்த்தலுக்காக வசூலிக்கப்பட்ட முத்திரைக் கட்டணம். ரூ. 1,62,91,000



## இணைப்பு 7 'இ'—தொடர்ச்சி.

**எடைகள் மற்றும் அளவைகள் தரம் (பொட்டலப் பொருட்கள்) விதிகள் 1977.**

**1. ஆய்வுகள்—**

1991-ம் ஆண்டில் ஆய்வு செய்யப்பட்ட நிறுவனங்கள். .. .. .. ... .. 1,43,717

**2. அமுலாக்கம்—**

தொடுக்கப்பட்ட வழக்குகள். .. .. .. .. .. 6,218

தண்டனை அளிக்கப்பட்டவை. .. .. .. ... .. 64

வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை. .. .. .. .. .. ரூ. 14,925

**3. குற்றத்தை ஈடு செய்தல்—**

ஈடு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை .. .. .. .. ரூ. 6,143

வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை .. .. .. .. .. ரூ. 6,33,148

**இணைப்பு 8**

**1991-ல் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் செயல்படுத்திய நலத் திட்டங்களின் விவரங்கள்**

| விவரம் | 1990-91 | 1991-92 |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. தொழிலாளர் நல மையங்கள் (தையல் பயிற்சி நிலையம் உட்பட) | | |
| (அ) மொத்த மையங்கள் | 62 | 62 |
| (ஆ) மொத்த பயிற்சியாளர்கள் | 2,338 | 3,160 |
| 2. குழந்தைகள் காப்பகங்கள் : | | |
| (அ) மொத்த காப்பகங்கள் | 52 | 58 |
| (ஆ) பயனுற்ற குழந்தைகள் | 1,989 | 2,126 |
| 3. படிப்பகங்கள் : | | |
| மொத்த படிப்பகங்கள் | 10 | 12 |



**இணைப்பு 9**

**தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் செயல்படுத்திய ஏனைய திட்டங்கள்**

| விவரம் | பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை | | ஒப்புதல் அளித்த தொகை | |
|---|---|---|---|---|
| (1) | 1990-91 (2) | 1991-92 (3) | 1990-91 (4) | 1991-92 (5) |
| | | | ரூ. பை. | ரூ. பை. |
| (அ) தொழிலாளர்களுக்கு மூக்குக் கண்ணாடிக்கான செலவுத் தொகை கொடுத்தல். | 3,774 | 1,722 | 2,49,000.00 | 1,29,065.00 |
| (ஆ) தொழிலாளர் குழந்தைகளுக்குத் தட்டச்சுக்கும் சுருக்கெழுத்துப் படிக்கட்டணங்கள் ஈடு செய்தல். | 901 | 513 | 69,809.00 | 62,153.00 |
| (இ) பாட நூல் உதவித் தொகை | 5,560 | 6,458 | 2,33,819.50 | 2,51,639.00 |
| (ஈ) ஈமச்சடங்கிற்குரிய செலவுகள். | 694 | 541 | 2,07,600.00 | 1,62,300.00 |
| (உ) உடல் ஊனமுற்றவர்களுக்குச் செயற்கை உறுப்பு வழங்குதல். | 2 | 6 | 475.00 | 2,321.55 |
| (ஊ) காது கேட்கும் கருவி வழங்குதல். | 38 | 10 | 17,610.00 | 9,037.00 |
| (எ) ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர வண்டி வழங்குதல் | 6 | — | 10,960.00 | — |

## இணைப்பு 10

### தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் வழங்கிய படிப்புதவித் தொகை விவரங்கள்.

| விவரம் | பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை | | ஒப்புதல் அளித்த தொகை | |
|---|---|---|---|---|
| | 1990-91. | 1991-92. | 1990-91. | 1991-92. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | ரூபாய். | ரூபாய். |
| 1. பொறியியல் பட்டப் படிப்பு | 145 | 78 | 1,74,000 | 93,600 |
| 2. பொறியியல் பட்டயப்படிப்பு | 233 | 237 | 1,67,340 | 1,70,640 |
| 3. மருத்துவப் பட்டப் படிப்பு | 70 | 30 | 83,400 | 36,000 |
| 4. மருத்துவப் பட்டயப் படிப்பு | 9 | 9 | 6,440 | 6,480 |
| 5. சட்ட பட்டப் படிப்பு | 15 | 7 | 17,400 | 8,400 |
| 6. வேளாண்மைப் பட்டப் படிப்பு | 7 | 4 | 7,600 | 4,800 |
| 7. தொழிற் பயிற்சி கல்வி | 115 | 112 | 41,170 | 40,320 |
| 8. மேல்நிலைக் கல்வி | 77 | 112 | 45,950 | 67,200 |



## இணைப்பு 11

### தொழிற்சாலைகள், தொழிலாளர்கள் வசூலிக்கப்பட்ட உரிமத்தொகை ஆகியவை பற்றிய விவரம்

| சட்டத்தின் பெயர் | ஆண்டு | தொழிற் சாலைகள் எண்ணிக்கை | அமர்த்திக் கொடுக்கப் பட்ட தொழிலாளர் எண்ணிக்கை (உத்தேசமாக) | வசூலிக்கப் பட்ட உரிமத் தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம். | 1989 | 15,625 | 8,40,086 | 1,19,28,311 |
| | 1990 | 16,710 | 8,67,726 | 1,31,21,805 |
| | 1991 | 18,062 | 9,01,943 | 4,03,30,137 |

## இணைப்பு 12

**1948-ம் ஆ… …சாலைகள் சட்டத்தின் கீழ் ஆய்வு செய்த விவரங்கள்**

| சட்டத்தின் பெயர் | [illegible] | விடுமுறை ஆய்வு | சிறப்பு ஆய்வு | திடீர் ஆய்வு | இரவு நேர ஆய்வு | பதிவுறா தொழிற் சாலைகள் ஆய்வு | சோதனை ஆய்வு |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1948-ம் ஆண்டு தொழி… சாலைகள் சட்டம். | 25,014 | 1,010 | 4,104 | 323 | 697 | 3,769 | 3,880 |



## இணைப்பு - 13

**பிற சட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் விவரங்கள்.**

| வரிசை எண். | சட்டத்தின் பெயர். | தொழிற்சாலை களின் எண்ணிக்கை | தொழிலாளர் களின் எண்ணிக்கை | ஆய்வு செய்த மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| 1. | 1936-ம் ஆண்டு ஊதியம் வழங்கும் சட்டம் .. | 18,062 | 8,91,389 | 23,121 |
| 2. | 1958-ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை) விடுமுறை சட்டம். | 73,971 | 8,91,389 | 22,801 |
| 3. | 1948-ம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டம். | 11,134 | 8,22,631 | 13,927 |
| 4. | 1961-ம் ஆண்டு மகப்பேறு சட்டம் .. .. | 8,162 | 5,77,597 | 9,364 |
| 5. | 1970-ம் ஆண்டு ஒப்பந்த தொழிலாளர்கள் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம். | 758 | 47,319 | 876 |
| 6. | 1981-ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர் நிரந்தரப்படுத்துதல்) சட்டம். | 9,755 | 5,01,666 | 11,249 |
| 7. | 1976-ம் ஆண்டு சம ஊதியச் சட்டம். .. | 9,480 | 6,94,601 | 10,143 |
| 8. | 1972-ம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர்கள் நல நிதிச் சட்டம். | 18,062 | 9,01,943 | 22,998 |

## இணைப்பு—14.

**பல்வேறு தொழிற்சாலை சட்டங்களின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள் முடிக்கப்பட்ட வழக்குகள் பற்றிய விவரங்கள்.**

| வரிசை எண்; சட்டத்தின் பெயர். | ஆண்டு தொடக்கத்தில் முடிவு பெறாமல் இருந்தவை. | இந்த ஆண்டில் அனுமதிக்கப் பட்டவை. | மொத்தம். | முடிக்கப் பட்டவை. | தண்டனை அளிக்கப் பட்டவை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. 1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம். | 3,329 | 2,267 | 5,596 | 2,698 | 2,373 |
| 2. 1970-ம் ஆண்டு ஒப்பந்த தொழிலாளர்கள் (முறைப் படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம். | 84 | 35 | 119 | 77 | 73 |
| 3. 1958-ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை) சட்டம். | 234 | 44 | 278 | 127 | 122 |
| 4. 1936-ம் ஆண்டு ஊதியங்கள் வழங்கும் சட்டம். | 247 | 56 | 303 | 147 | 133 |
| 5. 1948-ம் ஆண்டு குறைந்தபட்ச ஊதிய சட்டம். | 584 | 105 | 689 | 273 | 247 |
| 6. 1961-ம் ஆண்டு மகப்பேறு சட்டம். | 7 | 15 | 22 | 13 | 8 |
| 7. 1972-ம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிச் சட்டம். | 4 | .. | 4 | .. | |
| 8. 1981-ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர் நிரந்தரப் படுத்துதல்) சட்டம். | 11 | 2 | 13 | 10 | .. |
| 9. 1981-ம் ஆண்டு தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்கும் சட்டம். | 6 | 3 | 9 | 6 | 4 |
| 10. 1986-ம் ஆண்டு குழந்தை தொழிலாளர்கள் (முறைப் படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம். | 2 | 46 | 48 | 1 | .. |
| 11. 1972-ம் ஆண்டு பணிக்கொடை வழங்கும் சட்டம். | 6 | .. | 6 | 3 | 3 |

இணைப்பு - 14-ன் தொடர்ச்சி.

| வரிசை எண். சட்டத்தின் பெயர். | விடுதலை செய்யப்பட்டவை. | தண்டிக்கப்பட்டவை. | திரும்பப் பெறப்பட்டவை. | தள்ளிவிடப்பட்டவை. | ஆண்டு இறுதியில் முடிவுப் பெறாமல் உள்ளவை. | பெறப்பட்ட அபராதத் தொகை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| 1. 1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம். | 57 | 16 | 244 | 8 | 2,898 | 13,82,155 |
| 2. 1970-ம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப் படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம். | 3 | .. | 1 | .. | 42 | 15,495 |
| 3. 1958-ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை) சட்டம். | .. | 1 | 4 | .. | 151 | 7,080 |
| 4. 1936-ம் ஆண்டு ஊதியங்கள் வழங்கும் சட்டம். | 2 | .. | 12 | .. | 156 | 16,595 |
| 5. 1948-ம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டம். | 9 | .. | 17 | .. | 416 | 46,150 |
| 6. 1961-ம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம். | .. | .. | 4 | .. | 9 | 1,350 |
| 7. 1972-ம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம். | .. | .. | (—) | 1 | 4 | .. |
| 8. 1981-ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர் நிரந்தரப் படுத்துதல்) சட்டம். | .. | 9 | 1 | .. | 3 | .. |
| 9. 1981-ம் ஆண்டு தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்கும் சட்டம். | .. | .. | 2 | .. | 3 | 2,500 |
| 10. 1986-ம் ஆண்டு குழந்தை தொழிலாளர்கள் (முறைப் படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம். | 1 | .. | .. | .. | 47 | .. |
| 11. 1972-ம் ஆண்டு பணிக்கொடை சட்டம். | .. | .. | .. | .. | 3 | 150 |

## இணைப்பு 15.

### தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டத்தின் கீழ் தீர்க்கப்பட்ட உரிமை கோரிக்கைகள்.

பெறப்பட்ட, தீர்க்கப்பட்ட, திருப்பப்பட்ட, நிலுவையில் உள்ள உரிமைக் கோரிக்கைகளின் விவரங்கள் வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. 31-3-1991 அன்று நிலுவையிலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 14,899 | வழக்குகள். |
| 2. 1-4-1991 முதல் 30-9-1991 முடிய பெறப்பட்டவை. | 68,627 | " |
| 3. தீர்க்கப்பட வேண்டிய உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 83,525 | " |
| 4. தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 53,079 | " |
| 5. குறைப்பாடுகளைச் சரி செய்வதற்காகத் திருப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 13,521 | " |
| 6. 30-9-1991 அன்று நிலுவையில் இருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 16,926 | " |



1-4-1991 முதல் 30-9-1991 முடிய தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் பகுப்பாய்வு பின்வருமாறு :—

| | நிகழ்வுகளின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் லட்சத்தில்) |
| 1. இறப்பு .. .. .. | 1,555 | 228.06 |
| 2. பணி முதிர்ச்சியால் ஓய்வு பெற்றவர்கள். | 3,108 | 809.07 |
| 3. நிரந்தர இயலாமையுறல் .. | 137 | 22.53 |
| 4. பணித் துறவு .. | 46,549 | 2,813.33 |
| 5. பணியிழப்பு | 1,089 | 118.87 |
| 6. பல்வகை .. | 641 | 82.33 |
| மொத்தம் .. | 53,079 | 4,074.19 |

30-9-1991 அன்று நிலுவையிலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| 1. 2 மாதங்களுக்கு குறைவாக நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 16,381 |
| 2. 6 மாதங்களுக்கு குறைவாகவும் 2 மாதங்களுக்கு மேற்பட்டும் நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 545 |
| மொத்தம் .. | 16,926 |

## இணைப்பு 16.

### தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் விபரங்கள் (மாதாந்திர குடும்ப நல ஓய்வூதியம் தவிர மற்ற எல்லாவகையான பயன்கள்.)

30-9-1991 அன்று வரை பெறப்பட்ட, தீர்க்கப்பட்ட, திருப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

| (1) | வழக்குகள் (2) |
|---|---|
| 1. 31-3-1991 அன்று நிலுவையிலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 14,863 |
| 2. 1-4-1991 முதல் 30-9-1991 முடிய பெறப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 68,542 |
| 3. தீர்க்கப்பட வேண்டிய உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 83,405 |
| 4. இந்த வருடத்தில் (1991-ம் ஆண்டில்) தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 48,205 |
| 5. குறைபாடுகளை சரி செய்வதற்காக திருப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 17,851 |
| 6. 30-9-1991 அன்று நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 17,349 |

30—9—1991 முடிய நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் பகுப்பாய்வு கீழ்வருமாறு :—

| | வழக்குகள் |
|---|---|
| 1. 2 மாதங்களுக்கு குறைவாக உள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 17,349 |
| 2. 6 மாதங்களுக்கு குறைவாகவும் 2 மாதங்களுக்கு மேற்பட்டும் நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | இல்லை. |
| 3. 1 வருடத்திற்கு குறைவாகவும் 6 மாதங்களுக்கு மேற்பட்டும் நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | இல்லை. |
| மொத்தம் .. | 17,349 |



## இணைப்பு - 17.

### தீர்க்கப்பட்ட குடும்ப நல ஓய்வூதிய உரிமைக் கோரிக்கைகள்.

1-4-1991 முதல் 30-9-1991 முடிய பெறப்பட்ட தீர்க்கப்பட்ட நிலுவையிலுள்ள குடும்ப நல ஓய்வூதிய உரிமைக் கோரிக்கைகள் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

| | வழக்குகள் |
|---|---|
| 1. 31—3—1991 முடிய நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 520 |
| 2. 1—4—1991 முதல் 30—9—1991 முடிய பெறப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 2,251 |
| 3. தீர்க்கப்பட வேண்டிய உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 2,771 |
| 4. தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 1,254 |
| 5. குறைபாடுகள் சரிசெய்வதற்காக திருப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 936 |
| 6. 30—9—1991 முடிய நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 581 |

30—9—1991 முடிய நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் பகுப்பாய்வு பின் வருமாறு:—

| | வழக்குகள் |
|---|---|
| 1. 2 மாதங்களுக்கு குறைவாக நிலுவையில் உள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 581 |
| 2. 6 மாதங்களுக்கு குறைவாகவும் இரண்டு மாதங்களுக்கு மேற்பட்டும் நிலுவையில், உள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | இல்லை. |
| 3. 1 வருடத்திற்குக் குறைவாகவும் 6 மாதங்களுக்கு மேற்பட்டும் நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | இல்லை. |
| மொத்தம் .. | 581 |

## இணைப்பு-18.

வேலைவாய்ப்பு அலுவலகங்கள் 1991-ம் ஆண்டில் ஆற்றிய முக்கிய பணிகள் முந்தைய ஆண்டுகளில் ஆற்றிய பணிகளோடு ஒப்பிட்டு நோக்கும் வகையில் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| (1) | 1—1—1988<br>31—12—1988<br>(2) | 1—1—1989<br>31—12—1989<br>(3) | 1—1—1990<br>31—12—1990<br>(4) | 1—1—1991<br>30—11—1991<br>(5) |
|---|---|---|---|---|
| 1. பதிவு செய்தோர். | 5,27,036 | 6,74,130 | 6,49,985 | 5,40,388 |
| 2. அறிவிக்கப்பட்ட காலியிடங்கள் | 62,686 | 67,969 | 53,165 | 40,328 |
| 3. பணியில் அமர்த்தப்பட்டோர் | 54,388 | 43,302 | 45,753 | 35,637 |
| 4. வேலைவாய்ப்பு அலுவலகங்களை உபயோகித்த வேலையளிப்போரின் எண்ணிக்கை. | 19,202 | 19,382 | 16,302 | 14,037 |
| 5. உயிர்ப்பதிவேட்டில் காத்திருப்போர். | [illegible]7,092 | 29,92,394 | 32,36,453 | 34,66,435 |

## இணைப்பு-19.

தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம் 1991-ம் ஆண்டில் ஆற்றிய முக்கிய பணிகள் முந்தைய ஆண்டுகளில் ஆற்றிய பணிகளோடு ஒப்பிட்டு நோக்கும் வகையில் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| (1) | 1—1—1988<br>31—12—1988<br>(2) | 1—1—1989<br>31—12—1989<br>(3) | 1—1—1990<br>31—12—1990<br>(4) | 1—1—1991<br>30—11—1991<br>(5) |
|---|---|---|---|---|
| 1. பதிவு செய்தோர் | 23,452 | 25,193 | 26,914 | 25,000 |
| 2. வேலையில் அமர்த்தப்பட்டோர் | 2,373 | 2,671 | 2,074 | 2,719 |
| 3. உயிர்ப் பதிவேட்டில் காத்திருப்போர். | 69,527 | 82,236 | 1,01,168 | 1,14,901 |

## இணைப்பு-20

உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம், 1991-ம் ஆண்டில் ஆற்றிய முக்கிய பணிகள் முந்தைய ஆண்டுகளில் ஆற்றிய பணிகளோடு ஒப்பிட்டு நோக்கும் வகையில் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | 1—1—1988 முதல் 31—12—1988 வரை | | | 1—1—89 முதல் 31—12—89 வரை. | | |
|---|---|---|---|---|---|---|
| | பதிவு செய்தோர். | வேலையில் அமர்த்தப் பட்டோர். | உயிர்ப் பதிவேட்டில் உள்ளோர். | பதிவு செய் தோர். | வேலையில் அமர்த்தப் பட்டோர். | உயிர்ப் பதிவேட்டில் உள்ளோர். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| பார்வையற்றோர் | 27 | 13 | 2,284 | 678 | 18 | 2,889 |
| காதுகேளாதோர் | 279 | 30 | 1,794 | 611 | 34 | 2,322 |
| கை, கால் ஊனமுற்றோர் | 4,696 | 1,257 | 26,119 | 5,778 | 1,072 | 28,922 |
| மொத்தம் .. | 5,245 | 1,300 | 30,197 | 7,067 | 1,124 | 34,133 |

| | 1-1-90 முதல் 31-12-90 வரை. | | | 1-1-91 முதல் 30-11-91 வரை. | | |
|---|---|---|---|---|---|---|
| | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| பார்வையற்றோர் | 446 | 27 | 3,112 | 287 | 57 | 3,342 |
| காதுகேளாதோர் | 376 | 71 | 2,479 | 376 | 72 | 2,786 |
| கை, கால் ஊனமுற்றோர். | 4,746 | 919 | 31,868 | 4,312 | 1,196 | 33,253 |
| மொத்தம் .. | 5,568 | 1,017 | 37,459 | 4,975 | 1,325 | 39,381 |

## இணைப்பு - 21.

அயல் நாடுகட்கு அனுப்பப்பட்ட நபர்களின் விவரம் ( ஆண்டு மற்றும் நாடுகள் வாரியாக).

| வரிசை எண். | வருடம். | பஹ்ரைன். | போட்ஸ்வானா. | அமெரிக்கா. | ஐ. அ. கு. | லிபியா. | ஓமன். | ஈராக். | யேமன். | ஜோர்டான். | சவூதி அரேபியா. | கட்டார். | குவைத். | ஈரான். | சிங்கப்பூர். | மலேசியா. | மாலே | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) | (18) | (19) |
| 1. | 1979—80 | .. | .. | .. | 36 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 36 |
| 2. | 1980—81 | .. | .. | .. | .. | .. | .. | 70 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 70 |
| 3. | 1981—82 | .. | .. | .. | .. | 31 | .. | 286 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 317 |
| 4. | 1982—83 | .. | .. | .. | .. | .. | .. | 133 | 80 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 213 |
| 5. | 1983—84 | .. | .. | .. | .. | .. | 32 | 150 | 172 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 354 |
| 6. | 1984—85 | .. | .. | .. | .. | 72 | 27 | 90 | .. | .. | 243 | .. | .. | .. | .. | .. | .. | 432 |
| 7. | 1985—86 | .. | .. | .. | 221 | 431 | .. | 8 | 110 | 35 | 700 | .. | .. | .. | .. | .. | .. | 1505 |
| 8. | 1986—87 | .. | .. | .. | 6 | .. | 1 | .. | 22 | .. | 75 | .. | .. | .. | .. | .. | .. | 104 |
| 9. | 1987—88 | .. | .. | .. | 32 | 4 | 4 | 1 | .. | .. | 124 | 2 | 45 | .. | .. | .. | .. | 212 |
| 10. | 1988—89 | .. | .. | .. | 1 | 41 | 2 | 30 | .. | .. | 120 | .. | 67 | 46 | 2 | .. | .. | 309 |
| 11. | 1989—90 | .. | .. | 1 | 15 | 21 | 1 | 1 | .. | .. | 57 | .. | 16 | .. | 4 | .. | .. | 116 |
| 12. | 1990—91 | .. | 1 | 11 | 2 | 4 | 1 | .. | 1 | .. | 143 | .. | 25 | .. | .. | .. | .. | 188 |
| 13. | 1991—92 டிசம்பர் முடிய. | 1 | 1 | 4 | 2 | .. | 1 | .. | .. | [illegible] | 94 | 1 | .. | .. | .. | 4 | 1 | 108 |
| | மொத்தம் .. | 1 | 1 | 16 | 315 | 604 | 69 | 769 | 385 | 35 | 1556 | 3 | 153 | 46 | 6 | 4 | 1 | 3964 |

பணி வாரியாக அனுப்பப்பட்டவர்கள் : மருத்துவர்கள், செவிலியர்கள், எக்ஸ்ரே எடுப்பவர்கள், பாராமெடிக்கல், ஆட்கள், கட்டிடக் கலை வல்லுநர்கள், மருந்தாளர்கள், தோட்ட வேலை செய்பவர்கள், டெக்னீசியன்கள், உதவியாளர்கள் திறமையாளர்கள் மற்றும் இதரப் பணியாளர்கள்.

## இணைப்பு - 22.

### 1992—93 ஆம் ஆண்டில் பகுதி II. திட்டங்களாக செயல் படுத்தப்படும் திட்டங்களின் விவரங்கள்.

| | | 1992—93 மதிப்பீடு (ரூபாய் லட்சங்களில்) |
|---|---|---|
| 1. | தொழிற்பயிற்சி நிலையங்களில் பழுதடைந்த கைக் கருவிகள் மாற்றல். | 3.00 |
| 2. | ஹோசூர் மற்றும் கடலூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் ஆழ்கிணறு/திறந்த வெளிக் கிணறு அமைத்தல். | 2.00 |
| 3. | 1992—93 ஆம் ஆண்டில் தொழிற் பயிற்சி நிலையங்களில் மாற்று விசைக் குழாய் அமைத்தல். (Standby Power Pumps—) | 2.48 |
| 4. | திண்டுக்கல் தொழிற் பயிற்சி நிலையத் திற்கு முனிசிபல்; பஞ்சாயத்து குடிநீர் விநியோகம் நீட்டிப்பு செய்தல். | 1.00 |
| 5. | தொழிற் பயிற்சி நிலையங்களில் வகுப்பறை மரச்சாமான்கள் கொள்முதல் செய்தல். | 1.00 |
| 6. | தர்மபுரி தொழிற் பயிற்சி நிலையத்திற்கு கட்டிடம் (ரூ. 44.00 லட்சம் மதிப்பீட்டில்) கட்டுதல் (ரூ. 4.00 லட்சம் இவ்வருடம் செலவிடப்படும்). | 4.00 |
| 7. | உலக வங்கி திட்டத்தில் (50 விழுக்காடுகள் மதிப்பு) தொடங்கப்பட்ட மகளிர் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு விடுதி கட்டுதல். | 22.41 |
| 8. | சென்னை, தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்திற்கு கூடுதல் அலுவலர் பதவி ஏற்படுத்துதல். | 1.51 |
| 9. | கூனூரிலுள்ள தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகத்திற்கு 3 இளநிலை உதவியாளர் மற்றும் ஒரு தட்டச்சர் பதவி புதிதாக உருவாக்குதல். | 1.00 |
| 10. | அபாயகரமான தொழில்களைச் செய்யும் தொழிற்சாலை, தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு, பயிற்சி அளிக்கும் பொருட்டு சிவகாசியில் ஒரு பயிற்சி நிலையம் ஆரம்பித்தல். | 2.50 |
| | மொத்தம் .. | 40.90 |



545—ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க

## மீன்வளத் துறை.

### கொள்கை விளக்கக் குறிப்பு—1992-93.

**1. முன்னுரை :**

தமிழ்நாடு கடல்வளம் மற்றும் உள்நாட்டு மீனவளம் இரண்டையும் தன்னகத்தே கொண்டது. 1,000 கி.மீ. நீளமுடைய கடற்கரையும், 41,400 ச.கி.மீ. பரப்புடைய கடற்படு நிலத் தொடரையும் உடையது. புரதச் சத்து மிகுந்த மீன் உணவை சுமார் 80 விழுக்காடு மக்கள் உட்கொள்ளுகிறார்கள். நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு 15 விழுக்காடாகும். மொத்தமுள்ள 5.05 இலட்சம் கடல் மீனவ மக்களில் 1.11 இலட்சம் பேர் நேரடியாக மீன் பிடிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். மேலும் 36,000 பேர் இம்மாநிலத்தின் உள்நாட்டு மீன் பிடிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

1.2. மீன்வள மேம்பாட்டுத் திட்டங்களை மீன் வளத் துறையும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமும் செயல்படுத்துகின்றன. மீன்வள மேம்பாட்டுக்கான பயன்தரும் கொள்கைகளை வகுப்பதில் ஆலோசனை வழங்குவது மீன்வளத் துறையின் பொறுப்பாகும். தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் முக்கியமாக கடல் மீன் உற்பத்தி, நீர்த்தேக்கங்களில் நன்னீர் மீன் உற்பத்தி மற்றும் மீன் விற்பனை ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றது. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள், மாவட்ட அளவில் உள்நாட்டு மீன்வள முன்னேற்றத்துக்கான முயற்சிகளை மேற்கொள்கையில், மீனவர் மற்றும் மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள், கிராம மட்டத்தில் கூட்டுறவு வழியில் மீனவர்கள் நல்வாழ்வுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துகின்றன.

**2. மீன்வளம் குறித்து அரசின் கொள்கை :**

2.1. மீனள அபிவிருத்தியும், மீனவர் சமுதாய நலத்தினை மேம்படுத்தலும் இத்துறையின் பிரதான கொள்கைகளாகும். துறையின் முக்கிய நோக்கங்களாவன :—

1. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுதல்;

2. குறைவான விலையில் எளிதில் கிடைக்கக்கூடிய புரதச் சத்துள்ள மீன் உணவை அளித்தல்;

3. அந்நிய செலாவணியை அதிகரித்தல்;

4. வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துதல்;

5. மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்; மற்றும்

2.2. தமிழ்நாட்டில் ஐந்தாண்டுத் திட்டங்களைச் சீராக செயல்படுத்தியதன் விளைவாக 1951-52-ல் 0.46 இலட்சம் டன்னாக இருந்த மீன் உற்பத்தி 1990-91 இறுதியில் கடல் மற்றும் உள்நாட்டு மீன் முறையே 2.92 இலட்சம் டன், 0.82 இலட்சம் டன் ஆக மொத்தம் 3.74 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. 1991-92-ல் கடல் மீன் 2.99 இலட்சம் டன், உள்நாட்டு மீன் 0.90 இலட்சம் டன் ஆக மொத்தம் 3.89 இலட்சம் டன் மீன் உற்பத்தியளவை எட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1991-92-ல் 3.89 இலட்சம் டன்னிலிருந்து 1992-93-ல் 4.05 இலட்சம் டன்னாக மீன் உற்பத்தியை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 3.07 இலட்சம் டன் கடல் மீன் மற்றும் 0.98 இலட்சம் உள்நாட்டு மீன் உற்பத்தியும் அடங்கும்.

2.3. ஊட்டச்சத்து மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக இருக்கின்ற மீன்வள வாய்ப்புக்களை பயன்படுத்துவதில் கவனம் செலுத்துவதுதான் மீன் துறையின் பெரிய கொள்கையாகும். மீன் பிடித்தல், மீனைப் பதப்படுத்துதல், மீன் விற்பனை, மீன்பிடி படகுகளை பழுதுபார்த்தல், உள்ளமைப்பு வசதிகள் அமைத்துக் கொடுத்தல் ஆகியவற்றில் படிப்படியான முன்னேற்றம் காண்பது மீன்வளத் துறையின் நோக்கமாகும். இக்குறிக்கோள்களை அடையும் பொருட்டு எட்டாவது திட்ட காலத்தில் பல்வேறு மீன்வள மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. மீன்வளத்தின் நிலை :

3.1. உள்நாட்டு மீன்வளம்: தமிழ்நாட்டிலுள்ள 7.98 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவுக்கு உள்நாட்டு நீர்நிலைகளில் 3.71 இலட்சம் ஹெக்டேர் மட்டுமே மீன் வளர்ப்பிற்கு உகந்தது. உள்நாட்டு மீன் உற்பத்தித் தொழிலுக்குத் தரமான மீன் குஞ்சுகள் முக்கியத் தேவையாகும். 14 மீன்விதைப்பண்ணைகளிலிருந்து பொரிப்பக முறையின் மூலம் 40 மில்லியன் குஞ்சுகளும் இயற்கையாக கிடைக்கும் மீன்குஞ்சுகளைச் சேகரிப்பதின் மூலம் 20 மில்லியன் மீன்குஞ்சுகளும் மீன் துறை உற்பத்தி செய்கிறது. 54,000 ஹெக்டேர் பரப்புள்ள நீர்த்தேக்கங்கள் மீன் உற்பத்திக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் இதுவரை 32,000 ஹெக்டேர் பரப்புள்ள பாசனக் குளங்களில் மட்டுமே மீன் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தவிர மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளின் மூலம் தீவிர மீன் வளர்ப்பிற்கு 4,760.74 ஹெக்டேர் குட்டைகள் மீன் வளர்ப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. ஓரளவு தீவிர மீன் உற்பத்தி மூலம் ஒரு ஹெக்டேர் பரப்பில் ஆண்டு மீன் உற்பத்தி விதத்தை அதிகரித்தல், மேலும் கூடுதலான நீர்ப்பரப்பை மீன் உற்பத்திக்கு எடுத்துக் கொள்ளுதல் ஆகியவைகள் நன்னீர் மீன் வளர்ப்பின் வளர்ச்சிக்கென மீன் துறை எடுத்துக்கொண்ட முக்கிய முயற்சிகளாகும். இவ்வழிமுறைகள் மீன்குஞ்சுகளின் உற்பத்தியைப் பெருக்கி அவைகளின் தரத்தையும் உயர்த்துவதாகும்.



3.2. கடல் மீன்வளம்: தற்போது தமிழ்நாட்டு கடற்கரை நெடுகிலும் 8,167 விசைப்படகுகளும் தவிர 35,039 நாட்டுப் படகுகள் கடல் மீன் பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. தமிழ்நாட்டில் 362 மீன் இறங்குமிடங்கள் உள்ளன. இவற்றுள் சில கிராமங்களில் அடிப்படை உள்ளமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. சுமார் 1.11 இலட்சம் மீனவர்கள் நேரடியாக மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளனர். இந்தியாவின் பிரத்யேக பொருளாதார எல்லைப் பகுதிகளிலுள்ள ஆழ்கடல் பகுதியில் தீவிர மீன்பிடிப்பு மேற்கொள்ள முயற்சிகள் இனிமேல் தான் எடுக்கப்படவேண்டும். நமது கடல் மீன்வள வாய்ப்பு வருடத்திற்கு 8 இலட்சம் டன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இக்குறியீட்டினை எய்த மீன்பிடிப்படகுகளின் எண்ணிக்கை மற்றும் உள்ளமைப்பு வசதிகளைப் பெருக்க வேண்டும்.

3.3. கடலோர மீன்வளர்ப்பு: தமிழ்நாட்டில் 0.56 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவுள்ள உவர்நீர் பரப்பும், அதனையொட்டி தாழ்வான நிலப்பகுதியும் உள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது. ஆரம்ப ஆய்வின் மூலம் இருக்கின்ற மொத்தப் பரப்பில், சுமார் 0.16 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவு மீன் பண்ணைகள் அமைத்திட உபயோகிக்கலாம் எனத் தெரிய வந்துள்ளது. மேலும், இத்துறையின் நுண்ணிய ஆய்வின் மூலம் 3,000 ஹெக்டேர் நிலப்பரப்பு இறால் வளர்ப்பிற்கு உகந்ததென தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

4. நிதிநிலை :

கடல் மீன் உற்பத்தி 3.60 இலட்சம் டன்னும், உள்நாட்டு மீன் உற்பத்தி 1.33 இலட்சம் டன்னும் ஆக மொத்த உற்பத்தி அளவான 4.93 இலட்சம் டன் அடையும்பொருட்டு எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 34.71 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதலாவது ஆண்டான 1992-93-ம் ஆண்டு திட்டத்திற்கென ரூ. 788.18 இலட்சம் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. இதில் பகுதி-2 திட்டத்தின் கீழ் புதிய திட்டங்களுக்கென ஒப்புதல் அளிக்கப்பட்ட ரூ. 48.81 இலட்சமும் அடங்கும். தவிரவும், திட்டமில்லா பணிகளுக்கென ரூ. 823.82 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீனவ சமூகத்தினர் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்துவதுடன், கடல், உள்நாட்டு மற்றும் கடற்கரையோர மீன்வள உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டங்களுக்கு இந்த ஆண்டுத் திட்டம் முக்கியத்துவம் அளிக்கும். 1992-93ஆம் ஆண்டில் நடைமுறைப் படுத்தப்பட விருக்கும் திட்டங்கள் சுருக்கமாக கீழே விளக்கப்பட்டுள்ளன.

5. நன்னீர் மீன்வளம் :

மீன்வளர்ப்புக்கு உகந்த நன்னீர் நிலைகளில் வளர்ப்பதற்கான மீன்குஞ்சுகளின் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு இத்துறை இதுவரை மாநிலத்தில் 24 மீன்குஞ்சு உற்பத்தி பண்ணைகளை அமைத்துள்ளது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 170 மில்லியன் மீன்குஞ்சுகள் தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய ஆண்டு சராசரி உற்பத்தி அளவான 60 மில்லியன்

மீன்குஞ்சு உற்பத்தியிலிருந்து 170 மில்லியன் மீன்குஞ்சுகளாக உற்பத்தி அதிகரிக்க வேண்டியுள்ளது. மாநிலத்தில் பவானி சாகர் மற்றும் மணிமுத்தாறு ஆகிய இரு இடங்களில் இரு 10 ஹெக். பரப்பில் தேசிய மீன்விதைப் பண்ணைகள் திட்டத்தின் கீழ் இரண்டு மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைகள் அமைக்க இந்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. பவானிசாகர் மீன்குஞ்சு உற்பத்தி பண்ணையில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கி சீர்படுத்தி உபயோகத்துக்குக் கொண்டுவர எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மணிமுத்தாரில் உள்ள மற்றொரு பண்ணையில் கட்டுமானப் பணி முன்னேறி வருகிறது. இவ்விரு தேசிய மீன்விதைப் பண்ணைகளைக் கட்டி முடிப்பதன் வாயிலாகவும், தற்போதுள்ள இதர மீன்குஞ்சு உற்பத்தி பண்ணைகளின் செயல்திறன் அதிகரிப்பதன் மூலமும் மீன்குஞ்சு உற்பத்தியின் அளவை ஆண்டுக்கு 100 மில்லியன் அளவிற்கு உயர்த்தலாம் என கருதப்படுகிறது. எஞ்சிய தேவையான 70 மில்லியன் மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்ய ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் நிதி உதவியுடன் கூடிய ஒருங்கிணைந்த திட்டமொன்றை கூட்டுறவில் செயல்படுத்தி அதன் மூலம் 20 மில்லியன் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 50 மில்லியன் மீன்குஞ்சுகள் தனியார் வாயிலாக உற்பத்தி செய்யப்படும்.

5.2. <u>மீன்குஞ்சு உற்பத்திக்கென தனியார் துறைக்கு உதவியளித்தல்:</u> மாநிலத்தின் மீன்குஞ்சு தேவையை நிறைவு செய்ய அரசு 1991–92-ல் ரூ. 3.57 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இத்தொகை குறைந்த செலவிலான தொழில்நுட்ப வசதியுடன் 10 இலட்சம் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யும் 15 தனியார் துறை மீன்குஞ்சுப் பண்ணை உரிமையாளர்களுக்கு மூலதன செலவில் 25 சதவீதம் மானியமாக அளிக்கப்படும். இவ்வகை மீன்குஞ்சுப் பண்ணைகள் ஒன்று அமைத்திடத் தேவையான மூலதனம் ரூ.1.80 இலட்சம் ஆகும். 1991–92-க்கு இதற்கான விண்ணப்பங்கள் விளம்பரம் மூலம் வரவேற்கப்பட்டு 41 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தேர்வு செய்யப்பட்டவர்கள் தற்பொழுது பணியாளர் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சியின் பின்னர் வங்கிக் கடன் மூலம் மீன் குஞ்சு பண்ணைகள் அமைப்பர். இவர்களுக்கு மானியமும் உண்டு.

5.3. <u>இருக்கும் மீன்குஞ்சு பண்ணைகளை திருத்துதல் மற்றும் மேம்படுத்துதல்:</u> தரமான மீன்குஞ்சு உறபத்தி அதிகரிக்க கூடுதலான வளர்ப்பிடம் தேவை. ஆண்டுதோறும் கட்டுமானப் பணிக்கான செலவு கூடிக் கொண்டே போகிறது. தமிழ்நாட்டில் தற்போதுள்ள கீழ்வரும் மீன்குஞ்சுப் பண்ணைகளை செப்பனிட்டு, மேம்படுத்தி மீன்குஞ்சு உற்பத்தியைப் பெருக்க வேண்டியுள்ளது.—

1. பூண்டி
2. லால்பேட்டை
3. மேட்டூர் அணை
4. கிருஷ்ணகிரி
5. மஞ்சளாறு
6. சாத்தியாறு.



1992 93-ஆம் ஆண்டு திட்டத்தில் இதற்காக ரூ. 25.00 இலட்சம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக மீன்குஞ்சுகளின் உற்பத்தி பெருகும்.

5.4. <u>நன்னீர் இறால் பொரிப்பகம்:</u> நன்னீர் இறால் வளர்ப்போரின் தேவையை நிறைவு செய்யவும், நன்னீர் இறால் உற்பத்தியினை அதிகரிக்கவும், தனியாரால் நன்னீர் இறால் பொரிப்பகங்கள் அமைக்க உதவி அதன் மூலம் கூடுதலான தரமான இறால் குஞ்சுகளை உற்பத்தி செய்வது இதன் முக்கிய குறிக்கோளாகும். 10 மில்லியன் இறால் குஞ்சுகள் உற்பத்தி செய்யும் திறனுடைய இறால் பொரிப்பகம் ஒன்றினை நிறுவ ரூ. 10 இலட்சம் தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இவை தனியார்களால் அமைக்கப்படும். மூலதனம் மற்றும் நடைமுறை செலவில் 25 சதவீதம் அதிகபட்சமாக ஒரு பொரிப்பகத்திற்கு ரூ. 2.50 இலட்சத்துக்கு உட்படுத்தி மானியம் வழங்கப்படும். எனவே ரூ. 2.50 இலட்சம் மானியத்துக்கென 1992–93 ஆம் ஆண்டு திட்டத்தில் கோரப்படுகிறது.

5.5. <u>நீர்த்தேக்க மீன்வளம்:</u> தமிழ்நாட்டிலுள்ள 54 நீர்த்தேக்கங்களிலும், விரைவில் வளரும் தரமான மீன்குஞ்சுகளை இருப்பு செய்து, அவற்றை பாதுகாத்து மீன்வளத்தைப் பெருக்கி, உரிய நேரத்தில் மீன்பிடிப்பு செய்வதே நீர்த்தேக்க மீன்வளத் திட்டத்தின் நோக்கமாகும். தற்போது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நீர்த்தேக்கங்களிலிருந்தும் ஆண்டொன்றுக்கு 1,500 டன் மீன்கள் உற்பத்தி செய்யப்படுகிற்து.

5.6. <u>தீவிர உள்நாட்டு மீன்வளர்ப்பும் விற்பனைத் திட்டமும்:</u> தென்னாற்காடு மாவட்டத்தில், 22,000 ஹெக்டேர் மற்றும் மதுரை மாவட்டத்தில் 10,000 ஹெக்டேர் நீர் பரப்பில் அதிக அளவில் மீன் குஞ்சுகளை இருப்பு செய்து அப்பகுதியில் உள்ள மீனவர் கூட்டுறவு சங்கங்களின் உதவியுடன் மீன்களை வளர்த்து அவ்விதம் வளர்த்த மீன்களைப் பிடித்து, 50 சதவிகிதம் பங்கு விதத்தில் பங்கீடு செய்துகொள்ள இந்திட்டம் வழிவகுக்கின்றது. 1991–92-ல் 18.52 இலட்சம் மீன்குஞ்சுகளை இருப்பு செய்து, 72.01 டன் மீன்கள் பிடிக்கப்பட்டன. அதில் 36.007 டன் மீன்கள் மீனவர்கள் பங்காக அளிக்கப்பட்டது. விரைவில் வளர்க்கூடிய அதிகமான மீன்குஞ்சுகளை இந்நீர்நிலைகளில் இருப்பு செய்வது என்பதை வலியுறுத்தி இத்திட்டம் தொடரப்படும்.

5.7. <u>மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் :</u> பின்வரும் முக்கிய குறிகோள்களுடன் 13 மாவட்டங்களில் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் அமைக்கப்பட்டுள்ளன:

(1) தற்போதுள்ள மீன்வளர்ப்போர் மற்றும் சிறு குளங்களின் உரிமையாளரை நவீன மீன்வளர்ப்பு முறைகளை கையாள ஊக்குவிப்பது, மீன்வளர்ப்பில் தேர்ந்து ஒரு புதிய

வகுப்பினரை உருவாக்குதல், மீன்வளர்ப்பில் ஆர்வமுள்ள வேலையில்லாத இளைஞர்களுக்கு பயனுள்ள— இலாபமான தொழிலை ஏற்படுத்தித் தருதல்.

(2) இருக்கும் குளங்களில் மீன் உற்பத்தியை தீவிரப் படுத்துதல், ஊராட்சி மன்றம், வருவாய்த்துறை, பொதுப் பணித் துறை, கோவில் நிர்வாகம் ஆகியவற்றுக்கு சொந்தமான கைவிடப்பட்ட நீர்நிலைகள், தூர்ந்துபோன குளங்கள், நீர் சூழ்ந்த பரப்புகள் மற்றும் கிராமிய சிறு குளங்கள் முதலான வற்றை உரியவர்களிடமிருந்து குத்தகைக்குப் பெற்று, சீர் செய்து தீவிர மீன்வளர்ப்புக்கு கொணர்தல்.

(3) மேற்கூறிய காரியத்துக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு மீன்வளர்ப்பில் பயிற்சியளித்தல், குளம் வெட்டவும், சீர்திருத்தவும் மற்றும் இடுபொருட்களுக்கான குறுகிய கால மூலதன கடன் பெற ஏற்பாடு செய்தல், மீன்குஞ்சு விநியோகம், மீன்வளர்ப்பு தொழில் நுட்பம் ஆகிய உதவிகளைச் செய்தல்.

(4) மீன்வளர்ப்பை, இன்னும் போதிய விரிவாக்கம் செய்து, அனைத்துத் தரப்பினரும் வாய்ப்புள்ள இடங்களில் மேற்கொள்ள அதற்கான விருப்பத்தினைத் தூண்டி அதன் மூலம் கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருதல்.

(5) மீன்வளர்ப்போர் மிக உயர்ந்த வருவாயை ஈட்ட மீன்விற்பனை சங்கங்களை அமைத்துக் கொடுத்தல் ஆகியவை முகமைகளின் எண்ணமாகும்.

இம் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் மாவட்ட ஆட்சியர்களின் தலைமையில் இயங்கி வருகின்றன. இந்த திட்டத்தில் பஞ்சாயத்து மற்றும் பிற துறைகளிடமுள்ள குளங் களை நீண்ட கால குத்தகையின் அடிப்படையில் எடுத்து மீன் வளர்ப்போருக்கு தரப்படுகின்றது. இதற்காக தேர்ந் தெடுக்கப்பட்ட மீன்வளர்ப்போருக்கு கூட்டு மீன்வளர்ப்பில் பயிற்சி அளிக்கப்படுகிறது. குளம் சீரமைக்கவும், இடுபொருள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மீன்குஞ்சுகள் வாங்கவும் கடன் மற்றும் மானிய வடிவில் நிதி உதவி அளிக்கப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ் 1991–92 முடிய 4,760.74 ஹெக்டேர் பரப் புள்ள குளங்களை 5,200 மீன்வளர்ப்போருக்கு வழங்கப்பட் டுள்ளது. இதில் ஆதி திராவிடர்கள் 1,227 பேரும், மலை வாழ் மக்கள் 23 பேரும் அடங்குவர். உள்நாட்டு மீன்வளர்ப்பு தொழில் நுணுக்கத்தில் 5,731 மீன்வளர்ப்போர்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர். 1991–92-ல் 31—12—1991 முடிய சராசரியாக ஒரு ஹெக்டேருக்கு 1,150 கிலோ மீன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.



5.8. முன்னோடி திட்டமாக கழிவுநீர் மீன் பண்ணை அமைத்தல் : 100 சதவிகிதம் நிதி உதவியில் உபயோகமில் லாத (கைவிடப்பட்ட) நீர் நிலைகளில் மேம்பாடு மற்றும் பயன்பாடு திட்டத்தில் 1991–92-ல் ரூ. 5.00 இலட்சம் மூல தனத்தில் ஐந்து ஹெக்டேர் நீர்பரப்பில் ஒரு முன்னோடி திட்ட கழிவுநீர் மீன்பண்ணை அமைக்க இந்திய அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இந்த முன்னோடி திட்டத்தில் வருடத்திற்கு ஒரு ஹெக்டேருக்கு மீன் உற்பத்தி அளவு சராசரியாக 6 000 கிலோ இருக்கும் என்று கருதப்படுகிறது. கோயம்பேடு என்ற இடத்தில் ஐந்து ஹெக்டேரில் 10 குட்டை கள் கொண்டதாக இந்த கழிவு நீர் மீன் பண்ணை அமைக்கப் படும். இத்திட்டத்தை நிறைவேற்று முகமாக ரூ. 5.00 இலட் சத்துக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

6 கடல் மீன் வளம்:—

6.1. 20 சத விகிதம் மானியத் திட்டம் :—தற்போது தமிழ் நாட்டில் 8,107 விசைப்படகு மற்றும் இயந்திரப் பொருத்தப்பட்ட மீன்பிடிகலன்களைக் கொண்டு பிடிக்கப்படும் கடல் மீன் அளவு சுமார் 52 சத விகிதம் ஆகும். சில ஆண்டு களாக படகு கட்டுமானப் பொருட்களின் விலையேற்றம், கூலி உயர்வு, மற்றும் அரசுக் கடன்களைத் திரும்பப்பெற இயலாமை ஆகியவற்றினால், அரசு புதிய திட்டம் வகுத்து 20 சதவிகிதம் மானியம், படகு வாங்கும் மீனவர்களுக்கு வழங்க ஆணை பிறப்பித்துள்ளது. நலன்களுக்கான இந்த நிதி உதவி அரசின் மானியம் 20 சதவிகிதம் பயன்பெருவோரின் பங்கு 20 சத விகிதம் மீதி 60 சதவீதம் வங்கியின் கடனாகவும் கிடைக்க வழி வகுக்கப்பட்டுள்ளது. 1991–92 ஆம் ஆண்டுவரை அரசின் 20 சதவிகிதம் மானியத் திட்டத்தின் மூலம் 105 சிறிய மற்றும் மரத்தி லான படகுகள், 9 பெரிய மரத்திலான படகுகள், 28 பெரிய மரைன் பிளைவுட் படகுகள், 570 கட்டுமரங்கள், 10 வள்ளங்கள் வாங்குவதற்கு மானியமாக ரூ. 102.23 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இது வரை 88 மரத்திலான படகுகள், 8 பெரிய அளவிலான படகுகள், மற்றும் 342 கட்டுமரங்களுக்கு மானியம் அளிக்கப்பட்டுள்ளது.

6.2. பாரம்பரிய மீன்பிடிகலன்களுக்கு இயந்திரம் பொருத்துதல் : பாரம்பரிய மீன்பிடி கலன்களின் மூலம் மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு உதவும் மற்றுமொரு திட்டம் யாதெனில், அவர்களில் மீன்பிடி கலங்களுக்கு உள்ளே (அ) வெளியே பொருத்தும் இயந்திரங்கள் வாங்க உதவி அளித்தல் ஆகும். வெளிப் பொருத்தும் மற்றும் உட்பொருத்தும் இயந் திரம் ஒவ்வொன்றிற்கும் 50 சதவிகிதம் மானியமாக ரூ. 7,500 க்கு மேற்படாமல் வழங்கும் இத்திட்டத்திற்கான செலவில் 1987–88லிருந்து மத்திய அரசு சம பங்கு ஏற்கிறது. இதுவரை 1963 இயந்திரங்களுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. இம்

மானியத்தினை ரூ. 7,500 லிருந்து ரூ. 10,000 ஆக உயர்த்திட அரசு உத்தேசித்துள்ளது. 1991–92-ல் பாரம்பரிய தோணிகளுக்கு வெளிப் பொருத்தும் உட்பொருத்தும் இயந்திரங்களுக்காக ரூ. 50.00 இலட்சம் அனுமதியளித்துள்ளது.

6.3. மீன்பிடித்துறை முகங்களும், மீன் இறங்கு துறைகளும்: மீனவர்களின் மற்றும் மீன்பிடி தொழிலின் நன்மைக்காக மாநிலத்தில் 10 இடங்களில் மீன்பிடித்துறைமுகங்கள், மீன் இறங்கு துறைகள், நாவாய்க் குறடுகள் முதலிய உள்ளமைப்பு வசதிகள் ரூ. 1,637.71 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த மீன்பிடித்துறைமுகங்களும், மீன் இறக்கு துறைகளும் 1,279 விசைப்படகுகள் மற்றும் 60 நாவாய்கள் தங்குவதற்கும், மீனைக் கரையிறக்கவும் வசதியளிக்கின்றன. இம்மாதிரி வசதிகள் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்னமுட்டத்தில் ஏற்படுத்தப்படவிருக்கின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கோட்டைப் பட்டிணத்தில் ஒரு மீன் படகுதுறை ரூ. 48.00 இலட்சம் செலவில் சென்னைத்துறைமுகப்பொறுப்பு அலுவலரால் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

6.4. தூத்துக்குடிமீன் பிடி துறைமுகத்தில் சில மேம்பாட்டுப்பணிகள் : தூத்துக்குடியில் ரூ. 2.02 கோடி செலவில் ஒரு பெரிய மீன்பிடி துறைமுகம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதில் 400 இயந்திர படகுகள் மற்றும் பத்து நாவாய்கள் தங்க வசதியுள்ளது. இந்த வளாகத்தில் சுற்றுச்சுவர் , தடுப்புச்சுவர், பாதைகள், படகு பழுதுபார்க்கும் கூடம், மீன் ஏலமிடும் கூடம், மீன் கூடைக்ளில் அடைக்கும் இடம், தண்ணீர் சுகாதார கழிவறைகள், மின்சாரம், வலை செப்பனிடும் கூடம், பனிக்கட்டி, உற்பத்தி நிலையம், மீன்வைக்கும் குளிரறைகள் கருவாடு இருப்பு கூடம் முதலிய உள்ளமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படுகிறது. அந்த இடத்தில் உள்ள மீனவர்கள், இவ்வளாக வசதிகளை பயன்படுத்தி நன்மை அடைகிறார்கள். மேற்படி துறை முகத்தால் பயனடையும் மீனவர்கள் தத்தமது பல்வேறு கூட்டுறவு சங்கங்கள் சம்மேளனங்கள் மற்றும் பிற அமைப்புகள் வாயிலாக, அடிப்படை தேவையான தண்ணீர் துறைமுகத்திலிருந்து மீன்களை ஏற்றிச் செல்லத்தகுந்த சாலை வசதி ஏற்படுத்தித்தர அடிக்கடி முறையிட்டுள்ளனர். ஆதலின் 1992–93-ஆம் ஆண்டு திட்டத்தில் ரூ. 15.00 இலட்சம் செலவில் தூத்துக்குடி துறைமுகத்தில். பின்வரும் பணிகளை செய்து முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



| | (ரூபாய் இலட்சம்) |
|---|---|
| மீன் இறங்கு துறையில் ஏறபட்டுள்ள பழுதுகளை நீக்குதல். | 4.90 |
| பாதைக்கு தார் போடுதல் | 3.70 |
| தண்ணீர் வசதி ஏறபடுத்துதல் | 6.40 |
| மொத்தம் | 15.00 |

6.5. கரையோர வசதிகள் : மீன் ஏலம் விடும் மற்றும் மீன் அடைக்கும் கூடம், வலை செப்பனிடும் கொட்டகை, சமுதாயக் கூடங்கள், பனிக்கட்டி நிலையங்கள், பணிமனைகள், அணுகு சாலைகள், சுற்று சுவர்கள், தண்ணீர், மின்சாரம் போன்ற கரையோர வசதிகள் அவ்வப்போது பல கட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய வசதிகள் பழையாறு வாலிநோக்கம், தொண்டி, முட்டம், ஏர்வாடி, ஆகிய இடங்களில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இம்மாதிரியான வசதிகளை, அனைத்து முக்கியமான மீன்கரையிறங்கும் மையங்களிலும் செய்து தர இயலவில்லை. இது போன்ற வசதிகளை தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பூம்புகார், மறறும் வெள்ளப்பள்ளம், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வள்ளவிளை, மற்றும் கோடிமுனை ஆகிய இடங்களில் ஏற்படுத்துவதற்கான திருத்திய கருத்துருவை விரைவில் இந்திய அரசின் பரிசீலனைக்காக அனுப்பிவைக்கப்படும்.

6.6. காணாமல் போகும்படகுகளைத் தேடி மீட்க(NODAL POINTS) ரேடியோ தொலைப்பேசி நிலையங்கள் அமைத்தல் : '' காணாமல் போகும் மீன்பிடி படகுகள் மற்றும் மீனவர்கள் பற்றி மிகக் குறைந்த தகவலே கிடைப்பதால் கடற்படை உடனடியாக நடவடிக்கை எடுத்து, தேடும் பணியில் ஈடுபடும் கப்பல்கள், விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்களுக்கு தேவைப்படும் உதவிகளை வழங்கினாலும், மீட்பு பணியில் பெரும் இடர்பாடுகள் ஏற்படுகின்றன என்று கிழக்கு கடற்படைப்பிரிவு தலைவர் தெரிவித்துள்ளார்.

இம்மீட்பு பணியில் ஏற்படும் வீண் காலதாமதத்தைத் தவிர்த்து ஓர்செய்யுமுகமாக தமிழ்நாட்டிலுள்ள எல்லா கடலோர மாவட்டங்களிலும் ஒவ்வொரு '' தொடர்பு முனைகள் '' (Nodal Points) ஏற்படுத்த வேண்டும் என கடற்படை பிரிவு தலைவர் பரிந்துரை செய்துள்ளார். முதன்முதலாக இத்தகைய தொடர்பு முனைகளை அமைத்திட தற்போது மீட்பு படகுகள் நிறுத்தப்பட்டுள்ள சென்னை இராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மூன்று இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதற்கென, ரேடியோ தொலைப்பேசிகள் வாங்கவும், சுங்கவரி, மற்றும் நிர்மாண செலவுகளுக்காகவும் ரூ. 2.22 இலட்சம் 1992–93-ஆம் ஆண்டு திட்டத்தில் கோரப்பட்டுள்ளது.

**6.7. மீனவர் பயிற்சி நிலையங்கள் :** நம்மிடமுள்ள மனித ஆற்றலை விசைப்படகினை நடத்துவதற்கும் அதனைப் பராமரிப்பதற்கும் மற்றும் நவீன மீன்பிடி கருவிகளை இயக்குவதற்கும் வசதி செய்யும் வகையில் தமிழ்நாட்டில் 6 இடங்களில் மீனவர் பயிற்சி நிலையங்களை மீன்துறை நிறுவியுள்ளது. ஒவ்வொரு மீனவர் பயிற்சி நிலையமும் மீனவர் சமூகத்தைச் சேர்ந்த 50 முதல் 60 வரையிலான மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப் போதுமான வசதியைக் கொண்டுள்ளது. இத்துடன் சிறுதரக் கம்மியர் பயிற்சியும் மூன்று மீனவர் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படுகிறது. இம்மீனவர் பயிற்சி நிலையங்களில் மீன்பிடிக் கலன்களில் பயிற்சி பெற்றவர்கள், கடலோர காவற்படை துறைமுகக் கழகம், மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் கடற்படை ஆகிய பிரிவுகளில் அமர்த்தப்படுகிறார்கள்.

மீனவர் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுபவர்களுக்கான உதவித்தொகை மாதமொன்றுக்கு ரூ. 100 ஆகவும் கடல் தினப்படி 75 பைசாவாகவும் வழங்கப்படும்.

**6.8 கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறை சட்டம் :** தமிழ்நாடு கடல் மீன்வள சீரமைப்புச்சட்டம் 1983 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 6ஆம் நாள் அமுலுக்கு வந்தது. இச்சட்டத்தின் கீழ், படகுகளைப் பதிவு செய்தல், மீன்பிடிப்பை ஒழுங்குபடுத்துதல், தமிழக கடலோரப் பகுதிகளில் விசைப்படகுகள் மீன்பிடிப்பதைத் தடுத்தல் போன்றவை செயல்படுத்தப்படுகின்றன. மீன்துறையின் அதிகாரம் பெற்ற அலுவலர்களால் இச்சட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

**6.9 புதிய திட்டங்கள் : நடுத்தர. படகுகளை அறிமுகப் படுத்துதல்**—நடுத்தர மீன்பிடிக் கலன்களை அறிமுகப்படுத்தும், ஒரு புதிய திட்டத்தை செயலாக்க மத்திய அரசு உத்தேசித்துள்ளது. தூர கடற்பகுதியில் உள்ள கடற் மேற்பரப்பில் வாழும் மீன்களைப் பிடிப்பதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். நாட்டு எல்லையைச் சார்ந்த கடற்பகுதிக்கு அப்பால் கன்னிவலை மற்றும் ஆயிரங்கால் தூண்டில்களின் மூலம் மீன்பிடிக்க இத்தகைய கலன்கள் உபயோகப்படுத்தப்படும். இவை 12 முதல் 15 மீட்டர் நீளம் உள்ளதாக இருக்கும். இதன் விலை ரூ. 9.00 முதல் 10.00 இலட்சம் மதிப்புள்ளதாக இருக்கும். இந்த கலனை வாங்க 25 விழுக்காடு மானியம், மிக உயர்ந்த அளவாக ரூ. 1.60 இலட்சம் (மத்திய அரசின் பங்கு ரூ. 1.20 இலட்சம் மற்றும் மாநில அரசின் பங்கு ரூ. 0.40 இலட்சம்) வரை வழங்கப்படும். மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டதும் தமிழ்நாட்டில் 1992-93-ல் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

**6.10 கண்ணாடி இழைப் படகுகள் :** தூரக் கடலில் மேற்பகுதியில் வாழும் மீன்களைப் பிடிக்க கண்ணாடி இழைப் படகுகளை அறிமுகப்படுத்தும் மற்றொரு திட்டத்தையும் மத்திய அரசு செயல்படுத்த உத்தேசித்துள்ளது. இவ்வகை படகு ஒன்றின் (அதாவது 10 மீட்டர் நீளமுள்ள எஃப். ஆர்.



எல். 15 வடிவமைப்பு) விலை. ரூ. 4 முதல் 5 இலட்சம் கொண்ட
தாக இருக்கும். இந்த விலையில் 25 விழுக்காடு மிக உயர்ந்த
அளவாக ரூ. 1.60 இலட்சம் (மத்திய அரசின் பங்கு ரூ. 1.20
இலட்சம் மற்றும் மாநில அரசின் பங்கு ரூ. 0.40 இலட்சம்)
வரை மானியமாக வழங்கப்படும். இந்தவகை படகை வாங்க
மீதித்தொகையை வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.
மத்திய அரசின் உத்திரவு பெறப்பட்டதும் 1992-93-ல் தமிழ்
நாடில் மீனவர் கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த மீனவர்
குழுக்களுக்கு மொத்தம் ரூ. 16.00 இலட்சம் மானியத் தொகை
யில் 10 கண்ணாடி இழைப் படகுகள் வழங்கப்படும்.

**7. கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு :**

இம்மாநில மீன்துறையானது இந்திய அரசு நிறுவனங்
களுடன் கலந்தாலோசித்து உவர்நீர்ப்பரப்புகளில் இறால்
மற்றும் மீன்வளர்ப்பின் தொழில் நுட்பத்தை அபிவிருத்தி
செய்துள்ளது. சுமார் 16,000 ஹெக்டேர் உவர்நீர் பரப்பு
இறால் மற்றும் மீன்வளர்ப்புக்கு ஏற்றதாக கண்டறியப்
பட்டுள்ளது. இதுநாள்வரை அரசு மற்றும் தனியார் நிறுவனங்
கள் 400 ஹெக்டேர் உவர்நீர் பரப்பினை வளர்ப்புக்காக எடுத்
துக் கொண்டுள்ளது. மீனவர்களிடையே இந்த தொழில்
நுட்பத்தை விளக்கி அவர்களுக்கு நவீன முறை உவர்நீர்
இறால் வளர்ப்பில் ஆர்வம் ஏற்படுத்தி, இறால் வளர்ப்பில்
ஈடுபடுத்தும் நோக்குடன் தமிழ்நாட்டில் நான்கு கடலோர
மாவட்டங்களில் 9 விளக்க பண்ணைகளை இத்துறை
நிறுவியுள்ளது. இந்தப் பண்ணைகள் ஒவ்வொன்றும்
1 முதல் 2 ஹெக்டேர் பரப்பு கொண்டவை. மீன்வளத்
துறை சிதம்பரத்திற்கு அருகில் உள்ள கிள்ளையில் கடல்
ஏற்றத்தின் மூலம் உவர்நீர் பாயும் உவர்நீர் பண்ணை
ஒன்றினையும் 5 ஹெக்டேர் பரப்பில் 1986-ல் அமைத்துள்ளது.

7.2 இறால் வளர்ப்பில் விரைவான முன்னேற்றம் ஏற்படுத்த
தமிழக அரசு இறால் வளர்ப்புக்காக அரசு நிலங்களை குத்தகை
அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய ஆணை வழங்கியது. இந்த
ஆணை வழங்குகையில் அரசு நிலங்களை ஒதுக்கீடு விண்ணப்
பங்களை தெரிவு செய்ய ஒரு உயர்மட்டக் குழுவையும் நியமித்
தது. இறுதி ஒதுக்கீடு ஆணைகள் சுற்றுப்புறச் சூழல் துறை
மற்றும் மாசு கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து ஒப்புதல் பெற்று
1,231 ஹெக்டேர் நிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

7.3 பெரிய நிறுவனங்களை இறால் பண்ணையை
அமைக்க மீன்வளத்துறை ஊக்குவிப்பதன் பயனாக முன்னணி
நிறுவனங்கள் இறால் பண்ணைகளை ஏற்படுத்த துவங்கி
விட்டன. அவற்றுள் சில, இதற்கான தொழில் நுட்பத்தை
கொடுத்து உதவவும், வளர்த்து எடுத்த இறால்களை வாங்கிக்
கொள்ளவும் இணங்கியுள்ளன.

7.4 செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மர்வட்டத்தில் தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழக உதவியுடன் ரூ. 1.63 கோடி மதிப்பீட்டில் இறால் வளர்ப்போர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் அமைப்பதற்காக ஒரு திட்டத்தை அரசு தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்துக்கு அனுப்பியது. இந்த கழகத்தின் மதிப்பீட்டுக்குழு டில்லியிலிருந்து வந்து இறால் பண்ணைகள் அமைக்கப்படவிருக்கும் இடங்களைப் பார்த்துவிட்டு சென்றுள்ளது. இந்த குழு சில மாற்றங்களை செய்யுமாறு ஆலோசனை வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் ரூ. 4.95 கோடி மதிப்பீட்டில் இறால் வளர்ப்போர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தை அமைக்க திருத்திய கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் அரசின் தீவிர கவனிப்பில் உள்ளது.

7.5 உவர்நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் அமைத்தல்—தென் ஆற்காடு, தஞ்சாவூர் மறறும வ.உ. சிதம்பரனார் ஆகிய மூன்று மாவட்டங்களில் உவாநீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் ஏற்படுத்தப்பட்டு சங்கங்களின் பதிவு சட்டப்படி பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு முகமையும் ஒரு ஹெக்டேர் மற்றும் 5 ஹெக்டேர் பரப்பினைக் கொண்டதாக 50 ஹெக்டேர் உவர்நீர் பரப்பினை அபிவிருத்தி செய்யும் ஒவ்வொரு உவர்நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையும், ஒரு ஆட்சிக் குழுவினால் நிர்வகிக்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் அவ்வாட்சிக் குழுவிற்குத் தலைவராக இருப்பார். உவர்நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை கீழ்க்கண்ட பணிகளுக்கு அதாவது, தகுதியான உவர்நீர்ப் பரப்பு மறறும் பயனடைவோரை தேர்ந்தெடுத்தல், பயனடைவோருக்காக வங்கித் திட்டத்தைத் தயாரித்தல், அவர்களிடமிருந்து கடன் விண்ணப்பங்களைப் பெற்று வங்கிகளிடமிருந்து கடன் பெற்றுத் தருதல், இறால் குஞ்சு தீவனம், நீர்ப். பராமரிப்பு, தரக்கட்டுப்பாடு முதலிய தொழில் நுட்பங்களில் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தல், அரசு மானியத்துக்கு ஏற்பாடு செய்தல், உற்பத்தியானவற்றை சந்தையில் விற்க விலை விவரங்களை அறிவித்தல் ஆகியவற்றுக்கு பொறுப்பாகும். ஒரு ஹெக்டேருக்கு ரூ. 30,000 மானியமாக ஒவ்வொரு வளர்ப்போரும் பயன் பெறுவர்.

இதுவரையில் 74 பேர் இந்தத் திட்டத்தில் சேர்ந்துள்ளனர். தஞ்சாவூர் மாவட்டத்தில் 7 பேருக்கும், சிதம்பரனார் மாவட்டத்தில் 9 பேருக்கும் திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வங்கியில கடன் பெற அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் புதியதாக உவர்நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை அமைக்க மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போது அரசின் கவனிப்பில் உள்ளது.



7.6 நீர்வாழ் உயிரின வளர்ப்பு தொழிற்மையம்: அரசு (கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்துறை) ஆணை எண். 363, நாள் 7—11—91-ன்படி தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் அமைக்கப்படும் இறால் வளர்ப்பு தொழில் மையத்தின் மூலம் தனியார் துறையினரின் உதவிக்காக ரூ. 25.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது. இறால் வளர்ப்பிற்காக புதிய நடவடிக்கைகளைத் துவங்கும் பொருட்டு மேற்படி ரூ. 25.00 இலட்சத்தையும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திடம் பங்குமூலதனமாக அளிக்கப்பட்டது. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் வ.உ. சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள தருவைக்குளம் என்ற இடத்தை தொழிற்மையம் அமைக்க தகுதி வாய்ந்ததென தேர்ந்தெடுத்துள்ளது. இவ்விடத்தில் துவக்க அளவைப்பணி மேற்கொண்டு அதன் அடிப்படையில் ஒரு திட்ட வடிவுருவம் அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. 89 ஹெக்டேர் நீர்ப்பரப்பில் அமையவிருக்கும் இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 7.2 கோடியாகும். திட்ட துவக்கமான முதல் கட்டத்தில் 56 ஹெக்டேர் நீர்ப்பரப்பில், ரூ. 4.3 கோடி செலவில், செயல்படுத்தப்படும். இது சிப்காட் (SIPCOT) நிறுவும் தொழிற்மையங்கள் போல் அமையும். திட்டத்தின் செலவில் அரசின் பங்குத் தொகையின் அளவு 40-50 விழுக்காடாகவும், மீதித் தொகையை நிதி நிறுவனங்களிலிருந்தும் திரட்டப்படுகின்றன. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் குறைந்த அளவு மூலதன செலவில் 1/3 பங்கையாவது பங்கு தொகையாக தருமாறு அரசை வேண்டியுள்ளது. மீதி தொகையை மீன் வளர்ச்சிக் கழகம் பயனடைவோர், வங்கி மற்றும் பிற நிதி நிறுவனங்களிடமிருந்து திரட்டிக் கொள்ள உத்தேசித்து உள்ளது. மேலும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் 1991-92-ல் ஒரு கோடி ரூபாயை வழங்குமாறும் மீதியை 1992–93-ல் வழங்குமாறும் அரசை கேட்டுக் கொண்டுள்ளது. இந்த வேண்டுகோள் அரசின் கவனிப்பில் உள்ளது.

7.7 இறால் வளர்ப்போருக்கு பயிற்சி அளித்தல்: கடலோரம் இறால் வளர்ப்புக்குத் தகுந்த சொந்த நிலமுடைய தனியாரை இறால் பண்ணை அமைக்குமாறு மீன்துறை ஊக்கப்படுத்தி வருகின்றது. இந்த நோக்கில் கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் திட்டத்தின்கீழ் இறால் வளர்ப்போருக்கு இறால் வளர்ப்பு தொழில்நுட்பத்தில் பயிற்சியளிக்கப்படுகிறார்கள். இறால் வளர்ப்பை மேற்கொள்ள வளர்ப்போரிடையே நிறைய விருப்பம் உள்ளதால், அதில் பயிற்சியளிக்க ஒரு பயிற்சி நிலையம் உடனடி தேவையாகும். எனவே காரங்காடு என்ற இடத்தில் ஒரு பயிற்சி நிலையம் அமைக்க கருதப்படுகிறது. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் பயிற்சி பெற விரும்புபவர்களுக்கு பயிற்சியளிக்க விருப்பம் தெரிவித்துள்ளது. பயிற்சிக்காக இறால் வளர்ப்போர் அனுப்பப்பட இருக்கிறார்கள். உத்தேசிக்கவுள்ள பயிற்சி நிலையத்தில்

பயிற்சிக்கான வசதிகளை ஏற்படுத்த ரூ. 5.00 இலட்சம் செலவு ஆகும். மத்திய அரசின் அறிவுரைப்படி 13—1—92 அன்று திருத்திய விரிவான கருத்துரு ஒன்று தமிழ்நாடு அரசால் அனுப்பப்பட்டுள்ளது. அதில் அரசு காரங்காட்டில் அமைய விருக்கும் பயிற்சி நிலையத்தை உருவாக்க தேவைப்படும் ரூ. 5.00 இலட்சத்தை உதவி தொகையாக (Grant–in–aid) தருமாறு வேண்டியுள்ளது. இந்திய அரசு ரூ. 2.50 இலட்சங்கள் முதல் தவணையாக மேற்கூறிப்பட்டுள்ள திட்டத்திற்கு வழங்கி யுள்ளது.

பயில்வோர் அணி ஒவ்வொன்றிலும் 20 பேர் இருப்பார்கள். பயிற்சி காலம் 2 மாதங்கள். ஒரு வருடத்திற்கு 4 அணி பயிற்சி யாளர்கள் பயிற்றுவிக்கப்படுவார்கள். பயிற்சியாளர்களுக்கு பயணப்படி, உதவித்தொகை முதலியவற்றுக்காக ரூ. 1.32 இலட்சம் தேவைப்படும். இந்த செலவுத் தொகை மத்திய மாநில அரசுகளுக்கிடையே சமபங்காக ஏற்றுக்கொள்ளப்படும். இது அரசின் கவனத்தில் உள்ளது.

8. மீனவர் நல்வாழ்வு திட்டங்கள் :

8.1. மீனவர்களுக்கு இலவச வீடு வழங்கும் திட்டம்:—1975—76 ஆம் ஆண்டில் தமிழக அரசு, மீனவர்களின் துயர் துடைக்க அவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தது. அப்போது 48,214 மீனவக் குடும்பங்கள் குடிசைகளில் வசித்து வந்ததாக கணக்கீடு செய்யப்பட்டது. இந்த மீனவர்களுக்கு வீடுகளை நல்ல முறையில் கட்டிக்கொடுக்க 1990—91 வரை 17,893 வீடுகளுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது இதில் 13,862 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மேலும் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள திருச்சினாங் குப்பத்தில் 492 தொகுப்பு வீடுகளைக் கட்ட ரூ. 1.53 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. ஒப்பந்தக்காரர் முடிவு செய்யப்பட்டதும் இத்துறையின் பொறியியல் பிரிவில் வீடு கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

1991—92-ல் ரூ. 3.57 கோடி மதிப்பீட்டு செலவில் 2,100 வீடுகள் மீனவர்களுக்காக கட்ட ஆணையிடப்பட்டுள்ளது.

8.2. தேசிய நல்வாழ்வு நிதித் திட்டம்: மத்திய அரசு மாநிலத்திலுள்ள மீனவ கிராமங்களின் முன்னேற்றத்துக்காக இந்த திட்டத்தை அறிவித்தது. இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசு கடலோர மாநிலங்களிலுள்ள சில கிராமங்களைத் தேர்ந்தெடுத்து, அங்குள்ள மீனவர்களுக்கு வீடுகள் சமுதாயக்கூடம், குடிநீர் வசதி, கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சிக்காக ஆதார நிதி போன்றவற்றை வழங்க இந்த நிதியிலிருந்து 50 விழுக்காடுத் தொகையை மானியமாக வழங்குகிறது. இதுவரை 10 மீனவ கிராமங்கள் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளன.



1991—92 ஆம் ஆண்டில் தமிழகத்திலுள்ள மேலும் 10 கிராமங்களை ரூ. 175.14 இலட்சம் செலவில் மாதிரி கிராமங்களாக உருவாக்க இந்திய அரசு நிர்வாக ஒப்புதலை வழங்கியுள்ளது. அதற்கான ஆரம்ப கொடையாக ரூ. 37,53,725-க்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

8.3. மீனவர் விபத்து காப்புறுதித் திட்டம் : இந்த திட்டம் 1983-ல் துவங்கப்பட்டது. தமிழ்நாட்டில் கடல் மற்றும் உள் நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள அனைவரும் ஆண்டுதோறும் இத்திட்டத்தில் காப்புறுதி செய்யப் படுகின்றனர் ஒவ்வொரு மீனவருக்கும் ரூ.9 விதம் ஆண்டு காப்புறுதி பிரிமிய தொகையாக புதுடில்லியிலுள்ள தேசிய மீனவர் கூட்டுறவு சம்மேளனத்துக்கு ஆண்டுதோறும் செலுத்தப்படுகிறது. இந்த தொகையைக்கூட மீனவர்களிடமிருந்து வசூலிக்காமல், மத்திய மாநில அரசுகளால் சமபங்காக பகிர்ந்து செலுத்தப்படுகிறது. விபத்தினால் மரணமடையும் அல்லது முழுமையாக ஊனமுறும் மீனவரின் குடும்பத்திற்கு ரூ. 15,000 காப்புறுதித் தொகையாக வழங்கப்படுகிறது. ஒரு கண், கால் அல்லது கை ஆகியவற்றை விபத்தினரல் இழக்கும் மீனவருக்கு ரூ. 7,500 நிவாரணமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தற்போது 1,66,312 மீனவர்கள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளனர். இதுவரை 973 மீனவ குடும்பங்களுக்கு ரூ. 1,36,15,000 நிவாரணமாக இத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

விபத்தில் மரணமடைந்த மீனவர் குடும்பத்திற்கு வழங்கப் படும் காப்புறுதித் தொகை ரூ. 15,000-ல் இருந்து ரூ. 21,000 ஆக அரசு உயர்த்தியுள்ளது. விபத்தில் பகுதியாக ஊன மடைந்த மீனவர் குடும்பத்திற்கு வழங்கப்படும் காப்புறுதித் தொகை ரூ. 7,500-ல் இருந்து ரூ. 10,500 ஆக உயர்த்தப்பட் டுள்ளது. இதற்கான ஆண்டு பிரிமியம் ஒவ்வொரு மீனவருக்கு ரூ. 10.84 ஆகும்.

8.4. கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத்திட்டம்: மீன்பிடிப்பு இல்லாத மாதங்களில் அல்லல்படும் மீனவர்களின் துயர்நீக்க அரசு இந்தக்கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினராக உள்ள ஒவ்வொரு மீனவரிடமும் மாதம் ரூபாய் 10 வீதம் ஒன்பது மாதங்களுக்கு வசூலிக்கப்பட்டு அதற்கு இணையாக அரசின் பங்குத் தொகை ரூபாய் 90-ம் சேர்த்து மொத்தம் ரூபாய் 180-ஐ அந்த மீனவருக்கு மீன் பிடிப்பு இல்லாத மாதங்களில் மாதம் ரூபாய் 60 வீதம் திருப்பி தரப்படும். மீனவர் கூட்டுறவு சங்கங்ளின் மூலம் செயல்படுத்தப்படும். இத் திட்டம் மீனவர்களுக்கு ஒரு வரபிரசாதமாக விளங்குகிறது. இத் திட்டத்தின் கீழ் 1991—92-ல் இதுவரை 44,279 மீனவர்கள் சேர்ந்துள்ளார்கள்.

தேசிய நல திட்டத்தின் கீழ் 1991—92ஆம் ஆண்டிலிருந்து மீனவர்களுக்கென சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தினை மத்திய அரசு சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது. மத்திய அரசின் வழிகாட்டி நெறிகளின் படி மீனவர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள கடல் மீனவர்களிடமிருந்து (நாளொன்றுக்கு ரூபாய் 1 ½ வீதம் சேமிப்பு) ஒரு மாதத்திற்கு ரூபாய் 45 வசூலிக்கப்படும். இத்தொகை வருடத்தில் 8 மாதங்களுக்கு வசூலிக்கப்படும் இவ்வாறு வசூல் செய்யப்பட்ட ரூ. 360-க்கு ஈடான தொகை மத்திய மற்றும் மாநில அரசுகளால் அளிக்கப்படும். இந்த மொத்தத் தொகையான ரூபாய் 1080 (360×3) மீன்பிடி காலமில்லாத 4 மாதங்களில், மாதத்திற்கு ரூபாய் 270 வீதம் பயனடைவோருக்கு சரிசமமாக திருப்பி வழங்கப்படும் இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இது 1992-93 முதல் அமுல் செய்யப்படும்.

8.5. மீன்பிடி விசைப்படகுகள் பயன்படுத்தும் டீசல் எரி எண்ணெய் மீதான ஆயத்தீர்வை குறைத்தல் : மத்திய நிதி ஏற்பு திட்டங்களின் கீழ் 20 மீட்டர் நீளத்திற்கும் குறைவாக உள்ள மீன்பிடி விசைப்படகுகள் பயன்படுத்தும் டீசல் எரி.எண்ணெய் மீதான ஆயத்தீர்வை குறைத்திடும் திட்டம் ஒன்றினை மத்திய அரசு அறிமுகப்படுத்தியது. ஒரு லிட்டர் எரியெண்ணெய்க்கு வரி குறைப்பு—35 பைசா ஆகும். 10 டீசல் விற்பனை நிலையங்களை அமைக்கும் முகமாகவும், 20 மீட்டர் நீளத்திற்கும் குறைவாக உள்ள மீன்பிடி விசைப்படகுகளுக்கு விநியோகித்த டீசல் எரியெண்ணெய் மீதான ஆயத்தீர்வையை திரும்பப் பெற்று ஈடு செய்துகொள்ளவும் அரசு ரூ. 20 இலட்சத்துக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதுவரை டீசல் எரிஎண்ணெய் மீதான மத்திய ஆயத்தீர்வையை திரும்பப் பெற்று ஈடு செய்து கொண்டதற்காக ரூ. 2.76 இலட்சம் செலவாகியுள்ளது. 258 படகுகாரர்கள் பயனடைந்துள்ளனர். 7,89,357 லிட்டர் டீசல் விநியோகிக்கப்பட்டது.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையான ரூ. 10.00 இலட்சத்துக்குள்ளேயே மேலும் 10 டீசல் விற்பனை நிலையங்களை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

8.6. இணைப்புச் சாலைகள் :—கடலோர மீனவர் கிராமங்களை அருகாமையிலுள்ள நெடுஞ்சாலைகளுடன் இணைப்பதற்காக மீன்துறை இணைப்புச் சாலைகளை மீனவர் கிராமங்களில் அமைத்து வருகின்றது. இதனால் பிடிபடும் மீன்களை மீனவர்கள் அருகாமையிலுள்ள விற்பனை மையங்களுக்கு விரைவில் எடுத்துச் சென்று விற்பனை செய்திட வசதியாக இருக்கும். இதனை கருத்தில் கொண்டு ரூ. 300.90 இலட்சம் மதிப்பீட்டில் 113 இணைப்புச் சாலைகள் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் 110 இணைப்புச் சாலைகள் இது வரையில் போட்டு முடிக்கப்பட்டுவிட்டன./



9. மீனவர் கூட்டுறவுகள் :

மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மீனவர்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களில் தொடர்ந்து முக்கியப் பங்கு வகிக்கின்றன. கூட்டுறவு இயக்கம் அவர்களை வளர்ச்சிப் பணியில் ஒருமுகப்படுத்த முயல்கிறது. இக்கூட்டுறவுச் சங்கங்கள், மீனவர்களுக்கு கடன் வசதி அளித்தல், மீன்பிடி கருவிகள், தளவாடங்கள் ஆகியவற்றை விநியோகம் செய்தல் ஆகியவைகளோடு அவர்கள் பிடிக்கும் மீன்களை விற்பனை செய்யவும் உதவுகின்றது. அவைகளில் சில இன்றியமையாத பொருட்களை கூட விநியோகம் செய்கின்றன. மீனவர்களின் இறுதியான பொருளாதார மேம்பாட்டிற்கு, கடன் இடுபொருள் வசதி, விற்பனை வசதி ஆகியவை இந்த கூட்டுறவுச் சங்கங்களில் ஒருங்கிணைக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் தற்போது 659 பதிவு பெற்ற மீனவர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. அவற்றில் 1,59,617 மீனவர்/மீனவ மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். ஒரு வருடத்திற்கு ஒரு மீனவர் கூட்டுறவு சங்கத்திற்கு ரூ. 0.25 இலட்சம் வீதம் மொத்தம் ரூ. 5.00 இலட்சங்களுக்கு மேற்படாத தொகையை பங்கு மூலதன உதவியாக அரசு அளிக்கின்றது. வர்த்தக வங்கிகள், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக்கழகம் ஆகிய அமைப்புகளிடம் இருந்து கிடைக்கும் நிதி உதவியை பயன்படுத்திக்கொள்ளும் சக்தியை மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு அதிகரிக்கச் செய்வதுதான் அரசு பங்கு மூலதன உதவி செய்வதன் உள்நோக்கமாகும்.

9.2. மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு புத்துயிர்ச்சி அளித்தல்.—கூட்டுறவு சங்கங்களுக்கு புத்துயிர் அளிப்பதன் மூலம் அவைகளை திறன் மிக்கதாய் மாற்றுவதே அரசின் நோக்கமாகும். 1978—79 ஆம் ஆண்டு முதல் மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு மீன்பிடி விசைப்படகுகள், நாட்டுப்படகுகள், மீன்பிடி சாதனங்கள், மீன்களை எடுத்துச் செல்வதற்கான மோட்டார் வண்டிகள், கிடங்குகள் கட்டுதல் மீன்களை பதனிடுதல், மீன் விற்பனை செய்தல் போன்றவைகளுக்கு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மிகப் பெரிய அளவில் நிதி உதவி செய்து வருகிறது. இதுவரை 98 மீனவர் கூட்டுறவு சங்கங்கள் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ. 468.00 இலட்சங்கள் நிதியுதவி பெற்றுள்ளன.

9.3. ஒருங்கிணைந்த கடல் மீனளத் திட்டம்:—மீனவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும் அவர்களிடையே சிக்கனம் மற்றும் சேமிக்கும் பழக்கத்தை உண்டு பண்ணவும், மீன் உற்பத்தியை பெருக்கவும், பிடிக்கப்படும் மீன்களின் விற்பனைத் தொகைகளில் அதிக அளவில் பங்குபெற்று அவர்களது பொருளாதார வசதியைப் பெருக்குவதற்காகவும், கடலோர [illegible] ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. மாவட்டங்களிலுள்ள மீன்பிடி கிராமங்களில் பல்வேறு வகையான மீன்பிடி கலன்கள், வலைகள், குளிர்பதன பெட்டிகள், வெளிப் பொருத்தும் மற்றும் உட்பொருத்தும் இயந்திரங்கள், கடல் [illegible]டுப்பலகை, கண்ணாடி இழைப்படகுகள் முதலிய

இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும். இத்திட்டம் தமிழ்நாட்டிலுள்ள ஐந்து கடலோர மாவட்டங்களான செங்கற்பட்டு எம்.ஜி.ஆர்., தஞ்சாவூர், இராமநாதபுரம், சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் செயலாக்கப்படும். இத்திட்டம் 34 கிராமங்களிலுள்ள 27 மீனவர் கூட்டுறவு சங்கங்களின் மூலம் செயலாக்கப்படும். இத்திட்டத்தினால் 6050 மீனவர்கள் நேரடியாக பயனடைவார்கள். இது ஒரு ஐந்தாண்டு திட்டமாக 1991—92 முதல் செயலாக்கப்படும். முதலில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் இந்த திட்டத்துக்காக பரிந்துரைத்த செலவுரூ. 1,071.90 இலட்சம். தற்போது இத்திட்ட செலவை ரூ. 1,588.20 இலட்சமாக தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் திருத்தி அமைத்துள்ளது.

இத்திட்டத்தின் மொத்தத் தொகையான ரூபாய் 1,588.20 இலட்சத்தில், ரூபாய் 1,517.11 இலட்சத்தை தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்தால் கடனாகவும், மானியமாகவும் கொடுக்கப்படும். இதில் அரசின் பங்கு நடைமுறை மற்றும் பணியாளர் செலவுகளுக்காக ரூ. 71.09 இலட்சமாகும்.

இந்த திட்டத்தைச் செயலாக்க ஒரு தலைமைச் சம்மேளனத்தை அமைப்பது அவசியமென தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் பரிந்துரைத்துள்ளது. அதன்படி 6–11–1991-ல் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு தமிழ்நாடு தலைமை மீன்துறை கூட்டுறவு சம்மேளனம் பதிவு செய்யப்பட்டது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் இந்ததிட்டத்தை அங்கீகரித்துள்ளது.

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதி நடைமுறைப்படி அது கடனாக வழங்கவிருக்கும் தொகைக்கு இணையான தொகையை மாநில அரசு மாநில சம்மேளனத்துக்கு வழங்கிய பின்னரே, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஆரம்ப வழிமுறை செலவு முன் பணமாக மாநிலத்திற்கான மொத்த கடன் உதவி தொகையில் 25 விழுக்காடு அதாவது ரூ 362.42 இலட்சத்தை செலுத்தும் என்று தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் தனது ஒப்புதல் ஆணையில் குறிப்பிட்டுள்ளது. இது அரசின் தீவிர எண்ணத்தில் உள்ளது.

9.4. மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு பங்குமுதல் உதவியளித்தல் :—இடைத்தரகர்கள் பிடியிலிருந்து ஏழை மீனவர்களை காப்பாற்ற ஏதுவாகவும் மீனவர்கள் பிடித்த மீன்களை அவர்களுக்கு அதிக பயனளிக்கும் விதமும் விற்பனை செய்து கொள்ளவும் மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு 1991–92-ல் இருந்து பங்கு முதல் நிதிவசதி செய்வதற்கென அரசு கொள்கை முடிவு எடுத்து உள்ளது. இடைத்தரகர்கள் பிடியிலிருந்து மீனவர்களை காப்பாற்ற சில நல்ல நிலையில் இயங்கும் சங்கங்களுக்கு மீனவர்களுக்கு மீன்பிடி படகுகள் மற்றும் வலைகள் விநியோகிக்கும் பொருட்டு ரூ. 1.00 லட்சம் பங்கு முதலாக



வழங்கப்படும். பிடித்த மீன்களை விற்பதின் மூலமாக கிடைக்கும் வருவாயிலிருந்து இடைத்தரகர்களுக்கு சேரவேண்டிய கடனை அடைத்து அவர்கள் பிடியிலிருந்து மீளவும் வழிவகை ஏற்படும். இத்திட்டத்திற்கென 1991-92-ம் ஆண்டில் ரூ. 10.00 இலட்சத்திற்கு ஒப்புதல் பத்து மீனவ கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கியுள்ளது.

## 10. மீனவ மகளிர் விரிவாக்கப்பணி :

மீனவ சமுதாயத்தின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கென அச்சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தவும் மீனவ மகளிரையும், மேம்பாட்டில் ஈடுபடச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முதலில் இத்திட்டம் மூன்று மீனவ கிராமங்களில் ஆரம்பிக்கப்பட்டு தங்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தவும், கூடுதல் வருவாயை ஈட்டவும், ஏதுவாக மீனவ மகளிரே, மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்களை நிர்வகிக்க ஊக்குவிக்கப்பட்டனர். மற்ற கரையோர மீனவ மகளிர் இதில் அதிகம் ஆர்வம் காட்டியதால், தற்போது தமிழ்நாட்டில் 63 மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன.

மீனவ மகளிருக்கு மீன் விற்பனை செய்யும் பொருட்டு கடனுதவி செய்து தருதல், கைவினைப் பொருட்கள் செய்வதற்கு பயிற்சி அளித்தல், நியாய விலைக் கடைகள் மூலமாக அத்தியாவசியமான பொருட்களை விற்பனை செய்தல், மருத்துவ வசதி அளித்தல், முதியோர் கல்வி திட்டம், வேலைவாய்ப்பு, பால்வாடிகள் மூலம் குழந்தைகள் நலம் பேணுதல், சமூக நல முகாம்கள் அமைத்து பொதுவாக சிக்கன பழக்கத்தை வளர்த்தல் ஆகியவை மகளிர் கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய பணிகளாகும். இச் சங்கங்களின் சில பணிகள் மீனவ மகளிர் தங்களது வருவாயைப் பெருக்கவும் கல்வித்தரத்தை மேம்படுத்தவும் உதவுகின்றன.

## 11. விரிவாக்கம்—மற்றும் கல்வித் திட்டம் :

மீனவ சமூகத்தின் சமூக பொருளாதார முன்னேற்றத்தில் விரிவாக்கக் கல்வித்திட்டம் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. மீன் பண்ணை அமைத்தல், மற்றும் மீன் வளர்ப்பில் நவீன முறைகளை ஒலி, ஒளி அமைப்பின் மூலம் முற்போக்கு எண்ணமுடைய மீனவர்களுக்கும் மற்றும் தொழில் முனையும் தனியாருக்கும் இத்திட்டத்தின் கீழ் தெரிவிக்கப்படுகிறது. மாநில மற்றும் மாவட்ட அளவில் கருத்தரங்குகள், பொருட்காட்சிகள் விரிவாக்க திட்டத்தின் மூலம் நடத்தப்படுகின்றன. தீவிரப் பிரச்சாரம் மட்டும் தொழில்நுட்ப மாற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கும் அகில இந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சி வாயிலாக மீன்வள தொழில் பற்றி மீனவ சமுதாயத்துக்கும், இதர தொழில் முனைவோருக்கும் நன்மைபயக்க எடுத்துரைக்கப்படுகிறது. மேலும் இந்த விரிவாக்க திட்டத்தில், அரசு

மற்றும் பிற நிறுவனங்கள் மூலம் மீனவர்களுக்கும் அளிக்கப் படும் பல்வேறு உதவிகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து விவரங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

**12. மெரினா கடற்கரையில் ஒரு கடல் அருங்காட்சியகம் அமைத்தல் :**

இந்த கடல் மீன் அருங்காட்சியகத்தில் பல்வகை கடல் வாழ் உயிரினங்களின் வாழ்க்கை முறை காட்சிப் பொருளாக விளக் கப்படும். இந்த அருங்காட்சியகம் (Oceanarium) சின்னஞ் சிறார் மற்றும் பெரியோருக்கு பொழுதுபோக்குச் சாதனமாக விளங்காமல் கடல் மீன்வள ஆய்வு மற்றும் கல்விக்கான மையமாக விளங்கும். சென்னைக்கு வருகைதரும் உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளையும் ஈர்க்கும் இடமாக விளங்கும். சென்னையில் அமைக்கப்படும் இந்த காட்சியகம் மாநகரத்தின் அழகினை அதிகரிப்பதோடு மட்டும் அல்லாமல், பொழுது போக்கு மற்றும் கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையமாகவும் திகழும். தற்போது மெரினாவில் ஒரு மீன் காட்சியகம் உள்ளது. மெரினாவில் கடல் மீன் அருங்காட்சியகம் ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூற்றினை ஆராய்ந்து அறிக்கை தயாரிக்க 1991-92-ல் அரசு ரூபாய் 5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் இதற்கான திட்ட அறிக்கையைத் தயாரித்திட அந்நிய நாட்டு வல்லுனர்களுடன் தொடர்பு கொண்டுள்ளது.

## தமிழ்நாடு மீன்வளர்ச்சிக்கழகம் வரையறுக்கப்பட்டது.

**முன்னுரை :**

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 1974-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது முதல் இக்கழகம் 11—6—1974 அன்று வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் என 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டப்படி பதிவு செய்யப்பட்டது. பிறகு 1—10—1977 அன்று வரையறுக்கப்பட்ட பொது நிறுமமாக பதிவு செய்யப்பட்டது. இதன் பதிவு அலுவலகம் சென்னை-6 ஆயிரம் விளக்கு கிரிம்ஸ் சாலையில் 67 எண். கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இக்கழகத்தின் மூலதனம் ரூ. 500 இலட்சம். செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 292 இலட்சம்.

2. இக்கழகம் தற்போது கீழ்க்காணும் திட்டங்களைச் செயல் படுத்தி வருகிறது.

(1) கிழக்குக் கடற்கரையில் விசாகப்பட்டினத்தை மைய மாகக் கொண்டு, நான்கு ஆழ் கடல் மீன்பிடிப்பு நாவாய்கள் இயக்குதல்.



(2) மீன்பிடிப்பு துறைமுகங்களில் மீனவர்களுக்கு டீசல் விற்பனை செய்தல் ;

(3) சாத்தனூர் பவானிசாகர் ஆழியார், அமராவதி, திருமூர்த்தி நகர், உப்பார், பாலார், பொறந்தலாறு மற்றும் மஞ்சளாறு ஆகிய இடங்களிலுள்ள நீர்த்தேக்கங்களை பரா மரித்தல் மற்றும் தரமான விரைவாக வளரும் மீன்குஞ்சு களை இருப்பு செய்தல் மற்றும் வணிக ரீதியில் மீன்பிடிப்பு நடத்திப் பராமரித்தல்.

(4) நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் தூண்டுதல் முறை இனவிருத்தி மூலம் தரமான மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்தல்.

(5) சென்னை, மண்டபம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் மீன்குஞ்சுகளைப் பதப்படுத்தும் வசதிகளைக் கொண்ட குளிர்பதன நிலையங்கள் மற்றும் பனிக்கட்டி நிலை யங்களைப் பராமரித்தல்.

(6) சில்லறை மீன்விற்பனை நிலையங்களின் மூலம் சென்னை மற்றும் இதர முக்கிய நகரங்களில் தரமான மீனை சுகாதாரமான முறையில் நியாயமான விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்தல்.

(7) இராயபுரத்திலுள்ள மீன்வலை தயாரிப்பு நிலை யத்தை நிர்வகித்தல் மற்றும் மீனவர்களுக்குத் தரமான வலை களை தயாரித்து விற்பனை செய்தல்.

(8) வணிக ரீதியில் இறால் மீன் குஞ்சுகளை நீலங்கரை யில் உற்பத்தி செய்து இறால் வளர்ப்போர்களுக்கு விற்பனை செய்தல்.

(9) ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க அடிப்படையில் வளர்ப்பு முத்து தயாரித்தல்.

**3. கடல் வளம் :**

இறால் மீன்பிடிப்பு :—தமிழ்நாடு மீன்வளர்ச்சிக்கழகம் "தஞ்சை" மற்றும் "நெல்லை" எனும் மெக்ஸிகோ விலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இரு மீன்பிடி நாவாய் களின் மூலம் விசாகப்பட்டினத்தினை மையமாகக் கொண்டு இறால் மீன்பிடிப்பு நடத்தி வந்தது. 1990-91 மத்தியில் மேற்கு வங்க மீன்வளர்ச்சிக்கழகத்திடமிருந்து இரு பழைய மீன்பிடி நாவாய்களை இக்கழகத்தில் ரூ. 25.00 இலட்சத் திற்கு வாங்கப்பட்டது. அதில் ஒன்று சில பழுது பார்ப்புப் பணிகளுக்கு பின்பு டிசம்பர் 1990ல் இயக்கி வைக்கப்பட்ட

மற்றொன்று பழுதுகள் சரிசெய்த பின் 1991 ஜூலை திங்களில் இயக்கி வைக்கப்பட்டது. 1990-91ஆம் ஆண்டில் நாவாய்கள் மூலம் 76 டன் இறால் மற்றும் 87 டன் மீன் பிடிக்கப்பட்டு ரூ. 102.40 இலட்சம் வருவாயாக ஈட்டப்பட்டது. 1991-92-ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் முடிய 78.33 டன் இறாலும் 64.16 டன் மீனும் பிடிக்கப்பட்டு ரூ. 136.39 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டது.

4. உள்நாட்டு மீன்வளம் :

(அ) நீர்த்தேக்கங்கள் :—கீழ்க்கண்ட நீர்த்தேக்கங்களில் மீன் வளத்திற்கான பராமரிப்பு நீண்டகால குத்தகை அடிப்படையில் இக்கழகத்திடம் உள்ளது.

| | |
|---|---|
| 1. சாத்தனூர் அணை. | 5. திருமூர்த்திநகர். |
| 2. பவானிசாகர். | 6. உப்பார். |
| 3. ஆழியார். | 7. மஞ்சளாறு. |
| 4. அமராவதி. | 8. பாலார்—பொறந்தலாறு |

1990-91-ஆம ஆண்டில் மொத்தம் 829 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ. 63.29 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டது: 1991-92-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய 401.49 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ. 43.08 இலட்சங்கள் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

(ஆ) மீன்குஞ்சு உற்பத்தி :—சாத்தனூர் அணை மற்றும் ஆழியார் பண்ணைகளில் மீன்குஞ்சு உற்பத்தியுடன் மீன் குஞ்சு வளர்ப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆழியார் அமராவதி, திருமூர்த்திநகர், மஞ்சளாறு, பாலாறு பொறந்தலாறு மற்றும் உப்பாறு பண்ணைகளில் மீன்குஞ்சு வளர்ப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. தூண்டுதல் முறை மூலம் தரமான மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்து, விரலளவு குஞ்சுகளாக வளர்த்து இக்கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படுவது மட்டுமன்றி, மீன்துறைக்குப் பயன்படுத்தப்பட்டன. 1990-91-ஆம் ஆண்டில் 398 இலட்சம் நுண் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டன. 1991-ஆம் ஆண்டில் டிசம்பர் திங்கள் முடிய 263-95 இலட்சங்கள் நுண் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டன.

5. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் இம்மாநிலத்தில் 5 பனிக்கட்டி உற்பத்தி நிலையங்களையும், 5 மீன் பதப்படுத்தும் நிலையங்களையும் நடத்தி வருகிறது. இந்த ஐந்து



பனிக்கட்டி உற்பத்தி நிலையங்களும் தினசரி 38 டன் எடையுள்ள பனிக்கட்டிகளை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது.

பவானிசாகர் பனிக்கட்டி நிலையம் நீங்கலாக கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து பனிக்கட்டி நிலையங்கள் மற்றும் மீன் பதனிட்டு நிலையங்கள் 1991-92-ல் தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. இராயபுரத்தில் அமைக்கப்பட்டு சமீபத்தில் இயக்கி வைக்கப்பட்ட 100 டன் பனிக்கட்டி நிலையமும் இதில் அடங்கும்.

6. டீசல் விற்பனை நிலையங்கள் :

மீனவர்கள் மற்றும் மீன்பிடி விசைப்படகுகளை இயக்குபவர்கள் ஆகியவர்களின் நன்மைக்காக. இக்கழகம் தூத்துகுடி, மல்லிப்பட்டினம், இராயபுரம் மற்றும் பழையாறு ஆகிய இடங்களில் உள்ள மீன்பிடி துறைமுகங்களில் 5 டீசல் விற்பனை நிலையங்களை இயக்கி வருகிறது. 1990-91-ஆம் ஆண்டில் 10,780 கிலோ லிட்டர் டீசல் ஆயில் விற்பனை செய்து ரூ. 12.12இலட்சம் தரகுத் தொகையை இக்கழகம் ஈட்டியுள்ளது 1991-92-ஆம் ஆண்டில் டிசம்பர் திங்கள் முடிய 9636 கிலோ லிட்டர் டீசல் ஆயில் விற்பனை செய்யப்பட்டு ரூ. 9.77 இலட்சம் தரகு தொகையாக ஈட்டப்பட்டுள்ளது.

7. மீன்விற்பனை நிலையங்கள் :

இக்கழகம் சென்னை, மதுரை, கோவை, பெரியார், திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் 86 சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாக மீன் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1990—91 ஆம் ஆண்டில் 941 டன் மீன்கள் விற்பனை செய்ததோடு ரூ. 136.04 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டது. 1991—92 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய 513 டன் மீன் விற்பனை செய்யப்பட்டு ரூ. 98.73 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

8. உலர் மீன்கிடங்கு, தூத்துக்குடி :

கடல் பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி மேம்பாட்டுக்குழு நிறுவனத்தால் உலர் மீன் ஏற்றுமதியாளர்கள் நலனுக்காக தூத்துக்குடியில் கட்டப்பட்ட உலர் மீன் கிடங்கை இக்கழகம் பொறுப்பேற்று நடத்தி வருகிறது. 1990—91 ஆம் ஆண்டில் ரூ. 0.37 லட்சம் வாடகையாக வசூலிக்கப்பட்டது. 1991—92 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் முடிய ரூ. 0.28 லட்சம் ஈட்டப்பட்டுள்ளது.

9. மீன்வலை தயாரித்தல் :

இராயபுரத்தில் ஆண்டு ஒன்றுக்கு 54 டன் மீன்வலை தயாரிக்கும் திறனுடன் இயங்கி வரும் மீன்வலை தயாரிப்பு நிலையத்தில் 1990–91-ஆம் ஆண்டில் ரூ. 63.18 இலட்சம் மதிப்புள்ள 54 டன் நைலான் வலையும், எச்.டி.பி.இ. வலையும் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. நடப்பு ஆண்டில் டிசம்பர் மாதம் முடிய 42.55 டன் நைலான் மற்றும் எச்.டி.பி.இ. வலைகள் தயாரிக்கப்பட்டு ரூ. 58.17 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

10. இறால் மீன்குஞ்சு பொறிப்பகம் :

இக்கழகம் சென்னைக்கு அருகிலுள்ள நீலாங்கரையில் ஆண்டுதோறும் 16 மில்லியன் உற்பத்தி திறன் உடைய இறால் மீன்குஞ்சு பொறிப்பகம் ஒன்றை இயக்கி வருகிறது. 1990—91 ஆம் ஆண்டில் 8.00 இலட்சம் இறால் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ. 0.68 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டது. 1991—92-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய 18.83 இலட்சம் இறால் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு, ரூ. 1.54 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

11. வளர்ப்பு முத்து தயாரித்தல் :

அரசால் அமைக்கப்பட்ட மதிப்பீடு கமிட்டியில் பரிந்துரைத்துள்ளபடி, இக்கழகம் 1—8—1990 முதல் மண்டபத்தில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அடிப்படையில் வளர்ப்பு முத்துக்களை தயாரிக்கும் திட்டத்தினை மீண்டும் துவக்கி உள்ளது.

12. கழகத்தின் எதிர்கால திட்டங்கள் (1992—93) :

அ. இறால் வளர்ப்புப் பண்ணை அமைத்தல்.—இராமநாதபுரம் மாவட்டம், காரங்காடில் 11 ஹெக்டேர் நிலப் பரப்பில் அமைந்துள்ள இறால் வளர்ப்புப் பண்ணையை மீன்துறையிடமிருந்து கழகம் எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. அயல்நாட்டு நிபுணத்துவத்துடன் ஒரு ஹெக்டேரில் குறைந்த பட்சம் 5 டன் இறால்களை உற்பத்திச் செய்யும் வகையில் இது முனைப்புடன் இயக்கி வைக்கப்படும்.

13. கழகத்தின் நிதி நிலை :

1990—91-ஆம் ஆண்டில் இக்கழகம் ரூ. 398.51 இலட்சம் செலவினத்திற்கு ரூ. 415.96 இலட்சம் வருமானமாக ஈட்டியுள்ளது. நிகர வருவாய் ரூ. 17.45 இலட்சமாகும், 1991–92 டிசம்பர் மாதம் முடிய மொத்த வருவாய் ரூ. 392.95 இலட்சத்தில் செலவுத் தொகை ரூ. 356.96 இலட்சமாக உள்ளது.



545-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.

கொள்கைகளும் திட்டங்களும் 1992-93.

1.01 தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், 1—4—1960-லிருந்து செயல்படத் தொடங்கியது. ஊரக வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள மற்ற முகவரமைப்புகளின் ஒத்துழைப்புடன் கிராமப் பகுதிகளில், கதர் கிராமத் தொழில்களை மேம்புடுத்துவதற்கு திட்டங்களை வகுத்து, மேம்படுத்தி, ஒருங்கிணைத்து, செயல்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

கதர் கிராமத் தொழில் வாரியம் பின்வரும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது;—

(அ) வேலைவாய்ப்பு ஏற்படுத்துதல் ;

(ஆ) உள்ளூரிலேயே கிடைக்கும் வசதிகளைப் பயன்படுத்தி விற்பனை செய்யக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்தல்; மற்றும்

(இ) மக்களிடத்தில் தற்சார்பு நிலையை ஏற்படுத்தி சமுதாய விழிப்புணர்வை வளர்த்தல்.

2.01. 1987-ஆம் ஆண்டு கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு (திருத்தச்) சட்டத்தின்படி, திருத்தப்பட்ட பொருள் விளக்கத்தில் பின்வருமாறு ஏழு தொகுதிகளின் கீழ் தொழில்களின் ஆய்வு வரம்பு சேர்க்கப்பட்டது;—

1. கனிமப் பொருட்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள்.

2. வனப் பொருட்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள்.

3. வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழிலும் உணவுப் பொருள் தயாரிப்பு தொழிலும்.

4. பாலிமர் மற்றும் இரசாயனத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள்.

5. பொறியியல் மற்றும் மரபு சாராத எரிசக்தி.

6. துணித் தொழில்.

7. சேவைத் தொழில்கள்.

தற்போது 10,000 மக்கள் தொகை கொண்ட பகுதியில் வாழ்கின்ற கைவினைஞர் ஒருவர், ரூ. 15,000 வரை முதலீடு செய்து மின் சக்தியைப் பயன்படுத்தி அல்லது பயன்படுத்தாமல், தொழிற்சாலை ஒன்றைத் தொடங்கலாம். இவ்வாறு, கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் வரம்புக்குள் வரும் கிராமத் தொழில்களின் மொத்த எண்ணிக்கை 26-லிருந்து 96-ஆக உயர்ந்துள்ளது.

2.02 கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 96 கிராமத் தொழில்களில் கதர் தொழில் அல்லாது 57 கிராமத் தொழில்களை வாரியம் மூன்று வகையாக பின் வருமாறு செயல்படுத்துகிறது:—

| | | எண்: |
|---|---|---|
| 1. | வாரியத்தின் சொந்த தொழிற் பிரிவுகள். | 1,258 |
| 2. | வாரியம் பதிவு செய்த தொழில் கூட்டுறவு அமைப்புகள். | 1,635 |
| 3. | கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு அளிக்கும் உதவி போன்று நிதியுதவி அளிக்கப் பட்ட கைவினைஞர்கள். | 72,244 |

கதர் திட்டங்கள், உண்ணா எண்ணெய்-சோப்பு தொழில் ஆகியவை வாரியத்தின் தொழிற் பிரிவுகள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. பனை வெல்லம், பனை கற்கண்டு, பழுப்புச் சர்க்கரை, பருப்பு மற்றும் தானிய வகைகள், தும்பு, சுண்ணாம்பு, பிரம்பு, மூங்கில் ஆகிய தொழில்கள் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தனியார் மூலமாக செயல்படுத்தப் படுகின்றன. ஏனைய அனைத்து தொழில்களும், வாரியத்தின் தொழிற் பிரிவுகள், தொழிற் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தனியார்கள் மூலமாக செயல் படுத்தப்படுகின்றன.

## 3.01 கதர் :

694 கிராமிய நூற்பு மையங்களையும் 82 கதர் உற்பத்தி மையங்களையும் வாரியம் செயல்படுத்தி வருகிறது. இத் தொழில் பிரிவுகள் மூலமாக 46,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதில் 37,000 பேர் மகளிர். 1991-1992-ஆம் ஆண்டில் ரூ. 13.00 கோடி மதிப்புள்ள கதர் உற்பத்தி செய்யவும், 1992-93-ஆம் ஆண்டில் கதர் உற்பத்தியை ரூ. 14.00 கோடிக்கு அதிகரிக்கவும் வாரியம் திட்டமிட்டுள்ளது.



## 3.02 கதர்பட்டு :

வாரியத்தில் 22 பட்டு உற்பத்தி நிலையங்கள் செயல் பட்டு வருகின்றன. 1991-92-ஆம் ஆண்டில் ரூ. 8.80 கோடி மதிப்புள்ள பட்டு உற்பத்தி செய்யவும், 1992-93-ஆம் ஆண்டில் ரூ. 10.00 கோடி அளவிற்கு உற்பத்தி செய்யவும் வாரியம் திட்டமிட்டுள்ளது.

## 3.03 கதர் பாலியஸ்டர் :

கதர் பாலியஸ்டர் துணிகளின் தேவை அதிகரித்து வருகிறது. 1991-92-ஆம் ஆண்டில் ரூ. 5.00 கோடிக்கு பாலியஸ்டர் உற்பத்தி செய்யவும், 1992-93-ஆம் ஆண்டில் ரூ. 6.00 கோடிக்கு பாலியஸ்டர் உற்பத்தி செய்யவும், வாரியம் திட்டமிட்டுள்ளது.

## 3.04 சாயச் சலவை மற்றும் அச்சிடும் அலகு :

பவானிசாகரில் மிகப் பெரிய அளவிலான ஒரு சாயச் சலவை அச்சு அலகும், தாராபுரம், திருப்பூர், புதுப்பை, ஜல கண்டபுரம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் ஐந்து சிறிய அளவிலான அலகுகளும், வாரியத்தின் கீழ் இயங்கி வருகின்றன. நுகர்வோர்களின் தேவையை நிறைவேற்ற இந்த அலகுகள் ஐம்பது இலட்சம் மீட்டர் கதர் துணிகளை ஆண்டு தோறும் பதப்படுத்துகின்றன.

## 3.05 நூற்பு கைவினைஞர்களுக்கான நலத்திட்டங்கள் :

நூற்பாளர்களுக்கும் நெசவாளர்களுக்கும் வாரியம் பல் வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்கள் நன்மைக்காக நல நிதியொன்று உருவாக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் அவர்கள் ஊதியத்தில் இருந்து பத்து விழுக்காடு செலுத்துகின்றார்கள். அதே அளவினை வாரியம் தனது பங்காகச் செலுத்தி வருகிறது. இது தவிர நூற்பாளர் மற்றும் நெசவாளர்கள் ஊதியத்தில் 8.33 விழுக்காட்டினை வாரியம் ஊக்க ஊதியமாகவும் அளித்து வருகிறது.

3.06 கதர் நெசவாளர்கள் அச்சு மற்றும் விழுதுகளை மாற்றுவதற்கு 1991-92-ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின் கீழ் 1,000 நெசவாளர்களுக்கு புதிய அச்சு மற்றும் விழுதுகளை வழங்குவதற்கு மானியமாக ரூ. 3.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 3.07 தள்ளுபடி :

மாநில அரசு பண்டிகை சமயங்களிலும், தேசியத் தலைவர்
களின் பிறந்தநாள் விழாக்களின்போதும் பருத்தி, கதர்,
பட்டு ரகங்கள் விற்பனை மீது, ஓராண்டில் 90 நாட்களுக்கும்,
பாலியஸ்டர் விற்பனை மீது 60 நாட்களுக்கும் 10 சதவிதம்
சிறப்பு தள்ளுபடி அளிக்கிறது. கதர் கிராமத் தொழில்
ஆணைக்குழு ஆண்டு முழுவதும் பருத்தி கதருக்கு 15 சதவித
தள்ளுபடியும் பாலியஸ்டருக்கு 10 சதவித தள்ளுபடியும்
அனைத்து ரகங்களுக்கும் ஓராண்டில் 90 நாட்களுக்கு
10 சதவிதம் சிறப்பு தள்ளுபடியும் அளிக்கிறது.

### 4.00 கிராமத் தொழில்கள் :

4.01 ஊரக பகுதியில் கிடைக்கின்ற மூலப் பொருட்களையும்
மனித சக்தியையும் பயன்படுத்தி ஊரக பகுதியில் வறுமையை
அகற்றுவதற்கு இவ்வாரியம் கிராமத் தொழில் திட்டங்களை
செயல்படுத்தி வருகிறது. குறைவான மூலதனத்தில் அதிக
வேலை வாய்ப்பு அளிப்பது கிராமத் தொழில் திட்டங்களின்
சிறப்பாகும்.

4.02 இவ்வாரியத்தின் கீழ் 239 துறை அலகுகளும் 1,627 தொழிற்
கூட்டுறவு சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. வாரியம்
72,244 தனிப்பட்ட கைவினைஞர்களுக்கு சொந்தமாக தொழில்
துவங்கிட நிதியுதவி அளித்துள்ளது. 1991–92-ல் கிராமத்
தொழில் பொருட்கள் உற்பத்தி விற்பனைமுறையே ரூபாய் 275.00
கோடி மற்றும் ரூ. 310.00 கோடி ஆக உயரும் என எதிர்பார்க்கப்
படுகிறது. இந்த உற்பத்தி 1992–93-ல் மேலும் உயரும் என்று
எதிர்பார்க்கப்படுகிறது.. 1992–93-ஆம் ஆண்டில், கிராமத்
தொழில் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே
ரூ. 300.00 மற்றும் ரூ. 340.00 கோடிக்கு உயர்த்தவும் திட்ட
மிடப்பட்டுள்ளது.

### 5.00 பனைத் தொழில் :

5.01 நம் நாட்டில் அதிக அளவில் பனை மரங்கள் உள்ள மாநிலம்
தமிழ்நாடுதான். இந்தியாவில் உள்ள மொத்தம் 8.00 கோடி
பனை மரங்களில் தமிழ் நாட்டில் மட்டும் 5.00 கோடி பனை
மரங்கள் உள்ளன. எனவே, பனை தொழிலாளர்களுக்கு பெரு
மளவில் இத்திட்டத்தின் மூலம், வேலை வாய்ப்பு அளிக்கப்
படுகிறது. இத்திட்டம் ஆரம்ப கூட்டுறவு சங்கம், மாவட்ட
பனை வெல்லம் கூட்டுறவு சங்கங்கள், மாநில பனை வெல்ல
இணையம் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
உண்ணக்கூடிய பொருட்களான பதனீர், பனஞ்சர்க்கரை, பனங்
கற்கண்டு, பனை வெல்லம், பனை மிட்டாய்கள் மற்றும் உண்ணா



வகைப் பொருட்களான பனை நார், புருசு, பனை ஓலைப்
பொருட்கள் முதலியவை பனைத் தொழில் பொருட்களாகும்
பனைத் தொழில் அதிக அளவில் அன்னிய செலாவணியை ஈட்டு
கிறது. ரூ. 1.55 கோடி மதிப்புள்ள பனை நார் வகைகள்
வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. பனைப்
பொருள்கள் ஆண்டொன்றுக்கு ரூ. 95.00 கோடி அளவுக்கு
உற்பத்தி செய்யப்படுகிறது. 1992–93-ஆம் ஆண்டில்,
ரூ. 100.00 கோடிக்கு பனைப் பொருட்கள் உற்பத்தி
செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. பதநீர் இறக்கும் காலங்களில்
கிராமிய கைவினைஞர்களுக்கு அதிகப்படியான வேலை
வாய்ப்பும், பதநீர் இறக்காத காலங்களில் முறையான
அடிப்படையிலும் இத் தொழில் மூலம் பெருமளவில்
வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. பனைத் தொழில்
செய்து பதநீர் இறக்கும் தொழிலாளர்கள் விபத்துக்குள்ளாகி
மரணமடைந்தால் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியி
லிருந்து ரூ. 10,000 உதவித் தொகை அவர்களுடைய குடும்பங்
களுக்கு அளிக்கப்படுகிறது.

### 6.00 தோல்தொழில் :

6.01 மிக ஏழ்மையில் வாழும் கைவினைஞர்களுக்காக வாரியம்
நடத்தும் வேலை வாய்ப்பு அளிக்கும் தொழில்களில் தோல்
தொழில் முதலிடம் வகிக்கிறது. வாரியம் காலணிகள் தயாரிக்
கும் 27 அலகுகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த அலகுகளின்
மூலம் காவலர், ஊர்க்காவலர் முதலியோருக்கு அம்யூனிஷன்
பூட்ஸ், ஷூக்கள், பள்ளிச் செல்லும் குழந்தைகளுக்கு இலவச
செருப்புகள் ஆகியவற்றை தயாரித்து விநியோகம் செய்கிறது.
1992–93-ஆம் ஆண்டில் 2 குரோம் தோல் பதனிடும் அலகுகள்
ஆரம்பிக்க உத்தேசித்துள்ளது. காலணித் தொழிலாளர்களின்
கஷ்டங்களைக் கருத்தில்கொண்டு, அவர்களின் வருவாய்த்
திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் தையல் இயந்திரத்துடன்
கூடிய தொழிற்கூடம் வழங்கும் திட்டத்தை வாரியம் மேற்
கொண்டுள்ளது. இத் திட்டத்தின் மூலம் இதுவரை 7,250
தொழிற்கூடங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. 1991–
92-ஆம் ஆண்டில் மேலும் 2,000 தொழிற் கூடங்களை வழங்க
வாரியம் திட்டமிட்டுள்ளது. இத் திட்டத்திற்கு ஆகும் செலவு
முழுவதும் சிறப்பு மத்திய உதவி நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

### 7.00 உண்ணா எண்ணெய் மற்றும் சோப்பு :

7.01 வாரியத்தினால் உற்பத்தி செய்யப்படும் குளியல் மற்றும்
சலவை சோப்புகளுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. சலவை
சோப்புடன் கூட வேப்பெண்ணெயிலிருந்து தயாரிக்கப்படும்
" குறிஞ்சி " என்ற பச்சை நிற குளியல் சோப்பும் வாரியத்
தால் தயாரிக்கப்படுகிறது. அத்துடன் ரோசா மலர் நிறத்தில்
புதிய வடிவத்தில், புது மணங்கொண்ட குளியல் சோப்பு தயாரிக்க
வாரியம் திட்டமிட்டு உள்ளது. மேலும், வாரியம் சலவைத்
தூளும் தயாரிக்கிறது.

**8.00 மட்பாண்ட தொழில் :**

**8.01** வீடு கட்டும் பணிகள் அதிகமான காரணத்தினால் செங்கல், சுட்ட களிமண் பொருட்கள், பளிங்கு பொருட்கள் ஆகியவற்றின் தேவை அதிகரித்து வருகிறது. பொது மக்களின் தேவையை நிறைவு செய்யும்பொருட்டு, விருத்தாசலத்தில் செயலற்று போன மட்பாண்ட தொழில் பிரிவை வாரியம் எடுத்துக் கொண்டு மட்பாண்ட பொருட்கள் தயாரிக்க தொடங்கியுள்ளது.

**9.00 மின்னணுத் தொழில் :**

**9.01** தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மின்னணுத் தொழிலுக்காக ஐந்து கூட்டுறவு சங்கங்களைப் பதிவு செய்து உள்ளது. இதன் மூலம் 217 நபர்கட்கு பெரும்பாலும் மகளிருக்கு வேலை வாய்ப்புக் கிட்டும். இதில் ஊரக மின்னணு திட்டத்தின்கீழ் எல்காட் நிறுவனத்தின் உதவியுடன் மத்திய அரசின் மின்னணுத்துறை மற்றும் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவின் இணைந்த திட்டத்தின்கீழ் நான்கு சங்கங்களைத் துவக்கியுள்ளது. 1992–93-ஆம் ஆண்டில் வாரியம் இந்த தொழிலை விரிவாக்க உத்தேசித்துள்ளது.

**10.00 கைமுறை காகிதத் தொழில் :**

**10.01** வாரியம் 21 கைமுறை காகித அலகுகளை ஏற்படுத்தியுள்ளது. 1992–93-ஆம் ஆண்டில் சணல் குச்சியிலிருந்து, துகல்களினால் ஆன பலகைகளை தயாரிக்கும் அலகு ஒன்றை ஐக்கிய நாடு முன்னேற்ற திட்ட உதவியுடன் ஏற்படுத்த வாரியம் திட்டமிட்டுள்ளது.

**11.00 விற்பனை :**

**11.01** வாரியத்திடம் பின்வரும் விற்பனைப் பிரிவுகள் உள்ளன :—

| | | |
|---|---|---|
| (அ) கதர் கைவினை மையங்கள் | .. 178 | (நகரங்களிலும் மாநகரங்களிலும் கதர் கிராமத் தொழில் பொருள்களின் விற்பனை.) |
| (ஆ) கிராமத்தியோக் விற்பனை நிலையம் | .. 9 | (கிராமத் தொழில் பொருட்களின் விற்பனை மட்டும்.) |
| (இ) கிராம சில்பாக்கள் | .. 2.) | (கிராமப் பகுதிகளில் கதர் கிராமத் தொழில் பொருட்களின் விற்பனை). |
| (ஈ) தோல் பொருட்கள் விற்பனை அங்காடி. | 25 | (தோல் பொருட்களின் விற்பனைக்கு மட்டும்.) |



178 கதர் அங்காடிகளில் இரண்டு கதர் அங்காடிகளை வெளி மாநிலத்தில் கீழ்க்கண்ட இடங்களில் வாரியம் நடத்தி வருகிறது:—

1. பாலக்காடு (கேரளா மாநிலம்).
2. பெங்களூர்(கர்நாடகா மாநிலம்).

**11.02** 1992–93-ஆம் ஆண்டில் 25 புதிய கதர் அங்காடிகளை ஆரம்பிக்க வாரியம் திட்டமிட்டுள்ளது. இந்த புதிய கதர் அங்காடிகள், கதர் அங்காடிகள் இயங்காத தாலுக்கா தலைமையிடங்களில் துவக்கப்படும்.

**11.03** சென்னை மாநகரில் பல்வேறு இடங்களில் கதர் கிராமப் பொருள்கள் விற்பனை செய்வதற்கு " நடமாடும் விற்பனை ஊர்தி " ஒன்று 2—10—1991 முதல் செயல்பட்டு வருகின்றது. அதேபோல் 1992–93-ஆம் ஆண்டில் கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களை விற்பனை செய்வதற்காக 3 நடமாடும் விற்பனை ஊர்திகளை கோவை, திருச்சி மற்றும் மதுரை நகரங்களில் இயக்குவதற்கு வாரியம் திட்டமிட்டுள்ளது.

**11.04** கதர்-கிராமத் தொழில் பொருட்களின் விற்பனையை தீவிரப் படுத்தும் நோக்கில் வாரியம், தனது பொருட்களைப்பற்றி தொலைக்காட்சி, வானொலி, வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் இயங்கும் தொலைக்காட்சி மற்றும் மின் எழுத்து ஓவியம் ஆகியவற்றின் மூலம் விளம்பரம் செய்துவருகிறது. கதர் ரகங்கள் கதர்ப்பட்டு, சலவை சோப்பு, குளியல் சோப்பு, தேன், தோல் பொருட்கள், காலணிகள் மற்றும் வீட்டுப் பொருட்கள் சம்மந்தமாக சிறிய திரைப்படம் தயாரிக்கவும் வாரியம் திட்டமிட்டுள்ளது.

**11.05** 1991-92-ஆம் ஆண்டில் ஜனவரி 1992 வரையில் கதர் மற்றும் கிராமப் பொருள்கள் விற்பனை முறையே ரூ. 25.15 கோடி மற்றும் ரூ. 259.00 கோடி ஆகும்.

**11.06** 1992-93-ல் ரூ. 32.00 கோடிக்கு கதர் ரகங்கள் விற்பனை செய்யவும் ரூ. 340.00 கோடிக்கு கிராமத் தொழில் பொருட்கள் விற்பனை செய்யவும் வாரியம் திட்டமிட்டுள்ளது.

**12.00 வேலை வாய்ப்பு:**

**12.01** கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் கிராமப்புற கைவினைஞர்களுக்கு அவர்களுடைய வீட்டிலேயே வேலைவாய்ப்பினை அளித்து வேலைவாய்ப்பினைத் தேடி நகர்ப் புறங்களுக்கு வரும் மக்கள் கூட்டத்தைக் குறைக்கிறது. 31-3-1991 வரை வாரியம் 9.99 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. இதில் 4.05 இலட்சம் நபர்கள் பெண்கள்,

1.85 இலட்சம் நபர்கள் ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் இனத்தைச் சார்ந்தவர்கள். 1991-92-ல் வாரியம் 83,000 நபர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பினை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது.

12.02 1992-93-ல் முழுநேர, பருவகால மற்றும் பகுதிநேர வேலைவாய்ப்பினை 1,00,000 நபர்களுக்கு வழங்கிட வாரியம் திட்டமிட்டுள்ளது.

**13.00 தமிழ் நாடு அரசின் பகுதி—II—திட்டங்கள் :**

13.01 பகுதி—II திட்டத்தின்கீழ் கதர் மற்றும் கிராமத் தொழில் வளர்ச்சிக்காக மாநில அரசால் ஏற்பளிக்கப்பட்ட புதிய திட்டங்களை வாரியம் செயல்படுத்தி வருகிறது. கதர்-கிராமத் தொழில் ஆணைக் குழு திட்டத்தின் செயல்பாட்டில் வராத தொழில்கள் பகுதி—II திட்டத்தில் சேர்க்கப்படுகிறது. மரம் அறுக்கும் அலகு, சிலிகேட் அலகு, ஊதுபத்தி உற்பத்தி மற்றும் பயிற்சி மையங்கள், பாய் முடைதல், இரத்தின கற்களுக்கு பட்டைத் தீட்டுதல், எண்ணெய் மற்றும் சோப்பு ஆய்வு கூடங்கள், ஏழை நெசவாளர்களுக்கு அச்சு மற்றும் விழுதுகளை விநியோகித்தல் போன்ற திட்டங்கள் பகுதி-II திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன. 1992-93-ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின்கீழ் பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்த வாரியம் உத்தேசித்துள்ளது:—

| | (ரூபாய் இலட்சத்தில்.) | பயனீட்டாளர்கள் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. இரத்தினக் கற்களை பட்டைத் தீட்டுதல். : | 6.00 | 450 |
| 2. கைமுறை காகித அலகுகளுக்கு பழைய இயந்திரங்களை மாற்றி புதிய இயந்திரங்கள் வாங்குதல். | 2.50 | .. |
| 3. கைமுறை காகித அலகுகளுக்கு கூடுதல் உலர்த்தும் கூடம் கட்டுதல். | 2.50 | .. |
| 4. அலுமினிய பாத்திரங்கள் தயாரிக்கும் அலகுகளை விரிவாக்கம் செய்தல் : | 5.00 | 50 |
| மொத்தம் | 16.00 | 500 |



**13.02 செயற்கை இரத்தின கற்கள் பட்டை தீட்டும் தொழில் (ரூ. 6.00 இலட்சம் பங்கு மூலதன உதவி). :**

செயற்கை இரத்தினக் கற்களுக்கு பட்டைத் தீட்டி மெருகிடும் தொழில் திருச்சி மாவட்டத்தில் நீண்ட காலமாக இருந்து வருகிறது. கதர் கிராம தொழில் ஆணைக் குழு சட்டத்தின் அண்மைக் கால பொருள் விளக்கத்தின்படி செயற்கை இரத்தினக் கற்களுக்கு பட்டைத் தீட்டி மெருகிடுவது ஒரு கிராமத் தொழிலாக சேர்க்கப்பட்டுள்ளது. மாநில அரசு வழங்கிய ரூ. 1.19 இலட்சம் நிதியுதவியுடன் வாரியம் 90 கைவினைஞர்கள் பயனடையும் விதத்தில் திருச்சி மாவட்டத்தில் மூன்று கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தியுள்ளது. 1992-1993-ஆம் ஆண்டில் 450 கைவினைஞர்கள் பயனடையும் விதத்தில் 15 செயற்கை இரத்தினக் கற்களுக்கு பட்டைத் தீட்டும் கூட்டுறவுச் சங்கங்களை திருச்சி, புதுக்கோட்டை மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் அமைத்திட வாரியம் திட்டமிட்டுள்ளது.

**13.03 கைமுறை காகித அலகுகளில் பழைய இயந்திரங்களை மாற்றி புதிய இயந்திரங்கள் அமைத்தல் (ரூ. 2.50 இலட்சங்கள்)**

கைமுறை காகித அலகுகளில் இயங்கும் இயந்திரங்கள் மிகவும் பழமையானது மட்டுமின்றி செய்யும் திறனை இழந்ததாகவுள்ளது. ஆகவே ரூ. 1.40 இலட்சம் செலவில் செண்பகபுதூர், ரூ. 1.10 இலட்சம் செலவில் செய்துங்கநல்லூர் ஆகிய இரண்டு அலகுகளில் பழைய இயந்திரங்கலை மாற்றி புதிய இயந்திரங்களை அமைக்க வாரியம் தீர்மானித்துள்ளது.

**13.04 கைமுறை காகித அலகிற்கு கூடுதல் உலர்த்தும் கூடம் கட்டுதல் (ரூ. 2.50 இலட்சங்கள்)**

காகிதங்களின் தரத்தை சீர்படுத்த அதனை மூடிய கூடங்களில் உலர்த்த வேண்டும். இல்லையெனில் விநியோகிக்கப்படும் காகிதங்கள் தரமில்லை என்று நிராகரிக்கப்படக்கூடும். ஆகவே, உலர்த்தும் கூடம் கட்டுதல் மிகவும் அவசியமாகிறது. ஆண்டுக்கு 2 அலகுகளுக்கு உலர்த்தும் கூடங்களைப் படிப்படியாக கட்ட வாரியம் திட்டமிட்டுள்ளது. 60'×20' அளவுள்ள உலர்த்தும் கூடம் கட்டுவதற்கு ரூ. 1.25 இலட்சம் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. பின்வரும் இரண்டு இடங்களில் உலர்த்தும் கூடம் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது:—

| இடம் | மாவட்டம் |
|---|---|
| 1. செண்பகபுதூர் | பெரியார் மாவட்டம். |
| 2. மகேந்திரமங்கலம் | திருச்சி மாவட்டம். |

13.05 அலுமினிய சாமான்கள் தயாரிக்கும் அலகினை விரிவு படுத்தும் திட்டம் (ரூ. 5 இலட்சங்கள்:)

நிலம், கட்டிடம் இயந்திரங்கள் முதலிய தேவையான அடிப்படை வசதிகள் உள்ள அலகுகளில் கூடுதல் இயந்திரங்கள் வாங்கி அமைப்பதன் மூலம் வாரியம் தனது உற்பத்தியை அதிகரிக்கும். இதன் மூலம் ஒரு அலகில் 50 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க முடியும். இதனால் வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் பள்ளூர் மற்றும் பள்ளிகொண்டா பகுதிகளில் 100 குடும்பங்கள் வாழ வழி ஏற்படும்.

14.00 மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்

14.01 ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்:

தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம் பழங்குடி மக்களின் நலனுக்காக தேனீ வளர்த்தல், புளி பக்குவப் படுத்துதல், பாய்முடைதல், பிரம்பு மற்றும் மூங்கில் கூடைகள் முடைதல் முதலிய பல்வேறு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டங்களை பழங்குடியினர் மேம்பாட்டு ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதி உதவியுடன் செயல்படுத்தி வருகிறது. 1991-92-ஆம் ஆண்டு வரை 6,461 பழங்குடியினர் குடும்பங்கள் நலனுக்காக ரூ. 270.27 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டில் ரூ. 33.00 இலட்சம், மதிப்பீட்டில் புதிய மற்றும் நடப்பு திட்டங்கள் கிராமத் தொழில்கள் மூலம் பழங்குடியினர் மேம்பாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

14.02 மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம்:

இத்திட்டம் 1985-1986 ஆம் ஆண்டு முதல் திண்டுக்கல் அண்ணா, காமராசர் மற்றும் மதுரை மாவட்டங்களில் வாரியத்தினால் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தேனீ வளர்த்தல், கற்பூர தைலம், செரானியம் எண்ணெய் வடித்தல், பனை ஓலை, பிரம்பு, மூங்கில் போன்ற தொழில்கள் செயல்படுத்தப்படுகின்றன. கொடைக்கானலில் உள்ள வாரியத்திற்குச் சொந்தமான நிலத்திலேயே செரானிய தாவரத்தைப் பயிர் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது



1991-92 ஆம் ஆண்டு வரை 2,292 கைவினைஞர்கள் பயனடைய ரூ. 31.32 இலட்சம் செலவில் திட்டங்கள் செயல் படுத்தப்பட்டன. 1992-93 ஆம் ஆண்டில் 570 நபர்கள் பயனடைய பின்வரும் திட்டங்களுக்காக ரூ. 4.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

| | | திட்ட மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்) | பயனீட்டாளர்கள். எண். |
|---|---|---|---|
| 1. வேப்பங்கொட்டை கொள்முதல் | .. | 3.00 | 320 |
| 2. பனைத்தொழில் கைவினைஞர்களுக்கு தளவாடச் சாமான் வாங்க | .. | 1.00 | 250 |
| | | 4.00 | 570 |

14.03 மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் மலைப் பகுதியில் உள்ள தனி நபர்கள் பயனடைய நீலகிரி மாவட்டத்தில் எலுமிச்சை புல் எண்ணெய் மற்றும் நீலகிரி தைலம் வடிகட்டும் கருவிகள் வழங்குதல், தேனீத் தொழில் அபிவிருத்தி செய்தல், கூட்டுறவு சங்கங்களுக்கு கட்டுமான பணிகளுக்கு நிதியுதவி செய்தல் முதலிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. 1991-92 ஆம் ஆண்டு வரை 4,146 தனி நபர்கள் பயனடைய அரசு ரூ. 88.55 இலட்சம் வழங்கியுள்ளது 1992-93 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 325 நபர்கள்

பயன்பெறும் பொருட்டு பின்வரும் திட்டங்களுக்கு ரூ. 10.10 இலட்சம் ஒதுக்கீடு செய்துத் திட்டம் செயல் படுத்தப்படவுள்ளது.

| | | மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்) | பயனீட்டாளர். எண் |
|---|---|---|---|
| 1. வடிகட்டும் கருவிகள் வழங்குதல் | .. | 5.00 | 100 |
| 2. தோல் பொருள் தயாரிப்பு அலகிற்கு பணிக் கூடம் கட்டுதல் | .. | 3.00 | 75 |
| 3. நம்பாளக் கோட்டை மகளிர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் கயரினால் தேயிலை சேகரிக்கும் பை தயாரித்தல் | | 2.10 | 150 |
| மொத்தம் | .. | 10.10 | 325 |

14.04 சிறப்பு உள்ளாக்கத் திட்டம்

இதுவரை இத்திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்களுக்காக 24,549 கைவினைஞர்கள் பயனடையும் வகையில் அரசு ரூ. 1,494.71 இலட்சம் வழங்கியுள்ளது. இதில் 1991–92 முடிய 9,250 பணிக் கூடங்கள் ரூ. 845.25 இலட்சம் செலவில் இலவசமாக வழங்குவதும் அடங்கும் இந்து ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த 2,800 கைவினை ஞர்கள் வேலை வாய்ப்பைப் பெறவும் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், தோல் தொழிலின் கீழ் ரூ. 380 இலட்சம் செலவு பிடிக்கும் பெரும் திட்டம் ஒன்றை வாரியம் தீட்டியுள்ளது.

14.05 தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

11,720 கைவினைஞர்கள் பயன்பெறுவதற்காக அரசு இதுவரை ரூ. 778.78 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளது. 1992–93 ஆம் ஆண்டில் ரூ. 11,735 இலட்சம் செலவில் 110 கைவினைஞர்கள் பயன்பெறுவதற்காக திட்டங்கள் செயல் படுத்தப் படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றன.



15.00 பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி

1991–92 ஆம் ஆண்டில் கிராமத் தொழில் திட்டங்களின் மூலம், 1,100 மகளிர் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர். 1992–93 ஆம் ஆண்டில் ரூ. 74.70 இலட்சம் நிதியொதுக்கத்தில் 1,500 பெண்கள் பயனடைவார்கள்.

16.00 வாரியத்தின் நிதி நிலை

16.01 தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம அரசின் வரவு செலவு அமைப்பின் படி (i) கதர் நிதி (ii) கிராமத் தொழில் நிதி என்ற இருவகை தலைப்பின் கீழ் வரவு-செலவு திட்டங்களை தயாரிக்கிறது. பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணையம, மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ள திட்டத்தின்படி பல்வேறு திட்டங்களை செயல்படுத்த வாரியத்திற்கு தேவைப்படுகின்ற நிதியை அளிக்கின்றது.

16.02 1991–92 ஆம் ஆண்டில் ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழ் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு கீழ்கண்டவாறு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது:

| தொழிலின் பெயர். (1) | மான்யம். (2) | கடன். (3) | வங்கி நிதி கடன் (4) | மொத்தம் (5) |
|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்). | | | |
| 1. கதர் | 2.40 | 113.06 | 247.19 | 362.65 |
| 2. கிராமத் தொழில்கள் | 35.95 | 741.42 | 594.74 | 1,372.11 |
| மொத்தம் | 38.35 | 854.46 | 841.93 | 1,734.76 |

16.03 1992–93 ஆம் ஆண்டில், வங்கி கடன் உட்பட ரூ. 1,675.75 இலட்சம் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு வழங்க கதர் கிராமத் தொழில் ஆணையம் தற்காலிகமாக ஒப்புக் கொண்டுள்ளது.

**16.04** அத்துடன் மாநில அரசால் ஒப்படைக்கப்படும் பல்வேறு சிறப்புத் திட்டங்களைசெயல் படுத்தி நிறைவேற்ற மாநில அரசிடமிருந்து வாரியம்நிதியுதவி பெற்று வருகிறது. அரசால் வழங்கப்பட்டுள்ள நிதி உதவி பற்றிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| | திருத்திய மதிப்பீடு 1991–92. (ரூபாய் | திட்ட மதிப்பீடு 1992–93. இலட்சத்தில்) |
|---|---|---|
| அ. நிகர செலவு மான்யம் | 300.00 | 300.00 |
| ஆ. தணிக்கைக் கட்டணம் | 60.00 | 40.00 |
| இ. கதர் விற்பனை தள்ளுபடி | 350.00 | 350.00 |
| ஈ. ஏனைய சிறப்புத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக | 46.34 | 66.93 |
| மொத்தம் | 756.34 | 756.93 |



545—ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க

## தொழில் கொள்கை 1992–93.

### (ஊரகத் தொழில்களும் சிறு தொழில்களும்)

1.1. சிறு தொழில்கள் சம்பந்தப்பட்ட வெற்றிகரமான கொள்கையின் மூலமே, விரைவான தொழில் மயமாக்கம் காண முடியும் என அரசு உறுதியாக நம்புகிறது. ஏனெனில் சிறு தொழில் துறை குறைவான மூலதனத் தேவை கொண்டதுஎன்பது மட்டுமல்லாமல், பெரும் அளவிற்கு வேலை வாய்ப்புக்களையும் உண்டாக்குகிறது. துரிதமான மற்றும் பரவலான தொழில் வளர்ச்சி ஆகிய இரட்டைக் குறிக்கோள்களை அடையும் பொருட்டு, அரசு ஊரக மற்றும் சிறு தொழில்களுக்கென்றே கவர்ச்சியான ஊக்கத் தொகைகளையும், சலுகைகளையும் அறிவித்துள்ளது. சமீபத்திய அரசின் தொழில் கொள்கையில், பல புதியகருத்துக்களும், புதுமையான வழிமுறைகளும், மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டன. அவற்றில் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை ; முயற்சி மூலதன நிதி ; தொழில் நுட்பவியல் மேம்பாட்டு நிதி (TDF) ஆகியவை ஏற்படுத்துதல். மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் வாரியங்கள் ஆகியவை சிறு தொழிற்கூடங்களுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையினை உரிய நேரத்தில் செலுத்துவதை இடையறாது கண்காணிக்கும் ஒரு முறை ஆகியவையாகும். இந்நடவடிக்கைகள், சிறு தொழில்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றை நடைமுறைப்படுத்த பெருமளவில் உதவிடும்.

### 2. அடிப்படைத் தேவைகளான ஆதரவு :

2.1. மாநிலத்தில் தற்போதுள்ள தொழிற் பகுதிகளைச் சார்ந்த இடங்களில் மட்டுமின்றி, தொழில் மயமாக்கப்படவேண்டிய புதிய பகுதிகளிலும் தேவையான அடிப்படை வசதிகளை விரைந்து மேம்படுத்துவதற்கு அரசு முன்னுரிமை அளிக்கும்.

2.2. அரசு முகவர் நிறுவனங்களால் மேம்படுத்தப்பட்ட அனைத்து தொழிற்பேட்டைகளிலும் தொழிற் கூடங்களுக்கென நிலம் வாங்கப்படுவதற்குரிய முத்திரைத்தாள் கட்டணத்திலிருந்து முழு விலக்களிக்கப்படும்.

2.3. தொழில் வளாகங்களில் அமைந்துள்ள சிறு தொழிற் கூடங்கள் மற்றவர்களை முந்தி மின்சக்தி பெறும் பொருட்டு, தமிழ்நாடு மின்சார வாரியம் அவைகளுக்கு ஒரு முன்னுரிமை நிர்ணயித்துள்ளது. 20 குதிரைத்திறன் வரை குறைந்த அழுத்த மின்சாரத்தை நுகர்கின்ற தொழிற்கூடங்களுக்கும் ; 20 குதிரைத் திறனுக்கும் அதிகமானதும், புதிய மின்மாற்றி நிறுவிடத் தேவையற்ற தொழிற் கூடங்களுக்கும் மின் இணைப்பு சாதாரணமாக 90 நாட்களுக்குள் வழங்கப்படும். புதிய மின் மாற்றி அமைப்பு தேவைப்படும் இனங்களில், விண்ணப்ப நாளிலிருந்து ஆறு திங்களுக்குள் மின் இணைப்பு வழங்கப்படும்.

2.4. 100 விழுக்காடு ஏற்றுமதி சார் தொழிற்கூடங்களுக்கு மின் வெட்டுக்களிலிருந்து விலக்களிக்கப்படும்.

2.5. புதிய சிறு தொழில்கள் மற்றும் விரிவாக்கத்திற்குட்படும் சிறுதொழிற்கூடங்கள் கீழ்க்கண்டவாறு உயர்வித மின் கட்டண விகித மான்யம் பெறத் தகுதியுடையனவாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| முதலாண்டு | .. | .. | 40% | (30%) |
| இரண்டாம் ஆண்டுது | .. | .. | 30% | (20%) |
| மூன்றாம் ஆண்டு | .. | .. | 20% | (10%) |

(அடைப்புக்குள் காணும் விதங்கள் ஏற்கனவே இருந்தவற்றை குறிக்கின்றன).

## 3. உதவித் தொகைகளும், வரிச் சலுகைகளும் :

3.1. நிதி நிறுவனங்களால் விதிக்கப்பட்ட கடன் கட்டுப்பாடுகளை கருத்தில்கொண்டு, சிறு தொழிற் கூடங்களுக்கு மூலதனச் சலுகை வழங்குவதை, அத்தொழிற்கூடம் முழுமையாக நிறைவு பெறும்வரை காத்திராமல் புதிய தொழிற்கூடம் நிறுவும் பணி முன்னேற்றத்திலிருக்கும் பொழுதே கட்டம் கட்டமாக அளித்திட அரசு முடிவெடுத்துள்ளது. இதனால் தொழில் முனைவர்களுக்குரிய மூலதனச் செலவு குறையும்.

3.2. திட்டமிட்ட, மற்றும் பரவலான தொழில் வளர்ச்சியை உறுதிப்படுத்தும் பொருட்டு, மாநிலத்திலுள்ள 76 பின்தங்கிய வட்டங்களிலும் அரசு முகவர் அமைப்புகளால் அமைக்கப்பட்ட தொழிற்பேட்டைகள் மற்றும் தொழில் வளாகங்களிலும் அமைக்கப்பட்ட அனைத்துப் புதிய தொழிற்கூடங்களும் அவற்றின் நிலையான சொத்துக்களில் 15 விழுக்காடு வரை ரூ. 15 இலட்சத்திற்கும் மிகாமல் மூலதனச் சலுகையாகப் பெறுவதற்கு தகுதியுடையனவாகும்.

3.3. மாநிலத்திலுள்ள 31 மிகவும் பின்தங்கிய வட்டங்களை மேம்படுத்தும் பொருட்டு, இப்பகுதிகளில் அமைக்கப்படும் அனைத்து புதிய தொழிற்கூடங்களுக்கும் 20 விழுக்காடு மூலதனச் சலுகையாக ரூ. 20 இலட்சத்திற்கு மிகாமல் வழங்கப்படும்.

3.4 மாநிலத்தில் பின் தங்கிய வட்டங்கள் மற்றும் அரசு முகவர் நிறுவனங்களால் மேம்படுத்தப்பட்ட தொழில் பகுதிகளில் அமைந்துள்ள புதிய தொழில்களாயிருப்பின் - அவற்றின் நிலையான சொத்துக்களின் மொத்த மூலதன மதிப்பின் அளவிற்கும்; விரிவாக்கம் மற்றும் மாற்றியமைத்தலில் ஈடுபட்டுள்ள ஏற்கனவே உள்ள தொழிற்கூடங்களாயின், அவற்றின் கூடுதல் மூலதன மதிப்பில் 80 விழுக்காடு அளவிற்கும் 9 ஆண்டுகளுக்கு விற்பனை



வரி தள்ளி வைப்பிற்குத் தகுதியுடையனவாகும். 1—4—1991 முதல் விரிவாக்கம் / மாற்றியமைத்தலில் எண்ணிக்கையின் வரையறையை அரசு நீக்கிவிட்டது.

3.5 31 மிகவும் பின் தங்கிய வட்டங்களில் அமைந்துள்ள புதிய தொழிற்கூடங்கள் மற்றும் விரிவாக்கம் / மாற்றியமைத்தலில் ஈடுபட்டுள்ள ஏற்கனவே உள்ள தொழிற்கூடங்கள் 5 ஆண்டு காலத்திற்கு முழு விற்பனை வரித் தள்ளுபடிக்கு, அதிக பட்சம் நிலையான சொத்துக்களின் மதிப்பின் அளவிற்குத் தகுதியுடையனவாகும்.

## 4 மகளிர் தொழில் முனைவர்களுக்குரிய சிறப்பு ஊக்கத் தொகைகள் :

4.1. தொழில்மயமாக்குதலின் பயன்களைப் பெறுவதில், மகளிர்க்கு ஒரு சம வாய்ப்பளித்திடும் பொருட்டு, மரபு சாராத் தொழிற்கூடங்களில் மகளிருக்கு வேலையளிப்பது தீவிரமாக ஊக்குவிக்கப்பட்டு வருகிறது இந்த நோக்கத்தினை கருத்தில் கொண்டு, மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 30 விழுக்காட்டிற்கு மேல் மகளிரை வேலைக்கு அமர்த்தியுள்ள புதிய தொழிற்கூடங்ககள் அனைத்திற்கும் ஏற்கனவே உள்ள சலுகைகளைத் தவிர, கூடுதலாக 5 சதவீதம் சிறப்புச் சலுகை, ரூ 5 இலட்சத்திற்கு மிகாமல் அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது

4.2. புதிய தொழிற்பேட்டைகள் / தொழில் வளாகங்களில் மகளிர் தொழில் முனைவர்களுக்கென 30 விழுக்காடு செப்பனிட்ட மனைகள் / தொழிற்கூடங்கள் முன்பதிவு செய்யப்பட வேண்டும்

4.3. மகளிர் தொழில் முனைவர்களின் மேலாண்மைத் திறனை அதிகரிக்கும் பொருட்டு, மகளிர் தொழில் முனைவர்களுக்கு மட்டுமான தொழில் முனைவர் பயிற்சித் திட்டம் ஒன்று நடத்துவதற்கு அரசு முடிவெடுத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 800 மகளிர் தொழில் முனைவர்களுக்கு பயிற்சியளிக்கும் பொருட்டு, 1991–92 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் ரூ 10 இலட்சம் அரசு ஒப்புதலளித்தது இந்த பயிற்சித் திட்டத்தை நடத்துவதற்கு, உயர் தொழில் நுட்ப நிறுவனங்களான தமிழ்நாடு தொழிலியல் ஆலோசனைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் தொழில் முனைவரியல் மேம்பாட்டு மையம், மகளிருக்கான கோத்தாரி அகாடமி, அன்னை தெரஸா பல்கலைக் கழகம் மற்றும் சிறு தொழில் சேவை நிலையம் ஆகியவற்றை ஈடுபடுத்தியுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 30 முதல் 50 பேர்கள் 2 மாத பயிற்சிக்காக தேர்தெடுக்கப்பட்டுள்ளனர். பயிற்சிக் காலத்தில் பயிற்சி பெறுபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ. 200 வீதம் உதவித் தொகை அளிக்கப்படும். 1992–93 ஆம் ஆண்டிற்கும் இத்திட்டத்தைத் தொடர்வதற்கு பகுதி II திட்டத்தின் கீழ் ரூ. 10 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

4.4. வெற்றிகரமான மகளிர் தொழில் முனைவர்களுக்கு அளித்திட, ஒரு சிறப்பு மாநிலப் பரிசும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 5. நவீனப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு :

5.1. பன்னாட்டு சந்தையில் எதிர்பார்ப்புகளை சந்திக்கும் வகையில் ஏற்றுமதியில் நவீனப்படுத்துதல் மற்றும் தர மேம்பாடு ஆகியவற்றை புகுத்த வேண்டும்

5.2. எனவே, சிறு தொழிற்கூடங்கள் புதிய தொழில் நுட்ப முறைகளைப் பெற்று, அவர்களது தொழிற்கூடங்களை நவீனப் படுத்தும் பொருட்டு, தொழில் நுட்ப மேம்பாட்டு நிதி ஒன்றினை அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

5.3. புதிய தொழில் நுட்பங்களை ஊக்குவிக்கும் பொருட்டு, முயற்சி மூலதன நிதி ஒன்றும் ஏற்படுத்தப்படும்.

5.4. தொழில் வணிக இயக்ககத்தில் செயல்பட்டு வரும் ஏற்றுமதி மேம்பாட்டுப் பிரிவு, மேலும் வலுப்படுத்தப்படும்

5.5. தரமான உற்பத்தி, ஏற்றுமதி மேம்பாடு மற்றும் அனைத்துத் திறன் மிகுதி, ஆகியவை பெற்றுள்ள தொழில்களின் சாதனைகளைப், பாராட்டும் வகையில், சிறப்பு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன

5.6. தொழிலகங்களை நிறுவுவதற்கான நடைமுறையை எளிதாக்கவும் அவற்றில் உள்ள இடர்பாடுகளை நீக்கவும் ஒரு செயற் குறிப்பு பரிசீலிக்கப்பட்டு வருகிறது

## 6. நலிவுற்ற தொழிற்கூடங்களின் மறுவாழ்வு :

சிறு தொழில்களுக்கு ஏற்படும் நலிவு பற்றிய பிரச்சினையை தீர்வு செய்வதற்கு, தொழில் துறைச் செயலாளர் அவர்களின் தலைமையின் கீழ் சிறப்பு அதிகாரக்குழு ஒன்றை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. நலிவுற்ற சிறுதொழில்களின் மறு வாழ்வு குறித்து விரைவான முடிவுகளை எடுப்பதற்கு இக்குழு விற்கு சிறப்பு அதிகாரங்கள் அளிக்கப்படும்

## 7. தொழில் வணிக இயக்ககம் :

மாநிலத்தில் விறுவிறுப்பான, தொழில் வளர்ச்சிக்குரிய கொள்கைகளை வகுத்து அவற்றை நிறைவேற்றும் முக்கிய பொறுப்பு இந்த இயக்ககத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது ஒருங் கிணைப்பு மையமாக விளங்குகின்ற இந்த இயக்ககம், பல்வேறு மாநில மற்றும் மைய தொழில் மேம்பாட்டு முகவரமைப்பு நிறுவனங்களை ஒன்றுபடுத்தும் தலையாய ஒருங்கிணைப்பாள ராகவும் விளங்குகிறது. தளர்த்தப்பட்ட புதிய தொழில் சூழ் நிலையில், இவ்வியக்ககம் ஒழுங்குறுத்தும் பணிகளை விட்டு விலகி மேம்பாட்டு முகவர் அமைப்பாக மாறியுள்ளது.



7.1 தொழில் முனைவர்களிடையே ஆர்வத்தை பெருக்கும் நோக்குடன் இந்த இயக்கம், தொழில் சங்கங்கள் மற்றும் இதர நிறுவனங்களுடன் இணைந்து தொழிலியல் தகவல் கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் ஊக்குவிப்பு முகாம்கள் ஆகியவற்றை நடத்திவருகிறது. தொழில்நுட்பவியலில் ஏற்பட்டுள்ள நாளதுவரையிலான வளர்ச்சி, அரசு கொள்கைகள் முதலிய வற்றை தொழில் முனைவர்களுக்கு விளக்கிட புதுமையான சோதனை முயற்சியாகவே தொழிலியல் தகவல் கருத்தரங்குகள் தொடங்கப்பட்டன சென்னை உள்ளிட்ட அனைத்து மாவட் டங்களிலும் மாதந்தோறும் ஒரு கருத்தரங்கு விதம் நடத்திடு மளவிற்கு மிகவும் பிரபலமாகியுள்ளது. தொழில்நுட்ப மற்றும் நிதி நிறுவனங்கள், மைய மற்றும் மாநில அரசுத் துறை துறைகள் ஆகியவற்றின் சார்பாக பிரதிநிதிகள் இக்கருத்தரங்கு களில் கலந்துகொண்டனர். தமிழ்நாட்டில் தென் மாவட்டங் களின் தொழில் வளர்ச்சிக்காக மதுரையில் நடத்தப்பட்ட கருத் தரங்கு உள்ளிட்ட அநேக கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளது ஊரகத் தொழில்களை ஊக்குவிக்கும் பொருட்டு, வட்டார அளவில் ஊக்குவிப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன இது போன்ற முகாம்கள் நடப்பாண்டிலும் முறையாக நடத்தப்படும்

### 7.2 சிறு தொழில்களைப் பதிவு செய்தல் :

இவ்வியக்ககத்தின் மற்றுமொரு முக்கிய பணி சிறு தொழில் களைப் பதிவு செய்வதாகும் இவ்வியக்ககத்தினால் வழங்கப் படுகின்ற சிறு தொழில், பதிவுச் சான்றிதழ், ஒரு தொழிற் கூடத்தை உதவித்தொகை, வரித்தள்ளுபடி, விலையில் முன்னுரிமை போன்றவை உள்ளிட்ட அநேக சலுகைகளை பெறுவதற்கு தகுதி யுடையதாக ஆக்குகின்றது. ஒரு தொழில் முனைவர் தனது தற் காலிகச் சான்றிதழை 7 நாட்களுக்குள்ளும், நிரந்தரச் சான்றிதழை 30 நாட்களுக்குள்ளும் பெறுவதற்கு, கள அலுவலர்களின் பணி செம்மைப்படுத்தப்பட்டு சீரமைக்கப்பட்டுள்ளது. 1991–92ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட பங்கீடு இலக்கான 11,550இதற்கும் அதிகமாக 31—12—1991 வரை 12,889 சிறு தொழில் நிலை யங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டின் இறுதியில், இவ்வருடத்திற்கான 15,400 என்ற இலக்கினை மிஞ்சப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 31—12—1991இல் , நிரந்தரமாகப் பதிவு செய்யப்பட்ட சிறுதொழில் நிலையங்களின் எண்ணிக்கை 1,38,407 ஆகவும் தற்காலிகமாகப் பதிவு செய்யப்பட்டவை 1,25,749 ஆகவும் இருந்தது

### 7.3 உதவித்தொகைகள் :

சிறு தொழில் நிலையங்கள், கீழே கண்டுள்ள உதவித்தொகை மற்றும் சலுகைகளைப் பெறத் தகுதியுடையனவாகும் :—

1. மாநில மூலதன முதலீட்டு உதவித்தொகை

2. தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்களுக்குச் சிறப்பு உதவித் தொகை.

3. வட்டியில்லா விற்பனை வரிக் கடன்/தள்ளிவைப்பு/தள்ளுபடி.

4. ஜெனரேட்டர் வாங்குவதற்கு உதவித்தொகை.

5. மாவட்ட குறைந்தழுத்த மின் கட்டணச் சலுகை.

6. மாவட்டத் தொழில் மையக் கடன்/துவக்க கால உதவித்தொகை.

7. 30 விழுக்காட்டிற்கும் அதிகமாக மகளிர் பணி புரியும் தொழில்களுக்கு உதவித்தொகை.

7.4 இச் சலுகைத் தொகைகளும், உதவித்தொகைகளும், மாவட்டத் தொழில் மையங்கள் மூலம் வழங்கப்படுகிறது.

1991–92ஆம் ஆண்டின் சாதனை பின்வருமாறு :—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. மாநில மூலதன உதவி மற்றும் சிறப்பு மூலதன உதவி .. .. .. | 853.09 |
| 2. குறைந்தழுத்த மின் கட்டணச் சலுகை | 77.87 |
| 3. வட்டியில்லா விற்பனை வரிக் கடன் .. | 148.75 |
| 4. வட்டியில்லா விற்பனை வரித் தள்ளி வைப்பு/தள்ளுபடி .. .. .. | 19,24.79 |
| 5. ஜெனரேட்டர் உதவித்தொகை .. | 24.19 |

7.5 படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு.

படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்குடன் 25 விழுக்காடு மானியத்துடனான ரூ. 35,000 வரை நிதியுதவி அளிப்பதற்குரிய விண்ணப்பங்களை, வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்படுகிறது. பத்தாம் வகுப்பு அதற்கு மேலும் படித்த 18 முதல் 35 வயதுக்குட்பட்டவர்களுக்கு



இத் திட்டம் பொருந்தும். சென்னை நகரைத் தவிர மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

| ஆண்டு. (1) | ஆண்டின் இலக்கு. (2) | பெறப்பட்ட விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை. (3) | மாவட்டத் தொழில் மையங்களினால் வங்கிகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை (4) | வங்கிகளினால் அனுமதிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை. (5) |
|---|---|---|---|---|
| 1990–91 | 9,900 | 41,956 | 10,721 | 8,015 |
| 1991–92 (31–12–1991 வரை). | 10,300 | 44,182 | 17,651 | 7,343 |

| ஆண்டு. (1) | தொகை, (6) (ரூபாய் இலட்சத்தில்) | வங்கிகளினால் வழங்கப்பட்டவைகளின் எண்ணிக்கை. (7) | தொகை. (8) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1990–91 | 1414.00 | 5,359 | 8,94.96 |
| 1991–92 (31–12–1991 வரை). | 295.90 | 3,390 | 1,58.08 |

## 7.6. பொது மேலாளர்கள்/நடைமுறை மேலாளர்களுக்குப் பயிற்சி :

அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள புதிய தொழில் கொள்கையினை எதிர்நோக்கும் பொருட்டு, இணை இயக்குநர்கள் மற்றும் துணை இயக்குநர்கள் அளவிலான அலுவலர்களுக்கு விரிவான மறு ஒருங்கிணைப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மதுரையிலுள்ள, காமராசர், பல்கலைக்கழகத்தின், தொழில் முனைவர் வளர்ச்சி மையத்தினால் நடத்தப்படும் ஒருங்கிணைப்பு பயிற்சிக்கென மாவட்டத் தொழில் மையங்களின் பொது மேலாளர்கள் மற்றும் நடைமுறை மேலாளர்கள் இரண்டு தொகுதிகள் பயிற்சிக்கு சென்றுள்ளனர். இந்த மறு ஒருங்கிணைப்பு பயிற்சியானது, இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கி, இந்தியன் வங்கி, தமிழ்நாடு சிறு தொழில் சங்கம்—சேவை மையம் போன்ற பல்வேறு நிறுவனங்களின் ஆதரவுடன் நடத்தப்படுகின்றன. இத் திட்டமானது 1992–93 ஆம் ஆண்டின் பகுதி II திட்டமாக ரூ. 40,000 ஒதுக்கீட்டுடன் தொடரப்படும்.

## 7.7. அலுவலர்களுக்குப் பயிற்சி :

மாவட்டத் தொழில் மையங்கள், ''தொழில் முனைவர்களுக்கு வழிகாட்டும் பிரிவு'' என்ற ஒரு பிரிவினை ஆரம்பித்துள்ளன. இப்பிரிவானது புதிய தொழில் முனைவோர்களுக்கு, புதிய தொழில் துவங்குவதற்கென பல்வேறு விதிமுறைகள், முறைப்படுத்துதல், மேலாண்மை, நிதி, போன்றவற்றை பற்றி வழிகாட்டும். புதிய மற்றும் ஆர்வமுள்ள தொழில் முனைவர்களிடமிருந்து, தற்காலிகப் பதிவுச் சான்றிதழ் பெறுவதற்கென சுமார் 50,000 விண்ணப்பங்கள் ஆண்டுதோறும் வரப்பெறுகின்றன. ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்குண்டான பல்வேறு நிலைகளைக் குறித்து இந்த தொழில் முனைவர்களுக்கு முறையாக வழிகாட்ட வேண்டியுள்ளது. இதைக் கருத்திற்கொண்டு, ஒவ்வொரு மாவட்ட தொழில் மையத்திலிருந்தும் ஒரு அலுவலர், மாவட்ட தொழில் மையத்திலுள்ள தொழில் முனைவர் பிரிவை நடத்தவும் தொழில் முனைவர்களுக்கு வழிகாட்டுவதற்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளார். 1991–92 ஆம் ஆண்டின், ஒரு அணி அலுவலர்கள் தங்களது பயிற்சியினை முடித்துள்ளனர். 1992–93 ஆம் ஆண்டிலும் பகுதி II திட்டத்தின்கீழ் ரூ. 65,000 ஒதுக்கீட்டுடன் இத்திட்டம் தொடரப்படுகிறது.

## 7.8. ஒருமுனைத் தீர்வுக் குழு :

ஒரு தொழிற்கூடம் துவங்குவதற்குரிய அனைத்து சட்டரீதியிலான மற்றும் துறையினது அனுமதிகளை தொழில் முனைவர்கள் ஒரே இடத்திலிருந்து பெறும்பொருட்டு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களை தலைவராகக் கொண்ட ஒரு முனைத் தீர்வுக் குழுக்கள், முறையாக கூட்டங்களை நடத்துகின்றன. 1991–92 ஆம் ஆண்டின் (31–12–1991 வரை) 159 ஒருமுனைத் தீர்வுக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, 1,786 விண்ணப்பங்கள்



தீர்வு செய்யப்பட்டன. இந்த ஒரு முனைத் தீர்வுக் குழுக்கள் மேலும் திறம்பட பணியாற்றுவதற்கெனவும் இக்குழுவினால் விண்ணப்பங்கள் விரைவாக பரிசீலிப்பதற்காகவும் இதற்கு கூடுதல் அதிகாரம் அளித்து முனைப்புடன் செயல்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 7.9. கணணிப் பொறிமயமாக்குதல் :

மாவட்டத் தொழில் மையங்களினால் செயல்படுத்தப்படும் திட்டங்களை முனைப்பாக பரிசீலிப்பதற்காக, ஒரு கணணிப்பொறி அமைப்பு மத்திய அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ளது. மாவட்டத்திலிருந்து கிடைக்கும் தகவல்களை விரைவாகப் பெற்று அவற்றை மாநில நிகழ்ச்சிகளில் தொகுப்பதற்காக தேசிய தகவல் மையம் வற்புறுத்தப்படுகிறது.

## 7.10. தொழிற்கூட்டுறவுப் பிரிவு :

பங்கு மூலதனத்துடன் கூட்டுறவு அடிப்படையில் தொழில்களை வளர்ச்சியடைச் செய்வதும். கூட்டுறவு வங்கிகளின் மூலம் கிடைக்கும் கடனுதவியுடன் தொழில்களைக் கூட்டுறவுமயமாக்கி அவைகளை வளர்ச்சியடையச் செய்வதுமே, அரசினால் அறிவிக்கப்பட்ட கொள்கையாகும். தொழிற் கூட்டுறவுகளை வளர்ச்சியடையச் செய்வது, மற்றும் பதிவு செய்வது ஆகிய பொறுப்புக்கள் இவ்வியக்ககத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 31–1–92 வரை தேயிலை, சவ்வரிசி, தீக்குச்சி, கயிறு போன்ற பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள 413 தொழிற் கூட்டுறவுகள், இந்த இயக்ககத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளில் இச்சங்கங்களின் செயலரக்கம் கீழே தரப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | உற்பத்தி. | விற்பனை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1989–90 | 10,871.90 | 12,738.60 |
| 1990–91 | 11,109.10 | 13,887.90 |
| 1991–92 (31–12–1991 வரை) | 8,353.66 | 10,390.80 |

மந்தமான சந்தையின் விளைவாகத் தேயிலைத் தொழில் தொடர்ந்து பின்னடைந்த போதிலும், தொழில் கூட்டுறவுகளின் மொத்த விற்பனை அளவு கடந்த ஆண்டை விட ரூ. 371.20 இலட்சம் கூடியுள்ளது.

## 7.11. இரசாயனப் பிரிவு:

பல்வேறு வகையான தொழிற்சாலைகளினால், குறிப்பாக சிறு தொழில் துறையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், உற்பத்தியாவதின் தரம், மற்றும் குறியீட்டினை உறுதி செய்வதற்கு, சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பரிசோதனை ஆய்வகங்களின் மூலமாக இந்த இரசாயனப் பிரிவானது விரிவான பரிசோதனை வசதிகளை அளிக்கிறது.

தொழில் நுட்பத் தகவல்கள் மற்றும் திட்டத் தொகுப்புக்கள் ஆகியவற்றை அளிப்பதன் மூலம் சிறு இரசாயனம் மற்றும் அதைச் சார்ந்த தொழில்களை துவங்குவதற்காக, அதிக அளவில் தொழில் வல்லுநர்கள் மற்றும் தொழில் முனைவர்களுக்கு இந்த இரசாயனப் பிரிவு உதவி அளிக்கிறது. உணவு பக்குவப்படுத்துதல் மருந்துகள் மற்றும் மருந்தகப் பொருட்கள் பெட்ரோலிய இரசாயனப் பொருட்கள் மற்றும் சாயம் மற்றும் சாயப் பொருட்கள் போன்ற தொழில்களின் வளர்ச்சிக்கு நடப்பு ஆண்டில் அதிக கவனம் செலுத்தப்படும்.

## 7.12. பாரபின் மெழுகு:

இந்திய அரசினால், தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த பாரபின் மெழுகின் அளவு 10,040 மெட்ரிக் டன்களாகும். இதில் 8,868 மெட்ரிக் டன்கள், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் அனைத்துச் சிறு தொழில்களுக்கும் வழங்கப்படுகின்றது. எஞ்சிய 1,172 மெட்ரிக் டன்கள், சென்னையிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பாலை லிமிடெட்டின் மூலம் திருவாளர்கள் பால்மேர்லாவ்ரி அண்ட் கோ லிமிடெட், மாபெட் மற்றும் விம்கோ லிமிடெட் ஆகிய நிறுவனங்களுக்கு நேரிடையாக வழங்கப்படுகிறது. 1,326 அனுமதி அட்டை பெற்றுள்ளவர்கள் உள்ளனர். இவர்களின் உத்தேசத் தேவை ஆண்டொன்றிற்கு 12,600 மெட்ரிக் டன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இப்படியாக 3,732 மெட்ரிக் டன்கள் அளவிற்கு பற்றாக் குறைவு உள்ளது. தமிழ்நாட்டின் பாரபின் மெழுகு மற்றும் தீக்குச்சி மெழுகின் மொத்தத் தேவை 20,860 மெட்ரிக் டன்கள் எனக் காட்டப்பட்டுள்ளது.

| | மெட்ரிக் டன்கள். |
|---|---|
| வகை 1 மற்றும் வகை 11 .. .. | 12,860 |
| வகை III .. .. .. .. | 8,000 |
| மொத்தம் .. | 20,860 |



பங்கீடு செய்வதற்கென ஒதுக்கப்பட்ட வகை II பாரபின் மெழுகில், 40 விழுக்காடு இந்திய அரசினால் இறக்குமதி செய்யப்பட்டு, வட மாநிலங்களிலேயே அளிக்கப்படுகிறது. தென் மாநிலங்களுக்குத் தேவைப்படும் வகை II மெழுகானது அனைத்திந்திய வழங்குதல் கொள்கையின் அடிப்படையில் 'சென்னை ரீபைனரிஸ் லிமிடெட்டின்'' மூலம் பெறப்படுகிறது. கட்டுப்படுத்தப்பட்ட மற்றும் உள்நாட்டு உற்பத்தி போன்றவைகளுக்குப் பிறகும் வகை II மெழுகின் தேவை முழுவதுமாக நிறைவு செய்ய இயலவில்லை. எனவே, ஒரு விகிதாச்சார வழங்கு முறை தேவைப்படுகிறது.

## 7.13. பொறியியல் பிரிவு :

### சிறு தொழில் கூடங்களுக்கு மூலப் பொருட்கள் உதவி :

இந்திய அரசினால் பரிந்துரைக்கும் அலுவலகம் என அறிவிக்கப்பட்டுள்ள இந்த இயக்ககம், உள்நாட்டில் கிடைக்கக்கூடிய மற்றும் இறக்குமதி செய்யப்படும் கிடைத்தற்கரிய மூலப் பொருட்களைச் சிறு தொழிற் கூடங்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கு உதவிபுரிகிறது. உள்நாட்டில் கிடைக்கும் பொருட்களின் அதிக ஒதுக்கீட்டிற்கும், மூலப் பொருட்களின் இறக்குமதிக்கென முகவர் அமைப்பு நிறுவனங்களுடன் தொடர்பு கொள்வதிலும் இப்பிரிவு ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது.

7.14. இந்திய அரசினால் சமீபத்தில் வெளியிடப்பட்ட கொள்கை மாற்றங்களின்படி இரும்பு மற்றும் எஃகுப் பொருட்களின் கட்டுப்பாட்டினை நீக்கியதும், எஃகுப் பொருள் சுமை சமபங்குத் திட்டத்தை கைவிட்ட போதிலும், சிறு தொழிற் கூடங்களுக்கு இரும்பு மற்றும் எஃகுப் பொருள் பகிர்ந்தளிக்கும் திட்டத்தில் எவ்வித மாற்றமும் உண்டாக்கவில்லை.

## 7.15. இரும்பு மற்றும் எஃகு:

1990–91ஆம் ஆண்டின் உள்ளபடியான தேவையான 65,700 மெட்ரிக் டன்னுக்கு எதிராக 27,401 மெட்ரிக் டன் மட்டுமே மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டது. இந்த இயக்ககம் மேற்கொண்ட முயற்சிகளினால் 1991–92ஆம் ஆண்டிற்குரிய தேவை 80,500 மெட்ரிக் டன்களைத் தவிர 1991–92ஆம் ஆண்டின் சின்னஞ்சிறு தொழில் துறைக்கென்றே தனியே 25,000 மெட்ரிக் டன் தேவை எனக்காட்டப்பட்டது. இது சமபந்தமாக, கல்கத்தாவிலுள்ள வளர்ச்சி ஆணையர் (இரும்பு மற்றும் எஃகு) அவர்களுக்கு ஏற்கனவே எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது.

## 7.16. தேனிரும்பு :

1991–92ஆம் ஆண்டின், தமிழ்நாட்டின் எதிர்நோக்கிய தேவையாக, 1,50,000 மெட்ரிக் டன்னுக்கு எதிராக 41,500 மெட்ரிக் டன் தேனிரும்பு மட்டுமே ஒதுக்கப்பட்டது. இத்துறையால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் விளைவாக, [1991–92

ஆம் ஆண்டிற்கு 12,000 மெட்ரிக் டன் கூடுதலாக ஒதுக்கப்பட்டது. தமிழ்நாடு எதிர்நோக்கியுள்ள தேவை அளவான 1,50,000 மெட்ரிக் டன் அடிப்படையில் தேனிரும்பு ஒதுக்கீட்டினை உயர்த்துவதற்கு வளர்ச்சி ஆணையர் (இரும்பு மற்றும் எஃகு) அவர்களுடன் தொடர்ந்து முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றன.

இது தவிர, இத்துறை மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக விசாகப்பட்டினம் எஃகு ஆலையிலிருந்து 80 சத விகிதம் கழிப்பிரும்பு தென் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

## 7.17. நிலக்கரி, கல்கரி :

நிலக்கரி மற்றும் கல்கரிக்குரிய முகவரமைப்பாக விளங்குகின்ற இத்துறை, கல்கத்தாவிலுள்ள சரக்குப் பெட்டிகள் போக்குவரத்து இயக்குநர் (இரயில்வே) அவர்களால் ஒதுக்கப்பட்ட, மாநில ஒதுக்கீட்டின் அடிப்படையில் சிறு தொழில் கூடங்களுக்கு விகிதாச்சார முறைப்படி பகிர்ந்தளிக்கிறது. பொருள்களை விரைவாகப் பெறுவதற்கு, கல்கத்தாவிலுள்ள சரக்குப் பெட்டிகள் போக்குவரத்து இயக்குநர் அவர்களுடன் கூடுதலாக இரயில் சரக்குப் பெட்டிகள் ஒதுக்குவதற்கு இடைவிடாது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1992ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட நிலக்கரி, மற்றும் கல்கரி ஒதுக்கீடு பின்வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| நீராவி நிலக்கரி. | | மாதமொன்றுக்கு 270 சரக்குப் பெட்டிகள் (சிறு தொழில்கள் 185+சிறு தொழில் சாராதவை 85) | |
| பழுப்பு நிலக்கரி | — | மாதமொன்றுக்கு 126 சரக்குப் பெட்டிகள். | |
| கல்கரி | .. | 45 | ,, |
| கல்கரி (உலைக்கரி)(MCP) | .. | 78 | ,, |
| பழுப்பு நிலக்கரி (MCP) | .. | 30 | ,, |

## 7.18. இரும்பு கலவா உலோக மூலப் பொருட்கள் :

சுத்த நாகம், நிக்கல், செம்பு, ஈயம், தகரம், கந்தகம் போன்ற இரும்பு கலவா உலோகப் பொருட்கள் பெறுவதற்கு சிறு தொழிற்கூடங்களிலிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை, கனிமங்கள் மற்றும் உலோகங்கள் வாணிப நிறுவனம் போன்ற முகவரமைப்பு நிறுவனங்களுக்கு இத்துறை பரிந்துரை செய்கிறது.

## 7.19. மின்னணுத் தொழில் :

மானிட வாழ்க்கையில் அனைத்து நிலைகளிலும் மின்னணுத் தொழில் குறிப்பிடத்தக்க அளவு செல்வாக்கு உண்டாக்கி வளர்ந்துள்ளது. குறிப்பாக நவீன தொழிலியல் உற்பத்தியில் பெரும்



வளர்ச்சி பெற்றுள்ளது. மின்னணுத் தொழிலின் வளர்ச்சியே மாநில பொருளாதார வளர்ச்சியினைக் காட்டும் அளவுகோலாகும் எனக் கூறலாம்.

இத்தொழிலின் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்து, மாநிலத்தில், மின்னணுத் தொழில் வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்குரிய சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

மின்னணுத் தொழில் வளர்ச்சியினை தூண்டிடும் வகையில், பின்வருகின்ற அத்தியாவசிய வசதிகளையும் பணிகளையும் தொழில் வணிக இயக்ககம் அளிக்கிறது.

1. தேர்ந்தெடுக்கப்பட்ட வளர்ச்சி மையங்களில் மின்னணு மற்றும் அதன் சார்பு தொழில்களுக்கென்றே தனியாக தொழிற்பேட்டைகளை அமைப்பது ;

2. நவீன பரிசோதனைக் கருவிகளுடன் கூடிய ஆய்வகங்கள் மூலம் மிக எளிய கட்டணத்தில் பரிசோதனை மற்றும் தரக் கட்டுப்பாடு வசதிகளை அளிப்பது.

## 7.20 ஏற்றுமதி மேம்பாட்டுப் பிரிவு :

சமீபத்தில் ஏற்படுத்தப்பட்ட ஏற்றுமதி மேம்பாட்டுப்பிரிவு மிக்க முனைப்புடன் செயல்படுகிறது. தொழில் முனைவர்களின் நலனுக்கென பல்வேறு ஏற்றுமதி மேம்பாட்டு அமைப்புகளுடன் இணைந்து கருத்தரங்குகளை நடத்துகிறது. இக்கருத்தரங்குகளில் நாளது வரையிலான ஏற்றுமதிக்குரிய சலுகைகள் மற்றும் அரசின் ஏற்றுமதிக் கொள்கைகள் விளக்கப்பட்டுள்ளன. மேலும், இப்பிரிவு, வர்த்தகம் பற்றிய விசாரணை விவரங்களைச் சேகரித்து ஆர்வமுள்ள தொழில் முனைவர்களுக்கு அனுப்புகிறது.

## 7.21. அயல்நாட்டு ஒத்துழைப்பு :

இத்தாலிய நாட்டு உதவியுடன் சென்னையில் அமைக்கப்படவுள்ள கணிப்பம்-உதவி-வடிவமைப்பு மற்றும் கணிப்பம் உதவி உற்பத்தி மையம் (CAD-CUM CENTRE) செயலாக்கத்தின் இறுதி நிலையில் உள்ளது. மாநில அரசினால் ஒதுக்கப்பட உள்ள நிலம் மற்றும் கட்டிடம் ஆகியவை கண்டறியப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை, வார்ப்பட அச்சு வடிவமைப்பு, உருவாக்குதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள உலோக அமைப்பு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு சேவையளிப்பதன் மூலம் உதவியளிக்கும். இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக நடப்பு நிதியாண்டில் ரூ. 50 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

## 7.22. கைவினைத் தொழிற்கூடங்கள் மற்றும் குடிசைத் தொழிற்கூடங்கள் :

அனைத்திந்திய கைவினைத் தொழில் வாரியத்தின் கீழ்வரும் கலைவண்ண மதிப்புடைய கைத்தொழில்களே கைவினைத் தொழில்களாகும். மாவட்ட தொழில் மையங்கள் மூலம் அவை

மேற்கொண்டு கைத்திறனார்களும் கைவினைஞர்களும் கண்டறியப்படுகின்றனர். அவர்களுக்கு கைவினைத் தொழில் பதிவு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

1989–90 ஆம் ஆண்டிலிருந்து பதிவு செய்யப்பட்ட கைவினைத் தொழில் பதிவுகளின் சாதனைகள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ஆண்டுவாரியாக கீழே தரப்பட்டுள்ளது.

| வரிசை எண்ணும் ஆண்டும். | | நிர்ணயிக்கப்பட்ட இலக்கு. | பதிவு செய்யப்பட்ட தொழிற் கூடங்களின் எண்ணிக்கை | வேலை வாய்ப்பு. |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| 1 | 1989–90 .. | 7,100 | 7,000 | 14,233 |
| 2 | 1990–91 .. | 7,500 | 7,291 | 17,539 |
| 3 | 1991–92 .. | 7,875 | 7,822 | 11,809 |

1992–93ஆம் ஆண்டில் 8,000 கைவினைத் தொழிற்கூடங்கள் பதிவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

7.23. குடிசைத் தொழில்கள் :

குடும்பத்திலுள்ள உறுப்பினர்கள்உதவியுடன் முழுநேரமாகவோ அல்லது பகுதிநேரமாகவோ மேற்கொள்ளப்படும் முழுமையான அல்லது ஆதாரத் தொழில்கள் தான் குடிசைத் தொழில்களாகும். சென்னை மாநிலத் தொழில் உதவிச் சட்டத்தின் கீழ் நிதிஉதவி பெறும்பொருட்டு, எந்த இடத்தில் அமைந்திருந்தாலும், குடிசைத் தொழில்கள் வர்த்தகத் தொழில் நிலையங்களாக வரையறுக்கப்பட்டுள்ளன. தொழிற்சாலைச் சட்டம் 1948 (மைய அரசுசட்டம் XIII 1948) இவற்றிற்கு பொருந்தாது பால்பண்ணை, தேனீ வளர்ப்பு மற்றும் கோழிப்பண்ணை ஆகியவை இதில் அடங்கும்.

குடிசைத் தொழில்கள், மாவட்ட தொழில்மையங்களால் கண்டறியப்பட்டு பதிவு செய்யப்பட்ட தொழிற் கூடங்களின் எண்ணிக்கை மற்றும் வேலைவாய்ப்பு விவரம் 1989–90 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டு வாரியாக கீழே தரப்பட்டுள்ளன

| வரிசை எண்ணும் ஆண்டு. | | நிர்ணயிக்கப்பட்ட இலக்கு | பதிவு செய்யப்பட்ட தொழிற் கூடங்களின் எண்ணிக்கை | வேலை வாய்ப்பு. |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| 1 | 1989–90 | 6,300 | 6,856 | 15,099 |
| 2 | 1990–91 | 7,500 | 7,465 | 18,587 |
| 3 | 1991–92 | 7 875 | 8,169 | 16,120 |

1992–93 ஆம் ஆண்டில், 8,000 குடிசைத் தொழிற்கூடங்கள் பதிவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.



7.24. எதிர்காலத் திட்டங்கள்.

1. இந்த இயக்ககத்தின் கள அமைப்புகளாகஉள்ள மாவட்ட தொழில் மையங்கள், நாகப்பட்டினம் காயிதே மில்லத், மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்கள் நீங்கலாக, தமிழ்நாடு முழுவதிலுமுள்ள வருவாய் மாவட்டங்கள் அனைத்திலும் செயல்படுகின்றன. புதியதாக துவக்கப்பட்ட இம்மாவட்டங்களில், துவக்கத்திலிருந்து கிளை அலுவலக அதிகாரியுடன் இன்றியமையாப் பணியாளர் மட்டுமே செயல்படுகின்றனர். எனவே, திருவண்ணாமலை சம்புவராயர் மற்றும் காயிதேமில்லத் நாகப்பட்டினம். ஆகிய மாவட்டங்களில் முழு அளவிலான மாவட்ட தொழில் மையங்கள் திறப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. தொழிற் சங்கங்களின் நீண்டகால தேவையினை நிறைவேற்றும் பொருட்டு, இந்திய வர்த்தக கண்காட்சி ஆணையத்துடன் இணைந்து, சென்னை தரமணியில் ரூ 25 கோடி மதிப்பில் நிரந்தர வர்த்தக கண்காட்சி வளாகம் ஒன்றினை அமைப்பதற்கு அரசு உத்தேசித்துள்ளது. தமிழ்நாடு அரசின் பங்கான ரூ. ? கோடி, மாநில அரசினால் அளிக்கப்படும் நிலத்திற்குரிய விலை மூலம் சரிக்கட்டப்படும். தனியாரின் பங்களிப்புடன் இத்திட்டத்திற்காக ஒரு கூட்டுத்துறை கம்பெனி நிறுவப்படும்.

3, நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் மொத்தத் தேயிலையில் சுமார் 14 சதவீதம் அம்மாவட்டத்தில் செயல்படும் 15 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளிலிருந்துதான் கிடைக்கிறது, அவற்றின் உற்பத்தியினை அதிகரிக்கும் பொருட்டு 1992–93 ஆம் ஆண்டில் பெரும் நவீனப்படுத்தும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது,

4, மாநிலத்திலுள்ள மரபு சாரா பகுதிகளான தர்மபுரி மற்றும் திண்டுக்கல்-அண்ணா போன்ற மாவட்டங்களில் சில இடங்களில் தேயிலை பயிரிடுவதை விரிவாக்கம் செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது,

8, தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்,

சிறு தொழில்களை ஊக்குவித்து வளர்ப்பதிலும். பின்தங்கிய பகுதிகளிலும் மற்றும் வளர்ந்து வரும் பகுதிகளிலும் அவற்றை பரவலாக்குவதிலும் கிரியா ஊக்கியாக பணியாற்றவேண்டும் என்ற குறிப்பான நோக்கத்துடன் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்டது, மாநிலத்தில், சிறு தொழில் வளர்ச்சிக்கான விரிவான திட்டத்துடன், 1971-ல் இந்நிறுவனம் தன் பணியைத் தொடங்கியது,

சிறு தொழில்களுக்குக் குறிப்பாக தொழில் நுட்பப் பணியாளர்களிடையே சுயவேலைவாய்ப்பை ஊக்குவிக்கும் பல திட்டங்களை அரசு சார்பில் இந்நிறுவனம் செயல்படுத்துகிறது,

கடந்த 21 ஆண்டுகளில் பெற்ற அனுபவங்களைக் கொண்டு தமிழ் நாட்டில் சிறு தொழில்களில் மேலும் விரைவான வளர்ச்சியை ஏற்படுத்த இந்நிறுவனம் முனைப்புடன் செயலாற்றுகிறது.

சிறு தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதை முதன்மையான நோக்கமாகக் கொண்ட இந்நிறுவனத்தின் தொழில் மேம்பாட்டுப் பணிகளில் பின்வருவனவும் அடங்கும்:—

8,1, இன்றியமையாத அடிப்படை வசதிகளை செய்து தருதல்:

தொழில் வளர்வதற்கான வாய்ப்புள்ள மையங்களில் தொழில் பேட்டைகளை ஏற்படுத்துதல், மேம்படுத்துதல், பல்வேறு அளவில் தொழிற்கூடங்களைக் கட்டித் தருதல், சிறு தொழில் பிரிவுகளை ஏற்படுத்துவடுற்காக, இன்றியமையாத அடிப்படை வசதிகளுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட மனைகளை வழங்குதல்,

8,2, முதன்மையான/அரிதான மூலப்பொருட்களை வழங்குதல்

சிறுதொழில் பிரிவுகளுக்குத் தேவையான அரிதான மூலப் பொருள்கள் இந்நிறுவனத்தின் விற்பனை நிலையங்களில் கட்டுப் பாட்டு விலையில் கிடைக்க நடவடிக்கை எடுக்கிறது, சிட்கோவின் விற்பனை நிலையங்களில் சிறுதொழில்களுக்குத் தேவையான பல் வேறு வகையான மூலப்பொருள்கள் கிடைக்கச் செய்வதுடன் மேலும் பல விற்பனை நிலையங்களை அமைக்க வேண்டும் என்ற நோக்கமும் இந்நிறுவனத்தின் கொள்கையாகும்,

8,3, விற்பனை உதவித் திட்டம் :

சிறுதொழில் பிரிவுகளுக்கு தாங்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்கு விலையில் சலுகையளித்தல். அரசுக் கொள்முதலில் முன்னுரிமையளித்தல், தேவைக் குறிப்பாணைகளின் அடிப்படையில் முன்பணம் கொடுத்தல் போன்ற ஊக்கத் திட்டங்களின் மூலம் உதவி செய்தல்.

எதிர் காலத் திட்டங்கள் :

8.4. தொழிற்கூடங்கள் அமைத்தல் :

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், வருடத்திற்கு 200 தொழிற்கூடங்கள் வீதம் கட்ட சிட்கோ திட்டமிட்டுள்ளது. அதன்படி 1992–93ஆம் ஆண்டில் 200 தொழிற்கூடங்களை ரூ. 800.00 லட்சம் செலவில்கட்ட குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் சிறுதொழில் முனைவோர்களின் தேவைக்கு ஏற்ப கட்டப்படும் தொழிற்கூடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.



புதிய திட்டங்கள்.

தனியார் தொழிற்பேட்டைகள்.

8.5. முதலிப்பாளையம்-திருப்பூர் பின்னலாடை தொழிற் பேட்டை :

திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் சுமார் 86.65 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில், தனியார் தொழிற்பேட்டையொன்றை அமைத்துத் தருமாறு சிட்கோவிடம் கேட்டுக்கொண்டது. இந்நிலம் காங்கேயம் சாலையில் முதலிப்பாளையம் கிராமத்தில் திருப்பூரிலிருந்து சுமார் 7 கி.மீ. தொலைவில் பொன்னபுரம் என்ற இடத்தில் உள்ளது.

இத்தொழிற்பேட்டையில் பின்னலாடை தயாரிப்பதற்காக 157 தொழிற்கூடங்களை அமைக்க சிட்கோ திட்டமிட்டுள்ளது. 4,000 சதுர அடி கொண்ட 133 தொழிற்கூடங்களும், 3,200 சதுர அடி கொண்ட 24 தொழிற்கூடங்களும் ஆகிய இரண்டு விதமான தொழிற்கூடங்கள் ரூ. 13.09 கோடி மதிப்பில் கட்டப்படும். இத்தொழிற்கூடங்களுக்கு சிமெண்ட்டினாலான மேற்கூரை வேயப்பட்டு இருக்கும். இத்திட்டம் 1991-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடத்திற்குள் அதாவது 1992-ஆம் ஆண்டு மார்ச். மாதத்தில் முடிக்கப் பட்டது. தொழில் முனைவோர்களே நிலத்தை வாங்கி பின்பு அதை சிட்கோவிடம் தொழிற்பேட்டை தொடங்குவதற்காக ஒப்படைத்து, தொழில் முனைவோர்களும் அத்தொழிற்பேட்டை தொடங்குவதில் பங்கேற்பது, இந்தியாவில் இதுவே முதன் முறையாகும்.

157 தொழிற்கூடங்களை சிமெண்ட்டிலான மேற்கூரையுடன் கூடிய சுவர்களுடன் 12 மாதங்களுக்குள் அமைத்திருப்பது அரசுத் துறையைச் சேர்ந்த நிறுவனமான சிட்கோவின் சாதனையாகும். இங்கு ஏற்கனவே 89 தொழிற்கூடங்கள் ரூ. 832.15 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொழிற்கூடங்களும் திட்டமிட்டபடி கட்டிமுடிக்கப்படும்.

சிட்கோவின் சிபாரிசின் பேரில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தொழில் முனைவோர்களுக்கு கடன் வசதியை அளித்திருக்கிறது. தொழில் முனைவோர்கள் எவ்விதமான சிரமமும் படாமல் கடன் வசதி பெற தேவையான அத்தியாவசியப் பணிகளை சிட்கோ செய்துள்ளது.

இங்குள்ள ஒவ்வொரு தொழிற்கூடமும் 0.26 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்படும். தொழிற்கூடங்களுக்குத் தேவையான கழிவறை, கால்வாய்கள், கம்பி வேலி, மதகு போன்ற வசதிகள் செய்துத் தரப்படும். இத்தொழிற்பேட்டைக்கு அகலப் பாதைகள், தெரு விளக்கு, தண்ணீர் வசதி, நிலத்தடி கழிவு

நீர் குழாய், துணை மின்நிலையம், தொலைத்தூர தொடர்பு சிற்றுண்டி சாலை, நிர்வாக அமைப்பு போன்ற அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்படும்.

இத்தொழிற்பேட்டை 10,000 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பும் 15,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் அளிக்கும். இவர்களில் குறைந்தது 3,000 பேராவது பெண் தொழிலாளராக இருப்பார்கள்.

8.6. மதுரை பின்னலாடை தொழிற்பேட்டை :

மதுரையில் உள்ள தொழில் முனைவோர்கள், ஏற்றுமதிக் கேற்ற பின்னலாடை உற்பத்தியைப் பெருக்க, திருப்பூர் தொழிற்பேட்டை போன்ற ஒரு தொழிற்பேட்டையை உரு வாக்குவதற்காக சங்கம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்கள். இச்சங்கம், இத்திட்டத்திற்காக, மதுரை மாவட்டம், மதுரை வடக்கு தாலுக்காவிலுள்ள வேடத்தகுளம் மற்றும் வல்லகுண்டு கிராமங்களில் 68.64 ஏக்கர் நிலத்தை எற்கனவே வாங்கி யுள்ளது. இந்த இடமானது, மதுரை நகரிலிருந்து சுமார் 12 கி. மீ. தொலைவில் மதுரை-சிவகெங்கை நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இங்கு பின்னலாடைகள் சம்பந்தமாகத் தொழில்களை துவங்க 150 பேர் முன்வந்துள்ளனர். ஒவ்வொரு தொழிற்கூடமும் 0.25 ஏக்கர் நிலப் பரப்பில் அமையுமாறு இத்தொழிற்பேட்டையின் வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆரம்ப கட்ட பேச்சுவார்த்தை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சிறுதொழில், வளர்ச்சி வங்கி மற்றும் சங்க நிர்வாகிகள் ஆகியோருடன் 18—12—1991 அன்று நடத்தப்பட்டது. சங்க உறுப்பினர்கள் அவர்களுக்குத் தேவையான தொழிற்கூடங்களின் அளவுகளைத் தெரிவித்த பின்னர் தொழிற்கூடங்களின் மதிப்பீடு அவர்களுக்குத் தெரி விக்கப்படும். மேற்படி, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சிறுதொழில் வளர்ச்சி வங்கி மற்றும் சங்க நிர்வாகி கள் ஆகியோருடன் இறுதிச் சுற்று பேச்சு முடித்தவுடன் இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படும்.

8.7. நாமக்கல் ஆட்டோ நகர் :

'' நாமக்கல் ஆட்டோ நகர் '' என்று பதிவு செய்யப்பட்ட சங்கம் சிட்கோவின் உதவியுடன் '' நாமக்கல் ஆட்டோ நகர் '' தனியார் தொழிற்பேட்டையை நாமக்கல்லுக்கு அருகே தொடங்க உத்தேசித்துள்ளது. நிலத்தை வாங்குவதற்கு தேவையான எல்லா உதவிகளையும் இச்சங்கத்திற்கு சிட்கோ செய்து கொண்டிருக்கிறது. சுமார் 40 ஏக்கர் நிலத்தை வாங்கி இச்சங்கம் தன் பெயரில் பதிவு செய்துள்ளது. இத்தொழிற் பேட்டைக்கு தேவையான வரை படத்தைத் தயார் செய்து, 200 சதுர அடியிலிருந்து 2,000 சதுர அடி வரையிலான வெவ்வேறு அளவுள்ள தொழிற்கூடங்களின் புள்ளி விவர



'களை சிட்கோ சங்கத்திற்கு வழங்கியுள்ளது. நிலம் முழுவதும் வாங்கிய பின்னர் அவர்கள் விருப்பப்படி தொழிற்கூடங்கள் கட்ட சிட்கோவிடம் ஒப்படைக்கப்படும். இதற்குத் தேவை யான பண உதவியை பிற நிறுவனங்களிலிருந்து பெற்றுத் தர சிட்கோ முயற்சி செய்து கொண்டிருக்கிறது. ஆட்டோர் மொபைல் தொழில் சம்பந்தமான வெவ்வேறு வேலைகளில் ஈடுபடக்கூடிய 200 தொழில்கள் இத்தொழிற்பேட்டையில் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வகையான தொழிற்பேட்டை தொடங்கப்படுவது, இந்தியாவில் இதுவே முதல் முறையாகும். இத்திட்டம் 1991–92-ஆம் ஆண்டு செயல்படுத்தப்படும்.

8.8. பல்லடம் :

''பல்லடம் தொழில் வளர்ச்சி சங்கம்'' என்று பதிவு செய்யப்பட்ட சங்கம் சுமார் 16.56 ஏக்கர் பட்டா நிலத்தை வாங்கி பின்னலாடை தயாரிப்பதற்கான தொழிற்கூடங் களைக் கட்ட சிட்கோவிடம் ஒப்படைத்துள்ளது. தொழிற் கூடங்களின் அளவு மதிப்பு ஆகியவற்றைக் கணித்து 76 உறுப் பினர்களுக்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

## சிட்கோவின் புதிய தொழிற்பேட்டைகள்

8.9. வடமுகம் காங்கேயம் பாளையம் :

பெரியார் மாவட்டம், பெருந்துறை தாலுக்காவிலுள்ள வடமுகம்-காங்கேயம்பாளையத்தில் புதிய தொழிற் பேட்டை யொன்று தொடங்குவதற்காக சுமார் 50 ஏக்கர் பட்டா நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. நில ஆர்ஜித வேலைகள் முடிக் கப்பட்டு 9.44 ஹெக்டேர் நிலம் 30—9—1991 அன்று கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கிடையே சென்னை உயர் நீதிமன்றத்தில் அரசு ஆணையை எதிர்த்து நில உரிமையாளர் கள் தடை வாங்கியுள்ளார்கள். இதற்கு எதிராக அப்பீல் செய்யப்பட்டு வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. வழக்கு முடிந்த பின் மேற்கொண்டு தொழிற்பேட்டையைத் தொடங்கு வதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

8.10. காக்களூர் பின்னலாடை ஏற்றுமதி வளாகம் :

ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ள காக்களூர் தொழிற் பேட்டையில் திருப்பூர் பின்னலாடை தொழிற்பேட்டை போன்ற ஒரு பின்னலாடை தொழிற்பேட்டையை தொடங்கு வதற்காக புதுடெல்லியில் உள்ள திருவாளர்கள் பின்னலாடை ஏற்றுமதி வளர்ச்சி சபையும், சென்னை பின்னலாடை மற்றும் கைத்தறி ஏற்றுமதி சங்கமும் சிட்கோவை அணுகியுள்ளன,

காக்கலூர் தொழிற்பேட்டையில் பின்னலாடை ஏற்றுமதி வளாகத்திற்காக 50 ஏக்கர் நிலம், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. துறைமுகத்திற்கும் மற்றும் விமான நிலையத்திற்கும் அருகில் இருப்பதால் இவ்விடம் பொருத்தமானதாக உள்ளது.

காக்கலூர் தொழிற்பேட்டை சென்னையிலிருந்து சுமார் 40 கி.மீ. தொலைவில் சென்னை-திருவள்ளூர் சாலையில் திருவள்ளூர் அருகே அமைந்துள்ளனது. ஏற்கனவே இங்கு 30 தொழிற்கூடங்களும் 41 மேம்படுத்தப் பட்ட மனைகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத் தொழிற்பேட்டையில் அடிப்படை வசதிகளான சாலை, தண்ணீர், நிலத்தடி கழிவு நீர் பாதை, தெரு விளக்கு போன்ற வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தொழில்முனைவோர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. அந்நிலத்தில் அவர்களது விருப்பத்திற்கு ஏற்ப தொழிற் கூடங்கள் கட்டித் தரப்படும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ. 10 கோடியிலிருந்து ரூ. 12 கோடிவரை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொழில் முனைவோர்கள் சிட்கோவின் உதவியுடன் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மற்றும் பிற நிதி நிறுவனங்களிலிருந்து கடன் வசதியைப் பெறுவார்கள்.

இத்திட்டத்தின் மூலம் 10,000 பேர் நேரடி வேலை வாய்ப்பு வாய்ப்பு பெறுவார்கள். இதில் 75 விழுக்காடு பெண்கள் ஆவார்கள். மேலும் 5,000 ஆண்/பெண் மறைமுக வேலை வாய்ப்பும் பெறுவார்கள். ஆரம்பக்காலத்தில் ரூ. 150 கோடி மதிப்புள்ள பொருள்கள் உற்பத்தி செய்யப்படும்.

8.11. செம்பரம்பாக்கம் தோல் தொழிற்பேட்டை

தமிழ்நாட்டிலிருந்து மேற்கூறிய நாடுகளுக்குத் தோல் சம்பந்தமான பொருள்களை ஏற்றுமதி செய்ய நல்ல வாய்ப்பு உள்ளது. தமிழ்நாட்டிலுள்ள பெரும் பாலான தோல் தொழிற் சாலைகள் இராணிப்பேட்டையிலும் மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் அமைந்துள்ளன. எனவே, சென்னைக்கு அருகே ஒரு தோல் தொழிற்பேட்டையை தொடங்க எல்லா வசதிகளும் உள்ளன. நீண்ட ஆய்வுக்கு பின், செம்பரம்பாக்கத்தில் ஒரு தோல் தொழிற்பேட்டையைத் தொடங்குவதற்காக தகுந்த நிலத்தை சிட்கோ தேர்வு செய்துள்ளது.

செம்பரம்பாக்கம் தோல் தொழிற்பேட்டை சென்னையிலிருந்து 26 கி.மீ. தொலைவில் சென்னை-பெங்களூர் நெடுஞ்சாலையில் ஏற்கனவே தொடங்கப்பட்ட திருமழிசை தொழிற்பேட்டையில் நிறுவப்பட்ட உள்ளது. இத்தொழிற் பேட்டையில் சாலை, தண்ணீர், கழிவு நீர் கால்வாய், தெரு விளக்கு போன்ற அடிப்படை வசதிகள் அனைத்தும் உள்ளன,



சென்னை தோல் ஏற்றுமதியாளர் சபை செம்பரம்பாக்கத்தில் ஒரு தோல் தொழிற்பேட்டையைத் தொடங்கும் திட்டத்துடன் சிட்கோவை அணுகியது. மேற்படி தொழிற்பேட்டையில் தோல் சம்பந்தமான பொருள்கள் தயாரிக்க முனைவோர்களின் விருப்பத்தை விளம்பரம் மூலம் சிட்கோ கணித்தது. அதன்படி 40 ஏக்கர் நிலம் இத்தொழிற்பேட்டைகளாக தேர்வு செய்யப்பட்டுள்ளது

தொழில் முனைவோர்களின் விருப்பத்திற்கு ஏற்ப தொழிற் கூடங்களைக் கட்டித்தர திட்டமிடப்பட்டுள்ளது முதற் கட்டமாக 30 தொழில்கள் வரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ 7 கோடியாக இருக்கும். தொழில் முனைவோர்களின் விருப்பத்திற்கு ஏற்ப ஆய்வுக் கூடம் பயிற்சி வசதி போன்ற வசதிகளும் ஏற்படுத்தப்படும்

இத்திட்டம் அமலுக்கு வரும்போது 3,000 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பு கிடைக்கும். ஆரம்ப காலத்தில் ரூ 60 கோடி மதிப்புள்ள பொருள்கள் உற்பத்தி செய்யப்படும்

8.12 கரூர்:

திருச்சி மாவட்டம், கரூர் தாலுக்காவிலுள்ள, ஆத்தூர் கிராமத்தில் ஒரு தொழிற்பேட்டையைத் தொடங்க கரூர் தொழில் முனைவோர்கள் சங்கம் முன் வந்துள்ளது இதற்காக மேற்கூறிய இடத்தில் 38.28 ஏக்கர் பட்டா நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்நிலத்தை பேச்சு வார்த்தை மூலம் வாங்கக் கூடிய கூட்டத்தை கூட்டும்படி திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நிலம் வாங்கப்பட்டு டிசம்பர் மாத வாக்கில் தொழிற்பேட்டை துவங்கப்படும்.

8.13 இராமநாதபுரம்:

இராமநாதபுரம் மாவட்டம்/ தாலுக்காவிலுள்ள கீழ நாகாச்சி கிராமத்தில் புதிய தொழிற்பேட்டையொன்றை சிட்கோ துவங்கியுள்ளது. இவ்விடத்தில் 30 ஏக்கர் நிலத்தை வாங்க அரசு சிட்கோவிற்கு அனுமதியளித்துள்ளது இதில் 10 ஏக்கர் நிலம் ஏற்கனவே 27-7-1991 அன்று கையகப்படுத்தப்பட்டுள்ளது. 1991-92 கட்டுமானத் திட்டத்தின் கீழ் 10 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு ஜூலை 1992-க்குள் சிறு தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

8.14 பரமக்குடி:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுக்காவிலுள்ள [illegible]ரப்புலி மற்றும் அரியநேந்தல், கிராமத்தில் தொழிற்பேட்டை

யொன்றை தொடங்குவதற்காக 5.04 ஹெக்டர் பட்டா நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது இந்நிலம் மாவட்ட ஆட்சித் தலைவர் உதவியுடன் தனிப்பட்ட பேச்சு வார்த்தை மூலம் வாங்கப்படும்

இத்தொழிற்பேட்டையில் தொழிற்கூடங்கள் கட்டுவதற்காக பரமக்குடி சிறு தொழில் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் தலா ரூபாய் 50,000 முன் பணம் தருவதாக உறுதியளித்துள்ளார்கள். நிலங்கள் கையகப்படுத்தப்பட்ட பின்பு கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும். வரும் டிசம்பர் 1992-க்குள் தொழில் ஆரம்பிக்க தொழிற்கூடங்கள் தயார் நிலையில் இருக்கும்.

8.15. ஜப்பானைச் சேர்ந்த அயல்நாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தின் (OECF) உதவியுடன், மொத்தம் ரூபாய் 70 கோடி முதலீட்டில் குறிப்பிட்ட தொழில்களுக்கான தொழிற்பேட்டைகளை அமைக்கும் திட்டத்தைச் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் செயல்படுத்தும். இத்திட்டத்தின் கீழ் பின்வரும் முக்கியத் துறைகளில் குறிப்பிட்ட தொழில்களுக்கான தொழிற்பேட்டைகள் நிறுவப்படும்.—

தொழில் மின்னணுவியல்.

தோல் பொருட்கள்.

உள்ளாடைகள் துணி தயாரிப்பு.

பொறியியல் பொருட்கள்.

மோட்டார் வண்டி துணைப் பாகங்கள்.

பெட்ரோலியம் இரசாயனப் பொருட்கள்.

உணவுப் பொருட்கள் பதப்படுத்துதல்.

இது தொடர்பாக சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், அயல் நாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்துடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கிறது.

8.16. விற்பனை வசதி உதவி :

1992-93 ஆம் ஆண்டில் ரூ. 400 இலட்சம் மதிப்புள்ள ஆணைகளை சிறு தொழில் முனைவோர்களுக்குப் பெற்றுத் தர சிட்கோ திட்டமிட்டுள்ளது. அத்துடன், அடிக்கடி வாங்குவோர் விற்போர் சந்திப்பை ஏற்படுத்தி அதன் மூலம் சிறு தொழில் முனைவோர்களுக்கு ஆணைகளைப் பெற்றுத் தரவும் சிட்கோ திட்டம் வகுத்துள்ளது.



8.17. மூலப் பொருள் உதவி:

1992-93 ஆம் ஆண்டில் ரூ. 100 கோடி மதிப்புள்ள 71,060 மெட்ரிக் டன் எடையுள்ள மூலப் பொருட்களை சிறு தொழில் முனைவோர்களுக்கு விநியோகம் செய்ய சிட்கோ திட்டமிட்டுள்ளது. மேலும் புதிதாக தாமிரம், டின், கம்ரோசிக் போன்ற மூலப் பொருள்களையும் விநியோகம் செய்யத் திட்டமிட்டுள்ளது. சிறு தொழில் முனைவோர்களின் தேவைக் கேற்ப புது மூலப் பொருள்களைப் புகுத்துவதற்கும் சிட்கோ ஆர்வமாக உள்ளது.

9. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 1949 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் துவக்கப்பட்ட முதல் மாநில நிதியுதவிக் கழகமாகும். இக்கழகம் புதிய தொழில் தொடங்குபவர்களுக்கு வேண்டிய நிலம், கட்டிடம், இயந்திரம் முதலியன வாங்குவதற்காக மட்டுமல்லாமல், ஏற்கெனவே இருக்கும் தொழில் பிரிவுகளை விரிவுபடுத்துவதற்கும் அதிக பட்சம் ரூ. 90 இலட்சம் வரை நிதியுதவி வழங்குகிறது. இது சிறிய சின்னஞ் சிறிய தொழில் நிறுவனங்கள் பிற்பட்ட பகுதிகளில் தொடங்குவதற்கு முதன்மையளிக்கிறது. சிறிய மற்றும் மிகச்சிறிய தொழில்களுக்கு பிற்பட்ட பகுதிகளில் தொடங்குவதற்கு முன்னுரிமை வழங்கி நிதியுதவி அளிக்கிறது. மொத்த அளிக்கப்பட்ட தொகையில் 90 சதவிகிதம் மேலான உதவி சிறு தொழில்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

9.1. நடைமுறையிலுள்ள திட்டங்கள்:

தற்போது இக்கழகம் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு நிதியுதவி அளித்து வருகிறது.

1. சிறு தொழில்கள், 2. நடுத்தரத் தொழில்கள், 3. தொழில் வினைஞர்கள், 4. சுலபக் கடன் மற்றும் ஆதார மூலதனக் கடன், 5. மின் உற்பத்தி செய்யும் கருவிகள் (ஜெனரேட்டர்கள்), 6. தங்கும் விடுதிகள் (ஓட்டல்கள்), 7. பதிவு பெற்ற மருத்துவர்கள், 8. போக்குவரத்து வாகனக் கடன், 9. ஒருங்கிணைந்த கடனுதவி, 10. மீன் பிடி படகுகள், 11. சிறு மருத்துவமனைகள், 12. நவீனப்படுத்தும் திட்டம், 13. உபகரண மறு உதவித்திட்டம், 14. நலிவுற்ற தொழில்களின் புனரமைப்புத் திட்டம், 15. புதிய தொடக்க நிதியுதவித் திட்டம், 16. முன்னாள் இராணுவத்தினர் (செம் பெக்ஸ்) திட்டம், 17. பெண்கள் தொழில் முனைவோர் திட்டம், 18. ஆசிய வளர்ச்சி வங்கிக் கடன், 19. ஒருங்கிணைந்த குறித்த காலக் கடன் திட்டம், 20. மகளிர் நிதியுதவித் திட்டம் மற்றும் 21. தேசிய பொது நிதித் திட்டம்.

9.2. தமிழ்நாட்டில் உள்ள ஜவுளி, இரசாயனம் மற்றும் இரசாயனப் பொருட்கள், உணவு, காகிதம் மற்றும் காகிதப் பொருட்கள், உலோகப் பொருட்கள், தோல் மற்றும் தோல் பொருட்கள், உலோகமற்ற தாதுப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்களை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மிகச் சிறந்த முறையில் பணியாற்றி உள்ளது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் திருப்பூரில் பனியன் தொழிற்சாலைகள் உருவாவதற்கும், சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் பட்டுத் தொழில் மற்றும் ஜவ்வரிசி உற்பத்தித் தொழில்கள் வளர்வதற்கும், சிவகாசியில் தீப்பெட்டி மற்றும் ஆப்செட் அச்சகங்கள் உருவாவதற்கும் மிகச் சிறப்பாக பணியாற்றியுள்ளது.

9.3, தொழில் நிறுவனங்களுக்கு விரைந்து பணி செய்திட, ஏற்கனவே நடை முறையிலிருக்கின்ற கடன் விண்ணப்பங்களும், கடன் வழங்கும் நெறி முறைகளும் எளிதாக்கப்பட்டிருக்கின்றன. கடன் வாங்கும் நிறுவனங்களின் மனக் குறையைத் துடைப்பதற்கும், பாதித் தொகை வழங்கப்பட்ட நிறுவனங்கள் மீதித் தொகையை துரிதமாக பெறுவதற்கும்; ஏற்கனவே ஒரு ''குறை தீர்க்கும் பிரிவு'' மற்றும் ஒரு ''சிறப்பு மேற்பார்வைப் பிரிவு'' இருந்த போதிலும், விண்ணப்பதாரர்கள் தங்களுடைய முறையான திட்டத்தை தாமதமின்றி நிறைவேற்ற புதியதாக ''பாதுகாப்புப் பிரிவு'' என்ற அமைப்பு விண்ணப்பதாரர்களின் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும், ஆலோசனை அளிப்பதற்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

9.4. மேலும் இந்நிறுவனம் அவ்வப்போது மண்டல அலுவலகங்களில் தலைவர் நிர்வாக இயக்குநர் தலைமையில் குறை தீர்க்கும் நாட்கள் நிர்ணயித்து உடனடியாக தொழில் முனைவோர்களின் குறைகளைத் தீர்த்து வைக்கிறது.

10. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்.

10.1. 'டான்சி' எனும் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் 1965 ஆம் ஆண்டில் தொழில் மற்றும் வணிகத் துறையின் கீழ் முதல் மூன்று ஐந்து ஆண்டு திட்டங்களின் போது தொழில் வளர்ச்சியை உயர்த்தவும் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான உள்ளமைப்பை ஏற்பாடு செய்து கொடுக்கவும், பயிற்சி மற்றும் செயல்முறை சேவை நிலையங்களாகவும் அமைக்கப்பட்ட 64 தொழிற்கூடங்களை ஏற்று நடத்த ஆரம்பிக்கப்பட்டது.

10.2. இவ்வாறு டான்சி ஏற்று நடத்திய தொழிற் கூடங்களில் சில தொழிற்கூடங்கள் தமிழ்நாடு பீங்கான் தொழில் நிறுவனம், தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் நிறுவனம், தமிழ்நாடு கனிம நிறுவனம் மற்றும் தமிழ்நாடு தோல் அபிவிருத்திக் கழகம் போன்ற அரசு நிறுவனங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டன. டான்சியில் மேலும் சாராவியை (Spirit) மூலப் பொருளாகக் கொண்ட பொருட்களை தயாரிக்கும் தொழிற்கூடம், கைக் கடிகாரங்களின் உறுப்புகளை இணைக்கும் தொழிற்கூடம், அறுவை மற்றும் துளை போடும் இயந்திரம் தயாரிக்கும் தொழிற்கூடம், கைப்பம்பு தயாரிக்கும் தொழிற்கூடம் ஆகிய சில புதிய தொழிற்கூடங்கள் தொடங்கப்பட்டது. டான்சி தற்பொழுது 43 உற்பத்தித் தொழிற்கூடங்கள் மற்றும் ஆறு விற்பனை நிலையங்களுடன் சில திட்ட வேலை பிரிவுகளையும் தன்னகத்தே வைத்து நடத்தி வருகிறது.



10.3. டான்சியின் உற்பத்திப் பொருட்களைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.—

(1) மின் உற்பத்தி நிலையங்கள், தொழிற்கூடங்கள் ஆகியவற்றிற்குத் தேவையான உயர் கட்டுமானப் பொருட்கள்.

(2) நுண் அலைக் கோபுரங்கள், உயர் அழுத்த மின் சக்தி கோபுரங்களுக்கு துத்தநாக மூலாம் பூசிய கோபுரப் பாகங்கள்.

(3) சிறு கட்டுமானங்கள், தகடு உலோகப் பொருட்கள், மின் வாரியத்திற்குத் தேவையான மின் கடத்திப் பொருட்கள்.

(4) உயர் தொழில்நுட்ப பாகங்கள்.

(5) பாதுகாப்புத்துறை, விண்வெளி ஆராய்ச்சி நிலையங்களுக்குத் தேவையான சிறப்புவகை பொருட்கள்.

(6) வார்ப்படக் குழாய்கள், அதனைச் சார்ந்த துணைப் பொருட்கள்.

(7) மரத்தாலான அறைகலன்கள் (Wooden Furnitures) தடுப்பு மற்றும் உள்ளறை வேலைப்பாடுகள்.

(8) வீடு, அலுவலகம், மருத்துவமனைகளுக்குத் தேவையான எஃகு பொருட்கள், அறைகலன்கள்.

(9) சாராவியை (Spirit) மூலப்பொருளாகக்கொண்டப் பொருட்கள்.

(10) இயந்திரக் கருவிகள், இயந்திரவிசை செக்கு, பூட்டு மற்றும் கடிகாரக் கருவிகள் இணைப்புகள்.

10.4. டான்சி தனது பெருமுயற்சியால் மத்திய, மாநில அரசு நிறுவனங்களுக்குக் குறிப்பிடத்தக்க பங்கு ஆற்றியது. ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்ததோடு இறக்குமதி குறைப்பை ஏற்படுத்தி பாதுகாப்பு, விண்வெளி ஆராய்ச்சி நிறுவனங்களுக்குத் தேவையை, கூடுதல் உற்பத்தி வசதியை பெருக்காமல் 1965-ஆம் ஆண்டு கையகப்படுத்திக்கொண்ட உற்பத்தி வசதிகளை வைத்து முன்னேற்றம் கண்டது.

10.5 மாண்புமிகு முதலமைச்சரின் ஆய்வு :

டான்சியின் செயல்பாடு மற்றும் அதைச் சார்ந்த அம்சங்களைச் சென்ற அக்டோபர் (1991) திங்கள் 14-ஆம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் ஆய்வுசெய்து, நிறுவனத்தின் நிதி நிலைக்கு வழிவகைகளும், பணி ஆணைகள் பெறுவதில் நிறுவன முன்னுரிமையும், மேம்படுத்த முடியாத தொழிற்கூடங்களை மூல செயல்பாட்டை மேம்படுத்த தேவையானவற்றிற்கு ஆலோசனை வழங்கினார்கள்.

10.6 1992–93-ஆம் ஆண்டிற்கான செயல்பாட்டுத் திட்டம் :

மூடிய தொழிலகங்களின் சொத்துக்களை விற்று செயல் நிதியை திரட்ட எடுக்கப்பட்ட முடிவினாலும், நடத்த முடியாத நான்கு தொழிலகங்களை 1991–92-இல் மூடியதன் காரணமாகவும், டான்சியின் செயல்நிதியில் முன்னேற்றம் ஏற்படவும், நடப்புச் செலவினங்கள் குறையவும் வாய்ப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேம்பாடடைந்த நிதி நிலைமையைப் பயன்படுத்தி ஆண்டு விற்பனையளவை ரூ. 30 கோடியாக்கவும், கடன்-சமபங்கு மூலதன விகிதத்தையும், வட்டி சலுகை முதலியவற்றை மாற்றியமைப்பதன் மூலமாக நிதி நிலைமையை திருத்தியமைத்து நஷ்டத்தை ரூபாய் 2.20 இலட்சங்களைக் குறைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

11. தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம்.

தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் (டால்கோ) ரூ. 10.00 கோடி அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடன் மார்ச் 1983-இல் ஓர் அரசு நிறுவனமாக நிறுவப்பட்டது. இன்றைய தேதியில் அரசின் பங்கீட்டுத்தொகை ரூ. 250.00 இலட்சம் ஆகும்.



இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் கீழ்வருமாறு :—

தமிழ்நாட்டில் தோல் தொழில் வளர்ச்சியுறும் வகையில்—

(அ) சிறிய அளவில் ஈடுபட்டுள்ள தோல் பதனிடுவோர்களுக்குத் தேவையான மூலப்பொருட்கள், இரசாயனப் பொருட்கள் ஆகியவைகளை நியாயமான விலையில் அளித்து உதவுதல் :

(ஆ) காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்குத் தேவையான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுத்தல் ;

(இ) சிறிய அளவில் காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்குத் திறமையை மேம்படுத்துதல் ;

(ஈ) தோல் தொழில் முனைவோர்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல் ;

(உ) தமிழ்நாட்டில் உள்ள தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் தோல் கழிவுநீரினால் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் தமிழ்நாட்டில் ஆறு இடங்களில் பொது நோக்குச் சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்து மண்வளம், சுற்றுப்புறச்சூழ்நிலையை பாதுகாத்தல் ;

டான்சியின்கீழ் இயங்கி வந்த நான்கு தோல் தொழிற்கூடங்களையும், சிட்கோவின்கீழ் இயங்கி வந்த தோல் தொழிற்பேட்டைகளையும் டால்கோ நிறுவனம் 1986-இல் நடப்புத் திட்டங்களாக மேற்கொண்டது.

மேற்கண்ட நோக்கங்களை அடையும் வகையில் இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் கீழ்வருமாறு :—

11.1 சிறிய தோல் பதனிட்டாளருக்கான உதவிகள் :

சிறிய தோல் பதனிட்டாளர்களின் முக்கிய தேவையான இரசாயனப் பொருட்கள் மற்றும் வாட்டில் எக்ஸ்டிராக்ட் ஆகியவைகள் நியாயமான விலையில் வழங்கும் நோக்கத்துடன் ஐந்து மூலப் பொருட்கள் வங்கிகள், திண்டுக்கல், ஈரோடு, பேரணாம்பட்டு, குரோம்பேட்டை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்

களில் இயங்கி வருகின்றன. இந்த மூலப்பொருட்கள் வங்கிகள் மேலும் வலுப்படுத்தப்பட்டும் மற்றும் சேவைத் திறனை அதிகரிக்கும் செயல்பட வழிவகை காணப்படுகிறது.

11.2 சிறிய அளவில் காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு உதவுதல் :

பெரம்பூரில் ஒரு பொருட்கள் சேகரிப்பு மையம் டிசம்பர் 1985-ஆம் ஆண்டிலிருந்தும் மற்றும் குன்னூரில் உற்பத்தி மற்றும் மேம்பாட்டு மையம் ஜூன் 1986-ஆம் ஆண்டிலிருந்தும் செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்கள் கைவினைஞர்களிடமிருந்து தரமான காலணிகள் மற்றும் தோல் பொருட்களை சேகரித்து இடைவிடாத வேலை வாய்ப்பினை அளித்து வருகிறது.

இந்த வகையில் சேகரிக்கப்பட்ட பொருட்கள் டால்கோவின் வணிகப் பெயரான " சுப்ரா " என்ற பெயரில் டால்கோவின் விற்பனைக் கூடங்கள் மற்றும் பொருட்காட்சிகளில் பங்கேற்பதன் மூலமாகவும் விற்பனை செய்யப்படுகிறது. இந்த பொருள் சேகரிக்கும் நிலையங்கள் மற்றும் விற்பனைக் கூடங்கள் ஆகியவைகளின் நடவடிக்கைகளில் மேம்பாடு அடையும் வகையில் வினைஞர்களிடமிருந்து பொருட்களை வாங்குவதை அதிகரித்து மேம்படுத்த திட்டம் உள்ளது.

11.3. தோல் தொழில் முனைவோருக்கு உதவுதல் :

சிட்கோ நிறுவனத்தின்கீழ் இயங்கி வந்த மாதவரத்திலுள்ள, தோல் தொழிற்பேட்டையினை டால்கோ 18-6-1986இல் மேற்கொண்டது. இந்த தொழிற்பேட்டையின் பராமரிப்பையும் தவணை முறையில் தொழிற்கூடங்களுக்கான பணம் வசூல் செய்தல், ஆகிய பணிகளை டால்கோ நிறுவனம் செய்து வருகிறது. தற்போது 32 தொழிற்கூடங்கள் தோல் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தவணை முறையில் கொடுக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

இந்தத் தொழிற்பேட்டையை மேலும் விஸ்தரிக்க வழிவகைகள் உள்ளன. இந்த வகையில் ஏற்றுமதி உத்தியுடன் கூடிய ஒரு தோல் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை மேம்படுத்தும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

11.4. தோல் பதனிடும் தொழிலுக்கான உதவிகள் :

தமிழ்நாட்டில் தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் நீண்டகாலப் பிரச்சினையாக இருந்து வருகிறது.



டால்கோ இதற்கு முக்கியத்துவம் அளித்து பிரச்சினையை தீர்க்க முக்கியத்துவம் அளித்துள்ளது. மாநிலத்தில் ஒரே இடத்தில் குழுமியுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரைச் சுத்தமாக்க பொதுநோக்கு சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவுவதில் டால்கோ ஈடுபட்டுள்ளது. இவ்வகையான ஆறு பொது நோக்கு சுத்திகரிப்பு நிலையங்கள் வாணியம்பாடி, இராணிப்பேட்டை ஆம்பூர், பேரணாம்பட்டு, திண்டுக்கல் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அமைய இருக்கிறது.

மத்திய அரசு மற்றும் மாநில அரசு ஒவ்வொன்றும் ரூ. 394.00 இலட்சம் சம பங்கு மூலதனமாக அளித்துள்ளன. வாணியம்பாடி மற்றும் ஆம்பூர் நிலையங்கள் நிறுவப்பட்டு, கட்டுமானப்பணி முடியும் தருவாயில் உள்ளது. 1992-93-இல் மூன்றாவது காலாண்டு முடிவில் முழுமையாக இயங்கத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மற்ற நிலையங்கள் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு துவக்க நிலையில் உள்ளது.

11.5. தோல் தொழிற்கூடங்கள் :

டான்சி நிறுவனத்தின்கீழ் இயங்கி வந்த நான்கு தோல் தொழிற்கூடங்கள் 14-4-1986-ஆம் ஆண்டு டால்கோவினால் மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்ட இடங்களில் இயங்கி வருகிறது:—

(1) டால்கோ தோல் பதனிடும் தொழிற்கூடம், விண்ணமங்கலம்.

(2 டால்கோ தோல் பதனிடும் தொழிற்கூடம், மாதவரம்

(3) டால்கோ தோல் தொழிற்கூடம், பல்லாவரம்.

(4) டால்கோ தோல் தொழிற்கூடம், பெரம்பூர்.

இரண்டு தோல் பதனிடும் தொழிற்கூடங்கள் முழுமையாய் பதப்படுத்தப்பட்ட தோல் உற்பத்தியிலும் மற்றும் தோல் பதனிடுவதற்கான சேவை வசதியினையும் செய்து வருகிறது. மற்ற இரண்டு தோல் தொழிற்கூடங்கள் மூடுகாலணி, வெட்டப்பட்ட மூடுகாலணி பாகங்கள், கையுறை, கண்டக்டர் பைகள், இருப்புப் பட்டைகள் முதலியவைகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்

டுள்ளன. இத் தொழிற்கூடங்கள் அரசு நிறுவனங்கள் மற்றும் மாநில அரசின் தோல் பொருட்களின் தேவைகளை ஈடு செய்கிறது. 1991–92ஆம் ஆண்டு பிலாய் இரும்புத் தொழிற்சாலைக்குத் தேவையான கையுறை செய்வதற்காக பதப்படுத்தப்பட்ட தோலினை விற்பனை செய்வதற்கு ரூ. 2.00 கோடி அளவில் விற்பனை ஆணை பெறப்பட்டுள்ளது. மேலும் சுகாதாரத் தொழிலாளர்களுக்குத் தேவையான மழைக்கோட்டினை உற்பத்தி செய்து வழங்குவதற்காக மாநில அரசு ரூ. 98.00 இலட்சம் ஆணை வழங்கியுள்ளது.

11.6 இலவச காலணித் திட்டம் :

தமிழக அரசு 1987–88ஆம் ஆண்டு பள்ளி செல்லும் குழந்தைகளுக்கும் மற்றும் ஊரக உழைக்கும் தாய்மார்களுக்கும் இலவச காலணி வழங்கும் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. இத் திட்டத்தைச் செயல்படுத்த கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சமூக நலத்துறையுடன் செயல்பட டால்கோ முதன்மை முகவராக நியமிக்கப்பட்டது.

(1) இத் திட்டம் 1990–91ஆம் ஆண்டு தொடரப்பட்டு 32.50 இலட்சம் இணைக்காலணிகள் உற்பத்தி செய்து வழங்க அரசின் ஆணை பெறப்பட்டது. இதில் டால்கோவின் பங்கு 26.50 இலட்சம் இணைக்காலணிகள் உற்பத்தி செய்து வழங்குவதாகும். டால்கோவுக்கு வழங்கப்பட்ட இந்த மொத்த உற்பத்தி முடிக்கப்பட்டு காலணிகள் வழங்கப்பட்டுவிட்டது.

(2) இந்தத் திட்டம் 1991–92ஆம் ஆண்டு ரூ. 618.87 இலட்சம் அளவில் தொடரப்பட்டு வருகிறது. காலணி உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ஆண்டு முழுவதும் 1,20.000 மனித நாட்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கிறது.

11.7. செயல்பாட்டு விளைவுகள் :

இந்நிறுவனத்தின் செயல்பாட்டு விளைவுகள் 1991–92ஆம் ஆண்டு ஒரு திருப்பு முனையாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிறுவனத்தில் 31–3–1991ஆம் ஆண்டு முடிய ஏற்பட்டுள்ள மொத்த இழப்பாகிய ரூ. 327.39 இலட்சத்தில் 20 விழுக்காடு சரிக்கட்டப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



12. செயலாக்க ஆய்வு :

1991–92ஆம் ஆண்டில் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்ட பல்வேறு திட்டப் பணிகள் அவற்றின் சாதனைகள் ஆகியவற்றின் விவரங்கள் சாதனை ஆய்வு அறிக்கையில் தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

1992 ஏப்ரல் 20]

## இணைப்பு—V

[545—ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பை காண்க]

## கொள்கை விளக்கக் குறிப்பு— 1992–1993.

### பட்டு வளர்ச்சித் துறை.

சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்குக் கூடுதல் வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதற்காக கிராமப்புறங்களில் கிராமத் தொழில்களையும் சிறுதொழில்களையும் ஊக்குவிப்பதே இந்த அரசின் கொள்கையாகும். பின்வரும் பயன்பாடுகளினால் பட்டு வளர்ச்சி மேம்பாடு குறித்து அரசு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகிறது :

1. குறைந்த முதலீடு.
2. அதிக வேலைவாய்ப்பு.
3. வருவாயைப் பகிர்ந்தளித்தல்.
4. ஊரக வளர்ச்சி.
5. அதிக அளவில் பெண்களை ஈடுபடுத்துதல்.
6. அந்நியச் செலவாணியை ஈட்டுதல்.

02. பட்டு வளர்ச்சித் துறையின் நடவடிக்கைளில் பின் வருவனவும் அடங்கும் :

1. உயர்ரக முசுக்கட்டைச் செடி வகைகளை நடுவதற்கு உழவர்களைத் தூண்டுதல்.

2. முசுக்கட்டைச் சாகுபடி, பட்டுப்புழு வளர்ப்பு மற்றும ட்டுநூல் சுற்றுதல் ஆகியவற்றில் பயிற்சி அளித்தல்.

3. பட்டுப்புழு வளர்ப்பிற்குத் தேவையான சாதனங்களை வாங்குதல் மற்றும் பட்டுப்புழு வளர்க்கும் கொட்டகைகளைக் கட்டுதல் ஆகியவற்றிற்கு உதவி செய்தல்.

4. பட்டுப்புழு கூட்டின் உற்பத்தியை அதிகரிக்க பட்டுப்புழு வளர்ப்பவர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவியை வழங்குதல் பட்டுப்புழுக்களுக்கு உண்டாகும் நோயைக் கட்டுப்படுத்தி அறுவடை பொய்த்துப்போவதைத் தடுத்தல்.

5. நல்லதரம் வாய்ந்த நோயற்ற பட்டுப்புழு முட்டைகளை வழங்க உறுதி செய்தல்.

[1992 ஏப்ரல் 20

6. தனியார் மற்றும் கூட்டுறவுத் துறைகளில் பட்டுநூல் சுற்றுவதை அதிகரித்தல்.

7. போட்டி விற்பனைத் திட்டங்களின் மூலம் பட்டுப்புழுக் கூடுகள் பட்டுநூல் ஆகியவற்றை விற்பனை செய்வதற்கான வசதிகளுக்கு வகை செய்தல்.

0.3. 1979-ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சித்துறை ஏற்படுத்தப்பட்ட பின்னர் இத்துறையின்சிறந்ததொரு உன்னத வளர்ச்சியை எய்துவதற்காக கூடுதல் அடிப்படை வசதிகளான வித்தப்பண்ணைகள், பட்டுவித்தகம், பட்டுக்கூடு அங்காடிகள் தொழில் நுட்பப் பயிற்சி மையங்கள், பட்டுப் பரிமாற்றம் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டன். இத்தொழில் தொடர்புடைய பல்வேறு நடவடிக்கைகளின் வளர்ச்சியை விரைவுபடுத்த கூடுதல் நிதி திரட்டும் பொருட்டு, உலக வங்கி சுவிஸ் மேம்பாட்டு நிறுவனம் ஃபோர்டு பவுண்டேஷன் (Ford Foundation) பன்னாட்டுத் தொழிலாளர் நல நிறுவனம், பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி நிறுவனம் போன்ற பல்வேறு வெளிமுகவரமைப்புகளிடமிருந்து நிதியுதவி பெற்று பல திட்டங்கள் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டன. குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள பிரச்சினைகளைச் சமாளிக்கும் பொருட்டும் சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகுதியினருக்கு அதிக வருவாய் ஈட்டித்தரவும், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள், மேற்குமலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம், வறட்சிப் பாங்கான பகுதித் திட்டம் போன்ற பயன்பெறுவதை அடிப்படையாகக் கொண்ட திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் ஆதி திராவிடர் மேம்பாட்டிற்கான மத்திய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டத்தின் கீழ் பட்டுப்புழு வளர்ப்புத் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் செயல்படுத்தப்படுவதில் ஏற்பட்ட முன்னேற்றமும் 1992–93 ஆம் ஆண்டில் நிறைவேற்றக் கருதப்பெற்ற திட்டங்களும் வருமாறு

<u>0.4. உலக வங்கி சுவிஸ் மேம்பாட்டு கூட்டுறவு அமைப்பின் உதவி பெறும் தேசிய பட்டுவளர்ச்சித் திட்டம் ;</u>

நமது மாநிலத்தில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் மிக முக்கியமான ஒருங்கிணைந்த திட்டம், தேசிய பட்டுவளர்ச்சி திட்டமாகும். ரூபாய் 41.77 கோடி ஒதுக்கீட்டுடன் கூடிய ஐந்தாண்டுக் காலத்தில் நிறைவேற்றப்படும் இத்திட்டம் (கடன் ரூபாய் 18.174 கோடி அரசு செலவுத் தொகை ரூபாய் 21.942 கோடி) 1989-90 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

<u>இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன ;</u>

(அ) மேலும் 12,000 எக்டேர் பரப்பளவை முசுக்கட்டை விளைச்சலின் கீழ் கொண்டு வருவதன் மூலம் மாநிலத்தில் கச்சாப் பட்டின் உற்பத்தியினை 859 மெட்ரிக் டன்னாக அதிகரித்தல்.



1992 ஏப்ரல் 20]

(ஆ) பாசனம் பெறும் நிலைமைகளில் பட்டுக்கூடு உற்பத்தியை ஆண்டிற்கு ஏக்கர் ஒன்றுக்கு 180 கி. கிராமிலிருந்து 240 கி. கிராமாக அதிகரித்தல் வானவாரி நிலைமைகளின் கீழ் 51 கி. கிராமிலிருந்து 60 கி. கிராமாக அதிகரித்தல்.

(இ) இத்திட்டக்கால முடிவில் 100 முட்டைகளைக் கொண்ட தொகுதியில் உற்பத்தி செய்யப்படும் பட்டுக் கூட்டின் சராசரி அளவை 22.5 கி. கிராமிலிருந்து 30 கி, கிராமாக அதிகரித்தல்,

(ஈ) பட்டுப்புழு முட்டை உற்பத்தியில் தன்னிறைவு பெறுதல்,

(உ) திட்டக் காலத்தில் ஓர் இலட்சம் மனித உழைப்பு ஆண்டுகள் கூடுதலாக ஏற்படுத்துதல்.

1992–93-ஆம் ஆண்டானது இத்திட்டம் செயல்படுத்தப்படும் 4–ஆவது ஆண்டாகும். இத்திட்டம் மாநிலத்தின் 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதல் மூன்றாண்டுகளுக்கு வரையறுக்கப்பட்ட திட்ட இலக்கும் நிதி இலக்கும் முழுவதும் எய்தப்பட்டுவிட்டது. மாநிலத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுவதில் அடைந்த முன்னேற்றம் குறித்து உலக வங்கி ஆய்வுக் குழு பாராட்டு தெரிவித்துள்ளது. திரும்பப்பெற வேண்டிய தொகைக்கான கோரிக்கைகள் முன்னரே அனுப்பப்பட்டுள்ளன. 31–7–1991 வரையிலான ஒதுக்கீடு தொகைகள் பெறப்பட்டன, இத்திட்டத்தின் நடவடிக்கைகள் முழுவேகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1992–93 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. 1992–93 ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டின் பெரும் பகுதி இதற்காகத்தான் ஒதுக்கப்படுகிறது. 1992–93 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படவுள்ள முக்கிய பணிகள் வருமாறு :

<u>04.1. முசுக்கட்டை செடி சாகுபடி செய்யும் பரப்பை அதிகரித்தல் :</u>

1992–93 ஆம் ஆண்டில் கூடுதலாக 7.500 ஏக்கர் பரப்பில் முசுக்கட்டை சாகுபடி செய்யக் கருதப்பட்டுள்ளது. தரமான முசுக்கட்டை செடி நாற்றுகள் மிகக் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்,

4.2. பயிற்சித் திட்டம் :

அ. விவசாயிகளுக்குப் பயிற்சி :

விவசாயிகளை பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபடுத்துவதற்கான பயிற்சித் திட்டம் :

1992-93 ஆம் ஆண்டில் பட்டுப்புழு வளர்ப்பை மேற்கொள் வதில் ஈடுபடுத்த 2,50ப புதிய விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படும், இந்தப் பயிற்சி உதவித்தொகை திட்டத்தின் கீழ் முன்னணி உழவர்களின் வயல்களிலும் அரசுப் பண்ணை களிலும் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள ஒவ்வொரு விவசாயிக்கும் ரூபாய் 150 வழங்கப்படும், மேலும் 150 ரூபாய் மதிப்புள்ள இளம்பட்டுப்புழு வளர்ப்பு அறிவியல் உபகரணங்கள் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் வழங்கப்படும்.

2, தீவிரப் பயிற்சித் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் பட்டுப்புழு முட்டை உற்பத்தி செய்யும் 20ப விவசாயிகளுக்கும் விருப்பமுள்ள ஏனைய விவசாயி களுக்கும். தேசீய பட்டு வளர்ச்சி திட்டத்தின்கீழ் நிறுவப் பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட உழவர் பயிற்சி நிலையங்களில் மாதமொன்றுக்கு 300 ரூபாய் மாதாந்திர பயிற்சி உதவித் தொகையுடன் பட்டுப்புழு வளர்ப்பு குறித்து ஒரு மாதகாலத்திற்குத் தீவிர பயிற்சியும் அளிக்கப்படும். இந்த நடமாடும் தொழில் பயிற்சி பிரிவுகளின் மூலம் பயிற்சி பெற வுள்ள மொத்த விவசாயிகளில் 30 சதவீதம் பேர் பெண்களாக இருப்பர்,

ஆ, பட்டுநூல் சுற்றுவோருக்கான பயிற்சித் திட்டம் :

பட்டுநூல் சுற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்ட 6 மையங் களில் பயிற்சி உதவித் தொகையுடன் 240 பட்டுநூல் சுற்று வோருக்குப் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது, 6 திங்கள் கொண்ட பயிற்சிக் காலத்தில் பட்டுநூல் சுற்றுவதில் பயிற்சி பெறுவோருக்கு, சர்க்கா, நாட்டு ராட்டை மற்றும் பலமுனை கொண்ட பேசின் ஏனம் ஆகியவற்றில் பட்டுநூல் சுற்றுவதில் பயிற்சியளிக்கப்படும். அவர்களுக்குத் திங்கள் ஒன் றுக்கு 250 ரூபாய் பயிற்சி உதவித் தொகையாக வழங்கப் படும்,



இ, பட்டுப்புழு முட்டை வித்தகப் பயிற்சி :

இம்மாநிலத்திலுள்ள உரிமம் பெற்ற பட்டுப்புழு முட்டை உற்பத்தி செய்யும் தனிப்பட்டவர்களுக்குப் பட்டுப்புழு முட்டை உற்பத்தி செய்வது குறித்து குறுகிய காலப் பயிற்சி யாக 15 நாட்களுக்குப் பயிற்சியளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது,

ஈ, ஏனைய பயிற்சித் திட்டம் :

பட்டுப்புழு வளர்ப்போர் பட்டு நூல் சுற்றுவோர். தொழில் நுட்ப விரிவாக்கப் டணியாளர் ஆகியோருக்குத் தொழில் நுட்பம். நிருவாகம். நிதி போன்ற பல்வேறு துறைகளில் விரிவான பயிற்சியளிக்கவும். இங்கு பணிபுரியும் ஆண் பெண் தொழிலாளர்கள் குறித்த பிரச்சினை தொடர்பாகவும் திட்டம் வகுக்கப்பட்டது. திட்ட காலத்தில் 532 இலட்சம் ரூபாய் செலவில் இந்த விரிவான பயிற்சித் திட்டத்தைச் செயல்படுத்த உலக வங்கியும், மத்திய அரசும் தங்கள் இசைவினைத் தெரி வித்துள்ளன. இப் பயிற்சித் திட்டம் 1991— 92 ஆம் ஆண்டில் ஏற்கனவே செயல்படத் தொடங்கியுள்ளது. இத்திட்டம் 1992— 93 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

3. ஆதார பட்டுப்புழு முட்டைப் பண்ணை :

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பட்டுப்புழு இனங்களை உற்பத்தி செய்யும், பராமரிக்கும் பண்ணைகளைத் துறை ஏற் படுத்தியுள்ளது. தேசிய பட்டுப்புழு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் பழைய முசுக்கட்டை மரங்களை அகற்றிவிட்டு, தரமுள்ள வகைகளைச் சேர்ந்த முசுக்கட்டை மரங்களைப் பயிரிடும் திட்டம் ஏற்கனவே முடிக்கப்பட்டு உற்பத்தி தொடங்கப் பட்டுள்ளது. இந்த பட்டுப்புழு முட்டைப் பண்ணைகள் 1992— 93 ஆம் ஆண்டுக்கான ஆதார பட்டுப்புழு முட்டை களுக்குரிய தேவையைப் பூர்த்தி செய்யும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. பல்வேறு பிரிவுகளுக்கான சாதனங்களைக் கொள் முதல் செய்யும் பணி ஏறக்குறைய முடிவடைந்து விட்டது. இத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப் பணி பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது.

4. பட்டுப்புழு வித்தகம் :

அ. அரசு வித்தகம் :

1992— 93 ஆம் ஆண்டில் துறை நடத்திவரும் வித்தகங்கள், தனியார் வித்தகங்கள், மத்திய பட்டு வாரிய வித்தகங்கள் ஆகியவற்றில் 25 மில்லியன் முட்டைகளை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உலக வங்கி வரையறை

செய்த விதிமுறைகளின்படி இந்த அரசு வித்தகங்கள் திட்டத்தின் நான்காம் ஆண்டிலிருந்து வணிக ரீதியில் நடத்தப்பட வேண்டியுள்ளன. தொடரினச் செலவுகளைச் செய்ய ஒவ்வொரு வித்தகத்திற்கும் சுழல்நிதிக்கு வகை செய்யப்பட்டுள்ளது. பெரும்பாலான வித்தகங்கள் ஆதாயத்தில் செயல்படத் தொடங்கியுள்ளன. தனி அலகான இந்த வித்தகங்கள், 1992—93-ஆம் ஆண்டில் ஆதாயத்தை ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றன. சாதனங்கள் வாங்கப்பட்டுள்ளன. கட்டிடங்கள் கட்டும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. 1992—93-ல் பட்டு முட்டை உற்பத்தியை அதிகரிக்க அவை முழுவதும் பயன்படுத்தப்படும்.

### ஆ. தனியார் வித்தகங்கள் :

இத்திட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற தனியார் வித்தகங்கள், தங்களின் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தி அளவை 1992— 93-ஆம் ஆண்டில் எய்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றன.

### 5. தொழில் நுட்பச் சேவை மையங்கள் :

இத்திட்டத்தின் கீழ் 81 தொழில் நுட்பச் சேவை மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுக்கு ஒளி, ஒலிச் சாதனங்கள், விளம்பரப் படங்கள், புகைப்படங்கள் முதலானவை வழங்கப்பட்டுள்ளன. இந்த மையங்களின் பணியாளர்கள், உழவர்களுக்கு வங்கிகளிடமிருந்து கடன் பெறவும், பட்டுக் கூடுகளை விற்பனை செய்யவும் ஏற்பாடு செய்வதுடன், முசுக் கட்டை சாகுபடியை மேற்கொள்ள ஊக்குவித்தும் பட்டுப்புழு வளர்ப்பில் உதவி புரிந்தும் நோய்களைக் கட்டுப்படுத்தியும் சேவை புரிவர்.

### 6. பட்டுக் கூடு அங்காடி :

### அ. விதைக்கான பட்டுக்கூடு அங்காடி :

ஒசூர், தேன்கனிக்கோட்டை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் விதைக்கான பட்டுக்கூடு அங்காடிகள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. இந்த அங்காடிகள் செயல்படத் தேவையான இடம் மற்றும் சாதனங்கள் முதலானவற்றை அளிப்பதன் மூலம் இவை மேம்படுத்தப்பட்டு வருகின்றன. கட்டுமானப் பணிகள் 1992— 93-ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.



### ஆ. வணிக ரீதியில் செயல்படும் பட்டுக் கூடு அங்காடிகள் :

வணிக ரீதியில் செயல்படும் 9 பட்டுக்கூடு அங்காடிகளை மேம்படுத்தும் பணியும் 2 புதிய பட்டுக்கூடு அங்காடிகளை ஏற்படுத்தும் பணியும் கடந்த ஆண்டிலேயே தொடங்கப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் 1992— 93 ஆம் ஆண்டில் முடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அங்காடிகளில் 1992— 93 ஆம் ஆண்டில் சுமார் 50 கோடி ரூபாய் மதிப்புள்ள 30 இலட்சம் கிலோ பட்டுக்கூடுகள் பரிமாற்றிக் கொள்ளப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

### 7. பட்டு நூல் சுற்றும் பிரிவுகள்:

அடிப்படை வசதிக்கு வகை செய்யும் விதமாக துறை 16 பட்டு நூல் சுற்றும் பிரிவுகளை நடத்தி வருகிறது. இந்தப் பட்டுநூல் சுற்றும் பிரிவுகளில் 1992— 93 ஆம் ஆண்டில் 30 டன் பட்டுநூல் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தனியார் துறையே பட்டுநூல் சுற்றும் பணியைச் பிரதானமாக மேற்கொண்டு வருகிறது. தனியார், பட்டுநூல் சுற்றும் பிரிவுகளுக்கு பயிற்சி பெற்ற தொழிலாளர்களும், நடைமுதல் மூலதன உதவியும் அளிக்கப்படுகின்றது. 1992—93 ஆம் ஆண்டில் தனியார் துறையில் கூடுதலாக 235 பட்டுநூல் சுற்றும் கருவிகளை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த பட்டுநூல் சுற்றும் பிரிவுகளுக்குத் தேவைப்படுகின்ற நடை முதல் மூலதன உதவி, தேசிய பட்டு வளர்ச்சி திட்டத்தின்கீழ் மத்திய பட்டு வாரியத்திடமுள்ள பொது நிதியிலிருந்து, பிரிவு ஒன்றுக்கு 9,000 ரூபாய் என்ற வீதத்தில் வழங்க ஏற்பாடு செய்யபட்டும்.

தனியார் துறையில் உயர்தரமுள்ள பட்டு நூலைச் சுற்ற பலமுனை கொண்ட பேசின் ஏனங்களைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் நடவடிக்கையாக, எந்திரம், தளவாடங்கள் ஆகியவை குறித்து செலவுக்காக 25 சதவீதம் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்தகைய பிரிவு ஒன்று திண்டுக்கலில் நிறுவப்பட்டுள்ளது. இத் திட்டம் 1992—93 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 1992—93—ஆம் ஆண்டில் தனியார் துறையில் மேலும் இரண்டு பிரிவுகள் நிறுவப்படுமென்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

### 8. பட்டு பரிமாற்றகம்:

கச்சாப்பட்டுக்கு போட்டியுள்ள அங்காடியை ஏற்படுத்த காஞ்சிபுரத்தில் 1991 ஆம் ஆண்டு ஜனவரியில் பட்டு பரிமாற்றகம் ஏற்படுத்தப்பட்டது. இந்தப் பரிமாற்றகம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. 1991— 92 ஆம் ஆண்டில் இப்

பரிமாற்றகம், 17.09 கோடி ரூபாய் விலையுள்ள 128 மெட்ரிக் டன் பட்டை பரிமாற்றம் செய்துள்ளது. 1992—93 ஆம் ஆண்டில் 30 கோடி ரூபாய் மதிப்புள்ள 220 மெட்ரிக் டன் பட்டைப் பரிமாற்றகம் செய்யும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் கட்டிடம் கட்டவும், சாதனங்களைக் கொள்முதல் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு உலக வங்கியும், மாநில அரசும் ஒப்புதல் அளித்துள்ளன. இந்தப் பரிமாற்றகத்திற்கு மத்திய பட்டு வாரியத்தால் நடத்தப்படவிருக்கும் பட்டின் எடை, அளவு, பண்பு ஆகியவற்றை விஞ்ஞான முறைப்படி நிர்ணயிக்கின்ற பட்டுச் சோதனை மையம் உதவும். தருமபுரி, சேலம், கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் நடமாடும் பட்டு பரிமாற்றகத்தை இயக்க, பட்டு நூல் சுற்றுவோரிடம் நல்ல வரவேற்பு உள்ளது.

## 9. கட்டுமானப் பணிகள்:

தேசிய பட்டுப் புழு வளர்ப்பு திட்டத்தின்கீழ் 4.75 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் கட்டுமானப் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன. இதற்காகத் தனியானதொரு பொறியியல் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் 1990—91 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. 4 கோடி ரூபாய் நிதியொதுக்கத்துடன் 52 பணிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1992—93 ஆம் ஆண்டில் 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் 6 புதிய பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. 26 பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. கட்டிடங்கள் 1992—93 ஆம் ஆண்டில் தயாராகிவிடும். இத்துறையின் பொறியியல் பிரிவு மெற்கொண்ட பணியில் காணப்படும் முன்னேற்றம் குறித்து உலக வங்கியின் ஆய்வுக் குழு பாராட்டியுள்ளது.

## 10. மத்திய பட்டு வாரியத்தின் நேரடி நிதி உதவி பெறும் திட்டங்கள் :

தேசிய பட்டு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பட்டு வளர்ச்சி துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் பல திட்டங்களுடன் சில துணைத் திட்டங்கள் மத்திய பட்டு வாரியத்தின் நேரடி நிதியுதவியைப் பெற்று வருகின்றன.

## 10.01 தேசிய பட்டு வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி :

தேசிய பட்டு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு, தேசிய பட்டு வளர்ச்சி இயக்கத்திற்கு தனியான பட்டுப்புழு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் அல்லது தனியான ஆராய்ச்சி திட்டம் ஏது





வும் இல்லாததால், பட்டு வளர்ச்சியின் பல்வேறு உத்திகள் குறித்து ஆராய்ச்சி செய்யும் பணியை மேற்கொள்ள தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களுக்கு மத்திய பட்டு வாரியம் நேரடியாக நிதி உதவி அளிக்கிறது. இதற்கிணங்க 5 பல்கலை கழகங்களிலிருந்து வரப்பெற்ற ரூபாய் 100.48 இலட்சம் மூலதனச் செலவிலான 10 திட்ட செயற் குறிப்புகளுக்கு மத்திய பட்டு வாரியம் ஒப்புதல் அளித்து ரூ. 31.24 இலட்சத்தை நேரடியாக பல்கலை கழகங்களுக்கு வழங்கியுள்ளது. களப்பணியில் ஏற்படும் பிரச்சினைகளை சமாளிப்பதற்கு இந்த ஆராய்ச்சிப் பணிகள் விவசாயிகளுக்கு உதவும் : அதனால் பட்டுக்கூடுகள் உற்பத்தித் திறன் அதிகரிக்கும்.

## 10.02 அரசு சார்பற்ற சேவை நிதி நிறுவனங்களுக்கு நிதி உதவி :

இந்த உதவி அரசு சார்பற்ற சேவை நிறுவனங்கள் மூலமாக பட்டு வளர்ச்சியில் பெண்களின் ஈடுபாட்டை ஊக்குவிக்கவும், பெண்களின் ஆதரவிலுள்ள குடும்பங்களுக்கு உதவுவதற்கும் உரிமை பறிக்கப்பட்ட பிரிவினருக்கும் பட்டு வளர்ச்சி மூலமாக நிலையான பொருளாதார வளர்ச்சி பெறச் செய்வதே இத் திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். கைத்தறி, கைத்திறப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர் துறைச் செயலர் அவர்களது தலைமையில் மாநில அளவிலான ஒரு குழு இந்தத் திட்டத்தை கண்காணித்து அரசு சார்பற்ற நம்பகமான சேவை நிறுவனங்களிடமிருந்து , வரப்பெற்ற பொருத்தமான செயற் குறிப்புகளை இறுதி ஒப்புதலுக்கு மத்திய ஒருங்கிணைப்பு குழுவிற்கு மத்திய பட்டு வாரியம் பரிந்துரை செய்கிறது. இத் திட்டத்தின் கீழ் 24 அரசு சார்பற்ற சேவை நிறுவனங்களின் 27 செயற் குறிப்புகளுக்கு மத்திய குழு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக மத்திய பட்டு வாரியத்திலிருந்து இதுவரை, ரூபாய் 34.258 இலட்சம் பெறப்பட்டுள்ளது. அதில் 1990-91-ஆம் ஆண்டில் ரூபாய் 2.35 இலட்சமும். 1991-92-ஆம் ஆண்டில் ரூபாய் 18,97 இலட்சமும் வழங்கப்பட்டது, மேலும் ஒரு அரசு சார்பற்ற சேவை நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ரூபாய் 35.862 இலட்சம் மூலதனச் செலவிலான செயற் குறிப்புகள், மத்திய பட்டு வாரியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மத்திய குழுவின் ஒப்புதல் பெற்றதும், 1992-93-இல் இவற்றை செயல் படுத்தும் பணி மேற்கொள்ளப்படும்.

## 10,03 மகளிர் பிரிவிற்கு நிதியுதவி :

அரசு சார்பற்ற சேவை நிறுவனங்கள் முன்வராத இடங்களில் கிராம அடிப்படையிலான மகளிர் பிரிவு ஏற்படுத்தப்பட்டு ஏழை பெண்கள் நிதி ஆதாரத்தை பெறுவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் பட்டு வளர்ச்சி மூலமாக வருவாய்

டி2 53-96—55

பெரும் வாய்ப்பு ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 6 மகளிர் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு மகளிர் பிரிவு நடவடிக்கைகளுக்கு சுழல் நிதி வகையில் ஒரே சமயத்தில் வழங்கப்படும் மான்யமாக ஒவ்வொரு பிரிவிற்கும் ரூ. 50.000 வீதம் 5 பிரிவுகளுக்கு மொத்தம் ரூ 2.50 இலட்சம் மத்திய பட்டு வாரியத்தால் மான்யமாக 1991-92-ல் வழங்கப்பட்டுள்ளது. இதில் இதுவரை ஒரு பிரிவிற்கு ரூ. 50.000 வழங்கப்பட்டுள்ளது. 1992-93 ஆம் ஆண்டில் கூடுதல் பிரிவுகளுக்கு உதவ கருதப்பட்டுள்ளது.

## 10.04. பட்டு நூல் நூற்பாளர்களுக்கு நடைமுறை மூலதன நிதி உதவி :

பட்டு வளர்ச்சி மேம்பாட்டில். பட்டு நூல் நூற்பு பின்தங்கிய நிலையில் இருந்து வருவதால், பட்டு நூல் நூற்பில் ஈடுபடுபவர்களுக்கு உதவ ஒரு திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. திட்ட காலம் முழுவதற்குமாக இத் திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டிற்கு ரூபாய் 80.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது, மத்திய பட்டு வாரியத்திலிருந்து ரூபாய் 36.00 இலட்சம் பெறப்பட்டுள்ளது. அதில். ரூபாய் 24.115 இலட்சம். 640 பட்டு நூல் நூற்பு இனங்களுடன் உள்ள பட்டு நூல் நூற்பவர்களுக்கு பயன்படுத்தப்பட்டது. 1992-93-ம் ஆண்டு 235 நூல்நூற்பு இனங்களுக்கு உதவிடவும். வட்டியுடன் கூடிய நடைமுறை மூலதன உதவித் தொகையாக ரூபாய் 10.58 இலட்சம் வழங்கிடவும் கருதப்பட்டுள்ளது, தேசிய பட்டு வளர்ச்சி திட்டத்தின் கீழ் இம்மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதிக்கு கூடுதலாக இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது,

## 10.05. பட்டு பரிமாற்றகத்தில் பட்டு நூல் நூற்பாளர்களுக்கு முக்கிய கடன் வசதிகள் :

நூல் நூற்பாளர்களுக்கு சுலபமான நடைமுறை மூலதனத் தத்தரும் பொருட்டு மத்திய பட்டு வாரியம். தேசிய பட்டு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் காஞ்சிபுரத்திலுள்ள அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்துக்கு ரூ. 50.00 இலட்சத்தை மையக் கடனாக வழங்கியுள்ளது. பட்டுப் பரிமாற்றகத்தில் கச்சாப் பட்டை அடமானம் வைத்த பிறகு கச்சாப் பட்டின் விலையில் 75 சதவீதத் தொகை பட்டு நூல் நூற்பவர்கள் பெற்றுக் கொள்ள இதுவகை செய்கிறது.



## 10.06. தேசிய பட்டு வளர்ச்சித் திட்டம் கூடுதல் மாவட்டங்களில் விரிவு படுத்தப்படுதல் :

உலக வங்கியின் நிதி உதவியுடன் தற்போது தேசிய பட்டு வளர்ச்சித் திட்டமானது தமிழ் நாட்டில் தர்மபுரி, சேலம். பெரியார், கோயம்பத்தூர், நீலகிரி, திண்டுக்கல் அண்ணா. திருச்சிராப்பள்ளி, மதுரை, திருவண்ணாமலை சம்புவராயர் மற்றும் வட ஆற்காடு அம்பேத்கார் ஆகிய 10 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, மேலும் ரூ, 20.00 கோடி செலவில் செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். நெல்லை தென்னாற்காடு, தஞ்சாவூர், காமராசர் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய பிற மாவட்டங்களிலும் இத்திட்டத்தை விரிவு படுத்தவும், பிற வசதிகளைப் பெருக்கவும், உலக வங்கிக்கு திட்டங்கள் அனுப்பப்பட்டன, மேற்கூறிய பட்டு வளர்ச்சித் துறையின் திட்டங்களுக்கு உலக வங்கியும் அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான அரசாணை விரைவில் வெளியாகும்.

## 05. பகுதி வளர்ச்சித் திட்டங்கள் :

### 1, மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

1992-93-ஆம் ஆண்டில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பட்டு விவசாயிகள் உதவி பெறும் திட்டம் தொடர்ந்து செயல்படும். இதனால். 120 குடும்பங்கள் பயனடையச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது,

### 2, மேற்கு மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

1992-93-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 570 விவசாயிகள் பயனடையும் வகையில் 265 ஏக்கர் அளவில் பட்டுப் புழு வளர்ப்பை விஸ்தரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 3. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் :

1992-93 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் 650 பழங்குடி மக்கள் குடும்பங்கள் பயனடையச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1992 ஏப்ரல் 20

## 06.00. வெளியிலிருந்து நிதி உதவி பெறும் திட்டங்கள் :

### 06.01. வேளாண்மை வளர்ச்சிக்காக பன்னாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் :

தர்மபுரி, சேலம், தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களி லுள்ள மகளிர்க்கென்றே உதவும் பொருட்டு விவசாய வளர்ச் சிக்கான பன்னாட்டு நிதி உதவி பெறும் திட்டத்தின் கீழ் மகளிர் பயனடைவதை அடிப்படையாகக் கொண்ட திட்டத்திற்கு ஒப்பு தல் அளிக்கப்பட்டுள்ளது. 1992-93-ல் 1,520 மகளிர் பய னடையும் வகையில் இத்திட்டத்தை விரிவு படுத்த கருதப்பட் டுள்ளது.

### 06.02. சுவிஸ் வளர்ச்சி கூட்டுறவு உதவித் திட்டம் :

பட்டு வளர்ச்சியில் பல்வேறு பிரிவுகளில் உள்ள மகளிர் மற்றும் சமூகத்தில் ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு உதவ, பட்டு வளர்ச்சித் துறை, • சுவிஸ் வளர்ச்சிக் கூட்டுறவு கழகத்தின் நிதியுதவி பெற்று செயல்படுத்தும் திட்டம் இது இத்திட்டத்தில் I நிலைப் பணி, 31—3—1991 உடன் நிறை வுற்றது. முதற்கட்ட மதிப்பீட்டு அறிக்கையின் பேரில் ஒரு சில கூடுதல் திட்டங்களுடன் ரூபாய் 2.50 கோடி மூலதனச் செலவிலான செயற்குறிப்பிற்கு மத்திய அரசும் சுவிஸ் வளர்ச்சி கூட்டுறவு நிறுவனமும் ஒப்புதல் அளித்துள்ளது. இந்த புதியத் திட்டத்தின் கீழ் மேற் கொள்ளக் கருதப்பட்டுள்ள முக்கிய பணி கள் பின்வருமாறு :

1. முசுக்கட்டை மரம் வளர்க்கும் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்துவது.

2. பட்டுநூல் நூற்பு மற்றும் நூல் முறுக்கும் பிரிவுகளை ஏற் படுத்த மகளிர் குழுக்களுக்கு உதவுதல்.

3. பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்களை விற்கும் அமைப்பு களை ஏற்படுத்துதல்.

4. பூச்சிக் கொல்லி மருந்தடிப்பு.

5. பட்டு வளர்ச்சித் துறையில் தொழில் நுட்ப வளர்ச்சிப் பிரிவை மேம்படுத்துதல் ஆகியன.

இந்த 2-ஆம் நிலை திட்டம் 1992-93-ல் செயல்படுத்தப் படும்.



1992 ஏப்ரல் 20]

### 06.03. பன்னாட்டு தொழிலாளர் நல நிறுவன நிதி உதவி பெறும் திட்டம்.

தருமபுரி மாவட்டம் தளி வட்டாரத்தில் 500 விவசாய குடும் பங்களுக்கு பட்டுப்புழு வளர்ப்பை மேற்கொள்வதற்கான திட்டம் ஒன்றிற்கு 1988 அக்டோபர் திங்களில் அனுமதி அளிக்கப்பட் டுள்ளது. பன்னாட்டு தொழிலாளர் நல நிறுவனம் இத்திட்டத் திற்கு நிதியுதவி அளிக்கிறது. மூன்றாண்டுகளில் 500 குடும்பங் களுக்கு இத் திட்டத்திலிருந்து நிதி மற்றும் தொழில் நுட்ப உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. முசுக்கட்டை நடுதல், பட்டு வளர்ப்பு, ராட்டையின் மூலம் பட்டுநூல் நூற்பு ஆகிய வற்றிற்கு இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 16.864 இலட்சம் மூலதன ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 1992-93— ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 07.00 டான்சில்க்.

தமிழ்நாட்டில் உள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங் கள் பட்டு முறுக்காளர்கள் ஆகியோருக்கு தரமான பட்டு நூலை வாங்கி விற்பனை செய்யும் முதன்மை கூட்டுறவுச் சங்கம், ''டான்சில்க்'' ஆகும். இச்சங்கம் 31—1—1992 வரையில் 328 மெட்ரிக் டன் வியாபாரம் செய்துள்ளது. 1992-93—ஆம் ஆண்டிற்கு 350 மெட்ரிக் டன் பட்டு வியாபார இலக்கு நிர்ணயிக் கப்பட்டுள்ளது:—

## 08.00 1992-93-ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள் (பகுதி 2.)

1992-93-ஆம் ஆண்டில் மொத்தம் ரூபாய் 28.20 இலட்சம் மூலதனச் செலவில் பின்வரும் புதிய திட்டங்களை மேற் கொள்ள கருதப்பட்டுள்ளது.

| தொடர் எண்ணும், திட்டங்களின் பெயரும். | மொத்த செலவு. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1 விதைக்கூடு உற்பத்தி பகுதியில் இலவச பூச்சி மருந்தடிப்பு. | 3.00 |
| 2 புதிய முசுக்கட்டை இனத்தை அறிமுகப்படுத்தல் | 2.70 |
| 3 நோய் தடுப்பு பாதுகாப்பு முறை | 2.50 |

[1992 ஏப்ரல் 20

| | | |
|---|---|---|
| 4 | அரசு பட்டு பண்ணைகளில் பாசன வசதிகளை மேம்படுத்தல். | 10.00 |
| 5 | ஆண்டிற்கு இரு முறை முட்டையிடும் பட்டுப் புழு வளர்ப்புத் திட்டம். | 10.00 |
| | மொத்தம் .. | 28.20 |

மேற்குறிப்பிடப்பட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் இம் மாநிலத்தில் பட்டு நூல் உற்பத்தி திறனளவு 1992–93-இல் 500 மெட்ரிக் டன் ஆக உயர்த்தப்படுமென்றும், 24,750 நபர்களுக்கு கூடுதலாக வேலை வாய்ப்பளிக்கப்படுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இச் செயற்குறிப்புகளில் வரவு–செலவுத் திட்ட மொத்த ஒதுக்கீடு ரூபாய் 1,359.24 இலட்சமாகும். அவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில், வேளாண்மை வளர்ச்சி மற்றும் பன்னாட்டு தொழிலாளர் நல நிறுவனம் ஆகியவற்றிற்கு வறட்சிப் பாதிப்பு பகுதித் திட்டம் ( D.P.A.P. ) எஸ்.சி.ஏ. ( S.C.A. ) திட்டம் மற்றும் வெளியிலிருந்து நிதியுதவிப்பெறும் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியொதுக்கம் சேராது.

1992–93.

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 01. (அ) தேசிய பட்டு வளர்ச்சி திட்டம் உட்பட திட்டப்பணிகள் பகுதி-1 .. .. | 946.50 |
| (ஆ) திட்டம் பகுதி-2 .. | 28.20 |
| 02. திட்டத்தில் சேராதது .. .. | 296.23 |
| 03. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம். | 68.25 |
| 04. மத்திய அரசு பொறுப்பேற்பவை— | |
| 1. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம். | 11.90 |
| 2. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் .. | 7.12 |
| 3. தன்னாட்சி நிறுவனங்களின் நிதியுதவிபெறும் திட்டம் (டான்சில்க்). | 1.04 |
| மொத்தம் .. | 1,359.24 |



1992 ஏப்ரல் 20]

## தமிழ்நாடு கைத்திறத் தொழில் வளர்ச்சிக் கழகம், சென்னை-18

### கொள்கை குறிப்பு—1992–93.

தமிழ்நாடு கைத்திறத் தொழில் வளர்ச்சிக் கழகம் தமிழ் நாட்டில் கைவினைப் பொருட்கள் முன்னேற்றத்தினை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டு பல்வேறுவிதமான கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் நலத்தைப் பாதுகாப்பதைக் கருத்தில் கொண்டு 1973-ஆம் வருடம் நிறுவப்பட்டது.

1. அரசிடமிருந்து பெறப்பட்ட பங்குத் தொகை:

இந்த நிறுவனத்திற்கு அனுமதித்த மூலதனம் ரூபாய் 300 இலட்சமாகும். அளிக்கப்பட்ட மூலதனம் ரூபாய் 199.36 இலட்சம். இதில் தமிழக அரசின் பங்காக ரூபாய் 134.19 இலட்சமும் மத்திய அரசின் பங்காக ரூபாய் 64.50 இலட்சமும் பெறப்பட்டுள்ளது.

2. கைவினைப் பொருட்களின் விற்பனை:

இந் நிறுவனம் தனது உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்கின்ற பொருட்களையும், கைவினைஞர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகின்ற பொருட்களையும், ''பூம்புகார்'' என்ற வியாபாரக் குறியுள்ள பெயரின் கீழ் விற்பனை செய்து வருகின்றது. இந்நிறுவனத்தின் கீழ் 15 விற்பனை நிலையங்கள் தமிழ்நாட்டிலும், 4 விற்பனை நிலையங்கள் தமிழ்நாட்டிற்கு வெளியே புதுடில்லி, கல்கத்தா, பெங்களூர் மற்றும் திருப்பதி போன்ற நகரங்களிலும் அமைந்துள்ளது. கடந்த ஐந்து வருடங்களது விற்பனை கீழ்க்கண்டவாறு உள்ளது :—

| வருடம். | விற்பனை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1986–87 .. .. | 290.47 |
| 1987–88 .. .. | 362.18 |
| 1988–89 .. .. | 408.73 |
| 1989–90 .. .. | 466.48 |
| 1990–91 .. .. | 450.33 (தணிக்கை செய்யப்படாதது.) |
| 1991–92 (பிப்ரவரி 1992 வரை). | 560.00 (தணிக்கை செய்யப்படாதது.) |

## 3. கைவினைப் பொருட்கள் உற்பத்தியும் கொள்முதலும் :

இந்நிறுவனம் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் பத்து உற்பத்தி நிலையங்களை கீழ்க்கண்டவாறு நடத்திக் கொண்டு வருகிறது:—

| தொழில் வகை. | இடம். |
|---|---|
| 1. வெண்கல சிலைகள் | (1) சுவாமிமலை, சேலம். |
| 2. பித்தளை மற்றும் மணி உலோகம். | (1) நாச்சியார் கோவில், மதுரை, ஆய்க்குடி, வாகைகுளம். |
| 3. மரச் சிற்பங்கள் மற்றும் இதர வகைகள். | (1) கள்ளக்குறிச்சி (மரச்சிற்பம்). |
| | (2) மாமல்லபுரம் (கற்சிற்பம்) |
| | (3) திருச்சி (கோயில் தேர்) |
| | (4) திருச்சி (காகித பொம்மை). |

இந்நிலையங்கள், பல்வேறு விதமான பொருட்களை இந் நிறுவனத்தின் விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்வதற்காக உற்பத்தி செய்கின்றன. கடந்த ஐந்து வருடங்களில் செய்யப்பட்ட உற்பத்தி கீழ்க்கண்டவாறு உள்ளது :—

| வருடம். | | | உற்பத்தி. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1986–87 | .. | .. | 88.17 |
| 1987–88 | .. | .. | 94.31 |
| 1988–89 | .. | .. | 84.79 |
| 1989–90 | .. | .. | 112.98 |
| 1990–91 | .. | .. | 96.52 (தணிக்கை, செய்யப்படாதது.) |
| 1991–92 (பிப்ரவரி 1992 வரை) | | | 117.03 (தணிக்கை செய்யப்படாதது.) |





## 4. கைவினைஞர்களுக்கு சேவை :

### (அ) கைவினைப் பொருட்களுக்கு விற்பனை வசதி :

கைவினைஞர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற பல்வேறு விதமான கைவினைப் பொருட்களில் தரமானவற்றை நேரிடையாகக் கொள்முதல் செய்து இந்நிறுவனம் கைவினைஞர்களுக்கு சேவை செய்வதுடன் அவற்றிற்குரிய தொகையினை உடனுக்குடன் வழங்குவதன் மூலம் இடைத் தரகர்கள் தவிர்க்கப்படுகின்றனர்.

### (ஆ) பூம்புகார் பரிசுகள் :

புதிய வடிவங்களை அமைப்பதற்காக கைவினைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு பல்வேறுவிதமான துறைகளில் போட்டி நடத்தப்பட்டு விருதுகள் வழங்கப்படுகின்றன. விருது பெற்ற கைவினைஞர்களுக்கு பண விருதும், பதக்கமும் கொடுக்கப்படுகின்றன. அவ்வாறு விருது பெற்றவர்கள் 65 வயது அடைந்த பிறகு இந்திய அரசிடமிருந்து ஓய்வூதியம் பெறத்தகுதி உடையவர்களாவார்கள்.

### (இ) கைவினைஞர் பயிற்சி :

தமிழக அரசு மற்றும் கைவினைப் பொருட்கள் இயக்குநர் அலுவலகம், டெல்லியின் உதவியினால் இந்நிறுவனம் கைவினைப் பொருட்கள் உற்பத்தியில் இளைஞர்களுக்கு அடிப்படை பயிற்சியும் மற்ற கைவினைஞர்களுக்கு முன்னேறிய பயிற்சியும் அளிப்பதற்கு ஏற்பாடு செய்து வருகிறது.

### (ஈ) வடிவமைப்பு முன்னேற்றம் :

இந்நிறுவனத்தில் வடிவமைப்பு முன்னேற்ற மையம் இல்லாமல் இருந்த போதிலும், கைவினைப் பொருட்கள் இயக்குநர் டெல்லி அலுவலகத்தின் கீழ் இயங்கிவரும் பெங்களூரிலுள்ள வட்டார வடிவமைப்பு மையத்திலிருந்து சில மாதிரி வடிவங்களை கடனாகப் பெற்று மாதிரிகள் தயார் செய்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மற்றும் இந்நிறுவனம் தற்போதைய முன்னேறிய தொழில் நுட்பங்களைக் கொண்டு தரமான பொருட்கள் உற்பத்தி செய்யவும், பாரம்பரிய வழிகளில் அல்லாமல் விரைவாக செய்யவும் கைவினைஞர்களுக்கு வழி காட்டுகிறது.

## பொருட்காட்சிகள் :

தமிழக கலைப் பொருட்களை அதிக அளவில் விற்பனை செய்வதற்காக இந்நிறுவனம் இந்தியா முழுவதும் உள்ள நகரங்களில் கண்காட்சிகளை நடத்தி வருகிறது. 1991–92 ஆம் வருடத்தில் 70 கண்காட்சிகளை நடத்தி சுமார் ரூ. 1,53,98,200 மதிப்பிற்குரிய கைவினைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டது. 1992–93 ஆம் வருடத்தில் 55 கண்காட்சிகளை நடத்துவதெனத் திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றில் 15 கண்காட்சிகள் கைவினைப் பொருட்கள் வளர்ச்சி இயக்குநர் டில்லி அலுவலகத்தின் உதவியுடனும் இதர கண்காட்சிகள் இந்நிறுவனத்தின் சொந்தச் செலவிலும் நடத்துவதெனத் திட்டமிடப்பட்டுள்ளது.

## ஏற்றுமதி மற்றும் சிறப்பு வேலைகள் :

இந்நிறுவனத்தின் ஏற்றுமதித் திறன் தற்சமயம் வளர்ச்சி பெற்றுக் கொண்டு வருகிறது. 1991–92 ஆம் வருடத்தில் சுமார் ரூ. 20 இலட்சம் மதிப்புள்ள பாரம்பரியமுள்ள கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. பாரம்பரியமுள்ள கைவினைப் பொருட்களை உற்பத்தி மற்றும் விற்பனை செய்வதுடன் இந் நிறுவனம் கோயில் தேர் கட்டுமானம், தங்கம்/வெள்ளி இரத வேலைகள், கோயில் பிரகாரங்கள் கட்டுமானம் போன்ற சிறப்பு வேலைகளை எடுத்து செய்து வருகிறது. இந் நிறுவனம் தற்சமயம் செய்து வருகின்ற சிறப்பு வேலைகளின் விபரங்கள் கீழே தரப்படுகிறது :—

| வேலையின் விபரம். | வேலையின் மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. திருப்பதி தங்கத் தேருக்கு தங்கத்தகடு பதிப்பு வேலை .. .. | 100.00 |
| 2. இராமேஸ்வரம் இராமநாதஸ்வாமி கோவில் இரண்டாவது தாழ்வாரம் அமைத்தல் .. | 14.00 |
| 3. கன்னிகா பரமேஸ்வரி கோவில் வெள்ளித் தகடு பதிப்பு வேலை .. .. | 1.00 |
| 4. நஞ்சன்கூடு கோவில் தேர் கட்டுமானம், கர்நாடகா .. .. | 6.50 |





| வேலையின் விபரம். | வேலையின் மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 5. பாண்டிச்சேரி மணக்குல விநாயகர் கோவில் வெள்ளித் தேர் செய்தல் .. .. | 1.60 |
| 6. பழனி கோவிலுக்கு 63 நாயன்மார்கள் சிலைகள் பஞ்சலோகத்தில் செய்தல் .. .. | 2.25 |

## [illegible]யல் திறன் :

இந்நிறுவனத்தில் கடந்த 5 ஆண்டுகளின் நிதி நிலை [illegible]யல்பாடு கீழ்வருமாறு உள்ளது :—

| வருடம். | இலாபம்/நட்டம். (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1986–87 .. .. | (—) 8.98 |
| 1987–88 .. .. | (—) 30.06 |
| 1988–89 .. .. | (—) 55.06 |
| 1989–90 .. .. | (—) 6.38 |
| 1990–91 .. .. | (—) 10.98 (தணிக்கை செய்யப் படாதது) |

1991–92 ஆம் வருடத்தில் இந்நிறுவனம் ரூ. 20 இலட்சம் இலாபத்தை ஈட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1992–93 ஆம் வருடத்தில் மிகுந்த விற்பனையினால் ஈட்டுகின்ற இலாபம் அதிகமாவதன் மூலம் சென்ற வருடங்களில் அடைந்த மொத்த நஷ்டத்தின் அளவைக் குறைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

16941
சென்னை-600 009

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.